செம்மொழித் தமிழ்
அகப்பொருள் களஞ்சியம்

தொகுதி–5

அறத்தொடு நிற்றல், வரைவிடைப்பிரிவு,
வரைவுமலிதல்

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

செம்மொழித் தமிழ்
அகப்பொருள் களஞ்சியம்
தொகுதி 5

அறத்தொடு நிற்றல், வரைவிடைப்பிரிவு,
வரைவுமலிதல்

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

பழனியப்பா பிரதர்ஸ்
'கோனார் மாளிகை'
25, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
தொலைபேசி : 044-28132863 / 43408000
e-mail: sales@palaniappabrothers.com
கிளைகள்
திருச்சி - 620 002 சேலம் - 636 001
கோயம்புத்தூர் - 641 001 மதுரை - 625 001
ஈரோடு - 638 001

முதல் பதிப்பு : 2017

© உரிமை – ஆசிரியருக்கு

ISBN: 978-81-8379-767-2 (Set of 14)
978-81-8379-772-6 (Vol-5)

தனிப்பிரதி விலை ரூ. 600/–
(தொகுதி–5)

மொத்த விலை ரூ. 7200/–
(14 தொகுதிகள்)

கணினி அச்சு : திருமதி இந்திராகாந்தி ரவி
ரமணா கணினி வரையகம், 97890 65515

ஏசியன் பிரிண்டர்ஸ், சென்னை – 600 014.

கிளைகள்

திருச்சி
பழனியப்பா பிரதர்ஸ்
அஞ்சல் பெட்டி எண். 312,
தெப்பக்குளம்,
திருச்சிராப்பள்ளி – 620 002
தொலைபேசி : 0431–2702160

சேலம்
பழனியப்பா பிரதர்ஸ்
கதவு இலக்கம் 77,
(பழைய எண் 39) செர்ரி சாலை,
சேலம் – 636 001
தொலைபேசி : 0427–2450711

கோவை
பழனியப்பா பிரதர்ஸ்
683, ராஜா தெரு,
கோயமுத்தூர் – 641 001
தொலைபேசி : 0422–2393704

மதுரை
பழனியப்பா பிரதர்ஸ்
23-A, மேற்கு கோபுரத் தெரு,
மதுரை – 625 001
தொலைபேசி : 0452–2346258

ஈரோடு
பழனியப்பா பிரதர்ஸ்
950, ப்ரோக் சாலை,
ஈரோடு – 638 001
தொலைபேசி : 0424–2256261

பொருளடக்கம்

களஞ்சிய வாயில் xxi

மதிப்புரை xxvi

பதிப்புரை xxvii

அகத்திணை xxix

அறத்தொடு நிற்றல்

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 48	அன்னாய்	தங்கால் முடக்கொற்றனார்	32
அகநானூறு 52	வலந்த	நொச்சி நியமங்கிழார்	11
அகநானூறு 82	ஆடுஅமைக்	கபிலர்	13
அகநானூறு 110	அன்னை	போந்தைப் பசலையார்	35
அகநானூறு 190	திரைஉழந்து	உலோச்சனார்	39
ஐங்குறுநூறு 28	உண்துறை	ஓரம்போகியார்	77
ஐங்குறுநூறு 29	மாரி	ஓரம்போகியார்	111
ஐங்குறுநூறு 30	வேப்புநனை	ஓரம்போகியார்	113
ஐங்குறுநூறு 106	அன்னை	அம்மூவனார்	44
ஐங்குறுநூறு 107	அன்னை	அம்மூவனார்	45
ஐங்குறுநூறு 108	அன்னை	அம்மூவனார்	118
ஐங்குறுநூறு 109	அன்னை	அம்மூவனார்	119
ஐங்குறுநூறு 110	அன்னை	அம்மூவனார்	108

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 168	பெருங்கடல்	அம்மூவனார்	94
ஐங்குறுநூறு 182	நெய்தல்	அம்மூவனார்	72
ஐங்குறுநூறு 190	தண்நறு	அம்மூவனார்	46
ஐங்குறுநூறு 201	அன்னாய்	கபிலர்	102
ஐங்குறுநூறு 205	அன்னாய்	கபிலர்	95
ஐங்குறுநூறு 210	அன்னாய்	கபிலர்	79
ஐங்குறுநூறு 212	சாத்த	கபிலர்	114
ஐங்குறுநூறு 220	அலங்குமழை	கபிலர்	105
ஐங்குறுநூறு 228	அம்ம வாழி	கபிலர்	116
ஐங்குறுநூறு 241	நம்உறு	கபிலர்	71
ஐங்குறுநூறு 242	அறியா	கபிலர்	48
ஐங்குறுநூறு 243	கறிவளர்	கபிலர்	56
ஐங்குறுநூறு 244	அம்ம,	கபிலர்	66
ஐங்குறுநூறு 247	அன்னை	கபிலர்	68
ஐங்குறுநூறு 248	பெய்ம்மணல்	கபிலர்	55
ஐங்குறுநூறு 249	பெய்ம்மணல்	கபிலர்	54
ஐங்குறுநூறு 250	பொய்படுபு	கபிலர்	52
ஐங்குறுநூறு 271	அவரை	கபிலர்	115
ஐங்குறுநூறு 366	அன்னாய்	ஓதலாந்தையார்	27

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 367	பொரிஅரைக்	ஓதலாந்தையார்	106
ஐந்திணை எழுபது 13	வார்குரல்	மூவாதியார்	80
ஐந்திணை எழுபது 62	அடும்பிவர்	மூவாதியார்	120
ஐந்திணை ஐம்பது 20	வெறிகமழ்	மாறன் பொறையனார்	58
கலித்தொகை 54	கொடியவும்	கபிலர்	88
கலித்தொகை 111	தீம்பால்	நல்லுருத்திரனார்	16
கலித்தொகை 114	வாரி	சோழன் நல்லுருத்திரன்	84
குறுந்தொகை 23	அகவன்	ஔவையார்	49
குறுந்தொகை 26	அரும்புஅற	கொல்லன் அழிசி	50
குறுந்தொகை 31	மள்ளர்	ஆதிமந்தி	100
குறுந்தொகை 214	மரங்கொல்	கூடலூர் கிழார்	74
குறுந்தொகை 259	மழைசேர்ந்து	பரணர்	23
குறுந்தொகை 305	கண்தர	குப்பைக்கோழியார்	8
குறுந்தொகை 321	மலைச்செஞ்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	97
குறுந்தொகை 333	குறும்படைப்	உழுந்தினைம் புலவனார்	20
குறுந்தொகை 362	முருகுஅயர்ந்து	வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தனார்	76
குறுந்தொகை 366	பால்வரைந்து	பேரிசாத்தன்	25
குறுந்தொகை 379	இன்றுயாண்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	99

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
குறுந்தொகை 385	பலவில்	கபிலர்	83
கைந்நிலை 8	கருங்கைக்	புல்லங்காடனார்	29
கைந்நிலை 9	காந்தள்	புல்லங்காடனார்	30
சிலப்பதிகாரம், குன்றக்குரவை 11	இறைவளை	இளங்கோவடிகள்	59
சிலப்பதிகாரம், குன்றக்குரவை 12	ஆய்வளை	இளங்கோவடிகள்	60
சிலப்பதிகாரம், குன்றக்குரவை 13	செறிவளைக்கை	இளங்கோவடிகள்	62
சிலப்பதிகாரம், குன்றக்குரவை 14	நேர்இழை	இளங்கோவடிகள்	63
திணைமாலை நூற்றைம்பது 2	சுள்ளி	கணிமேதாவியார்	42
திணைமாலை நூற்றைம்பது 12	வேலனார்	கணிமேதாவியார்	81
திணைமாலை நூற்றைம்பது 14	வருக்கை	கணிமேதாவியார்	43
திணைமாலை நூற்றைம்பது 39	தந்தார்க்கே	கணிமேதாவியார்	103
திணைமாலை நூற்றைம்பது 62	வில்லார்	கணிமேதாவியார்	28
திருக்குறள் 1138	நிறைஅரியர்	திருவள்ளுவர்	4
திருக்குறள் 1139	அறிகிலார்	திருவள்ளுவர்	5
திருக்குறள் 1140	யாங்கண்ணின்	திருவள்ளுவர்	22

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
நற்றிணை 34	கடவுள்	பிரமசாரி	64
நற்றிணை 165	அமர்க்கண்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	92
நற்றிணை 207	கண்டல்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	109
நற்றிணை 244	விழுந்த	கூற்றங்குமரனார்	6
நற்றிணை 351	இளமை	மதுரைக் கண்ணத்தனார்	69

வரைவிடைப்பிரிவு

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 22	அணங்குடை	வெறிபாடிய காமக்கண்ணியார்	344
அகநானூறு 78	நனந்தலைக்	மதுரை நக்கீரனார்	367
அகநானூறு 101	அம்ம வாழி	மாமூலனார்	245
அகநானூறு 119	நுதலும்	குடவாயிற்கீரத்தனார்	141
அகநானூறு 170	கானலும்	மதுரைக் கள்ளிற்கடையத்தன் வெண்ணாகனார்	301
அகநானூறு 286	வெள்ளி	ஓரம்போகியார்	123
அகநானூறு 325	அம்ம	மாமூலனார்	137
அகநானூறு 398	இழைநிலை	இம்மென்கீரனார்	310
ஐங்குறுநூறு 94	மள்ளர்	ஓரம்போகியார்	352
ஐங்குறுநூறு 120	அம்ம வாழி	அம்மூவனார்	366
ஐங்குறுநூறு 141	எக்கர்	அம்மூவனார்	232
ஐங்குறுநூறு 183	தண்கடல்	அம்மூவனார்	319
ஐங்குறுநூறு 192	கோடுபுலம்	அம்மூவனார்	371
ஐங்குறுநூறு 195	வளைபடு	அம்மூவனார்	320
ஐங்குறுநூறு 209	அன்னாய்	கபிலர்	227
ஐங்குறுநூறு 217	பெருவரை	கபிலர்	358
ஐங்குறுநூறு 219	கருங்கால்	கபிலர்	215

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 223	அம்ம வாழி	கபிலர்	360
ஐங்குறுநூறு 226	அம்ம வாழி	கபிலர்	362
ஐங்குறுநூறு 229	அம்ம வாழி	கபிலர்	363
ஐங்குறுநூறு 239	சுரும்புஉணக்	கபிலர்	132
ஐங்குறுநூறு 252	குன்றக்	கபிலர்	359
ஐங்குறுநூறு 257	குன்றக்	கபிலர்	131
ஐங்குறுநூறு 263	நன்பொன்	கபிலர்	365
ஐங்குறுநூறு 268	தாஅய்	கபிலர்	147
ஐங்குறுநூறு 270	கிழங்குஅகழ்	கபிலர்	356
ஐங்குறுநூறு 273	அத்தச்	கபிலர்	126
ஐங்குறுநூறு 274	மந்திக்	கபிலர்	223
ஐங்குறுநூறு 286	சிறுதினை	கபிலர்	136
ஐங்குறுநூறு 291	மயில்கள்	கபிலர்	351
ஐங்குறுநூறு 295	வருவது	கபிலர்	238
ஐங்குறுநூறு 365	கணமா	ஓதலாந்தையார்	349
ஐந்திணை எழுபது 33	பொறிகிளர்	மூவாதியார்	206
ஐந்திணை எழுபது 64	தெண்ணீர்	மூவாதியார்	297
ஐந்திணை எழுபது 65	எறிசுறாக்	மூவாதியார்	293
ஐந்திணை எழுபது 66	நுண்ஞாண்	மூவாதியார்	216
ஐந்திணை எழுபது 68	சிறுமீன்	மூவாதியார்	295

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐந்திணை ஐம்பது 42	கொடுந்தாள்	மாறன் பொறையனார்	300
ஐந்திணை ஐம்பது 43	பொரிப்புறப்	மாறன் பொறையனார்	314
கலித்தொகை 124	ஞாலம்மூன்று	நல்லந்துவனார்	372
கலித்தொகை 128	தோள்துறந்து	நல்லந்துவனார்	189
கலித்தொகை 136	இவர்.திமில்	நல்லந்துவனார்	127
குறுந்தொகை 6	நள்ளென்று	பதுமனார்	184
குறுந்தொகை 28	முட்டு	ஔவையார்	203
குறுந்தொகை 30	கேட்டிசின்	கச்சிப்பேட்டு நன்னாகையார்	187
குறுந்தொகை 36	துறுகல்	பரணர்	177
குறுந்தொகை 38	கான	கபிலர்	279
குறுந்தொகை 87	மன்ற	கபிலர்	348
குறுந்தொகை 96	அருவி	அள்ளூர் நன்முல்லையார்	342
குறுந்தொகை 118	புள்ளும்	நன்னாகையார்	318
குறுந்தொகை 134	அம்ம வாழி	கோவேங்கைப் பெருங்கதவனார்	230
குறுந்தொகை 143	அழியல்	மதுரைக் கணக்காயன் மகன் நக்கீரன்	200
குறுந்தொகை 145	உறைபதி	கொல்லன் அழிசியார்	193
குறுந்தொகை 160	நெருப்பின்	மதுரை மருதனிளநாகனார்	261

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
குறுந்தொகை 170	பலரும்	கருவூர் கிழார்	159
குறுந்தொகை 171	காணினி	பூங்கணுத்திரையார்	181
குறுந்தொகை 172	தாஅவல்	கச்சிப்பேட்டு நன்னாகையார்	161
குறுந்தொகை 187	செவ்வரைச்	கபிலர்	338
குறுந்தொகை 205	மின்னுச்செய்	உலோச்சனார்	224
குறுந்தொகை 208	ஒன்றேன்	கபிலர்	179
குறுந்தொகை 223	பேரூர்	மதுரைக் கடையத்தார் மகனார் வெண்ணாகனார்	217
குறுந்தொகை 225	கன்றுதன்	கபிலர்	157
குறுந்தொகை 226	பூவொடு	மதுரை எழுத்தாளனார் சேந்தன் பூதனார்	219
குறுந்தொகை 233	கவலை	பேயனார்	355
குறுந்தொகை 235	ஓம்புமதி	மாயெண்டனார்	353
குறுந்தொகை 236	விட்டென	நரிவெரூஉத்தலையார்	134
குறுந்தொகை 240	பனிப்புதல்	கொல்லன் அழிசியார்	174
குறுந்தொகை 245	கடல்அம்	மாலைமாறனார்	170
குறுந்தொகை 248	அதுவரல்	உலோச்சனார்	275
குறுந்தொகை 249	இனமயில்	கபிலர்	173
குறுந்தொகை 264	கலிமழை	கபிலர்	226
குறுந்தொகை 265	காந்தளம்	கருவூர்க் கதப்பிள்ளை	198

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
குறுந்தொகை 266	நமக்குஒன்று	நக்கீரர்	248
குறுந்தொகை 284	பொருத	மிளைவேள் தித்தனார்	213
குறுந்தொகை 301	முழவுமுதல்	குன்றியனார்	166
குறுந்தொகை 302	உரைத்திசின்	மாங்குடி கிழார்	228
குறுந்தொகை 304	கொல்வினைப்	கணக்காயர் தத்தனார்	221
குறுந்தொகை 308	சோலை	பெருந்தோட் குறுஞ்சாத்தனார்	196
குறுந்தொகை 310	புள்ளும்	பெருங்கண்ணனார்	242
குறுந்தொகை 315	எழுதரு	மதுரை வேளாதத்தனார்	171
குறுந்தொகை 316	ஆய்வளை	தும்பிசேர் கீரனார்	182
குறுந்தொகை 328	சிறுவீ	பரணர்	210
குறுந்தொகை 334	சிறுவெண்	இளம்பூதனார்	165
குறுந்தொகை 339	நறைஅகில்	பேயார்	201
குறுந்தொகை 365	கோடூஉர்	மதுரை நல்வெள்ளியார்	149
குறுந்தொகை 371	கைவளை	உறையூர் முதுகூத்தனார்	205
குறுந்தொகை 377	மலர்ஏர்	மோசி கொற்றனார்	176
குறுந்தொகை 381	தொல்கவின்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	336
குறுந்தொகை 394	முழந்தாள்	குறியிறையார்	334
குறுந்தொகை 395	நெஞ்சே	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	194

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
குறுந்தொகை 397	நனைமுதிர்	அம்மூவனார்	156
குறுந்தொகை 399	ஊர்உண்	பரணர்	280
கைந்நிலை 14	கதநாய்	புல்லங்காடனார்	152
கைந்நிலை 16	... உறையும்	புல்லங்காடனார்	151
கைந்நிலை 17	கடமா	புல்லங்காடனார்	150
கைந்நிலை 50	நெடுங்கடல்	புல்லங்காடனார்	291
கைந்நிலை 51	மணிநிற	புல்லங்காடனார்	292
கைந்நிலை 53	அலவன்	புல்லங்காடனார்	282
கைந்நிலை 54	என்னையர்	புல்லங்காடனார்	284
கைந்நிலை 56	நுரைதரும்	புல்லங்காடனார்	283
சிலப்பதிகாரம், கானல்வரி 32	தம்முடைய	இளங்கோவடிகள்	304
சிலப்பதிகாரம், கானல் வரி 33	புன்கண்கூர்	இளங்கோவடிகள்	305
சிலப்பதிகாரம், கானல்வரி 34	புள்இயல்மான்	இளங்கோவடிகள்	306
சிலப்பதிகாரம், கானல்வரி 35	நேர்ந்தநம்	இளங்கோவடிகள்	307
சிலப்பதிகாரம், கானல்வரி 36	நேர்ந்தநம்	இளங்கோவடிகள்	308
சிலப்பதிகாரம், கானல்வரி 40	இளைஇருள்	இளங்கோவடிகள்	322

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
சிலப்பதிகாரம், கானல்வரி 41	கதிரவன்	இளங்கோவடிகள்	323
சிலப்பதிகாரம், கானல்வரி 42	பறவைப்பாட்டு	இளங்கோவடிகள்	325
சிலப்பதிகாரம், கானல் வரி 46	அடையல்	இளங்கோவடிகள்	296
சிலப்பதிகாரம், கானல்வரி 48	நுளையர்	இளங்கோவடிகள்	326
சிலப்பதிகாரம், கானல்வரி 49	பிரிந்தார்	இளங்கோவடிகள்	327
சிலப்பதிகாரம், கானல்வரி 50	பையுள்நோய்	இளங்கோவடிகள்	329
திணைமாலை நூற்றைம்பது 38	மாக்கடல்சேர்	கணிமேதாவியார்	309
திணைமாலை நூற்றைம்பது 74	புன்புறவே	கணிமேதாவியார்	286
திருக்குறள் 1129	இமைப்பின்	திருவள்ளுவர்	340
திருக்குறள் 1130	உவந்து(உ)றைவர்	திருவள்ளுவர்	341
திருக்குறள் 1149	அலர்நாண	திருவள்ளுவர்	207
நற்றிணை 7	சூருடை	நல்வெள்ளியார்	250
நற்றிணை 31	மாஇரும்	நக்கீரனார்	267
நற்றிணை 37	பிணங்குஅரில்	பேரிசாத்தனார்	153
நற்றிணை 54	வளைநீர்	சேந்தங்கண்ணனார்	287

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
நற்றிணை 56	குறுநிலைக்	பெருவழுதியார்	235
நற்றிணை 65	அமுதம்	கபிலர்	330
நற்றிணை 70	சிறுவெள்ளாங்	வெள்ளி வீதியார்	289
நற்றிணை 87	உள்ஊர்	நக்கண்ணையார்	185
நற்றிணை 111	அத்த	உலோச்சனார்	332
நற்றிணை 115	மலர்ந்த	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	252
நற்றிணை 133	தோளே	நற்றமனார்	162
நற்றிணை 183	தம்நாட்டு	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	144
நற்றிணை 197	தோளே	நக்கீரர்	254
நற்றிணை 218	ஞாயிறு	கிடங்கில் காவிதிக் கீரங்கண்ணனார்	270
நற்றிணை 219	கண்ணும்	தாயங்கண்ணனார்	168
நற்றிணை 225	முருகுஉறழ்	கபிலர்	272
நற்றிணை 238	வறம்கொல	கந்தரத்தனார்	263
நற்றிணை 249	இரும்பின்	உலோச்சனார்	233
நற்றிணை 277	கொடியை	தும்பிசேர் கீரனார்	298
நற்றிணை 303	ஒலிஅவிந்து	மதுரை ஆருலவியநாட்டு ஆலம்பேரி சாத்தனார்	239
நற்றிணை 328	கிழங்குகீழ்	தொல்கபிலர்	256

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
நற்றிணை 329	வரையா	மதுரை மருதங்கிழார் மகனார் சொகுத்தனார்	259
நற்றிணை 335	திங்களும்	வெள்ளிவீதியார்	316
நற்றிணை 356	நிலம்தாழ்	பரணர்	376
நற்றிணை 358	பெருந்தோள்	நக்கீரர்	276
நற்றிணை 364	சொல்லிய	கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார்	243
நற்றிணை 369	சுடர்சினம்	மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார்	265
நாலடியார் 400	கண்கூழன்(று)	சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை	209

வரைவு மலிதல்

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 42	மலிபெயல்	கபிலர்	398
அகநானூறு 70	கொடுந்திமில்	மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார்	403
அகநானூறு 160	ஓடுங்குஈர்	குமுழி ஞாழலார் நப்பசலையார்	406
அகநானூறு 178	வயிரத்	பரணர்	424
ஐங்குறுநூறு 101	அன்னை	அம்மூவனார்	430
ஐங்குறுநூறு 92	கருங்கோட்டு	ஓரம்போகியார்	445
ஐங்குறுநூறு 102	அன்னை	அம்மூவனார்	429
ஐங்குறுநூறு 105	அன்னை	அம்மூவனார்	433
ஐங்குறுநூறு 112	அம்ம வாழி	அம்மூவனார்	389
ஐங்குறுநூறு 144	எக்கர்	அம்மூவனார்	383
ஐங்குறுநூறு 145	எக்கர்	அம்மூவனார்	432
ஐங்குறுநூறு 146	எக்கர்	அம்மூவனார்	394
ஐங்குறுநூறு 147	எக்கர்	அம்மூவனார்	448
ஐங்குறுநூறு 181	நெய்தல்	அம்மூவனார்	386
ஐங்குறுநூறு 189	புன்னை	அம்மூவனார்	420
ஐங்குறுநூறு 202	அன்னாய்	கபிலர்	421

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 213	நறுவடி	கபிலர்	381
ஐங்குறுநூறு 218	நுண்ஏர்	கபிலர்	438
ஐங்குறுநூறு 230	அம்ம வாழி	கபிலர்	437
ஐங்குறுநூறு 253	குன்றக்	கபிலர்	390
ஐங்குறுநூறு 258	குன்றக்	கபிலர்	442
ஐங்குறுநூறு 259	குன்றக்	கபிலர்	446
ஐங்குறுநூறு 262	சிறுதினை	கபிலர்	385
ஐங்குறுநூறு 300	கொடிச்சி	கபிலர்	454
ஐந்திணை எழுபது 2	கொல்லைப்	மூவாதியார்	388
ஐந்திணை எழுபது 3	இலைஅடர்	மூவாதியார்	434
கலித்தொகை 38	இமையவில்	கபிலர்	462
கலித்தொகை 39	காமர்	கபிலர்	467
கலித்தொகை 40	அகவினம்	கபிலர்	475
கலித்தொகை 41	பாடுகம்	கபிலர்	481
கலித்தொகை 45	விடியல்வெங்	கபிலர்	488
குறுந்தொகை 34	ஒறுப்ப	கொல்லிக் கண்ணன்	401
குறுந்தொகை 51	கூன்முள்	குன்றியனார்	380
குறுந்தொகை 52	ஆர்களிறு	பனம்பாரனார்	428

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
குறுந்தொகை 83	அரும்பெறல்	வெண்பூதன்	449
குறுந்தொகை 146	அம்ம வாழி	வெள்ளிவீதியார்	452
குறுந்தொகை 247	எழில்மிக	சேந்தம்பூதனார்	435
குறுந்தொகை 257	வேரும்	உறையூர்ச் சிறுகந்தனார்	395
குறுந்தொகை 351	வளையோய்	அம்மூவனார்	440
குறுந்தொகை 361	அம்ம வாழி	கபிலர்	459
குறுந்தொகை 367	கொடியோர்	மதுரை மருதனிளநாகனார்	443
குறுந்தொகை 368	மெல்லிய	நக்கீரர்	392
குறுந்தொகை 374	எந்தையும்	உறையூர்ப் பல்காயனார்	458
குறுந்தொகை 389	நெய்கனி	வேட்டகண்ணன்	461
திணைமாலை நூற்றைம்பது 15	வாடாத	கணிமேதாவியார்	451
திணைமொழி ஐம்பது 21	அஞ்சனம்	கண்ணஞ்சேந்தனார்	397
நற்றிணை 22	கொடிச்சி	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	418
நற்றிணை 78	கோள்சுறா	கீரங்கீரனார்	411
நற்றிணை 91	நீஉணர்ந்	பிசிராந்தையார்	409
நற்றிணை 163	உயிர்த்தன	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	416

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
நற்றிணை 235	உரவுத்திரை	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	422
நற்றிணை 278	படுகாழ்	உலோச்சனார்	414
நற்றிணை 393	நெடுங்கழை	கோவூர் கிழார்	455

களஞ்சிய வாயில்

சிலம்பொலி சு. செல்லப்பன்

ஒரு மொழியின் பயன்பாடு உயிர்ப்புடன் இருக்க வேண்டுமெனின் அம்மொழிக்குரிய வேர்களை உயிர்ப்புடன் திகழுமாறு காக்க வேண்டும். மொழிக்கு வேர்கள் என்பவை அதன் இலக்கியங்களே! நூல்களெங்கும் பரந்து கிடக்கும் இலக்கியச்சுவை, ஒரு பூவினடியில் அமைந்திருக்கும் அமிழ்தத்தை ஒத்தது. ஒட்டுமொத்த தமிழ்ச்சமுதாயமும் இலக்கியங்களின் சுவையை அறிந்து மகிழுமாறு செய்ய, ஒவ்வொரு பூவிலும் உறிஞ்சி எடுத்த அமிழ்தத் துளிகளைச் சேகரித்துச் சுவையான தேனடையாக உருவாக்கித் தரும் தேனீயின் உழைப்பினையொத்த அயராத பணி இன்றியமையாததாகிறது. இவ்வாறான பணியை ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு தமிழறிஞர்கள் மேற் கொண்டுள்ளனர் என்றாலும், 'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்' என்னும் இந்நூலின் தொகுதிகள் உருவாக மேற் கொள்ளப்பட்ட முயற்சி தனித்தன்மை வாய்ந்ததாகும்.

இதுவரை சொல்லப்பட்ட எதையும் தாண்டிச் சொல்லப்படவில்லை என்றாலும், இதுவரை சொல்லப்பட்ட ஒன்றை, இதுவரை யாரும் சொல்லாத முறையில் சொல்ல மேற்கொண்ட முயற்சியால் உருவானதே இக்களஞ்சியமாகும்.

'உரை' என்பதற்கும் 'திரட்டு' என்பதற்கும் உழைப்பு அளவிலேயே வேறுபாடு இருக்கிறது. சிலப்பதிகாரம் உள்ளிட்ட எத்தனையோ நூல்களுக்கு உரை எழுதியிருக்கிறேன். அவை ஒரு நெடுஞ்சாலைப் பயணம்போல் சீராகத் தொடங்கி முடிந்துள்ளன. ஆனால், குறிப்பிட்ட ஒரு பாடுபொருளை, குறித்த ஒரு கால எல்லைக்குள், அது

பாடப்பட்டுள்ள இலக்கிய நூல் ஒன்றுவிடாமல் தேடியெடுத்து, உரிய விளக்கத்துடன் தந்துள்ள இம்முயற்சி, என் வாழ்நாளில், எனக்கு வாழ்க்கை தந்த தமிழுக்கு, என் நன்றிக் கடனைச் செலுத்தக் கிடைத்த ஒரு நல்வாய்ப்பாய் எண்ணி மகிழ்கிறேன்.

'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியத்தை' உருவாக்க நான் மேற்கொண்ட முயற்சி ஓர் அகழ்வாராய்ச்சிக்கு இணையானது எனலாம். செம்மொழித் தமிழ் இலக்கிய நூல்களிலுள்ள 2586 அகப்பாடல்கள் பதினான்கு தொகுதிகளில் விளக்கம் பெற்றுள்ளன. இக்களஞ்சியம் வெறும் அகத்திரட்டு மட்டுமன்று; ஒரு யுகத்திரட்டு. ஒரு வகையில் இதனைத் தமிழ் அகப்பொருள் கலைக்களஞ்சியம் (Encyclopedia) என்று கூடச் சொல்லலாம்.

நூல் உருவாக்கம்

தமிழ் அகத்திணையில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம், குறியிடம், சிறைப்புறம், ஒருவழித்தணத்தல், வரைவு நீட்டிப்பு, வரைவு கடாயது, அறத்தொடு நிற்றல், வரைவிடைப் பிரிவு, வரைவு மலிதல், உடன்போக்கு, ஏறு தழுவுதல், மங்கல மனையறம், பொருள்வயிற் பிரிவு, பரத்தையிற்பிரிவு என்பவற்றோடு இன்னும் பல துறைகள் உள்ளன. ஒவ்வொரு துறை சார்ந்த பாடல்கள் ஒவ்வொரு நூலினின்றும் முதலில் திரட்டப்பட்டன; பின்னர் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டு இக்களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தையும் ஒரேயிடத்தில், நிகழ்ச்சி நடைபெறும் வரிசை முறையில், தக்க விளக்கத்துடன் இக்களஞ்சியத்தில் காணமுடியும். களவு, கற்பு என்னும் நிலைகளில் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்களைத் தனியே ஓரிடத்தே காண்பதற்கான வாய்ப்பு இக்களஞ்சியத்தில் உள்ளது.

பதிப்பில் பின்பற்றப்பட்டுள்ள நெறிமுறைகள்

மூல பாடம் பலவற்றுள் சிறந்தது என்று கருதப்பட்டது இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது.

அக்காலப் பாடல் நடையமைப்புச் சற்றுக் கடினமானதுதான். ஆதலின் எளிதில் படித்துப் பொருளறியும் முறையில் சொற்கள் பிரிக்கப்பட்டு அசையும் சீரும் சிதையாவண்ணம் பாடல்கள் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடலும் யாருடைய கூற்று என்பது முதலில் தரப்பட்டுள்ளது. அடுத்த அடியில் அப்பாடல் எந்த நூலில் எத்தனையாவது எண்ணில் அமைந்துள்ளது என்பதும், அதனை இயற்றிய ஆசிரியர் எவர் என்பதும் தரப்பட்டுள்ளன. அடுத்துப் பாடல் எத்திணையைச் சார்ந்தது என்பது கொடுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்துப் பாடலின் கூற்றும், கூற்று விளக்கமும் இடம் பெற்றுள்ளன. இவற்றையடுத்துப் பாடலும், பாடலின் தெளிவுரையும், கருத்துச் சுருக்கமும் உள்ளன.

மேற்கொண்டு விளக்கமும், தேவையான குறிப்புகளும் உள்ளன. சில பாடல்களுக்கு இறைச்சி, உள்ளுறைப் பொருள் ஆகியன தரப்பட்டுள்ளன. இறுதியில் பாடலிலுள்ள இன்றியமையாச் சொற்களுக்குப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. சொல்லுக்கு நேரடிப் பொருளோடு, பாடலைப் புரிந்துகொள்ளும் வகையில் மேலும் தேவைப்படும் சொற்களும் இணைக்கப்பட்டுள்ளன. அதனால், பாடலையும் சொற்பொருளையும் ஒன்றிணைத்துப் படித்தால் பாடலின் பொருள் உரையின்றியே நன்கு விளங்குவதை அறியலாம்.

நன்றி மலர்

களஞ்சியத்தை உருவாக்க எனக்குத் துணை நின்றவர், பலர்.

நான் எழுதியதைச் செப்பனிட்டு வரிசையாக்கி, நூல் முழுவதையும் படித்துத் தக்க திருத்தங்களை வழங்கியவர், என் மருகர் பொறிஞர்

நா. புஷ்பராசு. அவருக்கு வாழ்க்கைத்துணையாக மட்டுமன்றி இப்பணிக்குப் பெரிதும் துணை நின்ற என் மகள் முனைவர் மணிமேகலை, இவர்களுக்கு இனிய ஒத்துழைப்பு நல்கிய பொறிஞர் அ. இரவீந்திரன்,

நூல் முழுமைக்கும் மெய்ப்புப் பார்த்துத் துணை செய்ததோடு 'அகத்திணை அஞ்சிறைத் தும்பி' எனப் பாராட்டுரையையும் தந்துள்ள கவிமாமணி தேனி திருமாவளவன்,

'ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்' எனும் நுண்ணிய ஆய்வுரையை வழங்கியுள்ள பேராசிரியர் முனைவர் இராம. குருநாதன்,

உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையில் அருமையானதோர் அணிந்துரை நல்கியுள்ள பேராசிரியர் முனைவர் மறைமலை இலக்குவனார்,

எத்தனை திருத்தங்கள், மாற்றங்கள் செய்தாலும் சலிப்பின்றி அத்தனையையும் உடனுக்குடன் கணினிமூலம் செம்மையாய்ச் செய்து வெளிவர உதவிய திருமதி இந்திரா காந்தி ரவி,

தரமான இலக்கிய நூல்களைப் பதிப்பிப்போர் என்றதும் முதலில் நினைவில் நிற்பவர் பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தார் ஆவர். அவர்கள் இக்களஞ்சியத்தைக் காண்பவர் பாராட்டும் வகையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். அவர்கள் தந்துள்ள பதிப்புரை என் நெஞ்சில் என்றென்றும் பதிந்திருக்கும். அத்தகைய பதிப்பக உரிமையாளர் திரு. ப. செல்லப்பன், பதிப்பில் எனக்கு எல்லா வகையிலும் துணை நிற்கும் சுப்பு என்கிற திரு. இராம. சுப்பையா, களஞ்சியம் சிறந்த முறையில் உருவாக முன்னின்று முழு மூச்சுடன் பாடுபட்ட முனைவர் ப. முத்துக்குமாரசாமி,

முகப்போவியத்தை அழகுற வடிவமைத்துத் தந்துள்ள ஓவியர் ஜீவா,

கடின உழைப்பில் என் உடல் நலம் கெட்டுவிடாதவாறு பேணி வந்ததோடு, களஞ்சியம் வெளிவருவதில் பெரிதும் ஆர்வம் காட்டிய

என் மகன் செ. கொங்குவேள், மருமகள் மருத்துவர் ஈஸ்வரி மற்றும் குடும்பத்தினர் ஆகிய

அனைவரையும் பாராட்டிப் புகழ ஏற்ற சொற்கள் எனக்குக் கிட்டவில்லை என்பதால், ‘நன்றி’ என்னும் ஒரு சொல்லை என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படுத்தி வணங்குகின்றேன்.

களஞ்சியப் பொருளைப் பாதுகாத்தல் மட்டும் போதாது; அதனை நாமும் துய்த்து அனைவர்க்கும் வாரிவாரி வழங்க வேண்டும். களஞ்சியத்தைத் துய்த்தால், தமிழரின் வீரம் செறிந்த, அறஞ்சார்ந்த காதல் வாழ்க்கை முறையினைச் சற்றே வாழ்ந்துவிட்ட நுகர்வும், இவ்வளவு மென்மையும் உயர்வும் அரியதும் ஆனதா தமிழ்க்காதல் என்னும் உள்ளுணர்வும் மேலோங்கி நிற்கும் என்பது உறுதி.

களஞ்சியத்தைப் பயன்படுத்துங்கள்; மேலும் மேலும் விரிவடையச் செய்யுங்கள்.

என்றும் உங்கள்



மதிப்புரை

அகத்திணை அஞ்சிறைத் தும்பி

கவிமாமணி தேனி **திருமாவளவன்**

தனி ஒருவராய், இருபது ஆண்டுகள் இடைவிடாது முயன்று, பல மணி நேர உழைப்பை நல்கி, வெற்றிகரமாய் முடித்துள்ளார், சிலம்பொலி. இந்த இமாலயச் சாதனையை எவ்வாறு போற்றிப் புகழ்வது? சிலம்பொலியின் இந்நூல் தமிழறிவைத் தழைத்திடச் செய்யும். பேச்சாற்றலைப் பெருக்கிடப் பயன்படும். ஆராய்ச்சியாளர்க்கு அருந்துணையாகும். மாணவர்க்கு மாங்கனியாகும். ஆசிரியருக்கு உரை நூல் ஆகும். இந்நூலை ஒவ்வொருவரும் பயின்று, “பெருமை கொள்வாய் தமிழா – தமிழ்நாட்டில் பிறந்ததனால் மிகச் சிறந்தவன் நான் என்று” மகிழ்ந்திட வேண்டுகிறேன்...

ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்

பேராசிரியர் முனைவர் **இராம. குருநாதன்**

அகப்பொருள் சார்ந்த இப்பெருநூலினைத் தமிழுலகம் நன்கறிந்த முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பனார் இலக்கிய இன்பம் தோய இதனைப் படைத் துள்ளார். இந்நூல் செல்லப்பனாரின் சொற்சிற்பச்சிகரம் என்று செப்புவது மிகையான கூற்றன்று. அகப்பொருள் கருத்தாக்கத்தை இவர் போல் சொல்லு வதற்கு இனி ஒருவர் உண்டோ என்று சொல்லும் அளவிற்கு இந்நூல் சிறந்து விளங்குகிறது. இஃது இவரது வாழ்நாள் சாதனை என்று நவின்று, இதற்கு வரவேற்பு வளையம் வைத்துக் கொண்டாடலாம். இந்நூலினை உருவாக்கி உலவ விட்டமைக்குத் தமிழுலகம் நன்றி சொல்லும். கொண்டாடும்...

தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோல்

பேராசிரியர் முனைவர் **மறைமலை இலக்குவனார்**

மிக எளிமையாகவும், இனிய எளிய நடையிலும், பாடல்களில் கருத்து களையும் சிறப்புகளையும் சுவைபடவும், பயன்பாடு மிக்கதாகவும் சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ள அகப்பொருள் களஞ்சியம் தமிழ்கூறும் நல்லுலகத் திற்கு ஒரு மகத்தான கொடை என உறுதியாகக் கூறலாம். மிகவும் அரிதின் முயன்று, நீண்ட காலம் அயராது உழைத்து, சங்க இலக்கியம் எனும் கடலில் மூழ்கிச் சிறந்த முத்துகளைத் தேடியெடுத்தது போன்று மிகச் சிறந்த படைப்பு களுள் ஒன்றாகவும், தமிழிலக்கியச் செவ்வியற்கால அகப்பொருள் செய்திகளை நிரல்படக் கூறும் கருத்துப்பெட்டகமாகவும் விளங்குகின்றது. தமிழ்க்களஞ்சியத் திற்கு ஒரு தங்கத் திறவுகோலை இதோ சிலம்பொலி செல்லப்பனார் வழங்கி யுள்ளார். களஞ்சியப் பொருளைக் கைக்கொள்க! பயன் பெறுக!

பதிப்புரை

சொல்வேந்தர் சிலம்பொலிக்குச் சூட்டுகின்றோம் மணிமகுடம்

பழனியப்பா பிரதர்ஸ்

பொன்னொளியே! பூமழையே!
பூவணியும் காவிரியே!
தண்ணமுதே! தாமரையே!
தாழம்பூ நறுமணமே!
தென்பொதிகைச் சந்தனமே!
தேனிழைக்கும் வண்டினமே!
கன்மலையின் நறுஞ்சுனையே!
கண்ணகலா ஆழ்கடலே!
செண்பகமே! கற்பகமே!
சிலம்பொலியே! வலம்புரியே!

பண்டையநல் புலவர்களும்
பாராட்டும் வகையினிலே
கண்டுகண்டு பாடல்களைக்
காட்சிவழி நீதொகுத்துச்
செண்டெனவே தந்தனையே
செந்தமிழர் கரங்களிலே!
இன்தமிழும் புதியதொரு
ஏற்றமுற வழியமைத்தாய்!
குன்றெனவே இமயமலை
குன்றிடவே நீஉயர்ந்தாய்!

என்னபணி! இரவுபகல்
எத்தனைநாள் பேருழைப்பு!
என்னுமொரு சிந்தனையில்
எம்இதயம் கனக்கிறது!
உன்நூல்கள் பலதொகுப்பாய்
நன்னூலாய் யாம்அளித்தோம்!

உன்கழுத்தில் இன்றணியும்
ஓவ்வொருபூ மாலையிலும்
நன்மலரை ஒன்றிணைக்கும்
நாரெனவே யாம்அமைந்தோம்!

கங்குகரை காணாத
கடல்மூழ்கி எழுவோரே
சங்கொடுநல் முத்துகளைத்
தாம்வாரிக் கொணர்ந்திடுவார்!
பொங்கியெழும் நறுமணத்தைப்
பூங்காவில் நுழையாமல்
எங்ஙனந்தான் பெறக்கூடும்
இயம்பிடுக தோழர்களே!
அங்ஙனமே நீர்விரும்பி
இந்நூலின் தொகுதிகளை

வாங்கிடுக! படித்திடுக!
வரிவரியாய்ப் பொருளறிந்தே
ஓங்கிடுக! உணர்ந்திடுக
உள்ளூறும் கலைநயத்தை!
தேங்கிநின்று மறைபொருளாய்த்
திரட்டுப்பால் போலினிக்கும்
பாங்கான உவமைநலம்
பலர்போற்றும் 'இறைச்சி'யுமே!
வீங்கிடுமே உம்முடலும்
விள்ளரிய பெருமிதத்தால்!

பல்கலையின் கூடமன்றோ
பழனியப்பா பிரதர்ஸும்!
நல்லறிஞர், கவிவல்லார்,
நாடறிந்த பேச்சாளர்,
துள்ளுநடை சிறுவர்க்குச்
சுவைக்கதைகள் படைத்திடுவோர்,
வல்லமையால் எழுத்துலகில்
வந்தமர்ந்தோர் நடுவினிலே
சொல்வேந்தர் சிலம்பொலிக்குச்
சூட்டுகின்றோம் மணிமகுடம்!

அகத்திணை

பொழிலிலோ புனத்திலோ எழிலார்ந்த வேறோர் இடத்திலோ ஆண்மகன் ஒருவன், பெண்மகள் ஒருத்தி, தன் விளையாட்டுத் தோழியர் எவருமின்றித் தனித்து நிற்பதைக் காண்கிறான். எல்லா வகையிலும் தன்னை ஒத்திருக்கும் அவள்பால் அவனையுமறியாமல் ஓர் இயற்கை ஈர்ப்பால் அவள் ஒருத்திமீது மட்டுமே அவன் உள்ளம் செல்லுகிறது. அவளும் அவனை மட்டுமே விரும்புபவளாய் இருக்கிறாள். எதிர்ப்படும் எல்லாரிடமும் ஆண், பெண் உள்ளம் சென்றுவிடாது. அவளது அழகு கண்டு, 'இவள் தெய்வ மகளோ', 'உண்மையிலேயே மானிடப் பெண்தானோ' என ஐயுறுகிறான்; சில செய்கைகளால் அவள் மானிடப் பெண்ணே என்று தெளிவடைகின்றான். தன்னைப்போல அவளும் தன்னை விரும்புகிறாளா என்பதைக் குறிப்புகளால் உணர்கிறான். இருவரும் ஒருவரையொருவர் காண்கின்றனரெனினும், பெண்ணை ஆண் கண்டான் என்று சொல்வதே செய்யுள் வழக்கம். அவ்வாறு காதல் கொள்பவருள் ஆண்மகனைக் 'காதலன்' என்றோ, 'தலைவன்' என்றோ, 'கிழவன்' என்றோ, பெண்மகளைக் 'காதலி' என்றோ, 'தலைவி' என்றோ, 'கிழத்தி' என்றோ இலக்கியங்கள் வழங்குகின்றன.

தலைவனும் தலைவியும் ஒரு நிலத்தைச் சார்ந்தவராகவோ, வெவ்வேறு நிலத்தைச் சார்ந்தவராகவோ இருக்கக்கூடும். ஐவகை

நிலங்களுள் எந்நிலத்தவராயும் இருக்கலாம். எனினும், காதலனும் காதலியும் குறிஞ்சி நிலத்தில் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்கின்றனர் என்று சொல்வதே அக இலக்கிய வழக்கம். எல்லா நிலங்களிலும் காதல் தோன்றத்தான் செய்யும்! 'பின்புலம் இயற்கை யழகு வாய்ந்ததாய் இருந்தால்தான் காதல் காட்சி சிறப்புறும்.' பாலைநிலத்திலும் கடுமையாய் வெயில் வீசும் பசுமையற்ற பின்புலத் திலும் காதல் காட்சியைக் காண எவரும் விரும்பார். எனவேதான், குறிஞ்சி நிலத்தைப் பின்புலமாய்க்கொண்டு, அங்கு ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காதல் கொள்வதாய் அமைக்கின்றனர். இவ்வாறே காதல் கொள்ளும்போது ஏற்படும் மாறுபட்ட நிலைகளுக் கேற்பப் பின்புலங்களாய் முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன அமையும்.

ஒருவனும் ஒருத்தியும் கண்டுகொள்வதைக் 'காட்சி' என்பர். தான் கண்ட பெண் எவ்விடத்தினளோ, யார் மகளோ, நம் காதலுக்கு இசைவளோ என்றெல்லாம் ஆண்மகன் ஐயுறுவான். இஃது 'ஐயம்' எனப்படும்.

அணிகலன்கள் அணிந்திருத்தல், காமப் பார்வை பார்த்தல், புதிதாய்த் தன்னைக் கண்டதால் உடலில் நடுக்கம் தோன்றுதல், தான் நோக்கும்போது அவள் தன்னைப் பார்க்காது நிலத்தைப் பார்த்தல், தான் காணாதிருக்கும்போது அவள் தன்னை நோக்குதல் போன்ற குறிப்புகளால் ஆண்மகன் ஐயம் நீங்கி அவள் தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிவடைகிறான்.

தலைவி அணிந்துள்ள பூக்களில் வண்டுகள் மொய்த்திருத்தல், சிறந்த அணிகலன்களை அவள் அணிந்திருத்தல், அவள் மார்பு மற்றும் உடலில் ஓவியம் எழுதப்பட்டிருத்தல், அணிந்துள்ள மலர்மாலையில் மலர் வாடியிருத்தல், மருண்ட பார்வை கொண்டிருத்தல், கண்களை இமைத்தல், முகத்தில் அச்சம் தோன்றுதல் போன்றவற்றாலும் இன்ன பிறவற்றாலும் காதலன் தன் ஐயம் நீங்கி அவள் மானிடப் பெண்ணே என முடிவு செய்வான்.

"வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சம் என்(று)
அன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப" (தொல். கள. 4)

என்பது தொல்காப்பிய நூற்பா.

இயற்கைப் புணர்ச்சி

தலைவி தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிந்த தலைவன், தன் காதலை உணர்த்தத் துணிவான்; தலைவியும் தன் காதற்குறிப்பை உணர்த்துவாள். நாணத்தால் தலைவி, தன் காதலை வெளிப்படையாய் உணர்த்தாது குறிப்பினாலேயே உணர்த்துவாள்.

தன்னை அவள் விரும்புவதுணர்ந்த பின்னரே அவன் அவளைத் தனிமையில் சென்றடைந்து, ஒன்றுகூடி இன்புறுவான். இவ்வாறு தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் கண்டு முதல்நாளில் கூடியிருத்தலை 'இயற்கைப் புணர்ச்சி' என்பர்.

தலைவிக்கு முதன்மைத்தோழி ஒருத்தியும், உடன் விளையாடும் மகளிரும் (ஆயத்தார்) இருப்பர். ஆண்மகனின் பாங்கறிந்தொழுகும் உயிர்த்தோழன் பாங்கன் என்று வழங்கப்படுவான்.

இடந்தலைப்பாடு

தற்செயலாய்க் கண்ட ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பி, முதல் நாள் ஒன்றுபட்டுக் காதலராயினர். இவ்வாறு இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன், தன் காதலியை முதல் நாள் கண்ட அதே இடத்தில் மறுநாளும் காணலாம் எனச் செல்கிறான்; காதல் மிக்க தலைவியும் அங்கு வந்து நிற்பாள். தோழியரோடு விளையாடாது, பூப்பறித்து மாலை தொடுத்திடாது தனித்திருக்கும் தலைவியிடம் தலைவன், "தனித்து நிற்கும் நீ யாரோ? உன்னைத் தொழுது கேட்கிறேன்" என்று தன் காதல் உள்ளத்தை வெளிப்படுத்துவான். அது கேட்டுத் தலைவி நாணி நிற்பாளேயன்றி மறுமொழி எதுவும் கூறமாட்டாள். தலைவன் அவளை நெருங்கித் தன் காதலை உறுதிப்

படுத்திக்கொள்வான். யாருமறியாதவாறு தலைவன் தனியே வந்து, தலைவியை முதல்நாள் கண்ட அதே இடத்திலேயே இரண்டாம் நாளும் கண்டு, கூடிக் களிப்பது 'இடந்தலைப்பாடு' எனப்படும்.

பாங்கற்கூட்டம்

தலைவியைக் கண்டது முதற்கொண்டு தலைவன் மனஞ்சோர்ந்து, உடல் தளர்ந்து உயிர்க்களையற்றிருப்பான். ஆண்மை மிக்க அவன் அவ்வாறு சோர்ந்திருப்பது எதனால் எனப் பாங்கன் கேட்பான். அது பெண் ஒருத்தியால் நிகழ்ந்ததென்பான், தலைவன். பகைவரும் கண்டஞ்சும் வீரமிக்க அவன், பெண் ஒருத்தியால் இடிந்துபோய் இருத்தல் கூடாதெனப் பாங்கன் இடித்துரைப்பான். இதனைப் பாங்கன் கழறுதல் (இடித்துரைத்தல்) என்பர். பாங்கன் இடித்துரைத்ததை மறுத்துத் தலைவன், 'நீ அவளைக் கண்டாயானால் என்னை இவ்வாறு இழிவாய்ப் பேசமாட்டாய்' என்று கூறுவான். தோழனின் கூற்றினைத் தலைவன் மறுத்துப் பேசுவதைக் 'கழற்றெதிர் மறை' என்பர்.

தலைவனின் காதற்பெருக்கையும், அதை அவன் தாங்க இயலாது தவிப்பதையும் கண்டு, "அப்பெண் யார்? எவ்விடத்துள்ளாள்? எத்தன்மையள்?" என்று பாங்கன் கேட்டறிந்து, அவ்விடம் சென்று, தலைவன் குறிப்பிட்ட அவளைக் கண்டு, தலைவன் அவளை விரும்பியது சரியெனத் தெளிவான்; தலைவனுக்கு எல்லா வகையிலும் துணை நிற்கவும் உறுதி பூணுவான்; தலைவனைத் தலைவி இருக்கு மிடத்திற்கு அழைத்துச் செல்வான். தலைவி இருக்கும் இடத்தைப் பாங்கன் காட்டத் தலைவனோடு தலைவிக்கு ஒருநாள் கூட்டம் நிகழும். இது 'பாங்கற்கூட்டம்' எனப்படும்.

பாங்கியிற்கூட்டம் (தோழியிற்புணர்ச்சி)

தலைவிக்கு விளையாட்டுத்தோழியர் பலராய் இருப்பர். தலைவி அவர்களை விட்டுப்பிரிந்து எப்பொழுதும் மறைந்து செல்லல் அரிது. அவர்களைத் தனியே விட்டுப் பிரிந்து சென்றால் திடீரென்று வந்து தலைவியை அடைவர், தோழியர். இது போன்ற இடையூறுகளை

யெல்லாம் கடந்து, தலைவியைத் தன்னிடம் கொண்டுவந்து விடத் தலைவிக்குத் தோழியராய் உள்ளவருள் முக்கியமான ஒருத்தியை அறியத் தலைவன் முற்படுவான்.

தலைவியைப் பெற்றெடுத்தவள், நற்றாய்; வளர்த்தவள், செவிலித் தாய். நற்றாய், செவிலிக்குத் தலைவியும் தோழியும் ஆவாள். அதே போலவே, செவிலிக்கு மகள், நற்றாய் பெற்ற மகளான தலைவிக்கு உயிர்த்தோழியாய் இருப்பாள். இருவரும் ஈருடலும் ஒருயிருமாயிருப்பர். அத்தகைய தோழியை அறிந்து, அவளிடம் தன் குறையைக் கூறி, அவள் வழிநடத்துதலின்படி தலைவியைக் கூடிடத் தலைவன் விரும்புவான்.

தலைவியைச் சூழ ஒரு படைபோலக் கூட்டமாய்த் தோழியர் வருகின்றனர். அவர்களுள் யார் முதன்மையானவள் என்பதை எவ்வாறு அறிவது? தோழியர் கூட்டத்தை நன்கு கவனித்துப் பார்க்கிறான், தலைவன். அவர்களுள் ஒருத்தி எதைச் சொன்னாலும் தலைவி அதை ஏற்பதையும், அவள் செய்வதுபோலவே தலைவி செய்வதையும் கண்டு, அவள்தான் தலைவிக்கு உயிர்த்தோழி என்றறிகிறான்.

குறையிரத்தல்

அத்தோழியின் தோழமையைப் பெற்றாலன்றித் தலைவியின் நட்பைப் பெறுதல் அரிது என்றுணர்ந்தான், தலைவன். அவன், தான் தலைவி மீது கொண்டுள்ள காதலை அத்தோழியிடம் தெரிவிப்பான். தலைவியைத் தனியே சந்திக்க இயலாதிருப்பதைக் கூறி, அக் குறையை நீக்கித் தான் தலைவியை அடையத் துணை நிற்குமாறு மிகவும் இரங்கிக் கேட்பான். இது ‘குறையிரத்தல்’ எனப்படும்.

தோழியும் தலைவியும் ஒருங்கே இருக்கும்போது சென்று, வெளிப் படையாகவோ குறிப்பாகவோ தன் நிலையைத் தலைவன் நயமாய்ப் புலப்படுத்துவான். முதலில் தோழி தலைவனுக்குத் துணை நிற்க மறுப்பாள்.

மதியுடம்பாடு

தலைவன் தன்னிடம் கூறியவற்றையும், தலைவியின் செயல்களையும் தனித்தனியாகவும், சேர்த்தும் ஆராய்ந்து, அவர்கள் இருவரும் ஒரே வகையான இன்பதுன்பங்களைக் கொண்டிருத்தலையும், இருவர் அறிவும் ஒன்றாய் இருத்தலையும் தோழி உணர்ந்தறிவாள். தலைவன் தலைவியர் உணர்வோடு தோழியின் உணர்வும் ஒத்துச்செல்லும் நிலை உண்டாதலை, 'மதியுடம்பாடு' என்பர்.

மதியுடம்பட்ட தோழி, தலைவியின் குறிப்பறிய முற்படுவாள். தலைவி, தான் ஒருவனைக் கண்டு காதலுற்றிருப்பதை நாண மிகுதியால் தோழியிடம் கூறமாட்டாள். தலைவி ஆயத்தோடு கூடாது தனித்திருத்தல், ஏதோ ஒன்றை நினைந்து வருந்தியிருத்தல் போன்ற நிகழ்வுகளால், அவள் காதலைத் தான் அறிந்திருந்தும் அறியாதவள் போலத் தலைவியிடம் மறைமுகமாய்க் கூறி, தலைவியின் நாணம் ஊறுபடாதவாறு, தோழி அவள் நெஞ்சக்கருத்தை அறிவாள்.

சேட்படை

தோழியைக் குறையிரந்து வரும் தலைவன், காணிக்கை (கையுறை)யாய் அரிய தழை, முத்து முதலியவற்றைக் கொண்டுவந்து அவற்றைத் தலைவியிடம் தந்து, அவளை எவ்வாறாயினும் தன்னுடன் கூட்டி வைத்திடுமாறு தோழியிடம் வேண்டுவான்.

'நாம் விரும்பியபடி இவள் எளிதிலே நமக்குக் கிடைக்கக் கூடியவள் அல்லள்' என்று கருதும் தலைவன், தழையும் கண்ணியும் கொண்டு வந்து தோழிக்குப் பின்னின்று குறையிரப்பான். அவன் உணரும்படியாகத் தோழி அவனைச் சேட்படுத்துவள் – அஃதாவது, தலைவனைத் தலைவியுடன் நெருக்கமாய்ப் பழக விடாது சற்று அகற்றி வைப்பாள் (சேட்படுத்தல் – அகற்றுதல்).

மடலேறுதல்

தலைவன் தலைவியரின் ஆழமான காதலை அறிந்த பின்னும் தோழி, அவர்கள் எளிதில் சந்திக்க இடமளிக்க மாட்டாள்; காதலன் அரிதின்

முயன்று ஆர்வத்தோடு கொண்டுவரும் கையுறையை ஏற்க மறுப்பாள்; பல்வேறு தடைகளை ஏற்படுத்துவாள். தலைவன் தலைவிமீது கொண்டுள்ள காதல் உறுதியானதுதானா என்பதை அறிவதற்கே இத்தகு செயல்களைத் தோழி செய்வதற்கான நோக்கமாகும்.

தோழி வேண்டுமென்றே தன் குறைக்குச் செவிசாய்க்காது காலங் கடத்துவதைக் காணும் தலைவன், தன் எண்ணம் ஈடேறுவதற்காகத் தான் மடலேற உறுதி பூண்டுள்ளதைத் தோழியிடம் தெரிவிப்பான்.

மடல் மா என்பது பனங்கருக்கினால் செய்யப்பட்ட குதிரையைக் குறிக்கும். தான் காதலித்த பெண்ணை எய்தப்பெறாதவன் தன் உடல் முழுவதிலும் திருநீற்றைப் பூசிக்கொண்டு, ஆவிரம் பூ மாலையை மார்பிலும், எருக்கம்பூ மாலையைத் தலையிலும் அணிந்துகொண்டு பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரைமேல் ஏறிக்கொள்வான்; தான் விரும்பும் காதலியின் படத்தைத் துணியில் எழுதிக் கையில் பிடித்திருப்பான். அக்குதிரையைச் சிலர் வீதியில் இழுத்துச் செல்வர். இது மடலேறுதல் எனப்படும். இதனால் அவன் உறுதியான காதல் வெளிப்படும்; மேலும், அரம் போன்ற பனங்கருக்கு உடலினை அறுத்தலால் வெளிப்படும் குருதிப்பெருக்கும் இரக்கத்தை ஏற்படுத்தும். ஊரார், இவ்வளவு காதல் கொண்டுள்ளவனுக்கு மகளைக் கொடுக்க மறுக்கலாமா எனப் பெண்ணைப் பெற்றோரைக் குறை கூறுவர்; அவர்களை அணுகி, எடுத்துரைத்து, அவளை அவனுக்கு மணம் முடித்து வைப்பர். மடல் ஏறுவேன் என வாயளவில் சொல்லுவது ஐந்திணையின்பாற்படும்; சொன்னபடி மடலேறிக் காட்டுவது பெருந்திணையின்பாற்படும். சங்க இலக்கியங்களில் மடலேறுவதாய்ச் சொல்லும் நிலை மட்டுமே உள்ளது; மடல் ஏறியதாய்ப் பாடல் எதுவும் இல்லை.

மடலேறுவேன் என்று தலைவன் சொன்னதும், அவனது காதல் திட்பத்தினைக் கண்ட தோழி, அவனுக்குத் துணை செய்ய முற்படுவாள்.

குறியிடம்

தலைவன் தந்த கையுறையைத் தலைவியிடம் கொடுத்து, அவள் குறிப்பினை உணர்ந்துகொள்வாள், தோழி. தலைவன் குறையைத்

தலைவி நயக்கவே, அவ்விருவரும் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கேற்ற வகையில் 'இன்ன இடத்திற்கு வந்தால் தலைவியைக் களவிற் கூடலாம்' என்று தோழி குறியிடங் கூறுவாள்.

தலைவியைத் தலைவன் பகலில் கூடுதற்கு ஓர் இடத்தை வரையறுத்துத் தோழி குறிப்பிடுவாள். இது 'பகற்குறி' எனப்படும்.

அடுக்காய் உள்ள மலைப்பக்கமாகவோ, அழகிய மலர்ச் சோலையாகவோ, காதலுணர்வை மிகுவிக்கும் இன்ன பிற இடங்களாகவோ பகற்குறி அமையும். அவ்விடங்கள் பலவகைப்பட்ட மரங்களால் பொலிவு பெற்றனவாயும், வெளியிலிருப்போர் உள்ளிருப்போரை எளிதில் காண்பதற்கு இயலாதனவாயும், ஆனால், உள்ளே இருப்போர் வெளியிலிருப்பவரை எளிதில் கண்டு கொள்ளத்தக்கனவாயும், ஆசைகளை விட்டொழித்தோரையும் ஆசை கொள்ளத் தூண்டும் தன்மையனவாயும் இருக்கும். பகலில் கூடுமிடம் வீட்டிற்குப் புறத்தே, தலைவி வழியறிந்து வரக்கூடியதாயும், அவளுக்குப் பழக்கமான இடமாயும் அமைந்திருக்கும்.

பகற்குறி நாடி வந்த தலைவன், அக்குறிக்கண் செல்ல இயலாதவாறு தடைகள் சில நேர்வதுமுண்டு. (பகற்குறி இடையீடு)

அந்நிலையில், தலைவன் விருப்பத்தை ஈடேற்றுதலை அறமாய்க் கருதும் தலைவி, அவன் விரும்பியவாறே இரவில் வந்து தன்னைச் சந்திப்பதற்கு வரையறுத்துரைக்குமிடம் 'இரவுக்குறி' எனப்படும். அவ்விடம் தலைவியின் இல்லத்து மதில் எல்லைக்குள் இருக்கும்; இல்லத்தவர் பேசும் பேச்சினை வெளியிலிருந்து கேட்குமளவிற்கு அண்மையில் அகமனைக்கும் புறமனைக்கும் நடுவே அமைந்திருக்கும். அது, தலைவியின் வீட்டு எல்லைக்கு உட்பட்டிருக்கும் செய்குன்று, இளமரக்கா, பூப்பந்தர், விளையாட்டிடம் போல்வனவற்றுள் ஏதேனும் ஒன்றாயிருக்கும். தலைவன், தான் இரவுக்குறியிடத்துக்கு வந்திருப்பதைத் தெரிவிக்க அங்குள்ள நீர்நிலையில் கல்லெறிந்து ஒலி எழுப்பல், மரங்களில் தங்கியிருக்கும் பறவைகளை எழுப்பிவிடல் போன்ற

அடையாளக்குறிகளைச் செய்வான். அவ்வொலி கேட்டுத் தலைவி அங்கு வந்து சேர்வாள்.

சில சமயம், தலைவன் செய்ய வேண்டிய குறி காற்றசைவு போன்றவற்றால் இயற்கையாய் நிகழ்ந்துவிடும். அதை அவன் செய்ததாய் எண்ணி வந்து தலைவி ஏமாந்து திரும்புவாள். பிறகு அங்கு வந்த தலைவன் குறி எழுப்ப, அதைக் கேட்கும் தலைவி, அது தலைவன் எழுப்பிய குறியன்று என்று கருதி வாராதிருப்பாள். அதனால் தலைவன் சந்திப்பு நேராமலே திரும்புவான். இஃது 'அல்ல குறிப்படுதல்' ஆகும்.

சிறைப்புறம்

ஒருவரை ஒருவர் கண்ணால் பார்க்க வாய்ப்பு இல்லாததாயும், ஆனால், ஒருவர் கூறியதை மற்றவர் காதால் கேட்கும் தொலைவில் உள்ளதாயும் இருக்கும் பகுதி 'சிறைப்புறம்' எனப்படும். அதை வீட்டருகே உள்ள ஓர் இடம்; பச்சை உயிர்வேலி எனலாம்.

தோழிக்கும் தலைவிக்கும் இடையே நிகழும் உரையாடல்களைத் தலைவன் மறைந்திருந்து கேட்டு அறிதற்கு வசதியாய் மனைக்குப் புறமாய்க் காவலாய் அமைக்கப்பட்டுள்ள வேலி அமைப்பினைச் சிறைப்புறம் எனலாம்.

இற்செறிப்பு

தலைவன் தலைவியரிடையே ஏற்பட்டுள்ள களவுறவை ஊரார் அறிந்து பழிச்சொல் கூற முற்படுவர். இப்பழிச்சொல் 'அலர்' எனப்படும். ஊரெங்கும் பழிச்சொல் ஏற்பட்டிடவே தலைவி வீட்டார் அவளை வீட்டை விட்டு எங்கும் வெளிச் செல்லாதவாறு வீட்டுக்காவலில் வைப்பர். இஃது 'இற்செறிப்பு' எனப்படும்.

தலைவியின் தோற்ற மாறுபாட்டைக் கண்டும், ஊரவர் குறிப்பாய்ப் பேசிக்கொள்வதைக் கேட்டும், விளையாடல் முதலியவற்றிற்குத் தன் இல்லத்தைவிட்டுத் தலைவி வெளியே செல்ல இயலாதவாறு செவிலி அவளை இல்லத்திற்குள்ளேயே தங்கச்செய்வாள்.

ஒருவழித்தணத்தல்

அலர் அடங்குமாறு தலைவன் தலைவியைக் காண வாராது, தன் ஊரிலேயே சில காலம் தங்கி இருப்பான். இதனை 'ஒருவழித்தணத்தல்' என்பர்.

வரைவு கடாயது

தலைவன் சிறைப்புறத்தானாயிருக்க, ஊரார் அலர் கூறுவதையோ, தலைவிக்கு இற்செறிப்பு ஏற்பட்டிருப்பதையோ, அயலவர் மணம் பேசி வருகின்றனர் என்பதை அறிவித்தோ, இனியும் களவொழுக்கம் நீட இடந்தரலாகாது என்றும், உடனே அவன் வரைவு மேற்கொள்ள வேண்டும் என்றும் தலைவியும் தோழியும் வற்புறுத்திக் கூறுவர். தலைவன் சிறைப்புறமிருக்க, தலைவியும் தோழியும் அவன் கேட்குமாறு தம்முள் பேசி, அவனை உடனடியாக வரைந்துகொள்ளவும் தூண்டுவர்.

வெறியாட்டு

தலைவனோடு களவொழுக்கம் மேற்கொண்டுள்ள தலைவி, அவன் பிரிவைப் பொறுக்க இயலாது உடல் மெலிவாள். தன் மகளின் உடல், நாள்தோறும் மெலிவதற்கான காரணத்தை அறியாது அவள் தாய் கலங்குவாள். உடல் மெலிவு முருகனால் ஏற்பட்டது என நம்பி, செவிலி முருக பூசை செய்ய முனைவாள். முருக பூசை செய்வதற்குரிய பூசாரி, வேலன் எனப்படுவான். அவன் முருகனைக் கூவி அழைத்தும், வெறி யாட்டுக் கூத்தாடியும், கழற்சிக்காயிட்டும் தலைவியின் நோய்க்குக் காரணம் முருகனே என்பான்.

தெய்வம் மக்கள்மீது ஏறி ஆடுவதை 'வெறியாட்டு' என்பர். வெறியாடுபவன் தன் கையில் வேலைத் தாங்கி ஆடுவான். ஆதலின், இவன் வேலன் என்று வழங்கப்பட்டான்.

வெறியாடும் இடத்தில் பல்வகை மலர்களையும் பரப்பி, அழகுறச் செய்து முருகனை வழிபட்டு வேலன் வெறியாட்டயர்வான். அவ் விடத்தை 'வெறியாடு களம்' என்பர். அங்கு வேலன், ஆட்டுக்குட்டியை வெட்டிப் பலி கொடுத்துப் பூசை செய்வான்.

கட்டுவிச்சியை அழைத்து மகளின் நோய்க்குக் காரணம் யாது என வினவுவதும் உண்டு. முறத்தில் நெற்களைப் பரப்பி, எண்ணிக் குறி சொல்வது கட்டுவிச்சியின் வழக்கம்.

அறத்தொடு நிற்றல்

வெறியாட்டு நடத்தச் செவிலி முற்படும்போது தலைவி தோழியிடம், தன் காதலைத் தக்கவாறு செவிலியிடம் கூறி வெறியாட்டினை நிறுத்துமாறு வேண்டுவாள். இஃது 'அறத்தொடு நிற்றல்' எனப்படும்.

செவிலித்தாய் தோழியிடம் 'தலைவிக்கு இவ்வேறுபாடு எதனால் ஏற்பட்டது?' என்று கேட்பாள். தோழி மிக்க கவனத்தோடும் விழிப்போடும், எவர்க்கும் கெடுதியும் துன்பமும் நேராதபடி செவிலி யிடம் உரைப்பாள். கற்பு அழியாதவாறு, தலைவி தலைவனொடு ஒழுகிவந்த களவொழுக்கத்தைப்பற்றிச் செவிலியிடம் வெளிப் படுத்துவாள். இது, 'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்' எனப்படும். தலைவி தோழியிடமும், தோழி, தன் தாயாகிய செவிலியிடமும் அறத்தொடு நிற்பர். செவிலி, தன் தோழியும், தலைவியைப் பெற்றெடுத்தவளுமாய நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள். நற்றாய் தலைவியின் தமையன்மார்க்கும் தந்தைக்கும் அறத்தொடு நிற்பாள். தலைவியின் ஆழ்ந்த காதலை அறிந்த அவள் பெற்றோர் திருமணத் திற்கு உடன்படுவர்.

வரைவிடைப்பிரிவு

அறத்தொடு நின்ற நிலையில், பெற்றோர் வரைவுக்கு உடன்படு வராயின், மகட்கொடையாகவும் மண நிகழ்வுக்காகவும் தலைவியைப் பெற்றோர்க்குத் தலைவன் பொருள் தரவேண்டும். இவ்வாறு அளிக்கப்படும் பொருள், மகட்கொடை, முலை விலை என்னும் பெயர்களால் வழங்கப்படும். இப்பொருளைத் தேடி வரத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வான். இது 'வரைவிடைப்பிரிவு' எனப்படும். வரைவிடைப்பிரிவால், தலைவி ஆற்றாது வருந்தத் தோழி அவளைத் தேற்றுவிப்பாள்.

தலைவன் வரைபொருட்காகப் பிரிந்து சென்று, பொருள் திரட்டி மீண்டதும் தன் சுற்றத்தவர்களை முற்கொண்டு, தலைவியில்லம் போந்து, பெண் தருமாறு வேண்டுவான்; சுற்றத்தவர் அல்லாமல் அறநிலை சான்ற வேறு சான்றோர்களை முற்கொண்டும் பெண் தருமாறு வேண்டுதலுமுண்டு; பின்னர், முறைப்படி திருமணம் நிறைவேறும். (வதுவை அயர்தல்)

உடன்போக்கு

பெற்றோர் சிலர் தம் மகளின் களவொழுக்கத்தை அறியாத நிலையிலும் அறிந்த நிலையிலும் தலைவியை வீட்டை விட்டு வெளிப் போகாதவாறு வீட்டினுள் வைத்துக் காத்து வருவர். அந்நிலையில் தலைவியின் வருத்த மிகுதியைக் காணும் தோழி, தலைவி, தலைவன் ஆகிய இருவர் ஒப்புதலையும் பெற்று, எவருமறியாதவாறு தலைவியைத் தலைவனுடன் அவன் ஊர் செல்ல அனுப்பி வைப்பாள். அவ்வாறு தலைவனுடன் தலைவி செல்லுதல் 'உடன்போக்கு' என்றும், 'கொண்டுதலைக் கழிதல்' என்றும் வழங்கப்பெறும். ஏதமிக்க காட்டு வழியில் தன்னுடன் வரும் தலைவிக்குத் துன்பம் எதுவும் தோன்றா வண்ணம் தலைவன் அவளிடம் இன்மொழி பேசியும் நற்செயல்களைச் செய்தும் அழைத்துச் செல்வான்.

உடன்போகும் காதலர்களை வழியிடையே காண்பவர் அவர்கட்கு ஆதரவாய் இருப்பர். 'பொழுது சென்று இருள் வந்தது; வழி துன்பமானது. இந்நேரத்தில் தனியே செல்லுதல் தகாது. இரவு எம்மூரில் தங்கிச் செல்லுங்கள்' என்று அன்போடு வேண்டுவர்.

தலைவி தம் வீட்டை விட்டு வெளியே சென்றதை அறிந்த நற்றாயும் செவிலியும் மிகவும் வருந்துவர். 'காதலனிடம் மகள் கொண்ட அன்பு இவ்வளவினது என யாம் அறிந்திருந்தால் எம் வீட்டிலேயே திருமணத்தை முடித்து வைத்திருப்போமே' என்பர். உடன்போக்குச் சென்ற மகளைச் செவிலித்தாய் தேடியும் செல்வாள். அவளை எதிர்ப் படும் ஆன்றோர், அவள் நிலை கண்டு இரங்கி, "உன் மகள் அறவழி

யினையே மேற்கொண்டுள்ளாள். அவளைத் தடுக்க வேண்டா; அவளை அவள்வழிச் செல்ல விடுங்கள்'' என ஆறுதல் கூறி அனுப்பி வைப்பர்.

தலைவன் தலைவியைத் தன்னூர் அழைத்துச் சென்றதும் அங்கு அவளை மணந்துகொள்வான். களவொழுக்கத்தைத் தலைவியைப் பெற்றோர் ஏற்றனரென்றால் திருமணம் அவர்கள் வீட்டிலும், அவ்வாறன்றித் தலைவனுடன் தலைவி உடன்போக்கில் சென்றால் திருமணம் தலைவன் இல்லத்திலும் நடைபெறும். திருமணம் எங்கு நடைபெற்றாலும் திருமணத்திற்குப் பின்பு இருவீட்டாரும் ஒன்று பட்டிருப்பர்.

மங்கல மனையறம்

திருமணத்தின் பயனாய்த் தலைவன் தலைவியர் இல்வாழ்க்கை யினை மேற்கொள்ளத் தலைப்படுவர். இல்வாழ்க்கை மேற்கொள்ளும் தலைவனுக்குத் தன்னைச் சார்ந்த மனைவி, மக்கள், பெற்றோர், உற்றார், ஏனை உறவின் முறையினர், ஆன்றோர், விருந்தினர் ஆகியோரை உண்டி, உடை, உறையுள் முதலியவற்றால் பாதுகாக்கும் கடமையும், இவையொழிய இன்னும் ஏனையவாயமைந்துள்ள இல்வாழ்க்கைக் கடமைகளும் உண்டாகின்றன. அவ்வெல்லாக் கடமைகளையும் முறைப்படி அவ்வக் காலங்களில் செய்வதற்குப் பொருள் இன்றியமையாததாகும்.

பொருள்வயிற் பிரிவு

தலைவன் திருமணம் செய்துகொள்ளுதற்கு முன் வரைதற் பொருட்டுப் பொருள் தேடியது, திருமணக் கடமைகளுக்காக மட்டுமே. திருமணத்திற்குப் பின்னர்த் தனது இல்வாழ்க்கைக்குரிய கடமைகளை நிறைவேற்றும்பொருட்டும் பொருளைத் தேட வேண்டியவனாகிறான்.

முன்னோர் தேடிய பொருள் தன்னிடம் மிகுதியாய் இருக்குமாயினும் தலைவன் தன் முயற்சியால் பெற்ற பொருள் கொண்டு இல்வாழ்க்கை யினை நடத்துவதையே பெருமையாகவும் சிறப்பாகவும் கருதுவான்.

பொருள் தேடி வரச் செல்லக் கருதும் தலைவன், தலைவி தன் பிரிவை ஆற்றியிராள் என்பதுணர்ந்து சில காலம் பயணத்தைத் தவிர்ப்பான். பின்னர்த் தோழியிடம் கூறித் தலைவியிடம் தன் பிரிவை அறிவிக்கச் சொல்வான். முதலில் தோழியே செலவினை மறுப்பாள்; நீண்ட பிரிவாய் இருக்குமென்பதால் தலைவியும் ஒருப்படாள்; ஆயினும், அறங்கருதித் தலைவி இசைவாள். நாடுகளை நீங்கியும் காடுகளைக் கடந்தும் தொலைவில் சென்று, பொருளீட்ட வேண்டும். இச்செயலைச் செய்து முடிக்க வேனிற்காலமே ஏற்றதாகும். வேனிற்பருவத்தே பிரிந்து செல்லும் தலைவன் கார்காலத் தொடக்கத்தில் திரும்பி வருவதாய்க் கூறிச் செல்வான்.

தலைவன் சென்றதும் தலைவி துயர் தாளாது மிகவும் வருந்தி யிருப்பாள்; தோழி அவளை ஆற்றுவிப்பாள். தான் புறப்படும்போது சொல்லிச் சென்றவண்ணம் கார்காலத் தொடக்கத்தே தலைவன் வாராதிருப்பின் தலைவியின் துயரம் மிகுதியாகும். கார்காலத்திற்குரிய அறிகுறிகள் தென்பட்டாலும் அவை கார்காலத்திற்குரியவை அன்று என்று கூறித் தலைவியைத் தோழி தேற்றுவிப்பாள்.

பொருள் தேடப் பிரிந்த தலைவனும், தலைவியைப் பிரிந்திருக்க இயலாதவனாய்த் தவிப்பான்; இடைவழியிலேயே திரும்பிவிடலாமா என்றுகூட எண்ணுவான்; ஆயினும், கடமையில் கருத்தூன்றி, பொருள் தேடி முடித்த பின்னரே திரும்புவான். திரும்புங்கால், விரைந்து சென்று தலைவியை அடைய வேண்டும் என்னும் வேட்கையில் தேரினை விரைவாய்ச் செலுத்துமாறு பாகனிடம் கூறுவான். அவ்வாறே பாகனும் செலுத்தத் தலைவன் தன் இல்லமடைந்து தலைவியைக் கூடி மகிழ்ந்து இனிதே நல்வாழ்க்கை நடத்துவான். இனிய மக்கட்பேறும் வாய்க்க அவர்கள் இல்லறம் மேலும் சிறப்புறும். காதலர் அன்புடையராய், விருந்தோம்பி, நடுவுநிலைமை மேற்கொண்டு, ஒப்புரவறிந்து, ஈகை மேற்கொண்டு புகழ் வாழ்வு வாழ்வர்.

தலைவன் பொருள் தேடுவதற்காக மட்டுமன்றி, உயர்கல்வி கற்பதற்காகவும், அரசனுக்காகப் போர்மேற்செல்வதற்காகவும் பிரிந்து செல்வதுண்டு.

களவுக்காலத்தில் ஒருவழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் எனத் தலைவன் பிரியும் நிலைகள் உண்டு.

கற்புக்காலத்தில் ஓதல், காவல், தூது, பொருள் தேடல், வேந்தற்கு உற்றுழி உதவல் முதலியன கருதித் தலைவியை விடுத்துப் பிரிதல் உண்டு.

தலைவன் பிரிந்திருக்கும் காலங்களில் தோழி தலைவியைத் தேற்றுவித்துத் துணை நிற்பாள்.

பரத்தையிற்பிரிவு

இல்லற வாழ்வில் தலைவனோடு தொடர்பு கொள்வதைத் தன் வாழ்க்கைநெறியாய்க் கொண்டிருப்பவள் மனைவி. அவ்வாறு அல்லாது ஆடவர் பலரோடு தொடர்பு கொள்ள விரும்பும் மகளிர் பரத்தையர் எனப்படுவர். இவர்கள் திருமணம் என்னும் வரையறைக்கு உட்பட்டவர் அல்லர். தம்மை நாடி வருபவர்க்கு இன்பமளிப்பதே இவர் தொழில். அதனால் இவரை, ‘வரைவின் மகளிர்’, ‘பொருள்விலைப் பெண்டிர்’ என்றும் கூறுவர்.

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று, பரத்தையர் இல்லத்தில் தங்கி இன்பம் பெறுவதுண்டு.

தலைவன் தன்னைப் பிரிந்து பரத்தையிடம் சென்றதால் தலைவி வெகுண்டு ஊடியிருப்பாள். தலைவனது இல்வாழ்க்கையில் நிகழும் ஊடல் முதலியவற்றைப் போக்கும் வழிகளாய் இருப்பவர் ‘வாயில்கள்’ எனப்படுவர்.

பரத்தையிற்பிரிவுக்குப்பின் தன் இல்லத்திற்கு வரும் தலைவன், ஊடிய தலைவியை நேர்விக்கத் தோழியை வாயிலாக வேண்டுவான். வாயிலாக வந்தவர்க்கு முகங்கொடுக்க மறுத்தல் ‘வாயில்’ மறுத்தலாம். தோழியே தலைவனைக் கண்டித்து வாயில் மறுப்பாள். பாணன், விறலியர் முதலியோரையும் தலைவன் வாயிலாக அனுப்புவதுண்டு. தோழியும் தலைவியும் அவர்களைக் கடிந்து திருப்புவர்.

தலைவன் பல முறை பணிந்து வேண்டியதால், தோழி மனமிரங்கித் தலைவியிடம் உரையாடி, தலைவனை ஏற்று ஊடல் தணியுமாறு செய்து வாயில் நேர்விப்பாள்.

வாயிலை ஏற்று, தலைவனுக்கு இடங்கொடுத்து அவனைத் தலைவி சேர்த்துக்கொள்வாள். ஊடலும் கூடலுமாய் அவர்கள் வாழ்க்கை இன்பமாய் அமையும்.

வாழ்க்கை, காதல் ஒழுக்கத்தால் அமைவது. தமிழ் மக்களின் காதல் வாழ்க்கை களவு, கற்பு என இரு வகைப்படும். தலைவன், தலைவியைக் கண்டு காதல் கொண்டது முதல் அவளைத் திருமணம் செய்து கொள்ளும்வரை உள்ள பகுதி களவு எனப்படும். இது களவியல், களவு நெறி, களவொழுக்கம் என்றும் வழங்கப்பெறும்.

திருமணம் முடிந்த பின் தொடங்கும் இல்லற வாழ்க்கை, கற்பொழுக்கம் என்று வழங்கப்படும்.

நாகரிகத்தில் மேம்பட்டிருந்த பண்டைக் காலத்தில் தமிழர் மேற்கொண்டிருந்த இனிய இல்லற நெறிகளே களவும் கற்புமாகும்.

அறத்தொடு நிற்றல்

பக். 2 - 121

வரைவிடைப் பிரிவு

பக். 122 - 378

வரைவு மலிதல்

பக். 379 - 492

அறத்தொடு நிற்றல்

அறத்தொடு நிற்றலாவது களவொழுக்கத்தை முறையாக வெளிப்படுத்தி நிற்றல்.

களவொழுக்கத்தைப் பொருந்திய தலைவி, பின்னர் மணந்து கொண்டு இல்லறத்தை மேற்கொள்ளுதல் குறிக்கோள் ஆதலின், அதற்கு இடையூறாக வெறியாட்டெடுத்தல், பிறன் வரைவு ஆய்தல் முதலியவை நிகழுமாயின் தன் கற்பிற்கு ஊறு நேருமென்று அஞ்சித் தான் களவில் மணந்த கணவனையே வரைந்தெய்துதல் பொருட்டுத் தோழி வாயிலாய்த் தன் மன நிலையைத் தமர்க்குக் குறிப்பான் அறிவிக்கச் செய்தல்.

தோழி செவிலித்தாயிடமும், செவிலித்தாய் நற்றாயிடமும், நற்றாய் தலைவியின் தந்தை, தமையன்மாரிடமும் அறத்தொடு நிற்பர்.

அறத்தொடு நிற்றல்

தலைவியின் மேனியில் தோன்றிய வேறுபாடு அவளை வளர்க்கும் செவிலிக்கு மனக்கலக்கத்தை ஏற்படுத்தியது. தலைவியின் உள்ளத்தில் முதிர்ந்திருக்கும் காதலை உணராமல் தலைவன் களவொழுக்கத்தை நீட்டித்து வந்தான். இந்நிலையில், அயலார் சிலர் உண்மையறியாமல் தலைமகள் பெற்றோரிடம் மகட்கொடை வேண்டி வருவாராயினர். அதனை அறிந்த தோழி, தலைவியின் உறவினர், தலைவனைத் தவிர்த்து, வந்தவர்க்கு மகட்கொடை நேர்ந்துவிடுவரோ என்னும் ஐயம் கொண்டாள். உடனே அவள் தலைவியின் குறிப்புணர்ந்து தன் தாயாகிய செவிலியிடம் அறத்தொடு நிற்பாள்.

தாம் காதலித்த ஆண் மக்களேயன்றிப் பிறர் தம்மை மனைவி யராகப் பெறும்பொருட்டுத் தம் பெற்றோரிடம் மகட்கொடை கேட்பதை அறிவார்களாயின் உடனே பெண்டிர் தமக்குரிய அறத்தின்கண் நின்று தாயார் முதலியோர்க்குத் தம் காதலை உணர்த்துவர். அதுவே ‘அறத்தொடு நிற்றல்’ எனப்படும். அறம் என்பதைத் தக்கது எனக் கொண்டால் அறத்தொடு நிற்றல் என்பது ‘தக்கதைச் சொல்லி நிற்றல்’ என்றாகும்.

தலைவி தனது களவியல் கற்பொழுக்கத்திற்கு ஏதம் வருமோ என்று அஞ்சியவழி, தன் கற்பறம் அழியாமைக்காக, தன் களவொழுக்கச் செய்தியை ஒருவாற்றான் தோழிக்கு உணர்த்து வாள். தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும் தெரிவிப்பர். நற்றாய், தலைவியின் தந்தை, தமையன்மாருக்குத் தெரிவித்துத் திருமணம் நடைபெறுவதற்கு ஏற்பன செய்வள்.

தலைவியின் வேறுபாட்டைக் காணும் தோழி, தலைவியை வினவுவாள்; செவிலி தோழியை வினவுவாள்; நற்றாயும் அவளை வினவுவாள்.

தோழி, செவிலியிடம் நேரேயும் அவள் கேட்குமாறு பிறரிடம் சொல்லும் முறையிலும் உணர்த்துவாள். செவிலி, நற்றாயிடம் வெளிப்படையாய் உணர்த்துவாள். நற்றாய் தலைவியின் தந்தை, தமையன்மார்க்குக் குறிப்பாய் உணர்த்துவாள்.

தலைவி கூற்று

திருக்குறள் 1138 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

காப்புச் சிறைமிக்குக் காமம் பெருகிய வழிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

உலகத்துப் பெண்பாலர் காமத்தியல்பு கூறுவாள் போன்று, தலைவி, தன் காமம் பெருகியவாறும் இனி அறத்தொடு நிற்றல் வேண்டுமென்றும் குறிப்பால் கூறியது. (அறத்தொடு நிற்றல் - தலைவி ஒருவனைக் காதலிக்கிறாள் என்பதை அவள் பெற்றோர் அறியக் கூறுதல்.)

நிறைஅரியர் மன்அளியர் என்னாது காமம்
மறைஇறந்து மன்று படும்.

தெளிவுரை

தலைவன்மீது நான் கொண்ட காமம், "பெண்கள் கற்பில் உறுதியானவர்; இரங்கத்தக்கவர் என்றும் கருதாது மறைக்க வேண்டிய எல்லையைக் கடந்து தெருவிற்கு வந்துவிட்டதே" என்று, தான் தலைவன் ஒருவன்மேல் கொண்டுள்ள காதலைக் குறிப்பால் உணர்த்துகிறாள், தலைவி.

கருத்து

"இதுவரை என் மனத்திற்குள்ளேயே மறைவாய் இருந்த காமம் இப்போது வெளிப்படையாய் அம்பலத்திற்கு வந்துவிட்டதே" என்கிறாள், தலைவி.

விளக்கம்

பெண்கள் இயல்பைச் சொல்வாள்போல் தன் இயல்பைத் தலைவி தோழிக்குக் கூறி, 'இனி நீ அறத்தொடு நிற்க வேண்டும்' என்று குறிப்பால் கூறினாள்.

குறிப்பு

காமத்தை எப்படி மறைத்தாலும் அது வெளிப்படவே செய்யும்.

சொற்பொருள்

1. நிறை அரியர் - (பெண்கள்) கற்பில் உறுதியானவர்; மன் அளியர் - மிகவும் இரங்கத்தக்கவர்; என்னாது - என்று கருதாமல்; காமம் - காமமானது.
2. மறை இறந்து - மறைக்க வேண்டிய எல்லையைக் கடந்து; மன்று படும் - வெளிப்படையாய் அம்பலத்திற்கு வந்துவிட்டது.

தலைவி கூற்று

திருக்குறள் 1139 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

காப்புச் சிறைமிக்குக் காமம் பெருகிய வழிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

உலகத்துப் பெண்பாலர் காமத்தியல்பு கூறுவாள் போன்று, தலைவி, தன் காமம் பெருகியவாறும் இனி அறத்தொடு நிற்றல் வேண்டுமென்றும் குறிப்பால் கூறியது.

அறிகிலார் எல்லாரும் என்றே,என் காமம்
மறுகின் மறுகு மருண்டு.

தெளிவுரை

என்னைத் தவிர வேறு யாரும் என் காமத்தை அறியவில்லை என்று நான் கருதியிருந்தேன். ஆனால் ஊரார் அறியாதுள்ள னரே, அவர்க்கு அறிவிக்க வேண்டுமே என்று கருதி என் காமம் இவ்வூர்த் தெருக்களில் அங்கும் இங்குமாய் மயங்கிச் சுழல்கிறது.

கருத்து

யாரும் அறியாதிருந்த தலைவியின் காமம் இப்போது ஊரெல்லாம் தெரிந்து விட்டது.

விளக்கம்

தலைவி தோழியிடம் சொல்வதுபோலத் தான் ஒருவனைக் காதலிப்பதை வெளிப்படையாய்க் கூறிவிட்டாள். இனிச் செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தலைவியின் தந்தை, தமையன்மார்க்கும் அறத்தொடு நிற்றல் தொடரும்.

சொற்பொருள்

1. காமம் - நான் கொண்டுள்ள காமம்; எல்லாரும் அறிகிலார் - (தன்னைத் தவிர) எவரும் அறிந்திலர்; என்றே - என்று கருதி (அவர்களுக்கு) அறிவிக்க வேண்டுமென்று கருதி.
2. மறுகில் - தெருவில்; மருண்டு - மயங்கி; மறுகு - சுழல்கிறது.

தலைவி கூற்று

நற்றிணை 244 **கூற்றங்குமரனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

அறத்தொடு நிலைவலித்த தோழியைத் தலைமகள் முகம்புக்கது.
(முகம் புகுதல் - தோழியின் முகம் நோக்கி நிற்றல்.)

கூற்று விளக்கம்

தலைவன் மணம் புரிந்துகொள்ளாது களவொழுக்கத்தையே நீட்டித் தானாதலின் தலைவி வருந்தினாள். அவள் மேனிநலம் கெடக் கண்ட தோழி அன்னையிடம் கூறி, அறத்தொடு நிற்கக் கருதினாள். அப்போது தலைவி, 'இந்நோய் தணிய இதுதான் வழி என்று தலைவனிடமோ அன்னையிடமோ நீ உரைக்கவில்லையே' எனத் தன் ஆற்றாமை தோன்றக் கூறியது.

விழுந்த மாரிப் பெருந்தண் சாரல்,
கூதிர்க் கூதளத்து அலரி நாறும்
மாதர் வண்டின் நயவரும் தீம்குரல்
மணம்நாறு சிலம்பின் அகணம் ஓர்க்கும்
உயர்மலை நாடற்கு உரைத்தல் ஒன்றோ

துயர்மருங்கு அறியா அன்னைக்கு, 'இந்நோய்
தணியுமாறு இது'என உரைத்தல் ஒன்றோ –
செய்யாய் ஆதலின் கொடியை – தோழி!–
மணிகெழு நெடுவரை அணிபெற நிவந்த
செயலை அம்தளிர் அன்ன,என்
மதன்இல் மாமெய்ப் பசலையும் கண்டே.

தெளிவுரை

"தோழியே! நீலமணி போன்ற நெடிய மலையில் அழகுடன் உயர்ந்து நிற்கும் அசோகந்தளிர் போன்ற என் மேனியின் அழகினை முற்றும் கெடும்படியாகச் செய்த பசலையை நீயும் கண்டாய்; கண்டும் ஏற்றதொன்றனைச் செய்தாய் அல்லை.

"மழை பெய்தலால் மிகவும் குளிர்ச்சி பெற்றுள்ள சாரலில் கூதிர்க் காலத்தில் பூப்பதாகிய கூதள மலர்கள் மலர்ந்து மணம் பரப்பியிருக்கும். அம்மலர்களில் மொய்க்கின்ற அழகிய வண்டு களின் இனிய இசைக்குரலை மலைப்பிளவில் தங்கியிருக்கும் 'அசுணமா' எனும் விலங்கு, யாழோசை எனச் செவிகொடுத்துக் கேட்டிருக்கும். அத்தகைய காட்சி கொண்ட உயர்ந்த மலை நாட்டுக்குரிய தலைவனிடம், 'இந்நோயைத் தீர்த்தற்கான வழி நீ மணங்கேட்டு வருவதுதான்' என்ற ஒன்றைச் சொன்னாய் அல்லை. நாம் எய்திய துன்பத்திற்குக் காரணம் இன்னதென அறியாதவளாகிய அன்னையிடம், 'இந்நோய் தணியும் வழி இதுதான்' என உரைத்து 'அறத்தொடு நிற்றலை'யும் செய்தாய் அல்லை. இவ்விரண்டனுள் ஒன்றையேனும் செய்து என்னைப் பாதுகாக்காமையால் நீ மிகவும் கொடியவளே ஆனாய்."

கருத்து

தோழியே! நீ செவிலியிடம் அறத்தொடு நிற்கவில்லை.

விளக்கம்

தோழியே! அன்னை வெறியெடுத்தல் முதலானவற்றைச் செய்ய முற்பட்டுள்ளாள். அதற்கு முன்பு, மணம் செய்துகொள்ள வேண்டுமெனத் தலைவனிடம் நீ வற்புறுத்தவில்லை. அன்னை வெறியாடலைச் செய்யுமுன்பே, 'மகளுக்கு இந்நோய் முருகனால்

ஏற்பட்டதன்று; மலைநாடன் மார்பினால் ஏற்பட்டது' என்று அறத்தொடு நிற்றலையும் செய்யவில்லை.

உள்ளுறை

கூதள மலர்களில் மொய்த்து இசைக்கும் வண்டின் ஓசையை, யாழிசை என அசுணமா மயங்கும் என்பதன் வாயிலாய், தலைவன் நலனுண்டு துறத்தலால் தலைவிக்கு ஏற்பட்ட நோயை, 'முருகு அணங்கிற்றுப் போலும்' என அன்னை பிறழ உணர்ந்தாள் என்னும் கருத்து வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. விழுந்த மாரி - மழை பெய்த.
2. கூதிர் - கூதிர்ப் பருவம்; கூதளம் - கூதாளிக் கொடி; அலரி - பூ.
3. மாதர் - அழகிய; நயவரும் - விருப்பம் ஏற்படச்செய்யும்.
4. சிலம்பு - மலை; அசுணம் - அசுணப்பறவை; ஓர்க்கும் - கேட்கும்.
5. உரைத்தல் ஒன்றோ - உரைப்பதோ.
6. துயர் மருங்கு - நாம் எய்தியுள்ள துன்பத்திற்குக் காரணம்.
7. தணியும் ஆறு - நீங்குதற்குரிய வழி; உரைத்தல் ஒன்றோ - அறத்தொடு நிற்பதோ.
9. மணிகெழு - மணிகள் பொருந்திய; அணிபெற - அழகு உண்டாக; நிவந்த - உயர்ந்து நிற்கும்.
10. செயலை - அசோகு; அம் தளிர் - அழகிய தளிர்.
11. மதன் - அழகு; மா மெய் - மாமைக் கவின் கொண்ட உடல்.

தலைவி கூற்று

குறுந்தொகை 305 **குப்பைக்கோழியார்**

திணை : மருதம்

கூற்று

காப்பு மிகுதிக்கண் தோழி அறத்தொடு நிற்பாளாகத் தனதாற்றாமை தோன்றத் தலைமகள் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

இற்செறிக்கப்பட்டுக் காவலும் மிகுதியாய்விட்ட காலத்திலே, 'அறத்தொடு நிற்றலே இனிச் செயத்தக்கது' எனத் தோழிக்கு அறிவுறுத்துவாளாய்த் தலைவி தன்னுள்ளே கூறுவாள்போலக் கூறியது.

கண்தர வந்த காம ஒள்எரி
என்புஉற நலியினும் அவரொடு பேணிச்
சென்றுநாம் முயங்கற்கு அருங்காட் சியமே
வந்துஅஞர் களைதலை அவர்ஆற் றலரே;
உய்த்தனர் விடாஅர் பிரித்துஇடை களையார்
குப்பைக் கோழித் தனிப்போர் போல
விளிவாங்கு விளியின் அல்லது
களைவோர் இலை,யான் உற்ற நோயே!

தெளிவுரை

"அவரைக் காட்டிய கண்களே நமக்குக் காம நோயைத் தந்தன; அந்நோய் நம் உள்ளத்திலே நெருப்பாய் நின்று சுடுகின்றது; நம் என்பையும் உருக்குகின்றது. அவரிடத்திற்கு நாமே விரும்பிச் சென்று அளவளாவுதற்கு, அவரை நாம் முன்பு கண்ட இடத்தில் காணுதற்கும் இயலாதவராயிருக்கிறோம். நாம் இருக்குமிடத் திற்கு வந்து நம் துயரைத் தீர்க்க அவராலும் இயலாது; குப்பைக் கோழிகளின் சண்டையைப் பிரித்துவிட இடையில் எவரும் இலராயின், அவை விடாது தனியே சண்டையிட்டு மடியும். அது போல், நான் கொண்ட இந்நோயும் நீக்குவார் இல்லையாயின் நான் மடிவதைத் தவிர வேறு வழியில்லை" என்று தலைவி, தோழி கேட்கத் தன்னுள்ளே கூறிக்கொள்கிறாள்.

கருத்து

'என் துன்பத்தை நீக்கத் துணையாவார் எவருமிலர்; உண்மையைத் தாயாரிடம் கூறி நீதான் உதவுதல் வேண்டும்' என்பதைத் தலைவி தோழி யிடம் மறைமுகமாய்க் கூறினாள்.

குறிப்பு

பகற்குறிக்கண் தலைவனை எளிதில் காணும் நிலை இருந்தது. இப்போது தலைவி இற்செறிக்கப்பட்டுள்ளதால் அவளைத் தலைவன் காணுவது இயலாததாயிற்று.

'குப்பைக்கோழிகள் சண்டையிடத் தொடங்கினால் அவற்றை இடையே யாராவது விலக்கிவிட்டால்தான் சண்டையை நிறுத்தும்; இல்லையேல் இறுதி வரை ஆத்திரத்துடன் சண்டையிட்டு மடியும். அதுபோலப் பிறர் உதவினால்தான் என் காம நோய் ஒழியும்; இன்றேல் அழிவுதான் நேரும்' என்று தலைவி கூறுகிறாள்.

சிறப்புக் குறிப்பு

இப்பாடலை இயற்றிய ஆசிரியரின் இயற்பெயரை அறிய இயல வில்லை. 'குப்பைக்கோழித் தனிப்போர் போல' என்னும் அரிய உவமையைக் கையாண்டுள்ளதால் இவர் 'குப்பைக்கோழியார்' என்றே வழங்கப்படுகிறார்.

சொற்பொருள்

1. கண்தர - கண்கள் காட்டித் தந்தமையால்; காம ஒள் எரி - காமமாகிய ஒள்ளிய நெருப்பு.
2. என்புஉற - எலும்பினைப் பொருந்தி; நலியினும் - உருக்கி வருத்தி னாலும்; அவரொடு பேணிச் சென்று - அவரை விரும்பிச் சென்று.
3. முயங்கற்கு - தழுவிக்கொள்ளுதற்கு; அருங்காட்சியம் - அவரைக் காண்பதற்கு அரியம் ஆயினோம்.
4. வந்து - அவர் நம்மிடம் வந்து; அஞர் - துன்பம்; களைதலை - நீக்குதலை; அவர் ஆற்றலர் - அவரும் இயலாதவராய் இருக்கிறார்.
5. உய்த்தனர் விடாஅர் - இழுத்துவிடுவார் இலராயினும்; பிரித்து இடை களையார் - பிரித்து நடுவிலே போரை நிறுத்தித் துன்பத்தை நீக்குவாரும் இலர்.
6. தனிப்போர் - தனியே இடும் சண்டை.
7. விளிவாங்கு விளியின் அல்லது - தானே அழியும் காலத்து அழிவதன்றி.
8. களைவோர் இலை - இடையே நீக்கித் துணை செய்வோரும் இலர்; யான் உற்ற நோய் - நான் கொண்டுள்ள காமநோய்.

தலைவி கூற்று

அகநானூறு 52 **நொச்சி நியமங்கிழார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகள் வேறுபட்டமை அறிந்த செவிலித்தாய்க்குத் தோழி அறத்தொடு நிற்குமெனத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி வேறுபாட்டினைக் கண்டு ஐயுறும் செவிலியிடம் தோழி அறத்தொடு நிற்க வேண்டும் எனத் தலைவி விரும்பிக் கூறியது.

'வலந்த வள்ளி மரன்ஓங்கு சாரல்,
கிளர்ந்த வேங்கைச் சேண்நெடும் பொங்கர்ப்
பொன்நேர் புதுமலர் வேண்டிய குறமகள்
இன்னா இசைய பூசல் பயிற்றலின்,
ஏகல் அடுக்கத்து இருள்அளைச் சிலம்பின்
ஆகொள் வயப்புலி ஆகும்அஃது' எனத்தம்
மலைகெழு சீறூர் புலம்பக் கல்லெனச்
சிலையுடை இடத்தர் போதரும் நாடன்
நெஞ்சுஅமர் வியன்மார்பு உடைத்துஎன அன்னைக்கு
அறிவிப் பேம்கொல்? அறிவியேம் கொல்?என
இருபாற் பட்ட சூழ்ச்சி ஒருபால்
சேர்ந்தன்று வாழி, தோழி! யாக்கை
இன்உயிர் கழிவது ஆயினும், நின்மகள்
ஆய்மலர் உண்கண் பசலை
காம நோய்எனச் செப்பா தீமே.

தெளிவுரை

தோழியே! வாழி! மரங்கள் ஓங்கி வளர்ந்துள்ள மலைச்சாரல்; அங்குச் சுற்றிப் படர்ந்த வள்ளிக்கொடியைக் கொண்ட செழித்து வளர்ந்துள்ள வேங்கை மரம்; அதன் மிக உயர்ந்த கிளையில் உள்ள பொன் போன்ற மலர்களைப் பறிக்க விரும்பினாள், குறப்பெண் ஒருத்தி. கேட்போருக்குத் துன்பம் தரும் ஒலியைக் கொண்ட, 'புலி புலி' என்னும் ஆரவாரத்தை அடுத்தடுத்து

எழுப்பினாள். இருண்ட குகைகளைக் கொண்ட பக்கமலையில் கேட்ட இவ்வொலி, பசுவைக் கவரும் புலி வந்ததால் எழுந்தது என்றெண்ணி, வில்லை ஏந்திய வேட்டுவ வீரர்கள், தாங்கள் உள்ள சிற்றூரில் ஒருவருமில்லாதபடி அனைவரும் ஆரவாரத் துடன் அங்கு ஓடி வந்தனர். அத்தகைய காட்சி கொண்ட மலைநாட்டுக்குரியவனது அகன்ற மார்பே, அழகிய மலரனைய உன் மகளின் கண்ணில் படர்ந்துள்ள பசலைக்குக் காரணம் என அன்னைக்குத் தெரிவிப்போமா, தெரிவிக்காமல் விடுவோமா என இருவகைப்பட்டதாய் இருந்த என் எண்ணம், இப்போது ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. நமது உடலிலிருந்து இனிய உயிர் பிரிவதாயினும், 'உன் மகள் பசலைக்குக் காரணம் காமநோயே' என விளக்கமாய்ச் சொல்லாது, குறிப்பாய்ச் சொல்' என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

தலைவியின் உடல்வேறுபாட்டிற்கான காரணம் அவள் மலை நாடனொடு கொண்ட தொடர்பே என அறத்தொடு நிற்குமாறு தலைவி தோழியிடம் உணர்த்தினாள்.

விளக்கம்

வேங்கைப்பூவைப் பறிக்க விரும்பும் மகளிர், 'புலி புலி' என்று கூவி அச்சுறுத்தினால் அம்மரம் வளைந்து கொடுக்கும் என்பது நம்பிக்கை.

குறிப்பு

பசலைக்குக் காரணம் காமநோய் என விளக்கமாய்ச் சொல்லாதே; காமநோய் எனத் தாயே விளங்கிக்கொள்ளுமாறு குறிப்பாய்ச் சொல் என்றாள், தலைவி.

உள்ளுறை

வேங்கை மரத்தில் வள்ளிக்கொடி படர்ந்திருந்தது. அவ் வேங்கையில் அலர் (மலர்) உண்டான அளவில், அங்குள்ள மகளிர், 'புலி புலி' எனப் பூக்கொய்வதற்குக் கூறிய ஒலியால் ஊரெல்லாம் ஆரவாரித்து, அங்குத் திரண்டது. இத்தொடர் வாயிலாய்த் தலைவனைத் தலைவி அடைந்த அளவிலே அலர்

தோன்றிட, அவ்வலர் எங்கும் பரவி, பிறகு எல்லோரும் அறிதற்குக் காரணமாயிற்று என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. வலந்த - சுற்றிய; வள்ளி - ஒரு கொடி; மரன் - மரம்.
2. கிளர்ந்த - செழித்து வளர்ந்துள்ள; சேண் நெடும் - மிக உயர்ந்த; பொங்கர் - மரக்கிளை.
3. பொன் நேர் புதுமலர் - பொன்னிறம் கொண்ட வேங்கைப்பூ.
4. இன்னா இசைய - இன்னாமையைத் தரும் ஒலி; பூசல் - ஆரவாரம்; பயிற்றல் - அடுத்தடுத்து எழுப்புதல்.
5. ஏகல் - உயர்ந்த கற்கள்; அளை - இருண்ட குகை.
6. ஆ - பசு; வயப்புலி - வலிமையுள்ள புலி; அஃது - அந்த ஒலி.
7. புலம்ப - தனித்திருப்ப; கல் என - 'கல்' என்னும் ஒலியுடன்.
8. சிலை - வில்; இடத்தர் - இடக்கையில் கொண்டவர்; போதரும் - வந்து சேர்வர்.
9. நெஞ்சு அமர் - நெஞ்சிலே தங்கியுள்ள; உடைத்து - காரணமாய் உள்ளது.
11. சூழ்ச்சி - எண்ணம்; ஒருபால் - ஒரு முடிவு.
13. கழிவது - நீங்குவது.
15. செப்பாதீம் - (விளக்கமாய்) உரையாதே (குறிப்பாய்ச் சொல்).

தலைவி கூற்று

அகநானூறு 82 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தலைவன் களவொழுக்கத்தின்போது தலைவியைத் தேடி வருவதில் இடையூறுகள் நேரிட்டன. அது கண்டு வருந்திய தலைவி, செவிலித் தாயிடம் அறத்துடன் நிற்குமாறு தோழியிடம் வேண்டினாள்.

ஆடுஅமைக் குயின்ற அவிர்துளை மருங்கில்
கோடை அவ்வளி குழலிசை ஆக;
பாடுஇன் அருவிப் பனிநீர் இன்இசைத்

தோடுஅமை முழவின் துதைகுரல் ஆக;
கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு,
மலைப்பூஞ் சாரல் வண்டுயாழ், ஆக;
இன்பல் இமிழ்இசை கேட்டு, கலிசிறந்து,
மந்தி நல்அவை மருள்வன நோக்க;
கழைவளர் அடுக்கத்து, இயலிஆ டும்மயில்
நனவுப்புகு விறலியில் தோன்றும் நாடன்
உருவ வல்வில் பற்றி, அம்புதெரிந்து,
செருச்செய் யானை செல்நெறி வினாஅய்,
புலர்குரல் ஏனல் புழையுடை ஒருசிறை,
மலர்தார் மார்பன், நின்றோன் கண்டோர்
பலர்தில், வாழி, தோழி! – அவருள்,
ஆர்இருள் கங்குல் அணையொடு பொருந்தி,
ஓர்யான் ஆகுவது எவன்கொல்,
நீர்வார் கண்ணொடு, நெகிழ்தோ ளேனே.

தெளிவுரை

"*அசைந்தாடும் மூங்கிலிலே வண்டுகளால் துளைக்கப்பட்ட துளையினூடே நுழைந்து வெளிவரும் மேல்காற்றின் ஒலி, குழலிசையாய் எழுகிறது; இன்னொலியுடன் இழிதரும் அருவியின் குளிர்நீர் பாறைகளில் மோதும்போது எழுகின்ற இசை, கூட்டமாய் ஒலிக்கின்ற முழவின் முழக்கெனக் கேட்கிறது; காடுகளிலுள்ள கலைமான் கூட்டம் எழுப்பும் கடிய குரல், பெருவங்கியம் எனும் கருவியின் ஓசையாய்த் தோன்றுகிறது. மலைப்பூஞ்சாரல்களில் வண்டுகள் பாடும் ஒலி, யாழோசையாய் இசைக்கிறது. (இப்படி ஓர் இசை அரங்கின் அமைதியுடன் ஒரு நடன அரங்கும் தெரிகிறது.) இத்தகைய இனிய பலவாகிய ஓசைகளைக் கேட்டு, மலையடுக்கத்திலே களிப்பு மிகுந்த மந்திகள் கூட்டம் நடனத்தைப் பார்க்கும் அவையாய் அமைகிறது; மூங்கில் வளர்ந்த மலைப்பாறையில் உலாவி ஆடுகின்ற மயில் நாட்டியக்களத்தில் புகுந்து ஆடும் ஆடுமகள்போலத் தோன்றுகிறது. குழல் ஒலிக்க, முழவு முழங்க, பெருவங்கியம் ஒலிக்க, யாழ் இசைக்க, மந்திகள் பார்த்திருக்க, மயில் நாட்டியம் ஆடுகிறது.*

“இத்தகைய மலைநாட்டுக்குரிய தலைவன் ஒருவன், ஒரு கையிலே அழகிய வலிமையான வில்லையும், மற்றொரு கையிலே ஆய்ந்தெடுத்த அம்பினையும் கொண்டு வந்தவன், ‘இந்தப் பக்கமாய் ஒரு யானை தப்பி வந்ததைக் கண்டீர்களோ’ என்று கேட்டுக்கொண்டே தினைப்புனத்தின் ஒரு பக்கத்தே நின்றான்.

“அவனைக் கண்டவர் பலர். ஆனால், அவருள் நான் ஒருத்தி மட்டும், இருள் செறிந்த இரவு நேரத்திலே, படுக்கையில் உறக்கம் கொள்ளாமல், தன்னந்தனியாய்க் கண்களில் நீர் வழியவும், தோள்கள் நெகிழ்ந்திடவும் வருந்தி வாடுகின்றேன்! அஃதெப்படி எனச் சிந்திப்பாய்” என்று சொல்லித் தலைவி தன் காதலை வெளிப்படுத்தினாள்.

கருத்து

அவனைக் கண்டவர் பலர்; இரவில் நான் ஒருத்தி மட்டும் துயிலாது வருந்தி அழுதிருப்பது ஏன்?

விளக்கம்

தலைவியும் தோழியும் ஒருவர்க்கொருவர் இன்றியமையாத வராய் நெருக்கமான உயிர்த்தோழமை கொண்டவர்கள். எனினும், தலைவி தலைவன்பால் கொண்ட காதலினைத் (களவொழுக் கத்தினைத்) தோழி அறியவில்லை. அதனால் தலைவியே பக்குவமாய் அதனைத் தோழிக்கு உணர்த்துகிறாள்.

குறிப்பு

மலையின் இயற்கைக் காட்சியை ஒரு கூத்தாட்டரங்கமாய்க் காட்டுகிறது, இப்பாடல்.

சொற்பொருள்

1. ஆடு அமை - அசைகின்ற மூங்கில்; குயின்ற - துளைக்கப்பெற்ற; அவிர் துளை - விளங்கும் துளை.
2 கோடை அவ் வளி - மேல்காற்றினால் எழும் ஒலி.
3. பாடு - ஒலிக்கும்; பனி நீர் - குளிர்ச்சி பொருந்திய நீர்; இன்இசை - இனிய ஒலி.
4. தோடு அமை - தொகுதியாய் அமைந்த; துதை - நெருங்கிய.

5. கணக்கலை - கூட்டமாகிய கலைமான்கள்; இருக்கும் - தாழ ஒலிக்கும்; தூம்பு - பெருவங்கியம் எனும் இசைக்கருவி.
7. இன்பல் - இனிய பலவாய; இமிழ் இசை - ஒலிக்கும் இசை; கலி சிறந்து - ஆரவாரம் மிக்கு.
8. நல்அவை - பார்க்கும் நல்ல அவையாய் (கூட்டமாய்); மருள்வன நோக்க - வியப்புற்றுக் காண.
9. கழை - மூங்கில்; அடுக்கம் - மலைப்பாறை; இயலி - உலாவி.
10. நனவுப் புகு - களத்தில் தோன்றி ஆடும்; விறலி - ஆடுமகள்.
11. உருவ வல்வில் - அழகிய வலிய வில்; தெரிந்து - ஆராய்ந்து கைக் கொண்டு.
12. செருச்செய் - தன்னால் அம்பு எய்யப்பெற்று; செல்நெறி - சென்ற வழி; வினாஅய் - வினவி.
13. புலர்குரல் ஏனல் - முதிர்ந்த கதிரைக் கொண்ட தினைப்புனம்; புழை - வாயில்; ஒரு சிறை - ஒரு பக்கம்.
14. மலர்தார் மார்பன் - அகன்ற மாலையணிந்த மார்பைக் கொண்டவன்; நின்றோன் - நின்றவனை.
15. பலர் - பலராவர்.
16. ஆர் இருள் கங்குல் - அரிய இருள் செறிந்த இரவில்; அணை - படுக்கை.
17. ஓர் யான் ஆகுவது - நான் ஒருத்தியாய் இருப்பது.
18. நீர் வார் - நீர் சொரியும்.

தலைவி கூற்று

கலித்தொகை 111 **நல்லுருத்திரனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகள் ஆயத்திடைத் தலைமகனைக் கண்டவாறும் அவனைக் கூறியனவும் கூறி, தோழியைத் தலைமகனை வரைவு கடாவி, யாய்க்கு அறத்தொடு நிற்க வேண்டும் என்றது. (அவனைக் கூறியமை - அவனோடு உரையாடியமை; வரைவு கடாதல் - விரைந்து திருமணம் முடிக்கத் தூண்டுதல்; யாய் - செவிலித்தாய்.)

கூற்று விளக்கம்

தலைவி ஆயத்தாருடன் விளையாடிய பொழுது தலைவன் வந்தான்; அவளுடன் உரையாடி நீங்கினான். அப்போது தலைவனிடம் தன்னைத் திருமணம் செய்துகொள்ளுமாறு வேண்டிக்கொள்ளுமாறும், தன் பெற்றோரிடத்தில் தன் களவொழுக்கம்பற்றிக் கூறி அறத்தொடு நிற்குமாறும் தலைவி தோழியிடம் வேண்டியது.

தீம்பால் கறந்த கலம்மாற்றிக் கன்றெல்லாம்
தாம்பின் பிணித்து, மனைநிறீஇ, யாய்தந்த
பூங்கரைநீலம் புடைதாழ மெய்அசைஇ, பாங்கரும்
முல்லையும் தாய பாட்டங்கால்! தோழி,நம்
புல்லினத்து ஆயர் மகளிரோடு எல்லாம்
ஒருங்கு விளையாட, அவ்வழி வந்த
குருந்தம்பூங் கண்ணிப் பொதுவன்,மற்று என்னை,
'முற்றிழை ஏஎர், மடநல்லாய்! நீஆடும்
சிற்றில் புனைகோ, சிறிது?'என்றான்; 'எல்லா!நீ
பெற்றேம்யாம் என்று, பிறர்செய்த இல்இருப்பாய்;
கற்றது இலைமன்ற காண்'என்றேன்; 'முற்றிழாய்!
தாதுசூழ் கூந்தல் தகைபெறத் தைஇய
கோதை புனைகோ, நினக்கு'என்றான், 'எல்லா!நீ
ஏதிலார் தந்தபூக் கொள்வாய், நனிமிகப்
பேதையை மன்ற பெரிது'என்றேன், மாதராய்!

ஐய பிதிர்ந்த சுணங்குஅணி மென்முலைமேல்
தொய்யில் எழுதுகோ மற்று?என்றான்; 'யாம்பிறர்
செய்புறம் நோக்கி இருத்துமோ? நீபெரிது
மையலை மாதோ; விடுக!'என்றேன்; தையலாய்!
சொல்லிய வாறெல்லாம் மாறுமாறு யான்பெயர்ப்ப,
அல்லாந்தான் போலப் பெயர்ந்தான்; அவனைநீ
ஆயர் மகளிர் இயல்புஉரைத்து, எந்தையும்
யாயும் அறிய உரைத்தீயின், யான்உற்ற
நோயுங் களைகுவை மன்.

தெளிவுரை

"தோழியே! பால் கறந்த கலங்களை வீட்டினுள் வைத்தேன். கன்றுகளைத் தாம்பால் பிணித்து வீட்டில் கொண்டுவந்து கட்டினேன்; அன்னை தந்த பூக்கரையிட்ட நீல நிற ஆடை இடையில் தவழ, மெல்ல நடந்து சென்று ஆயமகளிரோடு பாங்கர்க்கொடியும் முல்லைக்கொடியும் படர்ந்த தோட்டத்திலே ஒன்றுசேர்ந்து விளையாடினேன்.

"அப்பொழுது குருந்த மலர்க்கண்ணி சூடிய ஒருவன் அங்கே வந்து என்னிடம் உரையாடத் தொடங்கினான். 'அணிகலன்கள் அணிந்து அழகுடன் விளங்கும் பெண்ணே! நீ விளையாடுவதற்கு நான் சிறுவீடு அமைத்துத் தரலாமா?' என்றான். நான், 'உனக் கென்று சொந்தமாய் ஒரு வீடு கட்டிக்கொள்ளத் துப்பில்லை; தாய்தந்தையர் கட்டிய வீட்டில் வாழ்கின்றனை. எனக்கு வீடு கட்டிக் கொடுக்க வந்துவிட்டனையோ?' என்று கேட்டேன்.

"அவன் மேலும், 'நிறைந்த அணிகலன்கள் அணிந்தவளே! பூந்தாது நிறைந்த உன் கூந்தலில் நான் தகைபெறக் கட்டிய மாலையினைச் சூட்டவா?' என்றனன். அதற்கு நான், 'தொடர்பில்லாத பிறர் எனக்கு அணி செய்துவிடுவர் என்று நான் காத்திருப்பேனா? இவ்வாறு கேட்ட நீ மிகவும் பேதைமை உடையவன்' என்றேன்.

"அவன் பின்னும் விடாமல், 'பெண்ணே! நுண்ணிதாய்த் தேமல் தோன்றும் உன் மார்பகத்தில் தொய்யில் எழுதி அழகு செய்யட்டுமா?' என்று கேட்டான். அதற்கு நானோ, 'தொடர்பில்லாத பிறர் எனக்கு அணி செய்துவிடுவர் என்று நான் காத்திருப்பேனா? இவ்வாறு பேசுதற்கு உனக்கு மயக்கமா?' என்றேன்.

"தோழி! அவன் கூறிய எல்லாவற்றிற்கும் நான் மறுப்புக் கூறவே அவன் மனங்கலங்கித் திரும்பிச் சென்றான். அவனிடம் நீ, 'ஆய மகளிர் ஏறு தழுவியவரையே மணப்பர்' என்னும் இயல்பினை உரைத்திடு. செவிலித்தாய்க்கும் என் தந்தைக்கும் என் கவலையை வெளிப்படுத்தி அறத்தொடு நின்றிடு. இதனால் அவன் துன்பத்தையும், என் துன்பத்தையும் நீ நீக்கியவள் ஆவாய்!"

கருத்து

ஆய மகளிர் ஏறு தழுவியவரையே மணப்பர் என்று தலைவனிடம் கூறு; பெற்றோரிடம் அறத்தொடு நின்று என் காதலை வெளிப்படுத்து எனத் தலைவி தோழியிடம் வேண்டுகிறாள்.

குறிப்பு

ஆய மகளிர் ஏறு தழுவியவரையே மணந்துகொள்வர்.

சொற்பொருள்

1. தீம்பால் - இனிய பால்; கலம் மாற்றி - கலங்களை வைக்க வேண்டிய இடங்களில் வைத்து.
2. தாம்பு - கயிறு; பிணித்து - கட்டி; மனை நிறீஇ - தொழுவத்திலே நிறுத்தி.
3. பூங்கரை - பூக்கரை இட்ட; நீலம் - நீல நிறப் புடைவை; புடைதாழ - பக்கம் தாழ, உடுத்திக்கொண்டு; அசைஇ - மெல்ல நடந்து; பாங்கர் - ஒரு வகைக் கொடி.
4. தாய - படர்ந்துள்ள; பாட்டம் - தோட்டம்.
7. பொதுவன் - ஆயன், இடையன்.
8. முற்றிழை - முழுமையாய் அணிகள் அணிந்துள்ள; ஏஎர் - ஏர் - அழகு; மடநல்லாய் - இளமகளே!
9. புனைகோ - அமைத்துத் தரலாமா?
10. பெற்றேம் யாம் என்று - இருக்க இடம் பெற்றோம் என்று; பிறர் செய்த - உன் சுற்றத்தார் கட்டிய; இல் இருப்பாய் - வீட்டிலே வாழ்கிறாய்.
11. கற்றது இலை - சொந்தமாய் ஒரு வீடு கட்டக் கற்றுக்கொள்ள வில்லை.
12. தாது சூழ் கூந்தல் - மகரந்த மணம் கமழும் உன் கூந்தல்; தகை பெற - அழகு பெற; தைஇய - நான் கட்டிக் கொணர்ந்துள்ள.
13. கோதை - மாலையை; புனைகோ - சூட்டிவிடவா?
14. ஏதிலார் - தொடர்பில்லாதவர்; தந்த பூக்கொள்வாய்? - தரும் மாலையை ஏற்றுக்கொள்வாயா?
15. பேதையை - இதைக்கூட அறியாதவனாய் இருக்கிறாய்.
16. ஐய - வியந்து நோக்குமாறு; பிதிர்ந்த - தோன்றும்; சுணங்கு அணி - தேமல் படர்ந்துள்ள.

17. தொய்யில் எழுதுகோ - தொய்யில் எழுதட்டுமா?; யாம் பிறர் - நான் மற்றவர்.
18. செய்புறம் நோக்கி இருத்துமோ - கையால் செய்யும் ஒப்பனையை நோக்கி இருப்பேனோ?
19. மையலை - மயக்கத்தைக் கொண்டவன்; விடுக - என்னை விட்டு அகல்க.
20. சொல்லியவாறெல்லாம் - அவன் கூறியவற்றுக்கு எல்லாம்; மாறு மாறு - மாறுபட்டு மாறுபட்டு; யான் பெயர்ப்ப - நான் கூறிக்கொண் டிருக்க.
21. அல்லாந்தான் போல - மனம் கலங்கியவன்போல; பெயர்ந்தான் - அங்கிருந்து நீங்கினான்; அவனை நீ - அவனுக்கு நீ.
22. ஆயர் மகளிர் - இடைக்குலப் பெண்டிர்; இயல்பு - இயல்பினை; உரைத்து - உரைப்பாய்.
23. உரைத்தீயின் - சொல்வாய் ஆனால்.
24. நோய் - துன்பம்; களைகுவை - நீக்கியவள் ஆவாய்.

தோழி கூற்று

குறுந்தொகை 333 **உழுந்தினைம் புலவனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

'அறத்தொடு நிற்பல்' எனக் கிழத்திக்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கம் மேற்கொண்டுள்ள தலைவி மேனி நலனழியத் துயருற்றாள். அது கண்ட தோழி, 'உன் உறவைப்பற்றி உரைத்துத் தலைவனை நம் உறவினர் ஏற்றுக்கொள்ள நான் தாயிடம் அறத்தொடு நிற்பேன்' என்று கூறியது.

குறும்படைப் பகழிக் கொடுவிற் கானவன்
புனம்உண்டு கடிந்த பைங்கண் யானை
நறுந்தழை மகளிர் ஒப்பும் கிள்ளையொடு
குறும்பொறைக்கு அணவும் குன்ற நாடன்
பணிக்குறை வருத்தம் வீடத்
துணியின் எவனோ தோழி!நம் மறையே?

தெளிவுரை

தலைவியே! குறுகிய அம்பினையும், வளைந்த வில்லினையும் கொண்ட வேடுவனது தினைப்புனத்தை மேய்ந்ததனால் விரட்டப்பெற்ற யானை, நல்ல தழையாடையினை உடுத்திய மகளிர் ஓட்டும் கிளிகளுடன் ஒன்றுசேர்ந்து தானும் மலைப் பகுதியில் சென்று நிற்பதற்காக மேலேறிச் செல்லும். அத்தகைய மலைநாட்டிற்கு உரியவன், நம் தலைவன். அவன் நம்மை வரைந்து கொள்ளும் பணி இன்னும் நிறைவேறவில்லை. அதனால் நமக்கேற்பட்டுள்ள வருத்தம் நீங்குவதற்காக நம் களவுறவை (தலைவனுக்கும் நமக்குமுள்ள தொடர்பை) நம் தாய்க்கு நான் தெரிவித்தால் என்ன?

கருத்து

நமது களவொழுக்கச்செய்தியை அன்னை அறியும்படி அறிவித்தால் என்ன?

உள்ளுறை

கானவர் விரட்டிய யானை, மகளிர் ஓட்டிய கிளிகளுடன் பாதுகாப்புக்காக மலைப்பகுதிக்குச் செல்லும். இத்தொடர் மூலம், தலைவியை அடையவியலாதவாறு தடுக்கப்பட்ட தலைவனும், இற்செறிக்கப்பட்டுத் தலைவனோடு சேரவிடாது தடுக்கப்பட்ட தலைவியும் ஒன்றுபட்டு இல்லற வாழ்வு நிகழ்த்த விரும்புகின்றனர் எனும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

குறிப்பு

தினை காப்பவரால் யானையும் கிளியும் கடியப்பட்டமைபோலக் காவலர் முதலியோரால் தலைவனும், செவிலி முதலியோரால் தலைவியும் களவின்பம் பெற இயலாதவாறு கடியப்பட்டனர்.

சொற்பொருள்

1. குறும்படைப் பகழி - குறிய படையாகிய அம்பு.
2. கடிந்த - தடுக்கப்பட்ட.
3. நறுந்தழை மகளிர் - நறிய தழையாடையை உடுத்திய மகளிர்; ஓப்பும் - ஓட்டும்; கிள்ளை - கிளி.
4. குறும்பொறை - சிறுமலை; அணவும் - மேலே செல்லும்.

5. பணிக்குறை - வரைந்துகொள்ளும் பணி நிறைவேறாத குறை; வீட - நீங்க.
6. நம் மறை - நமது மறைச்செய்தியைத் (தாய் அறியும்படி); துணியின் எவனோ - அறிவித்தால் என்ன?

தலைவி கூற்று

திருக்குறள் 1140 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

செவிலிக்கு அறத்தொடு நின்று வந்து, 'யான் நிற்குமாறு என்ன?' என்று நகையாடிய தோழியொடு புலந்து தலைமகள் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றமையை அறியாத தலைவியிடம், தோழி, 'நான் என்ன கூறிச் செவிலித்தாயிடம் அறத்தொடு நிற்பது?' எனச் சிரித்தவாறு கேட்டாள். அது கேட்ட தலைவி அவள்மீது வருத்தம் கொண்டு தன்னுள்ளே சொல்லியது.

யாங்கண்ணின் காண நகுப; அறிவுஇல்லார்
யாம்பட்ட தாம்படா வாறு.

தெளிவுரை

காதல் நோயினால் நான் படும் துன்பங்களைத் தாம் பட்டு அறியாத காரணத்தால் அறிவில்லாதவர், நான் கண்ணால் காண என்னை ஏளனம் செய்து சிரிக்கின்றனர்.

கருத்து

என் காதல் துன்பத்தை அறியாத அறிவற்றவர் என்னைக் கண்டு சிரிக்கின்றனர்.

விளக்கம்

செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றதை அறியாத தலைவி யிடம், தோழி, 'நான் செவிலியிடம் என்ன கூறி அறத்தொடு நிற்பது?' என்று சிரித்தபடியே கேட்டாள். வரைவு நிகழ

ஏற்றதைச் செய்ய வேண்டிய தோழி, இவ்வாறு சிரித்துப் பேசுகின்றாளே என்னும் வேதனையில் தலைவி தோழிக்குக் கேட்கும் வகையில், தன்னுள்ளே தன் வேதனையை அறியாது பேசும் தோழியை அறிவற்றவள் என்கிறாள்.

குறிப்பு

தான் படும் வேதனையை அறியாது தோழி பேசுகிறாளே என்பதால், அவளை அயலாரைக் கூறுவதுபோல 'அறிவில்லார்' என்கிறாள்.

சொற்பொருள்

2. யாம் பட்ட - யாம் பட்ட துன்பங்களை; தாம் படா ஆறு - தாம் அடையாமையால்; அறிவு இல்லார் - அறிவு இல்லாதவர்.
1. யாம் கண்ணில் காண - நான் கண்ணால் காணும்படி; நகுப - நகைக்கின்றனர், சிரிக்கின்றனர்.

தோழி கூற்று

குறுந்தொகை 259 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாகியவழித் தோழி அறத்தொடு நின்று, 'அவனே பரிகரிப்பன்' என்று கருதியதனைத் தலைமகளும் நயப்பாளாகக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவி இற்செறிப்பினால் மிகவும் நலிவுற்றாள். அப்பொழுது தோழி, தாய்க்குத் தலைவியின் காதலை உணர்த்தித் தலைவன் வந்து வரைந்து கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறாள். செய்த பின், தலைவியிடம் கூறி அவளும் அதனை விரும்புமாறு கூறியது.

மழைசேர்ந்து எழுதரு மாரிக் குன்றத்து,
அருவி ஆர்ந்த தண்நறுங் காந்தள்
முகைஅவிழ்ந்து, ஆனா நாறும் நறுநுதல்,
பல்இதழ் மழைக்கண் மாஅ யோயே!
ஒல்வை ஆயினும், கொல்வை ஆயினும்,

நீஅளந்து அறிவைநின் புரைமை; வாய்போல்
பொய்ம்மொழி கூறல் அஃது எவனோ?
நெஞ்சம் நன்றே, நின்வயி னானே.

தெளிவுரை

"மழை நிறைந்த மேகங்கள் கூடி வானத்தில் உயர்ந்து எழுந்து தங்குகின்ற மலை; அம்மலையிலிருந்து வீழ்கின்றது, ஓர் அருவி; அவ்வருவியின் நீரைக் குடித்து வளர்ந்துள்ளன, குளிர்ச்சி பொருந்திய காந்தள் அரும்புகள்; அவை இதழ் விரிந்து வெளிப் படுத்தும் மிகுதியான மணத்தினைக் கொண்ட நறிய நெற்றி யையும், பல இதழ்கள் கொண்ட தாமரைப் பூவினைப் போன்ற குளிர்ச்சி பொருந்திய கண்களையும், மாந்தளிர் போன்ற நிறத்தையும் கொண்ட தலைவியே! நீ நான் செய்த செயலை நன்று என்று கருதி உடன்படுவாயாயினும் சரி; அன்றி, என் மீது சினம் கொண்டாயாயினும் சரி! நீயே உன் பெருமையை அறிவாய்! (உன் மேன்மை கருதியே நான் அறத்தொடு நின்று உண்மையைச் சொன்னேன்.) யான் இவ்வாறு உண்மை கூறாது பொய்ம்மொழிகளை மெய்ம்மொழிபோலக் கூறுவதால் யாது பயன்? தலைவனின் நெஞ்சம் உன்பால் நல்லதையே எண்ணு கிறது. உன் களவை வெளிப்படுத்தியதால் நன்மையே விளையும்" என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

கருத்து

நான் அறத்தொடு நின்று உன் களவொழுக்கத்தை வெளிப்படுத்தினேன். அதனால் நன்மையே விளையும்.

சொற்பொருள்

1. மழை - மேகம்; எழுதரு - உயரே எழுகின்ற; மாரி - மழை.
2. ஆர்ந்த - அருகில் உள்ள.
3. முகை அவிழ்ந்து - அரும்புகள் மலர்ந்து; ஆனா - இடைவிடாமல்.
4. பல் - பலவாகிய; இதழ் - இதழ்களைக் கொண்ட தாமரை; மழைக்கண் - குளிர்ச்சி பொருந்திய கண்; மாஅயோய் - மாமை நிறத்தைக் கொண்டவள்.
5. ஒல்லுதல் - உடன்படுதல்; கொல்வை - மறுத்துச் சினம் கொண்டால்.

6. புரைமை - பெருமை; வாய் போல் - உண்மைபோல.
7. நின்வயின் - உன்னிடம்.

தோழி கூற்று

குறுந்தொகை 366 **பேரிசாத்தன்**

திணை : குறிஞ்சி

கூற்று

காவல் மிகுதிக்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு, 'இவ்வேறுபாடு எற்றினான் ஆயது' என்று செவிலி வினாவத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட தலைவி அழகிழந்து வேறுபட்டாள். அதனைக் கண்ட செவிலி, தன் மகளான தோழியிடம் அதுபற்றி வினவ, அதற்குத் தோழி சொல்லியது.

பால்வரைந்து அமைத்தல் அல்லது, அவர்வயின்
சால்பு அளந்து அறிதற்கு யாஅம் யாரோ?
வேறுயான் கூறவும் அமையாள், அதன்தலைப்
பைங்கண் மாச்சுனைப் பல்பிணி அவிழ்ந்த
வள்இதழ் நீலம் நோக்கி, உள்அகைபு,
ஒழுகு கண்ணள் ஆகி,
பழுதுஅன்று அம்மஇவ் ஆயிழை துணிவே.

தெளிவுரை

ஆய்ந்த அணிகளையணிந்த தலைவி, நான் ஆற்றியிருக்குமாறு கூறவும் அதற்கு இசையாமல் வருந்தினாள். மேலும் பசுமையான இடத்திலுள்ள கரிய சுனையில் கட்டவிழ்ந்து மலர்ந்த வளவிய நீலமலரை நோக்கித் தன்னுள்ளத்தினுள்ளே வருந்தினாள்; அழுது நீரொழுகும் கண்ணளாகியும் நின்றாள். அவள் துணிந்தது குற்றம் கொண்டது அன்று. ஏனெனில் இக்காதல் பழவினைப் பயனாலே வரையறுத்துப் பொருத்தப்பட்டதன்றி, அத்தலைவனிடத்தே இவளையடைதற்குரிய தகுதிப்பாட்டினை வரையறுத்து அறிவதற்கு நாம் யார்? (நம்மால் முடியாது.)

கருத்து

தலைவிக்கு நீலமலரைத் தந்து நட்பாடும் ஒருவனை இவள் காதலிக்கிறாள்.

குறிப்பு

புணர்ச்சி என்னும் வகையால் தலைவன் தலைவிக்கு நீல மலர்களைச் சூடிக் காதல் கொண்டது பழவினைப் பயனால் நேர்ந்துவிட்டது. மற்றபடி அவனுடைய சால்புடைமையை அளந்தறிய எம்மால் இயலாது என்கிறாள் தோழி.

இதனைக் கேட்கும் செவிலி, நற்றாய்க்கு அறத்தொடு நின்று, விரைவிலே தலைவனுடன் தலைவியை மணவாழ்வில் ஒன்றுபடுத்துவதற்கு முற்படுவள்.

சொற்பொருள்

1. பால் - பழவினை; வரைந்து - வரையறுத்து; அமைத்தல் - பொருத்தப்பட்டது; அவர் வயின் - அத்தலைவர் திறத்தில்.
2. சால்பு - தகுதி; அளந்து அறிதற்கு - வரையறுத்து அறிதற்கு.
3. வேறு யான் கூறவும் - நான் ஆற்றியிருக்குமாறு கூறவும்; அமையாள் - அதற்கு இசையாள்.
4. பைங்கண் - பசிய இடத்தையுடைய; மாச்சுனை - கரிய சுனை; பல்பிணி - பல கட்டு.
5. வள் இதழ் - வளவிய இதழ்; நீலம் - நீல மலர்; உள்அகைபு - நெஞ்சுள்ளே வருந்தினாள்.
6. ஒழுகு - அழுது நீர் ஒழுகும்; கண்ணள் - கண்களை உடையவள்.
7. பழுது அன்று - குற்றமுடையது அன்று; ஆயிழை - ஆய்ந்தெடுக்கப்பட்ட அணிகலன்களை அணிந்தவள்; துணிவு - துணிந்தது.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 366 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகளை நோக்கி 'இவ்வேறுபாடு எற்றினான் ஆயிற்று?' என்று வினவிய செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

செவிலி தலைவியை நோக்கி உன் உடலில் வேறுபாடு எதனால் ஆயிற்று என்று வினவினாள். அதற்குத் தோழி, செவிலியிடம் தலைவியின் களவை வெளிப்படுத்தி அறத்தொடு நின்றது.

அன்னாய், வாழி!வேண்டு, அன்னை!'என் தோழி
பசந்தனள் பெரிது'எனச் சிவந்த கண்ணை,
கொன்னே கடவுதி ஆயின், என்னதூஉம்
அறிய ஆகுமோ மற்றே
முறிஇணர்க் கோங்கம் பயந்த மாறே.

தெளிவுரை

அன்னையே, வாழ்க! நான் சொல்வதைக் கேள். என் தலைவி மேனி பசலையூர மெலிந்திருப்பது கண்டு அவளை ஐயுற்று, சினத்தால் கண் சிவப்புற, காரணம் என்ன என்று அச்சுறுத்திக் கேட்கிறாய். இதற்குக் காரணம் தளிரும் பூங்கொத்துமாய் அமைந்த கோங்க மலரை ஒருவன் தந்ததேயாம்! அஃது (என்னை யன்றிப்) பிறர் எவராலும் அறியப்படாததும் ஆம்.

கருத்து

தலைவி ஒருவனை எதிர்ப்பட்டாள்; அவன் கோங்க மலரைக் கையுறை யாய்த் தந்தான். அவன் பிரிவாலே ஏற்பட்டதே இவ்வேறுபாடு. இஃது ஒரு பூவால் விளைந்த விளைவே.

விளக்கம்

தலைவியின் மெலிவுக்குக் காரணம் தலைவன் ஒருவன், தளிரொடும் கொத்தொடும் கோங்கம் பூவைப் பரிசாய்க்

கொடுத்துக் கூடி மகிழ்ந்ததால் ஏற்பட்ட ஒன்று என்று தலைவன் தலைவியரிடையே நிகழ்ந்த பூத்தரு புணர்ச்சியைக் குறிப்பால் உணர்த்தி, தோழி அறத்தொடு நிற்கிறாள்.

சொற்பொருள்

1. வேண்டு - நான் சொல்வதைக் கேள்.
2. கண்ணை - கண்களைக் கொண்டவளாய் இருக்கிறாய்.
3. கொன்னே - அச்சுறுத்தி; கடவுதி - கேட்கிறாய்; என்னதூஉம் - சிறிதும்.
4. அறிய ஆகுமோ? - அறிய இயலுமோ? (அறியப்படாதது ஆம்).
5. முறி - தளிர்; இணர் - பூங்கொத்து; கோங்கம் - கோங்க மலர்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 62 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகளை ஒரு நாட் கோலஞ்செய்து அடிமுதற் கொண்டு முடிகாறும் நோக்கி, இவட்குத் தக்கான் யாவனாவன் கொல்லோ என்றாராய்ந்த செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

செவிலித்தாய் தலைவியை ஒப்பனை செய்து, அடிமுதல் முடிவரை நோக்கி, இவளை மணக்கத் தகுதியுள்ளவன் எவன் ஆவனோ என்றாராய்ந்த போது, அவளிடம் தோழி, தலைவி தக்கான் ஒருவனை முன்னரே தேர்ந்தெடுத்துக்கொண்டாள் என்னும் உண்மையைக் கூறியது.

வில்லார் விழவினும் வேலாழி சூழுலகில்
நல்லார் விழவகத்தும் நாம்காணேம் – நல்லாய்!
உவர்க்கத்(து) ஒரோவுதவிச் சேர்ப்பன்,ஒப் பாரைச்
சுவர்க்கத்(து) உளராயின் சூழ்.

தெளிவுரை

“எம் நல்ல அன்னையே! கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில் வில் வீரர் கூடி நடத்தும் வில் விழாக் கூட்டத்திலும், நல்ல பெண்களின்

மணம் காரணமாய்க் கூடிய மணவிழாக் கூட்டத்திலும் வேறு எங்குத் தேடினாலும், கடற்கரையில் இவளுக்கு ஒப்பில்லாத உதவியைச் செய்த இக்கடல்துறைத் தலைவனைப் போன்ற வேறு ஆடவரைக் காண இயலாது. (ஆதலின், இவட்குத் தக்கான் அவனே.) அவன் அன்றி வேறொருவர் இருக்கிறாரா என்று சுவர்க்கத்தில் சென்றுதான் தேட வேண்டும்" எனத் தோழி, செவிலித்தாயிடம் கூறினாள்.

கருத்து

தலைவியைக் காதலித்த தலைவன் சொர்க்கத்தில் வாழும் தேவர்க்கு நிகரானவன்.

சொற்பொருள்

1. வில்லார் விழவு - விற்போரில் வல்லார் கூடி நடத்தும் விழா; வேலாழி - கடல்; சூழ் - சூழப்பெற்ற.
2. நல்லார் - நல்ல பெண்கள்; விழவுஅகத்தும் - மணவிழாவில் கூடி யிருக்கும் கூட்டத்திலும்.
3. உவர்க்கத்து - கடற்கரையிடத்திலே; ஓரோ உதவி - (இவளுக்கு) ஒப்பற்ற உதவியினைச் செய்த; சேர்ப்பன் - கடல்நிலத் தலைவன்; ஒப்பாரை - போன்றவரை.
4. சுவர்க்கத்து - துறக்க உலகிலே; உளராயின் - இருப்பாராயின்; சூழ் - ஆராய்க.

தோழி கூற்று

கைந்நிலை 8 **புல்லங்காடனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகள் வேறுபாடு கண்டு வினவிய செவிலிக்குத் தோழி அறத்தொடு நிற்றல்.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்து இல்லத்தில் உறையும் தலைவியின் வழக்கத்திற்கு மாறான நடவடிக்கைகளைக் கண்டு வினவிய செவிலிக்குத் தோழி அறத்தொடு நிற்பது.

கருங்கைக் கதவேழம், கார்ப்பாம்புக் குப்பங்
கி....க்............கொண்*...............................கரும்
பெருங்கல் மலைநாடன் பேணி வரினே
சுருங்கும், இவள்உற்ற நோய்.

தெளிவுரை

கரிய துதிக்கையைக் கொண்ட சினங்கொண்ட யானைகள் கரிய மலைப்பாம்பின் பக்கத்தில் தம் பெரிய கைகளால் தேனீக்களை ஓட்டித் தேன்கூட்டினை எடுத்து அதிலுள்ள தேனை உண்ணும். இத்தகைய காட்சி கொண்டுள்ள பெரிய கற்பாறைகளைக் கொண்ட மலைநாட்டிற்குத் தலைவன் இவளை விரும்பி நாள்தோறும் வந்தால், இவள் கொண்ட பிரிவாற்றாமை யாகிய நோய் குறையும்.

கருத்து

தாயே, தலைவி மலைநாட்டுத் தலைவன் ஒருவனை விரும்புகிறாள்.

சொற்பொருள்

1. கருங்கை - கரிய துதிக்கை; கதம் - சினம்.
3. பேணி - விரும்பி; வரின் - வந்தால்.
4. சுருங்கும் - குறையும்.

* கிடைத்துள்ள செய்யுள் பகுதியைக்கொண்டு தெளிவுரை நிறைவு செய்யப்பட்டுள்ளது.

தலைவி கூற்று

கைந்நிலை 9 **புல்லங்காடனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாய தலைமகள் தோழிக்குக் கூறுதல்.

கூற்று விளக்கம்

தலைவன் திருமணம் செய்துகொள்ளாமல் காலம் தாழ்த்தியபடி ஒழுகிய போது அதைப் பொறுத்துக்கொள்ள இயலாத தலைவி, செவிலி அறியும்படி

தோழியிடம் தான் தலைவன் ஒருவனிடம் அன்பு கொண்டுள்ளதைக் கூறுகிறாள்.

காந்தள் அரும்புகை என்று கதவேழும்
ஏந்தல் மருப்பிடைக் கைவைத்து, இனன்நோக்கிப்
பாய்ந்து(எ)ழுந்து ஓடும் பயமலை நல்நாடன்
காய்ந்தான்கொல், நம்கண் கலப்பு.

தெளிவுரை

"சினமிக்க யானை ஒன்று செங்காந்தளின் மலரைக் கொடிய தீ என்று கருதி உயர்ந்த தன் தந்தங்களின் இடையே உள்ள துதிக்கையை நீட்டித் தன் இனமாகிய யானைகளை நோக்கி ஓடும். இவ்வாறாய அச்சத்தைத் தரும் காட்சி கொண்டுள்ள வளப்பமிக்க மலைநாட்டுக்குத் தலைவன் நம்முடன் கூடும் இன்பத்தை வெறுத்து விட்டான்போல் உள்ளது" எனத் தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

மலைநாட்டுத் தலைவன் நம்மை வெறுத்துவிட்டானோ?

குறிப்பு

தலைவி தோழியிடம் தான் தலைவன் ஒருவனிடம் அன்பு கொண்டுள் ளதைக் கூறிச் செவிலி அறியச் செய்கிறாள்.

சொற்பொருள்

1. காந்தள் - செங்காந்தள் மலர்; அரும்புகை - கொடிய தீ; கதம் - சினம்; வேழம் - யானை.
2. ஏந்தல் - உயர்ந்த; மருப்பு - தந்தம்; இனன் - தன் இனம் (யானைக் கூட்டம்).
3. பயமலை - பயன் தரும் மலை.
4. காய்ந்தான் - வெறுத்துவிட்டான்; நம்கண் கலப்பு - நம்மோடு கூடுவதை.

தோழி கூற்று

அகநானூறு 48 **தங்கால் முடக்கொற்றனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

செவிலித்தாய்க்குத் தோழி அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் பல்வேறு இடையூறுகளால் தலைவி தலைவனைக் காணாது உடலில் வேறுபாடு ஏற்பட்டு ஆற்றாது வருந்தியிருந்தாள். செவிலித்தாய் அதற்கான காரணத்தைத் தோழியிடம் வினவுகிறாள். அதற்கு அவள் முன்பொரு நாள் வேங்கைப்பூப் பறித்தபோது நடந்ததைக் கூறி அறத்தொடு நின்றது.

'அன்னாய்! வாழிவேண்டு, அன்னை! நின்மகள்,
பாலும் உண்ணாள், பழங்கண் கொண்டு,
நனிபசந் தனள்'என வினவுதி, அதன்திறம்
யானும் தெற்றென உணரேன், மேல்நாள்,
மலிபூஞ் சாரல்என் தோழி மாரோடு
ஒலிசினை வேங்கை கொய்குவம் சென்றுழி,
'புலிபுலி' என்னும் பூசல் தோன்ற–
ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆய்இதழ்
ஊசி போகிய சூழ்செய் மாலையன்,
பக்கம் சேர்த்திய செச்சைக் கண்ணியன்,
குயம்மண்டு ஆகம் செஞ்சாந்து நீவி,
வரிபுனை வில்லன், ஒருகணை தெரிந்துகொண்டு,
'யாதோ மற்றுஅம் மாதிறம் படர்?'என
வினவி நிற்றந் தோனே, அவற்கண்டு,
எம்முள் எம்முள் மெய்ம்மறைபு ஒடுங்கி,
நாணி நின்றனெ மாக, பேணி,
'ஐவகை வகுத்த கூந்தல் ஆய்நுதல்
மைஈர் ஓதி மடவீர்! நும்வாய்ப்
பொய்யும் உளவோ?' என்றனன், பையெனப்
பரிமுடுகு தவிர்த்த தேரன் எதிர்மறுத்து,
நின்மகள் உண்கண் பல்மாண் நோக்கிச்

சென்றோன் மன்ற,அக் குன்றுகிழ வோனே;
பகல்மாய் அந்திப் படுசுடர் அமையத்து,
அவன்மறை தேஎம் நோக்கி, 'மற்றுஇவன்
மகனே தோழி' என்றனள்
அதன்அளவு உண்டுகோள், மதிவல் லோர்க்கே.

தெளிவுரை

அன்னையே வாழி! உன் மகள் பாலும் உண்ணவில்லை; உடலில் பசலை பூத்துள்ளது. அதற்கான காரணம் என்ன என்று என்னிடம் கேட்கிறாய்! தாயே, அதுபற்றி நான் தெளிவாய் அறிவேன்.

முன்பொரு நாள் பூத்துக் குலுங்கும் மலைச்சாரலில், என் தோழிமாரொடு தழைத்த கிளைகளைக் கொண்ட வேங்கை மரத்தில் பூப் பறிக்கச் சென்றோம்! மரம் தாழ்ந்து கொடுக்க வேண்டி, 'புலி புலி' என்று ஆரவாரம் செய்தோம். அவ்வமயம் அங்கொருவன் தோன்றினான்; அவன், மகளிர் கண்களைப் போன்ற ஒளி பொருந்திய அழகிய செங்கழுநீர்ப்பூக்களை ஊசியால் கோத்துக் கட்டப்பட்ட மாலையை அணிந்திருந்தான். வெட்சிப்பூவாலான கண்ணியைத் தலையில் சூடியிருந்தான். மகளிர் முலைகள் அழுந்துதற்குரிய மார்பில் சந்தனம் பூசியிருந்தான். கட்டமைந்த வில்லினை ஏந்தி, ஒப்பற்ற அம்பினை ஆராய்ந்தவனாய் எங்களிடம், 'அப்புலி சென்ற வழி யாதோ?' என்று வினவினான்.

அவனைக் கண்டு நாங்கள் நாணமுற்றவராய் ஒருவர் முதுகில் ஒருவர் மறைந்து, ஒடுங்கி, ஏதும் மறுமொழி கூறாது நின்றோம்.

அவனோ, 'ஐவகையாய் வகுத்த கூந்தலினையும், அழகிய நெற்றியினையும், கரிய நெய்த்த கூந்தலையும் கொண்டவர்களே! உம் வாயிலிருந்து பொய்யும் வருமோ?' என்று கூறியவாறு அவ்விடத்தினின்றும் பாயவிருக்கின்ற தன் குதிரைகளின் வேகத்தை அடக்கித் திரும்பச் சென்றான். அவ்வாறு செல்லுகையில் உன் மகள் அவனைப் பாராதிருந்தும் மையுண்ட அவள் கண்களை அவன் பலமுறை நோக்கிச் சென்றான்.

பகலவன் மறையும் அந்த மாலைப்பொழுதில் அவன் மறைந் திடும் திசையை நோக்கி உன் மகள், 'தோழியே! இவன் ஓர் ஆடவனோ?' என்றனள்.

ஆராய்ந்தறியும் அறிவினோர்க்கு இதில் ஏதோ ஒரு செய்தி, ஒரு காரணம் இருக்கலாமோ என்பது புலப்படும். இவ்வளவே நான் அறிந்தது. (இஃதன்றி வேறொன்றும் அறியேன்.)

கருத்து

தலைவி, தலைவன் ஒருவனை விரும்புவதனைக் குறிப்பாய்த் தோழி கூறினாள்.

சொற்பொருள்

2. பழங்கண் கொண்டு - துன்பம் எய்தி.
3. நனி - மிகவும்; அதன் திறம் - அது வந்த வகையை.
4. தெற்றென - தெளிவாய்; மேல்நாள் - முன்பு ஒரு நாள்.
5. மலி - நிறைந்த.
6. ஒலிசினை - தழைத்த கிளை; வேங்கை - வேங்கை மலர்; சென்றுழி - சென்ற போது.
7. பூசல் - ஆரவாரம்.
8. கண்போல் - மகளிர் கண்ணைப் போல.
9. ஊசி போகிய - ஊசியை நுழைத்து; சூழ் செய் - சேர்த்துக் கட்டிய.
10. பக்கம் - தலையின் ஒரு பக்கம்; செச்சை - வெட்சிப்பூ.
11. குயம் - மகளிர் முலை; மண்டு - அழுந்துதற்குரிய; ஆகம் - மார்பு; செஞ் சாந்து - சிவந்த சந்தனம்; நீவி - பூசி.
12. வரிபுனை - வரிந்து கட்டப்பட்ட; வில்லன் - வில்லினைக் கொண்டவன்; கணை - அம்பு.
13. மா - புலி; படர்திறம் - சென்ற வழி.
14. நிற்றந்தோன் - நின்றனன்.
15. மெய்ம் மறைபு - உடம்பை மறைத்துக்கொண்டு.
18. மைஈர் ஓதி - கரிய நெய்த்த கூந்தல்.
19. பையென - மெதுவாய்.
20. பரி முடுகு - குதிரையின் வேகம்; தவிர்த்த - அடக்கி; எதிர்மறுத்து - எதிர் நோக்கலாய்.
21. பல்மாண் - பலமுறை.

23. பகல்மாய் - பகற்பொழுது மறைகின்ற; படுசுடர் - ஞாயிறு மறையும்; அமையம் - பொழுது.
24. மறை தேஎம் - மறைந்த திசை.
26. அதன் அளவு உண்டு - அந்த அளவு ஒரு செய்தி உண்டு; மதி வல்லோர் - ஆராய்ந்து அறியும் அறிவு மிக்கவர்க்கு.

தோழி கூற்று

அகநானூறு 110 **போந்தைப் பசலையார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி செவிலித்தாய்க்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தலைவியின் களவு உறவுபற்றி ஊரிலே அலர் எழ, தோழியிடம் செவிலி அதற்கான காரணம் கேட்கிறாள். தோழி, ஒரு நாள் கடற்கரையில் நடந்த நிகழ்ச்சியைக் கூறி, தலைவியின் களவு உறவுபற்றிக் கூறி அறத்தொடு நின்றது.

அன்னை அறியினும், அறிக! அலர்வாய்
அம்மென் சேரி கேட்பினும், கேட்க!
பிறிதுஒன்று இன்மை அறியக் கூறி,
கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கிக்
கடுஞ்சூள் தருகுவன், நினக்கே; கானல்
தொடலை ஆயமொடு கடல்உடன் ஆடியும்,
சிற்றில் இழைத்தும், சிறுசோறு குவைஇயும்,
வருந்திய வருத்தம் தீர,யாம் சிறிது
இருந்தன மாக, எய்த வந்து,
'தடமென் பணைத்தோள் மடநல் லீரே!
எல்லும் எல்லின்று; அசைவுமிக உடையேன்;
மெல்இலைப் பரப்பின் விருந்துஉண்டு, யானும்இக்
கல்லென் சிறுகுடித் தங்கின்மற்று எவனோ?
எனமொழிந் தனனே, ஒருவன், அவற்கண்டு
இறைஞ்சிய முகத்துஎம் புறம்சேர்பு பொருந்தி,

இவைநுமக்கு உரிய அல்ல; இழிந்த
கொழுமீன் வல்சி என்றனம், இழுமென,
'நெடுங்கொடி நுடங்கும் நாவாய் தோன்றுவ
காணா மோ?'எனக் காலின் சிதையா,
நில்லாது பெயர்ந்த பல்லோ ருள்ளும்
என்னே குறித்த நோக்கமொடு, நன்னுதால்!
ஒழிகோ யான்?என அழிதகக் கூறி,
'யான்பெயர்க' என்ன நோக்கி, தான்தன்
நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி
நின்றோன் போலும் இன்றும்என் கட்கே.

தெளிவுரை

"அன்னையே! ஒரு நாள் தோழியர் கூட்டத்துடன் கடலில் குளித்தும், கடற்கரைச்சோலையில் சிற்றிலமைத்தும், சிறுசோறு ஆக்கியும் விளையாடிய வருத்தம் நீங்க நாங்கள் சற்று இளைப்பாறிக் கொண்டிருந்தோம். அப்போது எங்களிடம் வந்த ஒருவன், 'மூங்கில்போலும் மென்மையான தோள்களும் இளமையும் வாய்ந்த நல்லோரே! பகலும் ஒளியிழந்தது; நானும் மிகவும் தளர்ச்சியடைந்துள்ளேன். ஆதலின், நீங்கள் மணலில் உண்டாக்கியுள்ள இச்சிற்றிலில் மெல்லிய இலையில் குவித்துள்ள இச்சிறுசோற்று விருந்தினை உண்டு, 'கல்' என்னும் ஆரவாரமுள்ள சிறுகுடியில் யான் இரவு தங்கிச் சென்றால் இடையூறு ஏதேனும் உண்டா?' என்று வினவினான்.

வெட்கப்பட்ட நாங்கள், கவிழ்ந்த முகத்துடன் ஒருவர் முதுகில் ஒருவர் மறைந்து நின்று, இழும் என்னும் மெல்லிய குரலில், 'இவ்வுணவு உமக்குத் தகுதியுள்ளது அன்று; இழிந்த மீனால் ஆன உணவு' என்று மறுமொழி கூறினோம்.

பிறகு, பேச்சை மாற்றுவதுபோல், 'நெடிய கொடிகள் அசைந்தாடும் மரக்கலங்கள் தோன்றுகின்றன; அவற்றைச் சென்று பார்க்கலாம்' என்று கூறி, நாங்கள் உண்டாக்கிய சிற்றில், சிறுசோறு முதலியவற்றைக் காலால் அழித்து, அங்கு நிற்காமல் பெயர்ந்து சென்றோம்!

அவனோ, பெயர்ந்து சென்ற எம்முள்ளும் உன் மகளாகிய என் தலைவியையே குறித்து நோக்கிய பார்வையோடு, 'நல்ல நெற்றியைப் பெற்றவளே! நான் செல்லவா?' என்று கேட்டான்.

அவளும், 'செல்க' என்று சொன்னாளாயினும், அவன் அந்த இடத்திலிருந்து அகலாமல் அவளையே நோக்கியவனாய்த் தன் நீண்ட தேரின் கொடிஞ்சியைப் பற்றி நின்றான். இன்றும் அக்காட்சி என் கண் முன்னே நிற்கிறது.

"நிகழ்ந்த இந்த நிகழ்ச்சியை, தாய் அறியினும் அறிக! பழிச்சொல் கூறும் வாயினால் 'இம்' என ஒலிக்கின்ற சேரியினர் கேட்டு அலர் தூற்றினாலும் தூற்றட்டும். தலைவி மெலிவிற்கு இப்பார்வை நோயன்றி வேறு காரணம் இல்லை எனத் தோழியே நீ கூறுவதனால் யாதொரு தீங்கும் உனக்கு வாராதவாறு புகாரிலுள்ள தெய்வத்தை நோக்கிச் சத்தியம் செய்து தருகுவன் என்று தலைவி கூறினாள்" எனத் தோழி செவிலியிடம் சொல்கிறாள்.

கருத்து

களவொழுக்கத்தில் தலைவன் பிரிவால் ஆற்றாது தலைவியின் உடல் வேறுபட்டது; அது கண்ட செவிலித்தாய், தோழியிடம் அதற்கான காரணத்தை வினவினாள். தோழி, தலைவியின் குறிப்பின்படி, ஒரு நாள் கடற்கரைச் சோலையில் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கூறித் தலைவனிடம் தலைவி கொண்டுள்ள காதலைச் செவிலி குறிப்பாய் உணருமாறு கூறினாள்.

குறிப்பு

தலைவி தன் எண்ணத்தைக் கூறிய பின் தோழி இங்ஙனம் கூறியதால், தலைவி விரும்பிய தலைவனையே அவளுக்குத் திருமணம் செய்விக்கத் தோழி செவிலியிடம் அறத்தொடு நின்றாள்.

கொடிஞ்சி என்பது தாமரைப்பூ வடிவில் செய்யப்பட்டுத் தேர்த்தட்டின் முன்னே நடப்படுவது என்பார், நச்சினார்க்கினியர்.

சொற்பொருள்

1. அலர்வாய் - அலர் கூறும் வாயினைக் கொண்ட.
2. அம் என் சேரி - 'அம்' என ஒலிக்கின்ற சேரியினர்.

3. பிறிதொன்று இன்மை - கடற்கரையில் நடந்த செய்தியைத் தவிர வேறு ஒன்று இல்லாமை.
4. கொடுஞ்சுழி - வளைந்த நீர்ச்சுழிகள்; புகாஅர் - புகார் நகரம்.
5. சூள் - உறுதிமொழி (சத்தியம்).
6. தொடலை ஆயம் - மாலை போன்ற தோழியர் கூட்டம்.
7. மணலில் சிறு வீடு கட்டியும், மணலைக் குவித்துச் சோறு ஆக்கியும்.
9. எய்த வந்து - அணுக வந்து.
10. மடநல்லீர் - இளம் பெண்களே.
11. எல்லும் - பகலும்; எல்லின்று - ஒளி இழந்தது; அசைவு - தளர்ச்சி.
13. மற்று எவன்? - குறை ஏதேனும் உண்டோ?
15. இறைஞ்சிய - கவிழ்ந்த; புறம் சேர்பு பொருந்தி - ஒருவர் முதுகில் ஒருவர் மறைந்து நின்று.
16. இவை - இவ்வுணவு; இழிந்த - இழிவான.
17. வல்சி - உணவு; இழுமென - உடனே பேச்சினை மாற்ற.
18. நுடங்கும் - அசையும்; நாவாய் - மரக்கலங்கள்.
19. சிதையா - அழித்து.
20. நில்லாது - அங்கே நிற்காது; பெயர்ந்த - பெயர்ந்து சென்ற.
21. என்னே - தலைவியையே.
22. ஒழிகோ யான்? - நான் செல்லவா?; அழிதக - நெஞ்சம் அழிந்திடக் (கேட்டான்).
23. 'யான் பெயர்க' என்ன - தலைவியும் செல்க என்று சொல்லவும் (செல்லாது).
24. தேர்க் கொடிஞ்சி பற்றி - தேரின் முன் பகுதியிலுள்ள கொடிஞ்சியைப் பற்றிக்கொண்டு.
25. நின்றோன் - நின்றனன்; இன்றும் என் கட்கு போலும் - (அக்காட்சி) இன்றும் என் கண்முன் நிற்கிறது.

தோழி கூற்று

அகநானூறு 190 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி செவிலித்தாய்க்கு அறத்தொடு நின்றது

கூற்று விளக்கம்

தலைவி, தலைவன் ஆகியோர் களவொழுக்கமறிந்து ஊரார் அலர் தூற்றினர். செவிலித்தாய் ஐயுற்றுத் தோழியிடம் காரணம் கேட்கத் தோழி அறத்தொடு நின்றது.

திரைஉழந்து அசைஇய நிரைவளை ஆயமொடு
உப்பின் குப்பை ஏறி, எற்பட,
வருதிமில் எண்ணும் துறைவனொடு, ஊரே
ஒருதன் கொடுமையின் அலர்பா டும்மே;
அலமரல் மழைக்கண் அமர்ந்தும் நோக்காள்;
அலையல் – வாழிவேண்டு, அன்னை! உயர்சிமைப்
பொதும்பில், புன்னைச் சினைசேர்பு இருந்த
வம்ப நாரை இரிய, ஒருநாள்,
பொங்குவரல் ஊதையொடு புணரி அலைப்பவும்,
உழைக்கடல் வழங்கலும் உரியன்; அதன்தலை
இருங்கழிப் புகாஅர் பொருந்தத் தாக்கி,
வயச்சுறா எறிந்தென, வலவன் அழிப்ப,
எழில்பயம் குன்றிய சிறைஅழி தொழில
நிரைமணிப் புரவி விரைநடை தவிர,
இழுமென் கானல் விழுமணல் அசைஇ,
ஆய்ந்த பரியன் வந்து,இவண்
மான்ற மாலைச் சேர்ந்தன்றோ இலனே!

தெளிவுரை

அன்னையே! வாழ்க!

நான் கூறுவதனைக் கேள்!

உயர்ந்த உச்சியைக் கொண்ட கடற்கரைச்சோலையில் ஒரு புன்னை மரத்தின் கிளையில் புதிதாய் வந்து அமர்ந்த நாரை, அங்கிருந்து அஞ்சி எழுந்து செல்லுமாறு வாடைக்காற்றுடன் பொங்கி வரும் கடலலைகளும் வந்து மோதின. அந்த நேரத்தில் கடலோரத்தில் ஒருவன் தேரூர்ந்து வந்தான். அவன் தேர் வந்து கொண்டிருந்தபோது, வலிமைமிக்க சுறா மீன் ஒன்று அத்தேரில் பூட்டப்பட்டிருந்த குதிரைகளைத் தாக்கியது. அதனால் பாகன் தேரை நிறுத்தினான். மணிமாலை பூண்டு விரைந்தோடிய குதிரைகள் சட்டென நின்றன. அத்தேரில் இருந்தவன் இறங்கி, 'இழும்' எனும் ஒலியெழும் கடற்கரைச்சோலையில் மணற் பரப்பில் தங்கினான். பாகன் வேறு குதிரைகளைக் கொண்டு வந்து, அவற்றை அத்தேரில் பூட்டி ஓட்டிய மயங்கிய அம்மாலை நேரத்தில் நாங்கள் இருந்த பக்கம் அவன் வந்தான். வந்த அவனும் அங்குத் தங்கவில்லை. சுழல்கின்ற குளிர்ச்சி பொருந்திய கண்களால் அவனைத் தலைவி விரும்பிப் பார்க்கவும் இல்லை.

கடலலைகளில் விளையாடிக் களைப்புற்றிருந்த சிறுமி களோடு சிறுவர்கள் உப்பு மேட்டில் ஏறி நின்று, இருள் படரும் நேரத்தில் கரைக்கு மீண்டுவரும் படகுகளை எண்ணிக்கொண் டிருப்பர். அத்தகைய காட்சிக்குரிய துறையைக் கொண்ட ஊரில் அந்த ஆண்மகன் வாழ்ந்து கொண்டிருக்கிறான். அவ்வாறிருக்க அவனோடு உன் மகளைச் சேர்த்து இந்த ஊர் மக்கள் தங்கள் கொடுமைக்குணத்தின் காரணமாய் ஏதோ பழி பேசுகின்றனர். அதனை மெய்யெனக் கொண்டு நீ அவளைத் துன்புறுத்தாதே!

கருத்து

கானற்சோலையில் ஒருவனுடன் தன் மகள் களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கின்றனள் என ஊரிலே அலர் எழுந்ததைக் கேட்டுச் செவிலித் தாய் அவளை (தலைவியை) மிகவும் கடிந்துகொண்டனள்; இற்செறிப்பு முதலியனவும் செய்யத் தொடங்கினாள். அதனைக் கண்ட தோழி, குறிப்பினாலே, தன் தலைவியின் காதலைச் செவிலிக்குரைத்து அறத்தொடு நின்றனள்.

குறிப்பு

தலைவன் வந்தான்; தங்கினான்; அவனைத் தலைவி கண்டாள் என்பதைக் குறிப்பாய்த் தெரிவித்து அவன்மீது அவளுக்குக் காதல் இருப்பதையும், அவன் அவளை மணந்துகொண்டு இல்லறம் நடத்துதற்கு உரியவன் என்பதையும் தோழி செவிலிக்குப் புலப்படுத்துகிறாள்.

சொற்பொருள்

1. திரை உழந்து - கடல் அலையில் விளையாடி; அசைஇய - களைப் புற்றிருந்த; ஆயமொடு - தோழியரொடு.
2. குப்பை - மேடு; எற்பட - இருள் பரவும்.
3. வரு - கரைக்கு வந்துகொண்டிருக்கும்; திமில் - படகு; ஊர் - இந்த ஊர்.
4. அலர் பாடும் - அலர் கூறுகிறது.
5. அலமரல் - சுழல்கின்ற; மழைக்கண் - குளிர்ச்சி பொருந்திய கண்; அமர்ந்து - விரும்பி.
6. அலையல் - துன்புறுத்தாதே; உயர் சிமை - உயர்ந்த உச்சியைக் கொண்ட.
7. பொதும்பில் - சோலையில்; புன்னை - புன்னை மரம்; சினை சேர்பு - கிளையிலே வந்து அமர்ந்த.
8. வம்ப - புதிய; இரிய - எழுந்து செல்லுமாறு.
9. ஊதை - வாடைக்காற்று; புணரி - அலைகள்.
10. உழைக்கடல் - கடலோரத்தே; வழங்கலும் உரியன் - (தேரில்) வந்தான்; அதன் தலை - அதற்கு மேலும்;
11. இருங்கழிப் புகாஅர் - பெரிய கழியினைக் கொண்ட துறைமுகம்.
12. வயச்சுறா - வலிமை மிக்க சுறாமீன்; எறிய - தாக்கிட; வலவன் - தேர்ப்பாகன்; அழிப்ப - தேரை நிறுத்த.
13. எழில் பயம் குன்றிய - எழுச்சியும் பயனும் குன்றியனவும்; சிறை அழி தொழில - பூட்டுதல் ஒழிந்த செய்கையைக் கொண்டனவுமாகிய.
14. நிரை மணிப் புரவி - நிரைத்த மணிமாலைகள் அணியப் பெற்றுள்ள குதிரைகள்.
15. 'இழும்' என் கானல் - 'இழும்' எனும் ஒலியைக் கொண்ட கடற்கரைச் சோலை; விழுமணல் - சிறந்த மணலில்; அசைஇ - தங்கி.
16. ஆய்ந்த பரியன் - வேறு சிறந்த குதிரைகளைப் பூட்டி.
17. மான்ற மாலை - மயங்கிய மாலைப்பொழுதில்; சேர்ந்தன்று இலன் - தங்கியதும் இலன்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 2 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

களவுப்புணர்ச்சியால் தலைவியின் உடல் வேறுபட்டது; அதைக் கண்ட செவிலி, 'இவ்வேறுபாடு உண்டானது ஏன்?' என்று வினவினாள். அப்போது தோழி, தலைவியின் களவு ஒழுக்கத்தைச் செவிலிக்கு உரைத்தது.

கள்ளி, சுனைநீலம், சோபா லிகை,செயலை
அள்ளி அளகத்தின் மேலாய்ந்து – தெள்ளி
இதனால் கடியொடுங்கா ஈர்ங்கடா யானை
உதணால் கடிந்தான் உளன்.

தெளிவுரை

“தாயே! பரணில் ஒளிந்து காத்துக்கொள்வதற்கு இயலாத நிலையில் தலைவியை மதங்கொண்ட ஆண்யானை ஒன்று தாக்க வந்தது. அச்சமயத்தில் ஒருவன் அம்பெய்து அந்த யானையைத் துரத்தித் தலைவியைக் காப்பாற்றியதோடல்லாமல், அனிச்ச மலரையும், நீல மலரையும் ஒளி பொருந்திய அசோக மலரையும் பறித்தெடுத்து வந்து அவள் கூந்தலில் அழகுபெற அணிவித்தான். அவன் தலைவியின் உள்ளத்திலே உள்ளான்” என்று செவிலியிடம் தோழி உரைத்தாள்.

கருத்து

தலைவியின் உள்ளத்திலே ஆணழகன் ஒருவன் சிறப்புற்று விளங்குகிறான்.

குறிப்பு

இப்பாடலின் கூற்று, களிறுதரு புணர்ச்சி எனவும் பூத்தரு புணர்ச்சி எனவும் கூறுவர்.

சொற்பொருள்

1. சுள்ளி - அனிச்ச மலர்; நீலம் - நீலோற்பலப் பூ; சோபாலிகை - ஒளி பொருந்திய; செயலை - அசோக மலர்.
2. அள்ளி - கொய்து எடுத்து வந்து; அளகத்தின் மேல் - கூந்தலின் மேலே; ஆய்ந்தான் - மிக அழகாய்ப் புனைந்தான்; தெள்ளி - தெளிந்து துணிந்து.
3. இதண் ஆல் - பரணினாலே; கடி ஒடுங்கா - காத்துக்கொள்ள இயலாத நிலையில்; ஈர்ங்கடா - குளிர்ச்சி பொருந்திய மதநீரைக் கொண்ட ஆண் யானையை.
4. உதண்ஆல் - மொட்டு அம்பினால்; கடிந்தான் - ஓட்டியவன்; உளன் - ஒருவன் இருக்கின்றான்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 14 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தோழி, தலைவியின் களவொழுக்கத்தைச் செவிலித்தாய்க்குக் கூறி அறத்தொடு நின்றது.

வருக்கை வளமலையுள் மாதரும் யானும்
இருக்கை இதண்மேலேம் ஆகப் – பருக்கைக்
கடாஅமால் யானை கடிந்தானை அல்லால்
தொடாஅவால் என்தோழி தோள்.

தெளிவுரை

"வருக்கைப் பலாமரங்களால் வளமைமிக்க மலையிடத்தில் தலைவியும் நானும் தினைப்புனத்தில் பரண்மீது இருந்தோம். அப்போது எங்களுக்கு இடையூறாய்த் தோன்றிய பருத்த துதிக்கையினையும் மதநீர் மயக்கத்தையும் கொண்ட யானையிடமிருந்து எங்களைக் காளை போன்றான் ஒருவன் காப்பாற்றினான்;

அவனன்றிப் பிறர் எவரையும் என் தலைவியின் தோள்கள் தழுவ மாட்டா" என்று தோழி செவிலிக்குக் கூறினாள்.

கருத்து

தன்னை யானையிடமிருந்து காத்தவனையன்றிப் பிறர் எவர் தோள் களையும் தலைவி தழுவ மாட்டாள்.

சொற்பொருள்

1. வருக்கை - ஒரு வகைப் பலா; மாதரும் - தலைவியும்.
2. இதண் - பரண்; பருக்கை - பருத்த துதிக்கையைக் கொண்ட.
3. கடாஅமால் - மதநீரால் மிக்க மயக்கத்தினைக் கொண்ட; கடிந்தானை - விரட்டி ஓட்டியவனை.
4. தொடா - தீண்ட மாட்டா; என்தோழி - என் தோழியாகிய தலைவி.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 106 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

அறத்தொடு நின்ற தோழி அது வற்புறுப்பான் வேண்டிச் செவிலிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியர் களவொழுக்கத்தைச் செவிலியிடம் தோழி வெளிப்படுத்தி அறத்தொடு நின்றாள். அதனை மீண்டும் வற்புறுத்து வதற்காகத் தோழி, செவிலியிடம் சொல்லியது.

அன்னை, வாழி!வேண்டு அன்னை! அவர்நாட்டுத்
துதிக்கால் அன்னம் துணைசெத்து மிதிக்கும்
தண்கடல் வளையினும் இலங்கும்இவள்
அம்கலிழ் ஆகம் கண்டிசின் நினைந்தே.

தெளிவுரை

அன்னையே! கேள்! தோல் பை போன்ற கால்களைக் கொண்டது, அன்னச்சேவல்; அத்தகைய அன்னச்சேவல் தன்

பெட்டையெனக் கருதி, குளிர்ச்சி பொருந்திய கடற்சங்கைப் புணர முயலும். அச்சங்கைக் காட்டிலும், அழகொழுகும் தலைவியின் மேனி, தலைவனை நினைந்து வேறுபட்டு வெளுத்து விட்டது. அதனைப் பார்.

கருத்து

அன்னம் கடல்சங்கைத் தன் பெட்டை என்று கருதி மயங்கி மிதிப்பதைப் போல், தலைவியின் மேனி வேறுபாட்டினை, தலைவன் பிரிவால் நேர்ந்தது என்று அறியாமல் வேறு எதனாலோ என்று செவிலி கருதிவிடக் கூடாது எனச் செவிலியைத் தோழி தெளிவுபடுத்துகிறாள்.

குறிப்பு

இவள் மேனி சங்குபோல் வெளிறிற்று. இது காமநோயே அன்றித் தெய்வம் முதலியவற்றால் உண்டான பிறிதொரு நோய் அன்று.

சொற்பொருள்

2. துதிக்கால் - தோல் பை போன்ற கால்; துணை செத்து - தன் பெட்டை என்று கருதி; மிதிக்கும் - புணர முயலும்.
3. வளை - சங்கு; இலங்கும் - விளங்குகின்ற.
4. அம் கலிழ் ஆகம் - அழகு ஒழுகும் மேனி; கண்டிசின் நினைந்து - ஆராய்ந்து உணர்ந்துகொள்க.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 107 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி, செவிலிக்கு அறத்தொடு நிலைகுறித்துக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவியின் உடல் மெலிவு கண்டு செவிலி வருந்தியபோது, தோழி அவளை நோக்கி, இது தலைவன் ஒருவனுடன் தலைவி கொண்ட உறவினால் என்று கூறி, இம்மெலிவை அகற்ற இவளை அவனுக்குக் கொடுத்தலேயன்றிப் பிறிதில்லை எனக் குறிப்பால் உணர்த்தியது.

அன்னை, வாழி!வேண்டு அன்னை!என் தோழி
சுடர்நுதல் பசப்பச் சாஅய், படர்மெலிந்து,
தண்கடல் படுதிரை கேட்டொறும்,
துஞ்சாள் ஆகுதல் நோகோ யானே.

தெளிவுரை

அன்னையே! வாழ்க! என் தோழியின் நெற்றி ஒளி மழுங்கியது; உடல் மெலிந்தது. குளிர்ச்சி பொருந்திய கடலின் அலையோசை காதிற் படும்போதெல்லாம் (இரவும் பகலும்) உறங்காள். அவள் நிலை கண்டு நான் மிகவும் வருந்துகிறேன்.

கருத்து

தலைவியின் உடல் மெலிவுக்கு ஏதேனும் காரணம் உண்டோ என்று தோழியிடம் செவிலி கேட்டாள். அதற்கு, 'கடல்ஒலி கேட்குந்தோறும் உறங்காதுள்ளாள்' என அவள், கடல்துறைத் தலைவன் ஒருவன்மேல் காதல் கொண்டுள்ளாள் என மறைமுகமாய்க் கூறினாள்.

சொற்பொருள்

2. சாஅய் - மெலிந்து; படர் மெலிந்து - மேனி வாடி.
3. படுதிரை - அலையால் உண்டாகும் ஓசை; கேட்டொறும் - காதிற்படும் போதெல்லாம்.
4. துஞ்சாள் - உறங்காள்; நோகு - வருந்துகின்றேன்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 190 — **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தோழி, செவிலியிடம் தலைவியின் களவொழுக்கத்தை வெளிப்படுத்தி அதனைக் கற்பொழுக்கமாய் மாற்ற அறத்தொடு நிற்பது.

தண்நறு நெய்தல் தளைஅவிழ் வான்பூ
வெண்ணெல் அரிநர் மாற்றினர் அறுக்கும்
மெல்லம் புலம்பன் மன்றஎம்
பல்இதழ் உண்கண் பனிசெய் தோனே.

தெளிவுரை

வெள்ளை நெல்லை அறுக்கின்ற உழவர்கள், அந்நெல்லோடு சேர்ந்து வளர்ந்திருக்கும் குளிர்ச்சியும் நறுமணமும் கொண்ட நெய்தலின் மொட்டவிழும் பெரிய பூக்களைத் தம் அரிவாள்முனை அறுத்துவிடாதபடி ஒதுக்கிவிட்டு, நெற்கதிரை மட்டுமே அறுப்பர். அத்தகைய காட்சிக்குரிய நெய்தல்நிலத் தலைவன்தான், இதழ்கள் பல கொண்ட குவளை மலர்போலும் மையுண்ட என் தோழியின் கண்களை வருத்தி நீர் துளிக்கச் செய்தவன்.

கருத்து

நெய்தல்நிலத் தலைவன் ஒருவனே தலைவியை மெலிவித்தான்.

குறிப்பு

நெல் அரிவார் அந்நெல்லொடு விரவிய நெய்தற்பூவை விட்டு விட்டு நெல்லை மட்டும் அரிவர் என்றது, ஆயமகளிர் பலரோடு தலைவி இருந்தபோது அங்கு வந்தவன் தலைவியை மட்டுமே காதலித்து நோக்கலாயினன் என்னும் குறிப்புடையது.

உழவர், பூவை விட்டு விட்டுக் கதிரை மட்டும் அறுக்கும் மென் புலத்திற்குத் தலைவன் என்றதால், தலைவன் இடையூறுகளைத் தாண்டித் தலைவியை மணப்பான் என்பது உட்குறிப்பு.

சொற்பொருள்

1. தளை அவிழ் - மொட்டு அவிழ்ந்த; வான்பூ - பெரிய பூ.
2. அரிநர் - அறுப்பவர்; மாற்றினர் - ஒதுக்கிவிட்டு.
3. மெல்லம் புலம்பன் - மென்னிலமாய நெய்தல் நிலத்தைச் சார்ந்த தோன்றல் ஒருவன்.
4. கண்பனி செய்தல் - கண்களில் நீர் உண்டாக்குதல்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 242 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகள் அறத்தொடுநிலை நயப்ப வேண்டித் தோழி அவட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியின் மெலிவு கண்டு, தாய் வெறியாட்டு நிகழ்த்த முயலுதல் கண்ட தோழி, 'இனி நம் களவு உறவினைத் தாய்க்கு உணர்த்துவதே நல்லது' என்று தெளிவுபடுத்தித் தலைவியிடம் தோழி கூறியது.

அறியா மையின், வெறிஎன மயங்கி,
அன்னையும் அருந்துயர் உழந்தனள்; அதனால்,
எய்யாது விடுதலோ கொடிதே, நிரைஇதழ்
ஆய்மலர் உண்கண் பசப்ப,
சேய்மலை நாடன் செய்த நோயே.

தெளிவுரை

தலைவியே! நம் அன்னையும் நாம் அடைந்துள்ள பெரிய துன்பத்திற்குரிய உண்மைக் காரணம் அறியாதவளாய், அது வெறியால் தீரும் என்று தவறாய்க் கருதி, அது தீர்தற் பொருட்டுத் தானும் பெருந்துயர் அடைகின்றனள். நிரல்பட்ட இதழ்களைக் கொண்ட தாமரை மலர்போலும் அழகிய மையுண்ட உன் கண்கள் பசலையூர்ந்து சிறப்பிழக்குமாறு செய்தவன், உயர்ந்த மலைக்குரிமையுடைய நம் காதலனே என்னும் உண்மையைத் தாய் அறியாதவாறு நாம் மறைத்தலால் அவள் அறியாதது நமக்குத் தீமையாகவே முடியும்.

கருத்து

தலைவியே! மலைநாடன் செயலே நம் நோய்க்குக் காரணம் என்பதைத் தாயிடம் உடனே தெரிவிக்க வேண்டும்.

குறிப்பு

தாயின் அறியாமையால் ஏற்பட்ட துயரத்தைக் காட்டிலும், களவை அறிவிக்காமையால் ஏற்படும் துயரம் மிகுதியானது எனத் தோழி, தலைவியிடம் தெளிவுபடுத்துகிறாள்.

சொற்பொருள்

1. அறியாமையின் - காரணம் அறியாமையால்; வெறி என மயங்கி - வெறியெடுத்தால் தீரும் இந்நோய் என்று தவறாய்க் கருதி.
2. உழந்தனள் - வருந்தினள்.
3. எய்யாது - அறிவிக்காது; கொடிது - தீமை; நிரை இதழ் - வரிசையாய் அமைந்த இதழ்கள்.
4. ஆய்மலர் - தேர்ந்தெடுத்த மலர் (போன்ற); பசப்ப - பசலை ஊர்ந்து.
5. சேய்மலை - தொலைவில் உள்ள மலை.

தோழி கூற்று

குறுந்தொகை 23 **ஔவையார்**

திணை : குறிஞ்சி

கூற்று

கட்டுக்காணிய நின்றவிடத்துத் தோழி அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தலைவியது வேறுபாட்டின் காரணத்தைச் செவிலித்தாய் முதலியோர் கட்டுவிச்சியைக்கொண்டு ஆராய்ந்தபோது, தோழி, தலைவியின் வேறுபாடு மலைநாட்டுத் தலைவன் ஒருவனால் உண்டாயிற்று என்பதைப் புலப்படுத்தியது. (கட்டுவிச்சி - குறி சொல்பவள்.)

அகவன் மகளே! அகவன் மகளே!
மனவுக்கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்
அகவன் மகளே! பாடுக பாட்டே!
இன்னும் பாடுக பாட்டே!அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே!

தெளிவுரை

தெய்வங்களை அழைத்துப் பாடும் கட்டுவிச்சியே! சங்குமணிக் கோவை போன்று வெண்மையான நல்ல நீண்ட கூந்தலைக் கொண்ட அகவன் மகளே! நீ பாட்டுப் பாடு! நீ பாடிய பாட்டை மேலும் பாடு! அவரது நல்ல உயர்ந்த குன்றத்தைப் புகழ்ந்து பாடிய அந்தப் பாட்டையே இன்னமும் பாடு!

கருத்து

'அவர் குன்றம் பாடிய பாட்டே பாடு' என்று கூறி, அவரே அவள் காதலன் என உணர்த்தினாள், தோழி. அவனுடைய மலையைப் பாடு; இவள் நோய் நீங்கும்.

குறிப்பு

தலைவியின் நோய் தெய்வத்தால் ஏற்பட்டதன்று; மலைநாடனால் ஏற்பட்டது. நீ அவன் மலைவளம் பாடிக் குறி சொல்லத் தொடங்குகிறாய். அம்மலையையே மீண்டும் பாடு. இதைக் கேட்கும் தலைவி ஆறுதல் அடையக்கூடும். (அகவல் மகளிர் - ஆவேசத்தோடு பாடிக் குறி சொல்பவர்.)

சொற்பொருள்

2. மனவுக் கோப்பு - சங்கு மணிகளைக் கோத்த மாலை.
5. நன்னெடுங்குன்றம் - நல்ல உயர்ந்த குன்றம்.

தோழி கூற்று

குறுந்தொகை 26 **கொல்லன் அழிசி**

திணை : குறிஞ்சி

கூற்று

நற்றாயும் செவிலித்தாயும் தலைமகளது வேறுபாடு கண்டு, 'இஃது எற்றினான் ஆயிற்று' என்று கட்டுவிச்சியை வினவிக் கட்டுக் காண்கின்ற காலத்துத் தலைமகளது வேறுபாட்டிற்குக் காரணம் பிறிது ஓர் தெய்வமென்று கூறக் கேட்டுத் தோழி அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தலைவியின் வேறுபாட்டிற்குக் காரணம் பிறிதொரு தெய்வமென்று கட்டுவிச்சியால் அறிந்த தாயர் முதலியோருக்கு, 'இவள், தலைவன் ஒருவனோடு நட்புப் பூண்டாள்; அவனை ஓர் ஆண்குரங்கும் அறியும்' என்னும் உண்மையினைக் கூறி, தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

அரும்புஅற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்குஎழு பெருஞ்சினை இருந்த தோகை
பூக்கொய் மகளிரின் தோன்றும் நாடன்
தகாஅன் போலத் தான்தீது மொழியினும்,
தன்கண் கண்டது பொய்க்குவது அன்றே
தேக்கொக்கு அருந்தும் முள்எயிற்றுத் துவர்வாய்
வரைஆடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனும் அறியும்,அக் கொடியோ னையே.

தெளிவுரை

அரும்புகள் இன்றி முழுவதுமாய் மலர்ந்திருக்கிற, கரிய அடி மரத்தைக் கொண்ட வேங்கை மரத்தில் மேல்நோக்கி ஓங்கி வளர்ந்துள்ள பெரிய கிளையில் தங்கியிருந்த மயில், அம் மரத்திலே பூப்பறிக்கின்ற மகளிரைப் போன்று தோன்றும். அத்தகைய காட்சி கொண்ட குறிஞ்சி நிலத்திற்கு உரியவன், தலைவன். அவன் இவளுக்குத் தகுதியில்லாதவன்போல இக் கட்டுவிச்சி, 'இந்நோய் தெய்வம் ஒன்றனால் ஏற்பட்டது' என்று பொய்யான மொழிகளைக் கூறினாள். இனிய மாங்கனியைப் பறித்துத் தின்னும் கூர்மையான பற்களையும், சிவந்த வாயையும், மலைகளிலே ஓடியாடி விளையாடும் வலிமையினையும் கொண்டதுமான குட்டிக்குத் தந்தையாகிய ஆண்குரங்கும் அக்கொடியவனாகிய தலைவன் தலைவியோடு நட்புக்கொண் டிருந்ததை அறியும். (அது, தான் கண்டதைக் காணேன் எனப் பொய் கூறாது.)

கருத்து

தலைவியின் நோய்க்கு அவள் காதல் கொண்டுள்ள தலைவனே காரணம்; தெய்வம் எதுவும் அன்று என்று தோழி கூறினாள்.

சொற்பொருள்

1. அரும்பு அற - அரும்புகள் இல்லாமல் (முற்றிலும்).
2. மேக்கு எழு - மேல் நோக்கி எழுந்துள்ள; பெருஞ்சினை - பெரிய கிளை; தோகை - மயில்.
4. தகாஅன் போல - அவன் தலைவிக்குத் தகுதியில்லாதவன் போல; தான் தீது மொழியினும் - கட்டுவிச்சி பொய்யான மொழிகளைக் கூறினும்.
6. தேக்கொக்கு - இனிய மாங்கனி; முள் எயிறு - கூரிய பல்; துவர் வாய் - சிவந்த வாய்.
7. வரைஆடு - மலையிலே விளையாடும்; வன்பறழ் - வலிமையான குட்டி; தந்தைக் கடுவன் - தந்தையாகிய ஆண்குரங்கு.
8. அக்கொடியோனை - கொடியோனாகிய அத்தலைவனை.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 250 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகட்கு வந்த நோய் முருகனால் வந்தமை இக்கழங்கு கூறிற்றென்று வேலன் சொன்னான் என்பது கேட்ட தோழி, அக்கழங்கிற்கு உரைப்பாளாய்ச் செவிலி கேட்குமாற்றால் அறத்தொடு நிலை குறித்துச் சொல்லியது. (கழங்கு கூறல் – கழற்சிக் காய்களைத் தரையில் பரப்பிக் கணக்குப் பார்த்துத் தெய்வ ஆவேசத்தால் குறி சொல்லுதல்.)

கூற்று விளக்கம்

தலைவி மேனி மெலிவிற்கு முருகனே காரணம் என வேலன் கழங்கு பார்த்துக் கூறினான். அது கேட்ட தோழி அக்கழங்கிற்கு உரைப்பாளாய்ச் செவிலித்தாய்க்கு உண்மை உரைத்தது.

பொய்படுபு அறியாக் கழங்கே! மெய்யே
மணிவரைக் கட்சி மடமயில் ஆலும்நம்
மலர்ந்த வள்ளியம் கானம் கிழவோன்;
ஆண்டகை விறல்வேள் அல்லன்,இவள்
பூண்தாங்கு இளமுலை அணங்கி யோனே.

தெளிவுரை

பொய்யிலே அகப்பட்டு, உண்மையறியாது குறி காட்டியுள்ள கழங்கே! நான் சொல்வதைக் கேள். அணிகள் அணிந்த மெல்லிய முலைகளைக் கொண்ட என் தலைவியை வருத்தியவன், ஆண் தன்மை மிக்க, வெற்றியாளனாகிய செவ்வேள் முருகன் அல்லன். மயில்கள் ஆடுவதும், வள்ளிக்கொடிகள் படர்ந்ததுமாகிய நீலமணி போலும் நிறமமைந்த மலைக்காடுகளுக்கு உரிமை பூண்ட தலைவனே அவளை வருத்தியுள்ளான். இதுவே உண்மை. (இதனை நீ அறிக எனக் கழங்கை நோக்கிக் கூறுபவள் போலத் தோழி, செவிலி கேட்குமாறு கூறினாள்.)

கருத்து

இவளை வருத்தியவன் மலைநாடனேயன்றி முருகவேள் அல்லன். முருகன் என்று கழங்கு சொல்லுமாயின் அக்கழங்கு பொய் கூறியதாய் ஆகும்.

சொற்பொருள்

1. பொய் படுபு - பொய்யிலே அகப்பட்டு; அறியா - உண்மை அறியாத; மெய்யே - நான் சொல்வதே உண்மை.
2. மணிவரை - நீலமணிபோலும் நிறம் வாய்ந்த மலை; கட்சி - காடு; மடமயில் - இளமயில்; ஆலும் - ஆடும்.
3. மலர்ந்த வள்ளி - விரிந்த வள்ளிக்கொடிகள்; அம்கானம் - அழகிய காடு; கிழவோன் - தலைவன்.
4. ஆண் தகை - ஆண்மகன்; விறல்வேள் - வெற்றி பொருந்திய செவ்வேள் ஆகிய முருகன்.

4-5.இவள் பூண்தாங்கு இளமுலை அணங்கியோன் முருகன் அல்லன்.

5. அணங்கியோன் - வருத்தியவன்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 249 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வேலன் கூறிய மாற்றத்தை மெய்யெனக் கொண்ட தாய் கேட்பத் தலைமகட்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

'தெய்வம் அணங்கிற்று' என்று வேலன் சொன்னதையே தாய் உண்மையென நம்பிவிட்டாள். அந்நிலையில் தோழி, அத்தாய் கேட்கும்படியாகத் தான் தலைவிக்குச் சொல்பவள்போல உண்மை நிலையைக் கூறியது.

பெய்ம்மணல் வரைப்பில் கழங்குபடுத்து, அன்னைக்கு,
முருகுஎன மொழியும் வேலன்; மற்றவன்
வாழிய! இலங்கும் அருவிச்
சூர்மலை நாடனை அறியா தோனே!

தெளிவுரை

"அருவி விளங்கும், அச்சத்தை மிகுவிக்கும் மலைநாட்டுக்கு உரியவனை வேலன் அறியான். அதனால் புதுமணல் பரப்பி, கழங்கு வைத்து, 'இவளுக்கு உண்டாய மெலிவிற்குக் காரணம் முருகன்' என அன்னையிடம் கூறினான். அன்னையும் அதனை மெய் எனக் கொண்டு அமைதி கொண்டாள். ஆதலின், அவ் வேலன் வாழ்க" என்று தாய் காதில்படுமாறு தோழி, தலைவியை நோக்கிக் கூறினாள்.

கருத்து

தலைவி மலைநாடனுடன் காதல் கொண்டுள்ளாள் என்பதே உண்மை; வேலன் இதனை அறியான்.

விளக்கம்

'தலைவியை அணங்கியவன், முருகன்' என்று வேலன் கூறியது உண்மை அன்று. இதனைச் செவிலி உணருமாறும், தலைவியின் களவை அறிந்து, அவள் அறத்தொடு நின்று

நற்றாய்க்கு உணர்த்தி உதவ வேண்டும் என்றும் தோழி, குறிப்பால் செய்தியைச் செவிலியிடம் அறிவிக்கிறாள்.

சொற்பொருள்

1, பெய்ம்மணல் - மணல் பரப்பப்பட்ட; வரைப்பில் - இடத்தில்; கழங்கு படுத்து - கழற்சிக்காய் இட்டு எண்ணி.
2. முருகு - (தலைவியை அணங்கியவன்) முருகக்கடவுள்; மொழியும் - கூறும்; மற்று அவன் - அவ்வேலன்.
3. இலங்கும் - விளங்கும்.
4. சூர் - அச்சம்; அறியாதோன் - அறியாதவனாகிய வேலன்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 248 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகள் வேறுபாடு கழங்கினால் தெரியும் என்று வேலன் கூறிய வழி, அதனைப் பொய் என இகழ்ந்த தோழி, வெறிவிலக்கிச் செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தலைவியின் மெலிவு நோக்கிய செவிலி, வேலனை அழைத்துக் குறிபார்த்துக் கூறுமாறு சொன்னாள். அது கேட்ட தோழி தன் தாயிடம் உண்மை கூறியது.

பெய்ம்மணல் முற்றம் கவின்பெற இயற்றி,
மலைவான் கொண்ட சினைஇய வேலன்
கழங்கினான் அறிகுவது என்றால்
நன்றால் அம்ம, நின்றஇவள் நலனே!

தெளிவுரை

மலையையும் வானையும் மாறுகொண்டு வென்ற, சினங் கொண்ட முருகனுடைய வேலை ஏந்திய வெறியாடும் வேலன், பழைய மணலை மாற்றிப் புதுமணல் பெய்து அழகுபடுத்தப்

பட்ட முற்றத்தில் வெறியாடி, தலைவி கொண்ட நோய் கழங்கினால் அறியத்தக்கது என்று சொல்வானானால் தலைவியின் கற்பின் திறம் மிகவும் நன்று! (இவளது கற்பின் மாண்பு கழங்கினால் அளக்கக்கூடிய ஒன்றன்று.)

கருத்து

தலைவி கொண்ட நோய் கழங்கினால் அறியக்கூடியது என்றால் அஃது அவள் கற்புக்கு இழுக்காகும்.

குறிப்பு

கழங்கினால் அறியத் தக்கது நல்லதுதான் என்று சொல்வதன் வழி அஃது அறிய இயலாதது என்பதை வலியுறுத்துகிறாள், தோழி. அதனால், உண்மையை அறிந்து, அவள் தலைவனுக்கு அவளைக் கொடுத்தலே அவள் நோய் தீருதற்கு வழி எனவும் புலப்படுத்தினாள்.

சொற்பொருள்

1. பெய்ம்மணல் - புதுமணல்; கவின் பெற - அழகு பெற; இயற்றி - அமைத்து.
2. மலையையும் வானையும் மாறுகொண்டு வென்ற சினங்கொண்ட முருகன்; சினைஇய வேலன் - அம் முருகன் கைக்கொண்ட சினந்த வேலினையுடைய.
3. கழங்கு - கழற்சிக்காய்.
4. நலன் - கற்புடைமை.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 243 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தாயுழை அறியாமை கூறித் தோழி வெறி விலக்கியது.

கூற்று விளக்கம்

தாயினுடைய அறியாமையை விளக்கிக் கூறி வெறியாடுதலைத் தோழி விலக்கியது.

கறிவளர் சிலம்பில் கடவுள் பேணி,
அறியா வேலன், வெறிஎனக் கூறும்
அதுமனம் கொள்குவை, அனைஇவள்
புதுமலர் மழைக்கண் புலம்பிய நோய்க்கே.

தெளிவுரை

அன்னையே! தலைவியின் கண்கள் புதுமலர் போன்ற குளிர்ச்சி பொருந்தியவை. அவள் தனிமை உற்றுக் காதல் நோயால் வருந்துகிறாள். அதற்குக் காரணம் அறியாத வேலன், மிளகு வளரும் மலைக்கடவுளான முருகனை வணங்கி, இவள் நோய் நீங்குதற்கு வெறியாடுதலே வழி என்று சொல்வான். நீ அவன் சொல்வதை உண்மை எனக்கொண்டு வெறியெடுக்க முனைகின்றாய். தலைவியின் நோய்க்கு மருந்து வெறியாடுதல் அன்று.

கருத்து

வெறியாடுதல் ஒன்றையே பரிகாரமாகக் கூறுவது அல்லது வேறு அறியாதவன் வேலன்.

விளக்கம்

வேலனாகிய வெறியாட்டாளன் தலைவியின் துயருக்குக் காரணம் முருகனே என்று கூறி நம்பச் செய்து, அவனுக்குப் பூசை செய்து வேண்டினாலன்றி நோய் தீராது என்று கூறுவதையே வழக்கமாகக் கொண்டவன். அவன் பேச்சினை நம்பாதே! எனத் தாயிடம் தோழி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. கறி - மிளகு; சிலம்பு - மலை; கடவுள் - முருகன்; பேணி - வணங்கி.
2. வேலன் - வெறியாடல் நிகழ்த்துபவன்.
3. மனம் கொள்குவை - நம்புகிறாய்; அனை - அன்னை; இவள் - தலைவி.
4. மழைக்கண் - குளிர்ச்சி பொருந்திய கண்; புலம்பு - தனிமை; நோய்க்கு - துன்பத்திற்கு.

தலைவி கூற்று

ஐந்திணை ஐம்பது 20 **மாறன் பொறையனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகள், தோழிக்கு அறத்தோடு நின்று வெறிவிலக்க வேண்டும் உள்ளத்தளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனுடன் கொண்ட தொடர்பினால் தலைவியின் மேனி வேறு படுகிறது. அது தெய்வக் குற்றத்தால் ஏற்பட்டது எனக் கருதி வேலனை அழைத்து வெறியாடுதலைச் செய்யப் பெற்றோர் முனைந்தனர். அப்போது தலைவி, தோழியிடம் நடந்ததைச் சொல்லி, வெறியை விலக்குமாறு சொல்லியது.

வெறிகமழ் வெற்பன்என் மெய்ந்நீர்மை கொண்ட(து)
அறியாள்மற்(று) அன்னோ! அணங்(கு)அணங்கிற் றென்று
மறிஈர்த்(து) உதிரம்தூய் வேலன் தரீஇ
வெறியோ(டு) அலம்வரும் யாய்.

தெளிவுரை

“தோழியே! நம் அன்னையான செவிலி, மணம் கமழும் மலை நாடன், என் மேனியின் இயல்பான தன்மையைக் களவுப்புணர்ச்சி மூலம் கவர்ந்துகொண்டதனை, அறிந்துகொள்ளவில்லை; தெய்வம் என்னை வருத்திவிட்டது என்று கருதுகிறாள். அதைப் போக்க வேலைக் கையில் கொண்ட மருள் ஆடுபவனான பூசாரியை அழைத்திருக்கிறாள். அவனும் ஆட்டுக்குட்டியைப் பலி தந்து, அதன் குருதியை நான்கு பக்கங்களிலும் தெளித்து, முருகனுக்குப் பூசை செய்தலான வெறியாடலில் ஈடுபட்டு இருப்பது கண்டு வருந்தி நிற்கிறாள். நீ அதனைத் தடுத்து, செவிலித்தாய்க்கு உண்மையை உணர்த்து” எனத் தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

கருத்து

தன் உடல் வேறுபாட்டுக்குத் தலைவனே காரணம் எனச் செவிலியிடம் கூறி வெறியை விலக்குமாறு தலைவி தோழியை வேண்டுகிறாள்.

சொற்பொருள்

1. வெறிகமழ் - மணம் கமழும்; வெற்பன் - மலைநாடன்; மெய்ந் நீர்மை - என் உடம்பின் இயல்பாம் தன்மையை; கொண்டது - பற்றிக் கொண்டது.
2. அறியாள் - தாய் அறிய மாட்டாள்; அணங்கு - வருத்தும் தெய்வம்.
3. மறி - ஆட்டுக்குட்டி; ஈர்த்து - அறுத்து; உதிரம் - குருதி; வேலன் - மருள் ஆடும் பூசாரி; தரீஇ - வரவழைத்து;
4. வெறியோடு - வெறியாடுதலில் ஈடுபட்டு; அலம் வரும் - வருந்தி யிருக்கிறாள்.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், குன்றக்குரவை 11 **இளங்கோவடிகள்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகள் தோழிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

மகளின் வேறுபாடு கண்டு அதற்குக் காரணமறியாத தாய், முருகனே இந்நோய் செய்தான் என்று கருதி, வேலனை அழைத்து வெறியாட் டயர்தலைக் கருதினாள். அப்போது தலைவி, தான் தலைவன் ஒருவனை விரும்பியிருப்பதைத் தோழியிடம் சொல்வதுபோலத் தாய்க்குக் குறிப்பாய்ப் புலப்படுத்தியது.

இறைவளை நல்லாய்! இதுநகை ஆகின்றே
கறிவளர் தண்சிலம்பன் செய்தநோய் தீர்க்க
அறியாள்மற்று அன்னை அலர்கடம்பன் என்றே
வெறியாடல் தான்விரும்பி வேலன்வருக என்றாள்.

தெளிவுரை

முன் கையில் வளையல் அணிந்த தோழியே! மிளகுக்கொடி வளரும் குளிர்ச்சி பொருந்திய மலைநாட்டைச் சார்ந்தவன், என் காதலன்! அவன் எனக்குச் செய்த காம நோயினைத் தீர்க்க அன்னை அறியாள். 'அலர்ந்த கடம்ப மாலையணிந்த முருகனே

நோய் செய்தான்' என்று கருதி, அந்நோயினைத் தீர்க்கும் பொருட்டு வெறியாட்டயர்தலைக் கருதி, வேலனை வருக என்று அழைத்தாள். அதனைக் கேட்டுச் சிரிக்கத்தான் தோன்றுகிறது! நான் மலைநாட்டுத் தலைவனைக் காதலிக்கிறேன். அதனை அறியாத தாய் செய்வதை நினைக்கும்போது எனக்குச் சிரிப்புத்தான் தோன்றுகிறது.

கருத்து

தோழியே! என் மேனி வேறுபாட்டுக்குக் காரணம் மலைநாட்டுத் தலைவன். இதனைத் தாய் அறியாது வெறியாட்டயர விரும்புகிறாள்.

சொற்பொருள்

1. இறை - முன்கை; வளை - வளையல் (அணிந்துள்ள).
2. கறி - மிளகுக்கொடி; தண்சிலம்பன் - குளிர்ச்சி பொருந்திய மலைநாடன்.
3. அலர் கடம்பன் - கடம்ப மாலையை (அணிந்தவன்), முருகன்.
4. வேலன் - வெறியாடல் நிகழ்த்தும் வேலன் (பூசாரி).

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், குன்றக்குரவை 12 **இளங்கோவடிகள்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகள் தோழிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

மகளின் வேறுபாடு கண்டு அதற்குக் காரணமறியாத தாய், முருகனே இந்நோய் செய்தான் என்று கருதி, வேலனை அழைத்து வெறியாட் டயர்தலைக் கருதினாள். அப்போது தலைவி, தான் தலைவன் ஒருவனை விரும்பியிருப்பதைத் தோழியிடம் சொல்வதுபோலத் தாய்க்குக் குறிப்பாய்ப் புலப்படுத்தியது.

ஆய்வளை நல்லாய்! இதுநகை ஆகின்றே;
மாமலை வெற்பன்நோய் தீர்க்கவரும் வேலன்!
வருமாயின் வேலன் மடவன்; அவனின்
குருகு பெயர்க்குன்றம் கொன்றான் மடவன்.

தெளிவுரை

அழகிய வளையல் அணிந்த தோழியே! பெரிய மலைநாட்டுக் குரிய என் தலைவன் செய்த நோயைத் தீர்க்க வேலன் (வெறியாட் டயர்வோன்) வருவானாம்! கேட்டுச் சிரிக்கத்தான் தோன்று கிறது. அவ்வாறு வேலன் வருவானாயின் அவன் அறியாமை வாய்ந்தவன். அவனைக் காட்டிலும், அவ்வேலன்மீது ஏறி வருகின்ற (ஆவேசித்துச் சொல்லுகின்ற) கிரவுஞ்ச மலையைப் பிளந்த முருகன் அறியாமை வாய்ந்தவன்.

கருத்து

தோழியே! என் நோய்க்குக் காரணம் மலைநாட்டுத் தலைவன். தாய், இதனை அறியாது வெறியாட்டயரக் கருதுகிறாள்.

விளக்கம்

"தாய் சொல்லைக் கேட்டு வேலன் வந்தான். அவனே அறியாமை வாய்ந்தவன். அவ்வேலன் விரும்பியபடி முருகன் அவன்மீது வருவானாயின், அம்முருகன் அவ்வேலனை விட அறியாமை வாய்ந்தவன்" என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள். அது கேட்கும் செவிலி, தலைவியானவள் தலைவன் ஒருவனைக் காதலிப்பதை அறிவாள்.

சொற்பொருள்

1. நகை ஆகின்றே - சிரிப்பு ஏற்படுகின்றது.
2. மாமலை வெற்பன் - முருகன்; வேலன் - வெறியாடல் நிகழ்த்த வரும் முதியவன் (பூசாரி).
3. மடவன் - அறியாமை வாய்ந்தவன்.
4. குருகு பெயர்க்குன்றம் - கிரவுஞ்ச மலை; கொன்றான் - பிளந்த வனாகிய முருகக்கடவுள்.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், குன்றக்குரவை 13 **இளங்கோவடிகள்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகள் தோழிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

மகளின் வேறுபாடு கண்டு அதற்குக் காரணமறியாத தாய், முருகனே இந்நோய் செய்தான் என்று கருதி, வேலனை அழைத்து வெறியாட் டயர்தலைக் கருதினாள். அப்போது தலைவி, தான் தலைவன் ஒருவனை விரும்பியிருப்பதைத் தோழியிடம் சொல்வதுபோலத் தாய்க்குக் குறிப்பாய்ப் புலப்படுத்தியது.

செறிவளைக்கை நல்லாய்! இதுநகை ஆகின்றே;
வெறிகமழ் வெற்பன்நோய் தீர்க்க வரும்வேலன்!
வேலன் மடவன்; அவனினும் தான்மடவன்
ஆல்அமர் செல்வன் புதல்வன் வருமாயின்.

தெளிவுரை

செறிந்த வளையல்களை அணிந்த தோழியே! மணங்கமழும் மலைநாட்டவனாகிய என் காதலன் செய்த நோயைத் தீர்க்க வேலன் வருவானாம். கேட்டுச் சிரிக்கத்தான் தோன்றுகிறது. அவ்வாறு வேலன் வருவானேயானால் அவன் அறியாமை வாய்ந்தவன். அவ்வாறிருக்க, அவ்வேலன்மீது ஆலமர் செல்வன் மகனான முருகன் இங்கே வருவானானால் அவன் அவ் வேலனைக் காட்டிலும் அறியாமை வாய்ந்தவனே ஆவான்!

கருத்து

தோழியே! என் நோய்க்குக் காரணம் மலைநாட்டுத் தலைவன். அதனை அறியாது தாய், வெறியாட்டுச் செய்ய வேலனை அழைத்திருப்பது நகைப்பிற்குரியது.

சொற்பொருள்

1. செறி - நெருக்கமாய் உள்ள.
2. வெறி - மணம்; வெற்பன் - மலைநாட்டுத்தலைவன்.

3. வேலன் - பூசாரி; மடவன் - அறியாமையினன்.
4. ஆல் அமர் செல்வன் - ஆல மரத்தின்கீழ் அமர்ந்திருக்கும் கடவுள், சிவன்; புதல்வன் - (சிவன்) மகனாகிய முருகன்.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், குன்றக்குரவை 14 **இளங்கோவடிகள்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகள் தோழிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

மகளின் வேறுபாடு கண்டு அதற்குக் காரணமறியாத தாய், முருகனே இந்நோய் செய்தான் என்று கருதி, வேலனை அழைத்து வெறியாட் டயர்தலைக் கருதினாள். அப்போது தலைவி, தான் தலைவன் ஒருவனை விரும்பியிருப்பதைத் தோழியிடம் சொல்வதுபோலத் தாய்க்குக் குறிப்பாய்ப் புலப்படுத்தியது.

நேர்இழை நல்லாய்! நகையாம்; மலைநாடன்
மார்பு தருவெந்நோய் தீர்க்க வரும்வேலன்!
தீர்க்க வரும்வேலன் தன்னினும் தான்மடவன்
கார்க்கடப்பம் தார்எம் கடவுள் வருமாயின்.

தெளிவுரை

அழகிய வளையல் அணிந்த நல்லாய்! மலைநாட்டவனாகிய எம் காதலனின் மார்பு தந்த நோயினைத் தீர்க்க வேலன் வருவானாம். கேட்டுச் சிரிக்கத்தான் தோன்றுகிறது! அவ்வாறு வேலன் வருவானேயானால் அவன் அறியாமை வாய்ந்தவன். அவ்வாறிருக்க, அவ்வேலன்மீது கார் காலத்தில் மலரும் கடம்ப மலர்மாலையை அணிந்த எம் முருகன் வருவானேயானால் அவன் அவ்வேலனைக் காட்டிலும் அறியாமை வாய்ந்தவனே ஆவான்.

கருத்து

தலைவன் மார்பு எனக்குத் தந்த நோயை முருகன் தந்ததாய்த் தாய் கருதுகிறாள். இது சிரிப்புக்குரியது.

சொற்பொருள்

1. நேர் இழை - அழகிய வளையல் (இழை - அணிகலன்).
2. வெந்நோய் - வெம்மையான நோய், காமநோய்.
4. கார்க் கடப்பம் - கார் காலத்தில் மலரும் கடம்ப மலர்; தார் - மாலை. கடவுள் - முருகன்.

தோழி கூற்று

நற்றிணை 34 **பிரமசாரி**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தெய்வத்துக்கு உரைப்பாளாய் வெறி விலக்கியது.

கூற்று விளக்கம்

களவுக்காலத்துத் தலைவன் பிரிந்தான். தலைவி உள்ளத்தாலும் உடலாலும் பாதிப்புற்றாள்; முருகனால் அணங்கப்பட்டாள் என்று கருதிய தாய், வேலனை அழைத்து வெறியாடல் நிகழ்த்தினாள். அது கண்ட தோழி, 'இந்நோய் தலைவனின் மார்பினால் ஏற்பட்டது; முருகனால் ஏற்பட்டதன்று' என்று கூறியது.

கடவுள் கல்சுனை அடைஇறந்து அவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தள்
குருதி ஒண்பூ உருகெழக் கட்டிப்
பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி இன்இயத்து ஆடும் நாடன்
மார்புதர வந்த படர்மலி அருநோய்
நின்அணங்கு அன்மை அறிந்தும், அண்ணாந்து,
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி,
வேலன் வேண்ட, வெறிமனை வந்தோய்!
கடவுள் ஆயினும் ஆக;
மடவை மன்ற, வாழிய முருகே!

தெளிவுரை

சூரர மகள், கடவுள் தன்மை பொருந்திய மலைச்சுனையில் இலைகளின் மேலெழுந்து மலர்ந்து, கொய்யாமல் விடப்பட்டிருக்கும் குவளை மலரைப் பறித்தனள்; அதனைக் குருதிபோன்ற காந்தள் மலருடன் சேர்த்துக் கட்டி அணிந்தனள்; பெரிய மலையின் பக்கமெல்லாம் பொலிவு பெற மலையில் வீழும் அருவியின் ஒலியே தன் ஆட்டத்திற்கேற்ற இசையாய்க்கொண்டு ஆடினள். இத்தகைய பெருமை கொண்ட ஊரினை உடையவன், தலைவன். அவன் மார்பைத் தழுவிப் பிரிந்ததன் காரணமாய்ப் பசலை மிகப் படர்ந்த, நீக்குதற்கரிய இக்காமநோய் தலைவிக்கு ஏற்பட்டுள்ளது.

முருகக்கடவுளே! இந்நோய் உன்னால் ஏற்பட்டதன்று; அதை நன்றாய் அறிந்திருந்தும், கார் காலத்தே மலர்கின்ற நறிய கடப்ப மாலையைச் சூடிய வேலன் வேண்ட நீ, வெறியயரும் எம் மனைக்கு வந்துள்ளாய்! அங்ஙனம் வந்த நீ, யாம் போற்றி வணங்கும் கடவுளே ஆயினும் ஆகுக! நிச்சயமாய் நீயும் அறியாமை உடையையே!

கருத்து

முருகனே! தலைவி, தலைவனோடு விரைவிலே மணம் பெற்று இன்புறுதற்கு உதவினால் இவளது நோய் தானே தீரும்.

விளக்கம்

தன்னால் ஏற்படாத ஒன்றைத் தன்னால் ஏற்பட்டது என்று வேலன்மீது ஏறிச் சொல்லும் முருகன் தெய்வமே ஆனாலும் அவன் அறியாமை உடையவனே.

தலைவி இனி இற்செறிக்கப்படுவாள் என்பதைத் தோழி குறிப்பாய் உணர்த்துகிறாள். அதனைக் கேட்கும் தலைவன் தலைவியை மணந்துகொள்ள விரைந்து முற்படுவான். வெறியாடல் முதலியவற்றைத் தாய் தந்தையர் கைவிட்டுத் தலைவி உள்ளத்தில் வீற்றிருக்கும் தலைவனுக்கு அவளை மணம் செய்விக்க இசைவர். இவையே தோழி கூற்றின் பயன்.

குறிப்பு

இப்பாடல் தோழி தெய்வத்துக்குச் சொல்வாள்போல் செவிலிக்கு அறத்தொடு நின்றதெனலாம்.

சொற்பொருள்

1. கடவுள் கல் சுனை - தெய்வம் உறையும் மலையில் உள்ள சுனை; அடை இறந்து - இலைகளின் மேலெழுந்து; அவிழ்ந்த - மலர்ந்த.
2. பறியா - கொய்யாமல் விடப்பட்ட.
3. குருதி ஒண்பூ - குருதி போல் சிவந்த ஒள்ளிய பூ; உருகெழ - உருவம் விளங்க.
4. பொற்ப - பொலிவு பெறுமாறு; சூர்மகள் - சூரர மகள்.
5. இன்இயத்து - இனிய முழக்கத்திற்கு; ஆடும் - ஆடுவள்.
6. படர் மலி - துன்பம் மிகுந்த; அருநோய் - நீக்குதற்கரிய காமநோய்.
7. நின் - (முருகனாகிய) உன்; அணங்கு அன்மை - அணங்குதலால் உண்டானது அன்று; அண்ணாந்து - தலை நிமிர்ந்து.
8. கார் நறும் - கார் காலத்தில் மலர்கின்ற நறிய; கடம்பின் கண்ணி - கடம்ப மலரால் தொடுக்கப்பட்ட தலைமாலை.
9. வெறிமனை - வெறியாடும் களத்துக்கு; வந்தோய் - வந்துள்ள முருகவேளே.
10. கடவுளே ஆயினும் ஆகுக.
11. மன்ற மடவை - நிச்சயமாய் நீ அறியாமை உடையை.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 244 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வெறியாடல் துணிந்துழி, விலக்கலுறும் தோழி செவிலி கேட்குமாற்றால் தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியின் உடலில் ஏற்பட்டுள்ள மாறுதல் தீரும்பொருட்டு வெறியாடல் எடுக்கச் செவிலி முடிவு செய்கிறாள். அவ்வெறியாடலைத் தடுக்க முயலும் தோழி, செவிலி கேட்கும் வகையில் தலைவியிடம் சொல்லியது.

அம்ம, வாழி! தோழி! பன்மலர்
நறுந்தண் சோலை நாடுகெழு நெடுந்தகை
குன்றம் பாடான் ஆயின்,
என்பயம் செய்யுமோ வேலற்கவ் வெறியே?

தெளிவுரை

தலைவியே வாழ்க! பல வகையான மலர்களைக் கொண்ட குளிர்ச்சி பொருந்திய மணமுள்ள சோலைகளைக் கொண்ட நம் தலைவனது குன்றத்தினை வேலன் பாடாவிட்டால் அவன் எடுக்கும் வெறியாட்டு அவனுக்கு என்ன பயனை அளித்திடும்? (எவ்வகைப் பயனையும் அளித்திடாது.)

கருத்து

தலைவன் மலையைப்பற்றி வேலன் பாடினால் மட்டுமே பயன் கிட்டும்.

விளக்கம்

குன்றத்தைப் பற்றிப் பாடினால் தலைவன் பெயர் கேட்டுத் தலைவி மகிழ்வாள்; வேலனுக்கும் வெறி ஆடுவதனால் உண்மை வெளிப்பட்ட பலன் கிடைக்கும். குன்றத்தைப் பற்றிப் பாடா விட்டால் இவை இரண்டும் வாய்த்தல் அரிது.

குறிப்பு

நெடுந்தகை குன்றம் என்றமையால் நெடுந்தகை ஒருவன்பால் தலைவி காதல் கொண்டுள்ளாள் என்பதும், அவன் பிரிந்துறைதலால் இவள் நோயுற்றாள் என்பதும், அந்நோய்க்கு மருந்து அந்நெடுந்தகையேயன்றி வெறியாடல் அன்று என்பதும் குறிப்பால் போந்த பொருள்.

இப்பாடல் தோழி, செவிலிக்கு அறத்தொடு நின்றது எனலாம்.

இறைச்சி

பல மலரும் குளிர்ச்சியுமுள்ள சோலை சூழ்ந்த நாட்டை உடையவன் தலைவன் என்றது, அவன் நற்குணம் பலவும் நிரம்பிக் குளிர்ந்த அறிவுமுள்ளவன் என்னும் இறைச்சிப் பொருள் தந்தது.

சொற்பொருள்

1. பன் மலர் - பல மலர்.

2. நாடுகெழு - நாட்டுக்குரிய; நெடுந்தகை - நற்குணம் நிறைந்த நம் தலைவன்.
4. என் பயம் செய்யும்? - என்ன பயனை அளிக்கும்? (எப்பயனையும் அளிக்காது).

தோழி கூற்று

ஐங்குறுநூறு 247 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வெறி விலக்கலுறும் தோழி, தமர் கேட்பத் தலைமகளை வினவுவாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வெறியாடலை விலக்க முயலும் தோழி, தம் இல்லத்தார் காதில் விழுமாறு தலைவியிடம் வினவுவாள்போலக் கூறியது.

அன்னை தந்தது, ஆகுவது அறிவன்;
பொன்நகர் வரைப்பில் கன்னம் தூக்கி,
முருகுஎன மொழியும் ஆயின்,
அருவரை நாடன் பெயர்கொலோ, அதுவே?

தெளிவுரை

"இந்த வெறியாட்டு ஏற்பாடுகளையெல்லாம் நம் தாய் செய்துள்ளாள் என்பதை நானறிவேன். பொன்போலும் அழகிய நம் வீட்டில் வேலன் வெறியாடும்போது, 'இந்நோய் முருகனால் விளைந்தது' என்று கூறுவானாயின் தலைவிக்குக் காதலனாகிய மலைநாடனது பெயர், அந்த முருகன் என்பதுதானோ?" என்று தோழி தம் இல்லத்தார் காதில் விழுமாறு தலைவியிடம் கூறினாள்.

கருத்து

தலைவி மலைநாடனைக் காதலிக்கிறாள்; இந்நோய் அவனால் ஏற்பட்டதே!

விளக்கம்

முருகன் என்பது தலைவன் பெயராய் இருக்குமோ என்று தோழி கூறுவது கேட்டுச் செவிலி முதலிய உறவினர் சிந்திக்கத் தொடங்குவர்; தெய்வக்குற்றம் அன்று என்று தெளிவர். பின், தலைவனைப் பற்றிக் கேட்பர். வெறியாடல் நிறுத்தப்படும் என்பது தோழியின் எதிர்பார்ப்பு.

குறிப்பு

இப்பாடல் செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றதாய்க் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. அன்னை தந்தது ஆகுவது - இவ்வெறியாடல் செவிலித்தாயால் நிகழ்த்தப்படுவது என்பதை; அறிவென் - நான் அறிவேன்.
2. பொன் நகர் - அழகிய நம் மனை; வரைப்பில் - எல்லையில்; கன்னம் தூக்கி - தாயத்தைக் கைக்கொண்டு.
3. முருகு என - தலைவியை அணங்கியவன் முருகன் என; மொழியு மாயின் - கூறுவானாயின்.
4. அருவரை நாடன் - அரிய மலைநாடானாகிய தலைவன்; பெயர்கொலோ அதுவே - பெயர் அதுதானோ?

தோழி கூற்று

நற்றிணை 351 **மதுரைக் கண்ணத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி அருகு அடுத்தது. (தோழி, அன்னைக்கு அருகில் சென்று கூறியது.)

கூற்று விளக்கம்

களவுக்காலத்தில் தலைவனைக் காண இயலாமல் தலைவி மெலிவுற்றாள். அவள் உடல் வேறுபாட்டிற்குக் காரணம் தெய்வம் (முருகு) வருத்தியதே என்று கருதிய அன்னை, வெறியாட்டு நிகழ்த்த முயன்றாள். அதனை அறிந்த தோழி அன்னையிடம் சென்று, 'தினைப்புனம் காக்கத்

தலைவிக்கு அனுமதி அளித்தால், அவள் இழந்த நலனை மீண்டும் பெறுவாள்' என்று கூறியது.

'இளமை தீர்ந்தனள் இவள்'என வளமனை
அருங்கடிப் படுத்தனை; ஆயினும், சிறந்துஇவள்
பசந்தனள் என்பது உணராய்; பல்நாள்
எவ்வ நெஞ்சமொடு தெய்வம் பேணி
வருந்தல் வாழிவேண்டு, அன்னை! கருந்தாள்
வேங்கைஅம் கவட்டிடைச் சாந்தின் செய்த
களிற்றுத்துப்பு அஞ்சாப் புலிஅதள் இதணத்து,
சிறுதினை வியன்புனம் காப்பின்,
பெறுகுவள் மன்னோஎன் தோழிதன் நலனே.

தெளிவுரை

அன்னையே! வாழ்க! தலைவி பெதும்பைப் பருவத்தைக் கடந்துவிட்டனள் என்று அவளை நம் வளமான வீட்டில் காவலில் வைத்தாய்; என்றாலும், அவள் தன் பழைய அழகிலே சிறப்படைந்தாள் அல்லள்; மேலும் பசலை நோய் உற்றாள். அதனால் பல நாள் நீயும் வருத்தமடைந்துள்ளாய். வருந்தாதே! வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்தினால் இவள் நோய் தீரும் என்றும் எண்ண வேண்டா. மாறாய், கரிய அடியைக் கொண்ட வேங்கை மரங்கள் நிரம்பிய அழகான குன்றத்திலே, சந்தன மரத்தால் கட்டுப்பரண் அமைக்கப்பட்டு, அது களிற்றியானைக்கும் அஞ்சாத வலிமையுள்ள புலியின் தோலால் வேயப்பட்டுள்ளது. அப்பரணிடத்திலே சென்று சிறிய தினைகளைக் கொண்ட பெரும்புனத்தை இவள் காத்திருக் கட்டும். அவ்வாறு இருந்தால் இவள் இழந்த அழகினை மீண்டும் பெறுவாள்.

கருத்து

இவள் மாற்றம், புனங்காவலின்போது ஏற்பட்ட காதலின் விளைவு என்பதைத் தோழி குறிப்பால் உணர்த்தி வெறி விலக்கினாள்.

குறிப்பு

இப்பாடல் தோழி அன்னைக்கு அறத்தொடு நின்றது எனலாம்.

இதனால் களவுறவை அறிந்த அன்னை, அதுபற்றிய விவரங்களை மேலும் ஆராய்ந்து, அவனோடு தலைவியை மணவினைப்படுத்தி மகிழ்வாள்.

சொற்பொருள்

1. இளமை தீர்ந்தனள் - பேதைப்பருவத்தைக் கடந்துவிட்டாள்.
2. கடிப்படுத்தனை - காவலுக்கு உட்படுத்தினாய்.
3. பல்நாள் - பல நாள்.
4. எவ்வம் - துன்பம்.
5. கருந்தாள் - கரிய அடிமரம்.
6. வேங்கை - வேங்கை மரம்; கவடு - கிளை; சாந்து - சந்தன மரம்.
7. துப்பு - வலிமை; புலிஅதள் - புலித்தோல்; இதணம் - பரண்.
8. வியன்புனம் - பெரிய புனம்; காப்பின் - காக்கச்செய்தால்.
9. என் தோழி - என் தோழியாகிய தலைவி.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 241 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இற்செறித்தவழித் தலைமகட்கு எய்திய மெலிவு கண்டு, 'இஃது எற்றினானாயிற்று' என்று வேலனைக் கேட்பத் துணிந்துழி, அறத்தொடு நிலை துணிந்த தோழி, செவிலி கேட்குமாற்றால் தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

மகளுக்கு மெலிவு எதனாலாயிற்று என்று செவிலி குறி சொல்பவனை அழைத்துக் கேட்க, அவன் தெய்வத்தினாலாயிற்று என்றான். அத்தெய்வக் குறையை நீக்கத் தாய், வேலனை அழைத்து வெறியாடல் நிகழ்த்தக் கருதினாள். அது கண்ட தலைவி மிகவும் நாணினாள். தோழியிடம், தன் களவொழுக்கத்தைத் தாய்க்குணர்த்தி வெறியாட்டினை விலக்கும்படி குறிப்பால் உணர்த்தினாள்; அவ்வாறே தோழி, செவிலி கேட்குமாறு உண்மையைத் தலைவியிடம் கூறியது.

நம்உறு துயரம் நோக்கி, அன்னை
வேலன் தந்தாள் ஆயின்,அவ் வேலன்
வெறிகமழ் நாடன் கேண்மை
அறியுமோ தில்ல? செறிஎயிற் றோயே!

தெளிவுரை

நெருங்கின பற்களைக் கொண்ட தலைவியே! நாம் எய்தியுள்ள துயரத்தை அன்னை கண்டு, அதன் காரணம் அறிதற்பொருட்டு, வெறியெடுத்தற்கு வேலனை வரவழைத்துள்ளாள். அவ்வேலன், மணம் கமழும் நாடனொடு நாம் கொண்டுள்ள நட்பினை அறிந்து கூற வல்லவனோ? (வல்லவன் அல்லன்.)

கருத்து

வேலன் நம் களவுக்காதலைச் சொல்ல வல்லவனோ?

குறிப்பு

தாய், நம் துயர்க்குக் காரணமான நாடனை அழைக்காது அயலானாகிய வேலனை அழைத்துள்ளாள்.

சொற்பொருள்

2. வேலன் தந்தாள் ஆயின் - வெறியாடும் வேலனை அழைத்துக் கேட்பாளாயின்.
3. வெறிகமழ் - மணம் கமழுகின்ற; கேண்மை - உறவு, நட்பு.
4. அறியுமோ - அறிந்து கூற வல்லவனோ; செறி எயிறு - நெருங்கிய பற்கள்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 182 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகள் மெலிவு கண்டு தெய்வத்தாலாயிற்றெனத் தமர் நினைந்துழித் தோழி அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தலைவியின் மெலிவு கண்ட செவிலி, கட்டினும் கழங்கினும் பார்த்து, இவளுக்கு இந்நோய் தெய்வத்தால் ஆனது என ஐயுற்று, வேலனுக்கு வெறியாட்டெடுக்க முயலுதல் கண்ட தோழி, அந்நோய் மனிதன் ஒருவனால் ஏற்பட்டது என்று உண்மையைக் கூறியது.

நெய்தல் நறுமலர் செருந்தியொடு விரைஇக்
கைபுனை நறுந்தார் கமழும் மார்பன்
அருந்திறல் கடவுள் அல்லன்;
பெருந்துறைக் கண்டு,இவள்அணங்கி யோனே.

தெளிவுரை

பெருந்துறையினிடத்தே இவளைக் கண்டு வருத்தமுறச் செய்தவன் ஆற்றல் மிக்க வேலன் அல்லன்; நெய்தலின் நறிய மலரைச் செருந்தி மலரோடும் கலந்து அழகாய்ப் புனையப்பட்ட மாலை கமழும் மார்பினைக் கொண்ட மனிதனே ஆவான்.

கருத்து

தலைவிக்கு நோய் கடவுளால் ஏற்பட்டதன்று; மாலையணிந்த மார்பினைக் கொண்ட மனிதனால் ஏற்பட்டது.

சொற்பொருள்

1. செருந்தி - ஒருவகை மலர்; விரைஇ - கலந்து.
2. கைபுனை - அழகாய்ப் புனையப்பட்ட; தார் - மாலை; கமழும் - மணம் வீசும்.
3. அருந்திறல் - ஆற்றல் மிக்க.
4. பெருந்துறை - பெரிய நீர்த்துறை; அணங்கியோன் - வருத்தியவன்.

தோழி கூற்று

குறுந்தொகை 214 **கூடலூர் கிழார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி, வெறியாட்டு எடுத்துக்கொண்டவிடத்து அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தலைவி உடலில் ஏற்பட்ட வேறுபாடு கண்டு வெறியாட்டெடுத்தனர். அப்போது தோழி, 'இவளுக்குத் தழையுடை தந்து அன்பு செய்தவன் ஒருவன்; அதனை அறியாது இது முருகனால் ஏற்பட்டது என மயங்கி வெறியெடுப்பதனால் பயனில்லை' என்று கூறியது.

மரங்கொல் கானவன் புனம்துளர்ந்து வித்திய
பிறங்குகுரல் இறடி காக்கும், புறம்தாழ்
அம்சில் ஓதி, அசைஇயல், கொடிச்சி
திருந்துஇழை அல்குற்குப் பெருந்தழை உதவிச்
செயலை முழுமுதல் ஒழிய, அயலது
அரலை மாலை சூட்டி,
ஏமுற் றன்றுஇவ் அழுங்கல் ஊரே.

தெளிவுரை

மரங்களை வெட்டியெடுத்துக் கொல்லையை உழுது தினை விதைத்தான், கானவன். அதில் வளர்ந்து முற்றிய கதிரைக் கொண்ட தினைப்பயிரை, முதுகிலே தொங்குகின்ற முடிக்கப் பெற்ற அழகிய கூந்தலையும், அசைந்த நடையையும் கொண்ட இக்கொடிச்சி காவல் செய்கிறாள். திருத்தமான அணிகலன்களை அணிந்துள்ள இவளது அல்குலில் அணிவதற்குத் தழையாடை தரத் தலைவனுக்குத் தழைகளைத் தந்து உதவியது, ஓர் அசோக மரம்; அவ்வாறு தந்து தந்து தன் பெருத்த அடிமரம் முழுதும் தழையற்றதாய் நிற்கின்றது. அதனைக் கவனியாது, ஆரவாரமிக்க நம் ஊர், அதற்கு அருகேயுள்ள அரளி மலர்களைப் பறித்து, மாலை தொடுத்து, முருகனுக்கு அணிவித்து, வெறியெடுத்து மயங்குகின்றது.

கருத்து

தழையுடை தந்தவனால் தலைவி வருந்துகின்றாள் என்பதை அவள் சுற்றத்தார் அறியவில்லை.

குறிப்பு

தலைவி தினைப்புனம் காக்கும் காலத்தில் தலைவனொருவன் அங்கு வந்து அசோகத் தழையாடை தந்து, அவளோடு அளவளாவிச் சென்றான் என்பதைத் தோழி உணர்த்தினாள்.

சொற்பொருள்

1. மரங்கொல் - மரங்களை வெட்டிய; புனம் துளர்ந்து - நிலத்தை உழுது.
2. பிறங்கு குரல் - விளங்குகின்ற கதிரைக் கொண்ட; இறடி காக்கும் - தினையினைக் காத்துக்கொண்டிருந்த; புறம் தாழ் - புறத்திலே தொங்குகின்ற.
3. ஓதி - கூந்தல்; அசை இயல் - அசைந்த நடை; கொடிச்சி - குறப்பெண் (தலைவி).
4. திருந்து இழை - சிறந்த அணிகலன்கள்; பெருந்தழை உதவி - (தழை யுடையைத் தந்த தலைவனுக்கு) மிகுந்த தழையைத் தந்து.
5. செயலை - அசோகு; முழு முதல் ஒழிய - அடிமரம் முழுவதும் தழையற்றதாய் நிற்க; அயலது - அருகில் உள்ள.
6. அரலை - அரளி மலர்.
7. ஏமுற்றன்று - மயங்கி வருந்துகின்றது; அழுங்கல் ஊர் - துன்பத்தைக் கொண்ட ஊர்.

தோழி கூற்று

குறுந்தொகை 362 **வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வெறி விலக்கித் தோழி அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

வேலன் வெறியாட்டெடுத்தபோது அவனைப் பரிகசிக்கக் கருதிய தோழி, "இப்பலியை அந்நோய்க்குக் காரணமாகிய தலைவனது மார்பும் உண்ணுமோ?" எனக் கேட்டு, தலைவன் மார்பே இவளுக்கு நோய் தந்தது என்று கூறியது.

முருகுஅயர்ந்து வந்த முதுவாய் வேல!
சினவல் ஓம்புமதி; வினவுவது உடையேன்;
பல்வேறு உருவின் சில்அவிழ் மடையொடு
சிறுமறி கொன்று,இவள் நறுநுதல் நீவி,
வணங்கினை கொடுத்தி ஆயின், அணங்கிய
விண்தோய் மாமலைச் சிலம்பன்
ஒண்தார் அகலமும் உண்ணுமோ, பலியே?

தெளிவுரை

முருகனை வழிபட்டு இங்கு வெறியாடுவதற்கு வந்துள்ள அறிவுமிக்க வேலனே! என்மீது சினங்கொள்வதைத் தவிர்! உன்னிடம் ஒன்று கேட்பேன்! பல்வேறு நிறங்களைக் கொண்ட தானியத் திரளுடன் சிறிது சோற்றையும் படையலிட்டுள்ளாய். சிறிய ஆட்டுக்குட்டியைக் கொன்று, இரத்தம் படிந்த மண்ணை இவள் நெற்றியில் தடவி முருகனை வணங்கிப் பலி கொடுக்கின்றாய். இப்பலியை இவளைத் தன் காதல் நோயால் வருத்தியுள்ள வானளாவிய பெரிய மலையைக் கொண்ட தலைவனது ஒளி பொருந்திய மாலையை அணிந்துள்ள மார்பும் உண்ணுமோ?

(உண்மையில் நோய்க்குக் காரணமாய் உள்ள தலைவனது மார்புக்கன்றோ பலி கொடுத்திருக்க வேண்டும்.)

கருத்து

முருகனால் இவளுக்கு நோய் ஏற்பட்டதன்று; மலைநாட்டுத் தலைவன் ஒருவனால் ஏற்பட்டுள்ளது. அவ்வாறிருக்க முருகனுக்குப் பலி கொடுப்பது ஏன்?

சொற்பொருள்

1. முருகு - முருகனை; அயர்ந்து - வணங்கி; முதுவாய் - அறிவுள்ள.
2. சினவல் - சினங் கொள்வதை; ஓம்புமதி - தடுத்துக்கொள்வாய்!
3. பல்வேறு உருவின் - பல வகையான நிறத்தினைக் கொண்ட; சில் அவிழ் மடையொடு - சிறு சோற்றுப்பலியுடன்.
4. சிறு மறி - சிறிய ஆட்டுக்குட்டி.
5. வணங்கினை - வணங்கி; கொடுத்தி ஆயின் - (முருகனுக்குப்) பலி கொடுப்பாயானால்; அணங்கிய - இவளை வருத்திய.
6. சிலம்பன் - மலைநாட்டுத்தலைவன்.
7. அகலமும் - மார்பும்; உண்ணுமோ - (அப் பலியை) ஏற்றுக் கொள்ளுமோ?

தோழி கூற்று

ஐங்குறுநூறு 28 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

இற்செறித்தவிடத்துத் தலைமகட்கு எய்திய வேறுபாடு கண்டு, 'இது தெய்வத்தினான் ஆயிற்று' என்று தமர் வெறி எடுப்புழி, அதனை விலக்கக் கருதிய தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தலைவியின் உடல் மெலிவதனை அறிந்த பெற்றோர் அவளை வீட்டை விட்டு வெளியே செல்லாமல் தடுத்து வைத்தனர். மேலும் அவர்கள், 'இது தெய்வக்கோளாறு' என்று கருதி, அருளாடும் வேலனை அழைத்து வெறியாட்டுக்கு ஏற்பாடு செய்தனர். அப்போது அதனைத் தடுக்கக் கருதிய தோழி, தலைவன் தலைவியர் களவொழுக்கத்தைச் செவிலித்தாயிடம் வெளிப்படுத்தி அறத்தொடு நின்றது.

உண்துறை அணங்குஇவள் உறைநோய் ஆயின்,
தண்சேறு கள்வன் வரிக்கும் ஊரற்கு
ஒண்தொடி நெகிழச் சாஅய்,
மென்தோள் பசப்பது எவன்கொல்? அன்னாய்!

தெளிவுரை

அன்னையே! இவள் உற்ற நோய்க்குக் காரணம், நீருண்ணும் துறையில் தங்கியுள்ள தெய்வந்தான் என்று நீயும் கருதினை; அவ்வாறாயின் குளிர்ச்சி பொருந்திய சேற்றிலே ஊர்ந்து நண்டு கோலமிடும் ஊருக்கு உரியவனாகிய தலைவன் பொருட்டு, இவள் ஒளி பொருந்திய வளையல்கள் நெகிழும்படி உடல் மெலிவுற்றும், மென்மையான தோள்கள் பசலையுற்றும் வருந்துவது எதனால்? (ஏனோ?)

கருத்து

இவளுக்கு நோய் நீர்த்துறைத் தெய்வத்தான் ஏற்பட்டதன்று, தலைவன் ஒருவனால் நேர்ந்தது.

குறிப்பு

இவளுற்ற நோய்க்குத் தெய்வம் காரணமாயின் ஊரன்பொருட்டு இவள் மெலிவதும் பசலையுறுவதும் இல்லையென்றாகும். எனவே, இவள் வேறுபாடு தலைவனிடம் கொண்டுள்ள காதல் காரணமாய் நேர்ந்துள்ளது என்னும் உண்மையைத் தோழி அறிவிக்கிறாள்.

சொற்பொருள்

1. உண்துறை - நீர் உண்ணும் துறை; அணங்கு - தீண்டி வருத்தும் தெய்வம்; உறைநோய் - உற்ற நோய்; ஆயின் - காரணம் என்றால்.
2. கள்வன் - நண்டு; வரிக்கும் - (வரிகளாய்க்) கோலமிடும்.
3. ஒண்தொடி - ஒளி பொருந்திய வளையல்; சாஅய் - உடல் மெலிந்து.
4. எவன்? - எதனால்?; அன்னாய் - தாயே.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 210 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

காப்பு மிகுதிக்கண் தலைமகள் மெலிவு கண்டு தெய்வத்தினானாயிற்று என்று வெறியெடுப்புழித் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தலைவி, வீட்டுக்காவலில் வைக்கப்பட்டாள்; காவலின் கடுமையால் உடல் மெலிந்தது. செவிலி அது தெய்வத்தின் கோபத்தினால் ஏற்பட்டதென்று வெறி எடுக்க முயன்றாள். அப்போது தோழி, செவிலியிடம் தலைவியின் களவை வெளிப்படுத்தி அறத்தொடு நின்றது.

அன்னாய், வாழி!வேண்டு அன்னை! நம்படப்பைப்
புலவுச்சேர் துறுகல் ஏறி, அவர்நாட்டுப்
பூக்கெழு குன்றம் நோக்கி நின்று,
மணிபுரை வயங்கிழை நிலைபெறத்
தணிதற்கும் உரித்து,அவள் உற்ற நோயே.

தெளிவுரை

அன்னையே, கேள்! தலைவி, நம் வீட்டுத்தோட்டத்திலுள்ள புலால் நாற்றம் வீசும் சொரசொரப்பான குண்டுக்கல்லின்மேல் ஏறி நின்று, தலைவன் நாட்டில் உள்ள பூக்கள் நிறைந்த குன்றத்தை நோக்கினாள் என்றால் நீலமணிபோலும் ஒளிரும் அவள் அணிகள் கழன்று விழா. அணிகள் நின்ற நிலையிலே நிற்பதற்கும் அவள் அடைந்துள்ள நோயைத் தணிப்பதற்கும் இதுவே வழி.

கருத்து

அன்னையே! தலைவியை, தலைவன் நாட்டு மலையைக் காணுமாறு செய்தால் அவள் நோய் தீரும்.

குறிப்பு

'தலைவன் நாட்டு மலையைப் பார்த்தால் அவனையே பார்த்ததுபோலத் தலைவி மகிழ்வாள். இப்போது தலைவி வெளியே போக இயலாமல்

வீட்டில் சிறை வைக்கப்பட்டிருக்கிறாள். காவலைத் தளர்த்தி, அவளைத் தோட்டத்துப் பக்கம் செல்லவிட்டால் அவளது வருத்தம் தீரும்' எனக் கூறித் தலைவியின் களவொழுக்கத்தைத் தோழி வெளிப்படுத்தினாள்.

சொற்பொருள்

1. படப்பை - தோட்டம்.
2. புலவுச் சேர் - புலால் நாற்றம் வீசும்; துறுகல் - குண்டுக்கல்.
4. மணிபுரை - நீல மணி போன்ற; இழை - அணிகள்; நிலைபெற - கழன்று விழாது நிலைபெற்றிருக்க.
5. தணிதல் - குறைதல்; உரித்து - உரியது.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 13 **மூவாதியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வெறியாட்டெடுத்துக்கொண்டவிடத்துத் தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தலைவனுடன் கொண்ட தொடர்பினால் தலைவியின் மேனி வேறுபடுகிறது. அது தெய்வக்குற்றத்தால் ஏற்பட்டது எனக் கருதிப் பெற்றோர் வேலனை அழைத்து வெறியாடுதலைச் செய்ய முனைந்தனர். அப்போது தலைவி தோழியிடம் நிகழ்ந்ததைக் கூறினாள். பின் செவிலியிடம் கூறி வெறியை விலக்குமாறு சொல்லியது.

வார்குரல் ஏனல் வளைவாய்க் கிளைகவரும்
நீரால் தெளிதிகழ் காநாடன் கேண்மையே
ஆர்வத்தின் ஆர முயங்கினேன் வேலனும்
ஈர வலித்தான் மறி.

தெளிவுரை

"தோழியே! நீண்ட தினைக்கதிர்களை வளைந்த வாய் கொண்ட கிளிகள் கவர்ந்து செல்லாதிருக்க என்னை என் தமையன்மார் தினைப்புனங் காவலுக்கு நிறுத்தினர். அதனால்

சோலைகளைக் கொண்ட மலைநாட்டிற்கு உரியவனுடன் நட்பு ஏற்பட்டது; அவனை விரும்பி ஆரத் தழுவினேன். அதனால் என் மேனியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அது தெய்வத்தால் உண்டானது எனக் கருதி வெறியாடல் நிகழ்த்த அன்னை தேவராளனை அழைத்துள்ளாள். கையிலே வேலைக்கொண்டு ஆடும் அவனும் ஆட்டுக்குட்டியை அறுத்துப் பலி தந்து வெறியாடத் துணிந்துவிட்டான். எனவே, தோழி, நீ போய் உண்மையைச் சொல்லி, வெறியாடலைத் தடுத்து நிறுத்து" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

தலைவியை வருத்தினவன் கட்டிளங்காளை ஒருவனே அன்றித் தெய்வம் அன்று.

சொற்பொருள்

1. வார் - நீண்ட; குரல் - கதிர்; ஏனல் - தினை; கிளை - கிள்ளை - கிளி; கவரும் - பற்றிச் செல்லும்.
2. நீரால் - தன்மையினால்; தெளிதிகழ் - விளக்கமாய்த் திகழ்கின்ற; கா - சோலை; கேண்மை - நட்பு.
3. ஆர - மிகுதியும்; முயங்கினேன் - தழுவினேன்; வேலனும் - வெறியாடுபவனாகிய வேலனும்.
4. மறி - ஆட்டுக்குட்டியை; ஈர வலித்தான் - அறுக்கத் துணிந்து விட்டான்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 12 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வெறி விலக்கித் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தலைவனுடன் கொண்ட களவு ஒழுக்கத்தால் தலைவியின் உடல் வேறுபட்டது. அது தெய்வக்குற்றத்தால் உண்டானது என வெறியாடல் நிகழ்த்த முயன்றனர். அதை அறிந்த தோழி, தலைவிக்கு நேர்ந்ததைச் சொல்லி வெறியாடலை நிறுத்தி அறத்தொடு நின்றது.

வேலனார் போக, மறிவிடுக்க, வேரியும்
பாலனார்க்(கு) ஈக, பழியிலாள் – பாலால்
கடும்புனலின் நீந்திக் கரைவைத்தாற்(கு) அல்லால்
நெடும்பணைபோல் தோள்நேராள் நின்று.

தெளிவுரை

"வெறியாடுதற்கு வந்த வேலன் அதனைச் செய்யாது நீங்கட்டும்! பலி தருதற்குக் கொண்டுவரப்பட்ட ஆட்டுக்குட்டியினையும் விட்டுவிடுக! வழிபாட்டிற்காகக் கொணரப்பட்ட கள்ளினையும் அதனை அருந்துபவர்க்கு அளித்துவிடுக! அன்னையே! குற்றமற்ற என் தலைவி நீ கருதுவதைப் போன்று தெய்வக்குறையால் மாறுபட்டவள் அல்லள். நீண்ட மூங்கில் போன்ற தோள்களைக் கொண்ட தலைவி, விரைவாய்ச் செல்லும் ஆற்றுநீரில் அடித்துக்கொண்டு போகப்பட்டாள். ஊழ்வினையால் அவளை ஒருவன் ஆற்றுநீரில் பாய்ந்து காப்பாற்றிக் கரை சேர்த்தான். தன்னைக் கரை சேர்த்த அவனையல்லால் தலைவி வேறெவரையும் மணம் செய்துகொள்ளாள்" எனத் தோழி செவிலியிடம் கூறினாள்.

கருத்து

அன்னையே! ஆறு அடித்துச் சென்ற தன்னைக் காப்பாற்றியவனையே தலைவி மணப்பாள். வெறியாட்டை நிறுத்துக.

சொற்பொருள்

1. வேலனார் - வெறியாட வந்துள்ள வேலன்; போக - செல்க; மறி - ஆட்டுக்குட்டி; வேரி - கள்.
2. பாலனார்க்கு - (அதனை) உண்ணும் பான்மையுள்ளவர்க்கு; ஈக - கொடுத்துவிடுக; பழியிலாள் - குற்றம் எதுவுமில்லாத என் தலைவி; பால்ஆல் - ஊழ்வினையினால்.
3. கடும் புனலின் - விசையோடு செல்லும் ஆற்றுநீரில்; கரை வைத் தாற்கு - கரையில் கொண்டுவந்து சேர்த்த தலைவனுக்கு.
4. நெடும் பணை - நீண்ட மூங்கில்; தோள் நேராள் - தோளினை நல்க மாட்டாள்.

தலைவி கூற்று

குறுந்தொகை 385 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வேற்று வரைவு (பிறர் மணக்க வருவதை) மாற்றியது.

கூற்று விளக்கம்

தலைவியின் காதலை அறியாத வேற்றுவர் அவளை மணம் பேச வந்தனர். இதனையறிந்த தலைவியின் உள்ளம் பெரிதும் கொதிப்படைந்து வேற்று வரவை மாற்றத் தோழியிடம் கூறியது.

பலவில் சேர்ந்த பழம்ஆர் இனக்கலை
சிலைவிற் கானவன் செந்தொடை வெரீஇச்
செருஉறு குதிரையின் பொங்கிச் சாரல்
இருவெதிர் நீடுஅமை தயங்கப் பாயும்
பெருவரை அடுக்கத்துக் கிழவன் என்றும்
அன்றை அன்ன நட்பினன்
புதுவோர்த்து அம்மஇவ் அழுங்கல் ஊரே.

தெளிவுரை

பலா மரத்தில் ஆண்குரங்குக் கூட்டம் பழங்களை உண்ணு கின்றன. சிலை மரத்தால் செய்த வில்லையுடைய ஒரு வேட்டுவன் அங்கு வந்தான். குறி தவறாத செம்மைமிக்க அம்புக்கு அஞ்சிய குரங்குகள் போர்க்களத்தில் சினம் பொங்கிப் பாயும் குதிரைகளைப்போல, மலைச்சாரலிலுள்ள பெரிய மூங்கிலின் உயரமாய் நீண்ட கொம்பு அசையுமாறு, பொங்கி எழுந்து பாயும். இத்தகைய காட்சி கொண்ட மலை அடுக்கத்திற்குரிய தலைவன் என்றும் முதல் நாள் காட்டிய அதே நட்புக் கொண்டவனாயுள்ளான். ஆனால், ஆரவாரமுள்ள ஊரோ புதியவர்களிடம் மணம் பேச ஆராய்கிறது. (தலைவி இவ்வாறு தோழிக்குக் கூறி, அறத்தொடு நின்று தன் காதலனையே மணக்க உதவ வேண்டுகிறாள்.)

கருத்து

புதியவர், தன்னை மணம்பேச வந்ததை அறிந்த தலைவி, தன் தோழியிடம் அறத்தொடு நின்று வேற்று வரைவை மாற்றுமாறு வேண்டினாள்.

குறிப்பு

பலா மரத்திலிருந்து குரங்குகள் மூங்கிலின்பேரில் பாய்வதற்குப் போர்க்களக் குதிரைகளின் பாய்ச்சல் சிறந்த உவமை.

சொற்பொருள்

1. பலவில் - பலா மரத்தில்; பழம்ஆர் - பழங்களை உண்ணுகின்ற; இனக்கலை - ஆண்குரங்குக் கூட்டம்.
2. சிலைவில் - சிலை மரத்தாற் செய்யப்பட்ட வில்; கானவன் - வேட்டுவன்; செந்தொடை - செம்மை மிக்க அம்பு; வெரீஇ - அஞ்சி.
3. செருஉறு - போர்க்களத்தில் சேர்ந்த; பொங்கி - மேலெழுந்து; சாரல் - மலைப்பக்கம்.
4. இரு - பெரிய; வெதிர் - மூங்கில்; அமை - உச்சிக்கொம்பு; தயங்க - அசைய.
5. பெருவரை - பெரிய மலை; அடுக்கம் - சாரல்; கிழவன் - உரியவன் (தலைவன்).
6. அன்றை - அன்றைய நாள் (இயற்கைப் புணர்ச்சி நாள்).
7. புதுவோர்த்து - புதியவர்களையுடையது.

தலைவி கூற்று

கலித்தொகை 114 **சோழன் நல்லுருத்திரன்**

திணை : முல்லை

கூற்று

'பிறர் வரைவு மறுத்து, தலைவன் வரையுமாறு நீ கூறு' எனத் தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவி, தன்னை வேறொருவனுக்குத் தன் சுற்றத்தார் மணம் செய்விக்க ஏற்பாடு செய்துள்ளதாகவும், அச்செயல் தன் கற்புக்கும் குடிப்பிறப்புக்கும்

ஏற்றதன்று எனவும் தன் தோழியிடம் கூறி, தன்னோடு களவொழுக்கம் கொண்ட தன் தலைவன் தன்னை மணந்துகொள்ளச் செய்யுமாறு தோழியை வேண்டி, அவளைத் தலைவனிடம் தூதாய் அனுப்பியது.

தலைவி

வாரி, நெறிப்பட்டு, இரும்புறம் தாஅழ்ந்த
ஓரிப் புதல்வன் அழுதனன் என்பவோ –
புதுவ மலர்தைஇ, எமர்என் பெயரால்,
வதுவை அயர்வாரைக் கண்டும், 'மதியறியா
ஏழையை' என்றுஅகல நக்கு,வந் தீயாய்நீ –
தோழி! அவனுழைச் சென்று!

தோழி

சென்றுயான் அறிவேன்; கூறுக, மற்றுஇனி;

தலைவி

சொல்அறியாப் பேதை, மடவை,மற்று எல்லா!
நினக்குஒரூஉம்; மற்றுஎன்று அகல்அகலும்; நீடின்று;
நினக்கு வருவதாக் காண்பாய்; அனைத்துஆகச்
சொல்லிய சொல்லும் வியங்கொளக் கூறு.

தருமணல் தாழப்பெய்து, இல்பூவல் ஊட்டி
எருமைப் பெடையோடு, எமர்ஈங்கு அயரும்
பெருமணம் எல்லாம் தனித்தே ஒழிய –

வரிமணல் முன்துறைச் சிற்றில் புனைந்த
திருநுதல் ஆயத்தார் தம்முள் புணர்ந்த
ஒருமணம் தான்அறியும்; ஆயின், எனைத்தும்
தெருமரல் கைவிட்டு இருக்கோ – அலர்ந்த
விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்

அருநெறி ஆயர் மகளிர்க்கு
இருமணம் கூடுதல் இல்இயல்பு அன்றே?

தெளிவுரை

தலைவி : *தோழியே! நம் சுற்றத்தார் எனக்குப் புதுமலர்கள் சூடி யாருக்கோ திருமணம் செய்ய ஏற்பாடு செய்கின்றனர். இதைக் கண்ட பிறகும் தலைவன் வீட்டார், கோதிக் கொண்டையிட்டுப்*

பெரிய முதுகில் தாழ்ந்து கிடக்கின்ற தலைமுடியைக் கொண்ட எம் புதல்வன் அழுகிறான் என்று கூறுவார்களா? (தலைவன் இன்னும் குழந்தையா?) ஆதலால், நீ அவனிடம் சென்று, 'திருமணம் உன்னை விட்டு அகல்கிறது. அது உனக்கே ஆகுமாறு வரைந்துகொள்ளும் மதியில்லாதவனாய் இருக்கின்றாய்!' என்று எள்ளி நகையாடி வா!

தோழி : நான் சென்று தலைவனது நிலையை அறிந்து வருவேன். அவனிடம் நான் இன்னும் என்ன கூறவேண்டும்?

தலைவி: "இளையவளே! அவனிடம் சென்று, அவனை நோக்கி, 'உன் பெற்றோரிடம் இத்திருமணம் எனக்கே அமைய வேண்டும் என்று சொல்ல அறியாமல் பேதையாய் நிற்கிறாயே! நீ இவ்வாறிருந்தால் நீ காதலித்தவளை வேறு எவரோ திருமணம் செய்துகொள்ளவிருப்பதை நீ விரைவில் பார்க்க நேரிடும். நீ காதலித்தவளுக்குத் திருமணம் உன்னோடு அமையாமல் நீங்கும். நீ மனம் வைத்தால் அவள் திருமணம் பிறரோடன்றி உன்னோடு நிகழும்; இல்லையேல் உன்னைவிட்டு ஒருபடியாய் நீங்கிவிடும்' என்று உள்ளத்தில் பதியும்படி அவனிடம் கூறி வா. அவனிடம் சொல்லும் இச்சொற்களை, அவனிடம் வரைவுகடாவிய சொற் களாய்க் கருதாமல் உடனே செயலாற்றுதற்காகக் கூறியவை என அவன் கருதும்படி கூறு."

மேலும் அவளிடம், "மணல் கோலமிட்டிருக்கும் ஆற்றங்கரை யில் நீர்த்துறைக்கு அருகில் தோழியரோடு சிற்றில் இழைத்து விளையாடிக்கொண்டிருந்தபோதுதான் என்னைத் தனியே சந்தித்துக் காதல் கொண்டான். நானும் அவனையே மணந்து கொள்ள முடிவு செய்தேன். இதனை அவன் நினைந்திருந்தால் இப்படி நான் வாடி அழியக் கைவிட்டிருப்பானா?

"இப்போது நம் இல்லத்தார், வீட்டு முற்றத்தில் மணல் பரப்பி, சுவர்களுக்குச் செம்மண் பூசி, பெண் எருமைக் கொம்பை நிறுத்தி என் திருமணத்தை நடத்த முற்பட்டுள்ளனர்.

"நான் மணந்துகொள்ள விரும்பிய தலைவனையன்றி வேறொருவனை மணம் புரிவது இருவரை மணந்துகொள்வது போன்றதன்றோ!

"அலைகடலை ஆடையாய் உடுத்திய இப்பெரிய உலகத்தையே பெறினும் ஆய மகளிர்க்கு இது பொருந்துமோ? நம் குடிப் பிறப்பும் கற்பும் அழியுமல்லவா? திகைப்பின்றி அமைதியாய்க் கூறி வா" என்று தலைவி கூறினாள்.

கருத்து

"ஆற்றங்கரையோரம் மணல்வீடு கட்டி விளையாடியிருந்தபோது அவன் என்னைச் சந்தித்துக் காதல் கொண்டான். நானும் அவனையே மணந்துகொள்ள முடிவு செய்தேன். வீட்டில் இப்போது எனக்கு வேறொருவனோடு திருமணம் செய்ய ஏற்பாடு செய்துகொண்டிருக் கின்றனர். உலகத்தையே பெறுவதாய் இருந்தாலும் சிறந்த குடிப்பிறந்த மகளிர் தாம் விரும்பியவனையன்றி வேறொருவனைத் திருமணம் செய்து கொள்ளார். இதனைத் தலைவனிடம் சொல்லி அவன் தன் பெற்றோருடன் மணம் பேச வரவேண்டும்; இச்செயலை உடனேயே மேற்கொள்ள வேண்டும்" என்று அவனிடம் கூறி வருமாறு தலைவி தோழியிடம் செப்புகிறாள்.

குறிப்பு

பலமுறை வரைவு கடாவியும் பயனின்றிப் போயினமையால் இறுதியாகத் தலைவனிடம் நேரிற் சென்று கூறி வருமாறு தோழியிடம் தலைவி கேட்டுக் கொண்டாள்.

சொற்பொருள்

1 வாரி - கூந்தலைச் சீவி; நெறிப்பட்டு - நெறிப்படுத்தி; இரும்புறம் தாஅழ்ந்த - பெரிய முதுகில் தொங்க விட்டு.
2. ஓரி - தலைமயிர்.
3. தைஇ - சூட்டி; எமர் - என் உறவினர்.
4. வதுவை - திருமணம்; அயர்வாரை - ஏற்பாடுகளைச் செய்வாரை.
4-5.மதியறியா ஏழை - வழியை அறியாத அறிவற்றவன்.
5. அகல நக்கு - எள்ளி நகையாடி; வந்தீயாய் - வருக.
6. உழை - இடம்.
8. சொல் அறியா - சொல்லத் தெரியாது (இத்திருமணம் எனக்கே ஆக வேண்டும் என்று)
9. ஒரூஉம் - நீங்கும்; அகல் அகலும் - இத்திருமணம் உன்னைவிட்டு ஒருபடியாய் அகன்றுவிடும்; நீடின்று - காலத்தை நீட்டிக்காமல் உடனே செயற்படு.

10. நினக்கு வருவதாக - திருமணம் உன்னோடு நிகழ்வதாய்.
11. வியங்கொள - விளங்கும்படியாய், உள்ளத்தில் பதியும்படியாய்.
12. தருமணல் - கொண்டுவந்த புதுமணல்; தாழப் பெய்து - பரப்பி; இல் பூவல் ஊட்டி - சுவர்களில் செம்மண் பூசி.
13. எருமைப் பெடை என்பது பெண் எருமைக் கொம்பைக் குறிக்கிறது.
15. வரிமணல் - அழகினைக் கொண்ட மணல்; சிற்றில் - மணல்வீடு.
16. புணர்ந்த - கூடிய.
18. தெருமரல் - திகைத்தல், வருந்துதல்.
19. விரிநீர் - கடல்; உடுக்கை - ஆடை.
20. அருநெறி - அறநெறி.
21. இல் இயல்பு - உயர்குடி ஒழுக்கம்.

தலைவி கூற்று

கலித்தொகை 54 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

'கைபட்டுக் கலங்கிய வருத்தத்தைக் களைந்தேன் என உரை' எனத் தோழிக்கு உரைத்தற்கண் தலைமகள் கூறியது. அது நொதுமலர் வரைவிற்கு மணமுரசு இயம்பிய வழி ஆண்டானும், பிறவாண்டானுந் தோழிக்கு, 'இன்னவாறு கூட்டம் நிகழ்ந்தது' எனக் கூறி, அதனை 'நமர் அறியக் கூறல்வேண்டும்' என்றும், 'தலைமகற்கு நம் வருத்தம் அறியக் கூறல் வேண்டும்' என்றும் தலைமகள் கூறுதற்கண் நிகழ்வது. (கைபட்டுக் கலங்குதல் - கையகப்பட்டுக் கலங்குதல் - தலைமகள், தலைமகனது அன்பினால் முழுமையாய் ஈர்க்கப்பட்டு அவனது பிரிவால் வருந்துதல்.)

கூற்று விளக்கம்

பெற்றோர் தனக்குரிய திருமண ஏற்பாடுகளைச் செய்யக் கண்ட தலைவி, தான் தலைவனின் வசமாய்விட்ட நிலையினைத் தாயிடம் சொல்லி, அவனுக்கே தன்னை மணமுடிக்க வற்புறுத்துமாறு தோழியிடம் வேண்டியது.

'கொடியவும் கோட்டவும் நீர்இன்றி நிறம்பெறப்
பொடிஅழல் புறந்தந்த பூவாப்பூம் பொலன்கோதை,
தொடிசெறி யாப்புஅமை அரிமுன்கை, அணைத்தோளாய்!
அடியுறை அருளாமை ஒத்ததோ, நினக்கு?'என்ன,

நரந்தம்நாறு இருங்கூந்தல் எஞ்சாது நனிபற்றிப்
பொலம்புனை மகரவாய் நுங்கிய சிகழிகை,
நலம்பெறச் சுற்றிய குரலமை ஒருகாழ்
விரல்முறை சுற்றி, மோக்கலும் மோந்தனன்;
நறாஅவிழ்ந் தன்னஎன் மெல்விரல் போதுகொண்டு,
செறாஅச் செங்கண் புதைய வைத்துப்
பறாஅக் குருகின் உயிர்த்தலும் உயிர்த்தனன்;
தொய்யில் இளமுலை இனிய தைவந்து,
தொய்யல்அம் தடக்கையின், வீழ்பிடி அளிக்கும்
மையல் யானையின், மருட்டலும் மருட்டினன்;
அதனால்,
அல்லல் களைந்தனன், தோழி! நம்நகர்
அருங்கடி நீவாமை கூறின், நன்று'என
நின்னொடு சூழ்வல், தோழி! 'நயம்புரிந்து,
இன்னது செய்தாள் இவள்'என,
மன்னா உலகத்து மன்னுவது புரைமே.

தெளிவுரை

"கொடிப்பூவும், கோட்டுப்பூவும் நீரினாலேயே அழகு பெறும். ஆனால், நீரின்றியே அழகு பெற்றனபோலச் சிறுநெருப்பிலே இட்டுப் பொலிவுடன் செய்யப்பெற்ற பூவான பொன்பூக்களைக் கொண்ட கோதையினைச் சூடியுள்ளவளே! கட்டு வடங்களாய் உள்ள வளையல்களை அணிந்துள்ள முன் கையினைக் கொண்டவளே! மூங்கில்போலத் தோன்றும் மெல்லிய தோள்களைக் கொண்டவளே! தோழியே! நான் நம் தலைவனைப் பார்த்து, 'உன் திருவடியில் நான் வாழ்வதற்கு (இல்வாழ்வில் உனக்குப் பணி செய்வதற்கு) நீ எனக்கு இன்னும் கருணை காட்டாமல் இருப்பது உன் பண்புக்குப் பொருத்தமாகுமோ?' என்று வினவினேன். அவன் அதைக் கேட்டு நரந்தம் பூ மணம் வீசும் என் கரிய கூந்தலை அள்ளியெடுத்து அக்கொண்டையில் அழகாய் மகரமீன் வாய்போல வேலைப்பாடமையச் சுற்றப்பட்டிருந்த மாலையைத் தன் விரலாலே சுழற்றி முகர்ந்தும் பார்த்தான். அத்துடனன்றி, நறவம் பூ மலர்ந்தது போன்ற எனது மெல்லிய விரலைக் கையால் பிடித்துத் தன் அருள் பொலியும் சிறந்த

கண்களை மறைக்கும்படி வைத்துக்கொண்டு, கொல்லன் உலைக்களத்துத் துருத்திபோலப் பெருமூச்சு விட்டான். மேலும், தொய்யில் எழுதப்பட்ட என் மார்பகத்தை இனிமையோடு தடவினான்; தனது அழகிய அகன்ற கையால், தன் பெண் யானையை மையல் கொண்டு தழுவும் ஆண்யானையைப் போல என் உடல் முழுவதையும் தடவினான். நான் அதுவரை அவன் காதலில் அகப்பட்டுக் கலங்கிய துன்பம் அவனது செயலால் நீங்கிற்று. (என்னை அவன் வயமாக்கி மயக்கிவிட்டான்.)

"இனி, தோழி! நீயும் ஒரு செயல் புரிய வேண்டும். நான் தலைவனை மணந்துகொண்டு அவனுடன் வாழும்வண்ணம், என் தாயிடம், 'உன் மகள் நம் குடிக்குப் பழுது ஏற்படாதவாறு கற்புக்கடம் பூண்டனள்' என்று சொல்ல வேண்டும். நம் வீட்டில் பலரும் அறிய நடைபெறும் என் திருமணம் அவனையன்றி வேறு எவருடனும் நிகழாதவாறு நம் தாயிடம் நீ அறத்தொடு நின்று சொன்னால் அது நமக்கு நல்லது என்று நான் கருதுகின்றேன்.

"நீ இவ்வாறு அறத்தொடு நின்றால், நிலையில்லாத இவ் வுலகத்தில் நிலையாய் நிற்கும் புகழ் உனக்கு வந்து சேரும்" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

தலைவியோடு தலைவன் களவொழுக்கம் மேற்கொண்டுள்ளான். இந் நிலையில் அயலார் பெண் கேட்டு வருகின்றனர். திருமணம் பேச இருப்பதை அறிவிக்கும் முறையில் தலைவி வீட்டில் மணமுரசு ஒலிக்கிறது. இந்தச் சூழலில் தோழியின் உதவியைத் தலைவி நாடுகிறாள். களவொழுக்க நிகழ்ச்சியினைச் சுற்றத்தார்க்குத் தெரிவிக்குமாறு தலைவி தோழியிடம் வேண்டுகிறாள். தலைவன் கைப்பட்டுத் தான் கலங்கியதைச் சுற்றத்தார்க்குத் தெரிவித்து - அறத்தொடு நின்று - அயலார் மணத்தைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறாள்.

குறிப்பு

கொடியிலும் கொம்பிலும் மலர்வது இயற்கைப்பூ. கோதையில் இருப்பது பொன்னால் செய்யப்பட்ட பூ. எனவே, அது பூவாப் பூ எனப்பட்டது.

தலைவன் தலைவியின் கூந்தலைப் பற்றியதும், அதை வாரிக் கொண்டையிட்டதும், அக்கொண்டையில் மாலையைச் சுற்றியதும்

களவொழுக்கத்தில் புணர்ச்சிக்குப் பின், அவன் அவள் கூந்தலை அணி செய்தமை ஆகும்.

சொற்பொருள்

1. கோடு - மரக்கிளை; நிறம் - அழகு.
2. பொடி அழல் - சிறு நெருப்பு; புறந்தந்த - செய்து அமைத்த; பொலன் - பொன்.
3. தொடி - வளையல்; அரி - அழகு; அணைத்தோள் - மூங்கில் போன்ற தோள்.
4. அடியுறை - சார்ந்து வாழும் வாழ்வு; ஒத்ததோ - பொருத்தமானதோ?
5. நரந்தம் - நரந்தம் பூ; நாறு - மணம் வீசும்; எஞ்சாது - முழுவதுமாய்; நனி பற்றி - நன்கு பற்றிக்கொண்டு.
6. மகரவாய் - மீனின் வாய்போலப் பண்ணிய தலை அணிகலன்; நுங்கிய - மாட்டிய, செறித்த; சிகழிகை - தலைக்கொண்டை.
7. குரல் - மலர்க்கொத்து; காழ் - மாலை.
8. மோக்கல் - முகர்ந்து பார்த்தல்.
9. நறா - நறவம் மலர்; அவிழ்ந்தன்ன - மலர்ந்தது போன்ற; என் மெல் விரல் போது - மென்மையான என் விரல் மலரை; கொண்டு - பிடித்துக்கொண்டு.
10. செறாஅ - கோபிக்காத; புதைய வைத்து - மறைத்து வைத்துக் கொண்டு.
11. பறாஅக் குருகு - கொல்லன் உலைக்களத்தில் உள்ள துருத்தி; துருத்தி, கொக்கு ஆகிய இரண்டும் குருகு என்று கூறப்படும். கொக்குப் பறக்கக்கூடியது; துருத்தி பறக்காதது; எனவே, துருத்தி, பறவாத குருகு எனப்பட்டது; உயிர்த்தல் - பெருமூச்சு விடுதல்.
12. தொய்யில் - மகளிர் மார்பிலும் தோளிலும் செம்பஞ்சுக் குழம்பால் எழுதப்படும் கோலம்; தைவந்து - தடவி.
13. தொய்யல் அம் தடக்கை - நிலத்தைத் தொடுமளவுக்குத் தொய்ந்து அழகுற நீண்ட துதிக்கை; வீழ்பிடி - தன்னால் விரும்பப்பட்ட பெண் யானை; அளிக்கும் - அருள் செய்யும்.
14. மையல் - காம மயக்கம்; மருட்டினன் - மயக்கினான்.
16. அல்லல் - துன்பம்; களைந்தனன் - நீக்கினான்; நகர் - வீடு.
17. அருங்கடி - வாய்த்தற்கு அரிய திருமணம்; நீவாமை - தலைவனை விட்டு மாறாமல்.
18. சூழ்வல் - ஆராய்தல்; நயம் புரிந்து - நற்செயலைச் செய்து.

19. இன்னது செய்தாள் இவள் - இச்செயலை இவள் செய்தாள் (என்று சொல்லி நீ அறத்தொடு நின்றால்).
20. மன்னா - மன்னாத - நிலையற்ற; புரைமே - பொருந்தும்.

தோழி கூற்று

நற்றிணை 165 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

நொதுமலர் வரையும் பருவத்துத் தோழி தலைமகளுக்கு அறத்தொடு நிலை பயப்பச் சொல்லியது. (நொதுமலர் - அயலார், காதலன் அல்லாத பிறர்.)

கூற்று விளக்கம்

தலைவன் வரைவு நீட்டித்தனன்; அயலார் தலைவியை மணந்து கொள்ளத் தூது விட்டுள்ளனர். தோழி, தலைவியிடம், ‘அன்னையர் வினவும்போது நீ அறத்தொடு நிற்பாயாக’ என அறிவுறுத்தினாள்.

அமர்க்கண் ஆமான் அருநிறம் முள்காது
பணைத்த பகழிப் போக்குநினைந்து, கானவன்,
‘அணங்கொடு நின்றது மலைவான் கொள்க’எனக்
கடவுள் ஓங்குவரை பேண்மார், வேட்டுஎழுந்து,
கிளையொடு மகிழும் குன்ற நாடன்
அடைதரும் தோறும், அருமைதனக்கு உரைப்ப
நப்புணர்வு இல்லா நயன்இலோர் நட்பு
அன்ன ஆகுக’ என்னான்;
ஒல்கான் தோழி;மிகப் பல்கின தூதே.

தெளிவுரை

தலைவியே! தான் விடுத்த அம்பு விரும்பத்தக்க கண்களைக் கொண்ட காட்டுப்பசுவின் அரிய மார்பிலே பாய்ந்தும் அதனை வீழ்த்தாமல் குறிபிழைத்து ஒதுங்கிப்போனதைக் கானவன் ஆராய்ந்தான். அதற்குக் காரணம், இம்மலையில் வாழும் தெய்வ மாகும் என்று கருதினான். அதன் சினம் தணியும்பொருட்டு, ‘மலைப்பக்கம் மழை பொழியட்டும்’ என அக்கடவுளை

வேண்டுதற்கும் முற்பட்டான். உயர்ந்த மலைப்பக்கத்தே கோவில் கொண்டிருக்கும் கடவுளாகிய முருகவேளுக்குப் படையலிட்டுப் போற்றினான். அதன்பின் தன் அம்பு, இனிக் குறி தவறாது என மகிழ்வு கொண்டான். அத்தகைய காட்சி கொண்ட மலை நாட்டிற்குரியவன், நம் தலைவன்.

அவன் இங்கு வரும்போதெல்லாம் உன் அருமைப்பாட்டினை அவனுக்கு எடுத்துரைத்து அவனைப் போக்கினேன். 'அன்பில்லாதவரது நட்பு அவ்வாறே இல்லாது கழிந்து போகுக' என நீ ஒதுக்கினாலும் அவன் உன்னை ஒதுக்கினான் அல்லன். உனது நட்பை நாடி மீண்டும் மீண்டும் வருகிறான். இச்சூழலில் நாம் முன்பின் அறியாதவர்கள் உன்னை மணப்பதற்காகத் தூது விடுக்கின்றனர். ஆகவே, இனி நாம் தாயார்க்கு அறத்தொடு நிற்பது அன்றி வேறு செய்வகை இல்லை.

கருத்து

வேற்று வரைவு மிகுதலால், உன் காதலை அன்னையிடம் இப்போதே உரைத்திட வேண்டும்.

இறைச்சி

குறி பிழைத்தலால் தெய்வக்குறை உண்டெனா உணர்ந்து கானவர் கடவுள் பேணுவார் என்றது, அவ்வாறே தலைவியும் தலைவனைக் கூட்டி வைக்குமாறு முருகயர்ந்து வேண்ட வேண்டும் என்பதாம்.

குறிப்பு

தலைவன் வரைந்துகொள்ளாது களவொழுக்கத்தையே மேற்கொண்டனன். ஆதலின், தலைவி அவனை வெறுத்து மொழியலானாள். அவன் தொடர்ந்து நட்புடையன் ஆயினன். இந்நிலையில் வேற்றவர் வரைவு முயல்கின்றாராதலின் தலைவி அறத்தொடு நிற்றலே தக்கது எனத் தோழி மொழிந்தாள்.

சொற்பொருள்

1. அமர்க்கண் - விரும்பத்தக்க கண்கள்; ஆமான் - காட்டுப்பசு; அரு நிறம் - அரிய மார்பு; முள்காது - உள்ளே ஊடுருவிச் செல்லாது.

2. பனைத்த - தப்பிய, குறி தவறிய; பகழி - அம்பு; போக்கு நினைந்து - அம்பின் போக்கினை (அம்பு சென்ற போக்கினை) ஆராய்ந்து.
3. அணங்கொடு நின்றது - இம்மலையில் தெய்வம் வந்து நிற்கிறது போலும்; மலை வான் கொள்க - மலைப்பக்கம் மழை பொழியட்டும்.
4. கடவுள் ஓங்குவரை - கடவுள் தங்குதலால் உயர்ந்த மலையை; பேண்மார் - வழிபட்டவராய்; வேட்டு எழுந்து - விரும்பிச் சென்று.
5. கிளையொடு மகிழும் - உறவினரோடு விழா எடுத்து மகிழும்.
6. அடைதரும்தோறும் - வரும்போதெல்லாம்; அருமை தனக்கு உரைப்ப - உன் அருமைப்பாட்டினை அவனுக்கு எடுத்துரைத்து.
7. நட்பு உணர்வு இல்லா நயனிலோர் நட்பு - புணர்தல் இல்லாத அன்பற்றவர் நட்பு.
8. அன்ன ஆகுக - அவ்வாறே இல்லாது போகுக; என்னான் - நீ ஒதுக்கு வதையும் கருதான்.
9. ஒல்கான் - மீண்டும் மீண்டும் வந்து அருள் செய்தலில் தவறாத வனாயுள்ளான்; தோழி - தோழியே; மிகப் பல்கின தூது - உன்னை மணங்கேட்டு விடுக்கின்ற தூதுகள் மிகப் பலவாய் உள்ளன.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 168 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

நொதுமலர் வரைவு வேண்டி விடுத்தமையறிந்த தலைமகள் ஆற்றாளாய்ப் பசியட நிற்புழி, ‘இதற்குக் காரணம் என்?’ என்று செவிலி வினவத் தோழி அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

அயலார் தலைவியைத் திருமணம் செய்துகொள்ள விரும்பித் தூது விடுத்தனர். அதனை அறிந்த தலைவி ஊன், உறக்கம் இன்றி வருந்தி நின்றாள். செவிலித்தாய் தலைவியின் வருத்தத்திற்குக் காரணம் என்ன என்று தோழியை வினவினாள். காரணம் இன்னதென்று கூறித் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

பெருங்கடல் கரையது சிறுவெண் காக்கை
துறைபடி அம்பி அகம்அணை ஈனும்
தண்ணந் துறைவன் நல்கின்,
ஒண்நுதல் அரிவை பால்ஆ ரும்மே.

தெளிவுரை

பெரிய கடற்கரையில் வாழும் வெண்ணிறக் கழுத்தினைக் கொண்ட சிறிய காக்கை, படகுத்துறையில் இயங்காது கிடக்கும் ஓடத்திற்கு உள்ளே கூடு கட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். அத்தகைய குளிர்ச்சி பொருந்திய துறையைக் கொண்டவன், தலைவன். அவன் இவளை மணந்துகொண்டு அருள் காட்டுவானாயின், ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்ட தலைவி, பாலருந்திப் பசி தீர்வாள்.

கருத்து

தாயே! களவிற்கூடிய அவன் மணந்தால் மட்டுமே இவள் நன்னிலை அடைவாள்.

சொற்பொருள்

1. சிறுவெண் காக்கை - வெண்ணிறக் கழுத்தினைக் கொண்ட சிறிய காக்கை.
2. துறை - படகுத்துறை : அம்பி - ஓடம்; அகம் - உள்ளே; அணை ஈனும் - கூடு கட்டி முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும்.
3. நல்கின் - அருள் காட்டுவானானால்.
4. அரிவை - பெண், தலைவி; பால் ஆரும் - பால் அருந்துவாள்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 205 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

நொதுமலர் வரைவு வேண்டி விட்டுழித் தலைமகட்கு உளதாகிய வருத்தம் நோக்கி, 'இவள் இவ்வாறாதற்குக் காரணம் என்னை?' என்று வினவிய செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

அயலார் தலைவியைத் திருமணம் செய்துகொள்ளும்பொருட்டுத் தூதுவரை அனுப்பியுள்ளனர். அதனை அறிந்த தலைவியின் உள்ளமும் உடலும் வருந்தின. அதனைக் கண்ட செவிலி, "இவள் இவ்வாறு ஆவதற்குக் காரணம் என்ன?" என்று தோழியை வினவினாள். அதற்குத் தோழி, செவிலிக்குப் பதில் கூறி அறத்தொடு நின்றது.

அன்னாய், வாழி!வேண்டு அன்னை!என் தோழி!
நனிநாண் உடையள்; நின்னும் அஞ்சும்;
ஒலிவெள் அருவி ஒங்குமலை நாடன்
மலர்ந்த மார்பின் பாயல்
துஞ்சிய வெய்யள்; நோகோ, யானே.

தெளிவுரை

அன்னாய்! என் தலைவி மிகுந்த நாணம் கொண்டவள்; தாயாகிய உனக்கு அஞ்சுகிறாள். ஒலிக்கின்ற வெண்மையான அருவி பாயும் உயர்ந்த மலைநாடன், தலைவன்; அவனது அகன்று விரிந்த மார்பில் கிடந்து தூங்கியதை இன்னும் விரும்பியிருக்கிறாள். அதனைச் சொல்ல இயலாமல் வருந்துகிறாள். அவளை நினைத்து நானும் வருந்துகின்றேன்.

கருத்து

தலைவனுடன் கொண்டுள்ள களவுறவை வெளிப்படுத்த முடியாமல் தலைவி அஞ்சுகிறாள்.

விளக்கம்

மிகுந்த வெட்கத்தாலும், தாயிடம் கொண்டுள்ள அச்சத்தாலும் களவை வெளிப்படுத்த இயலாமல் தலைவி வருந்துகிறாள். வருத்தத்தை வெளிக்காட்டாது அடக்குவதால் உடலும் மெலிகிறது. மலைநாடனைத் தலைவி விரும்பியிருப்ப, அயலார் திருமணத்தின்பொருட்டு வந்திருப்பதால் தலைவியின் நிலைமை என்னாகுமோ என்று வருந்துகிறாள், தோழி. தலைவியின் களவொழுக்கத்தைச் செவிலியிடம் புலப்படுத்தி அயலவர் திருமணப்பேச்சைத் தடுக்க வேண்டும் என்றும், தலைவனுக்கே அவளை மணம் முடித்துக் கொடுக்க வேண்டும் என்றும் தோழி கூறுகிறாள்.

குறிப்பு

தலைவனது மார்பில் கிடந்து துயின்றவள் என்று கூறுவதன்வழி, தோழி, அவர்கள் களவொழுக்கத்தை வெளிப்படுத்தினாள்.

சொற்பொருள்

2. நனி - மிகவும்; நாண் - நாணம்; நின்னும் - உனக்கும்.
4. மலர்ந்த - அகன்று விரிந்த; மார்பின் பாயல் - மார்பில் கிடந்து கொள்ளும் உறக்கம்.
5. வெய்யள் - விருப்பமுள்ளவள்; யான் நோகு - நான் வருந்து கின்றேன்.

தோழி கூற்று

குறுந்தொகை 321 — **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி, கிழத்திக்கு நொதுமலர் வரையுமிடத்து 'அறத்தொடு நிற்பேன்' என்றது.

கூற்று விளக்கம்

தலைவன் ஒருவனுடன் களவுறவில் ஈடுபட்டிருக்கும் தலைவி, வேற்றார் தன்னை வரைந்து வருதலை எண்ணிக் கவலைகொள்கிறாள். அவளைத் தேற்றுவாளாய்த் தோழி, 'நான் அறத்தொடு நின்று தாய்க்குக் கூறுவேன்' என்று சொல்லியது.

மலைச்செஞ் சாந்தின் ஆர மார்பினன்,
சுனைப்பூங் குவளைச் சுரும்புஆர் கண்ணியன்,
நடுநாள் வந்து, நம்மனைப் பெயரும்
மடவரல் அரிவை!நின் மார்புஅமர் இன்துணை;
மன்ற மரையா இரிய, ஏறுஅட்டு,
செங்கண் இரும்புலி குழுமும்; அதனால்,
மறைத்தற் காலையோ அன்றே;
திறப்பல் வாழிவேண்டு, அன்னை!நம் கதவே.

தெளிவுரை

அறிவிற்சிறந்து விளங்கும் தலைவியே! உன் மார்பைத் தழுவிக் கொள்ளும் இனிய துணைவன், மலைச்செஞ்சந்தனம் பூசிய மார்பிலே முத்துமாலையினை அணிந்தவன்; சுனையிலே பூத்த குவளை மலர்களால் தொடுக்கப்பெற்ற தலைமாலையினைக் கொண்டவன். அவன் நள்ளிரவிலே நம் வீட்டிற்கு வந்து திரும்புங் காலத்தில் ஊர் அம்பலத்திலுள்ள மரையா அச்சங் கொண்டு ஓட, அதன் ஆண் மானைக் கொன்று சிவந்த கண்களைக் கொண்ட பெரிய புலி முழங்கிக்கொண்டிருக்கும். அதனால், நம் களவொழுக்கத்தை மறைத்தற்கு ஏற்ற காலம் இது அன்று; தலைவியே! நம் மனக்கதவைத் திறந்து நம் களவுறவை வெளிப்படுத்த உள்ளேன்; நீயும் அதனை ஏற்றிடு.

கருத்து

தலைவியே! உன் களவுறவை இனியும் மறைத்திடாது செவிலியிடம் வெளிப்படுத்துவேன்.

குறிப்பு

'இனியும் நம் களவினை மூடி மறைத்தல் வேண்டா.' மன்ற மரையா ஓட, அதன் ஆண்மானைக் கொன்று புலி முழங்கும் என்பதால், அவன் வந்துபோதல் அவனுக்குத் துன்பமாகவும் அமையலாம். அத்துடன் புலி முழக்கத்தைக் கேட்டு வெளிப்படும் காவலர்கள், அவனைக் காண்டலும் கூடும். ஆகவே, இனி இரவுக்குறி நேர்தலும் இயலாது; அவனும் வரைதலில் மனஞ்செலுத்தினான் அல்லன். ஆகவே, 'நானே அறத்தொடு நிற்பேன்' என்கிறாள், தோழி.

சொற்பொருள்

1. சாந்து - சந்தனம்; ஆரம் - முத்துமாலை.
2. சுரும்பு ஆர் - வண்டுகள் பொருந்திய; கண்ணியன் - தலைமாலை யினைக் கொண்டவன்.
3. நடுநாள் - நடு இரவு; வந்து பெயரும் - வந்து மீளும்.
4. அமர் - பொருந்தும், விரும்பும்; இன்துணை - இனிய துணைவன்.
5. மன்றம் - ஊர்ப் பொது இடம்; மரையா - காட்டுமான்; இரிய - அச்சங் கொண்டு ஓட; ஏறு - (அதன்) ஆண்மான்; அட்டு - கொன்று.
6. குழுமும் - முழங்கிக்கொண்டிருக்கும்.

7. மறைத்தல் காலையோ அன்று - உன் களவொழுக்கத்தை மறைத்தற்கு ஏற்ற காலம் அன்று.
8. கதவு திறப்பல் - மறைத்திருப்பதை வெளிப்படுத்துவேன்; வேண்டு - நீயும் இதற்கு உடன்பட வேண்டும்.

தோழி கூற்று

குறுந்தொகை 379 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

நொதுமலர் வரைவுழித் தோழி அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

அயலார் தலைவியை வரைய வந்தபோது, தலைவியிடம், "முன்பு உன்னிடம் அன்பு பூண்டவன் இப்போது எங்குள்ளானோ?" எனக் கூறி மற்றையோர்க்கு உண்மையை வெளிப்படுத்தியது.

இன்றுயாண் டையனோ தோழி! குன்றத்துப்
பழங்குழி அகழ்ந்த கானவன் கிழங்கினொடு,
கண்அகன் தூமணி, பெறூஉம் நாடன்,
'அறிவுகாழ்க் கொள்ளும் அளவை, செறிதொடி!
எம்மில் வருகுவை நீ'எனப்
பொம்மல் ஓதி நீவி யோனே?

தெளிவுரை

தலைவியே! குன்றிலே பழங்குழியைத் தோண்டிய கானவன், கிழங்கினோடுகூட, தூய மணியையும் பெறுவான். இத்தகைய சிறந்த நாட்டினைக் கொண்டவன், தலைவன்; அவன் அன்று கூறியது ஒன்று உண்டு. 'நெருக்கமான வளையல்களை அணிந்தவளே! நீ முதிர்ந்து பக்குவம் அடையுங்காலத்தில் எம் இல்லத்திற்கு வந்து எம் இல்லத்தலைவியாய் இருப்பாய்' என்று சொல்லி, அடர்ந்த உன் கூந்தலைத் தடவிச் சென்றான். அவன், இன்று எவ்விடத்தில் இருக்கின்றானோ?"

கருத்து

நின்பால் அன்பு பூண்ட தலைவன் இப்போது எங்கு உள்ளானோ?

குறிப்பு

இதனால், தலைவி ஒருவனுடன் நட்புப் பூண்டுள்ளாள் என்பது குறிப்பால் செவிலிக்கு உணர்த்தப்படுகிறது.

உள்ளுறை

பழைய குழியை அகழ்ந்தவன் கிழங்கோடு தூய மணியையும் பெறுவான் என்னும் தொடர்மூலம், வேட்டைக்காகச் சென்ற தலைவன் வேட்டையுடன் தூய மணி போன்ற தலைவியையும் பெற்றான் என்னும் உள்ளுறை பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. யாண்டையனோ - எங்குள்ளானோ?
2. அகழ்ந்த - தோண்டிய; கானவன் - குறவன்.
3. கண் அகன் - இடம் அகன்ற; தூமணி - தூய மணி.
4. அறிவு காழ்க் கொள்ளும் அளவை - உனது அறிவு முதிர்ந்தவுடன்.
5. எம் இல் - எம்முடைய வீட்டிற்கு; வருகுவை - வந்து சேர்வாய்.
6. பொம்மல் - அடர்ந்த; ஓதி - கூந்தல்; நீவியோன் - தடவியவன்.

தலைவி கூற்று

குறுந்தொகை 31 **ஆதிமந்தி**

திணை : மருதம்

கூற்று

நொதுமலர் வரைவுழித் தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

அயலார் தலைவியை மகட்கொடை கேட்டு வந்தபோது, தலைவி தோழியிடம், தான் ஒருவனிடம் காதல் கொண்டிருப்பதைக் கூறித் தன் நிலையை வெளிப்படுத்தியது.

மள்ளர் குழீஇய விழவி னானும்,
மகளிர் தழீஇய துணங்கை யானும்,
யாண்டும் காணேன், மாண்தக் கோனை;
யானும்ஓர் ஆடுகள மகளே; என்கைக்
கோடுஈர் இலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலும்ஓர் ஆடுகள மகனே.

தெளிவுரை

மாட்சிமை மிக்க தகுதி வாய்ந்தவனான என் தலைவனை நான் தேடிக்கொண்டிருக்கிறேன். வீரர்கள் கூடியிருக்கிற வீர விளையாட்டிடங்களிலும், பெண்கள் ஒருவரை ஒருவர் தழுவி ஆடும் துணங்கைக் கூத்தாடுமிடங்களிலும், இவையல்லாத பிற இடங்களிலும் தேடியும் நான் காண இயலவில்லை. கற்பு வாய்ந்த நானும் ஆடற்கலைப் பெண்ணே! சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட ஒளி பொருந்திய வளையல்கள் என் கையிலிருந்து நெகிழுமாறு என்னை மெலிவித்த பெருமை பொருந்திய அத் தலைவனும் ஆடற்கலை வல்ல ஆண்மகனே! (எங்ஙனமாயினும் அவனைத் தேடிக் கண்டுபிடிப்பேன்.)

கருத்து

இதுவரை தோழியும் அறியாதிருந்த தன் காதலைத் தலைவி அவளிடம் வெளிப்படுத்துகிறாள்.

சொற்பொருள்

1. மள்ளர் - மறவர்; குழீஇய - கூடியுள்ள.
2. தழீஇய - தழுவிய; துணங்கை - மகளிர் ஆடும் கூத்து.
3. யாண்டும் - எங்கும்; மாண்தக்கோன் - மாட்சிமை மிக்க தகுதி வாய்ந்த தலைவன்.
4. ஆடுகளமகள் - ஆடற்கலைப்பெண்.
5. கோடு - சங்கு; ஈர் - அறுத்து (செய்யப்பட்ட); இலங்குவளை - விளங்குகின்ற வளையல்கள்; நெகிழ்த்த - நெகிழும்படி செய்த.
6. பீடு கெழு - பெருமை பொருந்திய; குரிசில் - தலைவன்; ஆடுகள மகனே - ஆடற்கலை வல்ல ஆண்மகனே.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 201 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

நொதுமலர் வரைவின்கட் செவிலி கேட்குமாற்றால் தலைமகள் தோழிக்கு அறத்தொடு நிலை குறித்து உரைத்தது.

கூற்று விளக்கம்

திருமணத்தின்பொருட்டுத் தலைவியைப் பெற்றோரிடம் அயலார் மகட் கொடை கேட்டு வந்தனர். அதனையறிந்த தலைவி, செவிலி காதில் விழுமாறு, தோழியிடம் தன் களவொழுக்கம் வெளிப்பட அறத்தொடு நின்றது.

அன்னாய் வாழி!வேண்டு அன்னை! என்னை,
தானும் மலைந்தான்; எமக்கும் தழைஆயின;
பொன்வீ மணிஅரும் பினவே
என்ன மரங்கொல், அவர்சாரல் அவ்வே!

தெளிவுரை

தோழியே! நான் சொல்வதைக் கேள்! நம் தலைவனது மலைச்சாரலில் உள்ள மரங்கள் பொன்னிற மலர்களையும் மணி போலும் அரும்புகளையும் கொண்டவை. தலைவன் அவற்றை விரும்பி அணிந்துகொண்டான். அம்மரங்கள் நான் உடுத்துக் கொள்வதற்குத் தழையைத் தந்தன. அத்தகைய பூக்களையும் தழைகளையும் தருவனவாய் அம்மலைச்சாரலில் அமைந் துள்ளவை என்ன மரங்கள்? (அறிவாயாயின் கூறுக.)

கருத்து

அவன் கையுறையாய்த் தந்த அவன் நாட்டுத் தழையை ஏற்றுக்கொண் டதைக் கூறி, தனக்கு அவன் உரிமையாயினன் என்பதைத் தலைவி தெளிவு படுத்தினாள்.

குறிப்பு

தானும் அணிந்தான், எனக்கும் தழை தந்தான் என்பதால், தலைவன் பூவும் தழையும் தந்து புணர்ந்தான் என்று களவைத் தலைவி வெளிப் படுத்துகிறாள்.

சொற்பொருள்

2. தானும் - தலைவனும்; மலைந்தான் - அணிந்துகொண்டான்; தழை - உடுக்கும் தழை.
3. பொன்வீ - பொன் நிற மலர்; மணி அரும்பு - நீலமணி போன்ற நிறம் வாய்ந்த அரும்பு.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 39 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

நொதுமலர் வரைந்து புகுந்த பருவத்துத் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

அயலவர் தலைவியை மணம் பேசுதற்கு வந்தனர். அப்போது தோழி, செவிலியிடம் தலைவன் ஒருவனுடன் தலைவிக்குத் தொடர்புள்ளது என்பதை எடுத்துச் சொல்லி, அயலவர் மணம் நடைபெறாதவாறு அறத்தொடு நின்றது.

தந்தார்க்கே ஆமால் தடமென்தோள் இன்னநாள்
வந்தார்க்கே ஆம்என்பார் வாய்காண்பாம் – வந்தார்க்கே
காவாம் இளமணல் தண்கழிக் கானல்வாய்ப்
பூவா இளஞாழல் போது.

தெளிவுரை

கடற்கரைச்சோலை, தன்னிடம் வருபவர்க்கு நிழலைக் கொடுத்துப் பாதுகாக்கும்; நுண்மணல் பரவிக் கிடக்கும் குளிர்ச்சி பொருந்திய உப்பங்கழிகள் சூழப்பெற்றது, அச்சோலை. அங்கே வந்து, அப்போதுதான் பூத்த இளைய கோங்கின் மலரைப் பறித்துத் தலைவியின் கையில் தந்துவிட்டுப் போன தலைவர்க்கே தலைவியின் மென்மையான தோள்கள் தகுதி வாய்ந்தன; அவை இப்போது மணம் பேசி வந்தார்க்கு ஏற்றவை

என்று சொல்வது பொருந்தாது. வந்தவர்களின் வாய்மொழியின் உறுதிப்பாட்டினை எத்தகையது என உணர்வோம்.

கருத்து

மலரைத் தந்த அந்தத் தலைவனுக்கே தலைவியின் தடமென்தோள் உரியது.

குறிப்பு

தலைவியின் களவுறவை அறிந்தால், மணம் பேச வந்த அயலவர் தம் உறுதி குலைந்து திரும்பிவிடுவர். அதனால்தான் தோழி அவர்கள் மன உறுதியைக் காண்போம் என்கிறாள்.

சொற்பொருள்

1. தந்தார்க்கே - (கானலில் பூத்த ஞாழல் மலரைத்) தந்தவர்க்கே; ஆம் - (தலைவியின் தோள்) உரியது ஆம்; இன்ன நாள் - இப்பொழுது.
2. வந்தார்க்கே - வந்தவர்களுக்கே; ஆம் என்பார் - தகுதி என்று சொல்பவர்களின்; வாய் காண்பாம் - வாய்மொழியின் உறுதிப் பாட்டினை எத்தகையது என உணர்வோம்; வந்தார்க்கே - (கடற்காட்சி காண்பதற்கு) வந்தவர்க்கு.
3. கா ஆம் - நிழலினைக் கொடுத்துப் பாதுகாக்குமிடமாகும்; இளமணல் - நுண்ணிதான மணல் பரவிய; தண்கழி - குளிர்ந்த உப்பங்கழி (சூழ்ந்துள்ள); கானல்வாய் - கடற்கரைச்சோலை யிடத்தே.
4. பூவா - (முன்பு பூக்காது) இப்போதுதான் பூத்த; இளஞாழல் - இளமையான கோங்க மரத்தின்; போது - பூ.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 220 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

நொதுமலர் வரைவின்கண் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தலைவியைத் திருமணத்தின்பொருட்டு அயலார் பெண் கேட்டு வந்தனர். அப்போது தலைவன், தலைவி ஆகியோரின் களவொழுக்கத்தை வெளிப்படுத்தித் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

அலங்குமழை பொழிந்த அகன்கண் அருவி
ஆடுகழை அடுக்கத்து இழிதரும் நாடன்
பெருவரை அன்ன திருவிறல் வியன்மார்பு
முயங்காது கழிந்த நாள்இவள்
5 மயங்கிதழ் மழைக்கண் கலிழும் அன்னாய்!

தெளிவுரை

காற்றில் மழைமுகில்கள் பொழிந்த கனமழையினால் உண்டான பெரிய அருவிகள், மூங்கில்கள் அடர்ந்த பக்க மலையில் கீழிறங்கும். இத்தகைய காட்சிக்குரிய நாட்டிற்கு உரியவனது மார்பு, மலை போன்றது; திருமகள் வீற்றிருப்பது; வெற்றிக்கு நிலைக்களனானது. அம்மார்பினைத் தழுவி மகிழாத ஒவ்வொரு நாளும், நம் தலைவியின் பூவிதழ்போலும் குளிர்ச்சி பொருந்திய கண்கள் கண்ணீரைச் சொரியும்.

கருத்து

தலைவி, நாடன் ஒருவனை முயங்கினாள். அந்நாடனை இவள் பிரிவின்றித் தழுவ இயலாமையால் இடையறாது கண்ணீர் சிந்தி அழுகிறாள்.

குறிப்பு

தழுவாமல் கழிந்த நாள் என்பது, தலைவி பலகாலும் அவன் மார்பினை முயங்கி இன்புற்றவள் என்பதைத் தெரிவிக்கிறது.

தலைவன் புரிந்த தண்ணளியால் உயிர் வாழ்ந்து வருகின்றாள்; ஆதலின், நொதுமலர்க்கு வரைவுடன்படின் தலைவி உயிர் வாழாள் எனும் உட்பொருள்படத் தோழி பேசுகிறாள்.

சிறந்த மார்பினைத் தழுவி இன்புற்றவள் வேறு மார்பினைத் தழுவுவாளோ?

ஒரு நாள் தழுவாமைக்கே கண்ணீர் சோரக் கலங்கும் இவள், வேற்று வரைவுக்குத் தமர் இசையின் உயிரோடும் இராள்; ஆகவே, அவள் விரும்பும் அவனுக்கே மணம் புணர்விக்க வேண்டும் என்று தோழி செவிலியிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. அலங்கு மழை - காற்றால் அசைந்து பரவும் மழைமேகம்; அகன்கண் அருவி - அகன்ற இடமுள்ள அருவிகள்.
2. ஆடுகழை - அசைகின்ற மூங்கில் (செறிந்த); அடுக்கம் - பக்கமலை; இழிதரும் - கீழிறங்கும்.
3. பெருவரை - பெரிய மலை; திரு - திருமகள்; விறல் - வெற்றி; வியன் - அகலம்.
4. முயங்காது - தழுவாது.
5. மயங்கிதழ் - மயங்கிய பூ இதழ்போலும்; மழைக்கண் - குளிர்ச்சி பொருந்திய கண்கள்; கலிழும் - நீர் சொரியும்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 367 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

நொதுமலர் வரைவின்கண் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

அயலார் தலைவியை மகட்பேசி மணமுடிக்க வந்தபோது, தலைவன் தலைவியர் களவொழுக்கத்தை வெளிப்படுத்தித் தோழி அறத்தொடு நின்றது.

பொரிஅரைக் கோங்கின் பொன்மருள் பகுவீ,
விரிஇணர் வேங்கையொடு, வேறுபட மிலைச்சி,
விரவுமலர் அணிந்த வேனில் கான்யாற்றுத்
தேரொடு குறுக வந்தோன்
பேரொடு புணர்ந்தன்று அன்னை!இவள் உயிரே.

தெளிவுரை

அன்னையே! பொரிந்த அடிப்பகுதியைக் கொண்ட கோங்க மரத்தின் பொன் போன்ற புதிய பூ, கொத்தாய் மலர்ந்த வேங்கைப்பூ, இவற்றோடு இன்னும் பல்வேறு மலர்கள் கலந்து விரவிக் காட்சிதரும் வேனிற்காலம். காட்டாற்றிற்கு அருகே தேரோடு வந்தான் ஒருவன்; தோழியருடன் வேனிற்காலப் பூக்களைக் கொய்து விளையாடச் சென்றபோது காட்டாற்று வெள்ளம் தலைவியை இழுத்துச் சென்றது. அப்போது அவர்கள் செய்த ஆரவாரம் கேட்டு, தேரோடு வந்தவன் அவளைக் காப்பாற்றிக் கரையேற்றினான். அன்றுதொட்டு இவள் உயிர் 'இன்னானால் மீண்டது' என அவன் பெயரோடு இணைந்துவிட்டது.

கருத்து

காட்டாற்று வெள்ளம் தலைவியை இழுத்துச் சென்றபோது, அவளைக் காத்தவனுடன் இவள் உயிர் பிரிக்க இயலாமல் பிணைந்திருக்கிறது.

விளக்கம்

வேனில் பருவத்தில் மலரும் பல்வேறு மலர்களையும் கலந்து மாலை தொடுப்பதற்காகத் தலைவி காட்டாற்றுப் பக்கம் சென்றாள். நீரில் மிதந்துவரும் பூக்களை எடுக்க முயன்றபோது தலைவி நீரில் விழுந்தாள். அப்போது தேரில் அங்கு வந்த தலைவன் ஒருவன் அவளைத் தூக்கிக் காப்பாற்றினான். அவள் உயிரும் அவன் பெயரும் ஒன்றுகலந்துவிட்டன.

சொற்பொருள்

1. பொரி அரை - பொரிந்த அடிப்பகுதி: கோங்கு - கோங்க மரம்; மருள் - போன்ற; பகுவீ - புதிய பூ.
2. விரி இணர் - விரிந்த பூங்கொத்து; வேங்கையொடு - வேங்கை மலரொடு; மிலைச்சி - தொடுத்து.

3. விரவு மலர் - பல்வேறு மலர்கள்; கான்யாறு - காட்டாறு.
4. தேரொடு குறுக வந்தோன் - தேரில் ஏறி விரைவில் வந்து தலைவியைக் காப்பாற்றியவன்.
5. பேரொடு - பெயருடன்; புணர்ந்தன்று . பிணைக்கப்பட்டுள்ளது.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 110 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

நொதுமலர் வரைவின்கண் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தலைவியை அயலான் ஒருவனுக்குத் திருமணம் செய்ய முயற்சி நிகழும்போது, தலைவன், தலைவி ஆகியோரின் களவொழுக்கத்தைத் தோழி செவிலியிடம் வெளிப்படுத்திக் களவைக் கற்பாக மாற்றச் சொல்லியது.

அன்னை, வாழி!வேண்டு அன்னை! புன்னைப்
பொன்நிறம் விரியும் பூக்கெழு துறைவனை
'என்னை' என்றும், யாமே; இவ்ஊர்
பிறிது ஒன்றாகக் கூறும்;
5 ஆங்கும் ஆக்குமோ, வாழிய பாலே.

தெளிவுரை

அம்மா! கேள்! புன்னையின் பொன்னிறப் பூக்கள் எங்கும் பரவிப் படர்ந்து பொலியும் கடல்துறைக்குத் தலைவனை நாங்கள் எங்கள் தலைவன் என்று கூறுகிறோம்! ஆனால், இவ்வூரார் வேறு வகையாய்க் கூறுகின்றனர். விதி ஊரார் சொல்வதுபோல ஆக்கிவிடுமோ? விதி வாழ்க!

கருத்து

ஊழே இவர்களை ஒன்றுசேர்த்தது. அதனால் ஊரார் என்ன சொன்னாலும் அது தன் வழியை மாற்றிக்கொள்ளாது. எனவே, தலைவியைத் தலைவனோடு கூட்டி வைப்பதே அறமாகும் எனத் தோழி கூறுகிறாள்.

சொற்பொருள்

2. விரியும் - படர்ந்து கிடக்கும்; பூக்கெழு - பூக்கள் பொருந்திய.
3. என்னை - என் ஐ - எம் தலைவன்.
4. பிறிது ஒன்றாக - வேறு வகையாய்.
5. ஆங்கும் ஆக்குமோ? - ஊரார் சொல்வதுபோல ஆக்குமோ; பால் - விதி, ஊழ்.

தோழி கூற்று

நற்றிணை 207 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : நெய்தல்

கூற்று

நொதுமலர் வரைவுழித் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தலைவியை மணம் பேசி நொதுமலர் வந்தபோது, 'தேரில் வந்து செல்லும் தலைவன் ஒருவனிடம் தலைவி அன்பு பூண்டுள்ளாள்' என்னும் உண்மையைத் தோழி தன் தாயாகிய செவிலியிடம் கூறியது.

கண்டல் வேலிக் கழிசூழ் படப்பை
முண்டகம் வேய்ந்த குறியிறைக் குரம்பைக்
கொழுமீன் கொள்பவர் பாக்கம் கல்லென,
நெடுந்தேர் பண்ணி வரல்ஆ னாதே;
குன்றத்து அன்ன குவவுமணல் நீந்தி
வந்தனர் பெயர்வர்கொல் தாமே? அல்கல்,
இளையரும் முதியரும் கிளையுடன் குழீஇ,
கோட்சுறா எறிந்தென, சுருங்கிய நரம்பின்
முடிமுதிர் பரதவர் மடமொழிக் குறுமகள்,
வலையும் தூண்டிலும் பற்றி, பெருங்கால்
திரைஎழு பௌவம் முன்னிய
கொலைவெஞ் சிறாஅர் பாற்பட் டனளே.

தெளிவுரை

"*அன்னாய்! தாழை மரங்களை வேலியாய்க் கொண்ட உப்பங் கழிகளால் சூழப்பட்டுள்ள, தோட்டக்கால்களில் இருக்கும்*

நீர்முள்ளிச் செடிகளாலே வேயப்பெற்ற, குறுகிய கூரையைக் கொண்ட குடிசைகளிலே வாழ்பவர்கள், பரதவர்கள். கொழுவிய மீன்களைப் பிடிக்கும் அவர்களது பாக்கம் ஆரவாரிக்கும்படியாய்த் தலைவனுடைய நெடுந்தேர் நாளும் வருவது தவிர்வதில்லை. (நாளும் தவிராது வந்தவண்ணம் இருக்கும்.) குன்றுபோல் கிடக்கும் மலைமேடுகளைக் கடந்து இங்கு வருகின்ற அவரும் வறிதே திரும்பிப் போவாரா? (மணம் முடித்தே போவார்;) இல்லையாயின், இரவுப்பொழுதில் இளையரும் முதியரும் தம் சுற்றத்துடன் கூடிக் கொலைவல்ல சுறாமீன் தாக்கியதனால் கிழிந்து சுருங்கிப்போன, முடிச்சுகள் மிகுதியாயுள்ள வலையினைச் செப்பம் செய்வர். அதனைத் தம் கையில் கொண்டு கடலிலே பெருமீன்களைக் கருதிச் சென்ற மீன் வேட்டையாடும் இளையர் வலையில் அகப்பட்டுத்தான் தலைவி அழிவாள்" என்று தோழி, செவிலியிடம் கூறினாள்.

கருத்து

வேற்று வரைவுக்குத் தமர் இசைந்தால் தலைவி கடலில் வீழ்ந்து உயிர் துறப்பாள். உயிர் துறந்த அவள், மீன் வலையிற்றான் அகப்படுவாள்.

குறிப்பு

அன்னாய்! தலைவியின் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் தலைவனுடைய தேர் நமது பாக்கத்திற்கு நாள்தோறும் வந்துகொண்டிருக்கிறது. அவளோடு தலைவன் கொண்டுள்ள காதலுறவை ஊரார் அறிந்து அலர் தூற்றுகின்றனர். இனி அவர் நம் பாக்கத்திற்கு வந்து வறிதே செல்லார். இதனை மனத்திற்கொண்டு மகட்கொடை வேண்டி வரும் பிறரை மறுத்தலே முறையாம். இல்லையாயின் தலைவி உயிர் துறப்பாள் என்னும் பொருள் படத் தோழி பேசுகின்றாள்.

சொற்பொருள்

1. கண்டல் - தாழை; கழி - உப்பங்கழி; படப்பை - தோட்டக்கால்.
2. முண்டகம் - நீர்முள்ளிச்செடி; குறியிறை - குறுகிய கூரையைக் கொண்ட; குரம்பை - குடிசை.
3. கல்லெ‌ன - ஆரவாரிக்கும்படியாக.
4. நெடுந்தேர் பண்ணி - நெடிய தேரைச் செலவிற்கு ஏற்றவாறு செய்து; வரல் - நாளும் வருதல்; ஆனாதே - தவிர்வதில்லை.

5. குவவு மணல் - குவிந்த மணல்மேடு; நீந்தி - கடந்து.
6. பெயர்வர் தாமே? - வறிதே பெயர்ந்து செல்வாரோ?; அல்கல் - இரவுப் பொழுதில்.
7. குழீஇ - கூடி.
8. கோட்சுறா - கொலைவல்ல சுறாமீன்; எறிந்தென - தாக்கியதால்; சுருங்கிய - கிழிந்து சுருங்கிய; நரம்பின் - வலையினை.
10. பெருங்கால் - பெரிய காற்றினால்.
11. திரை எழு - அலை எழுகின்ற; பௌவம் - கடல்; முன்னிய - கருதிச் சென்ற.
12. கொலை வெஞ்சிறாஅர் - மீன் கொலையை விரும்பும் இளையவர்; பாற்பட்டனள் - வலையில் அகப்பட்டனள் ஆவாள். (கடலில் விழுந்து இறந்து மீன் வலையில் அகப்படுவாள்).

தோழி கூற்று

ஐங்குறுநூறு 29 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

வரைவு எதிர்கொள்ளார் தமர் அவண் மறுப்புழித் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தலைவனைச் சேர்ந்தோர் வரைவு கேட்டு வர, தலைவிக்கு உறவினர் அதனை ஏற்காது மறுத்தனர். அப்போது தோழி, தலைவியின் களவு உறவைச் செவிலித்தாய் அறியச் சொல்லியது.

மாரி கடிகொள, காவலர் கடுக,
வித்திய வெண்முளை கள்வன் அறுக்கும்
கழனி ஊரன் மார்புற மரீஇ,
திதலை அல்குல் நின்மகள்
பசலை கொள்வது எவன்கொல்? அன்னாய்!

தெளிவுரை

மழை மிகுதியாய்ப் பெய்கின்றது; விளைநிலங்களைக் காக்கும் பணியினைச் செய்யும் காவலர் விரைந்து செல்கின்றனர். வயலில் விதைக்கப்பட்ட நெல்லில் தோன்றிய வெண்மையான முளைகளை நண்டு அறுக்கின்றது. இத்தகைய காட்சிக்குரிய கழனிகளைக் கொண்டவன், ஊரன். அவனது மார்பை இறுகத் தழுவிய பின்னரும் தேமல் படர்ந்த அல்குலைக் கொண்ட உன் மகள் பசலை நோய் கொண்டு வருந்துவது யாது காரணம் பற்றியோ?

கருத்து

வரைவு வேண்டிவந்த தலைவனை முன்பே தழுவி இன்புற்றவள் தலைவி என்பதைச் சுட்டி, அவனுக்கு மகட்கொடை நேர்தலே அறத் தொடுபட்ட நெறி எனத் தோழி கூறினாள்.

உள்ளுறை

வயலில் முளைக்கும் நெல்முளையினை அவ்வயலில் வாழும் நண்டே அறுக்கும் என்றது, தம் மகளின் கற்பு மேம்படுதலைத் தமரே சிதைக்கின்றனர் என்பதாம்.

சொற்பொருள்

1. கடிகொள - மிகுதியாய்ப் பெய்ய; கடுக - விரைந்து செல்ல.
2. வித்திய - விதைத்த; கள்வன் - நண்டு.
3. மரீஇ - தழுவி.
4. திதலை - தேமல்.
5. எவன்கொல்? - எதனாலோ?

தோழி கூற்று

ஐங்குறுநூறு 30 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

வரைவு எதிர்கொள்ளார் தமர் அவண் மறுப்புழித் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தலைவனுக்கு உரியவர் வரைவு கேட்டு வர, தலைவிக்கு உறவினர் அதனை ஏற்காது மறுத்தனர். அப்போது தோழி, தலைவியின் களவு உறவைச் செவிலித்தாய் அறியுமாறு சொல்லியது.

வேப்புநனை அன்ன நெடுங்கண் கள்வன்
தண்ணக மண்அளை நிறைய, நெல்லின்
இரும்பூ உறைக்கும் ஊரற்குஇவள்
பெருங்கவின் இழப்பது எவன்கொல்? அன்னாய்!

தெளிவுரை

அன்னையே! வேம்பம் பூவின் அரும்பைப் போன்ற நெடுங்கண்களைக் கொண்டது, நண்டு. அதன் மண்வளை குளிர்ச்சியான உள்ளிடத்தைக் கொண்டது. அவ்வளை நிறையும் படியாக நெற்பயிரின் பூக்கள் மிகுதியாய் உதிர்ந்து கிடக்கும். இத்தகைய விளைவயல்களையுடைய ஊரனாகிய தலைவன் பொருட்டாய் உன் மகள் தன் பேரழகினை இழப்பது எதனாலோ?

கருத்து

ஊரனே இவள் கணவன் ஆதற்குரியவன்; அதனால் வரைவுக்கு உடம் படுதலைச் செய்வீர்!

உள்ளுறை

அலவனின் வளை நிறையும்படி நெற்பூ உதிர்ந்து கிடப்பது போல, தலைவனின் மனையிலும் செல்வம் குவிந்திருக்கும் எனத் தோழி அவன் செல்வப்பெருக்கினைக் கூறி வரைவுடம்படக் கூறினள்.

சொற்பொருள்

1. வேப்பு - வேம்பு; நனை - அரும்பு; கள்வன் - நண்டு.
2. தண்ணக - குளிர்ச்சியான உள்ளிடம் கொண்ட; மண்அளை - மண் வளை.
3. இரும்பூ - மிகுதியான பூக்கள்; உறைக்கும் - உதிர்ந்து கிடக்கும்; ஊரற்கு - ஊரினை உடையவனுக்கு.
4. கவின் - அழகு; எவன்கொல்? - எதனாலோ?

தோழி கூற்று

ஐங்குறுநூறு 212 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவெதிர் கொள்ளார் தமர் அவண் மறுத்தவழித் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தலைவன்பொருட்டாகச் சான்றோர் சிலர் வந்து, தலைவியைத் தலைவனுக்கு முறையாக மணம் செய்து கொடுக்குமாறு தலைவியைப் பெற்றோரிடம் விரும்பிக் கேட்கின்றனர். தலைவியின் இல்லத்தார் அதை ஏற்காது மறுத்துப் பேசுகின்றனர். அப்போது தலைவன், தலைவி ஆகியோரின் களவுறவை வெளிப்படுத்தி, பெற்றோரை இசையச் செய்யுமாறு செவிலியைத் தோழி வற்புறுத்துவது.

சாத்த மரத்த பூழில் எழுபுகை
கூட்டுவிரை கமழும் நாடன்
அறவற்கு எவனோ, நாம்அகல்வு? அன்னாய்!

தெளிவுரை

அன்னையே! சந்தன மரங்களுக்கு இடையேயுள்ள நிலத்தில் சுட்டெரிக்கப்படும் அகில் கட்டையின் நறிய புகை, சந்தனப் பூக்களின் நறுமணத்தோடு சேர்ந்து ஒரு புதுக் கலவை மணம் பரவி நிற்கும். இத்தகைய மலைநாட்டிற்கு உரியவன், தலைவன்.

அறப்பண்புகள் நிறைந்திருக்கும் அவனை நாம் விலக்குவதற்குக் காரணம்தான் என்ன?

கருத்து

தலைவனுக்கு இசைவளிப்பதே செயற்குரிய அறம்.

குறிப்பு

அகிலின் புகை, சந்தன மணத்தோடு கலந்து மணப்பதைப்போல் தலைவன் செல்வ வளத்தோடு பண்பு நலமும் பெற்றவன். அவன் பெருமை கருதாது தமர் மறுப்பது அறிவுடைமையாகாது.

சொற்பொருள்

1. சாத்த மரம் - சந்தன மரம்; பூழில் - அகில்.
2. கூட்டுவிரை - சந்தன மணமும் அகில் மணமும் கலந்த மணம்.
3. அறவன் - அறப்பண்புகள் கொண்ட தலைவன்; எவன் - ஏன்?. அகல்வு - அகல்தல், மறுத்தல்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 271 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் வரைவு வேண்டி விடத் தமர் மறுத்துழிச் செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தலைவன் தக்கவர்களை அனுப்பித் தலைவியைப் பெண் கேட்டான்; தலைவியின் காதலை அறியாத சுற்றத்தார் மறுத்தனர். அப்படி அவர்கள் மறுத்தபோது செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது.

அவரை அருந்த மந்தி பகர்வர்
பக்கில் தோன்றும் நாடன் வேண்டின்,
பகப்போல் பெண்டிரும் பெறுகுவன்;
தொல்கேள் ஆகலின் நல்குமால் இவட்கே.

தெளிவுரை

அவரைக்காயை வயிறு புடைக்கத் தின்ற மந்திகள், பண்டங்களை விலை கூறி விற்பவர்களின் பைகள் போலத் தோன்றும். அத்தகைய காட்சிக்குரிய மலைநாட்டைச் சார்ந்தவன் விரும்பினால், ஆண் ஏற்றினை விரும்பும் பசுக்களைப் போலத் தன்னை விரும்பி வரும் மகளிர் பலரையும் மனைவியராய் ஏற்றுக்கொள்ள இயலும். ஆனால், அவன் நம் தலைவிக்குப் பழமையான உறவினைக் கொண்டவன். ஆதலால், இவள் ஒருத்திக்கு மட்டுமே அவன் தன் காதலை நல்குகிறான்.

கருத்து

பலரும் அவனுக்குப் பெண் கொடுக்க முன்வருவர். எனினும், அவன் தலைவிமேல் காதல் கொண்டவனாதலின் நம் மகளைத் தவிர வேறு எவரையும் ஏற்க மாட்டான். அவனுக்கு மகட்கொடை நேர்தலே ஏற்புடையது.

சொற்பொருள்

1. அவரை - அவரைக்காய்; அருந்த - தின்ற; மந்தி - பெண்குரங்கு; பகர்வர் - பண்டங்களை விலை கூறி விற்பவர்.
2. பக்கு - பை.
4. தொல் கேள் - பழமையான உறவு; நல்குதல் - கொடுத்தல்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 228 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் வரைவு வேண்டிவிடத் தமர் மறுத்துழி அவர் கேட்குமாற்றால் தலைமகட்குச் சொல்லுவாளாய், தோழி அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

பெரியவர்களை அனுப்பிப் பெண் கேட்குமாறு தலைவன் ஏற்பாடு செய்தான். ஆனால், தலைவனின் பெருமையையும், தலைவிபால் அவன் கொண்ட காதலையும் அறியாமல் தலைவியின் சுற்றத்தார் பெண் கொடுக்க

மறுத்தனர். அந்த நிலையில் தலைவியிடம் சொல்வதுபோலத் தோழி அறத்தொடு நின்றது.

அம்ம, வாழி! தோழி! நம்மூர்
நிரந்துஇலங்கு அருவிய நெடுமலை நாடன்
இரந்துகுறை உறாஅன் பெயரின்,
என்ஆவது கொல்நம் இன்உயிர் நிலையே.

தெளிவுரை

தலைவியே! நீ வாழி! யான் கூறுவதைக் கேள். ஒளிமிக்க அருவி இடைவிடாது ஒழுகுதற்கு இடமான நெடிதுயர்ந்த மலைகளைக் கொண்ட நாட்டிற்கு உரியவன், நம் தலைவன்; அவன் நம் சுற்றத்தாரிடம் மணவினை வேண்டி அதனைப் பெறாதவனாய் மனக்குறையோடு நம்மூரை விட்டு நீங்கினால் அப்போது நம் உயிரின் நிலை என்ன ஆகுமோ? (நம் உயிர் நிலை பெறாது.)

கருத்து

சுற்றத்தார் இத்தலைவனுக்கு மகட்கொடை நேராராயின் தலைவி இறந்துபடுதல் உறுதி.

குறிப்பு

செவிலி கேட்குமாறு தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

2. நிரந்து இலங்கு - இடையீடு இல்லாமல் ஒழுகும்; அருவிய - அருவியினைக் கொண்ட.
3. இரந்து - வேண்டி; குறைஉறாஅன் - காரியத்தை முடித்துக் கொள்ளாமல்; பெயரின் - திரும்பினால்.
4. உயிர் நிலை - உடம்பில் உயிர் நிலைப்பது.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 108 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

அறத்தொடுநிலை பிறந்த பின்னும் வரைவு நீடிற்றாக மற்றொரு குலமகளை வரையுங்கொல் என்று ஐயுற்ற செவிலிக்குக் குறிப்பறிந்து தோழி அவட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றாள். களவு வெளிப்பட்ட பின்னும் தலைவன் திருமணம் செய்துகொள்ளாது காலம் கடத்தினான். தலைவன் மற்றொருத்தியை மணந்துகொள்வானோ எனச் செவிலி ஐயுற்றாள்; செவிலியின் எண்ணம் அறிந்து தோழி சொல்லியது.

அன்னை, வாழி!வேண்டு அன்னை! கழிய
முண்டகம் மலரும் தண்கடல் சேர்ப்பன்
எம்தோள் துறந்தனன் ஆயின்,
எவன்கொல் மற்றுஅவன் நயந்த தோளே?

தெளிவுரை

அன்னையே! நான் சொல்வதைக் கேள். உப்பங்கழிகளில் நீர் முள்ளிச்செடிகள் மலர்ந்து நிற்கும் குளிர்ச்சி பொருந்திய கடற்கரை நாட்டையுடையவன், தலைவன். அவன் எம் தோள்களை விரும்பாது துறந்தானாயின், அவனால் விரும்பப் பட்ட எம் தோள்களின் நிலைமை என்ன ஆகும்?

கருத்து

தலைவன் தலைவியைப் பிரியாதிருக்கும் பேரன்பு கொண்டவன்.

குறிப்பு

கழி, புலால் நாற்றம் கொண்டது. அங்கு நீர்முள்ளி மலர்ந்து மணம் கமழும் என்னும் தொடர் வாயிலாய், தலைவன் கால நீட்டிப்பால் அன்பில்லாதவன்போலத் தோன்றினன். ஆயினும், தலைவியைப் பிரியாதிருக்கும் பேரன்பு கொண்டவன் என்னும் குறிப்புப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. கழி - உப்பங்கழி.
2. முண்டகம் - நீர்முள்ளிச்செடி; சேர்ப்பன் - நெய்தல்நிலத் தலைவன்.
3. துறந்தனன் - நீங்குவான்.
4. நயந்த - விரும்பிய; எவன் கொல் - என்ன ஆகும்?

3-4.எம் தோள் எவன் கொல் - எம் உடல் மிகவும் சுருங்கி இறந்துபடும்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 109 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

அறத்தொடு நின்ற பின்பு வரைவான் பிரிந்த தலைமகன் கடிதின் வாராதவழி ஐயுற்ற செவிலி, 'அவன் நும்மைத் துறந்தான் போலும்! நுங்கட்கு அவன் கூறிய திறம் யாது?' என்றாட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தோழி அறத்தொடு நின்றாள். அதன் பிறகு தலைவன் திருமண ஏற்பாட்டின் பொருட்டுப் பிரிந்தான். பிரிந்தவன் உடனே திரும்பாத பொழுது செவிலி ஐயுற்று, "தலைவன் உங்களைத் துறந்துவிட்டான் போலும்! அவன் உங்களிடம் என்ன சொன்னான்?" என்று வினவிய செவிலியிடம் தோழி சொல்லியது.

அன்னை, வாழி!வேண்டு அன்னை! நெய்தல்
நீர்ப்படர் தூம்பின் பூக்கெழு துறைவன்
எம்தோள் துறந்தகாலை எவன்கொல்
பல்நாள் வரும்அவன் அளித்த பொழுதே?

தெளிவுரை

அன்னையே! வாழ்க! நாங்கள் சொல்வதைக் கேள். நீர் செல்லும் மதகில் படர்ந்தோடிப் பூக்கும் நெய்தற்பூக்களைக் கொண்ட துறைகளையுடையவன், தலைவன். அவன் பண்டு, நம் தலைவியைக் கண்டு மகிழ்ந்து பிரிந்தபோது, 'நாடறிய மணம்

செய்வேன்; கலங்க வேண்டா' என்று உறுதிபடச் சொல்லிய சொற்கள் எம் நெஞ்சில் பன்னாளும் எழுந்தவண்ணம் உள்ளன! அது எதனால்? (அவனிடம் கொண்ட நம்பிக்கையினாலேயே!)

கருத்து

வரைதற்பொருட்டுப் பொருள் தேடிச் சென்றுள்ளானாயினும், அவன் நெஞ்சால் பிரிவின்றி எம்மை நினைத்தவண்ணமே உள்ளான். அதுவே எம் நெஞ்சுள்ளும் தோன்றியவண்ணம் இருக்கிறது.

குறிப்பு

மதகில் பூத்த நெய்தற்பூ வெளிப்படக் கண்ணுக்குத் தெரியாதெனினும் நெய்தல் கொடி பூத்தலில் தவறாது என்னும் தொடர்மூலம், தலைவன் தன் நிலைமைபற்றி யாதும் வெளிப்படக் கூறானாயினும், ஊரறிய மணம் செய்துகொள்ளுதலில் ஒருபோதும் தவறான் என்னும் கருத்து வெளிப்படு கிறது.

சொற்பொருள்

2. தூம்பு - ஏரி மதகு.
3. எம்தோள் துறந்த காலை- எமது தோளைத் துறந்து உறைகின்ற காலத்தே.
4. பல்நாள் வரும் - பல நாளும் எம் நினைவில் வந்தவண்ணம் உள்ளன; அவன் அளித்த பொழுது - அவன் பிரிந்தபோது கூறிய உறுதிச்சொற்கள்.

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 62 **மூவாதியார்**

திணை : நெய்தல்

கூற்று

அறத்தொடு நின்றபின் வரைவு நீட மற்றொரு குலமகளைத் தலைமகன் வரையுங்கொல் என்று ஐயுற்ற செவிலியின் குறிப்பறிந்து தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியர் கொண்டிருந்த களவொழுக்கம் வெளிப்பட்டது. அறத்தொடு நிற்றல் நிகழ்ந்தது. மணம் நிகழாமல் காலம் நீண்டது. அதுபோழ்து செவிலித்தாய், 'தலைவன் வேறொருத்தியை மணந்து

கொள்வானோ' என ஐயுற்றாள். அவள் குறிப்பை அறிந்து தோழி செவிலித் தாயிடம் சொல்லியது.

> அடும்பிவர் எக்கர் அலவன் வழங்கும்
> கொடுங்கழிச் சேர்ப்பன் அருளான் எனத்தெளிந்து
> கள்ள மனத்தான் அயல்நெறிச் செல்லுங்கொல்
> நல்வளை சோர நடந்து.

தெளிவுரை

"அடும்பங்கொடிகள் மேலேறிப் படரும்படியான மணல் மேடுகளில் நண்டுகள் விளையாடும் வளைந்த கடற்கரையை யுடையவன், தலைவன். அவன் மணம் பேசியும் இன்னும் வரைவு நீடுதலான், கள்ளமனமுள்ள அவன் வரைந்துகொள்வானோ அன்றோ என்று ஐயுறுகின்றனையோ? நல்ல வளையலை அணிந்த நம் தலைவி துன்பம் அடையும்படி வஞ்சகமாய் அயல் ஒருத்தியை அடையும் வழியில் அவன் ஒருகாலும் நடக்க மாட்டான்" என்று தோழி செவிலியிடம் கூறினாள்.

கருத்து

தலைவன் இவளை விடுத்து வேறு எவரையும் ஒருகாலும் மணக்க மாட்டான்.

சொற்பொருள்

1. அடும்பு - அடும்பங்கொடிகள்; இவர் - மேலேறிப் படரும்படியான; எக்கர்- மணல்மேடு; அலவன் - நண்டுகள்; வழங்கும் - விளை யாடும்.
2. கொடுங்கழி - வளைந்த உப்பங்கழி; சேர்ப்பன் - கடல்நிலத் தலைவன்; அருளான் - மணம் செய்துகொள்வானோ மாட்டானோ; எனத் தெளிந்து - என ஆராய்ந்து.
3. கள்ள மனத்தான் - இவன் கள்ள மனமுள்ளவன்; அயல்நெறிச் செல்லும் - இவளைவிட்டு அயலொருத்தியை மணக்கும் வழியில் செல்வானோ?
4. நல்வளை - நல்லவளாகிய தலைவியை; சோர - துன்புறும்படியாக; நடந்து - ஒழுகி.

வரைவிடைப் பிரிவு

தலைவியுடன் களவிற்பயிலும் தலைவன் அவளை மணத்தற்கு வேண்டும் பரிசப் பொருள் கொடுக்க வேண்டிப் பொருளீட்டிவரத் தலைவியைவிட்டு நீங்கி இரு திங்கள் எல்லைக்குள் நாடு இடையிட்டும் காடு இடையிட்டும் செல்லும் பிரிவு.

தன் முன்னோர் ஈட்டிய செல்வம் மிகுதியும் உண் டேனும், தான் முயன்று தேடிய பொருளையே பரிசப் பொருளாக வழங்குதல் வேண்டும் என்ற ஊக்கத்தால் தலைவன் களவொழுக்கத்திடையே இப்பிரிவை மேற் கொள்வான்.

தோழி கூற்று

அகநானூறு 286 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

'வரைந்து எய்துவல்' என்று நீங்கும் தலைமகன், 'தலைமகளை ஆற்று வித்துக்கொண்டிருத்தல் வேண்டும்' என்று தோழியைக் கைப்பற்றியது தன்னைத் தொட்டுச் சூளுறுவானாகக் கருதித் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

திருமணத்திற்காகப் பொருள் ஈட்டி வரும்பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரியக் கருதினான்; 'உரிய காலத்தில் மீண்டு வந்து தலைவியை மணந்துகொள்வேன்; அதுவரை அவளை ஆற்றுவித்திரு' என்று தோழியின் கையைத் தொட்டுச் சொன்னான்; அதனைச் சூள்மொழி எனக் கருதிய தோழி அச்செயல் மிகையானது என்பதுபடத் தலைவனை நோக்கிச் சொல்லியது.

வெள்ளி விழுத்தொடி மென்கருப்பு உலக்கை,
வள்ளி நுண்இடை வயின்வயின் நுடங்க,
மீன்சினை அன்ன, வெண்மணல் குவைஇ,
காஞ்சி நீழல் தமர்வளம் பாடி,
ஊர்க்குறு மகளிர் குறுவழி, விறந்த
இறாஅல் அருந்திய சிறுசிரல் மருதின்
தாழ்சினை உறங்கும் தண்துறை ஊர!
விழையா உள்ளம் விழையும் ஆயினும்,
என்றும், கேட்டவை தோட்டிஆக மீட்டு,ஆங்கு,
அறனும் பொருளும் வழாமை நாடி,
தன்தகவு உடைமை நோக்கி, மற்றுஅதன்
பின்ஆ கும்மே, முன்னியது முடித்தல்;
அனைய பெரியோர் ஒழுக்கம், அதனால்,
அரிய பெரியோர்த் தெரியுங் காலை,
நும்மோர் அன்னோர் மாட்டும், இன்ன
பொய்யொடு மிடைந்தவை தோன்றின்,
மெய்யாண்டு உளதோ,இவ் உலகத் தானே?

தெளிவுரை

தலைவனுடைய மருத நிலத்தில், ஊரிலுள்ள இளம் பெண்கள், காஞ்சி மரத்தின் நிழலில் மீன் முட்டை போன்ற வெண்ணிற மணலைக் குவித்து அதைக் குற்றி விளையாடுவர். மெல்லிய கரும்பை உலக்கையாகக்கொண்டு, அதற்கு வெள்ளி யினால் செய்த பூணை அணிவிப்பர். கொடி போன்ற நுண்மை யான இடை அங்கும் இங்கும் அசையுமாறு, தம் குடியின் பெருமையைப் பாடிக்கொண்டே குற்றுவர். அந்தப் பாட்டினைக் கேட்டவாறு, இறால் மீனைத் தின்ற சிறிய மீன்கொத்திப்பறவை மருத மரத்தின் தாழ்ந்த கிளையில் அமர்ந்து உறங்கும். அத்தகைய காட்சிக்குரிய குளிர்ச்சி பொருந்திய துறையைக் கொண்ட தலைவனே!

இயல்பாகவே அறம் அல்லாதவற்றை என்றும் விரும்பாத உள்ளத்தினைக் கொண்டவர், சில நேரங்களில் அவற்றை விரும்பினாலும், தாம் கேட்டறிந்த நல்லுரைகளை அங்குசமாய்க் கொண்டு, மனம் என்னும் மத யானையை அடக்குவர்; இல்லறத்திலும், பொருள் ஈட்டுவதிலும் வழுவாத முறையை நன்கு ஆராய்ந்து, தமது தகுதியையும் பார்த்து அதன் பின்னரே செய்யக் கருதிய செயல்களைச் செய்து முடிப்பர். பெரியோர் ஒழுக்கம் இதுவே.

அதனால் அரிய செயல்களைச் செய்யும் உன்னை ஒத்த பெரியோரிடமும் இத்தகைய பொய்யோடு கூடிய சொற்கள் தோன்றுமாயின், இவ்வுலகில் உண்மை என்பது எங்கு இருக்கும்?

கருத்து

"குளிர்ச்சி பொருந்திய துறையினையுடைய ஊரனே! அறம் அல்லாத வற்றை என்றும் விரும்பாத உள்ளம் ஒரு சமயம் விரும்பினாலும், கேட்ட கேள்வியறிவின் துணையால் அதனை அவ்வழிச் செல்லாது தடுத்து, ஆராய்ந்து பார்த்து அதன் பிறகே நினைத்தன செய்தல் பெரியோர் செயல்; அதனால் உம் போன்ற பெரியோர்களிடத்திலும் இத்தகைய பொய்ம் மொழிகள் தோன்றினால் இவ்வுலகத்தில் உண்மை என்பது எங்குத்தான் இருக்கும்?" என்று தோழி, தலைவனிடம் கூறினாள்.

குறிப்பு

1. தலைவன் அருள் செய்து கூடிய காலத்தில், ‘என்றும் பிரியேன்’ என்று சொன்னதை நம்பி, ‘இவன் வாய்மையாளன்; பொய் கூறான்’ என்று கருதிக்கொண்டிருந்த தலைவியின் தெளிந்த நிலையினைப் பொய்யாக்கி, அவன் ‘பொருள்வயிற் பிரிவேன்’ என்றதனால் தோழி இங்ஙனம் கூறினாள்.

2. ‘கரும்பு உலக்கைக்கு வெள்ளிப்பூண்’ என்றது, அவன் நாட்டுச் செல்வச் செழிப்பைக் கூறியது. இத்தகைய செல்வ வளம் உள்ள நாடன், ‘பொருள் தேடி ஏன் பிரிய வேண்டும்’ என்பது ஒரு குறிப்பு.

சொற்பொருள்

1. விழுத்தொடி - சிறந்த பூண்.
2. வள்ளி - ஒரு கொடி; வயின்வயின் - அங்கும் இங்கும்; நுடங்க - அசைய.
3. மீன்சினை - மீன் முட்டை; குவைஇ - குவித்து.
4. காஞ்சி - ஒரு மரம்; தமர் - தம் குடி, உறவினர்; வளம் பாடி - பெருமைகளைப் பாடி.
5. குறுமகளிர் - சிறு மகளிர்; குறுவழி - குற்றும் பொழுது; விறந்த - செறிந்த.
6. இறாஅல் - இறால் மீன்; சிரல் - மீன்கொத்திப்பறவை; மருது - மருத மரம்.
7. தாழ் - தாழ்ந்த; சினை - கிளை.
8. விழையா உள்ளம் - (அறம் அல்லாதவற்றை) விரும்பாத உள்ளம்.
9. கேட்டவை - கேட்டறிந்த நல்லுரைகள்; தோட்டி - அங்குசம்; மீட்டு - உள்ளமாய யானையை மீட்டு.
10. வழுவுதல் - தவறுதல்; நாடி - ஆராய்ந்து.
11. தகவு உடைமை - தகுதியுடைமை.
12. பின் - பின்னரே; முன்னியது - தான் கருதியது.
13. அனைய - அத்தகைய.
14. தெரியுங்காலை - ஆராயுமிடத்து.
15. நும்மோர் அன்னோர் - உம்மை ஒத்த பெரியோர்; மாட்டும் - இடத்தும்.
16. மிடைந்தவை - கூடிய.
17. மெய் - உண்மை; யாண்டு - எங்கு.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 273 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வைத்துப் பிரியும் தலைமகன், 'நின் துணைவியை உடம்படுவித்தேன், இனி நீயே இதற்குடம்படாது கலிழ்கின்றாய்' என்றாற்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

"திருமணத்தை முன்னிட்டுப் பொருளீட்டி வரப் பிரிந்து செல்வதற்குத் தலைவியின் இசைவினைப் பெற்றுவிட்டேன்; ஆனால், நீயோ உடன்படாது அழுகின்றனையே!" எனத் தோழியிடம் தலைவன் கூறியபோது, தோழி அவனிடம் சொல்லியது.

அத்தச் செயலைத் துப்புஉறழ் ஒண்தளிர்
புன்தலை மந்தி வன்பறழ் ஆரும்
நல்மலை நாட! நீசெலின்,
நின்நயந்து உறைவி என்னினும் கலிழ்மே.

தெளிவுரை

புல்லிய தலையினைக் கொண்ட மந்தியின் வலிமையுள்ள குட்டி, வழியிலுள்ள அசோகின் பவளம் போன்ற செந்நிற ஒளி பொருந்திய இளந்தளிரைத் தின்னும். இத்தகைய காட்சிக் குரிய நல்ல வளம் பொருந்திய மலைநாட்டிற்குத் தலைவனே! உன்னையே தன்னுயிராய்க் கொண்டு வாழ்கிறாள், எம் தலைவி; நீ பிரியும் பொழுது அவள் வருத்தம் கண்டு நானழுவேன்; என்னினும் மிகுதியாய் அவள் அழுவாள். (அவளை யார் தேற்ற இயலும்?)

கருத்து

'தலைவி, உன்னிடம் பேரன்பு கொண்டவள். ஆதலின், உன் விருப்பத்துக்கு உடன்பட்டனள்; ஆனால், நீ பிரிந்தால் மிகுதியும் அழுவாள். அவளைத் தேற்ற என்னாலும் இயலாது. ஆகவேதான், பொருள் வயிற்பிரியக் கூடாது என்றேன்' என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

உள்ளுறை

மந்தியின் குட்டி இளைய தளிரை உண்டது என்னும் தொடர் மூலம், தலைவனும் தலைவியின் இளமை கழிந்து காமச்செவ்வி மாறுமுன்னே வரைந்து கொள்ளல் வேண்டும் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. அத்தம் - வழி; செயலை - அசோகு; துப்பு உறழ் - பவளம் போன்ற; ஒண்தளிர் - ஒளி பொருந்திய இளந்தளிர்.
2. புன்தலை - முடியில்லாத வெறுந்தலை; பறழ் - குட்டி; ஆரும் - தின்னும்.
3. செலின் - பிரிந்து சென்றால்.
4. நயந்து - விரும்பி; உறைவி - வாழும் தலைவி; கலிழ்ம் - அழுவாள்.

தோழி கூற்று

கலித்தொகை 136 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை வைத்துப் பிரியக் கருதிய தலைமகனைத் தோழி, தலைமகள் ஆற்றாமை கூறிச் செலவு விலக்கி வரைவுகடாயது.

கூற்று விளக்கம்

திருமணத்தை முன்னிட்டுப் பொருள்தேடப் பிரியக் கருதிய தலைவனிடம் தோழி, தலைவியின் ஆற்றாமையை எடுத்துக்கூறிப் பொருள் தேடச் செல்லும் முயற்சியை விலக்கித் திருமணம் செய்து கொள்ளுமாறு கூறியது.

(வரைவிடை வைத்துப் பிரிதல் - தலைவியது வீட்டார்க்குக் கொடுக்கும் வரைபொருளுக்காகப் பிரிதல். செலவு விலக்குதல் - பயணத்தைத் தவிர்த்தல்.)

தரவு

இவர்,திமில், எறிதிரை ஈண்டிவந்து அலைத்தக்கால்,
உவறுநீர் உயர்எக்கர், அலவன்ஆடு அளைவரி,
தவல்இல்தண் கழகத்துத் தவிராது வட்டிப்பக்
கவறுஉற்ற வடுஏய்க்கும், காமர்பூங் கடற்சேர்ப்ப!

தாழிசை

முத்துஉறழ் மணல்எக்கர் அளித்தக்கால், முன்ஆயம்
பத்துஉருவம் பெற்றவன் மனம்போல, நந்தியாள்—
அத்திறத்து நீநீங்க, அணிவாடி, அவ்ஆயம்
வித்தத்தால் தோற்றான்போல், வெய்துயர் உழப்பவோ?

முடத்தாழை முடுக்கருள் அளித்தக்கால், வித்தாயம்,
இடைத்தங்கக் கண்டவன் மனம்போல, நந்தியாள்—
கொடைத்தக்காய்! நீஆயின், நெறியல்லாக் கதியோடி,
உடைப்பொதி இழந்தான்போல், உறுதுயர் உழப்பவோ?

நறுவீதாழ் புன்னைக்கீழ் நயந்துநீ அளித்தக்கால்,
மறுவித்தம் இட்டவன் மனம்போல, நந்தியாள்—
அறிவித்து நீநீங்கக் கருதியாய்க்கு அப்பொருள்
சிறுவித்தம் இட்டான்போல், செறிதுயர் உழப்பவோ?

ஆங்கு—

சுரிதகம்

கொண்டுபலர் தூற்றும் கௌவை அஞ்சாய்,
தீண்டற்கு அருளித் திறன்அறிந்து, எழீஇப்
பாண்டியம் செய்வான் பொருளினும்
ஈண்டுக, இவள்நலம்! ஏறுக, தேரே!

தெளிவுரை

"கடலின் கரையை ஒட்டி மீன் பிடிக்கும் படகுகள் சென்று கொண்டிருக்கின்றன; கடல்அலைகள் அடிக்கடி, மணற்பாங்கான கரையில் மோதுகின்றன. அங்கே, மணல்மேட்டில் வளையி லிருந்து வெளிவந்த புள்ளிகளைக் கொண்டுள்ள நண்டுகள் ஓடி விளையாடுகின்றன; அலையில் சிக்கித் திணறினும், மீண்டும் மீண்டும் மணலில் ஓடி விளையாடும் அந்நண்டுகள், சூதாடும்

இடத்தில் இடைவிடாது உருட்டுதலால் வடுகொண்ட தாயக் கட்டைகளைப் போல் காணப்படுகின்றன. அத்தகைய அழகு நலம் கொண்ட கடற்கரைக்குரிய சேர்ப்பனே!

"முத்தினைப் போன்ற வெண்மையான மணல்முகட்டில், நீ தலைவியைக் கூடி இன்பம் கொண்டாய்; அப்பொழுது, தாய ஆட்டத்தில் பத்து என்னும் எண்ணிக்கையைப் பெற்று மகிழ் பவனைப் போலத் தலைவி மகிழ்ச்சியோடு காணப்பெற்றாள். நீ அவளை மணந்து இல்லறம் நடத்த முற்படாததால், தாய விளையாட்டில் சிறு எண்ணிக்கைகளைப் பெற்றவளைப்போல உன் தலைவியும் கொடிய துன்பம் கொண்டு வருந்துவதோ?

"வளைந்து காணப்பெற்ற தாழை மரங்கள் நிறைந்த மறைவான இடத்தில் நீ தலைவியைத் தழுவி இன்புற்ற போழ்து, சிறுதாயம் விழ வேண்டும் என்று எண்ணிச் சூதாடு காய்களை உருட்டியபோது, சிறு தாயமே விழுந்தால் ஒருவன் எவ்வாறு மகிழ்வானோ, அவ்வாறே தலைவி மகிழ்ந்திருந்தாள். கொடையில் வல்லவனாகிய நீ இப்பொழுது, பொருள்வயிற் பிரிவதாய்க் கூறியதால், சிறுதாயம் விழ வேண்டும் என்று எண்ணிய ஒருவன் அது விழாததால் சூதாட்டத்தில் தான் இட்ட பொருளை இழந்து எவ்வாறு வாடுவானோ, அவ்வாறே உன் தலைவியும் துன்பத்துள் வருந்துவதோ?

"நறுமண மலர்களைக் கொண்டுள்ள புன்னைமர நிழலில், நீ அவளைக் கூடியபோழ்து, சிறுதாயம் வேண்டிய போழ்து ஒரு முறைக்கு இருமுறை வீழ்ந்தால் ஒருவன் எவ்வாறு மகிழ்வானோ, அவ்வாறே உன் தலைவி மகிழ்ந்தாள்; நீ பிரிய நேர்ந்தால், இருமுறை சிறுதாயம் வேண்டியபோது, ஒரு முறை மட்டுமே வீழ்ந்தால் ஒருவன் எவ்வாறு மனம் வருந்துவானோ, அவ்வாறே உன் தலைவியும் வருந்துவதோ?

"ஊரார் அலர் தூற்றலுக்கும் நீ அஞ்சவில்லை. இவ்வாறு இராமல், இவளை வரைந்துகொண்டு கூடுவதற்கு அருள் செய்து அதற்குரிய திறத்தை அறிந்து உடனே உன் தேரில் செல்! அங்ஙனம் நீ சென்றால், உழைப்பாளி, தன் உழைப்புக்கேற்ற பொருள் பெற்றால் எவ்வாறு மகிழ்வானோ, அவ்வாறே தலைவியும் மகிழ்வாள்" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

தலைவ! தலைவியை மணக்க உடனே தேரேறிப் புறப்பட்டு வா.

விளக்கம்

தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே நிகழ்ந்த உறவுகளைக் கூறித் தோழி வரைவு வேண்டுகின்றாள். அவ்வாறு வேண்டும் பொழுது தலைவியின் நலம் பெருகுதற்கும் அழிவதற்கும், சூதாட்டமான தாய விளையாட்டின் நிகழ்வுகளைத் தோழி உவமைகளாய்ச் சுட்டிக்காட்டியுள்ளாள். அக்காலத்தில் ஆண்கள் மட்டுமேயன்றிப் பெண்களும் தாய விளையாட்டைச் சூதாடும் விளையாட்டாகவே கருதி ஆடினர் என அறிகிறோம். தாயம் உருட்டுகையில் இரு காய்களும் இணைந்து பத்து என்னும் எண்ணைக் குறிக்கும் வகையில் விழுந்தால் அது சிறப்பாகக் கருதப்பட்டது. சிறுதாயம் என்பது குறைந்த எண்ணைக் குறிக்கக் கூடியது என்று அறிய இயலுகிறது.

குறிப்பு

தலைவி, தலைவனை அடைய இயலாத நிலைக்குச் சூதாட்டத்தில் வேண்டிய எண் பெறாதவன் மனம் வருந்தும் நிலை உவமையாக்கப் பட்டுள்ளது.

சொற்பொருள்

1. இவர் - பரந்து தோன்றும்; திமில் - மீன்பிடி படகு; ஈண்டி - திரண்டு.
2. உவறு நீர் - ஊறுகின்ற நீர்; அலவன் - நண்டு; அளை - வளை; வரி - புள்ளி.
3. தவல்இல் - கெடுதல் இல்லாத, மனச்செருக்குக் குறையாத; கழகம் - சூதாடு களம்; வட்டிப்ப - உருட்ட.
4. கவறு - சூதாடு கருவி; வடு - தழும்பு.
5. அளித்தக்கால் - அருளியபோது.
6. பத்துஉருவம் பெற்றவன் - சூதாடு கருவியில் பத்து என்னும் எண்ணிக்கையினைப் பெற்றவன்; நந்துதல் - விளங்குதல்.
7. அணி வாடி - அழகு கெட்டு.
8. வித்தம் - சிறு தாயம்; வெய்துயர் - கொடிய துன்பம்; உழப்பவோ? - வருந்துவதோ?

9. முடத்தாழை - வளைந்து காணப்பெற்ற தாழை; முடுக்கர் - மறைவான இடம்.
11. கொடைத்தக்காய் - கொடை வல்லவன்; நெறியல்லாக் கதி ஓடி - நெறியல்லாத நெறியிலே சூதாடியதாலே.
12. உடைப்பொதி - (அச்சூதுக்கெனக்) கட்டி வைத்த பொருள்.
13. நறுவீ - நறுமலர்; அளித்தல் - அருளுதல்.
14. மறுவித்தம் - இருமுறை சிறு தாயம்.
16. செறி துயர் - மிகுந்த துன்பம்.
18. கௌவை - பழிச்சொல்.
19. தீண்டற்கு அருளி - மணந்துகொண்டு கூடுவதற்கு அருள் செய்து; திறன் - திறமை; எழீஇ - எழுக.
20. பாண்டியம் - பெரிதும் உழைத்தல்.
21. ஈண்டுதல் - பெருகுதல்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 257 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

'வரைவிடை வைத்துப் பிரிவல்' என்ற தலைமகற்குத் தோழி உடன்படாது கூறியது.

கூற்று விளக்கம்

'திருமணத்திற்காகப் பொருளீட்டிவரச் சிறிது காலம் உம்மைப் பிரிந்து திரும்புவேன்' என்று தலைவன் கூறியபோது, அதற்கு உடன்படாது தோழி சொல்லியது.

குன்றக் குறவன் கடவுள் பேணி,
இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள்
சேயரி நெடுங்கண் கலிழ,
சேயதால் தெய்யநீ பிரியும் நாடே.

தெளிவுரை

"ஒளி பொருந்திய வளையலை அணிந்துள்ள இளமைமிக்க தலைவியைக் குன்றத்தில் வாழும் குறவன், தான் வழிபடு தெய்வமாம் முருகனை வணங்கி வழிபட்டுப் பெற்றான். நீ பிரிந்து

செல்லும் நாடு வெகு தொலைவில் உள்ளது. நீ பிரிந்தால் இவளது சிவந்த அரி படர்ந்த நீண்ட கண்கள் நீர் சொரியும். ஆதலின், நீ பிரிந்து செல்வதை விட்டுவிடு" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

'நீ செல்ல விரும்பும் நாடு தொலைவில் இருப்பதால் நீ விரைவில் திரும்ப இயலாது. நீண்ட பிரிவினை ஆற்றாது தலைவி அழுவாள். எனவே, உன் செலவினைத் தவிர்த்திடு' என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. பேணி - வழிபட்டு.
2. இரந்தனன் - இரந்து; எல்வளை - ஒளி பொருந்திய வளையல்; குறுமகள் - இளைய மகள்.
3. சேயரி - சிவந்த அரி படர்ந்த; கலிழ - நீர் சொரிய.
4. சேயது - நெடுந்தொலைவில் உள்ளது.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 239 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

'வரைவிடை வைத்துப் பிரிவல்' என்ற தலைமகற்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

திருமணத்திற்காகும் செல்வத்தை ஈட்டிவரச் சிறிது காலம் பிரிந்து செல்வதாய்க் கூறும் தலைவனிடம், 'நீ பிரிந்தால் தலைவி உயிர் வாழ்ந்திராள்' எனத் தோழி கூறியது.

சுரும்புஉணக் களித்த புகர்முக வேழம்
இரும்பிணர்த் துறுகல் பிடிசெத்துத் தழூஉம்நின்
குன்றுகெழு நல்நாட்டுச் சென்ற பின்றை,
நேர்இறைப் பணைத்தோள் ஞெகிழ,
வாராய் ஆயின் வாழேம் தெய்யோ!

தெளிவுரை

தலைவ! வண்டுகள் மொய்த்து மகிழுமாறு மதநீர் ஒழுக, புள்ளிகளுடன் அழகிய முகம் கொண்ட ஆண்யானை, (தன் மதம் காரணமாய்) அருகிலிருந்த சொரசொரப்பான குண்டுக் கல்லைத் தன் பெண்யானை என்று கருதித் (தவறுதலாய்த்) தழுவிக்கொள்ளும். இத்தகைய காட்சிக்குரிய மலைகள் பொருந்திய உன்னுடைய நாட்டிற்குச் செல்கின்றாய். நீ சென்ற பின்னர், தலைவியின் மெல்லிய பெரிய தோள்களில் அணிந் துள்ள தொடி நெகிழும். அவை நெகிழும்படியாக நாங்கள் உயிர் வாழ்ந்திருக்க மாட்டோம்.

கருத்து

தலைவ! நீ பிரிந்தால் தலைவி உயிர் வாழாள். உனக்குத் தகுதியல்லாத ஒருத்தியைத் தகுதியுடையாளென்று நீ வரையவும் நேரிடும் என நகை யாடிக் கூறியது. (தோழி இவ்வாறு அச்சம் கொள்வது சரியன்று.)

சொற்பொருள்

1. சுரும்பு - வண்டு; களித்த - மதக்களிப்பினைக் கொண்ட; புகர் - புள்ளி; வேழம் - ஆண்யானை.
2. இரும்பிணர் - கருமையான சொரசொரப்பு; துறுகல் - உருண்டைக்கல்; பிடிசெத்து - பெண்யானை என்று கருதி.
3. பின்றை - பிறகு.
4. பணைத்தோள் - பெரிய தோள்; ஞெகிழ - மெலிய.
5. வாராய் ஆயின் - நீ விரைந்து வாராமல் காலம் நீட்டிப்பாயானால்; வாழேம் - உயிர் வாழ மாட்டோம்.

தோழி கூற்று

குறுந்தொகை 236 **நரிவெரூஉத்தலையார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிவான், 'இவள் வேறுபடாமை ஆற்றுவி' என்றாற்குத் தோழி நகையாடி உரைத்தது.

கூற்று விளக்கம்

வரைவிடை வைத்துத் தலைவியைப் பிரியக் கருதிய தலைவன், 'இவளைக் கவலையால் நலனழிந்து விடாமல் பொறுத்திருக்கச் செய்' என்று தோழியிடம் கூறியபோது தோழி நகைத்து, 'இஃது இயலாது' என்று கூறியது.

விட்டென விடுக்கும்நாள் வருக; அதுநீ,
நேர்ந்தனை ஆயின், தந்தனை சென்மோ!
குன்றத்து அன்ன குவவுமணல் அடைகரை
நின்ற புன்னை நிலம்தோய் படுசினை
5 வம்ப நாரை சேக்கும்
தண்கடற் சேர்ப்ப!நீ உண்டஎன் நலனே.

தெளிவுரை

கரையை அடைந்த மணல் குவிந்து குன்றுபோல் விளங்கும்; அதனிடத்தே நின்ற புன்னை மரத்தின் நிலந்தோய்ந்த தாழ்ந்த கிளையிலே புதிய நாரை வந்து தங்கும். அத்தகைய கடற்கரையை யுடைய தலைவனே! இவளை நீ கை விட்டாய் என்று அறியுமாறு பிரிந்து போகும் நாள் வருமாயின் வருக. அதற்கு நீயும் உடம்படுவாயானால், (அதற்குமுன்) நீ நுகர்ந்த எம் பெண்மை நலத்தினைத் தந்துவிட்டுச் செல்க!

கருத்து

இவளை நீ பிரிவதென்றால், உன்னால் கவரப்பட்ட இவள் பெண்மை நலத்தைத் தந்துவிட்டுச் செல்.

விளக்கம்

'இவளை ஆற்றுவித்திடு' என்று கூறிய தலைவனிடம் தோழி, 'ஐய! இவளை வேறுபடாது ஆற்றுவிக்க வேண்டுமென்றால், பிரிந்து செல்லும் நீ, இவளிடம் நுகர்ந்த பெண்மை நலன்களை யெல்லாம் தந்துவிட்டுச் செல். இல்லையேல் இவளை ஆற்று வித்தல் அரிது' என்று கூறுகிறாள்.

நீ பிரிந்தால் இவள் தன் பெண்மை நலமெல்லாம் நீங்கிட அழிந்துபடுவள் என்பது கருத்து.

சொற்பொருள்

1. விட்டென விடுக்கும் நாள் வருக - இவளை நீ முற்றிலும் கைவிட்டாய் என நாங்கள் அறிந்துகொள்ளும்படி நீ எம்மை விட்டுப் பிரிந்து போகும் நாள் வரட்டும்.
2. அது நீ நேர்ந்தனையாயின் - அதற்கு நீயும் உடம்படுவாயானால்; தந்தனை சென்மோ - (நீ செல்வதற்குமுன்) நீ நுகர்ந்த பெண்மை நலத்தினைத் தந்து செல்.
3. குன்றத்து அன்ன - குன்றுபோல; குவவு - குவிந்துள்ள; மணல் அடைகரை - மணல் அடர்ந்த கரையில்.
4. நிலந்தோய் - நிலத்தில் தோயும்படியாய்; படுசினை - தாழ்ந்துள்ள கிளையில்.
5. வம்ப நாரை - புதிய நாரைகள்; சேக்கும் - தங்கும்.
6. தண்கடற் சேர்ப்ப - குளிர்ச்சி பொருந்திய கடற்கரைக்குத் தலைவனே! (நீ உண்ட என் நலனைத் தந்துவிட்டுச் செல்).

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 286 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

உடன்போக்குத் துணிந்த தலைமகன் அஃது ஒழிந்து தானே வரைவிடை வைத்துப் பிரிய நினைந்ததனைக் குறிப்பினால் உணர்ந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைத் தன்னுடன் உடன்போக்கில் கூட்டிச் செல்லத் துணிந்தான். பிறகு, அம்முடிவை மாற்றிக்கொண்டு திருமணத்தை முன்னிட்டுப் பிரிந்து சென்று பொருளீட்டி வர விரும்பினான். அதனைக் குறிப்பால் உணர்ந்துகொண்ட தலைவி தோழியிடம் சொல்லியது.

சிறுதினை கொய்த இருவி வெண்கால்
காய்த்த அவரைப் படுகிளி கடியும்
யாணர் ஆகிய நன்மலை நாடன்
புகர்இன்று நயந்தனன் போலும்;
கவரும் தோழி!என் மாமைக் கவினே.

தெளிவுரை

தோழியே! சிறிய தினைக்கதிர்களை அறுத்த பின்பு நின்ற வெண்மையான தட்டைகளின்மீது படர்ந்துள்ள அவரைச் செடிகளில் காய்கள் காய்த்துள்ளன. அவற்றைத் தின்ன வரும் கிளிகளைக் குற மகளிர் ஓட்டிக்கொண்டிருப்பர். இத்தகைய புது வருவாயினைக் கொண்ட நல்ல மலைநாட்டுக்குத் தலைவன் இன்று தீங்கு ஒன்றனைச் செய்ய விரும்புகின்றான் போலும்! நான் அவனோடு கூடியிருத்தலானே நான் பெற்றிருந்த மாந்தளிர் போன்ற என் மேனியழகைத் தானே கவர்கிறான் காண்.

கருத்து

தோழியே! தலைவன் என் அழகழியப் பிரிய மனம் கொண்டுள்ளான் போலும்!

குறிப்பு

உடன்போக்கினைக் கேள்விப்பட்டதும் மகிழ்ச்சியால் தலைவியின் நெற்றியழகும், மாந்தளிர் போன்ற மேனியழகும் சிறந்து விளங்கின. அவன் பிரியவிருக்கிறான் என்பதை அறிந்ததும் அந்த அழகு குன்றிவிடும் என்பதால் அவன் அவள் அழகினைக் கவர்ந்து செல்பவன் ஆவான் என்கிறாள்.

தினையினைக் கவர வந்த கிளிகளை ஓட்டுதலேயன்றி, தாமே விளைந்த அவரைக்காய்களைத் தின்னவரும் கிளிகளையும் குறமகளிர் ஓட்டிக் கொண்டிருப்பர் என்னும் தொடர்மூலம், திருமணம் செய்துகொள்வான் என்று விரும்பியிருந்த தலைவியின் விருப்பத்தைப் பொருட்படுத்தாத தோடு, உடன்போக்காய்ச் செல்லத் தலைவி விரும்பியதையும் தலைவன் புறக்கணிக்கின்றான் என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. இருவி - கதிரொழிந்த தட்டை.
2. படுகிளி - வீழ்கின்ற கிளிகள்; கடியும் - ஓட்டும்.
3. யாணர் - புது வருவாய்.
4. இன்று புகர் நயந்தனன் போலும் - இன்று தீங்கொன்றனைச் செய்ய விரும்புகின்றான் போலும்.
5. மாமைக் கவின் - மாந்தளிர் போன்ற அழகு.

தலைவி கூற்று

அகநானூறு 325 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

கொண்டு நீங்கக் கருதி ஒழிந்த தலைமகன் பிரிவின்கண், தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் காலம் நீண்டது; இடையூறுகள் பல ஏற்பட்டன; தன்னுடன் தலைவியை அழைத்துப் போக எண்ணிய தலைவன், பின்னர், கானகத்து வெம்மை கருதித் தன் முயற்சியைக் கைவிட்டவனாய்ப் பொருளீட்டச் சென்றான்; தலைவன் பிரிவினை ஆற்றாத தலைவி தோழியிடம் சொல்லியது.

அம்ம!– வாழி, தோழி! – காதலர்!
'வெண்மணல் நிவந்த பொலங்கடை நெடுநகர்,
நளிஇருங் கங்குல் புணர்குறி வாய்த்த
களவும் கைம்மிக அலர்ந்தன்று; அன்னையும்
உட்கொண்டு ஓவாள் காக்கும்; பின்பெரிது
இவண்உறைவு எவனோ? அளியள்!'என்று அருளி,
'ஆடுநடைப் பொலிந்த புகற்சியின், நாடுகோள்
அள்ளனைப் பணித்த அதியன் பின்றை,
வள்உயிர் மாக்கிணை கண்அவிந் தாங்கு,
மலைகவின் அழிந்த கனைகடற்று அருஞ்சுரம்
வெய்ய மன்ற,நின் வைஎயிறு உணீஇய,
தண்மழை ஒருநாள் தலைஇய! ஒள்நுதல்,
ஒல்குஇயல், அரிவை! நின்னொடு செல்கம்,
சில்நாள் ஆன்றனை யாக'எனப் பல்நாள்
உலைவுஇல் உள்ளமொடு வினைவலி உறீஇ,
எல்லாம் பெரும்பிறி தாக, வடாஅது,
நல்வேற் பாணன் நல்நாட்டு உள்ளதை,
வாள்கண் வானத்து என்றூழ் நீள்இடை,
ஆள்கொல் யானை அதர்பார்த்து அல்கும்
சோலை அத்தம் மாலைப் போகி,
ஒழியச் சென்றோர் மன்ற;
பழிஎவன் ஆம்கொல், நோய்தரு பாலே.

தெளிவுரை

தோழியே! வாழி! நான் கூறுவதைக் கேள்.

"வெண்மணல் உயர்ந்த, அழகு மிக்க வாயில் பொருந்திய பெரிய வீட்டருகில் இருள் செறிந்த இரவு நேரத்தில் இரவுக் குறியிடத்தே புணரும் களவொழுக்கம் எல்லை கடந்து நீண்டுவிட்டது. இதனையறிந்த தாயும் எப்போதும் இவளை விட்டு நீங்காது காவல் செய்கின்றாள்; இதற்குப் பின்னரும் இவ்விடத்தில் தங்கியிருத்தலால் யாது பயன் என எண்ணிய வனாய்த் தலைவன் நம்மிடத்தே இரக்கம் கொண்டான்.

"தன் வெற்றிக்குத் துணை நின்ற அள்ளன் என்பானுக்கு நாட்டைப் பரிசிலாய்த் தந்து அதனை ஏற்றுக்கொள்ளுமாறு பணித்த அதியன் இறந்தான். அதன் பின்பு பெரிய கிணைப் பறையின் சிறந்த ஒலி அடங்கியதுபோல மலையின் அழ கெல்லாம் அழிந்ததால் காடு செறிந்த பாலை வழிகள் மிகவும் கொடியன ஆயின; ஒளி பொருந்திய நெற்றியினையும் தளர்ந்த நடையினையும் கொண்ட அரிவையே! மண் குளிருமாறு மழை பொழியட்டும்; பாலோடு தேன் கலந்ததுபோலும் சுவை கொண்ட உன் தூய கூரிய பற்களில் ஊறும் நீரினைப் பருக ஒருநாள் என் ஊருக்கு நாம் செல்வோம்; அதுவரை சில நாள் பொறுத்திரு என்றும் கூறிச் சென்றான்.

"வடக்கே, நல்ல வேற்படையைக் கொண்ட பாணனது சிறந்த நாட்டில், வானத்தில் உள்ள ஞாயிற்றின் ஒளி பொருந்திய வெப்பம் மிக்க காட்டுவழியில், வழிச்செல்பவரைக் கொல்லும் யானை, வழி பார்த்துத் தங்கியிருக்கும். அத்தகைய சோலையைக் கொண்ட காட்டுவழியில் தளர்விலா ஊக்கத்தோடு பொருள் ஈட்டும் கடமையை மேற்கொண்டு தலைவன் சென்றுள்ளான்.

"நாம் நினைத்தவையெல்லாம் பாழ்பட்டுப் போகும்படி நாம் இங்கே தனித்திருக்க நம்மை விட்டுப் பிரிந்துள்ளான்.

"நமக்குக் காமநோயைத் தந்து சென்றுள்ள அவனுக்கு என்ன பழி உண்டாகுமோ?"

கருத்து

'நான் பிரியேன்' என்று சொன்னவன் பிரிந்துள்ளான்; சொல் பேணாத பழியால் அவன் பழிக்கு ஆளாகித் துன்பப்படக்கூடாது" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

விளக்கம்

"தோழியே! வாழி! நான் கூறுவதனைக் கேள். 'களவொழுக்கம் எல்லை கடந்தது. அன்னையும் காவல் செய்கின்றாள். இதன் பின் இங்கு உறைவது பயனின்று' எனத் தலைவன் நம் நிலைக்கு இரங்கி, 'அரிவையே! காடு வெம்மையாய் உள்ளது. மழை பெய்து மண் குளிரட்டும்; உன்னை என் ஊருக்கு அழைத்துச்

செல்வேன். அதுவரை சில நாள் பொறுத்திரு' என்று கூறி, பொருள் ஈட்டி வரப் பிரிந்து சென்றுள்ளான். நமக்குக் காம நோயைத் தந்து சென்றுள்ள அவனுக்கு என்ன பழி உண்டா குமோ?"

சொற்பொருள்

2. நிவந்த - உயர்ந்த; பொலம் கடை - பொலிவு வாய்ந்த (அழகுள்ள) வாயில்; நகர் - இல்லம்.
3. நளி - செறிவு; புணர்குறி வாய்த்த - புணரும்குறி அமைந்த.
4. கைம்மிக - எல்லை கடக்க; அலர்ந்தது - நீண்டது.
5. உட்கொண்டு - உள்ளங்கொண்டு; ஓவாள் - நீங்காது.
6. இவண் - இங்கு; உறைவு எவனோ? - தங்கியிருத்தல் எங்ஙனம் இயலும்?
7. ஆடு நடைப் பொலிந்த - வெற்றி ஒழுக்கத்தால் மேம்பட்ட; புகற்சி - விருப்பம்.
8. அள்ளன், அதியன் - குறுநில மன்னர்கள்; பணித்த - நாட்டினைக் கொள்ளுமாறு பணித்த; பின்றை - இறந்த பின்பு.
9. வள் உயிர் - சிறந்த ஒலி, வளமான முழக்கம்; கிணை - கிணைப் பறை; அவிந்தாங்கு - (ஒலி) அடங்கினாற்போல.
10. கவின் - அழகு; கனை - செறிந்த; கடறு - வழி.
11. வெய்ய - கொடியன; வை - கூரிய; உணீஇய - பருகுமாறு.
12. தலைஇய - பெய்யட்டும்.
13. ஒல்கு இயல் - தளர்ந்த நடை; செல்கம் - செல்வேன்.
14. ஆன்றனை - பொறுத்திரு.
15. உலைவு இல் - தளர்ச்சி இல்லாத; வலியுறீஇ - வற்புறுத்தி உரைத்து.
16. பெரும் பிறிதாக - அழிந்து போக; வடாஅது - வடக்கே.
17. பாணன் - தலைவன் ஒருவன்.
18. வாள்கண் - ஒளி பொருந்திய; என்றூழ் - வெயில்; நீள் இடை - நீண்ட சுரத்திலே.
19. அல்கும் - தங்கியிருக்கும்.
20. மாலைப் போகி - மாலைக்காலத்தே போய்.
21. ஒழியச் சென்றோர் - நாம் இங்கு தனித்திருக்க நம்மைப் பிரிந்து சென்றுள்ளார்.
22. பழி எவன் ஆம் கொல்? - என்ன பழி உண்டாகுமோ?

தலைவி கூற்று

அகநானூறு 119 **குடவாயிற்கீரத்தனார்**

திணை : பாலை

கூற்று

செலவு உணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொற்றது.

கூற்று விளக்கம்

களவொழுக்கம் நடக்கும் காலத்தில் தலைவன் பிரிந்து செல்ல நேர்ந்ததனை அறிந்து கூறிய தோழியிடம் தலைவி சொல்லியது.

நுதலும், தோளும், திதலை அல்குலும்,
வண்ணமும், வனப்பும், வரியும் வாட
வருந்துவள், இவள்எனத் திருந்துபு நோக்கி,
வரைவுநன்று என்னாது அகலினும், அவர்,வறிது,
ஆறுசெல் மாக்கள் அறுத்த பிரண்டை,
ஏறுபெறு பாம்பின் பைந்துணி கடுப்ப,
நெறிஅயல் திரங்கும் அத்தம் வெறிகொள,
உமண்சாத்து இறந்த ஒழிகல் அடுப்பில்
நோன்சிலை மழவர் ஊன்புழுக்கு அயரும்
சுரன்வழக்கு அற்றது என்னாது, உரம்சிறந்து,
நெய்தல் உருவின் ஐதுஇலங்கு அகல்இலை,
தொடைஅமை பீலிப் பொலிந்த கடிகை,
மடைஅமை திண்சுரை, மாக்காழ் வேலொடு
தணிஅமர் அழுவம் தம்மொடு துணைப்ப,
துணிகுவர் கொல்லோ தாமே,துணிகொள
மறப்புலி உழந்த வசிபடு சென்னி
உறுநோய் வருத்தமொடு உணீஇய மண்டி,
படிமுழம் ஊன்றிய நெடுநல் யானை
கைதோய்த்து உயிர்க்கும் வறுஞ்சுனை,
மைதோய் சிமைய, மலைமுதல் ஆறே!

தெளிவுரை

“தோழியே! நம் நெற்றியும் தோளும் தேமல் படர்ந்த அல்குலும் நிறமும், அழகும், கண்களின் செவ்வரியும் வாட,

'இவள் வருந்துவாள்' என நம் நிலையினைத் திருத்தமாய்க் கண்டும், தலைவர் நம்மை மணந்துகொள்ளுதலே நல்லது எனக் கருதாமல் நம்மை விட்டுப் பிரிந்து செல்லினும் செல்க.

"யானை, வலிய புலியோடு போரிட்டதால் துண்டமாய்ப் பிளவுபட்ட தலையில் ஏற்பட்ட நோயால் வருந்தியது; நீர் உண்ணுதற்கு விரைந்து சென்று, முழங்காலை மடித்து மண்ணில் ஊன்றியது; அங்கிருந்த சுனையில் தன் துதிக்கையை விட்டுத் துழாவியும் நீர் கிடைக்கப்பெறாமையால் நெட்டுயிர்ப்புக் கொண்டது; நம் தலைவர் செல்லவிருக்கும் பாலை வழியோ அத்தகைய வறண்ட சுனையினைக் கொண்ட, மேகம் தவழும் உச்சியினைக் கொண்ட மலையிலே உள்ளது.

"அம்மலைவழியில் செல்லும் மக்கள் அறுத்துப்போடப் பட்ட பிரண்டைக்கொடி, இடியுண்ட பாம்பின் பசிய உடலின் துண்டுகள்போல, வழியின் பக்கத்தே பயனின்றி வாடி வதங்கிக் கிடக்கும்.

"காட்டில், உப்பு வாணிகர் கூட்டம் (சமைத்து உண்டு) கைவிட்டுச் சென்ற கல் அடுப்பில், வலிய வில்லையுடைய மழவர்கள் மணம் உண்டாக நன்கு புழுக்கிய இறைச்சியை விருப்பமுடன் சமைத்து உண்பர்; அன்ன தன்மையதான பாலை நிலம், ஆள் செல்லுதல் அற்றது எனக் கருதாது, நம்மையும் உடன் அழைத்துச் செல்ல உடன்படுவாரோ, மாட்டாரோ?

"நெய்தற்பூப் போன்ற உருவத்துடன் அழகாய் விளங்கும் அகன்ற இலையினையும், தொடுக்கப்பட்ட மயில்தோகையால் பொலிவு பெற்ற காம்பினையும், மூட்டுவாய் அமைந்த திட்ப மான பூணினையும், கரிய தண்டினையும் கொண்ட வேலினையே துணையாய்க் கொண்டு, உள்ளத்தில் ஊக்கம் மிக, பகையைத் தணிவிக்கச் செல்லும் போர்க்கள வழியில் நாமும் அவர்க்குத் துணையாகிச் செல்லத் துணிவு கொள்வாரா? (அவர் கருத்தினை அறிந்து வருக)" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

தோழியே! தலைவன் பிரிந்து செல்வானென்றால் காட்டுவழி கடுமை என்று கருதாது நம்மையும் உடன் அழைத்துச் செல்வானா?

விளக்கம்

புலியோடு யானை போர் செய்ததால் அது தன் தலையில் ஏற்பட்ட புண்ணால் வருந்தியிருந்தது. நீர் உண்ண விரும்பிய அது தன் முழந்தாள் நிலத்தில் படிய ஊன்றியது; சுனையில் நீரின்மையாலே கையைத் தூக்கிக் கதறியது. தலைவர் சென்றது இத்தகைய கடுமையான மலைவழி. மேலும், உப்பு வாணிகர் சமைத்து உண்டு கைவிட்டுச் சென்ற கல் அடுப்பில் வீரர்கள், புழுக்கிய இறைச்சியை விருப்பமுடன் சமைத்துண்பர். தலைவர் செல்லவிருக்கும் வழி அத்தகைய பாலைவனப்பகுதியாகும். இவ் வழிகளில் தலைவர் நம்மை அழைத்துச் செல்லத் துணிவாரா?

குறிப்பு

1. வழிச்செல்வோரால் அறுத்துப் போடப்பட்ட பிரண்டை வறிதே காய்வது போல, தலைவரால் துறக்கப்பட்ட எம் அழகும் பயனின்றிக் கழிகிறது.
2. உப்பு வாணிகர் கைவிட்டுச் சென்ற அடுப்பு, மழவர் ஊனைப் புழுக்கி உண்ணப் பயன்படுவதுபோல், தலைவரால் துறக்கப்பட்ட நாம், அம்பற் பெண்டிர் அலர் தூற்றி மகிழ்தற்கு இலக்காயினோம்.
3. புலியோடு போரிட்டுப் புண்பட்டு வருந்திய யானை, சுனையில் நீர் பெறாது வருந்திப் பெருமூச்சு விட்டதுபோல, அம்பல் பெண்டிர் அலர் கூறுவதால் நெஞ்சு புண்ணுற்ற நாம், அந்நோய் தீர, எம்மை மணந்து கொள்ளுமாறு தலைவனை வேண்டியும் அவன் அருள் புரியாமையால் பெருமூச்சு விடுகின்றோம்.

சொற்பொருள்

1. திதலை அல்குல் - தேமல் படர்ந்த அல்குல்.
2. வண்ணம் - நிறம்; வனப்பு - அழகு; வரி - செவ்வரி.
3. திருந்துபு நோக்கி - திருத்தமாய்க் கண்டு.
4. வரைவு - மணந்துகொள்ளுதல்; அகலினும் - பிரிந்து செல்லினும்.
5. ஆறு - வழி; பிரண்டை - பிரண்டைக்கொடி.
6. ஏறுபெறு - இடியால் தாக்கப்பட்ட; பைந்துணி - பசிய துண்டு.
7. நெறி அயல் - வழியின் பக்கத்தே; வறிது - பயனின்றி; வாடி திரங்கும் - வதங்கிக் கிடக்கும்; வெறி - நாற்றம்.
8. உமண்சாத்து - உப்பு வாணிகர் கூட்டம்; இறந்த ஒழி கல் - விட்டுச் சென்ற கல்.

9. நோன்சிலை - வலிய வில்; மழவர் - வீரர்; ஊன்புழுக்கு - ஊன் புழுக்கினைச் (சமைத்து); அயரும் - உண்ணும்.
10. வழக்கற்றது - ஆள் செல்லுதல் அற்றது; உரம்சிறந்து - ஊக்கம் மிகுந்து.
11. நெய்தல் உருவின் - நெய்தற்பூப்போலும் உருவினைக் கொண்ட; ஐது இலங்கு - அழகாய் விளங்கும்; அகல் இலை - அகன்ற இலை.
12. தொடை அமை - தொடுக்கப்பட்ட; பீலி - மயில்தோகை; பொலிந்த - பொலிவு பெற்ற; கடிகை - காம்பு.
13. மடை அமை - மூட்டுவாய் அமைந்த; திண்சுரை - திண்ணிய பூண்; மாக்காழ் - கரிய தண்டு.
14. தணிஅமர் - பகையைத் தணிவிக்கச் செல்லும்; அழுவம் - போர்க்களம் (வழியில்); துணைப்ப - துணையாகிச் செல்ல.
15. துணிகொள - துண்டமாய் (துணி - துண்டு).
16. மறப்புலி - வலிமையான புலி; உழத்தல் - போரிடுதல்; வசிபடு - பிளவுபட்ட (வசி - பிளவு); சென்னி - தலை.
17. உறுநோய் - உற்ற துன்பம்; உணீஇய - நீர் உண்பதற்காக; மண்டி - விரைந்து சென்று.
18. படிமுழம் ஊன்றிய - மண்ணில் முழங்காலை மடித்து ஊன்றிய.
19. கைதோய்த்து - கையால் தோய்த்து; உயிர்க்கும் - பெருமூச்சு விடும்; வறுஞ்சுனை - நீரற்ற சுனை.
20. மை - மேகம்; தோய் - படியும்; சிமையம் - உச்சி; மலைமுதல் ஆறே - மலையிடத்துச் செல்லும் வழி.

தோழி கூற்று

நற்றிணை 183 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை வைத்துப் பிரியும் தலைமகனுக்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் திருமணம் முடிக்கப் பொருளீட்டி வரத் தலைவியைப் பிரிந்து செல்ல முடிவு செய்தான். அதனை அறிந்த தோழி, அவன் தலைவியைப் பிரிவதால் ஏற்படும் துன்பம் இத்தகையது என்று சொல்லியது.

தம்நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து
பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி
நெடுநெறி ஒழுகை நிலவுமணல் நீந்தி
அவணுறை முனிந்த ஒக்கலொடு புலம்பெயர்ந்து
உமணர் போகலும் இன்னா தாகும்
மடவை மன்ற கொண்க வயின்தோறும்
இன்னாது அலைக்கும் ஊதையொடு ஒரும்
நும்மில் புலம்பின் மாலையும் உடைத்தே;
இனமீன் ஆர்ந்த வெண்குருகு மிதித்த
வறுநீர் நெய்தல் போல
வாழாள் ஆதல் சூழா தோயே.

தெளிவுரை

நெய்தல் நிலத்தலைவனே! ‘மருத நிலத்திலுள்ள உப்பு வாணிகர் தம் நாட்டில் விளைந்த வெண்ணெல்லை வண்டிகளில் ஏற்றிச் சென்று, அந்நெல்லை விற்று, நெய்தல் நிலத்தில் விளையும் உப்பினைப் பெற்றுக்கொண்டு போய் விலை கூறி ஓர் ஊரில் விற்பனை செய்வர். பின்பு அவ்வுப்பு வாணிகர்கள் நீண்ட வழிகளில் வரிசையான வண்டிகளில் நிலவுபோலும் மணற் பாங்கினைக் கடந்து வேறு ஊருக்குச் செல்வர். அவர்கள் சில நாள் தம்மோடு இருந்து பழகி விட்டுச் செல்லுதல் அவ் வூராருக்குப் பெரும் துன்பம் தருவதாய் இருக்கும். அவ்வாறே நீயும் எம்மை விட்டு நீங்குவது எமக்குப் பெருந்துன்பத்தைத் தருவதாகும். இத்துன்பத்தை மிகுதியாக்க, ஊதைக்காற்றும் வந்து வருத்துகின்றது; நீ உடனில்லாததால் தனிமைத் துன்பமும் பெருகுகின்றது; இவற்றுடன் மாலைக்காலமும் வந்து நலிவை மிகுதிப்படுத்துகின்றது. இதனை அறிந்தும் நீ பிரிவாயாயின், மீனினத்தை மிகுதியாய்த் தின்ற வெண்மையான நாரையால் நீர் வற்றிய குளத்திலுள்ள நெய்தல் மலர் மிதிபட்டு அழிவுற்றது போல, தலைவியும் ஒரு கணம் உயிர் வாழ மாட்டாள். இங்ஙனம் துன்பமுறும் இவள் நிலையை ஆராய்ந்து பாராத நீயும் உறுதியாய் அறியாமை மிக்கவனே!

கருத்து

தலைவ! உன்னைப் பிரிந்துறையும் தலைவியை ஊதையும் மாலையும் உயிர் வாழ விடா. ஆதலின், இவளை நீ பிரிவது அறியாமையே!

விளக்கம்

நீர் குன்றிய குளத்தில் வாடிக் கிடக்கும் நெய்தல் மலர், அங்கு மீன் உண்டு கொழுத்த நாரைகளால் மிதிக்கப்பட்டு அழிதல் போல உன்னைப் பிரிந்துறையும் தலைவியை ஊதைக் காற்றும் மாலையும் வருத்துதலால் அவளும் உயிர் வாழ மாட்டாள்.

உப்பு வாணிகர் உப்பினை விற்க ஆங்காங்கே சில நாள் சிற்றூர்களில் தங்கிச் செல்வர். அவர்கள் ஓர் ஊரிலிருந்து நீங்கும்போது நன்கு பழகிய அவ்வூரினர் துயர்ப்படுவர். சில நாள் பழக்கமே இவ்வாறு வருத்தத்தை ஏற்படுத்துகிறது எனில், உயிரொன்றிப் பழகிய காதற்பிரிவு எத்தகைய துன்பத்தைத் தரும் என்பதை நீ உணரவில்லையாதலின் நீ உறுதியாய் அறிவில்லாதவனே!

சொற்பொருள்

1. தம் நாட்டு - தம் மருத நிலம்; தந்து - கொடுத்து.
2. பிற நாட்டு - நெய்தல் நில இடம்; கொள்ளை - மிகுதி; சாற்றுதல் - விற்றல்.
3. ஒழுகை - வண்டித்தொகுதி; நிலவு மணல் - வெண்மையான மணல்; நீந்தி - கடந்து.
4. ஒக்கல் - உறவினர்; புலம்பெயர்ந்து - இடத்தை விட்டு நீங்கி.
5. உமணர் - உப்பு வாணிர்; இன்னாது ஆகும் - துன்பம் தருவது ஆகும்.
6. மடவை மன்ற - நீயும் உறுதியாய் அறியாமை மிக்கவனே!; கொண்க - தலைவ!; வயின்தோறும் - இடந்தோறும்.
7. இன்னாது - கொடுமையாய்; அலைக்கும் - வருத்தும்; ஊதை - வாடைக்காற்று.
8. நும்மில் - நீ இல்லாத.
9. ஆர்ந்த - தின்ற.
10. வறுநீர் - நீர் வற்றிய (நீர் நிலையிலுள்ள).
11. சூழாதோய் - ஆராய்ந்து காணாதவனாகிய நீ.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 268 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

'அவன் குறிப்பிருந்தவாற்றால் நம்மைப் பிரிந்து வந்தல்லது வரைய மாட்டான் போன்றிருந்தது' எனத் தலைமகள் கூறக் கேட்ட தோழி அவட்குத் தலைமகன் சிறைப்புறத்தானாகச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வரைதற்கு வேண்டிப் பொருளீட்டப் பிரிந்து செல்லத் தலைவன் கருதுகிறான் என்னும் குறிப்பறிந்து தலைவி தோழியிடம் சொன்னாள். அதனைக் கேட்ட தோழி, தலைவன் அவ்வாறு பிரிந்தால் தலைவி இறந்துபடுவாள்; அவளை உடன்கொண்டுபோய்த் தன் மனையில் வரைந்து கொள்ளுதலே நன்றென்று தலைவனிடம் குறிப்பாய் உணர்த்தியது.

தாஅய் இழந்த தழுவரிக் குருளையொடு
வளமலைச் சிறுதினை உணீஇ, கானவர்
வரைஓங்கு உயர்சிமைக் கேழல் உறங்கும்
நல்மலை நாடன் பிரிதல்
என்பயக் கும்மோ நம்விட்டுத் துறந்தே?

தெளிவுரை

தாயை இழந்தவையும், வரிகளைக் கொண்டவையுமான தன் குட்டிகளோடு சென்று வளமான மலையில் விளையும் சிறு தினையை உண்டு பசி தீரக் கருதிய ஆண்பன்றி, அவ்வாறு செய்யாது கானவர் வாழும் உயர்ந்த மலைமீது ஓங்கியுள்ள சிகரத்திற்குச் சென்று அச்சமின்றி உறங்கும் காட்சி கொண்டுள்ள மலைநாட்டிற்குரியவன், நம் தலைவன். அவன் நம்மை நீங்கிப் பிரிவது என்ன பயனைத் தரும்? (பிரிவதால் பயனேதுமில்லை.)

கருத்து

தலைவியே! அவன் பிரிவு நம்மை அழித்துவிடும்; அவன் மீண்டு வந்து அடையப்போகும் பயன் என்ன?

விளக்கம்

தலைவியை மணந்துகொள்ளத் தேவையான பொருளை ஈட்டவே தலைவன் பிரிந்து செல்ல எண்ணினான். அவன் பொருளொடு திரும்பி வரும்வரையில் தலைவி உயிர் தரித்திராள். அவ்வாறிருக்க அவன் பிரிவதால் என்ன பயன்?

குறிப்பு

குட்டியொடு சென்று பன்றி பசி தீரத் தினையுண்ணாது, மலைமீது சென்று, குட்டிகளை மறந்து உறங்கும் என்றது, தலைவியைக் கொண்டுசென்று திருமணம் செய்துகொள்ளக் கருதாமலும், இங்கேயே அவளை மணந்து கொள்ளாமலும், உடன் அழைத்துப் போகாமலும், தலைவியைப் பிரிந்து நெடுந்தொலைவு செல்வது என்ன பயனைத் தரும்?

தாயை இழந்த குட்டி என்பது, தலைவியை நீங்கிச் செல்லும் தலைவனைச் சுட்டியது.

சொற்பொருள்

1. தாஅய் - தாய்; தழு - தந்தையைத் தழுவி வாழும்; வரி - வரிகளைக் கொண்ட; குருளையொடு - குட்டிகளோடு.
2. சிறுதினை - சிறிய தினையை; உணீஇ - உண்டு.
3. வரைஓங்கு - ஓங்கிய மலையின்; உயர்சிமை - உயர்ந்த உச்சியில்; கேழல் - ஆண் பன்றி; உறங்கும் - தூங்கும்.
4. பிரிதல் - பிரிந்து செல்லுதல்.
5. என் பயக்கும் - என்ன பயனைத் தரும்?; நம்விட்டு - நம்மை விட்டு; துறந்து - நீங்கி.

தோழி கூற்று

குறுந்தொகை 365 **மதுரை நல்வெள்ளியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

'யான் வரையுந்துணையும் ஆற்றவல்லளோ?' என வினாய கிழவற்குத் தோழி உரைத்தது.

கூற்று விளக்கம்

'நான் வரைபொருட்குப் பிரிந்துபோய் மீண்டு வந்து இவளை மணந்து கொள்ளும்வரை இவள் பொறுத்து ஆற்றியிருப்பாளா?' எனத் தோழியிடம் தலைவியைப்பற்றிக் கேட்கும் தலைவனிடம் தோழி கூறியது.

கோடுஈர் இலங்குவளை நெகிழ, நாளும்
பாடுஇல கலிழ்ந்து பனிஆ னாவே –
துன்னரும் நெடுவரைத் ததும்பிய அருவி
தண்ணென் முழவின் இமிழ்இசை காட்டும்
மருங்கில் கொண்ட பலவின்
பெருங்கல் நாட!நீ நயந்தோள் கண்ணே!

தெளிவுரை

நெருங்குதற்கரிய உயர்ந்த மலையில் ததும்பி வரும் அருவி 'தண்' என முழவினது இனிய ஓசையைப் போல ஒலிப்பதும், பக்க மலைகளில் பலா மரங்கள் நிறைந்துள்ளதுமான பெரிய மலைநாட்டுக்குத் தலைவனே! நீ விரும்பிய தலைவி சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட வளையல்களை அணிந்துள்ளாள். அவை நெகிழ்ந்து சரியும். அவள் கண்களோ நாள்தோறும் உறக்கமில்லாமல், அழுது நீர்த்துளிகளை அடக்க இயலாத நிலையில்தான் இருக்கும்.

கருத்து

தலைவ! உன் பிரிவைத் தலைவி தாங்க மாட்டாள்; ஆற்றியிருப்பது எங்ஙனம்?

விளக்கம்

"தலைவ! நீ வந்து மணந்துகொள்ளும்வரை தலைவி ஆற்றி யிருப்பாளா என்று கேட்கிறாய்! நீ பிரிந்ததும், அவள் வளை

நெகிழ்ந்து சரியும்; துன்பமுற்ற அவள் கண்கள் கண்ணீர் சொரிந்தபடி இருக்கும். அவள் வாடி அழியாமல் இருக்க நீ விரைவில் திரும்பி வருக" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. கோடு - சங்கு; ஈர் - அறுக்கப்பட்டுச் (செய்த); இலங்கு - விளங்கு கின்ற; வளை - வளையல்கள்; நெகிழ - நெகிழுமாறு; நாளும் - நாள்தோறும்.
2. பாடுஇல - கண்ணிமைகள் பொருந்தாவாய் (தூங்காமல்); கலிழ்ந்து - அழுது; பனி - நீர்த்துளி; ஆனா - குறையா.
3. துன்னரும் - நெருங்குதற்கரிய; நெடுவரை - உயர்ந்த மலையில்; ததும்பிய - ததும்பி வரும்; அருவி - நீரருவி.
4. தண்ணென் முழவின் - 'தண்' என்னும் ஒலியைக் கொண்ட முழவினைப் போல; இமிழ் இசை காட்டும் - ஒலிக்கின்ற ஆரவாரத்தை வெளிப்படுத்தும்.
5. மருங்கில் கொண்ட - பக்கத்தில் கொண்ட; பலவின் - பலா மரங்களைக் கொண்ட.
6. பெருங்கல் நாட - பெரிய மலைநாடனே; நீ நயந்தோள் கண் - உன்னால் விரும்பப்பட்ட தலைவியின் கண்கள்.

தோழி கூற்று

கைந்நிலை 17 **புல்லங்காடனார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயின் நோக்காக உடைய தலைமகனிடம், பிரிவைத் தலைமகள் தாங்காள் என்று தோழி கூறுவது.

கூற்று விளக்கம்

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலை அறிந்த தோழி, தலைவனிடம் தலைவியின் பிரிவாற்றாமையைக் கூறுதல்.

கடமா இரிந்தோடும் கல்அதர் அத்தம்
மட மா இரும்பிடி வேழ மரு ....
.......................ண்ட உண்கண் ணுள்நீர்......................
....

தெளிவுரை

கடமா எனப்படும் மான்கள் அஞ்சி ஓடும் பரல் கற்களைக் கொண்ட பாலைவழியில் நீர்வேட்கை கொண்ட இளைய கரிய பெண்யானைக்கு ஊட்டிவிட்டு ஆண்யானை காத்திருக்கும். அத்தகு பாலைவழியைத் தலைவர் கடக்க வேண்டியிருக்கும் என்று தலைவியின் ..... மை தீட்டிய கண்ணிலிருந்து கண்ணீர் பெருக்கெடுக்கும்.

கருத்து

தலைவ! நீ பிரிய எண்ணியதை அறிந்து தலைவி அழுது புலம்புகிறாள்.

சொற்பொருள்

1. கடமா - ஒரு வகை மான்; இரிந்தோடும் - அஞ்சி ஓடும்; கல் அதர் - பரல் கற்களைக் கொண்ட வழி.
2. மடமா - இளைய; இரும்பிடி - கரிய பெண்யானை.
3. உண்கண் - மை தீட்டிய கண்கள்; நீர் - கண்ணீர்.

தோழி கூற்று

கைந்நிலை 16 **புல்லங்காடனார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயின் நோக்காக உடைய தலைமகனிடம், பிரிவைத் தலைமகள் தாங்காள் என்று தோழி கூறுவது.

கூற்று விளக்கம்

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலை அறிந்த தோழி, தலைவனிடம் தலைவியின் பிரிவாற்றாமையைக் கூறியது.

.... உறையும் மெல்லென் கடத்துக்
கடுஞ்சின வேங்கை கதழ்வேழம் சாய்க்கு
....
.... நமர்.

தெளிவுரை

புலிகள் வாழும் மென்மையான காட்டுவழியில் மிக்க சினம் கொண்ட புலி, வேகமுடன் செல்லும் ஆண்யானையை அடித்துக் கொல்லும். (அத்தகு காட்டுவழியை) நம் காதலர் கடந்து செல்வார்.

கருத்து

தலைவ! பொருளீட்டச் செல்லும் நீ, கடக்க வேண்டிய காட்டுவழியை எண்ணித் தலைவி பெரிதும் வருந்துகிறாள்.

சொற்பொருள்

1. உறையும் - வாழும்; மெல்லென் - மென்மையான; கடம் - காடு.
2. கடுஞ்சினம் - மிக்க சினம்; வேங்கை - புலி; கதழ் - விரைவு; வேழம் - ஆண்யானை; சாய்க்கும் - கொல்லும்.
4. நமர் - நம் உறவினர் (தலைவர்).

தோழி கூற்று

கைந்நிலை 14 **புல்லங்காடனார்**

திணை : பாலை

கூற்று

வரைபொருள் பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகனுக்குத் தலைமகளின் பிரிவாற்றாமை கூறல்.

கூற்று விளக்கம்

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலை அறிந்த தோழி, தலைவனிடம் தலைவியின் பிரிவாற்றாமையைக் கூறியது.

கதநாய் துரப்ப ....
.... அவிழும்
புதல்மாறு வெங்கானம் போக்குரைப்ப நில்லா
முதன் ....

தெளிவுரை

சினம் கொண்ட நாய்கள் தொடர்ந்து விரட்ட.... மலரும் புதர்கள் மாறுபட்டுத் தோன்ற, காட்டின் வழியே நீ பிரிந்து செல்ல வேண்டியிருக்கும் என்று நான் சொன்னதுமுதலாய், (கவலையுற்ற தலைவியின் கைகளில் உள்ள) வளையல்கள் கழன்று விழத் தொடங்கின.

கருத்து

தலைவ! உன் பிரிவை உரைத்ததும் தலைவியின் கை வளையல்கள் கழன்று விழத் தொடங்கின.

சொற்பொருள்

1. கதம் - சினம்; துரப்ப - விரட்ட
2. அவிழும் - மலரும்.
3. புதல்மாறு - புதர்கள் மாறுபட்டுத் தோன்றுகின்றன; வெங்கானம் - கொடிய காடு; போக்கு - (நீ) செல்லவிருப்பதை; உரைப்ப - நான் சொல்ல; நில்லா - (கை வளையல்கள்) நிற்காது கழன்று விழுந்தன.

தோழி கூற்று

நற்றிணை 37 **பேரிசாத்தனார்**

திணை : பாலை

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிவின்கண் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

வரைவிடைப் பிரியும் தலைவன், 'யான் வருமளவும் தலைவியைத் தேற்றுவி' என்று தோழியிடம் கூறினான். அதற்குத் தோழி, 'நீ இவளையும் உன்னோடு அழைத்துச் செல். இல்லையென்றால், கார் காலத்து மாலைப் பொழுதில் இவள் படும் துன்பத்தை என்னால் ஆற்றுவிக்க இயலாது' என மறுத்துக் கூறியது.

பிணங்குஅரில் வாடிய பழவிறல் நனந்தலை,
உணங்குஊண் ஆயத்து ஓர்ஆன் தெள்மணி
பைபய இசைக்கும் அத்தம், வைஎயிற்று
இவளொடும் செலினோ நன்றே; குவளை
நீர்சூழ் மாமலர் அன்ன கண்அழக்
கலைஒழி பிணையின் கலங்கி மாறி
அன்பிலிர் அகறிர் ஆயின், என்பரம்
ஆகுவது அன்றுஇவள் அவலம், நாகத்து
அணங்குடை அருந்தலை உடலி, வலன்ஏர்பு,
ஆர்கலி நல்ஏறு திரிதரும்
கார்செய் மாலை வரூஉம் போழ்தே.

தெளிவுரை

ஒன்றோடொன்று சிக்குண்ட சிறு தூறுகளையும், முன்பு கொண்டிருந்த நல்ல தோற்றத்தை இழந்து வாடிக் கிடக்கின்ற அகன்ற இடத்தையும் கொண்டிருப்பது, காடு. அங்கு உணவின்றி வாட்டமுற்றிருக்கும் பசுக்கூட்டத்திலிருந்து ஒரு பசுவின் கழுத்திலுள்ள தெளிந்த மணியோசை மெல்லென ஒலித்துக் கொண்டிருக்கும். அவ்வழியாக, கூரிய பற்களைக் கொண்ட இவளையும் உம்முடன் அழைத்துச் செல்வீராயின் அது மிகவும் நல்ல செயல். அவ்வாறன்றிக் கலைமானைப் பிரிந்த பெண் மானைப் போல இவள் கலக்கம் எய்தவும், குவளை மலர் போன்ற கண்களிலிருந்து நீர் வழியுமாறும் அன்பில்லாது பிரிந்து செல்லாதீர். அப்படிப் பிரிந்து செல்வீராயின், வருத்துகின்ற பாம்பின் தலை துணித்து விழும்படி, சினந்து வலமாய் எழுந்து இடி முழங்குகின்ற கார் கால மாலைப்பொழுதில் இவள் படுகின்ற துயரத்தை என்னால் ஆற்ற இயலாததாகும். இதனை அறிக!

கருத்து

தலைவியைப் பிரிந்து நீ சென்றால், கார் கால மாலைப்பொழுதில் இவள் படுகின்ற துயரத்தை ஆற்றுவிக்க என்னால் இயலாது.

குறிப்பு

'காட்டுவழியில் உணவின்றி வருந்தும் காலத்தும் தன் துணையைப் பிரியாது அணைந்து நிற்கும் பசுவைக் காணும்போதும், அதன்

மணியோசையைக் கேட்கும்போதும் நீ வருத்தம் கொள்வாய். அதனால் இவளையும் உடன்கொண்டு செல்லுதல் நன்று' என்று தோழி கூறுகிறாள்.

விளக்கம்

"தலைவ! பிரிந்து செல்வது உன் கருத்தாயின் அஃது அன்பின்றிச் செய்யும் கொடுஞ்செயலாகும். ஆகவே, தலைவியை உடன்கொண்டு செல்வதன்றி அவளுக்கு நன்மை தருவது பிறிது இல்லை. மேலும், இனிக் கார் காலம் வரவுள்ளது. அக்காலத்தில் தலைவியின் பிரிவுத்துன்பம் கைம்மிக்கு என்னால் ஆற்றுவிக்கும் எல்லையைக் கடந்துவிடும்" என்று தோழி மொழிந்தாள்.

சொற்பொருள்

1. பிணக்கம் - பின்னிக் கிடத்தல்; அரில் - தூறு; வாடிய - வாடியதால்; பழவிறல் - பழைய பெருமை (நீங்கிய); நனந்தலை - அகன்ற இடம்.
2. உணங்குஊண் - உணவு இன்றி வாடியிருக்கும்; ஆயத்து - பசுக் கூட்டத்திலிருந்து; ஆன் - பசு; தெள்மணி - தெளிந்த மணியோசை.
3. பைபய - மெதுவாய்; இசைக்கும் - ஒலித்துக்கொண்டிருக்கும்; அத்தம் - காட்டுவழி; வை எயிற்று - கூர்மையான பற்களைக் கொண்ட.
5. கண் அழ - கண்ணீர் சொரிய.
6. கலை ஒழி - ஆண்மான் நீங்கிய; பிணையின் - பெண்மானைப் போல; மாறி - (இவளோடு) மாறுபட்டு.
7. அன்பிலிர் - அன்பில்லாதவராய்; அகறிர் ஆயின் - பிரிந்து செல்வீராயின்; என்பரம் - என்பாரம், என் பொறுப்பு.
8. அவலம் - துன்பம்; நாகம் - நாகப்பாம்பு.
9. அணங்குடை - வருத்தம் தருகின்ற; உடலி - துண்டிக்கப்பட்டு; வலன்ஏர்பு - வலமாய் எழுந்து செல்லும்.
10. ஆர்கலி - நிறைந்த ஒலியுடன்; நல்ஏறு - பெரிய இடி; திரிதரும் - முழங்கிச் செல்லும்.

தோழி கூற்று

குறுந்தொகை 397 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை வைத்து நீங்கும் தலைமகற்குத் தோழி உரைத்தது.

கூற்று விளக்கம்

வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிய நீங்கும் தலைவனை நோக்கி, 'தலைவி உன் அருளால் வாழும் நிலையினள். ஆதலின் விரைவில் வருக' என்று தோழி சொல்லியது.

நனைமுதிர் ஞாழற் சினைமருள் திரள்வீ
நெய்தல் மாமலர்ப் பெய்தல் போல,
ஊதை தூற்றும் உரவுநீர்ச் சேர்ப்ப!
தாய்உடன்று அலைக்குங் காலையும் வாய்விட்டு,
'அன்னாய்!' என்னும் குழவி போல,
இன்னா செயினும் இனிதுதலை அளிப்பினும்,
நின்வரைப் பினள்என் தோழி;
தன்உறு விழுமம் களைஞரோ இலளே.

தெளிவுரை

"அரும்புகள் முதிர்ந்த ஞாழல் மரம் ஒன்று; தினை மணிகள் போன்ற அதன் திரண்ட பூக்கள் அம்மரத்திற்குக் கீழேயுள்ள நெய்தலின் பெரிய மலர்களிலே நிரம்புமாறு குளிர்காற்று வீசும். இத்தகைய காட்சிக்குரிய வலிமையான கடற்கரைக்குத் தலைவனே! தாய் சினந்து அடித்து வருத்தும் காலத்தும் வாயைத் திறந்து 'அம்மா' என்றழைக்கும் குழந்தையைப் போல, நீ இன்னாதன செய்யினும் இனிமை செய்யினும் என் தோழி உன் எல்லைக்கு உட்பட்டவளே! உன்னையன்றி அவள் துன்பத்தை நீக்குவோர் வேறு எவரும் இலர்" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

தலைவ! உன்னையன்றி இவள் துயரைப் போக்குவோர் வேறு எவருமிலர்; ஆதலின், விரைந்து திரும்புக.

சொற்பொருள்

1. நனை - அரும்பு; முதிர் - முதிர்ந்த; ஞாழல் - ஞாழல் மரத்தின்; திரள்வீ - (முட்டை போன்ற) திரண்ட பூக்கள்.
2. மாமலர் - பெரிய பூக்கள் (நிறையுமாறு); பெய்தல் போல - பெய்வதைப் போல.
3. ஊதை - குளிர் காற்று; தூற்றும் - தூவுகின்ற; உரவு நீர்ச் சேர்ப்ப - வலிமையான கடற்கரைக்குத் தலைவனே!
4. உடன்று - சினந்து, மாறுபட்டு; அலைக்கும் காலையும் - அடிக்கும் பொழுதும்.
5. அன்னாய் - அம்மா; என்னும் - என்று அழைக்கும்; குழவி - குழந்தை.
6. தலை அளிப்பினும் - அருள் செய்தாலும்.
7. நின் - உன்; வரைப்பினள் - எல்லைக்கு உட்பட்டவள்.
8. தன் உறு - தனக்கு நேரிடும்; விழுமம் - துன்பம்; களைஞர் - நீக்குபவர்; இலள் - உன்னையன்றி வேறு எவரும் இல்லாதவள்.

தோழி கூற்று

குறுந்தொகை 225 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிவாற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரியும் தலைவனை நோக்கி, 'இதுகாறும் உன் விருப்பப்படியே நாங்கள் ஒழுகி வந்தோம். அந்நன்றியை மறவாது, எம் விருப்பத்திற்கிணங்க, விரைந்து மீள்க' எனத் தோழி கூறியது.

கன்றுதன் பயமுலை மாந்த, முன்றில்
தினைபிடி உண்ணும் பெருங்கல் நாட!
கெட்டஇடத்து உவந்த உதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல,
நன்றிமறந்து அமையாய் ஆயின், மென்சீர்க்
கலிமயிற் கலாவத்து அன்னஇவள்
ஒலிமென் கூந்தல் உரியவால் நினக்கே.

தெளிவுரை

கன்று தன் முலையில் பால் குடித்துக்கொண்டிருக்க, வீட்டு முற்றத்திலே காய வைத்திருக்கும் தினையைப் பெண்யானை உண்ணும். இத்தகைய காட்சியைக் கொண்டுள்ள பெரிய மலை நாட்டுக்குத் தலைவனே! தான் வறுமையுற்றிருந்த காலத்தில் பிறர் செய்த உதவியைப் பெற்று மகிழ்ந்திருந்தவன், அரசாட்சி செய்யும் அரியணை கிடைத்ததும் பழமையை மறந்துவிடும் மன்னனைப்போல அன்றி, களவுக்காலத்தில் நாங்கள் செய்த உதவியை மறவாமல் விரைந்து மீண்டு வந்து, ஆரவாரிக்கும் மயிலின் பீலியைப் போன்ற இத்தலைவியின் தழைத்த மென்மையான கூந்தலை உனக்கே உரியதாக்கிக்கொள்.

கருத்து

தலைவ! விரைவில் பொருளீட்டி வந்து தலைவியை மறவாது மணந்து கொள்வதே செய்ந்நன்றி மறவாமை ஆகும்.

இறைச்சி

யானை தன் பாலைத் தன் கன்றுக்கு ஊட்டியபடியே அதன் பசியைப் போக்கிக் கொண்டே தன் பசிக்கு முற்றத்துத் தினை யைத் தின்னும் என்னும் தொடர்மூலம், தலைவன் கடமையாகிய பொருளைத் தேடிக் கொண்டு வந்து தலைவியின் நலத்தைக் கவர்ந்து உண்ண வேண்டும் என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

தான் அரசுக்கட்டிலை இழந்தபோது பிறர் உதவியினால் அரசுக்கட்டிலைப் பெற்ற மன்னன் அவ்வுதவியை மறந்ததைப் போல, உன் விருப்பம் நிறைவேறும் வரையில் எம் உதவியைப் பெற்றுக்கொண்ட நீ, இப்போது மறந்துவிடாதே என்கிறாள், தோழி.

சொற்பொருள்

1. தன் பயமுலை - சுரந்து தன் (பயனைத் தரும்) முலையில்; மாந்த - பால் குடிக்க; முன்றில் - முன்றிலில் கிடக்கும்.
2. தினை - தினையை; பிடி உண்ணும் - பெண்யானை உண்ணும்.
3. கெட்ட இடத்து - கெட்ட காலத்து; உவந்த உதவி - பிறர் செய்த உதவியை மகிழ்ந்து பெற்றிருந்தவன்.

3-4.கட்டில் வீறுபெற்று - அரசுக்கட்டில் வாய்த்ததும்.

5. நன்றி மறந்து அமையாயாயின் - களவுக்காலத்தில் நாங்கள் செய்த உதவியை மறவாதிருந்தால்; மென்சீர் - மென்மைமிகு சிறப்பினைக் கொண்ட.

6. கலிமயில் - ஆரவாரித்து ஆடும் மயில்; கலாவம் - தோகை; அன்ன - போன்ற.

7. ஒலிமென் கூந்தல் - தழைத்த மென்மையான கூந்தல்; உரியவால் நினக்கே - உனக்கே உரியவளாவாள்.

தலைவி கூற்று

குறுந்தொகை 170 **கருவூர் கிழார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

வரைதற்குரிய பொருளைத் தேடி வருவதற்காகத் தலைவன் பிரிந்து சென்றுள்ளான். பிரிவைத் தலைவி பொறுத்திருக்கமாட்டாள் எனக் கவலைப்படும் தோழியிடம் தலைவி கூறியது.

பலரும் கூறுக,அஃது அறியா தோரே
அருவி தந்த நாள்குரல் எருவை
கயம்நாடு யானை கவளம் மாந்தும்
மலைகெழு நாடன் கேண்மை
தலைபோ காமைநற்கு அறிந்தனென், யானே.

தெளிவுரை

அருவி இழுத்துக்கொண்டுவந்த, புதிய கதிரைக் கொண்ட கொத்தான கொறுக்குத்தட்டையினை, நீர்நிலையினைத் தேடிச் செல்லும் யானை, கவளமாய் எடுத்து உண்ணும் மலைகள் சூழ்ந்த நாட்டிற்கு உரியவனுடன் நான் கொண்ட நட்புக்

கெடாதிருப்பதனை நான் நன்கு அறிந்துள்ளேன். அதனை அறியாதவர் பலரும் தம் விருப்பம்போல் எப்படி வேண்டு மானாலும் பேசட்டும்.

கருத்து

'தலைவன் என்னோடு கொண்டுள்ள உறவினை நான் நன்கு அறிவேன். அவன் தவறாது வருவான். அதனை அறியாதார் எப்படி வேண்டுமானாலும் பேசட்டும்' என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

விளக்கம்

நீர்நிலையை நாடிச் செல்லும் யானை, தன் முயற்சியின்றியே அருவி கொண்டுவந்து தருகின்ற கொறுக்குத் தட்டையினை உணவாய்க் கொள்ளும். இத்தொடர் வாயிலாய், எவ்வித முயற்சியுமின்றி ஊழின் வலியால் தலைவன் தலைவியைக் கண்டு இன்புற்றான். அந்நட்பு ஊழ் வயத்தது; ஆதலின், அது கெடாது என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. அஃது - (தலைவனிடம் நான் கொண்டுள்ள) அந்த நட்பு; அறியாதோர் - (கெடாதது என்பதை) அறியாதவராகிய; பலரும் கூறுக - பலரும் தமக்குத் தோன்றியதைக் கூறட்டும்.
2. தந்த - கொண்டுவந்து சேர்த்த; நாள் குரல் - புதிதாய் விளைந்த கொத்தான; எருவை - கொறுக்குத்தட்டை.
3. கயம் நாடு யானை - நீர்நிலையினைத் தேடிச் செல்லும் யானை; கவளம் - தான் உண்ணும் கவளமாய்; மாந்தும் - உண்ணும்.
4. கேண்மை - நட்பு.
5. தலைபோகாமை - கெடாமை, முடிவுறாமை, அழிந்துபோகாமை; அறிந்தனென் - அறிந்துள்ளேன்.

தலைவி கூற்று

குறுந்தொகை 172 **கச்சிப்பேட்டு நன்னாகையார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

வரைவிடை வைத்துத் தலைவன் பிரிந்த காலத்தில், தலைவி அப்பிரிவைத் தாங்க மாட்டாள் எனக் கவலையுற்ற தோழியை நோக்கி, " 'அவர் என்னைப் பிரிந்து அங்கே எங்ஙனம் ஆற்றியிருப்பார்' என என் மனம் மிகவும் வருந்துகின்றது" என்று தலைவி கூறியது.

தாஅவல் அஞ்சிறை நொப்பறை வாவல்
பழுமரம் படரும் பையுள் மாலை,
எமியம் ஆக ஈங்குத் துறந்தோர்
தமியர் ஆக இனியர் கொல்லோ?
ஏழ்ஊர்ப் பொதுவினைக்கு ஓர்ஊர் யாத்த
உலைவாங்கு மிதிதோல் போலத்
தலைவரம்பு அறியாது வருந்தும்,என் நெஞ்சே.

தெளிவுரை

தோழியே! பறத்தலில் வலிமை வாய்ந்ததும், அழகிய சிறகு களைக் கொண்டு ஓசையின்றிப் பறப்பதுமாகிய வௌவால் பழுத்த மரங்களைத் தேடிச் செல்லும் துன்பந்தரும் மாலைக் காலத்தில், 'யாம் தனியராய் இங்கே இருக்கும்படி' நம்மைப் பிரிந்து சென்றவர், தாம் அங்கே தனியாய் இருப்பதில் இன்பம் காண்பவராய் இருக்க மாட்டார். இதனை நினைத்து, ஏழு ஊர் மக்களின் பொதுவான இரும்புத் தொழிலுக்காக ஓர் ஊரில் அமைந்துள்ள ஒரே ஊதுலையில் உள்ள துருத்தி இடையறாது மிதிபடுவதுபோல, என் நெஞ்சமும் எல்லையற்ற துன்பத்தை அடைந்துள்ளது.

கருத்து

'தோழியே! நம்மைப் பிரிந்து செல்லும் தலைவர் வழியிற்படும் துயரை நினைத்தே என் மனம் வருந்துகின்றது.'

சொற்பொருள்

1. தாஅவல் - பறத்தலில் வல்லமை கொண்டுள்ள; அஞ்சிறை - அழகிய சிறகினையும்; நொப்பறை - ஓசையின்றிப் பறப்பதுமாகிய; வாவல் - வௌவால்.
2. பழுமரம் - பழுத்த பழங்களைக் கொண்டுள்ள மரங்களை; படரும் - தேடிச் செல்லும்; பையுள் மாலை - துன்பம் தரும் மாலைக் காலம்.
3. ஈங்கு எமியம் ஆக - (நாம்) இங்கே தமியராய் இருக்க; துறந்தோர் - (நம்மைப்) பிரிந்து சென்றவர்.
4. தமியராக - (தாம் அங்கே) தனியராய்; இனியர் கொல்? - இன்பம் காண்பவராய் (துன்பமின்றி) இருக்க இயலுமா?
5. ஏழு ஊர் - ஏழு ஊரிலுள்ளார்க்கு; பொது வினை - பொதுவான தொழிலின்பொருட்டு; ஓர் ஊர் - ஓர் ஊரிலே; யாத்த - அமைக்கப்பட்ட.
6. உலை வாங்கு - ஊதுலையில் பொருத்தப்பட்ட; மிதிதோல் - துருத்தி.
7. தலைவரம்பு அறியாது - எல்லையின்றி (மிதிபடுவதுபோல); வருந்தும் - வருத்தம் அடையும்.

தலைவி கூற்று

நற்றிணை 133 **நற்றமனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடைவைத்துப் பிரிவாற்றாளாய தலைமகள் வற்புறுத்துந் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், மணம் புரிதற்கான பொருளை ஈட்டிவரச் சென்றான்; தலைவன் பிரிவாற்றாது தலைவி வருந்தினாள். ‘தலைவர் விரைவில் வருவார்; நீ ஆற்றியிருக்க வேண்டும்’ எனத் தோழி வற்புறுத்திச் சொன்னாள். அம்மொழி தன் பெருந்துன்பம் குறைய ஓரளவு ஆறுதலா யுள்ளது எனத் தலைவி சொல்லியது.

'தோளே தொடிகொட்பு ஆனா; கண்ணே
வாள்ஈர் வடியின் வடிவுஇழந் தனவே;
நுதலும் பசலை பாயின்று திதலைச்
சில்பொறி அணிந்த பல்காழ் அல்குல்
மணிஏர் ஐம்பால் மாயோட்கு' என்று,
வெவ்வாய்ப் பெண்டிர் கவ்வை தூற்ற
நாமுறு துயரம் செய்யலர் என்னும் –
காமுறு தோழி! காதலம் கிளவி,
இரும்புசெய் கொல்லன் வெவ்வுலைத் தெளித்த
தோய்மடற் சில்நீர் போல,
நோய்மலி நெஞ்சிற்கு ஏமம்ஆம் சிறிதே.

தெளிவுரை

" 'பல வடங்களைக் கொண்ட காஞ்சி என்னும் அணியைப் பூண்டுள்ள அடிவயிற்றினைக் கொண்ட இவள் தேமற்புள்ளிகளையும், நீலமணி போன்ற கூந்தலையும், மாமை நிற மேனியையும் கொண்டு முன்பு விளங்கினாள். இப்போது இவள் தோள்களில் அணியப்பட்டுள்ள தொடிகள் தளர்ந்து கழன்று விழுகின்றன. வாளாற்பிளந்த மாவடு போன்ற கண்களும் தம் அழகினை இழந்துள்ளன. நெற்றியிலும் பசலை படர்ந்துள்ளது' என்னும் கொடும் சொற்களைக் கூறிப் பெண்டிர் உன்னைப் பழித்துப் பேசுகின்றனர். நீயோ 'நம் தலைவர் நமக்குத் துயர் செய்ய மாட்டார்; அவர் விரைவில் வருவார்' என்று இனிய சொற்கூறி என்னைத் தேற்றுகின்றாய்! இரும்புத் தொழில் செய்யும் கொல்லன், வெப்பம் மிகுந்த உலைக்களத்திலே பனை மடலைத் தண்ணீரில் தோய்த்து வீசி வெப்பத்தைச் சற்றுக் குறைத்தல்போல, நீ கூறும் தேறுதல் மொழிகள் காமநோய் மிகுந்துள்ள என் நெஞ்சில் அந்நோயைச் சிறிது தணித்துப் பாதுகாப்புச் செய்கின்றன" என்று தலைவி தன்னை ஆற்றியிருக்குமாறு வற்புறுத்தும் தோழியிடம் கூறுகிறாள்.

கருத்து

தோழியே! உன் ஆறுதல் மொழிகள் என் வருத்தத்தைச் சற்றே தணிவிக்கின்றன. எனினும், தலைவனை அடைந்தால் அன்றி என் நோய் நீங்காது.

விளக்கம்

"கொல்லனது உலைச்சூடானது பனைமடலில் தோய்த்துத் தெளிக்கப்படும் நீர்த்துளிகளால் சிறிதளவேனும் தணிவது போலத் தலைவனின் பிரிவால் உற்ற நோயாலும், ஊர்ப் பெண்டிரின் பழிச்சொற்களாலும் கொதிப்படைந்துள்ள என் நெஞ்சிற்கு உன் உரைகள் சற்று ஆறுதலைத் தருகின்றன" எனத் தலைவி தன்னை வற்புறுத்தித் தேற்றும் தோழியிடம் கூறுகிறாள்.

குறிப்பு

தோழியின் சொற்கள் தனக்குச் சிறிதளவு ஆறுதலைத் தருகின்ற தெனினும், தலைவன் திரும்ப வந்து சேர்ந்து, ஊராரின் பழிச்சொற்கள் நீங்கும் காலத்தில்தான் தன் மனம் முற்றவும் அமைதியுறும் என்பதைத் தலைவி தோழிக்குக் குறிப்பால் உணர்த்துகிறாள்.

சொற்பொருள்

1. தொடி - வளையல்; கொட்பு ஆனா - கழன்று விழுகின்றன.
2. வாள் ஈர் - வாளால் அறுக்கப்பட்ட; வடியின் - மா வடுப்போல; வடிவு - அழகு.
3. பாயின்று - படர்ந்துள்ளது; திதலை - தேமல்.
4. பல்காழ் - பல வடங்களைக் கொண்ட (காஞ்சி என்னும் இடையணி).
5. மணிஏர் - நீலமணி போலும்; ஐம்பால் - ஐந்தாய்ப் பிரித்து அணி செய்யப்பட்ட கூந்தல்; மாயோள் - மாமை நிறம் கொண்டவள்.
6. வெவ்வாய் - கொடுஞ்சொல் கூறும் வாய்; கவ்வை - பழிச்சொல்.
7. செய்யலர் - செய்ய மாட்டார்.
8. காமுறு - விரும்புதற்குரிய; காதல்அம் - இனிய அழகிய; கிளவி - சொற்கள்.
9. வெவ்வுலை - வெப்பம் மிகுந்த உலை.
10. தோய் மடல் - பனைமடலில் தோய்த்துத் (தெளித்த); சில்நீர் - சிறிதளவு நீர்.
11. நோய் மலி - பிரிவு நோய் நிறைந்த; ஏமம்ஆம் - ஆறுதல் தரும்.

தலைவி கூற்று

குறுந்தொகை 334 **இளம்பூதனார்**

திணை : நெய்தல்

கூற்று

'வரைவிடை ஆற்றகிற்றியோ' என்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்ததால் நீ அவன் வரும்வரை பொறுத்திருப்பாயோ எனக் கேட்ட தோழியிடம், 'அவன் பிரிந்தால் நான் உயிரிழப்பேன்' என்று தலைவி சொல்லியது.

சிறுவெண் காக்கைச் செவ்வாய்ப் பெருந்தோடு
எறிதிரைத் திவலை ஈர்ம்புறம் நனைப்ப,
பனிபுலந்து உறையும் பல்பூங் கானல்
இருநீர்ச் சேர்ப்பன் நீப்பின், ஒருநம்
இன்உயிர் அல்லது, பிறிதுஒன்று
எவனோ தோழி! நாம்இழப் பதுவே?

தெளிவுரை

தோழியே! சிறிய கழுத்தின் அடிப்பாகத்தில் சிறிது வெண்மை நிறமும் செவ்விய வாயும் கொண்ட காக்கைகள் கடல் அலைகளின் திவலைகள் மோதி அவற்றின் முதுகை நனைப்பதால் உண்டாகிய குளிரை வெறுத்து அவை, தாம் தங்கியிருக்கும் மலர்கள் பல கொண்ட கடற்கரைச்சோலையைச் சென்றடையும். அத்தகைய காட்சிக்கிடனான கடற்கரையைக் கொண்ட தலைவன் நம்மைப் பிரிந்தானென்றால், நாம் இழக்க நம் இனிய உயிரைத் தவிர வேறு என்ன இருக்கிறது?

கருத்து

'தலைவன் பொருளீட்டி வரும்வரை பொறுத்திருப்பாயா?' என்று கேட்ட தோழியிடம் தலைவி, 'அவன் பிரியின் நான் உயிர் வாழேன்' என்று கூறினாள்.

குறிப்பு

குளிரைத் தாங்காத காக்கை கானற்சோலைக்குச் சென்று தங்கும். இத்தொடர்மூலம், தலைவன் தலைவி நடுங்கித் துயருற்றுச் சாகுமாறு

அவளைக் கைவிட்டுப் பிரிந்து செல்லமாட்டான் என்னும் குறிப்புப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. சிறுவெண் காக்கை - சிறிது வெண்மை கொண்ட காக்கை; செவ்வாய் - செவ்விய வாய்; பெருந்தோடு - பெரிய தொகுதி.
2. எறிதிரை - வீசுகின்ற அலைகளின்; திவலை - நீர்த்துளிகள்; ஈர்ம்புறம் - ஈரமான முதுகை.
3. பனிபுலந்து - குளிரை வெறுத்து; உறையும் - (சென்று) தங்கும்.
4. இருநீர் - கடல்; சேர்ப்பன் - தலைவன்; நீப்பின் - பிரிந்தால்.
5. பிறிது ஒன்று - வேறு ஒன்று.
6. எவனோ - என்ன இருக்கிறது!

தலைவி கூற்று

குறுந்தொகை 301 **குன்றியனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வைப்ப 'ஆற்றகிற்றியோ' என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்த காலத்தில், 'இப்பிரிவை உன்னால் பொறுத்துக்கொண்டிருக்க இயலுமா?' எனத் தோழி தலைவியிடம் கவலையுடன் கேட்க, தலைவி, 'தலைவன் வாராவிடினும் வருவா னென்னும் நினைவால் தூங்காமல் இருக்கிறேன்' என்று கூறியது.

முழவுமுதல் அரைய தடவுநிலைப் பெண்ணைக்
கொழுமடல் இழைத்த சிறுகோல் குடம்பைக்
கருங்கால் அன்றில் காமர் கடுஞ்சூல்
வயவுப்பெடை அகவும் பானாட் கங்குல்,
மன்றம் போழும் இனமணி நெடுந்தேர்
வாராது ஆயினும், வருவது போலச்
செவிமுதல் இசைக்கும் அரவமொடு
துயில்துறந் தனவால் தோழி!என் கண்ணே!

தெளிவுரை

தோழியே! முழவைப் போன்ற அடிப்பாகத்தைக் கொண்ட பனை மரம் வளைந்து வளர்ந்து நிற்கின்றது. அதன் செழித்த மடலில் சிறிய குச்சிகளைக்கொண்டு கருமையான கால்களைக் கொண்ட அன்றில் பறவைகள் கூடு கட்டியிருக்கின்றன. அக் கூட்டிலேயுள்ள அழகிய முதிர்ந்த கருவினைக் கொண்ட அன்றிற் பறவை வருத்தத்துடன் நள்ளிரவிலே தன் ஆண்பறவையை அழைக்கும். இத்தகைய நள்ளிரவிலே முன்பு வரிசையாய் மணி கட்டிய தலைவனுடைய நெடிய தேர் தன் சக்கரங்களால் மன்றத்துத் தரையைப் பிளந்துகொண்டு வரும். இப்போது அவன் தேர் அவ்வாறு வாராவிட்டாலும் அது வருவது போலவே என் காதில் ஒலி கேட்கிறது. அவ்வாறு கேட்பதால் அவனையே எதிர்பார்த்துக்கொண்டு என் கண்கள் தூங்காமல் இருக்கின்றன.

கருத்து

'தோழியே! அவன் வாராவிட்டாலும் என் காதிலே அவன் தேர் வருவது போன்ற ஓசை கேட்டவாறு இருப்பதால், அவன் வருவான் என்று எதிர் பார்த்து என் கண்கள் தூங்குவதை மறந்துவிட்டன.'

குறிப்பு

அன்றிற்பறவைகளும் கூட்டில் இன்புற்று வாழ்கின்றன. அன்றில் பேடை ஒன்றற்கு அது முதற்சூலாதலால் தான் உற்ற நோயினால் அஃது அகவுதலையும் கேட்கிறேன். நானோ, அவற்றைப் போல் கூடியிருக்கும் வாய்ப்பைப் பெறாது, பிரிந்திருந்து நலிகின்றேன் எனத் தலைவி தன் மனவுணர்வைப் புலப்படுத்துகிறாள்.

சொற்பொருள்

1. முழவுமுதல் - முழவு போன்ற; அரைய - அடி மரத்தைக் கொண்ட; தடவு நிலை - வளைந்த நிலையைக் கொண்ட; பெண்ணை - பனைமரம்.
2. கொழுமடல் - செழித்த மடல்; இழைத்த - கட்டியுள்ள; சிறுகோல் - சிறு குச்சிகள்; குடம்பை - கூடு.
3. அன்றில் - ஒரு வகைப் பறவை; காமர் - அழகிய; கடுஞ்சூல் - முதிர்ந்த கரு.

4. வயவுப் பெடை - சூலால் ஏற்பட்ட துன்பத்தினைக் கொண்ட பெண் அன்றில்; பானாள் கங்குல் - நடுயாம இரவு.
5. மன்றம் போழும் - மன்றத்தைப் பிளந்துகொண்டு.
6. வாராது ஆயினும் - வாராது என்றாலும்.
7. செவிமுதல் - காதினிடத்தில்; இசைக்கும் - ஒலிக்கும்; அரவமொடு - அவ்வொலியைக் கேட்டதால் (அரவம் - ஒலி).
8. துயில் துறந்தன - தூங்காமல் இருக்கின்றன.

தலைவி கூற்று

நற்றிணை 219 — **தாயங்கண்ணனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிய ஆற்றாளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை மணம் புரிந்துகொள்ளும்பொருட்டாகப் பொருள் ஈட்டிவரப் பிரிந்தனன். அதனால் வருந்தி வேறுபட்ட தலைவியிடம் தோழி, அவளை ஆற்றுவதற்காகத் தலைவனைச் சில சொற்கள் கடிந்து கூறினாள். அது கேட்ட தலைவி தன் காதல் உறுதியைக் கூறித் தலைவனைச் சினந்துகொள்ள வேண்டா எனத் தோழியிடம் சொல்லியது.

கண்ணும் தோளும் தண்நறும் கதுப்பும்
பழநலம் இழந்து பசலை பாய,
இன்உயிர் பெரும்பிறிது, ஆயினும் என்னதூஉம்,
புலவேன் வாழி தோழி! சிறுகால்
அலவனொடு பெயரும் புலவுத்திரை நளிகடல்
பெருமீன் கொள்ளும் சிறுகுடிப் பரதவர்
கங்குல் மாட்டிய கனைகதிர் ஒண்சுடர்
முதிரா ஞாயிற்று எதிர்ஒளி கடுக்கும்
கானல்அம் பெருந்துறைச் சேர்ப்பன்,
தானே யானே புணர்ந்த மாறே.

தெளிவுரை

தோழியே! வாழி! என் கண்களும் தோள்களும் மெல்லிய நறுங்கூந்தலும் பழைய அழகை இழந்தன. மேனி வேறுபட்டுப் பசலை பாய்ந்தது. இதனால் என் உயிர் நீங்குவதானாலும் போகட்டும். சிறிய கால்களைக் கொண்ட நண்டுகளை அடித்துச் செல்லும் புலால் நாற்றம் வீசும் அலைகள் நெருங்கிய கடலில் சென்று பெரிய மீன்களைப் பிடிப்பதைத் தொழிலாய்க் கொண்டவர், நம் பரதவர். இரவில் கடலிலிருந்து வரும் எங்கள் மரக்கலங்களுக்குத் தெரியுமாறு ஏற்றிய கடற்கரை விளக்குகள் முதிராத இளங்காலைச் சூரியன்போலச் செவ்வொளி பரந்த சுடரொடு விளங்கும். இத்தகைய காட்சி கொண்டுள்ள கடற் கரைச் சோலையையும் கடல் துறையையுமுடையவனாகிய நம் தலைவன், முன்பு தானே தனியனாய் வந்து, என்னோடு இணைந்து நட்புக் கொண்டவன். (இப்போதும் அவ்வாறே வந்து சேர்வான். (ஆகவே, அவனிடம் சிறிதும் புலவேன்.)

கருத்து

'தோழியே! என் கண்ணும் தோளும் கூந்தலும் பழைய அழகை இழந்தன; பசலை பாய்ந்து, மேனி ஒளி குன்றி, என் உயிரே நீங்குவதாயினும் நான் அவனிடம் சிறிதும் வருத்தம் கொள்ளேன். நான் தனித்திருந்த கானற் சோலையில் தானாகவே வந்து நட்புக்கொண்டவனாதலால் இப்போதும் தானே வந்து சேர்வான். அதுபற்றி வருந்த வேண்டா.'

சொற்பொருள்

1. தண்நறும் - தண்ணிய நறிய; கதுப்பு - கூந்தல்.
2. பழநலம் - பண்டைய அழகு.
3. பெரும்பிறிது ஆயினும் - இறந்துவிட நேரினும்; என்னதூஉம் - சிறிதும்.
4. புலவேன் - வெறுக்க மாட்டேன்; சிறுகால் - சிறிய கால்களைக் கொண்ட.
5. அலவன் - நண்டு; பெயரும் - நீங்கும்; புலவுத்திரை - புலால் நாறும் அலை; நளி - பெரிய.
6. கொள்ளும் - பிடிக்கும்.
7. கங்குல் - இரவு; மாட்டிய - ஏற்றி வைத்த; கனை கதிர் - மிக்க கதிர்களைக் கொண்ட; ஒண்சுடர் - ஒளி பொருந்திய விளக்குகள்.

8. முதிரா ஞாயிறு - இளஞாயிறு; கடுக்கும் - ஒக்கும்.
9. சேர்ப்பன் - நெய்தல் நிலத் தலைவன்.
10. தானே - தானே தனியனாய் வந்து; யானே - என்னுடன்; புணர்ந்தமாறு - இணைந்து நட்புக்கொண்டவன்.

தலைவி கூற்று

குறுந்தொகை 245 **மாலைமாறனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

வரைவிடை வைத்துத் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றிருந்த காலத்திலே, அந்தப் பிரிவைத் தலைவி தாங்க மாட்டாள் எனத் தோழி கவலையுற்றாள். அத்தோழியிடம் தலைவி, 'தலைவனது கொடுமையைப் பிறர் அறியின் அது மிக இன்னாது; ஆதலின், யான் ஆற்றியிருப்பேன்' என்றாள்.

கடல்அம் கானல் ஆயம் ஆய்ந்தஎன்
நலம்இழந் ததனினும், நனிஇன் னாதே;
வாள்போல் வாய கொழுமடல் தாழை
மாலை வேல்நாட்டு வேலி ஆகும்
மெல்லம் புலம்பன் கொடுமை
பல்லோர் அறியப் பரந்துவெளிப் படினே!

தெளிவுரை

தோழியே! வாள் போன்ற விளிம்பைக்கொண்ட கொழுவிய மடல்களைக் கொண்ட தாழை, மாலைபோல வரிசையாய் வேல்களை நட்டுவைத்தது போன்ற இயற்கை வேலியாய் விளங்கும் நெய்தல் நிலத்தைச் சார்ந்தவன், நம் தலைவன். அவன் நம்மைக் கூடிப் பிரிந்த இக்கொடுமை பலரும் அறியுமாறு பரவி வெளிப்பட்டால் ஏற்படும் துன்பம், அழகான கடற்கரைச் சோலையில் விளையாடும் தோழியர் கூட்டம் பாராட்டிய

என் அழகை இழந்தபோது அடைந்ததைவிட மிகுதியாகும். (அதனால் அது வெளிப்படாதவாறு நான் ஆற்றியிருப்பேன்.)

கருத்து

தோழியே! என் துயரைப் பிறர் அறியாதவாறு ஆற்றியிருப்பேன்.

விளக்கம்

இயற்கையாய்த் தோன்றிய தாழையே, செயற்கையாய் அமைந்த வேலிபோலக் காவலாகும்; அவ்வாறே உன் வலியுறுத்த லின்றி நானே அவர் கொடுமையை வெளிப்படாது காப்பேன்.

சொற்பொருள்

1. கடல் அம் கானல் - அழகிய கடற்கரைச்சோலையில்; ஆயம் - விளையாட்டுத் தோழியர் கூட்டம்; ஆய்ந்த - பாராட்டிய.
2. என் நலம் - பெண்மை நலத்தை; இழந்ததனினும் - இழந்ததைக் காட்டிலும்; நனி இன்னாது - மிகவும் துன்பம் தருவதாகும்.
3. வாள் போல் வாய - வாள் போன்ற விளிம்பைக்கொண்ட; கொழுமடல் - கொழுவிய மடலைக் கொண்ட; தாழை - தாழை மரம்.
4. மாலை வேல் - வரிசையாய் உள்ள வேல்களை; நாட்டு - நட்டு வைத்த; வேலி ஆகும் - இயற்கை வேலியாய்த் தோன்றும்.
5. மெல்லம் புலம்பன் - மென்மையான நெய்தல் நிலத்தைக் கொண்ட தலைவன்.
6. பல்லோர் அறிய - பலரும் அறியுமாறு; பரந்து - பரவி; வெளிப் படின் - வெளிப்பட்டால்.

தலைவி கூற்று

குறுந்தொகை 315 — **மதுரை வேளாதத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வேறுபடுகின்றாய் என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

வரைவிடை வைத்துத் தலைவன் பிரிந்த காலத்து, 'நீ ஆற்றியிராததால் உன் மேனி வேறுபடுகின்றதே' எனக் கேட்ட தோழியிடம் தலைவி, 'நான்

அவனது விருப்பப்படியே ஒழுகும் தன்மையினைக் கொண்டவளாதலின் ஆற்றியிருப்பேன்' என்று கூறியது.

எழுதரு மதியம் கடற்கண் டாஅங்கு
ஒழுகுவெள் அருவி ஓங்குமலை நாடன்
ஞாயிறு அனையன் தோழி!
நெருஞ்சி அனையஎன் பெரும்பணைத் தோளே.

தெளிவுரை

உதய நிலவைக் கடலில் பார்ப்பதுபோல, உயர்ந்த மலையிலிருந்து வெள்ளிய அருவி ஓடிவரும் மலைநாட்டைச் சார்ந்தவன், தலைவன். அவன் எனக்கு ஞாயிற்றைப் போன்றவன். பெரிய மூங்கிலைப் போன்ற என் தோள்கள் நெருஞ்சிப்பூக்களைப் போன்றவை.

கருத்து

தோழியே! தலைவனது கருத்தின்படியே நடப்பவள் நான். ஆதலின், அவன் வரும்வரை ஆற்றியிருப்பேன்.

குறிப்பு

சூரியன் இருக்குமிடத்தை நோக்கியே நெருஞ்சிப்பூ நிற்கும். மலைநாடன் ஞாயிறு போன்றவன். என் தோள்கள் நெருஞ்சிப்பூக்கள் போன்றவை. ஆகவே, எப்பொழுதும் தலைவன் கருதுவதையே நானும் கருதி ஆற்றியிருப்பேன் என்கிறாள், தலைவி.

உவமை விளக்கம்

கடலின் அடிவானத்தில் நிலவு பாதி எழுந்துள்ள நிலையில் ஒளி வெள்ளம் ஓடிவருவதுபோல, ஓங்கிய மலையிலிருந்து அருவி ஓடிவருகின்றது.

சொற்பொருள்

1. எழுதரு - கடலின்மீது எழுந்துகொண்டிருக்கிற; மதியம் - நிலவு.
2. ஒழுகுவெள் அருவி - ஓடி வருகின்ற வெள்ளிய அருவி.
3. ஞாயிறு அனையன் - ஞாயிற்றைப் போன்றவன்.
4. என் பெரும் பணைத்தோள் - பெரிய மூங்கிலைப் போன்ற என் தோள்கள் (பணை - மூங்கில்); நெருஞ்சி அனைய - நெருஞ்சிப் பூக்களைப் போன்றவை.

தலைவி கூற்று

குறுந்தொகை 249 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வைப்ப 'ஆற்றகிற்றியோ' என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைபொருளை ஈட்டி வரப் பிரிந்திருக்கும் காலத்தில், 'உன்னால் ஆற்றியிருக்க இயலுமா?' என்று கேட்ட தோழியிடம் தலைவி, 'அவன் மலையைப் பார்த்து ஆற்றியிருப்பேன்' என்று கூறியது.

இனமயில் அகவும் மரம்பயில் கானத்து,
நரைமுக ஊகம் பார்ப்பொடு பனிப்ப,
படுமழை பொழிந்த சாரல் அவர்நாட்டுக்
குன்றம் நோக்கினென் – தோழி!
பண்டை யற்றோ, கண்டிசின், நுதலே?

தெளிவுரை

தோழியே! கூட்டமாய்க் கூடி மயில்கள் ஆரவாரித்துக்கொண்டிருக்கும் மரங்கள் அடர்ந்த காட்டில், வெளுத்த முகத்தைக் கொண்ட கருங்குரங்கு தன் குட்டிகளோடு நடுங்குமாறு பெருமழை பொழிகின்ற சாரலைக் கொண்ட அவர் நாட்டுக் குன்றத்தைப் பார்த்தேன். அதனால் என் நெற்றி, பசலை நீங்கிப் பழைய அழகைப் பெற்றுள்ளது. நீ நன்றாய்ப் பார்.

கருத்து

தலைவன் இல்லாத காலத்தில் அவன் நாட்டுக் குன்றத்தை நோக்கி ஆற்றியிருப்பேன்.

குறிப்பு

ஒருவரைப் பிரிந்திருக்கும்போது அவர் பயன்படுத்திய ஒன்றைப் பார்த்தால் ஆறுதலாயிருக்கும். அதுபோலத் தலைவி, தலைவன் நாட்டுக் குன்றைப் பார்த்ததுமே ப்சலை நீங்கிப் பழைய அழகைப் பெற்றனள்.

சொற்பொருள்

1. இனமயில் - கூட்டமாய்க் கூடிய மயில்கள்; அகவும் - ஆரவாரிக்கும்; மரம் பயில் - மரங்கள் செறிந்த; கானத்து - காட்டில்.
2. நரைமுக - வெளுத்த முகத்தைக் கொண்ட; ஊகம் - குரங்கு; பார்ப்பொடு - குட்டிகளோடு; பனிப்ப - நடுங்க.
3. படுமழை - பெருமழை.
4. குன்றம் - மலை
5. நுதல் - என் நெற்றி; பண்டையற்று - பழைய அழகைப் பெற்றுள்ளது; கண்டிசின் - காண்க.

தலைவி கூற்று

குறுந்தொகை 240 **கொல்லன் அழிசியார்**

திணை : முல்லை

கூற்று

வரைவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி கூறியது.

கூற்று விளக்கம்

வரைவிடை வைத்துத் தலைவன் பிரிந்த காலத்தில் தலைவி ஆற்றாள் எனக் கவலைப்படும் தோழியை நோக்கி, "நான் அவர் மலையை நோக்கி ஆற்றியிருக்கிறேன்; அம்மலையும் மாலைக்காலத்தில் மறைந்து விடுவதால் பார்க்க இயலாததாகிவிடுகிறது. ஆதலின், ஆற்றியிருக்க இயலாதவள் ஆகிறேன்" எனத் தலைவி தன் நிலையைக் கூறியது.

பனிப்புதல் இவர்ந்த பைங்கொடி அவரைக்
கிளிவாய் ஒப்பின் ஒளிவிடு பல்மலர்
வெருக்குப்பல் உருவின் முல்லையொடு கஞலி,
வாடை வந்ததன் தலையும் நோய்பொர,
கண்டிசின் வாழி தோழி! தெண்திரைக்
கடல்ஆழ் கலத்தின் தோன்றி,
மாலை மறையும்அவர் மணிநெடுங் குன்றே.

தெளிவுரை

தோழியே! வாழ்க! குளிர்ச்சி பொருந்திய புதரில் படர்ந்துள்ள பசுமையான அவரைக்கொடியில், கிளியின் மூக்குப்போல ஒளி

வீசும் மலர்கள் பல மலர்ந்துள்ளன. அவ்வவரைப்பூக்களுடன் காட்டுப் பூனையின் பற்களைப் போன்ற உருவத்தினைக் கொண்ட முல்லை மலர்களும் நெருங்கிப் பூத்துள்ளன. வாடைக் காற்றும் வீசிக்கொண்டிருக்கிறது. கடலில் மூழ்கும் மரக்கலம் போல நீலமணிபோலும் அவரது உயர்ந்த குன்றம் மாலைக் காலத்தில் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விடுகின்றது. ஆதலின், ஆற்ற இயலாதவள் ஆகிறேன்.

கருத்து

தோழியே! அவர் மலையை நோக்கி ஆற்றியிருந்தேன்; அதுவும் மாலையில் மறைந்து விடுவதால் ஆற்றேன் ஆயினேன்.

குறிப்பு

பகற்காலத்தில் அவர் மலையைப் பார்த்து ஒருவாறு துன்பம் தணிந் திருந்தேன். மாலையில் அம்மலை என் கண்ணுக்குத் தெரியாமல் மறைகின்றது. அதனால் வருந்துகின்றேன்.

கடலில் மூழ்கும் மரக்கலம் சிறிது சிறிதாய் மறைந்து முடிவில் முற்றிலுமாய் மறைந்துவிடுகிறது. அதுபோலப் பகல் நேரம் கழியக் கழிய மலையின் தோற்றமும் படிப்படியாய் மங்கலாகி, மாலையில் முற்றிலுமாய் மலை தெரியாதவாறு மறைந்து விடுகிறது.

சொற்பொருள்

1. பனிப் புதல் - குளிர்ச்சி பொருந்திய புதர்; இவர்ந்த - ஏறிப் படர்ந்த.
2. ஒப்பின் - போன்று.
3. வெருக்குப் பல் - காட்டுப்பூனையின் பல்; உருவின் - உருவத்தைக் கொண்ட; கஞலி - நிறைந்து.
4. வாடை - வாடைக்காற்று; வந்ததன் தலையும் - வீசத் தொடங்கிய பிறகும்; நோய் பொர - நோய் நம்மைத் தாக்க.
5. கண்டிசின் - காண்பாயாக; தெண்திரை - தெளிந்த அலைகளைக் கொண்ட.
6. கடல் ஆழ் - கடலிலே மூழ்கும்; கலத்தின் - மரக்கலம் போல; தோன்றி - கண்ணுக்குத் தோன்றி.
7. மாலை - மாலைக்காலத்தில்; மறையும் - கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விடும்; மணிநெடும் குன்று - நீலமணி போலும் உயர்ந்த குன்றம்.

தலைவி கூற்று

குறுந்தொகை 377 **மோசி கொற்றனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி அழிந்து கூறியது. (அழிந்து - வருந்தி)

கூற்று விளக்கம்

'தலைவன் பிரிந்தமையால் என் உடல் மெலிந்தது. எனினும், அவனது இயல்பு நினைந்து நான் ஆற்றியிருக்கிறேன்; நீ வருந்துவது ஏன்?' என்று தலைவி தோழியிடம் கூறியது.

மலர்ஏர் உண்கண் மாண்நலம் தொலைய,
வளைஏர் மென்தோள் ஞெகிழ்ந்ததன் தலையும்,
மாற்றுஆ கின்றே தோழி!ஆற் றலையே
அறிதற்கு அமையா நாடனொடு
செய்து கொண்டதுஓர் சிறுநல் நட்பே.

தெளிவுரை

"தோழியே! மலர் போன்ற அழகிய கண்களின் சிறந்த தன்மை அழிந்தது; வளையல் அணிந்த அழகிய மெல்லிய தோள்களும் இளைத்துவிட்டன. ஆயினும், குணங்கள் முழுவதையும் கண்டறிய இயலாத தலைவனுடன் நான் கொண்ட சிறிய நல்ல தொடர்பு என் துன்பத்திற்கு மாற்றாய் இருக்கின்றது. ஆனால், நீயோ துக்கத்தைத் தாங்க இயலாமல் வருந்துவது ஏன்?" என்று தலைவி தோழியிடம் கேட்டாள்.

கருத்து

தலைவன் தன்மையை நினைந்து நான் துன்பத்தைத் தாங்கியிருக்கிறேன்.

விளக்கம்

தலைவி மெலிவதைக் கண்ட தோழி வருந்தினாள். அதைக் கண்ட தலைவி, "என் உடம்பு மெலிந்தாலும் தலைவனோடு கொண்ட சிறந்த நட்புத் தன்மையை எண்ணித் துக்கத்தைத்

தாங்கிக்கொண்டிருக்கிறேன். நீ துக்கத்தைத் தாங்க இயலாமல் வருந்துவது ஏன்?" என்று தோழியைக் கேட்டாள்.

சொற்பொருள்

1. ஏர் - அழகு; உண்கண் - மையுண்ட கண்; மாண்நலம் - சிறந்த தன்மை; தொலைய - அழிய.
2. வளைஏர் - வளையல்களைக் கொண்ட அழகிய; ஞெகிழ்ந்தது - நெகிழ்ந்தது; தலையும் - போதிலும்.
3. மாற்று ஆகின்று - (இந்நிகழ்ச்சிகள்) என் துன்பத்திற்கு மாற்றாய் இருக்கின்றன; ஆற்றலையே - (உன்னால்) பொறுத்துக்கொள்ள இயலவில்லையே.
4. அறிதற்கு அமையா - முழுவதையும் அறிந்துகொள்வதற்கு இயலாத.
5. சிறுநல் - சிறிய நல்ல.

தலைவி கூற்று

குறுந்தொகை 36 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

'வரைவிடை வைத்துப் பிரிய ஆற்றாள்' எனக் கவன்று வேறுபட்ட தோழியைத் தலைமகள் ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

திருமணத்திற்காகப் பொருளீட்டிவரத் தலைவன் பிரிந்து சென்றான். தலைவி அப்பிரிவினை ஆற்றாள் எனத் தோழி வருந்தினாள். அது கண்ட தலைவி, "நானே ஒருவாறு ஆற்றியிருக்கிறேன். அங்ஙனமிருக்க நீ வருந்துவது ஏன்? வருந்தாதே" என்று சொல்லியது.

துறுகல் அயலது மாணை மாக்கொடி
துஞ்சுகளிறு இவரும் குன்ற நாடன்,
நெஞ்சுகளன் ஆக, 'நீயலென் யான்'என,
நற்றோள் மணந்த ஞான்றை, மற்றுஅவன்,
தாவா வஞ்சினம் உரைத்தது
நோயோ தோழி! நின்வயி னானே?

தெளிவுரை

"தோழியே! மாணை என்னும் பெரிய கொடி தன்னருகே கிடந்த பெருங்கல்லின்மீது படராது, தூங்குகின்ற யானையின் மீது படரும் காட்சிக்குரிய குன்றத்தை உரிமையாய்க் கொண் டவன், நம் தலைவன். அவன் என் நல்ல தோள்களைத் தழுவிக் கலந்தபோது, அவன் நெஞ்சே அவனுக்குச் சான்றாக, 'நான் உன்னைப் பிரியேன்' என்று, கெடுதல் இல்லாத உறுதிமொழி கூறினன். அவ்வாறு அவன் கூறிய மொழி உன்னை வருத்து கின்றதா? வருந்தாதே" எனத் தலைவி கூறினாள்.

கருத்து

தோழியே! தலைவன் சூளுறவு பொய்த்தலால் வருந்த வேண்டிய நானே ஒருவாறு ஆற்றியிருக்க, நீ ஏன் துன்புற்று வருந்துகிறாய்? வருந்தாதே.

விளக்கம்

மாணைக்கொடி தூங்குகின்ற யானைமீது படர்ந்தது தலைவனின் உறுதிமொழியை நம்பியதைப் போன்றதாகும். யானை தூக்கம் கலைந்து எழுந்ததும் மாணைக்கொடி சிதை வுறும். அதுபோலத் தலைவனின் சூளுரை, அவன் பிரிந்து சென்றதும் பொய்த்துப் போய்விட்டது.

குறிப்பு

மாணை மிக விரைந்து படரும் கொடி; யானை படுத்து உறங்கி எழுவதற்குள் அதன்மீது படர்ந்துவிடும்.

சொற்பொருள்

1. துறுகல் - நீண்டிருக்கும் பருத்த கல்; மாணை - விரைந்து படரும் தன்மை வாய்ந்த ஒரு கொடி; மா - பெரிய.
2. துஞ்சு களிறு - உறங்கும் ஆண்யானை; இவரும் - மேலே படரும்.
3. நெஞ்சுகளன் ஆக - நெஞ்சறிய (நெஞ்சே தனக்குச் சான்றாக); நீயலென் - பிரியேன்.
4. நற்றோள் - (என்) நல்ல தோள்களை; மணந்த ஞான்று - தழுவிய பொழுது.
5. தாவா - கெடுதல் இல்லாத, தவறாத; வஞ்சினம் - உறுதிமொழி.
6. நோய் - வருத்தம் (உண்டாக்கியதோ) ; நின் வயின் - உன்னிடம் (வயின் - இடம்)

தலைவி கூற்று

குறுந்தொகை 208 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை 'ஆற்றல் வேண்டும்' என்ற தோழிக்குக் கிழத்தி கூறியது.

கூற்று விளக்கம்

'வரைபொருளைத் தேடி வருவதற்காகத் தலைவன் பிரிந்து சென்றுள்ளான்; அவன் வரும்வரை பிரிவுத்துயரத்தைப் பொறுத்திருத்தலே நம் கடமை' என்றனள், தோழி. அவளிடம் தலைவி, 'நான் தலைவன் கருத்தை உணர்ந்தேன்; ஆயினும், அயலார் வரையப் புகுவரேல் என் செய்வது என்று ஆற்றாதவள் ஆயினேன்' என்று கூறியது.

ஒன்றேன் அல்லேன்; ஒன்றுவென்; குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்,
நின்றுகொய மலரும் நாடனொடு
ஒன்றேன் தோழி! ஒன்றி னானே.

தெளிவுரை

மலையில் போரிட்ட சினம் குன்றாத ஆண்யானை வேங்கையின் அடிமரத்தை மிதித்ததால், அது சாய்ந்தது. அதனால், குறமகளிர் தம் கூந்தலில் சூடுவதற்கான மலர்களை, அம்மரத்தில் ஏறாமலே, கீழே நின்றபடி கொய்தனர். இத்தகைய காட்சிக்குரிய நாட்டிற்குரியவன், நம் தலைவன். நான் அவனோடு பொருந்தாத தன்மையினைக் கொண்டவள் அல்லள்; பொருந்தும் தன்மையளே. ஆயினும், அயலார் வரைவொடு புகுவதாகிய ஒரு காரணத்தால் மட்டும் நான் தலைவனுடன் ஒன்றுபடாத நிலையில் உள்ளேன்.

கருத்து

தலைவர் இன்னும் வந்திலர். ஆதலால், வேறு யாரேனும் என்னை மணம் பேச வருவரோ என்ற காரணத்தால் துன்புறுகிறேன்.

விளக்கம்

போரிட்ட யானை சினம் குன்றாமல் மிதிக்க வேங்கை மரம் சாய்ந்தது. அதுபோல, களவொழுக்கத்தில் ஈடுபட்டுக் கலந்த தலைவனின் பிரிவு வருத்துவதால் தலைவி நலனழிந்து தளர் வுற்றிருக்கிறாள். மரம் சாய்ந்திருப்பதால் தரையில் நின்று கொண்டே எளிதாய் மலர் கொய்ய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதுபோலத் தலைவியின் நிலைக்கு இரங்குவார்போல, அயலார் வரைவுக்கு ஏற்பாடு செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்குத் தலைவன் பிரிவு காரணமாகும். ஆதலால் அந்த ஒரு காரணத்தால் மட்டும் தலைவி தலைவனோடு ஒன்றி நிற்க இயலவில்லை. இவ்வாறு இவ்வியற்கைக்காட்சி உள்ளுறை உவமையாய் அமைகிறது.

குறிப்பு

பொருகளிற்றால் மிதிக்கப்பட்ட வேங்கை மரம் அழியாது தாழ்ந்து குறமகளிர் தரையில் நின்றபடியே மலர்களைப் பறித்துக்கொள்ளும்படியாக விளங்கும். 'அவ்வாறே வேற்று வரைவால் பேதுற்ற நானும், தலைவன் வரின், அவனோடு உடன்போக்கிற்சென்று கூடி வாழ்வதற்கும் இசை பவளாய் உள்ளேன்' என்று தலைவி தோழியிடம் உணர்த்துகிறாள்.

சொற்பொருள்

1. ஒன்றேன் அல்லேன் - (நான் தலைவனோடு) பொருந்தாத தன்மையினைக் கொண்டவள் அல்லள்; ஒன்றுவென் - பொருந்தும் தன்மையளே!
2. பொரு களிறு - போரிட்ட ஆண்யானை; நெரிதாள் - சாய்ந்துள்ள அடிமரத்தைக் கொண்ட; வேங்கை - வேங்கை மரம்.
3. பெய்ம்மார் - சூடுவதற்காக.
4. நின்று கொய - (மரத்தின் மேலே ஏறாமல் கீழே) நின்றுகொண்டு கொய்யும்படியாக.
5. ஒன்றினானே - (அயலார் மணம் பேச வருவரே) என்னும் ஒரு காரணத்தால் மட்டும்; ஒன்றேன் - தலைவனுடன் ஒன்றுபடாத நிலையில் உள்ளேன்.

தலைவி கூற்று

குறுந்தொகை 171 **பூங்கணுத்திரையார்**

திணை : மருதம்

கூற்று

வரைவிடை 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்த காலத்தில், அயலார் திருமணம் பேச வந்தனராக, அதுகண்டு வருந்திய தோழிக்கு, 'இவர்கள் முயற்சி பயன் அளிக்காது' என்று தலைவி கூறியது.

காண்இனி வாழி, தோழி! யாணர்க்
கடும்புனல் அடைகரை நெடுங்கயத்து இட்ட
மீன்வலை மாப்பட் டாஅங்கு,
இதுமற்று எவனோ நொதுமலர் தலையே?

தெளிவுரை

தோழியே! இப்போது நடக்கும் இதனைப் பார்! புதிதாய் வரும் வெள்ளம் பாயும், கரையைக் கொண்ட நெடிய குளத்திலே, மீன் பிடிப்பதற்காக வீசிய வலையில் விலங்கு அகப்பட்டதைப் போல, நம் காதலர் அல்லாத அயலார் திருமணத்திற்கு முயலும் இந்த முயற்சி என்ன பயனைத் தந்துவிடும்? (ஒரு பயனையும் தாராது.)

கருத்து

தோழியே! அயலார் திருமண முயற்சி பயனற்றது. அது குறித்து வருந்தாதே!

விளக்கம்

மீனுக்காக வீசப்பட்ட வலையில் வேறு விலங்கு வந்து பட்டால், அதனை உதறிப் போக்கிவிட்டு, மீளவும் மீனுக்கே வலையிடுவர். அதுபோலத் தலைவனுக்காகக் காத்திருக்கும் தானும் அயலாரது வரவை ஒதுக்கிவிட்டுத் தலைவனின் வரவுக்காகக் காத்திருக்கும் திண்மையுள்ளவள் என்பதைத் தலைவி புலப்படுத்துகிறாள்.

சொற்பொருள்

1. யாணர் - புதிதாய் வரும்.
2. கடும்புனல் - மிக்க நீரையும்; அடைகரை - (அந்நீரைத்) தேக்கப் பயன்படும் கரையையும் கொண்ட; நெடும் கயம் - நெடிய குளத்தில்; இட்ட - வீசப்பட்ட.
3. மா - (வேறு ஒரு) விலங்கு; பட்டாஅங்கு - அகப்பட்டதைப் போல.
4. இது - வரைவுக்குரிய முயற்சி; நொதுமலர் தலை - அயலாரிடம்; எவன் - என்ன பயனைத் தரும்?

தலைவி கூற்று

குறுந்தொகை 316 — **தும்பிசேர் கீரனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை வேறுபடுகின்றாய் என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

வரைந்துகொள்வதற்கான பொருளை ஈட்டிவரச் சென்ற தலைவன், குறித்த காலத்தில் வாராமையால் தலைவியின் உடல் மெலிந்து வேறு பட்டது. அவளை ஆற்றியிருக்க வேண்டும் என்று சொன்ன தோழியிடம், "தலைவன் தான் சொன்னபடி குறித்த காலத்தில் வரவில்லை. என் உடல் மெலிவுற்றது. இதனை அன்னை அறிவாளோ என்று அஞ்சியே உடல் வேறுபட்டது" எனக் கூறியது.

ஆய்வளை ஞெகிழவும், அயர்வுமெய் நிறுப்பவும்,
நோய்மலி வருத்தம் அன்னை அறியின்,
உளெனோ வாழி தோழி! விளியாது,
உரவுக்கடல் பொருத விரவுமணல் அடைகரை
ஓரை மகளிர் ஓராங்கு ஆட்ட,
வாய்ந்த அலவன் துன்புறு துனைபரி
ஓங்குவரல் விரிதிரை களையும்,
துறைவன் சொல்லோ பிறஆ யினவே.

தெளிவுரை

வலிமையான கடலலைகள் மோதுவதால் பரவுகின்ற மணலைக் கொண்ட கடலோரக்கரையில் விளையாடும் மகளிர்

அங்கே காணப்பட்ட நண்டினை ஒரே மாதிரி விரட்டி ஓட்டினர். அஞ்சித் துன்புற்று ஓடிய நண்டினை அப்போது மிக உயர்ந்து எழுந்து வந்த அகன்ற அலை, கடலுள்ளே இழுத்துச் சென்று அதன் துன்பத்தை நீக்கியது. அத்தகைய காட்சிக்கிடனான கடற்றுறையைக் கொண்ட தலைவன் தான் சொன்ன உறுதி மொழிகளிலிருந்து தவறிவிட்டான். அதனால் என் உடல் மெலிவுற்றது; நான் தேர்ந்தணிந்த வளையல்கள் நெகிழலாயின; உடலில் சோர்வு வந்து நிலைத்தது; நான் உற்ற நோயினால் என் வருத்தம் மிகுதியாயிற்று. இதனை அன்னை அறிவாளாயின் நான் மேலும் உயிரோடிருப்பேனா?

கருத்து

என் நோயினை அன்னை அறிவாளோ என்றே அஞ்சுகின்றேன்.

குறிப்பு

மகளிரால் துரத்தப்பட்ட நண்டினை, கடலலை வந்து கொண்டுபோய் அதன் துன்பத்தை நீக்கும் என்னும் தொடர்மூலம், தலைவியைப் பெற்ற அன்னை அவளைத் துன்புறுத்துமுன் தலைவன் வந்து அவளை மணந்து அவள் துன்பத்தைப் போக்க வேண்டும் என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

விளக்கம்

உறுதிமொழியிலிருந்து தவறியது: தலைவன் 'இந்தக் காலத்திற்குள்' வந்து சேர்வேன் என்று சொன்ன உறுதிமொழியிலிருந்து தவறியது.

சொற்பொருள்

1. ஆய்வளை - தேர்ந்து அணிந்த வளையல்; ஞெகிழ - நெகிழ; அயர்வு - சோர்வு; மெய் நிறுப்ப - உடலில் வந்து நிலைத்தது.
2. நோய்மலி - நோயினால் மிகுந்த; அன்னை - தாய்.
3. விளியாது - இறவாது; உளெனோ - உயிரோடு இருப்பேனா?
4. உரவுக் கடல் - வலிமையான கடல்; பொருத - மோதுவதால்; விரவு - பரவுகின்ற; அடைகரை - கரையோரம்.
5. ஓரை மகளிர் - விளையாடும் மகளிர்; ஓராங்கு - ஒரே மாதிரியாய்; ஆட்ட - விரட்டி ஓட்ட.
6. வாய்ந்த - அகப்பட்டுக்கொண்ட; அலவன் - நண்டு; துன்புறு - வருத்தம் மிகுந்த; துனைபரி - விரைந்து ஓடுகின்ற.

7. ஓங்குவரல் - உயர்ந்து வருகின்ற; விரிதிரை - பரந்த அலை; களையும் - (தன்னுள் இழுத்துச் சென்று) நீக்கும்.
8. துறைவன் - தலைவன்; சொல் - உறுதிமொழி; பிற ஆயின - மாறிப் போயிற்று.

தலைவி கூற்று

குறுந்தொகை 6 **பதுமனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிந்தவழி ஆற்றாளாகிய தலைமகள் தோழியை நெருங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

திருமணத்திற்காகப் பொருளீட்டி வருவதற்காகத் தலைவன் பிரிந்து சென்றிருந்த காலத்தில் தலைவி பிரிவாற்றாமையால் தான் துயிலாதிருந்த நிலையைத் தோழியிடம் கூறியது.

நள்ளென்று அன்றே, யாமம்; சொல்அவிந்து,
இனிதுஅடங் கினரே, மாக்கள்; முனிவுஇன்று,
நனந்தலை உலகமும் துஞ்சும்;
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே.

தெளிவுரை

தோழியே! நள்ளிரவாகிய யாமமும் இருள் செறிந்துள்ளது. இவ்விடையாமத்தில் பேசுதலும் அடங்கி மக்கள் இனிதே தூங்குகின்றனர். இப்பேருலகத்திலே எல்லா உயிர்களும் தடையேதுமின்றித் தூங்குகின்றன. உறுதியாய் யான் ஒருத்தி மட்டுமே தூங்காமல் தவிக்கிறேன்.

கருத்து

தோழியே! யாவரும் துயிலும் நள்ளிரவிலும் நான் ஒருத்தி மட்டுமே தூங்காமல் தவிக்கிறேன்.

விளக்கம்

தோழியை நோக்கி, 'நான் ஒருத்தி மட்டுமே தூங்காது வருந்துகிறேன்' என்று தலைவி சொன்னது, 'எனக்கு உற்ற துணையாய் இருந்து ஆற்றுவிக்க வேண்டிய கடமை கொண்ட நீயும் இனிதே தூங்கினாய்' என்பதைக் குறிப்பதாயும் உள்ளது.

சொற்பொருள்

1. நள் என்று அன்று - 'நள்' என்னும் ஓசையைக் கொண்டதாயிருக்கிறது; யாமம் - நள்ளிரவு; சொல் அவிந்து - பேசுதல் அடங்கி.
2. அடங்கினர் - தூங்குகின்றனர்; முனிவு இன்று - வெறுப்பு இன்றி.
3. நனந்தலை - அகன்ற இடத்தைக் கொண்ட; துஞ்சும் - தூங்கும்.
4. மன்ற - நிச்சயமாய்.

தலைவி கூற்று

நற்றிணை 87 **நக்கண்ணையார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடைவைத்துப் பிரிய ஆற்றாளாய தலைமகள் கனாக் கண்டு தோழிக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

வரைவினை இடைவைத்து, வரைதற்கான பொருளீட்டிவரத் தலைவன் சென்றிருந்தான். பிரிவாற்றாமையால் தளர்ந்த தலைவி, ஒரு நாள் பகலில் கனாக் கண்டு அதனைத் தன் தோழியிடம் கூறியது.

உள்ஊர் மாஅத்த முள்எயிற்று வாவல்
ஓங்கல் அம்சினைத் தூங்குதுயில் பொழுதின்
வெல்போர்ச் சோழர் அழிசிஅம் பெருங்காட்டு
நெல்லிஅம் புளிச்சுவைக் கனவி யாஅங்கு
அதுகழிந் தன்றே தோழி; அவர்நாட்டுப்
பனிஅரும்பு உடைந்த பெருந்தாள் புன்னைத்
துறைமேய் இப்பி ஈர்ம்புறத்து உறைக்கும்
சிறுகுடிப் பரதவர் மகிழ்ச்சியும்
பெருந்தண் கானலும் நினைந்தஅப் பகலே.

தெளிவுரை

தோழியே! நம் தலைவரது நாட்டில் உள்ள, பெரிய அடிப் பகுதியினைக் கொண்ட புன்னை மரத்தில் குளிர்ச்சி பொருந்திய அரும்புகள் மலர்ந்திருக்கும். அம்மலர்களிலிருந்து உதிர்கின்ற பூந்தாதுகள் கடற்கரையில் மேய்கின்ற சங்குகளின் ஈரமான மேற்பகுதியில் விழுந்து அவற்றை அழகு செய்யும். இவ்வாறு அமைந்த சிறுகுடியில் உள்ள பரதவர் மகிழ்ச்சியையும், பெரிய குளிர்ச்சி பொருந்திய கடற்கரைச்சோலையினையும் நினைந்து பகற்பொழுதிலே தூங்கினேன்; ஒரு கனாவும் கண்டேன். ஊரில் உள்ள மாமரத்தில், முள் போன்ற பற்களைக் கொண்ட வௌவால் உயரமான அழகிய கிளையில் தொங்கியபடி தூங்கும். அவ்வாறு தூங்கும்பொழுது அது, வெல்லும் போரைக் கொண்ட சோழர் குடியில் பிறந்து, ஆர்க்காட்டில் வீற்றிருக்கும் அழிசி என்பவனின் பெரிய காட்டில் உள்ள நெல்லிக்கனியின் இனிய புளிப்புச்சுவையைத் தான் துய்த்ததாய்க் கனவு காணும். அதுபோன்று நானும் நம் தலைவனுடன் கூடி இன்புற்றதாய்க் கனவு கண்டேன். அந்தக் கனவின்பமும் கண் விழித்தவுடன் நீங்கிப்போயிற்றே!

கருத்து

'தோழியே! தலைவனோடு நான் கூடி இன்புற்றிருப்பதாய்க் கனவில் கண்டு பெற்ற மகிழ்ச்சி கண் விழித்ததும் நீங்கிவிட்டதே' என்று தலைவி வருந்தினாள்.

விளக்கம்

மரக்கிளையில் தொங்கியபடி தூங்கும் வௌவால், நெடுந் தொலைவிலுள்ள ஆர்க்காட்டுக் காட்டில் இருந்ததான புளிப் பான நெல்லிக்கனியைத் தின்றதாய்க் கனவு கண்டது. அது போல, தலைவியும் தொலைதூர நாட்டிலுள்ள தலைவனுடன் சேர்ந்து இன்புற்றதாய்க் கனவு கண்டனள். அவள் கண் விழித்ததும் அந்த இன்பமும் கழிந்துவிட்டது.

குறிப்பு

பகற்பொழுதில் மாமரக்கிளையில் தொங்கியபடி தூங்கும் வௌவால், இரவில் சென்று தின்ற நெல்லிக்கனியின் புளிப்புச்சுவையைத் தான்

துய்ப்பதாய்க் கனவு கண்டது என்றது, களவுக்காலத்தில் குறியிடத்தே தலைவனைக் கண்டு இன்புற்ற அவனது மார்பின் முயக்கத்தை அவனைப் பிரிந்திருக்கும் இப்பொழுது தலைவி கனவில் பெற்றதைப் புலப்படுத்துகிறது.

சொற்பொருள்

1. உள்ஊர் - ஊரில் உள்ள; மாஅத்த - மாமரத்தில்; முள் எயிற்று - கூரிய பற்களைக் கொண்ட; வாவல் - வெளவால்.
2. ஓங்கல் - உயரமான; அம்சினை - அழகிய கிளை; தூங்கு - தொங்கியபடி.
3. அழிசி - சோழ மன்னன்.
4. நெல்லி - நெல்லிக்காய்; அம் - அழகிய; புளிச்சுவை - புளிப்புச் சுவையைத் (துய்த்ததுபோல); கனவியாங்கு - கனவு கண்டாற் போல.
5. அது கழிந்தன்று - அந்தக் கனவும் இல்லாது போயிற்று.
6. பனி - குளிர்ந்த; உடைந்த - மலர்ந்த; பெருந்தாள் - பருத்த அடிப்பகுதி; புன்னை - புன்னை மரம்.
7. இப்பி - சங்கு; ஈர்ம் புறத்து - குளிர்ச்சி பொருந்திய மேற்புறத்தில்; உறைக்கும் - வீழ்ந்து அழகுபடுத்தும்.
9. நினைந்த - நினைந்தபடியே; அப்பகல் - அந்தப் பகற்பொழுது.

தலைவி கூற்று

குறுந்தொகை 30 **கச்சிப்பேட்டு நன்னாகையார்**

திணை : பாலை

கூற்று

'அவர் நின்னை வரைந்து கோடல் காரணத்தால் பிரியவும், நீ ஆற்றாயாகின்றது என்?' என வினாய தோழிக்குத் தலைமகள், 'யான் ஆற்றியுள்ளேனாகவும், கனவு வந்து என்னை இங்ஙன் நலிந்தது' எனக் கூறியது.

கூற்று விளக்கம்

'தலைவன் உன்னை வரைந்துகொள்வதற்காகப் பொருள் தேடி வரப் பிரிந்துள்ளான். நீயோ பிரிவைப் பொறுத்திராது இப்படி வருந்துகிறாயே' எனக் கேட்ட தோழியிடம் தலைவி, 'நான் ஆற்றியிருந்தாலும் தலைவனை மருவியதாகக் கண்ட கனவினால் வருந்தியுள்ளேன்' என்று சொல்லியது.

கேட்டிசின் வாழி தோழி! அல்கல்,
பொய்வ லாளன் மெய்உறல் மரீஇய
வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட, ஏற்றுஎழுந்து,
அமளி தைவந் தனனே; குவளை
வண்டுபடு மலரின் சாஅய்த்
தமியேன்; மன்ற அளியேன் யானே!

தெளிவுரை

தோழியே! கேள்! நேற்று இரவு, பொய் சொல்லுதலில் வல்ல தலைவன், என் உடலைத் தழுவிப் பொருந்தியிருப்பது போன்ற பொய்க் கனா ஒன்று, மெய்யாய் நடப்பதுபோலக் கண்டேன். அதனை உண்மையென மயங்கி எழுந்து, படுக்கையைத் தடவிப் பார்த்து ஏமாந்தேன்; மொய்க்கப்படும் வண்டுகளால் உழக்கப் படும் குவளை மலரைப் போல நலிவுற்று நான் ஒருத்தி மட்டும் படுக்கையில் இருப்பதை உணர்ந்தேன். என் நிலை இரங்கத் தக்கது!

கருத்து

தோழியே! இரவில், தலைவனைத் தழுவியிருப்பதுபோலக் கனாக் கண்டு, உண்மையென்று ஆவலோடு விழித்துப் பார்த்து ஏமாந்தேன்.

விளக்கம்

தலைவன் தன் உடம்பை அன்போடு அணைத்துக்கொள்வது போன்றதொரு கனாவைத் தலைவி இரவில் கண்டாள். உடனே விழித்துப் படுக்கையைத் தடவிப் பார்த்தாள்; கண்டது பொய்க் கனா என்பதுணர்ந்து கலங்கினாள். தலைவன் இல்லாமல் தான் தனியாய் இருப்பதை அறிந்தாள். அவளின் இந்நிலை இரங்கத் தக்கதாயுள்ளது.

சொற்பொருள்

1. கேட்டிசின் - கேள்; அல்கல் - இரவு.
2. பொய்வலாளன் - பொய் சொல்லுவதில் வல்லவன்; மெய் - உடல்; உறல் - பொருந்தி; மரீஇய - தழுவிய.
3. வாய்த்தகை - உண்மையானது போன்ற; மருட்ட - மயக்க.
4. அமளி - படுக்கை; தைவந்தனன் - தடவிப் பார்த்தேன்.

5. படு - மொய்த்து உழக்கும்; மலரின் - மலரைப் போல; சாஅய் - மெலிந்து.
6. தமியேன் - தனியள்; அளியேன் - இரங்கத்தக்கவள்.

தலைவி கூற்று

கலித்தொகை 128 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடையாற்றாளாய்ச் செல்கின்ற தலைமகளது கவின் கண்டு வினாய தோழிக்கு, அவள் தான் கண்ட கனவு நிலையுரைத்தது.

கூற்று விளக்கம்

களவு வெளிப்பட்ட பின்னரும், வரைவுக்கு முன்னரும் ஆகிய இடைக் காலத்தில் காமநோய் பொறுக்கலாற்றாமல் இருந்த தலைவி ஒருநாள் புதிய பொலிவுடன் தோன்றினாள். அதைக் கண்டு தோழி அது எவ்வாறு என வினாவ, அதற்குத் தலைவி, தான் முதல் நாள் கண்ட கனவே காரணம் என்று கூறுகின்றாள்.

தரவு

'தோள்துறந்து, அருளா தவர்போல் நின்று,
வாடை தூக்க, வணங்கிய தாழை
ஆடுகோட்டு இருந்த அசைநடை நாரை,
நளிஇருங் கங்குல், நந்துயர் அறியாது,
அளிஇன்று, பிணிஇன்று, விளியாது, நரலும்,
கானல்அம் சேர்ப்பனைக் கண்டாய் போலப்
புதுவது கவினினை,' என்றி யாயின்,
நனவின் வாரா நயன்இ லாளனைக்
கனவிற் கண்டு, யான்செய்தது கேள்,இனி.

தாழிசை

'அலந்தாங்கு அமையலென்' என்றானைப் பற்றி,'என்
நலம்தா ராயோ?'எனத் தொடுப்பேன் போலவும்,
கலந்து ஆங்கேஎன் கவின்பெற முயங்கிப்
'புலம்பல் ஓம்பு',என அளிப்பான் போலவும்—

'முலையிடைத் துயிலும் மறந்தீத் தோய்'என,
நிலையழி நெஞ்சத்தேன் அழுவேன் போலவும்
'வலையுறு மயிலின் வருந்தினை, பெரிது'எனத்
தலையுற முன்அடிப் பணிவான் போலவும்–

கோதை கோலா, இறைஞ்சி நின்ற
ஊதையம் சேர்ப்பனை, அலைப்பேன் போலவும்,
'யாது என்பிழைப்பு' எனநடுங்கி, ஆங்கே,
'பேதையை பெரிது'எனத் தெளிப்பான் போலவும்–

ஆங்கு–

சுரிதகம்

கனவினால் கண்டேன் தோழி! 'காண்தகக்
கனவில் வந்த கானலம் சேர்ப்பன்
நனவில் வருதலும் உண்டு'என
அனைவரை நின்றது,என் அரும்பெறல் உயிரே.

தெளிவுரை

"தோழியே! கடற்கரையில் தாழைச்செடியின் மடல்மீது வாடைக்காற்று வீச அஃது அசைகின்றது. அந்த மடலில் நின்ற நாரையும் அசைந்து ஒலியை எழுப்புகின்றது. நம் தோளைத் துறந்து நமக்கு அருள் செய்யாது சென்ற தலைவன்போல நிமிர்ந்து நின்ற தாழையும் வாடைக்காற்றுத் தாக்குவதால் வளைந்து நிற்கிறது. மிகுந்த இருளில் நம் துயரை அறியாமலும், நம்மேல் அருள் இல்லாமலும், பற்றில்லாமலும் அந்நாரை விடாமல் கூவுகிறது.

" 'இத்தகைய காட்சிக்கிடனான கானலுக்குரியவனான சேர்ப் பனைக் கண்டவள்போலப் புதியதொரு பொலிவுடன் காணப் படுகின்றாய், எவ்வாறு?' என்று கேட்கிறாய். கூறுகிறேன் கேள்."

தலைவி : *நனவிலே வந்து அருள் செய்யாத நல்ல தன்மையற்ற தலைவனைக் கனவிலே கண்டேன்; அப்போது நான் செய்த செயல்களைச் சொல்கிறேன்; நீயும் கேள்.*

"தோழியே! அவனைக் கனவில் கண்டதும், நான் அவனை நோக்கி, 'உன்னைப் பிரியேன்; பிரியின் உயிர் வாழேன் என்று

என்னிடம் சொன்ன நீ என்னைக் காண வாராதிருந்தது ஏன்?' என்று கேட்டேன். அதன்பின் 'என் நலம் தாராயோ' என அவனை வளைத்துக்கொண்டேன். அவனோ 'வருந்தாதே' எனச் சொல்லி என்னைத் தழுவி முயங்கினான்.

"தோழியே! அவனிடம், 'என் மார்பகங்களில் துயில்வதைக் கூடவா மறந்தாய்' என்று கேட்டு நிலையழிந்து நான் கண்ணீர் வடித்தபோது, 'வலையில் அகப்பட்ட மயிலென வருத்தம் கொண்டாய்' என்று கூறி, என் பாதங்களில் தன் தலைபடும்படி வணங்கினான்."

அப்படி வணங்கிய கடற்றுறைக்குரிய என் தலைவனை அவன் அணிந்திருந்த மாலையைப் பறித்து, அதனையே கோலாய்க் கொண்டு அடித்தேன். அவன் 'நான் செய்த பிழை என்ன?' என்று கேட்டு நடுங்கினான். பின், 'நீ மிகவும் அறியாமை கொண்டவள்' என்று என்னைத் தெளிவித்தான்."

"தோழியே! இவ்வாறு நான் கண்ட கனவு நனவாகவும் ஆகும் என்று கருதுகின்றேன். அதனால்தான் என் உயிரும் என்னை விட்டு நீங்காத நிலையில் உள்ளது" என்று தலைவி தான் கண்ட கனவுபற்றித் தோழியிடம் கூறினாள்.

கருத்து

தோழியே! கனவிடைக் கண்ட தலைவன் நனவில் வருவான் என்று மகிழ்ந்து உயிர் வாழ்ந்திருக்கிறேன்.

விளக்கம்

தலைவன் ஒருவனும் தலைவி ஒருத்தியும் தம்முள் காதலுற்றுக் களவுக்கால இன்பங்களை அனுபவித்தனர். அவளை வரைந்து கொள்ள வேண்டிய தலைவன் அவளைக் காண வருவதையும் நிறுத்திக்கொண்டான். அதனால் தலைவியின் உடல் மெலிவுற வருந்திக்கொண்டிருந்தாள். அவள் தோழியும் இதனை நன்கு அறிவாள். அத்தலைவி, ஆற்றாமையால் வருந்தியிருந்த நிலை மாறி, மகிழ்வுடன் ஒருநாள் காணப்பட்டதைப் பார்த்த தோழி, அதுபற்றி வினவினாள்; ஒருவேளை, பிரிந்து வாராதிருந்த தலைவன், தலைவியைக் காண வந்து சேர்ந்துவிட்டானோ என்று

எண்ணித் தலைவியிடம் வினாவினாள். ஆனால் தலைவி, தன் மகிழ்ச்சிக்குக் காரணம், தான் அவனைக் கனவில் கண்டதால் எனவும், அக்கனவு நனவாகும் நிலை வரும் எனவும் தோழியிடம் கூறுவதாய் இப்பாடல் அமைந்துள்ளது.

சொற்பொருள்

1. துறந்து - பிரிந்து.
2. வாடை - வாடைக்காற்று; தூக்க - வீச; வணங்கிய - வளைந்த; தாழை - தாழை மரம்.
3. ஆடுகோடு - அசைந்த மடல்; அசைநடை - அசைந்து நடக்கும்.
4. நளி - மிகுதி; கங்குல் - இரவு.
5. அளிஇன்று - இரக்கமின்றி; பிணிஇன்று - பற்று இன்றி; விளியாது - விடாது, மாறாமல்; நரலும் - கூவும்.
6. கானல் - கடற்கரைச்சோலை.
7. கவினினை - அழகினைப் பெற்றுள்ளாய்.
8. நயன் இலாளன் - நல்ல தன்மையற்ற.
10. அலந்தாங்கு - பிரிந்தவிடத்து; அமையலென் - உயிர் வாழேன்.
11. நலம் - அழகு; தொடுப்பேன் - பிடிப்பேன், கட்டிக்கொண்டேன்.
12. முயங்கி - தழுவி.
13. புலம்பல் ஓம்பு - வருந்தாதே.
14. மறந்தீத்தோய் - மறந்தாயோ?
16. வலையுறு - வலையில் அகப்பட்ட.
18. கோதை கோலா - மாலையையே கோலாய்க்கொண்டு; இறைஞ்சி - வணங்கி.
19. ஊதை - கடற்காற்று; அலைப்பேன் - அடிப்பேன்.
20 ‘யாது என்பிழைப்பு’ - இதற்கு நான் செய்த தவறு யாது?
21. தெளிப்பான் - தெளிவிப்பவன்.
26. அனைவரை - அந்த நம்பிக்கையின் எல்லையில்.

தலைவி கூற்று

குறுந்தொகை 145 **கொல்லன் அழிசியார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை ஆற்றாது தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

வரைபொருட்காகப் பிரிந்து சென்றோனாகிய தலைவன் பிரிவுக் காலத்தை நீட்டிப்ப, அதனால் பிரிவைப் பொறுக்க இயலாத தலைவி, தன் துன்பத்தைத் தோழியிடம் சொல்லியது.

உறைபதி அன்று,இத் துறைகெழு சிறுகுடி
கானல்அம் சேர்ப்பன் கொடுமை எற்றி,
ஆனாத் துயரமொடு வருந்திப் பானாள்
துஞ்சாது உறைந ரொடு உசாவாத்
துயில்கண் மாக்களொடு நெட்டிரா உடைத்தே!

தெளிவுரை

கடற்கரைச்சோலையினையுடைய சேர்ப்பனது கொடுமையை நினைந்து, பெருகுகின்ற துயரத்தோடு வருந்தியவராய் நடு யாமத்திலும் உறக்கம் கொள்ளாதிருக்கின்றோம். இஃது ஏன் என்று கேட்டு ஆறுதல் சொல்லாது கண் மூடித் தூங்கிக் கொண்டிருக்கும் அறிவில்லாத மக்களோடு, நெடிய இரவுப்பொழுதினையும் இவ்வூர் கொண்டிருக்கிறது. ஆதலால், கடல்துறை பொருந்திய இச்சிற்றூர், நாம் தங்கி வாழ்வதற்குத் தகுதி கொண்டது அன்று.

கருத்து

நம்மிடம் அனுதாபம் காட்டாத இவ்வூர் நாம் வாழ்வதற்கு ஏற்றதன்று.

சொற்பொருள்

1. உறைபதி அன்று - நாம் தங்கி வாழ்வதற்குரிய இடம் அன்று; துறைகெழு - துறை பொருந்திய; சிறுகுடி - சிற்றூர்.
2. கானல் - கடற்கரைச்சோலை (யினை உடைய); எற்றி - நினைந்து.
3. ஆனா - முடிவில்லாத; பானாள் - நடு யாமம்.

4. துஞ்சாது - தூங்காது; உறைநரொடு - வாழ்பவரோடு; உசாவா - (ஏன் என்று) கேட்காத.

5 துயில்கண் மாக்கள் - கண்மூடித் தூங்கிக்கொண்டிருக்கும் மக்கள்; நெட்டிரா - நீண்ட இரவுப்பொழுது; உடைத்து - கொண்டிருக்கிறது.

தலைவி கூற்று

குறுந்தொகை 395 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிய ஆற்றாளாகிய கிழத்தி, 'நாம் ஆண்டுச் சேறும்' எனத் தோழிக்கு உரைத்தது. (ஆண்டுச் சேறும் - அங்கே சென்றடைவோம்.)

கூற்று விளக்கம்

தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்த காலத்தில் ஆற்றாளாகிய தலைவி, "நாம் தலைவன் இருக்குமிடத்திற்குச் செல்வோமா" என்று தோழியிடம் கூறியது.

நெஞ்சே நிறைஒல் லாதே; அவரே,
அன்புஇன் மையின் அருள்பொருள் என்னார்;
வன்கண் கொண்டு வலித்துவல் லுநரே;
அரவுநுங்கு மதியிற்கு இவணோர் போலக்
களையார் ஆயினும், 'கண்இனிது படீஇயர்;
அஞ்சல்' என்மரும் இல்லை; அந்தில்
அளிதோ தானே நாணே
ஆங்குஅவர் வதிவயின் நீங்கப் படினே!

தெளிவுரை

என் நெஞ்சம் காமத்தைக் கட்டுப்படுத்த இயலாத நிலையில் இருக்கிறது. அவரோ, என்மீது அன்பு இல்லாததால் எனக்கு அருள் செய்வதை ஒரு பொருள் எனக் கருதாதவர் ஆனார். மேலும், இரக்கமில்லாது நம்மை வற்புறுத்திப் பிரிதலில் வல்லமையும் பெற்றார். பாம்பால் விழுங்கப்படும் மதியினைக்

கண்டு இவ்வுலகோர் வருந்துவரே அன்றி அங்குச் சென்று அதன் துன்பம் நீக்கார். அதைப்போல, என் துன்பத்தை நீக்க இயலா விட்டாலும், 'இனிதாய்க் கண்மூடித் தூங்கு; அஞ்சாதே' என்று சொல்லி என்னைத் தேற்ற இங்கு எவரும் இலர். ஆதலினால், அவர் தங்கியிருக்கும் இடத்திற்கு நாமும் இங்கிருந்து செல்வோ மானால் நம்முடன் பிறந்த நாணம் ஒன்றே இரங்கத்தக்கது. (நாம் வெட்கத்தை விட்டு அவர் இருக்குமிடத்திற்குச் செல்ல வேண்டி யதுதான்.)

கருத்து

தோழியே! தலைவர் இருக்குமிடத்திற்கு நான் சென்றால்தான் என் துயர் ஒழியும்.

விளக்கம்

'அருளைப் பொருள் எனக் கருதாதவர் ஆனார்' என்றது, அருளை மறந்து பொருள் தேடுவதையே நோக்கமாய்க் கொண்டு தலைவன் தன்னைப் பிரிந்து சென்ற கொடுமையை நினைத்துத் தலைவி இவ்வாறு கூறினாள்.

'பாம்பு விழுங்கிய மதிபோல' என்றது, பலரும் அதுபற்றிப் பல படப் பேசிப் பின்னர் உறங்கச் சென்றுவிடுவர். அதுபோல ஊராரும் தலைவியின் துயரைப் போக்காவிடினும் உற்ற துணை யாய் இருந்து உதவாமல் பலவும் பேசிப் பின் துயிலச் சென்று விடுவர் என்பதாம்.

சொற்பொருள்

1. நெஞ்சே - என் நெஞ்சமே; நிறை ஒல்லாது - கட்டுப்படுத்த இயலாத நிலையில் உள்ளது.
2. அருள் பொருள் என்னார் அருளைப் பொருளென்று கருதாதவரானார்.
3. வன்கண் கொண்டு - இரக்கமில்லாமையை மேற்கொண்டு; வலித்து - வற்புறுத்தி; வல்லுநர் - பிரிதலில் வல்லமையும் பெற்றார்.
4. அரவு - பாம்பு; நுங்கும் - விழுங்கும்; மதியிற்கு - நிலவுக்கு; இவணோர் போல - இவ்வுலகத்திலுள்ளார் செயல் போல.
5. களையார் - (துன்பத்தை) நீக்கார்; கண் இனிது படீஇயர் - கவலை யில்லாமல் தூங்குவர்.

6. அஞ்சல் - அஞ்சாதே; என்மரும் - என்று கூறுவாரும்; அந்தில் - அசைநிலை, இதற்குத் தனிப் பொருள் இல்லை.
7. நாண் - என் நாணம்; அளிதோ தானே - இரங்கத்தக்கது ஆகும்.
8. ஆங்கு அவர் வதிவயின் - அங்கே அத்தலைவர் தங்குமிடத்திற்கு; நீங்கப்படின் - (நான் இங்கிருந்து) நீங்கிச் சென்றால்.

தோழி கூற்று

குறுந்தொகை 308 **பெருந்தோட் குறுஞ்சாத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடைக் கிழத்தியை வன்சொற் சொல்லி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

வரைவிடை வைத்துத் தலைவன் பிரிந்த காலத்தில் தலைவி வருந்தி யிருக்க, 'தலைவன் நமக்கு நன்மை செய்வதற்காகவே பிரிந்துள்ளான்; வருந்தாதே' என வற்புறுத்திச் சொல்லித் தோழி தலைவியைத் தேற்றியது.

சோலை வாழைச் சுரிநுகும்பு இனைய
அணங்குடை அருந்தலை நீவலின், மதன்அழிந்து,
மயங்குதுயர் உற்ற மையல் வேழம்
உயங்குஉயிர் மடப்பிடி உலைபுறம் தைவர,
ஆம்இழி சிலம்பின் அரிதுகண் படுக்கும்
மாமலை நாடன் கேண்மை
காமம் தருவதுஓர் கைதாழ்ந் தன்றே.

தெளிவுரை

ஆண்யானையின் வலிமை பொருந்திய மத்தகத்தைச் சோலையில் உள்ள வாழையின் சுருண்ட குருத்து தடவு தலினாலே, அது தன் வலிமை குறைந்து, கலங்கித் துயருற்றது. அதன் மயக்கத்தைக் கண்டு வருத்தமுற்ற இளைய பெண்யானை, ஆண்யானையின் முதுகைத் தடவிக் கொடுத்தது. அதனால் அந்த வேழம் அருவிநீர் வழிந்தோடும் மலைப்பக்கத்தில் அரிதாய்த் தூங்கும். அத்தகைய காட்சிக்கிடனான பெரிய

மலைநாட்டினைச் சார்ந்த நம் தலைவனோடு நாம் கொண்ட நட்பு நமக்கு இன்பம் தரும் ஒரு நன்முயற்சியில் இறங்கியுள்ளது. (ஆதலின் வருந்தாதே.)

கருத்து

தலைவியே! நமக்கு நன்மை செய்யும்பொருட்டே தலைவன் பிரிந்து சென்றுள்ளான். ஆதலின், வருந்தாதிரு.

இறைச்சி

வாழைக்குருத்து மத்தகத்தில் படத் தன் ஆற்றல் இழந்து யானை மயங்கும்;அதன் பிடி அதனைத் தடவிக் கொடுத்தலால் இனிதாய்ப் படுத்துறங்கும். இத்தொடர் வாயிலாய், பொருளாசையால் மயங்கித் தலைவியினைப் பிரிந்துள்ள தலைவன், தலைவி அருகேயிருக்க, அவள் அவன் முதுகைத் தடவிக் கொடுக்க, இல்லத்திலிருந்து இனிய உறக்கம் கொள்ளும் நிலையைப் பெறவேண்டும் என்னும் கருத்து வெளிப்படுகிறது.

குறிப்பு

வாழைக்குருத்துப் பட்டால் யானையின் வலிமை அழியும் என்பது அரிய செய்தி.

சொற்பொருள்

1. சுரிநுகும்பு - சுருண்ட குருத்து; இனைய - தான் வருந்தும்படி.
2. அணங்குடை - வலிமை தங்கிய; அருந்தலை - அரிய தலை; நீவலின் - நீவுதலால்; மதன் அழிந்து - வலிமை குறைந்து.
3. மயங்கு - கலங்கி; மையல் வேழம் - மயக்கத்தைக் கொண்ட களிறு.
4. உயங்கு உயிர் - வருந்துகின்ற உயிரைக் கொண்ட; மடப்பிடி - இளமையான பெண்யானை; உலை புறம் - வருந்தும் அதன் முதுகை; தைவர - தடவிக் கொடுக்க.
5. ஆம்இழி சிலம்பின் - நீர் இறங்கியோடும் மலைப்பக்கத்தில்; அரிது - அரிதாய்; கண்படுக்கும் - தூங்கும்; கேண்மை - உறவு.
7. காமம் தருவது - நமக்கு இன்பத்தைத் தருவதாகிய; ஓர்கை - ஒரு செய்கையிலே; தாழ்ந்தன்று - ஈடுபட்டுள்ளது.

தோழி கூற்று

குறுந்தொகை 265 **கருவூர்க் கதப்பிள்ளை**

திணை : குறிஞ்சி

கூற்று

வரையாது பிரிந்தவிடத்து, 'அவர் பிரிந்தது நின்னை வரைந்து கோடல் காரணமாகத்தான்' எனத் தோழி தலைமகட்குக் கூறியது.

கூற்று விளக்கம்

வரைந்துகொள்வதற்கான பொருளை ஈட்டும்பொருட்டுத் தலைவன் பிரிந்து சென்றபோது, ஆற்றாமை கொண்ட தலைவியிடம், "உன்னை மணந்து கொள்ளுவதற்கு வேண்டிய பொருளினை ஈட்டுவதற்காகவே தலைவன் சென்றுள்ளான். விரைவில் மீண்டுவந்து உன்னை மணப்பான்" எனக் கூறித் தோழி அவளை ஆற்றுவித்துச் சொல்லியது.

காந்தளம் கொழுமுகை, காவல் செல்லாது,
வண்டுவாய் திறக்கும் பொழுதில், பண்டும்
தாம்அறி செம்மைச் சான்றோர்க் கண்ட
கடன்அறி மாக்கள் போல இடன்விட்டு,
இதழ்தளை அவிழ்ந்த ஏகல் வெற்பன்
நன்னர் நெஞ்சத்தன் தோழி! நின்நிலை
யான்தனக்கு உரைத்தனென் ஆக,
தான்நா ணினன்இஃது ஆகா வாறே.

தெளிவுரை

காந்தளின் வளமான மொட்டுகள் இயற்கையாய் மலரும் வரை காத்திராது, வண்டுகள் அவற்றைக் கிண்டித் திறக்கும் பொழுதில், அதற்கு இடங்கொடுத்து மொட்டுகள் முறுக்கு விழ்ந்து மலரும். அக்காட்சி, முன்பே தாம் அறிந்த செம்மைப் பண்புள்ள சான்றோர் வரக்கண்டதும் கடமையுணர்வுள்ள மக்கள் அவர்களை எப்படி வரவேற்றுப் பேணுவார்களோ அதுபோல இருந்தது. உயர்ந்திருக்கும் மலைகளைக் கொண்ட நம் தலைவனிடம், களவொழுக்கம் நீட்டிப்பதால் நீ படும் துயர நிலையைச் சொன்னேன். அது கேட்டு அவன் மிகவும் நாணமுற்று, 'இனி இவ்வாறான துன்ப நிலை உண்டாகாது' என

உணர்த்தினான். (நல்ல மனம் படைத்த தலைவன் வரைதற்காகும் பொருளை ஈட்டி வரவே சென்றுள்ளான்; விரைந்து வந்து மணப்பான். ஆதலின், நீ பொறுத்திருத்தல் வேண்டும் என்பது குறிப்புச் செய்தி.)

கருத்து

தலைவியே! தலைவன் விரைவில் வந்து உன்னை மணப்பான்.

விளக்கம்

வண்டுகள், காந்தள் மொக்குகள் மலரும்வரையிலும் காத்திருப்பதில்லை; அவற்றைச் சுற்றிப் பறந்து மலரச்செய்கின்றன. வண்டுகள் மொக்குகளின் இதழ்களைத் திறக்கும்போது அவை அவற்றை வரவேற்கின்றன; அவ்வண்டுகள் தங்குவதற்குத் தங்கள் இதழ்களைத் தருகின்றன. இக்காட்சி, கடமையுணர்வுள்ள மக்கள் சான்றோரைக் காணும்போது அவர்களை வரவேற்பது போல இருக்கிறது.

சொற்பொருள்

1. காந்தள் - காந்தள் மலரின்; கொழுமுகை - வளமான மொட்டு; காவல் செல்லாது - காத்திராது.
2. வண்டு வாய் திறக்கும் பொழுதில் - வண்டுகள் கிண்டித் திறக்கும் பொழுது; பண்டு - முன்பே.
3. செம்மைச் சான்றோர் - செம்மைப் பண்புள்ள சான்றோர்.
4. கடன்அறி மாக்கள் போல - கடமையுணர்வுள்ள மக்கள் போல; இடன் விட்டு - இடம் கொடுத்து.
5. இதழ்தளை அவிழ்ந்த - பிடிப்புவிட்டு மலர்ந்த இதழ்கள்; ஏகல் வெற்பன் - உயர்ந்திருக்கும் மலைகளைக் கொண்ட மலைநாடன்.
6. நன்னர் நெஞ்சத்தன் - உன்னை மணந்துகொள்ள வேண்டுமென்ற நல்ல மனம் கொண்டவன்; நின் நிலை - உன் துயர நிலையை.
7. யான் - நான்; தனக்கு - அவனுக்கு; உரைத்தனென் ஆக - சொன்னேனாக.
8. தான் - அவன்; இஃது ஆகாவாறு - இனி இத்துன்பநிலை உண்டாகாது என உணர்த்தி; நாணினன் - மிகவும் நாணமுற்றான்.

தோழி கூற்று

குறுந்தொகை 143 **மதுரைக் கணக்காயன் மகன் நக்கீரன்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிந்தவிடத்துத் தலைமகட்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைபொருட்காகப் பிரிந்தபோது வருந்திய தலைவியை நோக்கி, ‘தலைவன் நம் வருத்தத்தையறிந்து இரங்கும் பண்பினன். ஆதலின் அவன் விரைவில் வருவன். உன் மேனிப் பசப்பும் நீங்கிவிடும்’ என்று தோழி கூறியது.

அழியல் ஆயிழை! அன்புபெரிது உடையன்;
பழியும் அஞ்சும்; பயமலை நாடன்;
நில்லா மையே நிலையிற்று ஆகலின்,
நல்இசை வேட்ட நயனுடை நெஞ்சின்
கடப்பாட் டாளன் உடைப்பொருள் போலத்
தங்குதற்கு உரியது அன்று,நின்
அம்கலுழ் மேனிப் பாஅய பசப்பே!

தெளிவுரை

“ஆராய்ந்தெடுத்த அணிகலன்களை உடையவளே! பயனைத் தரும் வளமிக்க மலைநாட்டிற்குரிய தலைவன் நம்மிடம் மிகுந்த அன்பு கொண்டவன்; பிறர் கூறும் பழிக்கு அஞ்சுபவன். இவ் வுலகில் நில்லாமை என்ற ஒன்றே நிலைபெற்றிருப்பது. ஆதலின், நல்ல புகழை விரும்பும் அருளுடைய நெஞ்சத்தைக் கொண்ட ஒப்புரவாளன் பெற்ற செல்வத்தைப் போல, அழகொழுகும் உன் மேனியில் பரவியுள்ள பசலையும் நிலையாய்த் தங்கியிராது. (உடனே அகன்றுவிடும்.) ஆதலின், நீ வருந்தாதே” எனத் தலைவியிடம் தோழி கூறினாள்.

கருத்து

தலைவியே! உன் பசலை அகன்றோடும் வகையில் தலைவன் உடனே திரும்பி வருவான்; வருந்தாதே.

விளக்கம்

தலைவன் அன்பு கொண்ட நெஞ்சினன்; ஆதலின், பொருளாசையால் உன்னை மறந்துவிடாது, பொருள் நிலையில்லாதது என்பதை உணர்ந்து விரைவில் மீள்வான் என்கிறாள், தோழி!

ஒப்புரவாளன் தான் ஈட்டிய பொருளை யாவர்க்கும் உடனே வரையாது வழங்குவான். அதனால் அவனிடமிருந்து அப் பொருள் விரைந்து நீங்கிவிடும். அதுபோலத் தலைவியை மணந்து கொள்ளத் தலைவன் வருவதால் அவள் பசலை நோய் விரைவில் அகன்றுவிடும்.

சொற்பொருள்

1. அழியல் - வருந்தாதே; ஆய்இழை - ஆராய்ந்தெடுத்த அணிகலன்களை உடையவளே!
2. பயமலை - பயன் தரும் மலை.
3. நில்லாமையே நிலையிற்று - நில்லாமையே நிலையானது.
4. நல் இசை - நல்ல புகழை; வேட்ட - விரும்பும்; நயனுடை நெஞ்சின் - அருள் வாய்ந்த நெஞ்சத்தினைக் கொண்ட.
5. கடப்பாட்டாளன் - ஒப்புரவாளன், சமூகத்திற்குக் கடமை ஆற்றுபவன்.
6. தங்குதற்கு உரியது அன்று - நிலையாய்த் தங்கியிராது.
7. அம் கலுழ் மேனி - அழகொழுகும் மேனி; பாய - படர்ந்துள்ள; பசப்பு - பசலை நோய்.

தோழி கூற்று

குறுந்தொகை 339 **பேயார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வேறுபட்ட கிழத்தியைத் தோழி கடுஞ்சொல் சொல்லி வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்து சென்றிருந்தான். அக்காலத்தே தலைவியின் ஏக்கம் மிகுதியாயிற்று. அதனைக் கண்டு வருந்திய தோழி,

'அவன் அணைத்தபோது மகிழ்ந்திருந்த நீ, அவன் பிரிந்திருக்கும்போது மேனி வேறுபட அழுதுகொண்டிருப்பது கூடாது' என்று வற்புறுத்திச் சொல்லியது.

நறைஅகில் வயங்கிய நளிபுன நறும்புகை
உறைஅறு மையின் போகி, சாரல்
குறவர் பாக்கத்து இழிதரும் நாடன்
மயங்குமலர்க் கோதை நன்மார்பு முயங்கல்
இனிதுமன் வாழி தோழி! மாஇதழ்க்
குவளை உண்கண் கலுழப்
பசலை ஆகா ஊங்கலங் கடையே.

தெளிவுரை

தோழியே! "நறுமணம் கொண்ட அகில் கட்டைகளைச் சுடுதலால், எழுந்து தோன்றிய மணமிக்க புகை, மழைத் துளிகளற்ற வெண்மேகம்போல மேலெழுந்து வானத்திலே படர்ந்து சென்று மலைச்சாரலிலுள்ள குறவர் குடியிருப்புக்குப் பக்கத்தில் இறங்கும். இத்தகைய காட்சிக்கிடனான மலை நாட்டினையுடையவன், நம் தலைவன். பலவகை மலர்களும் விரவக் கட்டப்பட்ட மாலையை அணிந்த தலைவன் உன் நல்ல மார்பினைத் தழுவுதலானது, கரிய இதழ்களைக் கொண்ட குவளை மலர் போன்ற மையுண்ட உன் கண்கள் அழுவதற்கு முன்பும், மேனி பசலை நிறம் பெறுவதற்கு முன்பும் இனிதாயிருந்தது."

கருத்து

'தலைவன் தழுவியிருந்தபோது இன்புற்ற நீ, அவன் பிரிந்துள்ள இப்போது துன்புறுதல் தக்கது அன்று' எனத் தோழி தலைவியிடம் வற்புறுத்திக் கூறினாள்.

விளக்கம்

'உன்னைத் தலைவன் தழுவியிருந்தபோது இன்பத்தை நுகர்ந்து மகிழ்ந்திருந்தாய். உன்னை வரைந்துகொள்ளுவதற்குரிய பொருளைத் தேடி வரும்பொருட்டாகவே அவன் சென்றிருக்கிறான். இந்நிலையில் அவன் பிரிவைப் பொறுத்

திராது துன்புற்று மேனி மெலிவுற வாடுதல் அறிவுடைமை யாகாது' எனத் தோழி தலைவியிடம் வற்புறுத்திக் கூறினாள்.

குறிப்பு

தினைப்புனம் அமைப்பதற்காகக் காட்டிலுள்ள பிற மரங்களோடு அகிலையும் சேர்த்துக் கானவர் சுடுதலின் புகை எழுந்தது. அப்புகை வெண்ணிறம் கொண்டதாதலால் அது நீரற்ற வெண்மேகத்தை ஒத்தது.

சொற்பொருள்

1. நறை - நறுமணம்; அகில் - அகில் கட்டைகள்; வயங்கிய - விளங்கிய; நளிபுனம் - அடர்ந்த காடு; நறும்புகை - (கட்டைகளைச் சுடுதலால் எழுந்த) மணமுள்ள புகை.
2. உறை அறு - நீர்த்துளிகள் அற்ற; மையின் - மேகம்போல; போகி - சென்று.
3. பாக்கம் - இருப்பிடம்; இழிதரும் - கீழிறங்கும்.
4. மயங்கு மலர்க்கோதை - பலவகை மலர்களும் விரவக் கட்டப்பட்ட மாலை; முயங்கல் - தழுவுதல்.
5. மா இதழ் - கரிய இதழ்களைக் கொண்ட.
6. உண் கண் - மையுண்ட கண்கள்; கலுழ - அழுது.
7. பசலை ஆகா - மேனி பசலை நிறம் பெறாத; ஊங்கலங்கடை - அப்பொழுது.

தலைவி கூற்று

குறுந்தொகை 28 **ஔவையார்**

திணை : பாலை

கூற்று

வரைவிடை ஆற்றாளாய்க் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

வரைதற்குரிய பொருளீட்டி வரத் தலைவன் பிரிந்துள்ளான். அவன் பிரிவை ஆற்ற இயலாத தலைவி, வருத்தம் மிகத் தோழியிடம் கூறியது.

முட்டு வேன்கொல்? தாக்கு வேன்கொல்?
ஓரேன் யானும்;ஓர் பெற்றி மேலிட்டு,
'ஆஅ' ஒல்எனக் கூவு வேன்கொல்?
அலமரல் அசைவளி அலைப்பஎன்,
உயவுநோய் அறியாது, துஞ்சும் ஊர்க்கே.

தெளிவுரை

சுழன்று சுழன்று வரும் தென்றல் காற்று, என்னை வருத்துகின்ற காம நோயை அறியாது என்னை அலைக்கழிக்கின்றது. இதனை அறியாது உறங்கும் இந்த ஊரார்க்கு என் நிலையை எப்படி அறிவிப்பேன்? எனக்கு வரும் சீற்றத்தால் அவர்கள்மீது முட்டிக்கொள்வேனா? தடி கொண்டு தாக்குவேனா? வெறிகொண்டவள்போல 'ஆஅ' என்று உரத்துக் கூவுவேனா? என்ன செய்வது என்று நான் அறியேன்.

கருத்து

'தோழி! தலைவன் பிரிவால் நான் உறக்கமின்றித் தனியே புலம்பித் துடிப்பதை ஊரார் அறியாதுள்ளனரே, இவர்களை நான் என் செய்வேன்?' என்கிறாள், தலைவி.

விளக்கம்

தலைவியின் துயரத்தை அறியாமல் செவிலித்தாய், நற்றாய், தமையன்மார், தந்தை முதலியவர்கள் நன்றாய் உறங்குகின்றனர். இவர்களை எண்ணித்தான் தலைவி, பொதுப்படையாய் ஊராரைச் சினந்துரைப்பதுபோல் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. தாக்குவேன் கொல்? - அடிப்பேனா?
2. ஓரேன் - அறியேன்; ஓர் பெற்றி மேலிட்டு - (வெறி பிடித்தது போன்ற) ஒரு தன்மையை மேற்கொண்டு.
3. 'ஒல்' - 'ஒல்' என்ற ஒலியுடன்.
4. அலமரல் - சுழற்சி; அசைவளி - அசைந்து வரும் தென்றல் காற்று; அலைப்ப - வருத்த.
5. உயவுநோய் - வருத்தும் நோய்; துஞ்சும் - உறங்கும்.

தலைவி கூற்று

குறுந்தொகை 371 **உறையூர் முதுகூத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை மணக்கும்பொருட்டுப் பொருள்தேடப் பிரிந்திருக்கிறான். அதனால் ஏக்கமுற்ற தலைவியிடம் துன்பத்தைப் பொறுத்திருக்குமாறு வற்புறுத்தினாள், தோழி. அவளிடம் தலைவி கூறியது.

கைவளை நெகிழ்தலும் மெய்ப்பசப்பு ஊர்தலும்,
மைபடு சிலம்பின் ஐவனம் வித்தி,
அருவியின் விளைக்கும் நாடனொடு,
மருவேன் தோழி!அது காமமோ பெரிதே.

தெளிவுரை

தோழியே! மேகங்கள் பொருந்துகின்ற மலைப்பக்கங்களில் மலை நெல்லை விதைத்து, அருவிநீர் பாய்ச்சி விளைவிக்கும் குன்ற நாடன், நம் தலைவன். அவன் பிரிவால் என் கைவளைகள் நெகிழ்தலும், மேனியில் பசலை படர்தலுமாகிய துயரை நான் அடையாது காத்துக்கொள்வேன். ஆனால், என் காமமோ பெரிதாயிருக்கிறது. (கட்டுப்பாட்டை மீறிக் காமம் என் உடலை மெலிவிக்கிறது).

கருத்து

'தோழியே! தலைவனின் பிரிவுத்துன்பத்தை நான் பொறுப்பினும், என் காமத்தை என்னால் அடக்க இயலவில்லையே! என் செய்வேன்?'

விளக்கம்

தோழியே! மெலிவினால் என் வளைகள் நெகிழ்கின்றன; உடம்பிலே பசலை நிறம் படர்கிறது. இந்த நிலையை நான் தலைவன் பிரிந்ததால் அடையவில்லை; என் காமநோய் என் பிரிவுத் துன்பத்தைவிடப் பெரிதாயுள்ளது. அதுவே எனக்கு இந்நிலையை ஏற்படுத்திவிட்டது.

சொற்பொருள்

1. நெகிழ்தல் - கழலுதல்; மெய் - உடம்பு; பசப்பு - பசலை.
2. மை - மேகம்; படு - பொருந்திய; சிலம்பு - மலை; ஐவனம் - மலை நெல்; வித்தி - விதைத்து.
3. அருவியின் - அருவிநீர் (பாய்ச்சி).
4. மருவேன் - (நாடனால்) பெறவில்லை.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 33 **மூவாதியார்**

திணை : பாலை

கூற்று

வரைவிடைப்பிரிவில் ஏதிலார் கூறும் அலர் கண்டு, தலைமகள் ஆற்றாது, தோழி கேட்பக் கூறியது.

கூற்று விளக்கம்

மணம் செய்துகொள்ளப் பொருளீட்டும்பொருட்டுத் தலைவன் பிரிந்து சென்றான்; அப்போது அயலார் பழி தூற்றினர்; அதுகண்ட தலைவி ஆற்றாமல் தோழியிடம் கூறியது.

பொறிகிளர் சேவல் வரிமரல் குத்த
நெறிதூர் அருஞ்சுரம் நாம்உன்னி – அறிவிட்(டு)
அலர்மொழி சென்ற கொடியக நாட்ட
வலனுயர்ந்து தோன்று மலை.

தெளிவுரை

“தலைவன் பிரிந்து சென்ற பாலைநில வழியில் தலைக் கொண்டையைக் கொண்ட காட்டுக்கோழிகள் மருள் செடி களைக் கொத்திப் போடுதலால் வழி தூர்ந்திருக்கும். (அது, வழிச் செல்வோர் கால்களைக் குத்தித் துன்புறுத்தும்.) அத்தகைய இயல்பு கொண்ட பாலைநில வழியின் கொடுமையை நினைத்தால் நமக்கு வருத்தம் மிகுகின்றது. தலைவன் பிரிவினால் எனக்கு ஏற்பட்டுள்ள மெலிவைக் கண்டு அயலார் பழி தூற்று கின்றனர். அப்பழிமொழிகள் மலைமீது நாட்டப்பெற்ற கொடித்

துணியைப் போல உயர்ந்து பரவுகின்றன" எனத் தலைவி தோழி யிடம் கூறினாள்.

கருத்து

தலைவன் பிரிவால் ஊரில் எழுந்துள்ள அலர்மொழி கேட்டு ஆற்றாளா யினேன்.

விளக்கம்

மலைமீது நாட்டப்பட்ட கொடி நாற்புறமும் நெடுந்தொலைவு தென்படும். அதுபோலத் தலைவியைப்பற்றிய பழிமொழிகள் ஊர் முழுதும் பரவியுள்ளன.

சொற்பொருள்

1. பொறிகிளர் - தலைச்சூடு (கொண்டை) கொண்ட; வரி - வரிகளைக் கொண்ட; மரல் - மருள் செடி.
2. நெறி - வழி; தூர் - தூர்ந்துவிடும்; உன்னி - நினைந்து; அறிவிட்டு - நம் களவினை அறிந்து அயலார் கூறும்படியான.
3. அலர்மொழி - பழிச்சொற்கள்; (மலை) அகம் - மலையிடத்தே, மலை மீது; நாட்ட - நாட்டப்பெற்ற (கொடி), அக் கொடியினைப் போன்று.
4. வலன் உயர்ந்து - வலமாய்ச் சுழன்று எழுந்து.

தலைவி கூற்று

திருக்குறள் 1149 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிவின்கண் ஆற்றாளாய தலைமகள், அவன் வந்து சிறைப்புறத்தானாதல் அறிந்து, அலர் அஞ்சி ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வரைவிடை வைத்துப் பொருள் ஈட்டப் பிரிந்து சென்ற தலைவன் திரும்பினான். அவன் சிறைப்புறமாய் நிற்பதறிந்த தோழி அவன் கேட்கும்

வண்ணம் தலைவியிடம் தலைவன் பிரிந்திருப்பதை ஆற்றியிருக்க வேண்டும் என்று சொன்னபோது தலைவி தோழிக்குக் கூறியது.

அலர்நாண ஒல்வதோ அஞ்சலோம்(பு) என்றார்
பலர்நாண நீத்தக் கடை.

தெளிவுரை

என்னை எதிர்ப்பட்ட அன்று, 'அஞ்சாதே! உன்னை விட்டு என்றுமே பிரியமாட்டேன்' என்று கூறிய என் காதலனே பலர்முன் நான் நாணும்படியாய் என்னை விட்டுப் பிரிந்து சென்றபின், நான் மட்டும் ஊரார் தூற்றும் அலருக்காக நாணப்பட்டிருக்க முடியுமா?

கருத்து

காதலன் சொன்ன சொல்லை மறந்தவன். அவனுக்கு நேரும் பழிக்காக நான் ஏன் நாணப்பட வேண்டும்?

குறிப்பு

பழிச்சொற்கள் நீங்க அவன் உடனே வரைந்து கொள்ளவேண்டும்.

சொற்பொருள்

1. அஞ்சல் ஓம்பு என்றார் - அஞ்ச வேண்டா என்று அன்று சொன்னவர்.
2. பலர் நாண - (இன்று) பலர்முன் நான் நாணும்படியாக; நீத்தக் கடை - என்னை விட்டுப் பிரிந்து சென்றிருக்கும்போது.
1. அலர் நாண ஒல்வதோ? - (அலரால் எழுந்துள்ள) பழிச்சொற் களுக்காக நான் நாணப்பட முடியுமா?

தலைவி கூற்று

நாலடியார் 400 சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை

திணை : நெய்தல்

கூற்று

தலைமகனைப் பிரிந்த தலைமகள் வருந்துவது.

கூற்று விளக்கம்

திருமணத்திற்கு வேண்டிய பொருள் ஈட்டி வருதற்குத் தலைவன் சிறிது காலம் தலைவியைப் பிரிந்து சென்றான். பிரிவினை ஆற்றியிருக்க இயலாத தலைவி தன் பிரிவாற்றாமையைத் தோழிக்குக் கூறியது.

கண்மூன்(று) உடையானும், காக்கையும், பைஅரவும்
என்ஈன்ற யாயும் பிழைத்த(து)என்? – பொன்ஈன்ற
கோங்(கு)அரும்(பு) அன்ன முலையாய்! – பொருள்வயின்
பாங்கனார் சென்ற நெறி.

தெளிவுரை

பொன் போலும் தேமல் பொருந்திய கோங்க மலரைப் போன்ற கொங்கைகளைக் கொண்டுள்ள தோழியே! முக்கண்ணனான சிவபெருமானும், காக்கையும், படமுள்ள பாம்பும் எனக்கு ஒரு குற்றமும் செய்யவில்லை. பொருள் தேடத் தலைவன் சென்றுள்ள வழியே என்னை வருத்துகிறது.

கருத்து

தோழியே! மன்மதன் அம்பும், குயில் குரலும், பாம்புப் படமும், தாயின் கண்டிப்பும் என்னைப் பெரிதும் வருத்துகின்றன.

விளக்கம்

மன்மதனை எரித்த சிவன் அவனை மீண்டும் பிழைக்க வைத்ததால் இப்போது உயிரோடிருந்து காமக்கணையைச் செலுத்தி என்னை வாட்டுகிறான்; காக்கை தன் கூட்டில் பொரித்த குயில் குஞ்சைக் கொத்திக் கொள்ளாமல் பிழைக்க விட்டதால், இன்று, அது என்னைக் கூவிக் கூவி வருத்துகிறது; பாம்பு நிலவை விழுங்கியதை வெளியே விட்டுவிடாமலிருந்தால்,

அது என்னை வருத்த இயலாது. என் தாய் பெற்றபோதே என்னைக் கொன்றிருந்தால் இன்று அவள் என்னைக் கண்டிக்க வேண்டிய வேலை இராது. இந்நால்வருமே எனக்கு இப்போது துன்பம் செய்கின்றனர்.

குறிப்பு

இந்நான்குமே குற்றம் செய்தவை ஆகும் எனக் கூற வந்தவள் அப்படி கூறாமல், அவை ஏதும் குற்றம் செய்யவில்லை; தலைவன் செல்லத் துணையாயிருந்த வழியே குற்றம் செய்தது என மாற்றிக் கூறினாள். வழி இல்லாமல் இருந்தால் தலைவன் சென்றிருக்க முடியாதன்றோ? ஆதலின் வழியே குற்றம் செய்தது எனக் கூறியிருக்கும் நயம் உணர்ந்து மகிழத் தக்கது.

சொற்பொருள்

1. கண்மூன்றுடையான் - மூன்று கண்களையுடைய சிவன்; பைஅரவு - படம் கொண்ட பாம்பு.
2. யாய் - தாய்; பொன்ஈன்ற - பொன் போலும் தேமல் பொருந்திய.
3. கோங்கு - ஒருவகை மலர்; பொருள்வயின் - பொருள் கருதி.
4. பாங்கனார் - தலைவர்; நெறி - வழி.

தோழி கூற்று

குறுந்தொகை 328 **பரணர்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை வேறுபடும் கிழத்தியை, 'அவர் வரையும் நாள் அணித்து' எனவும், 'அலர் அஞ்சல்' எனவும் கூறியது.

கூற்று விளக்கம்

வரைவிடை வைத்துத் தலைவன் பிரிந்த காலத்தில் ஆற்றாது வேறுபட்ட தலைவியை நோக்கித் தோழி, 'தலைவன் வரைதற்குப் பொருளீட்டவே

பிரிந்திருக்கிறான். விரைவில் வந்து மணப்பான். ஊரார் கூறும் பழிச் சொற்களைக் கேட்டு அஞ்சுதல் வேண்டா' என ஆறுதல் சொல்லியது.

சிறுவீ ஞாழல் வேர்அளைப் பள்ளி
அலவன் சிறுமனை சிதைய, புணரி
குணில்வாய் முரசின் இரங்கும் துறைவன்
நல்கிய நாள்தவச் சிலவே; அலரே
வில்கெழு தானை விச்சியர் பெருமகன்
வேந்தரொடு பொருத ஞான்றை, பாணர்
புலிநோக்கு உறழ்நிலை கண்ட
கலிகெழு குறும்பூர் ஆர்ப்பினும் பெரிதே.

தெளிவுரை

கடற்கரையில் சிறிய பூக்களைக் கொண்டுள்ள ஞாழல் மரத்தின் வேர்ப்புறத்தில் நண்டுகள் சிறிய வளைகளைத் தோண்டியுள்ளன. குறுந்தடியால் அடிக்கப்பட்ட முரசினைப் போலக் கடலலைகள் ஒலியோடு சென்று அந்நண்டு வளைகளை அழிக்கின்றன. அத்தகைய கடற்றுறையை உடைய நம் தலைவன், நமக்குத் தண்ணளி செய்துள்ள நாள்கள் மிகச்சிலவே. ஆனால், அதனால் எழுந்த பழிச்சொற்களோ மிகுதியாயுள்ளன.

பெரிய விற்படை கொண்ட விச்சிக்கோ, தன் பகைவேந்தருடன் போரிட்டான். அப்பொழுது பாணர்கள் அப்போர்க்களத் திற்குச் சென்று, இருபக்கத்துப் படைகளுள் வெல்லவிருப்பது எப்படை என்றறிய, புலி பதுங்கியிருந்து பார்ப்பது போலப் பார்த்திருந்தனர். அதைக் கண்டு ஆரவாரமிக்க குறும்பூர் மக்கள் எழுப்பிய ஒலியைவிட நம்மைப்பற்றிப் பழிச்சொல் கூறுவாரின் ஆரவாரம் பெரிதாயிற்று. (இது கண்டு அஞ்சாதே! தலைவன் விரைவில் வந்து மணம் கொள்வான்.)

கருத்து

'தலைவியே! ஊரார் நம்மைப்பற்றிக் கூறும் பழிச்சொல் கேட்டுப் பதறாதே; தலைவன் விரைந்து வந்து வரைந்துகொள்வான்!' எனத் தோழி தலைவியைத் தேற்றினாள்.

விளக்கம்

பாணர்கள் போர்க்களத்திற்குச் சென்று போர் நடப்பதைக் காண்பார்கள்; வெற்றி பெற்ற மன்னர்கள்மீது களவழிப்பாடல், பரணி முதலிய பாடல்களைப் பாடுவர்.

பதுங்கியிருந்து பார்க்கும் புலிபோல இருசாரார்ருள் வெற்றி பெறுபவர் யார் என்பதை மறைந்திருந்து பார்த்திருந்தனர்.

பழிமொழியின் முழக்கம், குறும்பூர் என்னும் ஊரார் எழுப்பும் முழக்கத்தைவிடப் பெரிதாயுள்ளது.

சொற்பொருள்

1. சிறு வீ - சிறிய பூக்கள்; ஞாழல் - ஞாழல் மரம்; வேர் அளைப் பள்ளி - வேர்ப்புறத்தில் அமைக்கப்பட்ட வளையிடத்திலுள்ள.
2. அலவன் - நண்டு; சிறுமனை - சிறிய வீடு; சிதைய - அழியுமாறு; புணரி - அலைகள்.
3. குணில்வாய் - குறுந்தடியால் அடிக்கப்பட்ட; முரசின் - முரசினைப்போல; இரங்கும் - ஒலியெழுப்பும்; துறைவன் - துறையினையுடைய தலைவன்.
4. நல்கிய - (நமக்கு) அருளிய; தவ - மிகவும்; அலர் - பழிச்சொல்.
5. வில்கெழு தானை - மிகுந்த விற்படையினைக் கொண்ட; விச்சியர் பெருமகன் - விச்சியர்களுக்குத் தலைவன், விச்சிக்கோ.
6. வேந்தரொடு - பகைமன்னருடன்; பொருத ஞான்று - போரிட்ட பொழுது.
7. புலிநோக்கு - புலியின் பார்வை; உறழ் - போல; நிலை கண்ட - பார்க்கின்ற நிலையைக் கண்ட.
8. கலி கெழு - ஆரவாரம் மிக்க; குறும்பூர் - குறும்பூர் என்னும் ஊரிலுள்ளார்; ஆர்ப்பினும் - எழுப்பிய முழக்கத்தினும்.

தோழி கூற்று

குறுந்தொகை 284 **மிளைவேள் தித்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடைத் தோழி கிழத்திக்கு உரைப்பாளாய் உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் திருமணம் செய்துகொள்வதற்காகப் பொருள் தேடிவரப் பிரிந்து சென்றிருந்தான். அப்பிரிவால் தலைவியின் ஏக்கம் மிகுதியாக, ஊரில் அலரும் எழலாயிற்று. அதற்கஞ்சிய தலைவியை நோக்கி, தோழி, 'இவ்வூரினர் அறிவில்லாதவர்; அவர் பேச்சுக்கு வருந்தாதே' எனத் தேற்றிச் சொல்லியது.

பொருத யானைப் புகர்முகம் கடுப்ப,
மன்றத் துறுகல் மீமிசைப் பலஉடன்
ஒண்செங் காந்தள் அவிழும் நாடன்
அறவன் ஆயினும், அல்லன் ஆயினும்,
நம்ஏ சுவரோ? தம்இலர் கொல்லோ?
வரையின் தாழ்ந்த வால்வெள் அருவி
கொன்நிலைக் குரம்பையின் இழிதரும்
இன்னாது இருந்தஇச் சிறுகுடி யோரே.

தெளிவுரை

போரிட்ட யானையின் செங்குருதி ஒழுகும் புண்பட்ட முகத்தைப் போல, மன்றத்தில் உள்ள பொற்றைக்கல்லின்மேல் ஒள்ளிய செங்காந்தள் மலர் பல ஒருங்கே சேர்ந்து மலரும். இத்தகைய காட்சிக்குரிய மலைநாட்டினைக் கொண்டவன், நம் தலைவன். மலையிலிருந்து விழும் தூய வெண்மையான அருவி நீர் இச்சிற்றூரில் இலைகளால் வேயப்பட்ட குடிசைக்கு அருகே ஓடும். அத்தகைய இவ்வூர் நமக்குத் துன்பம் தருவதாயுள்ளது. நம் தலைவன் அறவழி நடப்பவனாயினும், நடவாதவனாயினும் அதற்காக நம்மை இவர்கள் பழிப்பானேன்? இவர்கள் தமக்கென அறிவு ஏதும் இல்லாதவர்களே!

கருத்து

தலைவியே! நம்மைப் பழித்துப் பேசும் அறிவில்லாதோர் சொற்கேட்டுக் கலங்காதே!

விளக்கம்

தலைவன் வரைபொருட்காகப் பிரிந்திருந்த காலத்தில் தலைவி, 'தலைவன் கூறிச் சென்ற காலத்தில் வந்து மணப்பானோ அல்லனோ? அவன் மணக்காவிடில் இவ்வூரினர் நம்மை மிகவும் ஏசுவார்களே' என்று வருந்தினாள். அதற்குத் தோழி, 'இன்னாமை தரும் இச்சிற்றூரில் உள்ளோர் அறிவில்லாத வராயுள்ளனர். நம் தலைவன் அறவோனாயினும் அல்ல னாயினும் அந்நிலைகளால் ஏற்படும் நன்மை தீமைகள் நமக்கே உரியன. ஊரார்க்கு அதனால் துன்பம் எதுவுமில்லை. அப்படி யிருக்க இவர்கள் எதற்காக நம்மைப் பழிக்கின்றனர்? இது குறித்துக் கவலை வேண்டா' என்று தோழி தேற்றுகிறாள்.

சொற்பொருள்

1. பொருத - போரிட்ட; புகர் - புள்ளி; கடுப்ப - போல.
2. துறுகல் - பொற்றைக்கல்; மீமிசை - மேலே; பலஉடன் - பல ஒருங்கே.
3. ஒண்செங்காந்தள் - ஒள்ளிய செங்காந்தள் மலர்; அவிழும் - மலரும்.
4. அறவன் - வாய்மையினன்.
5. ஏசுவரோ - பழிப்பரோ; தம் இலர் - தமக்கென அறிவு ஏதும் இல்லாதவர்.
6. வரையின் தாழ்ந்த - மலையிலிருந்து விழும்; வால்வெள் - தூய வெண்மையான.
7. கொன் - அச்சம்; குரம்பை - குடிசை; இழிதரும் - அருகே கீழிறங்கி ஓடும்.
8. இன்னாது இருந்த - நமக்கு இன்னாதவராய் இருக்கும்; சிறு குடியோர் - சிற்றூரில் உள்ளவர்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 219 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிந்த அனுமைக்கண்ணே ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன், திருமணத்திற்கு வேண்டும் பொருளை ஈட்டுவதற்குப் பிரிந்த சில நாள்களிலேயே, பிரிவாற்றாது வருந்திய தலைவியை ஆற்றி யிருக்குமாறு தோழி கூறியது.

கருங்கால் வேங்கை மாத்தகட்டு ஒள்வீ
இருங்கல் வியல்அறை வரிப்பத் தாஅம்
நன்மலை நாடன் பிரிந்தென,
ஒள்நுதல் பசப்பது எவன்கொல்? அன்னாய்!

தெளிவுரை

தலைவியே! கருமையான அடிமரப்பகுதியைக் கொண்ட வேங்கை மரத்தின் ஒளி வீசும் பூக்கள் பெரிய புற இதழ்களைக் கொண்டவை. அவை மலையின் பக்கமெலாம் அழகு கொள்ளுமாறு வீழ்ந்து கிடக்கும். இத்தகைய மலைநாட்டிற்கு உரியவன், நம் தலைவன். அவன் உன்னைப் பிரிந்த அக்கணமே உன் நெற்றி பசப்படைவது என்ன காரணத்தினாலோ?

கருத்து

தலைவியே! தலைவன் பிரிந்த உடனேயே உன் நெற்றி பசப்படைகிறதே. ஏன்?

குறிப்பு

வேங்கைமலர் மலைப்பக்கம் பரந்து கிடந்து பலராலும் காணப்படுதல் போல, உன் களவு ஒழுக்கமும் பசலையாலே பலராலும் அறியப்பெற்றுப் பழிச்சொற்கள் உண்டாதற்குக் காரணமாகும். அதனை உணர்ந்து உன் துயரை (வெளியே) காட்டாது அடக்கியிரு எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. மாத் தகட்டு - பெரிய புற இதழ்; ஒள்வீ - ஒளி வீசும் பூக்கள்.
2. இருங்கல் - கரிய கல்; வியல் அறை - அகன்ற பக்க மலை; வரிப்பத் தாஅம் - உதிர்ந்து அழகாய்ப் பரவும்.
4. பசப்பது - பசப்படைவது.

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 66 **மூவாதியார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடைப் பொருட்பிரிவில் தலைமகன் நீட்டித்தவழித் தோழி தலைமகளோடு கூறியது.

கூற்று விளக்கம்

திருமணத்திற்கான பொருளீட்டி வருவதற்காகப் பிரிந்து சென்ற தலைவன், உரிய காலத்தில் திரும்பாதபோது, தலைவியிடம் தோழி கூறியது.

நுண்ஞாண் வலையில் பரதவர் போத்தந்த
பன்மீன் உணங்கல் கவரும் துறைவனைக்
கண்ணினால் காண அமையுங்கொல் என்தோழி!
வண்ணம்தா என்கம் தொடுத்து.

தெளிவுரை

அருமைத் தலைவியே! நுண்மையான கயிறுகளால் பின்னப் பட்ட வலையை வீசிப் பரதவர் பிடித்து வந்து காயவைத்த பல்வகையான மீன் வற்றலைப் பறவைகள் கவர்ந்து செல்லும். இத்தகைய காட்சிக்குரிய துறையைக் கொண்ட தலைவனை மீண்டும் நம் கண்களால் காண நேருமா? நேருமாயின், "களவுப் புணர்ச்சியில் என் தலைவியிடத்துக் கைக்கொண்ட கன்னித் தன்மையாம் அழகினைக் கொடு" என்று நான் கேட்பேன்.

கருத்து

'தலைவன் பிரியும்போதே உன் அழகினை நீ இழந்துவிடுகிறாய்! தலைவன் வரட்டும், அந்த அழகினைத் திருப்பிக் கொடு என்று கேட்பேன்' என்று ஆறுதல் கூறுகிறாள், தோழி.

குறிப்பு

தலைவன் பிரிவும், அப்பிரிவினை நீட்டிப்பதும் தோழிக்கும் தலைவிக்கும் பெரும் கவலையை ஏற்படுத்துகின்றன.

சொற்பொருள்

1. நுண்ஞாண் - நுண்மையான கயிறு; போத்தந்த - கொண்டுவந்த.
2. உணங்கல் - வற்றல்.
3. அமையுங்கொல் - நேருமா?
4. வண்ணம் - அழகு; என்கம் - என்று கேட்பேன்.

தலைவி கூற்று

குறுந்தொகை 223 மதுரைக் கடையத்தார் மகனார் வெண்ணாகனார்

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வேறுபட்ட கிழத்தியது வேறுபாடு கண்டு வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி கூறியது.

கூற்று விளக்கம்

வரைபொருளைத் தேடும்பொருட்டாகத் தலைவன் பிரிந்து செல்ல, அந்தப் பிரிவினால் தலைவியின் உடல் மாறுபட்டது. அதைக் கண்ட தோழி, தலைவன் பிரிவைப் பொறுத்திருக்குமாறு தலைவியிடம் கூற, அதற்குத் தலைவி தோழியிடம், 'முன்பு ஒருகால் உன் சொற்கேட்டுத் திருவிழாவிற்குச் சென்று, அங்குத் தலைவனைக் கண்டதால்தானே இந்நிலை நேரிட்டது. இப்பொழுது நீ வற்புறுத்தி என்ன பயன்?' என்று கூறினாள். தலைவனைக் கண்டதாலேயே தனக்கு இந்நிலை நேரிட்டது என்கிறாள், தலைவி.

'பேர்ஊர் கொண்ட ஆர்கலி விழவில்
செல்வாம் செல்வாம்' என்றி; அன்று,இவண்
நல்லோர் நல்ல பலவால் தில்ல;
தழலும் தட்டையும் முறியும் தந்து,'இவை
ஒத்தன நினக்கு'எனப் பொய்த்தன கூறி,
அன்னை ஓம்பிய ஆய்நலம்
என்னை கொண்டான்;யாம் இன்னமால் இனியே.

தெளிவுரை

தோழியே! முன்பு ஒரு நாளில் இப்பெரிய ஊரில் நடக்கும் ஆரவாரம் மிக்க திருவிழாவில் கலந்துகொண்டு மகிழ நாமும் 'செல்வோம், செல்வோம்' என்று வற்புறுத்தி அழைத்தாய். நாம் அவ்வாறு புறப்படுகையில் இங்கு நல்லோர் நல்ல பல சொற்களைக் கூறி வாழ்த்தினர். ஆனால், அந்நல்வாக்குகளெல்லாம் பயனின்றிக் கழிந்தன. அவ்விழாவில் தலைவன் நம்மைக் கண்டு, கிளிகடி கருவிகளாகிய தழல், தட்டை ஆகியவற்றையும் தழை உடையினையும் என்னிடம் தந்து, 'இவை உனக்கு ஏற்றவை' என்று பொய்யான புனைந்துரைகளைக் கூறி, நம் அன்னை இதுவரை பாதுகாத்து வந்த அழகிய பெண்மை நலத்தையெல்லாம் கொண்டுசென்றனன். (நான் இப்பொழுது இவ்வாறு ஆயினேன்.)

கருத்து

உன் சொற்கேட்டதாலேயே என் நலனை இழந்துள்ளேன். இப்போது வற்புறுத்தி என்ன பயன்?

விளக்கம்

"தோழியே! முன்னர் விழாக் காணச் செல்லலாம் என வற்புறுத்தினாய். உன் சொற்கேட்டு விழாக் காணச் சென்றபோது தலைவன் என்னைக் கண்டு என் பெண்மை நலத்தையெல்லாம் கொண்டுசென்றதால் இன்று இவ்வாறிருக்கிறேன்" எனத் தலைவி தோழியிடம் கூறினாள். (அன்று உன் சொற்கேட்டுத் தலைவனொடு பழகி இன்று என் அழகிழந்தேன்.)

குறிப்பு

தோழியே! அன்னை என்னை வீட்டில் காவல் வைத்து என் பெண்மை நலத்தைக் காப்பாற்றினாள். நீயோ என்னை விழாவுக்கு அழைத்துச் சென்று அதனை இழக்கச்செய்தாய். இப்போது வற்புறுத்தி என் செய்வது?

சொற்பொருள்

1. பேர் ஊர் கொண்ட - பெரிய ஊர் முன்பு கொண்டாடிய; ஆர்கலி - ஆரவாரம் மிக்க.
2. செல்வாம் - செல்லுவோம்; என்றி - என்று கூறினாய்; இவண் - இங்கு.

3. நல்லோர் நல்ல பல - நல்லோர் நல்ல பல சொற்களைக் கூறி வாழ்த்தினார்கள்.
4. தழல், தட்டை - கிளிகடி கருவிகள்; முறி - தழையாடை.
5. ஒத்தன - ஏற்றன; பொய்த்தன - பொய்யானவற்றை.
6. ஓம்பிய - பாதுகாத்த; ஆய்நலம் - அழகிய பெண்மை நலம்.
7. என் ஐ - என் தலைவன்; இன்னம் - இவ்வாறுள்ளோம்; இனி - இப்பொழுது.

தலைவி கூற்று

குறுந்தொகை 226 **மதுரை எழுத்தாளனார் சேந்தன் பூதனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவிடை வைத்துத் தலைவியைப் பிரிந்து சென்றனன். பிரிவுத்துயரத்தைத் தலைவி பொறுத்துக்கொள்ள மாட்டாளே எனக் கருதித் தோழி கவலைப்படுகிறாள். அவளிடம் தலைவி, 'தலைவன் என்னைக் கூடிய பின்பு என் நலமெலாம் இழந்தேன்' என்று கூறியது.

பூவொடு புரையும் கண்ணும், வேய்என
விறல்வனப்பு எய்திய தோளும், பிறைஎன
மதிமயக் குறூஉம் நுதலும், நன்றும்
நல்லமன்; வாழி தோழி! அல்கலும்
தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகுஎன மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாஅ ஊங்கே.

தெளிவுரை

தோழியே! நீ வாழ்க! இரவுதோறும் அலைகளால் மோதப் பட்ட தாழை, வெண்ணிறப்பூக்களை நாரையைப் போன்ற தோற்றத்துடன் மலரச்செய்திருக்கும் தோற்றம் கொண்ட பெரிய கடல்துறைகளைக் கொண்ட அகன்ற நீர்ப்பரப்பிற்கு உரியவன், நம் தலைவன்; அவனோடு கூடிக் கலந்து நகைத்து

மகிழ்தற்கு முன்பாக என் கண்கள் பூப்போன்று மென்மையாய் விளங்கின; தோள்களோ மூங்கில் என்னும்படி எல்லோரையும் வெற்றி கொள்ளும் அழகுடன் திகழ்ந்தன. பிறை போன்ற நெற்றி, காண்பார் அறிவை மயக்கும்படி இருந்தது; இவையெல்லாம் அப்போது நல்லனவாய் இருந்தன; இப்போது அவ்வாறு இல்லாதனவாயின.

கருத்து

'தோழியே! தலைவன் கூடா முன்பு என் மேனிநலம் முற்றவும் சிறந் திருந்தது; இப்போது அவனது பிரிவால் என் மேனிநலம் முற்றவும் அழிந்துள்ளது' எனத் தலைவி, பிரிவை ஆற்றாது உரைத்தாள்.

விளக்கம்

'தாழம் பூவானது நாரையைப் போலத் தோன்றுவதால் எவரும் எடுத்துச் சூடாமல் விட்டுவிடுவதால் அது பயனற்றதாய் விடுவதுபோல, தலைவன் என் உண்மை நிலையை உணராமை யாலும், வரைய முயலாமையாலும் என்அழகும் தாழை மலர் போல நுகரப்படாது கழியுமோ' எனத் தலைவி ஆற்றாளா யினாள்.

சொற்பொருள்

1. புரையும் - ஒத்த; வேய் - மூங்கில்.
2. விறல் வனப்பு - வெற்றி கொள்ளும் அழகு; பிறை என - பிறை போன்றது என.
3. மதிமயக்குறூஉம் - பிறர் அறிவை மயக்கும்படியான; நுதலும் - நெற்றியும்; நன்றும் நல்ல - மிகவும் நல்லன.
4. அல்கலும் - இரவுதொறும்.
5. தயங்கு திரை - அசையும் அலை; பொருத - மோதிய; தாழை - தாழை மரத்தின்; வெண்பூ - வெண்மையான பூ.
6. குருகு என - குருகு என்று சொல்லும்படியாய்; மலரும் - பூக்கும்; பெருந்துறை - பெரிய கடல்துறை.
7. விரிநீர் - கடல்; சேர்ப்பன் - தலைவன்; நகாஅ ஊங்கு - கூடி நகைத்தற்கு முன்பு.

தலைவி கூற்று

குறுந்தொகை 304 **கணக்காயர் தத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

வரைவிடை வைத்துத் தலைவன் பிரிந்த காலத்தில், தலைவி பொறுத்திருக்க மாட்டாளே என்று தோழி கவலையுற, தலைவி, 'அன்று தலைவனோடு கொண்ட இனிய நட்பு இன்று பகையாகித் துன்பத்தைத் தருகிறது' என்று கூறியது.

கொல்வினைப் பொலிந்த கூர்வாய் எறிஉளி
முகம்பட மடுத்த முளிவெதிர் நோன்காழ்
தாங்குஅரு நீர்ச்சுரத்து எறிந்து வாங்குவிசைக்
கொடுந்திமில் பரதவர் கோட்டுமீன் எறிய,
நெடுங்கரை இருந்த குறுங்கால் அன்னத்து
வெண்தோடு இரியும் வீததை கானல்,
கைதைஅம் தண்புனல் சேர்ப்பனொடு
செய்தனெம் மன்றஓர் பகைதரு நட்பே.

தெளிவுரை

வளைந்த படகிலேயுள்ள பரதவர், கொல்லும் தன்மை கொண்ட கூர்மையான எறி உளியை உலர்ந்த உறுதியுள்ள மூங்கிலின் முனையில் பொருத்தியிருப்பர். அந்த உளியை நீர் நிறைந்த வழியில் ஓடிக்கொண்டிருக்கும் சுறாமீன்மீது எறிவர், பின், உளியின் வாயில் சிக்கிய அச்சுறாமீனை இழுப்பர். அப்போது ஏற்படும் ஒலியைக் கேட்டு நீண்ட கடற்கரையிலிருந்த குறுகிய கால்களைக் கொண்ட வெண்மையான அன்னப்பறவை யின் கூட்டம் அஞ்சிப் பறந்தோடும். அத்தகைய காட்சியினைக் கொண்டதும் மலர்கள் நிறைந்த சோலையில் தாழை மரங் களையும் குளிர்ச்சி பொருந்திய நீரையும் கொண்டதுமான கடற்கரையை உடையவனான தலைவனோடு நாம் பகையைத் தருகின்றதொரு நட்பினை நிச்சயமாய்ச் செய்து கொண்டு விட்டோம். இனி என் செய்வேன்?

கருத்து

தோழியே! தலைவனோடு கொண்ட நட்பு நம் எழிலுக்குப் பகையாகி நம்மை மிகவும் வருத்துகின்றது.

விளக்கம்

பரதவர், நீண்ட வலிமையான மூங்கிலின் ஒரு முனையில் கூர்மையான உளியைப் பொருத்தி, மூங்கிலின் மறுமுனையைக் கையில் பற்றிக்கொண்டு கடலில் ஓடும் சுறாமீனின் மீது எறிவர். அந்த உளி சுறாமீது நன்கு பதிந்துகொண்டதும், மூங்கிலை இழுத்து, அதில் சிக்கிய சுறாமீனைப் பிடிப்பர். சுறாமீன் வலிமை யானது; ஆள்களையே கொல்லும் ஆற்றல் வாய்ந்தது. அதனா லேயே மிகவும் எச்சரிக்கையுடன் அதனைப் பிடிப்பர்.

சொற்பொருள்

1. கொல்வினை - கொல்லும் தொழிலுடன்; பொலிந்த - விளங்குகின்ற; கூர்வாய் - கூர்மையான வாயைக் கொண்ட; எறிஉளி - எறிவதற்குரிய உளி.
2. முகம்பட மடுத்த - முனையிலே தோன்றும்படி பொருந்திய; முளி வெதிர் - உலர்ந்த மூங்கில்; நோன்காழ் - வலிய காம்பு.
3. தாங்குஅரு - தாங்க இயலாத; நீர்ச்சுரத்து - நீர் நிறைந்த வழியில்; எறிந்து - வீசி எறிந்து; வாங்கு - இழுக்கும்; விசை - விரைந்து செல்கின்ற.
4. கொடுந்திமில் - வளைந்த படகு; கோட்டு மீன் - சுறா மீன்.
5. நெடுங்கரை இருந்த - நீண்ட கடற்கரையிலிருந்த; குறுங்கால் - குறுகிய கால்களைக் கொண்ட; அன்னத்து - அன்னப் பறவைகளின்.
6. வெண்தோடு . வெண்மையான தொகுதி; இரியும் - பறந்தோடும்; வீததை - மலர்கள் நெருங்கிய.
7. கைதை - தாழை மரம்; அம் - அழகிய; தண்புனல் - குளிர்ந்த நீர்; சேர்ப்பனொடு - தலைவனுடன்.
8. மன்ற - நிச்சயமாய்; ஓர் பகைதரு நட்பு - பகையைத் தருகின்றதொரு நட்பை; செய்தனம் - செய்தோம்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 274 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிந்துழி ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் திருமணத்திற்காகப் பொருள் தேடிவரப் பிரிந்து சென்றிருந்த போது தலைவி வருந்திக்கொண்டிருந்தாள். அவளைத் தோழி தேற்றினாள். அவளிடம் தலைவி சொல்லியது.

மந்திக் கணவன் கல்லாக் கடுவன்,
ஒண்கேழ் வயப்புலி குழுமலின், விரைந்து,உடன்
குன்றுஉயர் அடுக்கம் கொள்ளும் நாடன்
சென்றனன் வாழி, தோழி!என்
மென்தோள் கவினும், பாயலும் கொண்டே.

தெளிவுரை

தோழியே! நீ வாழி! மந்தியின் கணவனான அறியாமையைக் கொண்ட ஆண்குரங்கு, ஒளி பொருந்திய வலிமையான புலி முழக்கத்தைக் கேட்டு அச்சங்கொண்டு மலையின் உச்சிக்குத் தாவிச் செல்லும். இத்தகைய காட்சிக்கிடனான மலைநாட்டுக்கு உரியவன், நம் தலைவன். அவன் என்னைத் தனியே விடுத்துச் சென்றனன். அவ்வாறு செல்கையில் என் மெல்லிய தோள்களின் அழகையும் என் உறக்கத்தையும் தன்னுடன் கொண்டு போயினன். (யான் என் செய்வேன்?)

கருத்து

'தலைவன் பிரிந்த போதே என் தோள் அழகு கெட்டது; உறக்கமும் நீங்கியது. அவன் திரும்பி வரும் நாளில்தான் அவை என்னிடம் மீளும்' என்கிறாள், தலைவி.

உள்ளுறை

புலியின் முழக்கம் கேட்டு அஞ்சிக் குரங்கு குன்றின் உச்சிக்குச் செல்லும் என்னும் தொடர்மூலம், 'தாய் அறிந்தனள்', 'வேற்று

வரைவு வரும்' எனத் தலைவி படைத்துச் சொல்லிய சொற்களைக் கேட்டு அஞ்சித் தலைவனும் விரைந்து பொருள் தேடும் பொருட்டு வேற்று நாடு சென்றனன் என்னும் கருத்து வெளிப் படுகிறது.

சொற்பொருள்

1. மந்தி - பெண்குரங்கு; கடுவன் - ஆண்குரங்கு.
2. ஒண்கேழ் - ஒளி பொருந்திய நிறம்; வயப்புலி - வலிமையான புலி; குழுமலின் - முழங்குதலின்.
3. கொள்ளும் - பாய்ந்து பற்றிக்கொள்ளும்.
5. கவின் - அழகு; பாயல் - தூக்கம்; கொண்டே - தலைவன் தன்னுடன் கொண்டு சென்றான்.

தலைவி கூற்று

குறுந்தொகை 205 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவுக்கான பொருளீட்டப் பிரிந்து சென்றான். தலைவி அப் பிரிவைப் பொறுத்திருக்கமாட்டாள் எனத் தோழி கருதி வருந்தினாள். அவளை நோக்கி, 'தலைவன் பிரிந்தவுடன் என் நெற்றியில் பசலையும் பரவிவிட்டது' எனத் தலைவி தன் நிலையைக் கூறியது.

மின்னுச்செய் கருவிய பெயல்மழை தூங்க,
விசும்புஆடு அன்னம் பறைநிவந் தாங்கு,
பொலம்படைப் பொலிந்த வெண்தேர் ஏறிக்
கலங்குகடல் துவலை ஆழி நனைப்ப,
இனிச்சென் றனனே, இடுமணற் சேர்ப்பன்;
யாங்குஅறிந் தன்றுகொல் தோழி!என்
தேம்கமழ் திருநுதல் ஊர்தரும் பசப்பே?

தெளிவுரை

தோழியே! அலைகள் கொண்டுவந்து சேர்த்த மணலைக் கொண்ட கடற்கரைக்கு உரியவன், நம் தலைவன். மின்னலைத்

தோற்றுவிக்கும் தொகுதியைக் கொண்ட மேகம் மழை பெய்யத் தொடங்கியது. வானத்தில் பறக்கும் அன்னப்பறவை அத் தூறலில் இன்புற்று மேலெழுந்து பறக்கத் தொடங்கியுள்ளது. அந்த அன்னப்பறவை போல, பொன்னால் செய்த தட்டுகளுடன் தந்தத்தால் செய்யப்பெற்ற வெள்ளிய தேரில் ஏறி, கலங்கிப் பாயும் கடலலையின் நீர்த்துளிகள் தேர்ச்சக்கரங்களை நனைக்க, நம் தலைவன் இப்போதுதான் தேரேறிச் சென்றான். அதனைப் பசலை எவ்வாறு அறிந்ததோ? மணங்கமழும் என் அழகிய நெற்றியில் அதுவும் படர்ந்துவிட்டது. இது வியப்பே!

கருத்து

தோழியே! தலைவன் பிரிந்த அப்பொழுதிலேயே பசலையும் என் நெற்றியில் பரவிவிட்டதே! என் செய்வேன்?

உவமை விளக்கம்

இருபுறமும் உள்ள சக்கரங்கள் அலைநீர்த்துளிகளால் நனைய விரைந்து செல்லும் வெள்ளிய தேருக்கு, இரு சிறகுகளும் மழைத் துளிகளால் நனைய விரைந்து பறந்து செல்லும் அன்னம் உவமை.

சொற்பொருள்

1. மின்னுச் செய் - மின்னலைத் தோற்றுவிக்கும்; கருவிய - தொகுதியைக் கொண்டனவாகிய; பெயல் மழை - பெய்யும் மேகம்; தூங்க - மழையைப் பெய்ய.
2. விசும்பு - வானம்; ஆடும் - பறக்கும்; அன்னம் - ஒரு பறவை; பறை நிவந்தாங்கு - மேலே மேலே எழுந்து பறப்பது போல.
3. பொலம் - பொன்னால் (செய்யப்பட்ட); படை - தட்டு; பொலிந்த - பொலிவு பெற்று; வெண்தேர் - யானைத் தந்தத்தால் செய்யப்பெற்ற வெண்மையான தேர்.
4. கலங்கு கடல் - கலங்கிய கடலிலுள்ள; துவலை - அலையின் நீர்த்துளி; ஆழி - தேர்ச்சக்கரத்தை.
5. இனிச் சென்றனன் - இப்பொழுதுதான் சென்றான்.
6. யாங்கு - எவ்வாறு?; அறிந்தன்று - அறிந்தது.
7. தேம்கமழ் - மணம் கமழ்கின்ற; திருநுதல் - அழகிய நெற்றி; பசப்பு - பசலை; ஊர்தரும் - படர்ந்துவிட்டது.

தலைவி கூற்று

குறுந்தொகை 264 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குத் தலைமகள், 'ஆற்றுவல்' என்றது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவிடைப் பிரிந்ததால் தலைவியின் உடலழகு மாறுபடக் கண்ட தோழி வருந்தினாள். அதனைக் காணும் தலைவி, தான் பிரிவைப் பொறுத்திருக்கும் உறுதியுள்ளவள் என்பதைத் தோழியிடம் தெரிவித்தது.

கலிமழை கெழீஇய கான்யாற்று இகுகரை,
ஒலிநெடும் பீலி துயல்வர இயலி,
ஆடுமயில் அகவும் நாடன் நம்மொடு
நயந்தனன் கொண்ட கேண்மை
பயந்தக் காலும், பயப்புஒல் லாதே.

தெளிவுரை

தோழியே! ஆரவாரத்தோடு பெய்கின்ற மழை பொருந்திய காட்டாற்றின் அலைமோதும் கரைகளின்மேல், தழைத்து நீண்ட தோகை அசையும்படி மயில்கள் ஆடும். அத்தகைய காட்சிக்குரிய மலைநாட்டைக் கொண்டவன், நம் தலைவன். அவன் விரும்பிக் கொண்ட நட்பினால் நம்மிடம் பசலை படர்ந்துள்ளது. என்றாலும் நம் நெஞ்சம் அப்பசலையோடு பொருந்தாது.

கருத்து

தோழியே! மேனிதான் பசக்குமே தவிர மனம் உறுதியானது; அது தளராது. தலைவன் பிரிவை நான் ஆற்றியிருப்பேன்.

குறிப்பு

பசலை பரவி என் தோற்றம் வெளிறியிருப்பதால் நான் வேதனைப் படுவேனோ என்று கவலைகொள்ள வேண்டா. இந்தத் துன்பத்தைத் தாங்கும் வல்லமையை அவன்மீது கொண்டுள்ள காதல் எனக்குத் தரும்.

சொற்பொருள்

1. கலிமழை - ஆரவாரத்தோடு பெய்கின்ற மழை; கெழீஇய - பொருந்திய.
2. ஒலி நெடும் பீலி - ஒலிக்கின்ற நீளமான தோகை; துயல்வர - அசையும்படி; இயலி - நடந்து, உலாவி.
4. நயந்தனன் - விரும்பி; கேண்மை - நட்பினால்.
5. பயந்தக் காலும் - (நம்மிடம் பசலை) படர்ந்தாலும்; பயப்பு ஒல்லாது - (நம் நெஞ்சம்) அப் பசலையோடு பொருந்தாது.

•

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 209 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிவின்கண் அவனை நினைவு விடாது ஆற்றாளாகிய வழி, 'சிறிது மறந்து ஆற்ற வேண்டும்' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

'வரைபொருள் தேடி விரைவில் வந்து மணப்பேன்' என்று உறுதி கூறிப் பிரிந்து சென்றான், தலைவன். அவனைப் பிரிந்து தனித்திருக்கும் துயரம் தலைவியை மிகவும் நலிவிக்கிறது. அது கண்டு பொறாத தோழி ஆறுதல் மொழிகளைக் கூற, தலைவி தன் மனநிலையைச் சொல்லியது.

அன்னாய், வாழி!வேண்டு அன்னை! நீமற்று
யான்அவர் மறத்தல் வேண்டுதி ஆயின்,
கொண்டல் அவரைப் பூவின் அன்ன,
வெண்தலை மாமழை சூடித்
தோன்றல் ஆனாது,அவர் மணிநெடுங் குன்றே.

தெளிவுரை

தோழியே! வாழ்க! நான் கூறுவதைக் கேள்! நான் அவரைச் சற்றே மறந்திருக்க வேண்டும் என்கின்றாய் நீ! ஆனால், கீழைக்காற்று வீசுவதால் மலரும் அவரைப்பூப் போன்ற வெண்ணிறமான பெருமேகத்தை உச்சியிலே சூடிக்கொண்டு, அவர் நாட்டு நீலமணி போன்ற மலை, இடைவிடாது என்

முன்னே தோன்றிக்கொண்டே இருக்கிறதே! நான் எவ்வாறு அவர் நினைவை மறந்திருப்பேன்?

கருத்து

தோழியே! அவர் நாட்டு மலை என் முன் தோன்றிக்கொண்டே இருப்பதால் அவரை நினையாமல் இருத்தற்கு என்னால் இயலவில்லையே!

குறிப்பு

வெண்ணிற மேகத்துடன் உள்ள மலையுச்சி, அவர் என் தலையில் வெண்ணிற மலர் சூட்டும் நினைவைத் தோற்றுவித்தவண்ணம் உள்ளதே! நான் எப்படி மறப்பது?

சொற்பொருள்

3. கொண்டல் - கீழைக்காற்று.
4. வெண்தலை - வெண்மையான உச்சி; மழை - மேகம்.
5. ஆனாது - அமையாது.

தலைவி கூற்று

குறுந்தொகை 302 **மாங்குடி கிழார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடைக் கவன்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் திருமணத்திற்காகப் பொருளீட்டப் பிரிந்த காலத்தில், தலைவியால் அப்பிரிவைப் பொறுத்துக்கொள்ள இயலாதே எனக் கவலைப்பட்ட தோழியிடம் தலைவி அவனை மறக்க இயலாமல் தான் துயருற்றிருப்பதைக் கூறியது.

உரைத்திசின் தோழி!அது புரைத்தோ அன்றே!
அருந்துயர் உழத்தலும் ஆற்றாம்; அதன்தலைப்
பெரும்பிறி தாகல் அதனினும் அஞ்சுதும்;
அன்னோ இன்னும், நன்மலை நாடன்,
பிரியா நண்பினர், இருவரும் என்னும்

அலர்அதற்கு அஞ்சினன் கொல்லோ? பலருடன்
துஞ்சுஊர் யாமத் தானும்என்
நெஞ்சத் தல்லது வரவறி யானே!

தெளிவுரை

தோழியே! பிரிவினால் உண்டான கொடிய துன்பத்தைத் தாங்குவதற்கும் இயலாதவளாயுள்ளேன். அதன் விளைவாய் இறந்துபடுவோம் என்று நினைப்பது இன்னும் அச்சத்தைத் தருகிறது. அந்தோ! நல்ல மலைநாடனாம் நம் தலைவன், 'இவர்கள் இருவரும் பிரியா நட்பினர்' என்று ஊரார் சொல்லும் ஏளனச் சொற்களுக்கு அஞ்சினானோ? அதனால்தான் பலரும் உறங்கும் நள்ளிரவில்கூட என் நெஞ்சத்து நினைவில் வருகின்றானே அன்றி நேரில் வர அறியாதிருக்கின்றானே! இச்செயல் அவனுக்கு உயர்வுடையதாகுமோ? நீயே கூறு.

கருத்து

தலைவனை நினைவில் வரக் காண்பதன்றி நேரில் வரக் காணாது வருந்துகின்றேன்.

சொற்பொருள்

1. உரைத்திசின் - கூறுக; அது புரைத்தோ? - அது உயர்வானதாகுமோ?
2. அருந்துயர் - (அவனது பிரிவினால் உண்டான) கொடிய துயரத்தால்; உழத்தல் - வருந்துதல்; ஆற்றாம் - தாங்குதற்கும் இயலாதவரா யுள்ளோம்; அதன் தலை - அதற்கு மேல்.
3. பெரும் பிறிது ஆகல் - இறந்துபடுதலை; அதனினும் - அதைக் காட்டிலும்; அஞ்சுதும் - அஞ்சுகின்றோம்.
4. அன்னோ - அந்தோ; நன்மலை நாடன் - நல்ல மலைநாட்டை யுடைய தலைவன்.
5. பிரியா நண்பினர் இருவரும் - இவர்கள் இருவரும் பிரியா நட்பினர்; என்னும் - என்று பிறர் கூறும்.
6. அலர் அதற்கு - பழிமொழிக்கு, ஏளனச் சொற்களுக்கு; அஞ்சினன் கொல் - அஞ்சினனோ?; பலருடன் - பலரும் ஒருங்கே.
7. ஊர் துஞ்சும் - ஊரிலுள்ளார் உறங்கும்; யாமத்தானும் - நள்ளிரவிலும்; என் - எனது.
8. நெஞ்சத்து அல்லது - நெஞ்சத்து நினைவில் தோன்றுகின்றானே அல்லாது; வரவறியானே - நேரில் வருவதை அறியாதிருக்கிறானே.

தலைவி கூற்று

குறுந்தொகை 134 **கோவேங்கைப் பெருங்கதவனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை ஆற்றாளாகிய தலைமகள் ஆற்றுவிக்கும் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வரைபொருளுக்காகத் தலைவன் பிரிந்ததால் நலிந்த தலைவியிடம் தோழி, 'ஆற்றியிரு' என்று கூறித் தேற்றியபோது அவளிடம் தலைவி கூறியது.

அம்ம வாழி தோழி! நம்மொடு
பிரிவுஇன்று ஆயின் நன்றுமன் தில்ல;
குறும்பொறைத் தடைஇய நெடுந்தாள் வேங்கைப்
பூவுடை அலங்குசினை புலம்பத் தாக்கிக்
கல்பொருது இரங்கும் கதழ்வீழ் அருவி,
நிலம்கொள் பாம்பின், இழிதரும்
விலங்குமலை நாடனொடு கலந்த நட்பே.

தெளிவுரை

தோழியே! வாழி! சிறிய குன்றினிடையே பருத்து வளர்ந்து, நீண்ட அடிப்பாகத்தைக் கொண்ட வேங்கை மரத்தில் பூக்கள் நிறைந்த கிளைகள் அசைந்துகொண்டிருக்கின்றன. அருவி ஒன்று, அம்மரக்கிளைகளைத் தாக்கி, பூக்களை உதிர்த்து அக் கிளைகள் பூக்களின்றித் தனித்திருக்கும்படி செய்கிறது; பிறகு, பாறைகளில் மோதி ஆரவாரித்து, கீழே விரைந்து வீழ்ந்து நிலத்தே ஊர்ந்து பாம்புபோல விரைந்து நெளிந்து ஓடுகிறது. அவ்வாறு ஓடும் அருவி நீரை மலைகள் குறுக்கிடும். இத்தகைய காட்சிக்குரிய நாட்டினையுடைய தலைவனோடு நாம் ஒன்று பட்டுப் பழகிய நட்பு, பிரிவு என்னும் ஒன்று இல்லாதிருக்கு மாயின் நன்று; இதுவே என் விருப்பம்.

கருத்து

தலைவன் பிரியாமல் இருக்கும்போதுதான் அவன் கொண்ட நட்பு இன்பம் தரும்; பிரியின் துன்பமே.

விளக்கம்

அருவி, வேங்கையின் கிளையைத் தாக்கிப் பூக்களை உதிர்த்து, பாறைகளோடு மோதிக் கீழே இறங்கும் என்னும் தொடர், தலைவன் தலைவியின் நலன் அழியுமாறும், ஊரலர் எழுமாறும் செய்து, பொருள் தேடச் சென்றுவிட்டான் என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

குறிப்பு

அருவிநீர் முடிவில் மருத நிலத்திற்குச் சென்று வளம் பெருக்குவது போல, பொருளீட்டி வரும் தலைவனும் தலைவியை மணந்து நலம் செய்வான் என்பது குறிப்பு.

சொற்பொருள்

2. நன்று - தலைவனுடன் கொண்ட நட்பு நன்று.
3. குறும்பொறை - குறுகிய கற்கள் (இடையே); தடைஇய - பருத்து வளர்ந்த; நெடுந்தாள் - நீண்ட அடிப்பாகத்தைக் கொண்ட; வேங்கை - வேங்கை மரத்தின்.
4. பூவுடை - பூக்கள் நிறைந்த; அலங்கு சினை - அசைந்துகொண்டிருக் கின்ற கிளைகள்; புலம்ப - (மலர்களை இழந்து) தனித்திருக்கும்படி.
5. பொருது - மோதி; இரங்கும் - ஒலிக்கும்; கதழ் வீழ் - விரைந்து விழுகின்ற.
6. நிலம் கொள் பாம்பின் - நிலத்திலே ஊர்ந்து செல்லும் பாம்பைப் போல; இழிதரும் - கீழே விழுந்து (ஓடும்).
7. விலங்குமலை - (அருவியோடு) குறுக்கிடுகின்ற மலைகளைக் கொண்ட; கலந்த - ஒன்றுபட்ட; (பிரிவு என்ற ஒன்று இல்லாதிருக்கு மாயின் நன்று.)

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 141 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிந்துழி ஆற்றாளாகின்ற தலைமகள், 'அவன் வரைதற்குப் பிரியவும் நீ ஆற்றாயாகின்றது என்னை?' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் திருமண ஏற்பாட்டை முன்னிட்டுத் தலைவியைப் பிரிந்தான்; தலைவி வருந்தினாள். தோழி, 'தலைவன் திருமணத்தை முன்னிட்டுத் தானே பிரிந்திருக்கிறான். அப்படி இருந்தும் நீ ஏன் வருந்துகிறாய்?' எனக் கேட்டாள். அதற்குத் தலைவி மறுமொழி கூறியது.

எக்கர் ஞாழல் செருந்தியொடு கமழத்
துவலைத் தண்துளி வீசிப்
பயலை செய்தன பனிபடு துறையே.

தெளிவுரை

கடற்கரையில் குவிந்துள்ள மணல்மேட்டில் ஞாழல் மலர் களும் செருந்தி மலர்களும் சேர்ந்து மணம் வீசுகின்றன; குளிர்ச்சி பொருந்திய துறையோ நீர்த்துவலைகளை என் மேல் வீசிப் பசலை நோயை உண்டாக்குகின்றது. (யான் வருந்தாது என் செய்வேன்?)

கருத்து

தோழியே! இயற்கையும் இன்ப வேட்கையை மிகுவித்தலான் நான் ஏக்கமுற்று வாடுகின்றேன்.

குறிப்பு

தலைவன் உடன் இல்லாதிருக்கையில் பூவின் மணமும் நீர்த்துளிகளின் குளிர்ச்சியும் இன்ப வேட்கையை மிகுவிக்கின்றன.

'ஞாழல் செருந்தியோடு சேர்ந்து கமழ்கின்றது; ஆனால், நானோ அவரோடு சேர்ந்து மணம் பெறவில்லையே' எனத் தலைவி ஏங்குகிறாள்.

விளக்கம்

மலர் மணம் கமழும் மணற்பரப்பிலே தன் காதலனொடு விளையாடியும் நீர்த்துறையில் நீராடியும் இன்பமுற்றவள், தலைவி. ஆதலின், அவன் இல்லாதபோது மலர்மணமும் நீர்த் திவலைகளும் பழமையை நினைவூட்டித் துன்பத்திற்குக் காரணமாகி அவளை நலியச்செய்தன.

சொற்பொருள்

1. எக்கர் - மணல்மேடு; ஞாழல் - ஞாழல் மலர்; செருந்தி - செருந்தி மலர்; கமழ - மணம் வீச.
2. துவலை - மழை, மழைத்தூவல்; தண்துளி - குளிர்ந்த துளி.
3. பயலை - பசலை நோய்; பனிபடு துறை - குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறை.

தலைவி கூற்று

நற்றிணை 249 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை மெலிந்தது.

கூற்று விளக்கம்

களவில் வந்தொழுகிய தலைவன் மணம் புரியும் கருத்தினனாய்ப் பொருள் தேடிவரப் புறப்பட்டுச் சென்றவன், குறித்த காலத்தில் வந்து சேராததால் தலைவி மனந்தளர்ந்து சொல்லியது.

இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை
நீலத் தன்ன பாசிலை அகந்தொறும்
வெள்ளி அன்ன விளங்குஇணர் நாப்பண்
பொன்னின் அன்ன நறுந்தாது உதிரப்
புலிப்பொறிக் கொண்ட பூநாறு குரூஉச்சுவல்
வரிவண்டு ஊதலின் புலிசெத்து வெரீஇப்
பரியுடை வயங்குதாள் பந்தின் தாவத்
தாங்கவும் தகைவரை நில்லா ஆங்கண்
மல்லல்அஞ் சேரி கல்லெனத் தோன்றி
அம்பல் மூதூர் அலர்எழச்
சென்றது அன்றோ கொண்கன் தேரே!

தெளிவுரை

புன்னை மரம் இரும்பைப் போன்று விளங்கும் கரிய கிளைகளைக் கொண்டதாய் இருக்கிறது. நீலம்போலத் தோன்றும் அதன் பசுமையான இலைகளினிடையே வெள்ளியினைப் போன்ற வெண்மையான பூங்கொத்துகள் மலர்ந்து தோன்றுகின்றன. அப்பூக்களிலிருந்து பொன்துகள் போன்ற மணம் கொண்ட தாதுக்கள் உதிர்ந்து கிடக்கின்றன. அதனால் மணல்மேடு புள்ளிகள் கொண்ட புலியின் மேற்புறம் போல மணங்கமழத் தோன்றுகிறது. வரியைக் கொண்ட வண்டுகள் புன்னை மலர்களில் படிந்து தேன் குடிக்கின்றன. அங்கெழுந்த வண்டுகளின் ஓசையைப் 'புலியின் ஓசையோ' என்று மயங்கித் தேரில் பூட்டப்பட்ட குதிரைகள் அச்சம் கொள்ளுகின்றன. அதனால் பலமுறை இழுத்து நிறுத்த முயன்றும் குதிரைகள் அடங்கி நில்லாவாய்ப் பந்துபோலத் தாவிக் குதித்துச் செல்லுகின்றன. வளப்பம் மிக்க நம் சேரியில் பழிச்சொல் மிகுமாறு தலைவனது தேர் நில்லாது சென்றுவிட்டது.

கருத்து

'இவ்வூரிற்கு வந்தும் நிற்காமல் சென்றுவிட்ட தலைவன் தேர், மீண்டும் இவ்வூருக்கு வந்து, தலைவன் நம்மை விரைந்து மணந்துகொள்வானா?' எனத் தலைவி ஏங்கிக் கூறுகிறாள்.

விளக்கம்

பூ மணம் கமழ நிறம் பெற்று விளங்கும் மணல்மேட்டின் மேல் புன்னையின் பூந்தாது உதிர்ந்து கிடக்கிறது. அத்தோற்றத்தைக் கண்டு புலி என அஞ்சிய தலைவனுடைய தேர்க்குதிரைகள் கட்டுக்கடங்காவாய்த் தாவிக் குதித்து ஓடின. அக்காட்சியினைக் கண்ட ஊரவர் கூடிப் பழிச்சொற்கள் கூறலாயினர். இதனால் மிகவும் கவலையுற்ற தலைவி, தலைவன் இனியும் இவ்வூருக்கு வந்து தன்னை மணந்துகொள்வானா என ஏங்கிக் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. கருங்கோட்டு - கரிய கிளையைக் கொண்ட.
2. பாசிலை - (அப்புன்னையின்) பச்சை இலை; அகந்தொறும் - உள்ளிடந்தொறும்.

3. விளங்கு இணர் - விளங்குகின்ற பூங்கொத்துகள்; நாப்பண் – நடுவே.
4. நறுந்தாறு - நறிய மணம் கொண்ட பூந்தாது.
5. புலிப்பொறிக் கொண்ட - புலியினது மேற்புறம் போலப் புள்ளிகளைக் கொண்ட; குரு - நிறம் கொண்ட; சுவல் – மேற்புறத்தைக் கொண்ட; பூ நாறும் - புன்னைப்பூ மணம் வீசும்.
6. வரிவண்டு - (அப்பூக்களில்) வரிகளைக் கொண்ட வண்டுகள்; ஊதும் – படிந்து தேன் குடிக்கும்; புலிசெத்து – (அப்போது வண்டுகள் எழுப்பும் ஒலியைப்) புலியின் ஓசை என்று கருதி; வெரீஇ - அச்சங்கொண்டு.
7. பரியுடை - (தேரில் பூட்டப்பெற்ற) குதிரையின்; வயங்கு தாள் - விளங்கும் கால்கள்; பந்தின் தாவ - பந்து போலத் தாவிச் செல்ல.
8. தாங்கவும் - (பாகன் இழுத்துப் பிடித்து) நிறுத்தவும்; தகைவரை - அவ்வாறு தடுப்பதற்கு; நில்லா - அடங்காது ஓடி.
9. மல்லல் அம் சேரி - வளப்பம் பொருந்திய அழகிய ஊரில்; கல்லென - 'கல்' எனும் பேரோசையுடன்; தோன்றி - தோன்றும் (அதனால்).
10. அம்பல் - புறங்கூறும்; மூதூர் - பழமையான ஊரில்; அலர் எழ - பழிச்சொல் எழும்படியாக.
11. கொண்கன் - தலைவன்.

தலைவி கூற்று

நற்றிணை 56 **பெருவழுதியார்**

திணை : பாலை

கூற்று

வரைவிடை மெலிவாற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

மணம் புரிவதற்கான பொருளை ஈட்டச் சென்ற தலைவன் திரும்பி வரும்வரை உடல் மெலியாவண்ணம் ஆற்றியிருக்க வேண்டும் என்று தோழி தலைவியிடம் கூறினாள். அதற்குத் தலைவி, "நான் ஆற்றியிருப் பேன்; ஆயினும் என் நெஞ்சம் தலைவனிடம் சென்றுவிட்டது. அஃது அவனுடன்தான் திரும்பி வருமா அல்லது திரும்பி வந்து நான் மெலிந் திருப்பதால் அடையாளம் தெரியாமல் வேறு எங்கேனும் சென்று விட்டதோ?" என வருந்தி உரைத்தது.

குறுநிலைக் குரவின் சிறுநனை நறுவீ
வண்டுதரு நாற்றம் வளிகலந்து ஈயக்
கண்களி பெறூஉம் கவின்பெறு காலை,
எல்வளை ஞெகிழ்த்தோர்க்கு அல்லல் உறீஇயர்
சென்ற நெஞ்சம் செய்வினைக்கு அசாவா
ஒருங்குவரல் நசையொடு, வருந்தும் கொல்லோ?
அருளான் ஆதலின், அழிந்துஇவண் வந்து,
தொல்நலன் இழந்தஎன் பொன்நிறம் நோக்கி,
ஏதி லாட்டி இவள்எனப்
போயின்று கொல்லோ, நோய்தலை மணந்தே?

தெளிவுரை

"குறுகிய உயரத்துடன் குரவ மரம் நிற்கிறது. மரத்தின் சிறிய அரும்புகள் முதிர்ந்து மலர்ந்துள்ளன. அம்மலர்களில் வண்டுகள் மொய்த்துக் கிளறுதலால் எழுந்த மணம் தென்றல் காற்றுடன் கலந்து வீசுகின்றது. இத்தகைய அழகிய காட்சியை மாலைப்பொழுதில் என் கண்கள் கண்டு மகிழ்கின்றன. அப்போது ஒளி பொருந்திய என் வளையல்களை ஞெகிழ்வித்துச் சென்ற தலைவரைக் கண்டு என் துன்பத்தை அவரிடம் கூற என் நெஞ்சம் அவரை நாடிச் சென்றுவிட்டது. அங்கு அத்தலைவன் செய்யும் முயற்சிக்குத் துணையாயிருந்து வேலை முடிந்ததும் அவருடன் சேர்ந்து ஒன்றாய் வருவதற்கு அங்கேயே இருக்கிறதா? அல்லது அத்தலைவன் என் நெஞ்சத்தைப்பற்றிக் கவலைப் படாமல் இருந்ததால், மிகவும் வருத்தமுற்று என்னிடம் சேர்வதற் காகத் திரும்பிவந்து, என் மேனி பசலை பாய்ந்து நிறம் வேறுபட்டு மெலிந்திருப்பதால், 'இவள் அயலாள் (இவள் யாரோ?)' என்று கருதி வருத்தம் கொண்டு என்னைத் தேடி வேறு எங்கேனும் சென்றுவிட்டதோ? யாதும் அறியேன். இவ்வாறிருக்க எப்படி நான் ஆற்றியிருக்க இயலும்" எனத் தலைவி வருந்திக் கூறினாள்.

கருத்து

தோழியே! தலைவன் பிரிந்தபோதே என் நெஞ்சும் என்னிடமிருந்து பிரிந்து அவருடன் சென்றுவிட்டது!

விளக்கம்

தலைவி, தன் நெஞ்சைத் தன் கட்டுப்பாட்டிற்கு உட்படாத ஒன்றாய்க் கற்பனை செய்துகொண்டு பேசுகின்றாள். "என் நெஞ்சம் என்னை விட்டுப் பிரிந்து தலைவனிடம் சென்று விட்டதா? அவன் வேலை முடிந்த பின்னர் அவனுடன்தான் வருமா? தலைவன் என் நெஞ்சைப்பற்றிக் கவலைப்படாததால் மீண்டும் வந்து, நான் மெலிவுற்று முன்னைய அழகெல்லாம் இழந்திருப்பதால் அடையாளம் தெரியாமல் என்னைத் தேடி வேறு எங்கேனும் அலைகிறதோ? ஏதும் அறிய இயலவில்லை" என்கிறாள், தலைவி.

சொற்பொருள்

1. குறுநிலை - குறுகிய உயரம்; குரவு - குரவ மரம்; சிறுநனை - சிறிய அரும்பு; நறுவீ - நல்ல மலர்.
2. வண்டுதரு - வண்டுகள் மொய்த்துக் கிளறுதலால் உண்டாகும்; நாற்றம் - மணம்; வளி கலந்து - காற்றோடு கலந்து; ஈய - தர.
3. கண்களி பெறும் - கண்களுக்கு மகிழ்ச்சி தரும்; கவின் - அழகு; காலை - பொழுது.
4. எல்வளை - ஒளி பொருந்திய வளையல்; ஞெகிழ்த்தோர்க்கு - கழன் றோடுமாறு மெலிவுறச் செய்த காதலர்க்கு; அல்லல் - என் ஆற்றாமைத் துன்பம்; உறீஇ - அறிவிக்க.
5. செய்வினைக்கு - தலைவன் செய்யும் முயற்சிக்கு; அசாவா - தளராமல் (துணையாய் இருந்து).
6. ஒருங்குவரல் - அவனோடு ஒன்றாய்த் திரும்பி வர; நசையொடு - விருப்பத்துடன்.
7. அருளான் ஆதலின் - காதலர் அருள் செய்யாததால்; அழிந்து - கருத்தழிந்து; இவண் - இங்கே.
8. தொல்நலன் இழந்த - என் பழைய அழகு கெட்டு; பொன் நிறம் நோக்கி - உடல் பசந்து பொன்மை நிறம் பெற்றுள்ள என் மேனி வேறுபாடு கண்டு.
9. இவள் ஏதிலாட்டி என - இவள் பிறள் ஒருத்தி எனக் கருதி.
10. போயின்று கொல் - வேறு எங்கேனும் என்னைத் தேடிக்கொண்டு போய்விட்டதோ?; நோய்தலை மணந்து - துன்பம் மிகக் கொண்டு (என்னைத் தேடிச் சென்றது போலும்).

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 295 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் வரைவிடை வைத்துப் பிரிந்து நீட்டித்துழி உடன் சென்ற நெஞ்சினைத் தலைமகள் நினைந்து கூறியது.

கூற்று விளக்கம்

திருமண ஏற்பாட்டிற்காகப் பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வரக் காலம் தாழ்த்தினான். அவன் பிரிந்தபோதே அவனுடன் சென்றுவிட்ட தன் நெஞ்சினை நோக்கித் தலைவி கூறியது.

வருவது கொல்லோ தானே வாராது
அவண்உறை மேவலின், அமைவது கொல்லோ?
புனவர் கொள்ளியில் புகல்வரு மஞ்ஞை,
இருவி இருந்த குருவி வருந்துற,
பந்துஆடு மகளிரில் படர்தரும்
குன்றுகெழு நாடனொடு சென்றஎன் நெஞ்சே!

தெளிவுரை

புனத்தில் வாழும் குறவர்கள் கொளுத்திய தீயைக் கண்டு அஞ்சிய மயில் தன் இருப்பிடத்தை நோக்கிச் சென்றது. வழியில் தினைக்கதிர்கள் கொய்யப்பெற்ற அரிதாளிலே இருந்த குருவிகள் அஞ்சுமாறு அம்மயில் அரிதாளுக்கிடையே தன் தோகையை விரித்துப் பந்தாடுகின்ற மகளிரைப் போலத் துள்ளியும் ஓடியும் நடந்தும் சென்றது. இத்தகைய காட்சி கொண்டுள்ள குன்றுகள் பொருந்திய நாட்டிற்கு உரியவனோடு சென்ற என் நெஞ்சம் மீண்டும் என்னிடம் வருமா? அன்றி, வாராது அவன் வாழுமிடத்திலேயே தங்கிவிடுமா? தெரியவில்லையே!

கருத்து

தோழியே! தலைவனுடன் சென்றுவிட்ட என் நெஞ்சு திரும்ப என்னை வந்தடையுமா?

உள்ளுறை

குறவர்கள் கொளுத்திய தீயைக் கண்டு மயில் தனக்குத் தீங்கு நேருமென்று கருதி, அரியப்பட்ட தினைத்தாள்மீது இருந்த குருவிகள் அஞ்சும்படி காட்டில் அரியப்பட்ட தாளினூடே தன் சிறகை விரித்துத் தன்னிருப்பிடம் நோக்கிப் பறந்து சென்றது. இத்தொடர்மூலம், தலைவன் தலைவியரிடையே ஏற்பட்ட களவுறவை அறிந்து குறவரிடையே அலர் எழுந்தமையால் அதற்குத் தலைவன் அஞ்சித் தலைவியும் தோழியரும் வருந்துமாறு அவர்களை விட்டுப் பிரிந்து சென்றான் என்னும் உள்ளுறை வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. வருவது கொல் - வந்து சேருமா?
2. அவண் - (தலைவன் சென்றுள்ள) அங்கேயே; உறை மேவலின் - பொருந்தித் தங்கி; அமைவது கொல் - இருந்துவிடுமோ?
3. புனவர் - தினைப்புனத்தில் வாழும் குறவர்; கொள்ளியில் - கொள்ளிக் கட்டையைக் கண்டு (அஞ்சி); புகல்வரும் - தன் இருப்பிடத்திற்குத் திரும்பும்; மஞ்ஞை - மயில்.
4. இருவி - (தினை கொய்தபின் நிற்கும்) அரிதாள்; வருந்துற - துன்பமுற.
5. படர்தரும் - ஆடிச் செல்கின்ற.
6. குன்றுகெழு - குன்றுகள் பொருந்திய.

தலைவி கூற்று

நற்றிணை 303 **மதுரை ஆருலவியநாட்டு ஆலம்பேரி சாத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

வேட்கை தாங்ககில்லாளாய்த் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

வரைபொருள் ஈட்டப் பிரிந்த தலைவனின் பிரிவைத் தாங்க இயலாத வளாய்த் தலைவி தோழியிடம் சொல்லியது.

ஒலிஅவிந்து அடங்கி, யாமம் நள்ளென,
கலிகெழு பாக்கம் துயில் மடிந்தன்றே;
தொன்றுஉறை கடவுள் சேர்ந்த பராரை
மன்றப் பெண்ணை வாங்குமடற் குடம்பைத்
துணைபுணர் அன்றில் உயவுக்குரல் கேட்டொறும்,
'துஞ்சாக் கண்ணள் துயர்அடச் சாஅய்,
நம்வயின் வருந்தும், நன்னுதல்' என்பது
உண்டுகொல்? வாழி! தோழி! தெண்கடல்
வன்கைப் பரதவர் இட்ட செங்கோல்
கொடுமுடி அவ்வலை பரியப் போகிக்
கடுமுரண் எறிசுறா வழங்கும்
நெடுநீர்ச் சேர்ப்பன்தன் நெஞ்சத் தானே.

தெளிவுரை

தோழியே! நீ நெடுங்காலம் வாழ்க! நள்ளிரவுப்பொழுது வந்துவிட்டது; ஓசை அனைத்தும் குறைந்து அடங்கியது. கள் குடியர்களின் களிப்பு மயக்கம் அடங்கிவிட்டதால் ஊரும் உறங்கி விட்டது. இத்தகைய நேரத்தில் நாம் நம் தலைவனை எண்ணி வருந்துகிறோம். தெளிந்த கடலிலே வலிமையான கைகளைக் கொண்ட நெய்தல்நில மக்கள் மீனைப் பிடிப்பதற்காக வலையை வீசுவர். நேரிய கோலையும் வளைந்த முடிகளையும் கொண்ட அழகிய வலை அறுபடுமாறு, அச்சம் தரும் வலிமையுடன் பிற உயிர்களைக் கொல்லவல்ல சுறாமீன் கிழித்துக்கொண்டு செல்லும். ஆங்கே, மிகவும் பழமையான தெய்வம் தங்குகின்ற ஊர் மன்றத்திலே உள்ள பருத்த அடியைக் கொண்ட பனையின் வளைந்த மடலில் கட்டிய கூட்டிலிருந்து தன் பெண்பறவை யோடு கூடியுறையும் அன்றில் வேட்கைக்குரல் எழுப்பும். அந்தக் குரலைக் கேட்ட பின்பாவது, நீண்ட நீர்த்துறையைக் கொண்ட தலைவனது உள்ளத்திலும், 'நல்ல நெற்றியைக் கொண்ட நம் காதலியைக் காமநோய் வருத்துவதால் உறங்காமல், உடல் மெலிந்து நம்மை நினைத்து வருந்திக்கொண்டிருப்பாளோ' என்ற எண்ணம் உண்டாகுமோ? ஆராய்ந்து சொல்க.

கருத்து

தோழியே! தலைவன் இன்னும் வரவில்லை; அவன் நம்மை நினைந்திலனோ?

விளக்கம்

"கடற்கரைக்கு அருகில் நெய்தல்நிலச் சிற்றூரிலுள்ள மக்களெல்லாம் துயின்ற இரவுப்போதில் தலைவி துயிலாது தனிமையில் வருந்தியிருக்கின்றாள். பிறிதோரிடத்தே தனித்திருக்கும் தலைவனின் உள்ளத்திலும் இத்தனிமைத் துயர் இருக்கும். அன்றிலின் வேட்கைக்குரல் அத்துயரைத் தூண்டுவிக்கும். அக்குரலைக் கேட்டு நானும் இப்போது வருந்தியிருக்கக் கூடுமெனத் தலைவன் கருதுவான்" எனத் தலைவி எண்ணுகின்றனள்.

சொற்பொருள்

1. அவிந்து - அடங்கி.
2. கலி - ஆரவாரம்; கெழு - மிக்க; பாக்கம் - நெய்தல் நிலச் சிற்றூர்; துயில் மடிந்தன்று - உறங்குகின்றது.
3. கடவுள் சேர்ந்த - தெய்வத்தன்மை பொருந்திய; பராரை - பருத்த அடி.
4. பெண்ணை - பனைமரம்; வாங்கு - வளைந்த; குடம்பை - கூடு.
5. துணைபுணர் - துணையோடு உறையும்; அன்றில் - அன்றில் பறவை; உயவுக்குரல் - வேட்கைக்குரல், விருப்பமான குரல்.
6. துயர் அட - துன்பம் தாக்குதலால்; சாஅய் - வருந்தி.
7. நம் வயின் - நம்மை எண்ணி; நன்னுதல் - நல்ல நெற்றியைக் கொண்ட தலைவி.
8. உண்டுகொல் - இருக்குமோ?; தெண்கடல் - தெளிந்த கடல்.
9. வன்கை - வலிமையான கை; செங்கோல் - நேரிய கோல்.
10. கொடுமுடி - வளைந்த முடிச்சு; பரிய - கிழிய, அறுத்துக்கொண்டு.
11. கடுமுரண் - மிக்க வலிமை; எறிசுறா - பிற உயிர்களை அடித்துக் கொல்லும் சுறாமீன்.
12. நெடுநீர் - கடல்; சேர்ப்பன் - நெய்தல்நிலத் தலைவன்.

தலைவி கூற்று

குறுந்தொகை 310 **பெருங்கண்ணனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை முனிந்து கிழத்தி தோழிக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

வரைவுக்கான பொருள் தேடத் தலைவன் பிரிந்திருந்த காலத்தில், ஆற்றியிருக்குமாறு தலைவியைத் தோழி வற்புறுத்தினாள். தலைவி அதைக் கேட்டுச் சினந்து கடிந்து கூறியது.

புள்ளும் புலம்பின; பூவும் கூம்பின;
கானலும் புலம்புநனி உடைத்தே; வானமும்,
நம்மே போலும் மம்மர்த்து ஆகி,
எல்லை கழியப் புல்லென் றன்றே;
இன்னும் உளெனே தோழி! இந்நிலை
தண்ணிய கமழும் ஞாழல்
தண்ணம் துறைவற்கு உரைக்குநர்ப் பெறினே.

தெளிவுரை

தோழியே! பறவைகள் கூட்டினை அடைய ஒலித்தன; பூக்களும் குவிந்தன; கடற்கரைச்சோலையும் மிகவும் தனிமையைக் கொண்டதாயிற்று. வானமும் நம்மைப் போன்று மயக்கமுள்ளதாகிப் பகல் நீங்கப் பொலிவழிந்து காணப்படுகிறது. இந்த மாலைப்பொழுதில் நான் மிகவும் துயரமடைந்துள்ளேன். இந்நிலைமையை, தண்ணிதாய் மணங்கமழும் ஞாழல் மரங்கள் உள்ள குளிர்ச்சி பொருந்திய கடற்றுறையைக் கொண்ட தலைவனிடம் சென்று சொல்லக்கூடியவர்களைப் பெற்றால், இனியும் உயிருடன் இருப்பேன். (தன்னைத் தோழி வற்புறுத்துவதை விடுத்து, தலைவனிடம் தூது அனுப்ப வேண்டும் என்பது தலைவியின் குறிப்பு.)

கருத்து

தோழியே! என் துன்பத்தைத் தலைவனிடம் சென்று சொல்பவர் எவரேனும் வாய்த்தால்தான் நான் உயிர் வாழ்வேன்.

விளக்கம்

பிரிந்தாரை வருத்தும் மாலை வந்துவிட்டது. நான் படும் வேதனையை அறிவார் யார்? குளிர்ச்சி பொருந்திய கடல் துறையைக் கொண்ட தலைவனுக்கு என் நிலையை எடுத்துரைப் பாரைக் காணேன். அவரிடம் சென்று இந்நிலையை எடுத் துரைப்பார் உளராயின் நான் உயிர் வாழ்வேன்; இன்றேல் உயிர் வாழ இயலாது.

குறிப்பு

தோழி, தலைவனிடம் தூது அனுப்ப வேண்டும் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. புள் - பறவைகள்; புலம்பின - ஒலித்தன; கூம்பின - குவிந்தன.
2. கானல் - கடற்கரைச்சோலை; புலம்பு - தனிமை; நனி - மிகவும்.
3. மம்மர் - மயக்கம்.
4. எல் - சூரியன்; எல்லை - பகற்பொழுது.
5. இந்நிலை - என் தனிமை நிலையை.
6. கமழும் - மணக்கும்; ஞாழல் - ஞாழல் மலர்.
7. உரைக்குநர்ப் பெறின் - சொல்லுவார் வாய்க்கப்பெற்றால்.

தலைவி கூற்று

நற்றிணை 364 **கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகள் பிரிவிடை மெலிந்தது.

கூற்று விளக்கம்

தலைவியை வரைவிடை வைத்துப் பிரிந்து சென்ற தலைவன், குறித்த பருவம் கழிந்தும் வாராதவனானான். அதனால் தலைவி மிகவும் வருந்தித் தோழியை நோக்கிக் கூறியது.

சொல்லிய பருவம் கழிந்தன்று, எல்லையும்
மயங்குஇருள் நடுநாள் மங்குலோடு ஒன்றி,
ஆர்கலி வானம் நீர்பொதிந்து இயங்க,

பனியின், வாடையொடு முனிவுவந்து இறுப்ப,
இன்ன சில்நாள் கழியின், பல்நாள்
வாழலேன் வாழி தோழி! ஊழின்
உருமிசை அறியாச் சிறுசெந் நாவின்
ஈர்மணி இன்குரல் ஊர்நனி இயம்ப,
பல்ஆ தந்த கல்லாக் கோவலர்
கொன்றைஅம் தீம்குழல் மன்றுதோறு இயம்ப,
உயிர்செலத் துனைதரும் மாலை,
செயிர்தீர் மாரியொடு ஒருங்குதலை வரினே.

தெளிவுரை

தோழியே! நீ வாழ்க! தலைவர் வருவதாய்ச் சொல்லிச் சென்ற பருவம் வந்து போய்விட்டது. பகல் நேரம் கழிந்து, இருள் தோன்றிய நடுஇரவில், இடியுடன் கூடிய மழை பொழிகிறது. பனியுடன் கூடிய வாடைக்காற்று சினத்துடன் வாட்டுகிறது.

பசுக்கூட்டங்களைப் பாதுகாத்தலைத் தவிர வேறு தொழில் அறியாத இடையர்கள், சிறிய செவ்விய நாவினைக் கொண்ட மணியின் இனிய ஓசை ஒலிக்கும்வண்ணம் பல்வேறு பசுக் கூட்டங்களை ஊருக்குள் ஓட்டி வருகின்றனர். அவர்கள் ஊதிய புல்லாங்குழலின் ஒலியும் மன்றத்தில் ஒலிக்கிறது. உயிர் நீங்குமாறு விரைந்து வருகின்ற மாலைப்பொழுது மழையுடன் ஒன்றுகூடி வருகின்றது. இப்படிச் சில நாள்கள் கழியுமானால் நான் உயிர் வாழ்ந்திருக்கவே மாட்டேன்.

கருத்து

தோழியே! இனிச் சாவுதான் எனக்கு அமைதி தரும்.

விளக்கம்

காதலர் வந்து சேராமையால் கார்கால மாலைப்பொழுதும் மழையும் தலைவியை மிகவும் துன்புறுத்துகின்றன. வாடைக் காற்றுப் பனியோடும் கூடி வந்து வாட்டுகிறது. ஆநிரையை ஓட்டி வரும் ஆயர்கள் ஊதும் புல்லாங்குழலின் ஓசையும் வருத்தத்தை மிகுவிக்கிறது. இவ்வாறு கார்ப்பருவத்திற்குரிய தன்மைகள் அனைத்தும் சேர்ந்து தலைவியைத் தாக்கினால் அவள் உயிர் வாழ்ந்திருப்பது எங்ஙனம்?

சொற்பொருள்

1. சொல்லிய - காதலர் திரும்பி வருவதாய்ச் சொல்லிச் சென்ற; கழிந்தன்று - நீங்கிவிட்டது; எல்லை - பகற்பொழுது.
2. மங்குல் - இருள்.
3. ஆர்கலி - இடி முழக்கம்.
4. வாடை - வாடைக்காற்று; முனிவு - சினம்; இறுப்ப - வருத்த.
5. இன்ன - இவ்வாறாய்.
6. வாழலேன் - உயிர் வாழ மாட்டேன்.
7. உரும் இசை - இடி முழக்கம்; செந்நா - செவ்விய மணியின் நாக்கு.
8. ஈர்மணி - மெல்லிய மணி; ஊர் நனி - ஊருக்குப் பக்கத்தே.
9. பல்ஆ - பல வகையான தன்மையினைக் கொண்ட பசுக்கூட்டம்; கல்லாக் கோவலர் - பசுக்களைக் காக்கின்ற தொழிலைத் தவிர வேறு தொழில் அறியா இடையர்.
10. மன்று - ஊர்ப் பொது இடம்; இயம்ப - ஒலிக்க.
11. துனைதரும் - வருத்தம் தரும்.
12. செயிர் - குற்றம்; ஒருங்குதலை - ஒன்றாய்க் கூடி.

தலைவி கூற்று

அகநானூறு 101 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட கிழத்தி, தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

திருமணத்தைக் காரணம் காட்டித் தன்னை விட்டுத் தலைவன் பிரிந்ததைப் பொறுத்துக்கொள்ள இயலாமையைத் தலைவி தோழியிடம் சொல்லியது.

அம்ம வாழி, தோழி! 'இம்மை
நன்றுசெய் மருங்கில் தீதுஇல்' என்னும்
தொன்றுபடு பழமொழி இன்றுபொய்த் தன்றுகொல்?
தகர்மருப்பு ஏய்ப்பச் சுற்றுபு, சுரிந்த
சுவல்மாய் பித்தைச் செங்கண், மழவர்
வாய்ப்பகை கடியும் மண்ணொடு கடுந்திறல்
தீப்படு சிறுகோல் வில்லொடு பற்றி,

நுரைதெரி மத்தம் கொளீஇ, நிரைப்புறத்து
அடிபுதை தொடுதோல் பறைய ஏகி,
கடிபுலம் கவர்ந்த கன்றுடைக் கொள்ளையர்,
இனம்தலை பெயர்க்கும் நனந்தலைப் பெருங்காட்டு,
அகல்இரு விசும்பிற்கு ஓடம் போலப்
பகலிடை நின்ற பல்கதிர் ஞாயிற்று
உருப்புஅவிர்பு ஊரிய சுழன்று வருகோடை,
புன்கால் முருங்கை ஊழ்கழி பன்மலர்
தண்கார் ஆலியில், தாவன உதிரும்
பனிபடு பல்மலை இறந்தோர்க்கு
முனிதகு பண்புயாம் செய்தன்றோ இலமே!

தெளிவுரை

"தோழியே! தலைவன் நம்மை மறந்து சென்ற வழியின் அருமைப்பாட்டைக் கேள்!

"செம்மறியாட்டின் கொம்பைப் போன்ற சுருண்ட தலை முடியையும் சிவந்த கண்களையும் கொண்டவர், வீரர்கள். அவர்கள் தங்களின் இருமல் நோய்க்காகப் புற்றுமண்ணை மருந்தாய் வாயில் இட்டுக் கொள்வர். வீரமிக்க அவர்கள் அம்பினையும் வில்லையும் ஏந்தியவராயும் வெண்ணெய் கடைந்த மத்தினைக் கையில் கொண்டவராயும் மெல்ல நடந்து போய், ஆநிரைகளைக் கன்றுடன் கவர்ந்து வந்து, எல்லோர்க்கும் பங்கீடு செய்யும் அகன்ற காட்டின் வழியே தலைவர் சென்றார்.

"சூரிய வெப்பத்தால் புல்லிய அடிப்பகுதியைக் கொண்ட முருங்கை மரத்தின் பூக்கள், அச்சம் பொருந்திய ஆலங்கட்டி மழைத்துளி போல் உதிர்ந்து கிடக்கும் மலை வழியேயும் சென்றார், நம் தலைவர். அவர், தாம் சென்ற இடத்திலேயே தங்கிவிட்டாரே; அவர் நம்மை வெறுக்குமாறு நாம் அவருக்கு எந்தக் குறையையும் இழைக்கவில்லையே! அவ்வாறிருக்க வாராமல் இருந்து வருத்துவது ஏனோ?

"இதனால்தான், 'இம்மையில் நன்மை செய்வோர்க்குத் தீங்கு ஏற்படுவதில்லை' என்னும் பழமொழி இன்று நம் வாழ்வில் பொய்யானதோ! என நினைக்கத் தோன்றுகிறது" என்றாள், தலைவி.

கருத்து

நாம் எந்தக் குறையும் இழைக்காதபோது, அவர் நம்மை மறந்ததோடு, வருவதற்கும் காலங்கடத்துவது ஏன்?

விளக்கம்

“தோழியே! கேள்! மறவர், பகைவரின் காவல் மிகுந்த இடங்களில் கன்றுகளைக் கொண்ட ஆநிரைகளைக் கொள்ளை கொண்டு அவற்றினைப் பெருங்காட்டிடத்தே ஓட்டிச் செல்வர். அத்தகைய காட்டில் பகற்பொழுதில் ஞாயிற்றின் வெப்பம் விளங்கிப் பரவும். புல்லிய அடிமரத்தினைக் கொண்ட முருங்கை மரத்திலிருந்து முதிர்ந்து உதிர்ந்து விழும் பூக்கள் பலவும் குளிர்காலத்து ஆலங்கட்டிபோலப் பரந்து கிடக்கும். பனி மிகுந்த மலைகள் பலவற்றையும் கடந்து சென்ற தலைவர்க்கு நாம் வெறுக்கத்தக்க செயல் எதையும் செய்யவில்லை! அவ்வாறிருந்தும் அவர் வாராதிருப்பதற்குக் காரணம் என்ன? நன்மை செய்யுமிடத்தில் தீமை உண்டாகாது என்னும் பழமொழி இன்று பொய்த்ததோ? நமக்கு ஏன் இத்துயர் நேர்கிறது” என்றாள், தலைவி.

சொற்பொருள்

1. இம்மை - இப்பிறப்பு.
2. மருங்கில் - பக்கத்தில்.
3. தொன்றுபடு - பண்டைக்காலம் தொட்டு வழங்கி வரும்; பொய்த்தன்று - பொய்த்துவிட்டது.
4. தகர் - ஆட்டுக்கிடா; மருப்பு - கொம்பு; ஏய்ப்ப - போன்ற; சுற்றுபு - சுற்றி; சுரிந்த - சுருண்ட.
5. சுவல் - பிடரி; மாய் - மறைக்கும்; மழவர் - வீரர்.

4-5. செம்மறிக்கிடாயின் கொம்பையொப்பச் சுருண்டு கடை குழன்ற பிடரியை மறைக்கின்ற தலைமயிரையும், சிவந்த கண்களையும் கொண்ட மறவர்.

6. வாய்ப்பகை - வாயினின்று எழும் இருமலாகிய பகையை; கடியும் - தீர்க்கும் (மருந்தாய்); மண்ணொடு - புற்று மண்ணை வாயில் அடக்கிக்கொள்வர். (‘இருமல் தீர்க்கும் மருந்து’ - களவு செய்யுங்கால் இருமலால் புறத்தார்க்குத் தாம் தெரியாதிருக்கும்பொருட்டுப் பயன்படுத்துவது); கடுந்திறல் - மிக்க வலிமை.

7. தீப்படு சிறுகோல் - நெருப்புமிழும் சிறிய அம்பு.
8. நுரைதெரி மத்தம் - தயிர் கடையும் மத்து; கொளீஇ - கவர்ந்து கொண்டு; நிரைப்புறத்து - ஆநிரைகள் உள்ள இடத்தில்.
9. அடிபுதை - காலடிகளை மறைக்கும்; தொடுதோல் - செருப்பு; பறைய - தேய; ஏகி - சென்று.
10. கடிபுலம் - காவல் மிகுந்த இடம்; கன்றுடைக் கொள்ளையர் - கன்றினைக் கொண்ட ஆநிரைகளைக் கவர்ந்து செல்பவர்.
11. நனந்தலை - அகன்ற இடம்.
12. அகல்இரு விசும்பு - அகன்ற பெரிய வானம் (வானக் கடலினைக் கடக்கும்).
13. பகலிடை - பகல் நேரத்தில்.
14. உருப்பு அவிர்பு ஊரிய - வெப்பம் விளங்கிப் பரக்க; வருகோடை - வரும் கோடைக்காற்றினால்.
15. ஊழ்கழி - முற்றி உதிர்ந்த.
16. தண்கார் - குளிர்ச்சி பொருந்திய கார் காலம்; ஆலி - ஆலங்கட்டி; தாவன உதிரும் - பரந்து உதிர்ந்து கிடக்கும்.
18. முனிதகு - வெறுக்கத்தக்க; பண்பு - செயல் (எதுவும்); செய்தன்றோ இலமே - செய்தது இல்லையே!

தலைவி கூற்று

குறுந்தொகை 266 **நக்கீரர்**

திணை : பாலை

கூற்று

வரையாது பிரிந்த இடத்துத் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் வரையாது பிரிந்து சென்ற காலத்துத் தலைவியின் ஏக்கம் பெரியதாயிற்று. அப்போது அத்தலைவி தோழியிடம் கூறியது.

நமக்குஒன்று உரையார் ஆயினும், தமக்குஒன்று
இன்னா இரவின் இன்துணை ஆகிய
படப்பை வேங்கைக்கு மறந்தனர் கொல்லோ!
மறப்பரும் பணைத்தோள் மரீஇத்
துறத்தல் வல்லியோர் புள்வாய்த் தூதே.

தெளிவுரை

தோழியே! மறத்தற்கரிய நம் பருத்த தோள்களைக் கூடிப் பின்பு நம்மைப் பிரியுமளவுக்கு வன்கண்மை கொண்டவரா யினார், நம் தலைவர். அவர் திரும்ப வரும் செய்தியைப் பறவை யிடம் தூதாய் நமக்குச் சொல்லியனுப்ப மறந்துவிட்டதாகவே இருக்கட்டும். இரவுக்குறியில் இனிய துணையாய் இருந்த வேங்கை மரத்துக்காவது அனுப்பியிருக்க வேண்டாவா? அதையும் மறந்துவிட்டாரோ?

கருத்து

தலைவர் நம்மை மறந்தாலும் மறக்கட்டும்; இரவில் அவர்க்கு இனிய துணையாய் இருந்த வேங்கை மரத்தை மறக்கலாமா?

விளக்கம்

“இரவுக்குறியில் தலைவன் தலைவியை வேங்கை மரத்தடியில் கூடிக் களித்தான். அவனுக்கு அப்போது அம்மரம் மிகவும் பாதுகாப்பான இடமாய் இருந்தது. அதனை அவன் மறக்க லாமா?” என்று சொல்வதுபோல, தலைவன் வருகைக்கான தகவல் எதுவுமில்லையே எனத் தலைவி ஏங்குகிறாள்.

சொற்பொருள்

1. உரையார் - சொல்லவில்லை.
2. இன்னா இரவின் - துன்பத்தைத் தரும் இரவுக்குறியில்; இன்துணை யாகிய - என்னைக் காண்பதற்கு நல்ல துணையாய் இருந்த.
3. படப்பை - தோட்டம்; வேங்கைக்கு - வேங்கை மரத்திற்கு.
4. மறப்பரும் - மறப்பதற்கரிய; பணைத்தோள் - பெரிய தோள்; மரீஇ - பொருந்தி.
5. துறத்தல் வல்லியோர் - நம்மைப் பிரிந்து செல்லத் துணிந்த வல்லமை உள்ளவர்; புள் வாய்த் தூது - பறவையின் வாயிலாய்த் தூது அனுப்ப (மறந்தனரோ).

தோழி கூற்று

நற்றிணை 7 **நல்வெள்ளியார்**

திணை : பாலை

கூற்று

பட்டபின்றை வரையாது கிழவோன், நெட்டிடைக் கழிந்து பொருள்வயிற் பிரிய ஆற்றாளாய தலைமகளுக்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

அறத்தொடு நின்ற பின்பு திருமணம் செய்துகொள்ளாமல் தலைவன் பொருள் தேடி நெடுந்தூரம் போயினன். அப்பிரிவை ஆற்ற இயலாத தலைவியிடம் தோழி, "கார் காலம் தொடங்கிவிட்டது. தலைவர் இனி வந்து உன்னை மணம் புரிவார்; வருந்தாதே" எனத் தேற்றிச் சொல்லியது.

சூருடை நனந்தலைச் சுனைநீர் மல்கப்
பெருவரை அடுக்கத்து அருவி ஆர்ப்பக்
கல்அலைத்து இழிதரும் கடுவரல் கான்யாற்றுக்
கழைமாய் நீத்தம் காடுஅலை ஆர்ப்பத்
தழங்குகுரல் ஏறொடு முழங்கி வானம்
இன்னே பெய்ய மின்னுமால் தோழி!
வெண்ணெல் அருந்திய வரிநுதல் யானை
தண்நறுஞ் சிலம்பில் துஞ்சும்
சிறியிலைச் சந்தின வாடுபெருங் காட்டே.

தெளிவுரை

தோழியே! மூங்கிலின் வெண்ணிற நெல்லைத் தின்ற, வரி பொருந்திய நெற்றியைக் கொண்ட யானை குளிர்ச்சி பொருந்திய மணங்கமழும் மலைப்பக்கத்தில் தூங்கும். சிறிய இலைகளைக் கொண்ட சந்தன மரங்கள் வாடிப்போயிருக்கும் பெருங்காடு. அக்காட்டிடத்தே கார்கால மழை பொழியும் போது இடமகன்ற சுனையில் நீர் நிரம்பும்; பெரிய மூங்கில் களைக் கொண்ட மலையடுக்கத்தில் அருவிகள் ஆரவாரிக்கும்; கற்களைப் புரட்டிக் கொண்டு ஓடிவரும் வேகம் மிக்க காட்டாற்றின் கரையிலுள்ள மூங்கில்களும் முழுகும்; அவ்வெள் ளத்தின் அலைகள் காடுகளிலெல்லாம் மோதி ஆரவாரிக்கும்.

அத்தகைய நிலை ஏற்பட வானமும் இப்போதே இடியோடு முழக்கமிட்டு மழை பெய்யத் தொடங்கியதுபோல மின்னு கின்றது. அதனைக் காண்!

கருத்து

கார் காலம் தொடங்கியதாதலின், தலைவரும் சொல் பிழையாதவராய் விரைவில் உன்னை வந்து சேர்வார்; அதனால் உன் துன்பமும் தீரும். நீ அதுவரை ஆற்றியிரு!

இறைச்சி

(1) வாடுகின்ற பெருங்காட்டிலே அக்காடு தழைக்கும்படி மழை பெய்யத் தொடங்கும் என்றது, தலைவன் தன் சொல் தவறாதவனாய், இப்போதே வந்து வருந்தியுள்ள தலைவிக்கு இன்பம் தருவான் என்பதாம்.

(2) நெல்லருந்திய யானை கவலை கெடத் தூங்கும் என்றது, காதலனுடன் இன்பம் நுகர்ந்து தலைவியும் கவலையின்றித் தூங்கலாம் என்பதாம்.

சொற்பொருள்

1. சூர் - அச்சம்; நனந்தலை - பரந்த இடம்; மல்குதல் - நிறைதல்.
2. பெருவரை - பெரிய மலை; ஆர்ப்ப - ஒலிக்க.
3. அலைத்து - புரட்டிக்கொண்டு; இழிதரும் - கீழிறங்கும்; கடுவரல் - வேகமாய் ஓடிவரும்; கான்யாறு - காட்டாறு.
4. கழை - (கரையிலுள்ள) மூங்கிலை; மாய் - முழுகச்செய்யும்; நீத்தம் - வெள்ளம்; காடு அலை - காடுகளில் மோதி; ஆர்ப்ப - ஆரவாரிக்க.
5. தழங்கு குரல் - முழக்கமிடும்; ஏறு - இடி.
6. இன்னே - இப்பொழுதே; மின்னும் - மின்னுகின்றது.
7. வரிநுதல் - வரி பொருந்திய நெற்றி.
8. சிலம்பு - மலை; துஞ்சும் - தூங்கும்.
9. சிறியிலை - சிறிய இலைகள்; சந்தினம் - சந்தன மரக்கூட்டம்; வாடு - வாடியிருக்கும்.

தோழி கூற்று

நற்றிணை 115 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை ஆற்றாளாய தலைமகளைத் தோழி பருவம் காட்டி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

வரைவுக்கான பொருளீட்டி வரத் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் தான் குறித்த பருவம் வந்த நிலையிலும் திரும்பவில்லை. அதனால் வருந்திய தலைவியைத் தோழி தேற்றி அவனது அன்பினை எடுத்துக் கூறியது.

மலர்ந்த பொய்கைப் பூக்குற்று அழுங்க
அயர்ந்த ஆயம் கண்இனிது படீஇயர்,
அன்னையும் சிறிதுதணிந்து உயிரினள்; 'இன்நீர்த்
தடங்கடல் வாயில் உண்டுசில் நீர்என,
மயில்அடி இலைய மாக்குரல் நொச்சி
மனைநடு மௌவலொடு ஊழ்முகை அவிழ,
கார்எதிர்ந் தன்றால், காலை; காதலர்
தவச்சேய் நாட்டர் ஆயினும், மிகப்பேர்
அன்பினர் வாழி, தோழி! நன்புகழ்
உலப்புஇன்று பெறினும் தவிரலர்;
கேட்டிசின் அல்லனோ, விசும்பின் தகவே?

தெளிவுரை

தலைவியே! பொய்கையில் மலர்ந்திருக்கும் பூவினைக் கொய்த தளர்ச்சியால் சோர்வுற்று ஆயமகளிர் இனிதே துயின்றனர். அன்னையும் நம்மீதுள்ள சினம் சிறிது தணிந்து பெருமூச்சு விட்டனள். இனிய பரந்த கடலின் பேரளவு நீரை மேகம் கடலில் எஞ்சியிருக்கும் நீர் சிறிது என்று சொல்லும் அளவுக்கு முகந்து கொண்டது. மயிலின் கால் அடியினை ஒத்த இலைகளையும், கதிராய் அமைந்த பூங்கொத்துகளையும் கொண்ட நொச்சி, வீட்டுக்கு வேலியாய் உள்ளது. வீட்டு முற்றத்தில் வளர்ந்த

முல்லைக்கொடி அந்நொச்சிவேலியில் பரவி, அவ்விரண்டும் ஒருங்கே அரும்புகள் முதிர்ந்து மலருமாறு இந்நாள் காலையில் கார் காலம் எதிர்ப்பட்டுள்ளது (தோன்றியுள்ளது). நம் காதலன் மிகவும் தொலைவிலுள்ள நாட்டிலே உள்ளானாயினும் நம்மீது பேரன்பு கொண்டவன். வினை முடிந்த பின் தலைவன் அங்கே அளவில்லாத புகழ் தனக்கு வருவதாயினும் தங்க மாட்டான். கார்ப் பருவம் தொடங்கிவிட்டது என்பதற்கு அறிகுறியாய் மேக முழக்கொலியை நானும் கேட்டேன். தலைவன் வந்துவிடுவான்; வருந்தாதே.

கருத்து

கார்ப் பருவம் வந்துவிட்டது; ஆதலால், காதலனும் வந்து சேர்வான்; வருந்தாதே!

விளக்கம்

கார்ப் பருவம் தொடங்கிற்று. தலைவன் இன்னும் வரவில்லையே எனத் தலைவி வருந்தினாள். தலைவியை நோக்கி, 'தலைவன் மிகவும் தொலைவில் உள்ளான். ஆயினும், அவன் நம்மீது பேரன்பு கொண்டவன்; வினை முற்றியதும் அங்குத் தங்குதல் பெரும் புகழ் தரும் என்னும் நிலை இருந்தாலும் அதனைத் துறந்து விரைந்து வருவான்' என்று வற்புறுத்திக் கூறித் தோழி தேற்றினாள்.

இறைச்சி

வீட்டின் நொச்சி வேலியில், மனைமுற்றத்தில் முளைத்த மல்லிகை படர்ந்து இரண்டும் ஒருசேர மலரும் என்னும் தொடர், தலைவியைத் தலைவன் விரைந்து வந்து தழுவி இருவரும் இன்பச் சிறப்புடன் வாழ்வர் என்னும் கருத்தை வெளிப்படுத்துகிறது.

சொற்பொருள்

1. மலர்ந்த - அகன்ற; குற்று - கொய்து; அழுங்குதல் - வருந்துதல்.
2. அயர்வு - சோர்வு; படீஇயர் - உறங்கினர், மூடினர்.
3. உயிரினள் - பெருமூச்சு விட்டனள்.
4. தட - பெரிய, வளைந்த; வாயில் உண்டு - கடல்நீரை முகந்து; சில் நீர் - சிறிது நீர்.
5. மயில் அடி - மயிலின் கால் அடி (பாதம்); மாகுரல் - கரிய கதிர்.

6. மௌவல் - மல்லிகை; ஊழ் - தோன்றிய; முகை - அரும்பு; அவிழ - மலர.
7. கார் - கார்ப் பருவம்; எதிர்தல் - முன் தோன்றுதல்; காலை - பொழுது.
8. தவ - மிக; சேய்த்து - தொலைவானது.
10. உலப்பு - குறைவு; இன்று - இல்லாத.
11. கேட்டிசின் - கேட்டனன்; விசும்பின் தகவு - விசும்பில் எழும் ஒலி முழக்கம் (தகவு - குணம்).

தோழி கூற்று

நற்றிணை 197 — **நக்கீரர்**

திணை : பாலை

கூற்று

வரைவுநீட ஆற்றாளாகிய தலைமகளைத் தோழி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

களவுக்காலத்தில் வரைவு நடைபெறுவதற்கு முன் பொருளீட்டி வரப் பிரியும் தலைவன் விரைவில் வந்துவிடுவதாய்க் கூறிச் சென்றான்; அவன் உரிய காலத்தில் வரவில்லை. அதனால் பிரிவாற்றாது வருந்திய தலைவியை ஆற்றுவிக்கும் வகையில் தோழி கூறியது.

தோளே தொடிநெகிழ்ந் தனவே; நுதலே
பீர்இவர் மலரின் பசப்புஊர்ந் தன்றே;
கண்ணும் தண்பனி வைகின; அன்னோ!
தெளிந்தனம் மன்ற தேயர்என் உயிர்என
ஆழல் வாழி தோழி! நீநின்
தாழ்ந்துஒலி கதுப்பின் வீழ்ந்த காலொடு,
வண்டுபடு புதுமலர் உண்துறைத் தரீஇய,
பெருமட மகளிர் முன்கைச் சிறுகோல்
பொலந்தொடி போல மின்னி, கணங்கொள்
இன்இசை முரசின் இரங்கி, மன்னர்
எயில்ஊர் பல்தோல் போலச்
செல்மழை தவழும்அவர் நன்மலை நாட்டே.

தெளிவுரை

" 'என் தோள்கள் நெகிழ்ந்தன; நெற்றியில் பீர்க்க மலர் போலப் பசலை படர்ந்தது; கண்களும் நீர் சொரிகின்றன; அவர் நம்மை மறந்தாரென்பதைத் தெளிய உணர்ந்துகொண்டோம். என் உயிர் என் உடலை விட்டு நீங்கட்டும்' என்று கூறித் தலைவியே அழுது புலம்பாதே! இத்துன்பம் தீர்ந்து நீ நெடுங்காலம் வாழ்வாய். தாழ்ந்து தழைத்த உன் கூந்தல்போல வானில் கருமேகம் கால்விட்டிருக்கிறது; வண்டுகள் மொய்க்கும் புதிய மலர்களை நீர்த்துறையிலிருந்து பறித்துவரும் இளமகளிர் முன்கையில் அணிந்துள்ள வேலைப்பாடமைந்த பொன் வளையல்கள்போல மின்னல்கள் மின்னுகின்றன. கூட்டமாய்க் கூடி ஒலி எழுப்புகின்ற முரசங்களின் முழக்கம்போல இடி இடிக்கிறது. மன்னர்களுடைய அரணாகிய மதில்மேல் வீரர்கள் ஏந்திச் செல்லும் கேடயம்போலத் தலைவனுடைய மலை நாட்டில் மேகங்கள் தவழ்ந்து செல்லும். அம்மேகத்தைக் கண்டதும் தலைவனுக்கு உன் கரிய கூந்தல் நினைவுக்கு வரும். அவன் உடனே திரும்பி வந்து உன்னைச் சேர்வான். ஆதலின், பொறுத்திரு."

கருத்து

தலைவியே! காரும் தொடங்கிற்று; தலைவனும் சொல் பிழையாது மீள்வான்; ஆதலின், பொறுத்திரு.

விளக்கம்

தோள்கள் மெலிந்து, நுதல் பசந்து, கண்கள் அழுது, இனி நாம் இறப்பது உறுதி என்றெண்ணி வருந்தியுள்ள தலைவியிடம் தோழி, "தலைவியே அழுகையை விடு. அதோ பார்! விண் முதல் நிலம்வரை மேகம் கரியதாய் விளங்குகின்றது. மகளிரின் பொன்வளையல்போல் மின்னல்கள் மின்னுகின்றன. முரசுகள் முழங்குதல்போல் இடிகள் இடிக்கின்றன. வீரர்கள் கேடயங் களுடன் செல்வதுபோல் மலைகளில் மேகம் குவியல் குவிய லாய்த் தவழ்ந்து செல்கிறது. இவற்றைக் கண்டதும் தலைவன் தான் குறித்த பருவம் வந்ததை எண்ணி, விரைந்து வந்து வரைந்துகொள்வான்" எனத் தோழி தலைவியை வற்புறுத்தி ஆற்றுவிக்கிறாள்.

உவமை

மதில்மேல் காவலர் கேடயங்களுடன் அசைதல், மலைமீது மேகம் தவழ்தலுக்கு உவமை.

சொற்பொருள்

1. தொடி - வளையல்.
2. பீர் இவர் மலர் - பீர்க்கங்கொடியின் மலர்; பசப்பு - பசலை.
3. தண்பனி - தண்ணிய நீர்த்துளிகள்; வைகின - தங்கின.
4. தெளிந்தனம் மன்ற - உறுதியாய் அறிந்தேன்; என் உயிர் தேயர் - என் உயிர் இறந்தொழிதல் உறுதி.
5. ஆழல் - அழாதிரு.
6. கதுப்பின் - கூந்தல் போல; வீழ்ந்த கால் - கருமேகம் கால் விட்டிருக்கிறது.
7. தரீஇய - பறித்து வரும்.
8. சிறுகோல் - சிறிய திரண்ட.
9. பொலந்தொடி - பொன் வளையல்; கணம் கொள் - தொகுதியாய் உள்ள.
10. இரங்கி - ஒலித்து.
11. எயில் - அரண், கோட்டை; பல்தோல் - கேடயம்.
12. செல்மழை - மேகம்.

தோழி கூற்று

நற்றிணை 328 **தொல்கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி வரைவிடை ஆற்றாளாகிய தலைமகளை வற்புறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்வதாய் உறுதி கூறித் தலைவன் திருமணத்திற்காகப் பொருள் தேடி வரப் பிரிந்து போயினான். அவன் பிரிவால் தலைவி நாளுக்குநாள் சோர்ந்து, தளர்ந்து மெலிகின்றாள். அவள் துயரம் கண்டு பொறுக்கமாட்டாத தோழி அவளைத் தேற்றும்வகையில், தலைவன் உரிய காலத்தில் வந்து சேருவான் எனக் கூறியது.

கிழங்குகீழ் வீழ்ந்து, தேன்மேல் தூங்கிச்
சிற்சில வித்திப் பற்பல விளைந்து,
தினைகிளி கடியும் பெருங்கல் நாடன்,
பிறப்பு ஓரன்மை அறிந்தனம்; அதனால்,
அதுஇனி வாழி, தோழி! ஒருநாள்,
சிறுபல் கருவித்து ஆகி, வலன்ஏர்பு,
பெரும்பெயல் தலைக, புனனே! இனியே,
எண்பிழி நெய்யொடு வெண்கிழி வேண்டாது
சாந்து தலைக்கொண்ட ஓங்குபெருஞ் சாரல்
விலங்குமலை அடுக்கத் தானும்,
கலம்பெறு விறலி ஆடும்இவ் ஊரே.

தெளிவுரை

"தலைவியே! கிழங்குகள் மண்ணில் கீழே இறங்கியுள்ளன; தேனடைகள் மேலே மரக்கிளைகளில் தொங்குகின்றன. சிலவாக விதைக்கப்பட்ட தினைப்பயிர்கள் பலவாகக் கிளைத்து வளர்ந்து கதிர்கள் விளைந்து முற்றிவிட்டன. அத்தினையைக் கவரவரும் கிளிகளை ஓட்ட வேண்டிய நம் மலைநாட்டுத் தலைவன், பிறப்பால் மற்ற மக்களோடு ஒப்பவன் என்றாலும் வாய்மை ஒழுக்கத்தில் உயர்ந்தவன் என்பதை அறிந்துள்ளோம். (அவன், சொன்ன சொல் தவற மாட்டான்.) அவனது உயர்ந்த குணம் இனிதே வாழ்க! விரைவில் ஒரு நாளில் முகில்களின் சிறுசிறு தொகுதிகள் ஒன்றாய்க் கூடி விசும்பில் வலமாய் எழுந்து பெரிய மழையினைப் புனத்தில் பொழியும். (அக்கார் கால வரவுக்குள் தலைவன் வந்து சேர்வான்.)

சந்தன மரங்களை மிகுதியாய்க் கொண்டுள்ள உயர்ந்த பெரிய மலைச்சாரலில் குறுக்கிட்டு நிற்கும் மலையடுக்கத்திலுள்ளது, நம் ஊர். இவ்வூரில் வந்து, எள் நெய்யும், வெண்மையான ஆடையினையும் பெற விரும்பாமல், விறலியர் நன்கலன்களைப் பரிசிலாய்ப் பெற்று உன் திருமணத்தில் ஆடப்போவதை நீ விரைவில் காண்பாய்" என்று சொல்லித் தோழி தலைவியை ஆற்றியிருக்குமாறு கூறுகிறாள்.

கருத்து

தலைவன் குறித்துச் சென்ற கார்காலம் இன்னும் தொடங்கவில்லை. அவன் வாய்மையாளன்; சொன்ன சொல் தவறான்; உரிய நேரத்தில் வந்து சேர்வான். கவலையைக் கைவிடு.

விளக்கம்

கார் காலத்தில் தலைவன் திரும்பியதும் உடனே திருமணம் நடைபெறவிருக்கிறது. அங்கு, எள் நெய்க்கும் வெண்மையான ஆடைக்கும் ஆடல் புரியும் விறலியர் அரிய கலன்களைப் பரிசிலாய்ப் பெற்று ஆடவிருப்பதை நீ காண்பாய்.

உள்ளுறை

(1) கிழங்கு கீழிறங்கித் தேன் மேலே தொங்கியது என்றது, தலைவன் தலைவிபால் வைத்துள்ள அன்பு கீழாய் வேரூன்றி மேலே காணும் போதெல்லாம் தேனினும் இனிமை செய் வதாகும் என்பதாம்.

(2) சிலவாக விதைக்கப் பற்பலவாகப் பயன் விளைந்ததென்பது, ஒரே ஒரு நாள் இயற்கைப்புணர்ச்சியில் தலைவி இன்பம் நல்க, அதனைத் தலைவன் பெற்றான் ஆதலின், அதற்கு ஈடாய் அவன், பல்லாயிரம் நன்மையைத் தலைவிக்கு அளிக்கவிருக்கிறான் என்பதாம்.

சொற்பொருள்

1. கீழ் வீழ்ந்து - நிலத்திற்குக் கீழே இறங்கி; தேன் - தேன்கூடு; மேல் தூங்கி - மேலே மரக்கிளைகளில் தொங்கி.
2. வித்தி - விதைத்து.
3. கடியும் - விரட்டும்; பெருங்கல் - மலை.
4. பிறப்பு ஓரன்மை - பிறப்பால் மற்ற மக்களோடு ஒப்பவன் (ஆனால் குணத்தால் உயர்ந்தவன்).
5. அது - அந்த உயர்ந்த குணம்.
6. சிறுபல் கருவித்து ஆகி - சிறியனவாய்ப் பலவாய் உள்ள மேகக் கூட்டங்கள் ஒருசேரக் கூடி; வலன் ஏர்பு - வலப்பக்கமாய் எழுந்து.
7. பெரும்பெயல் தலைக - பெரிய மழையினைப் பொழிக.
8. எண்பிழி - எள் பிழி - எள்ளைப் பிழிந்தெடுத்த நெய்; வெண்கிழி - வெண்மையான ஆடை.

9. சாந்து - சந்தன மரம்; தலைக்கொண்ட - மிகுதியாய் உடைய; ஓங்கு பெருஞ்சாரல் : உயர்ந்த பெரிய மலைச்சாரல்.
10. விலங்கு மலை - குறுக்கிட்டுக் கிடக்கும் மலையடுக்கம்.
11. கலம் - கலன்கள்; பெறு - பரிசிலாய்ப் பெறும்; விறலி - ஆடுமகள்.

தோழி கூற்று

நற்றிணை 329 **மதுரை மருதங்கிழார் மகனார் சொகுத்தனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை மெலிந்த தலைமகளைத் தோழி பருவம் காட்டி வற்புறுத்தது.

கூற்று விளக்கம்

திருமணத்திற்காகப் பொருளீட்டச் சென்ற தலைவன் திரும்பி வாராத நிலையில் தலைவி கவலை கொண்டிருக்க, தலைவன் கூறிச் சென்ற பருவம் தொடங்கிவிட்டதால் திரும்பிவிடுவான் எனத் தோழி கூறித் தலைவியைத் தேற்றியது.

வரையா நயவினர் நிரையம் பேணார்,
கொன்றுஆற்றுத் துறந்த மாக்களின்அடுபிணன்
இடுமுடை மருங்கில், தொடும்இடம் பெறாஅது,
புனிற்றுநிரை கதித்த, பொறிய முதுபாறு
இறகுபுடைத்து இற்ற பறைப்புன் தூவி
செங்கணைச் செறித்த வன்கண் ஆடவர்
ஆடுகொள் நெஞ்சமொடு அதர்பார்த்து அல்கும்,
அத்தம் இறந்தனர் ஆயினும், நம்துறந்து
அல்கலர் வாழி தோழி! உதுக்காண்
இருவிசும்பு அதிர மின்னி,
கருவி மாமழை கடல்முகந் தனவே!

தெளிவுரை

தலைவியே! நீ வாழ்க! தலைவர் அளவிட முடியா அன்பு கொண்டவர்; நரகமெனும் தீய நெறியை மேற்கொள்ளாதவர். அவர் பிரிந்து செல்லும் வழியில், கொலை செய்யப்பட்டமை

யால் உயிர் பிரிந்த உடல்கள் நாள்கணக்கில் கிடந்து தீய நாற்றம் வீசும். அதனால், அவற்றிற்கு அருகில் சென்று, அவற்றைத் தோண்டி உண்ணுதற்குரிய இடத்தைக் காணவியலாத, அண்மையில் ஈன்ற, வரிசையாய்த் தோன்றும் புள்ளிகளைக் கொண்ட முதிய பருந்துகள் தம் சிறகை அடித்துக்கொள்ளும்; அவ்வாறு அவை அடித்துக்கொள்வதால் இறகு உதிர்ந்து பறக்கும். அப் புல்லிய இறகை வீர மறவர் தம் அம்பிலே கட்டி வைத்திருப்பர். அத்தகையோர் வெற்றி கொள்ளும் கருத்தோடு வழியையே பார்த்திருக்கும் காட்டுவழியிலே நம் காதலர் சென்றனராயினும் உன்மீது பெருவிருப்பம் கொண்டவர் என்பதால் சென்ற இடத்தில் நெடுநாள் தங்க மாட்டார். அங்கே வானத்தைப் பார்; ஒலியுண்டாகுமாறு இடித்து மின்னி மழைக்குரிய மேகத் தொகுதிகள் கடலிற்சென்று நீரை முகந்து வந்துள்ளன. இதுதானே அவர் வருவதாய் உரைத்த காலம். (ஆதலின், வந்து சேர்வார்; வருந்தாதே).

கருத்து

கார் காலம் தொடங்கியுள்ளது; மேகம் கடலிலே முகந்து, இடி இடித்து, மின்னி நமக்கு மழைவளம் தருதலே போலத் தலைவரும் தாம் தேடிய பெரும் பொருளோடு வந்து சேர்வார். வருந்தாதே!

விளக்கம்

"அண்மையில் ஈன்ற பருந்துகள் நெருங்க முடியாதவாறு அழுகிக் கிடக்கும் பிணங்கள் மலிந்த காட்டுவழியே காதலர் சென்றுள்ளார். உன்மீது அவர் மிகவும் அன்புள்ளவர். அவரை நினைந்து நீ வருத்தமுற்றிருப்பாய் என்பதை உணர்ந்து அவர் மிகவும் விரைந்து வருவார்; வருந்தாதே" என்று கூறித் தோழி, தலைவியை ஆற்றுவிக்கிறாள்.

சொற்பொருள்

1. வரையா - அளவிட இயலாத, எல்லையில்லாத; நயவினர் - அன்புள்ளவர்; நிரையம் - நரகம்; பேணார் - சார மாட்டார்.
2. ஆற்றுத் துறந்த - வழியில் இட்டுச் சென்ற; அடுபிணம் - கொலையுண்ட மனித உடல்.

3. இடுமுடை - முடை நாற்றம் மிக்க; மருங்கில் - உடற்பகுதியில்; தொடுமிடம் - குடைந்து உண்ணுதற்குரிய இடம்.
4. புனிறு - அண்மையில் ஈன்ற; நிரை கதித்த - வரிசையாய்த் தோன்றிய; பொறிய - புள்ளிகளைக் கொண்ட; முதுபாறு - முதிய பருந்து.
5. புடைத்து - உதறி, அடித்து; இற்ற - உதிர்த்த; பறைப்புன் தூவி - பறத்தற்குரிய புல்லிய சிறகு.
6. கணை - அம்பு; செறித்த - கட்டி வைத்திருக்கும்; வன்கண் ஆடவர் - வன்கண்மைமிக்க ஆறலை கள்வர்.
7. ஆடுகொள் - வெற்றி கொள்ளும்; அதர் - வழி; அல்கும் - தங்கியிருக்கும்.
8. அத்தம் - வழி; இறந்தனர் - கடந்து சென்ற தலைவன்; துறந்து - நீங்கி.
9. அல்கல் - தங்குதல், உதுக்காண் - அதோ பார்.
10. இரு விசும்பு - பெரிய வானம்.
11. கருவி - தொகுதி கொண்ட; மாமழை - கரிய மழைமேகங்கள்; கடல் முகந்தன - கடல்நீரை முகந்து குடித்தனவாய் (வருகின்றன).

தலைவி கூற்று

குறுந்தொகை 160 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டிப்ப ஆற்றாளாகிய தலைமகளை நோக்கித் தோழி, 'வரைவர்' என ஆற்றுவிப்புழித் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

வரைபொருளுக்காகப் பிரிந்த தலைவன், கார் கால வரவிற்கு முன் வருவதாய்க் கூறிச் சென்றான். வாடைக்காலத்திலும் அவன் வாராததால் தலைவி வருந்தியிருந்தாள். 'அவன் தவறாது வந்து மணப்பான்' என்று கூறித் தோழி தலைவியைத் தேற்ற முற்பட, அப்போது தலைவி சொல்லியது.

நெருப்பின் அன்ன செந்தலை அன்றில்
இறவின் அன்ன கொடுவாய்ப் பெடையொடு,
தடவின் ஓங்குசினைக் கட்சியில், பிரிந்தோர்
கையற நரலும் நள்ளென் யாமத்துப்
பெருந்தண் வாடையும் வாரார்;
இஃதோ தோழி!நம் காதலர் வரவே?

தெளிவுரை

ஆண் அன்றில் நெருப்பைப் போலத் தோன்றும் சிவந்த தலையினைக் கொண்டது. இறால்மீனைப் போன்று வளைந்த அலகினைக் கொண்ட தன் பெட்டையோடு தடா மரத்தின் உயர்ந்த கிளையில் தங்கியிருக்கும். அந்த அன்றில் தலைவனைப் பிரிந்தோர் செயலற்றுவிடுமாறு இருள் செறிந்த நடுயாமத்தில் ஒலிக்கின்றது; மிகுந்த குளிர்ச்சியோடு வாடையும் வீசுகிறது. இன்னும் தலைவன் வந்து சேரவில்லை. தோழியே! காதலன் நம்மை மணந்துகொள்ளும் விதம் இதுதானோ?

கருத்து

தோழியே! வாடைக்காலத்திலும் தலைவன் வந்து சேரவில்லை. அவன் நம்மை மணம் கொள்வது எப்போதோ?

விளக்கம்

அன்றில் பறவைகள் குளிர் காலத்தில், வாடைக்காற்று வீசும் நேரத்தில் தம் கூட்டில் இணைந்து இன்பம் பெற்று மெதுவாய் ஒலிக்கின்றன. இந்த அன்றில் பறவைகள் பெறும் இன்பத்தைத் தான் பெற முடியவில்லையே எனத் தலைவி ஏங்குகிறாள். 'இந்த வாடைக்காலத்தில் நான் தனித்து வருந்துமாறு என்னைத் தலைவன் கைவிட்டுச் சென்றுள்ளான். இதுதான் அவன் என்னை மணந்து கொள்ளும் விதமா?' எனத் தலைவி தோழியை நோக்கிக் கேட்கிறாள்.

குறிப்பு

அன்றில் பறவைகளுள் ஆணும் பெண்ணும் சேர்ந்தே வாழும்; ஒன்று பிரிந்தால் மற்றொன்று உயிர் வாழாது என்பது இலக்கிய மரபு.

அன்பன் என்றால் துன்புறும் காலத்தில் துணை நிற்க வேண்டும். இப்படித் துணை நிற்காதவன் அன்பனாவது எப்படி என்னும் குறிப்பும் தலைவியின் வினாவில் அடங்கியிருக்கிறது.

சொற்பொருள்

1. செந்தலை - சிவப்பான தலை; அன்றில் - ஒரு வகைப் பறவை.
2. இறவு - இறால் மீன்; கொடு - வளைந்த; பெடை - பெண் அன்றில்.
3. தடவு - தடா மரம்; ஓங்கு - உயர்ந்த; சினை - கிளை; கட்சி - கூடு.
4. கையற - செயலற்றுவிட; நரலும் - ஒலிக்கும்; நள் - செறிந்த இருள்; யாமம் - நடு இரவு.
5. வாடை - வாடைக்காற்று.
6. இஃதோ - காதலன் வரைந்துகொள்ள வரும் வகை இதுதானோ?

தலைவி கூற்று

நற்றிணை 238 **கந்தரத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகள் பருவம் கண்டு அழிந்தது.

கூற்று விளக்கம்

வரைவிடை வைத்துப் பிரிந்து சென்ற தலைவன், தான் மீண்டு வருவதாய்க் கூறிய காலத்தில் வாராமையால், அதுவரை ஆற்றியிருந்த தலைவி மேலும் ஆற்றியிருக்க இயலாது, நெஞ்சழிந்து புலம்புவது.

வறம்கொல வீந்த கானத்து, குறும்பூங்
கோதை மகளிர் குழூஉநிரை கடுப்ப,
வண்டுவாய் திறப்ப விண்ட பிடவம்,
மாலை அந்தி மால்அதர் நண்ணிய
பருவம் செய்த கருவி மாமழை!
'அவர்நிலை அறிமோ ஈங்கு'என வருதல்
சான்றோர்ப் புரைவதோ அன்றே; மான்றுஉடன்
உரவுரும் உரறும் நீரில் பரந்த
பாம்புபை மழுங்கல் அன்றியும், மாண்ட
கனியா நெஞ்சத் தானும்,
இனிய அல்ல,நின் இடிநவில் குரலே.

தெளிவுரை

கோடை வெப்பத்தால் உலர்ந்து பொலிவிழந்துள்ளது, காடு. அக்காட்டில், சிறிய அளவில் பூ அணிந்த கூந்தலைக் கொண்ட ஆயர் மகளிர் கூடும் கூட்டம்போல், வண்டுகள் கிளறுதலால் இதழ் விரிந்து மடவ மலர்கள் மலரும் அந்திமாலைப் பொழுது. அந்த அந்திமாலையில் நான் காமநோய் கொள்ளுமாறு கார்ப் பருவத்தைத் தோற்றுவித்த மேகக்கூட்டமே! 'உன்னைப் பிரிந்து சென்றுள்ள உன் காதலன் நிலையை நான் கூறக் கேள்' என்பது போல நீ இங்கு வருதல் சான்றோருக்கு உரிய செய்கை ஆகாது. நீ இடி முழக்கம் செய்து பெருமழை பெய்யச்செய்து பாம்புகளின் படம் பொலிவழியுமாறு செய்வாய். உன் இடிக்குரல் பாம்பின் படத்தை அடங்கச்செய்யுமே தவிர, மாட்சிமைப் பண்பினைக் கொண்ட தலைவனின் நெஞ்சத்தைக் கனியச் செய்வதாய் இல்லை. ஆகையால், உன் குரல் எனக்கு இனிமையைச் செய்யவில்லை.

கருத்து

'மேகமே! நீ என் நோயை மிகுதிப்படுத்துகின்றனையே அன்றி, அது குறைவதற்கான செயல் எதனையும் செய்யாமையால் நீ எனக்கு இனியை அல்லை' என்கிறாள், தலைவி.

குறிப்பு

இம்மழைமேகம் தலைவன் இருக்கும் இடத்தே சென்று முழங்குமாயின், அவன் தான் தலைவியிடம் திரும்புவதாய்க் கூறி வந்த பருவம் இது எனத் தேர்ந்து விரைந்து மீள்வான் என்பது தலைவியின் எண்ணம்.

சொற்பொருள்

1. வறம் - கோடை; கொல - தாக்கி வருத்த; வீந்த - உலர்ந்து கெட்ட.
2. குழூஉ நிரை - கூட்டத்தின் வரிசை; கடுப்ப - போல.
3. விண்டல் - அலர்தல், மலர்தல்; பிடவம் - பிடவ மலர்.
4. மால்அதர் - மயங்கும் அந்திப்பொழுது; நண்ணல் - நெருங்குதல்.
5. பருவம் - கார்ப்பருவம்; கருவி - தொகுதி; மழை - மேகம்.
6. அறிமோ - அறிவாயோ?
7. புரைவது - ஒத்தது; மான்று - மயங்கி.
8. உரவு உரும் - வலிய இடி; உரறும் - முழங்கும்; பரந்த - பரவிய.

9. மழுங்கல் - பொலிவழிதல்; மாண்ட - மாட்சிமைப் பண்பினைக் கொண்ட.
10. கனியா - நெகிழாத.
11. இடிநவில் - இடியால் பிறக்கும்; குரல் - முழக்கம்.

தலைவி கூற்று

நற்றிணை 369 **மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார்**

திணை : நெய்தல்

கூற்று

பட்டபின்றை வரையாது பொருள்வயிற்பிரிந்து ஆற்றாளாகிய தலைமகள் வன்புறை எதிரழிந்தது. (வன்புறை - வற்புறுத்திக் கூறுதல். வன்புறை எதிரழிதல் - வற்புறுத்தும் தோழி சொல்லை மறுத்துத் தலைவி உரைத்தல்.)

கூற்று விளக்கம்

தோழி அறத்தொடு நின்றபின் வரைதலை உடனே மேற்கொள்ளாது தலைவன் திருமணத்திற்கான பொருளை ஈட்டி வரப் பிரிந்து சென்றான். அப்போது பிரிவாற்றாது வருந்திய தலைவியை ஆற்றியிருக்குமாறு தோழி வற்புறுத்திக் கூறியபோது தலைவி தோழி சொல்லை மறுத்துக் கூறியது.

சுடர்சினம் தணிந்து குன்றம் சேர,
நிறைபறைக் குருகினம் விசும்புஉகந்து ஒழுக,
எல்லை பைபயக் கழிப்பி, முல்லை
அரும்புவாய் அவிழும் பெரும்புன் மாலை
இன்றும் வருவது ஆயின், நன்றும்
அறியேன் வாழி தோழி! அறியேன்.
ஞெமைஓங்கு உயர்வரை இமயத்து உச்சி,
வாஅன் இழிதரும் வயங்குவெள் அருவிக்
கங்கைஅம் பேர்யாற்றுக் கரைஇறந்து இழிதரும்
சிறைஅடு கடும்புனல் அன்ன,என்
நிறைஅடு காமம் நீந்து மாறே.

தெளிவுரை

"கதிரவன் சினந்தணிந்து மேற்கு மலையைச் சேர்ந்தான். நிறைந்த சிறகுகளைக் கொண்ட நாரைக்கூட்டம் வான் வழியில் நெருங்கிப் பறக்கின்றது. பகற்பொழுது மெல்லமெல்லக் கழிந்து மாலை வந்ததும் முல்லை அரும்புகள் மொட்டவிழ்ந்து மலர்ந்துள்ளன. கொடுமை நிறைந்த மாலைப்பொழுது நேற்று வந்து நம்மைத் துன்புறுத்தியதுபோல் இன்றும் வருமோ? அவ்வாறு வருமாயின் நான் எவ்வாறு உய்வேன்? மூங்கில்கள் வளர்ந்த உயர்ந்த இமயமலையின் உச்சியிலிருந்து, வானிலிருந்து வருவது போல இறங்கிவரும் வெண்மையான அருவிநீர், கங்கைக் கரையை உடைத்துச் செல்லும். அத்தகைய வெள்ளத்தைப் போல் என் நிறையை அழித்துப் பெருகும் காம வெள்ளத்தினை நீந்திக் கரையேறும் வழியறியேன். என் செய்வேன்?" என, ஆற்றியிருக்குமாறு கூறும் தோழி சொல்லை மறுத்துத் தன்னால் ஆற்றியிருக்க இயலவில்லை எனத் தலைவி கூறினாள்.

கருத்து

'தலைவன் தொடர்பால் என் வேட்கைநோய் மாலைப்பொழுது வருந்தோறும் பெருகி வருத்துகிறது. இன்றும் மாலைப்பொழுது வருமாயின், கங்கையாற்றில் வெள்ளம் பெருகிக் கரையுடைத்து ஓடுவதுபோல் காதல் வெள்ளம் பெருகி என் நிறையை அழித்துச் செல்லும். இதனைக் கடக்க வழியேதும் அறியேன்' என்று தலைவி, தன்னை ஆற்றியிருக்கச் சொல்லும் தோழி சொல்லை மறுத்துக் கூறுகிறாள்.

விளக்கம்

"மாலைப்பொழுது வருகின்றது. கதிரவன் வெயில் தணிந்து மேற்குமலையினைச் சேர்ந்துள்ளான். இரையுண்ட நாரைகள் வானை மறைத்தாற்போல் வரிசையாய்ப் பறந்து கூடுகள் நோக்கிச் செல்லுகின்றன. முல்லையரும்பும் இதழ் விரிந்து மலர்ந்துள்ளது. இவ்வாறு எங்கும் இன்பமே பெருகியிருக்கும் காலத்தில் நான் மட்டும் வருந்தியிருப்பதேன்" எனத் தலைவி வருத்த மிகுதியால் நொந்து கூறுகிறாள்.

சொற்பொருள்

1. சுடர் - ஞாயிறு; சினம் - வெப்பம்; குன்றம் - மேற்கு மலை.
2. நிறைபறை - அடர்ந்த சிறகுகளைக் கொண்ட; குருகு இனம் - நாரைக் கூட்டம்; விசும்பு - வானத்தில்; உகந்து ஒழுக - விருப்பத்தோடு பறக்க.
3. எல்லை - பகல்; பைபய - சிறிது சிறிதாய்; கழிப்பி - நீங்கி.
4. வாய் அவிழும் - மலரும்; பெரும்புன் மாலை - மிகுந்த துன்பத்தைத் தரும் மாலைப்பொழுது.
5. வருவது ஆயின் - வருமானால்.
6. அறியேன் - எவ்வாறு பொறுத்துக்கொள்வது என்பதை அறியேன்.
7. ஞெமை - மூங்கில்; உயர்வரை - வளர்ந்து மிக உயர்ந்திருக்கும்; இமயம் - இமயமலை.
8. இழிதரும் - வழிந்தோடும்.
9. கரைஇறந்து - கரையை உடைத்து; இழிதரும் - பெருகி ஓடும்.
10. சிறைஅடு - கட்டுப்பாட்டினை அழித்து; கடும்புனல் - விரைந்தோடும் வெள்ளம்.
11. நிறை அடு - நாணத்தை அழிக்கும்; காமம் - காம வெள்ளத்தை; நீந்தும் ஆறு - நீந்திக் கடக்கும் வழியை.

தலைவி கூற்று

நற்றிணை 31 **நக்கீரனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் வன்புறை எதிரழிந்தது.

கூற்று விளக்கம்

வரைவிடைப் பிரிந்த தலைவன் மீண்டு வந்து சிறைப்புறமாய் ஒதுங்கியிருப்பதை அறிந்த தோழி, வருந்தியிருந்த தலைவியிடம், 'தலைவன் வந்து சேர்வான்; நீ ஆற்றியிரு' என்றபோது, தலைவி தன் ஆற்றாமை மீதூர, தோழி கூறியதை ஏற்காது கூறியது.

மாஇரும் பரப்பகம் துணிய நோக்கிச்
சேஇறா எறிந்த சிறுவெண் காக்கை
பாய்இரும் பனிக்கழி துழைஇ, பைங்கால்

தான்வீழ் பெடைக்குப் பயிரிடூஉச் சுரக்கும்
சிறுவீ ஞாழல் துறையுமார் இனிதே;
பெரும்புலம் புற்ற நெஞ்சமொடு, பலநினைந்து,
யானும் இனையேன் ஆயினென், ஆனாது
வேறுபல் நாட்டில் கால்தர வந்த
பலஉறு பண்ணியம் இழிதரு நிலவுமணல்
நெடுஞ்சினைப் புன்னைக் கடுஞ்சூல் வெண்குருகு
உலவுத்திரை ஓதம் வெரூஉம்
உரவுநீர்ச் சேர்ப்பனொடு மணவா ஊங்கே.

தெளிவுரை

"தோழியே! காற்றுச் செலுத்துதலால் பல்வேறு நாடுகளிலிருந்து மரக்கலங்களில் வந்த வாணிகர்கள் கொண்டுவந்த பலதரப்பட்ட பண்டங்கள் கடற்கரையில் இறக்கப்பட்டிருக்கின்றன. நிலவைப் போல வெண்மணல் பரந்துள்ள இடங்களில் நெடிய புன்னை மரக்கிளையில் தங்கியிருக்கும் தலைச்சூல் உற்றுள்ள நாரை, கரையில் வந்து மோதுகின்ற அலைகளின் ஓசைக்கு அஞ்சியிருக்கும் நாட்டினையுடைய தலைவனைக் கூடி நான் இன்பம் பெறா முன்பு நன்றாயிருந்தேன். பெரிய கரிய கழிப்பரப்பில் சிறுவெண் காக்கை பாய்ந்து துழாவிப் பற்றிய சிவந்த இறால்மீனை, பசிய கால்களைக் கொண்ட தன் அன்புக்குரிய பெடையை அழைத்து அதற்குக் கொடுத்து இன்புறும். துறையில் சிறிய பூக்களைக் கொண்ட ஞாழல் பூத்து நிற்கிறது. இவையெல்லாம் நான் துறைவனோடு நட்புக்கொள்வதற்குமுன் இனியனவாய் இருந்தன. (ஆனால், இப்போதோ அவை அனைத்தும் துன்பம் தருவனவாயுள்ளன.) ஆதலால், மிகவும் வருத்தங்கொண்ட நெஞ்சொடு பலவற்றையும் நினைந்து அழிந்து நிற்கிறேன்" எனத் தலைவி தன்னைத் தேற்றும் தோழியிடம் கூறினாள்.

கருத்து

'இனிய காட்சிகளைக் காட்டித் தலைவியை வருந்தாதிருக்குமாறு தோழி கூறுகிறாள். தலைவியோ, 'தலைவன் முன்பு என்னைக் கூடியிருந்தபோது இனிதாயிருந்த அனைத்தும் அவன் பிரிந்திருக்கும் இப்போது வெறுப்பு

அளிப்பனவாயிருக்கின்றன. நான் எவ்வாறு ஆற்றியிருப்பது' எனத் தன்னைத் தேற்றும் தோழியிடம் கூறினாள்.

விளக்கம்

பல்வேறு நாடுகளிலிருந்தும் கலங்களில் வந்த பொருள்கள் கரையில் இறக்கப்படுகின்றன. புன்னை மரத்தில் இருக்கும் நாரை அலையோசைக்கு அஞ்சியிருக்கிறது. கழியில் பாய்ந்து பற்றிய இறால் மீனைச் சிறுவெண்காக்கை தன் அன்புப்பேடையை அழைத்து ஊட்டுகிறது. ஞாழல் மரங்களின் சிறிய பூக்கள் மலர்ந்து கரையை அழகு செய்கின்றன. இவையனைத்தும் தலைவன் என்னோடு சேர்ந்திருந்தபோது எனக்கு இனிமை அளிப்பனவாயிருந்தன. அவன் பிரிந்துள்ள இப்பொழுதோ அத்துணையும் வெறுப்பளிப்பனவாயிருக்கின்றன.

இறைச்சி

காக்கை தன் பேடையை அழைத்து, பற்றிக் கொண்டு வந்த இறால் மீனை அதற்கு இரையாய் ஊட்டும் துறையை உடைய வனாயிருந்தும், தலைவன் தன் அன்பான காதலியை அழைத்துக் கூடி மகிழ்பவனாய் இல்லாமல் இருக்கிறான்.

உள்ளுறை

புன்னையிலுள்ள குருகு கடலோசைக்கு அஞ்சுமென்றது, தலைவன்மேல் காதல்கொண்டு தனியே இல்லத்திலுள்ள தலைவி அன்னையின் கடுஞ்சொல் கேட்டு அஞ்சியுள்ளாள் என்பதாம்.

சொற்பொருள்

1. மா இரும் பரப்பகம் - பெரிய கரிய பரப்பில், உப்பங்கழியில்; துணிய - தெளிவாய்.
2. சேஇறா - சிவந்த இறால் மீன்; எறிந்த - பற்றிய.
3. பாய் - பரவிய; இரும் - கரிய; பனி - குளிர்ச்சி; துழைஇ - துழாவி.
4. தான்வீழ் - தான் விரும்பும்; பயிரிடூஉ - அழைத்து; சுரக்கும் - (வாயினுள்) இடும்.
5. வீ - மலர்; ஞாழல் - ஒரு வகை மரம்; ஆர் - மிகவும்.
6. புலம்பு - வருத்தம்.

7. இனையேன் - இத்தன்மையள்; ஆனாது - அமையாது.
8. கால் - காற்று.
9. பண்ணியம் - பண்டங்கள்; இழிதரு - இறக்கப்படுகின்ற.
10. கடுஞ்சூல் - முதல் கரு; குருகு - நாரை.
11. ஓதம் - ஓசை; வெரூஉம் - அஞ்சியிருக்கும்.
12. உரவு - பரந்த; மணவா ஊங்கே - சேராதிருந்த பொழுது.

தலைவி கூற்று

நற்றிணை 218 **கிடங்கில் காவிதிக் கீரங்கண்ணனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை மெலிந்த தலைமகள் வன்புறை எதிர் மொழிந்தது. (வன்புறை எதிர்தல் - தலைவி பொறுமையிழந்து தோழியோடு மாறுபட்டுக் கூறல்.)

கூற்று விளக்கம்

தலைவன் மணம் கொள்ளக் காலம் நீட்டித்ததால் மனத்தில் கவலை கொண்டிருந்த தலைவியை நோக்கித் தோழி, இன்னும் சில காலம் பொறுத்திருக்குமாறு கூறினாள். அதற்குத் தலைவி தன்னால் எவ்வாறு இயலும் எனத் தோழிக்கு எதிராய்க் கூறியது.

ஞாயிறு ஞான்று கதிர்மழுங் கின்றே;
எல்லியும், பூவீ கொடியின் புலம்புஅடைந் தன்றே;
வாவலும் வயின்தொறும் பறக்கும்; சேவலும்
நகைவாய்க் கொளீஇ நகுதொறும் விளிக்கும்;
மாயாக் காதலொடு அதர்ப்படத் தெளித்தோர்
கூறிய பருவம் கழிந்தன்று; பாரிய
பராரை வேம்பின் படுசினை இருந்த
குராஅல் கூகையும் இராஅ இசைக்கும்;
ஆனா நோய்அட வருந்தி, இன்னும்
தமியேன் கேட்குவென் கொல்லோ,
பரிஅரைப் பெண்ணை அன்றிற் குரலே?

தெளிவுரை

தோழியே! ஞாயிறு மேற்குத்திசையில் சாய்ந்து கதிரும் ஒளி மழுங்கியது. பூ உதிர்ந்த கொடிபோல இரவுப்பொழுதும் பொலிவிழந்து வந்து சேர்ந்தது. வௌவால்களும் இரை தேடி இடந்தோறும் பறந்துகொண்டிருக்கின்றன. ஆந்தைச்சேவலும் தன் பெட்டையை மிகவும் மகிழ்ச்சியோடு அழைக்கிறது. எனக்குப் பலவாறு ஆதரவு கூறிச் சென்ற காதலர் வரைந்து கொள்ள வருவதாய்க் கூறிய பருவமும் மெல்லமெல்லக் கழிகின்றது. பருத்த அடிமரத்தைக் கொண்ட வேப்ப மரத்தின் இலையுதிர்ந்த கிளையில் தங்கியுள்ள கபில நிறக் கூகையும் இரவு முழுவதும் குழறிக்கொண்டிருக்கிறது. இவற்றாலெல்லாம் என் காமநோய் மிகுதியாவதால் வருந்தியிருக்கிறேன். இதற்குமேலும், பருத்த அடிமரத்தைக் கொண்ட பனைமரத்தின் மடலிலிருக்கும் அன்றிலின் குரலையும் தனியே கேட்டிருக்க என்னால் எப்படி இயலும்?

கருத்து

"பறவை இனங்கள் புணர்ச்சி கருதித் தத்தம் துணையை விளிக்கும் குரலைக் கேட்டு என் காமநோய் மிகுந்து வருத்துகிறது; நான் இனியும் எவ்வாறு ஆற்றியிருக்க இயலும்?" என்கிறாள், தலைவி.

விளக்கம்

"தோழியே, பொறுத்திரு என்கிறாய். ஞாயிறு ஒளி குன்றி மாலைப்பொழுது தோன்றித் தனிமை என்னை வருத்துகின்றது. இயற்கை நிகழ்வுகளோ என் காமநோயைத் தூண்டிவிட்டு வருத்துகின்றன. இந்நிலையில் நான் எப்படி ஆற்றியிருக்க இயலும்?" எனத் தலைவி தோழியின் பேச்சினை மறுத்துப் பேசுகிறாள்.

சொற்பொருள்

1. ஞான்று - சாய்ந்து; கதிர் - ஒளி; மழுங்கின்றே - குறைந்தது.
2. எல்லி - இரவு; பூ வீ - பூ உதிர்ந்த.
3. வாவல் - வௌவால்; வயின்தொறும் - இடந்தோறும்; சேவல் - ஆந்தைச்சேவல்.

4. நகைவாய்க் கொளீஇ - தான் மிகவும் மகிழ்ச்சி கொண்டு; விளிக்கும் - அழைக்கும்.
5. மாயாக் காதல் - குறையாத காதலொடு, அதர்ப்பட - நெறிப்பட; தெளித்தோர் - தேற்றியவர் (காதலர்).
6. பாரிய - பட்டுப்போன.
7. பராரை - பருத்த அடியினைக் கொண்ட; படுசினை - இலையுதிர்ந்த கிளை.
8. குராஅல் - கபில நிறம்; கூகை - பேராந்தை (கோட்டான்).
9. ஆனா - பொறுக்கவியலாத; அட - தாக்க.
10. தமியேன் - தனியே இருந்து.
11. பரிஅரை - பருத்த அடியினைக் கொண்ட; பெண்ணை - பனைமரம்; அன்றில் - ஒரு வகைப் பறவை.

தலைவி கூற்று

நற்றிணை 225 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வன்புறை எதிரழிந்தது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவிடைப் பொருளீட்டப் பிரிந்துள்ளான். தலைவனின் பிரிவைத் தாங்கவியலாமல் தலைவி வருந்துகிறாள். தோழி, 'அவர் விரைவில் வந்துவிடுவார்' என ஆறுதல் கூறுகிறாள். ஆனாலும், தலைவி ஆறுதலடையாமல் தோழி கூறியதை ஏற்காமல் கூறியது.

முருகுஉறழ் முன்பொடு கடுஞ்சினம் செருக்கிப்
பொருத யானை வெண்கோடு கடுப்ப,
வாழை ஈன்ற வைஏந்து கொழுமுகை,
மெல்இயல் மகளிர் ஓதி அன்ன
பூவொடு, துயல்வரும் மால்வரை நாடனை
இரந்தோர் உளர்கொல் தோழி! திருந்துஇழைத்
தொய்யில் வனமுலை வரிவனப்பு இழப்பப்
பசந்துஎழு பருவரல் தீர,
நயந்தோர்க்கு உதவா நார்இல் மார்பே.

தெளிவுரை

"திருத்தமான அணிகளை அணிந்திருந்தும், தொய்யில் எழுதப்பட்ட என் மார்பில் அமைந்த வரிகள் அழகிழந்தன; பசலை பரந்து நின்று துன்பத்தைத் தந்தது.

முருகவேளையொத்த வலிமையோடு கடுஞ்சினம் மிகக் கொண்டு போரிட்ட யானையின் வெண்மையான தந்தம் குருதி படிந்து செந்நிறத்துடன் காணப்படுவதுபோல, வாழை ஈன்ற கூர்மையான கொழுமையான அரும்பு, மெல்லிய இயல்பு கொண்ட மகளிரின் முடிச்சிட்ட கூந்தல்போல மலர்ந்து நிற்கும் ஏனை வாழைப்பூக்களொடு அசையும். இத்தகைய தோற்றம் கொண்ட மலைக்குரியவன், நம் தலைவன். நமக்கு உதவாத அவனிடம் சென்று அன்பில்லா அவன் மார்பை நாமா இரந்து வேண்டினோம்?" (அவனே வந்து அன்பு காட்டிவிட்டு இப்போது கைவிட்டொழிந்தனன்.)

கருத்து

'தோழியே! தானே வந்து நமக்கு அன்பு காட்டி அருள் செய்தவன், நாம் இன்று இவ்வாறு நயனழிந்திருக்கும்போதும் அருளற்றவனாய் நம்மை மறந்திருக்கிறான். நான் எப்படி ஆற்றியிருக்க இயலும்?' என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

விளக்கம்

'தலைவன் அன்பு கொண்டவன்; விரைவில் வருவான்; ஆற்றியிரு' என்றாள், தோழி. அதற்குத் தலைவி, 'தோழியே! நாம் தலைவனைத் தேடிச் சென்றதில்லை. அவனாகவே வந்துதானே என்னோடு கூடினான். அப்படி அன்பு காட்டியவன் இப்போது பிரிந்து துயரமூட்டுவது முறையாகுமோ?' என்று தோழியின் கூற்றுக்கு எதிராய்ப் பேசுகிறாள்.

"தலைவனின் பிரிவு, காதலன்பு குறைந்துவிட்டதுபோலத் தோற்றுவிக்கிறது; ஆயினும் அவன், தன்னை விரும்பியோர்க்கு உதவும் உயர்பண்பினன்; உடனே வருவான்; நீ வருந்தாதே" என்றாள், தோழி. "தன்னை விரும்பி உறையும் பெண் மிக்க துயருற்றிருக்கும்போது, தன் மார்பை நல்கி அவளது துன்பம்

துடைப்பதே உயர்ந்த பண்பும் அன்பும் ஆகும்; அந்த அன்பு அவனிடத்தில் இல்லை; ஆதலின், அவன் மார்பை விரும்புவது பயனற்ற செயல் என நன்கு அறிந்திருக்கிறேன்" என்று தோழியின் சொற்களை ஏற்காதவள்போலத் தலைவி பேசினாள்.

உவமை விளக்கம்

வாழைத்தாறின் கடைசிப்பகுதியில் தொங்கிய வாழைப் பூவின் நிறம், குருதி படிந்த சிவந்த யானைத்தந்தம் போன்றிருந்தது. வாழைத்தாறின் அசைவு, மகளிர் அள்ளி முடித்த கூந்தற்கொண்டையின் அசைவுபோலத் தோற்றமளித்தது.

குறிப்பு

பகையைக் கொன்ற யானையின் தந்தம்போல வாழை ஈன்ற பூ விளங்கியது. அத்தகைய நாட்டில் வாழ்வதால் தலைவன் இயற்கையாகவே கொடுமை மிக்கவனாய்க் காணப்படுகிறான் என்பது சிறப்புக் குறிப்பு.

சொற்பொருள்

1. முருகு உறழ் - முருக வேளை ஒத்த; முன்பு - வலிமை; செருக்கு - மிகுந்து.
2. பொருத - போரிட்ட; வெண்கோடு - வெண்மையான கொம்பு, தந்தம்; கடுப்ப - போன்ற.
3. வை - கூர்மை; கொழுமுகை - கொழுமையான மொட்டு (அரும்பு).
4. ஓதி - கூந்தல்.
5. துயல் வரும் - அசையும்.
6. இரந்தோர் உளர் கொல்? - (அவன் மார்பினைத் தாம் சென்று) இரந்து வேண்டினோர் உளரோ?; திருந்து இழை - திருத்தமான அணிகள் அணியப்பட்டிருந்ததும்.
7. தொய்யில் - தொய்யில் குழம்பு (எழுதப்பட்டதுமான); வனமுலை - அழகிய முலை; வரி வனப்பு - வரிகளமைந்த அழகு; இழப்ப - நீங்க.
8. பசந்து எழு பருவரல் - பசலை பரத்தலால் உண்டாகும் துன்பம்; தீர - நீங்குவதற்காக.
9. நயந்தோர்க்கு - வேண்டினோர்க்கு; நார்இல் - அன்பு இல்லாத.

தோழி கூற்று

குறுந்தொகை 248 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவு நீட்டித்தவழி, ஆற்றாளாகிய கிழத்தியைத் தோழி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தலைவியை வரைந்துகொள்ளுவதற்கான பொருளைத் தேடி வருவதற்காகத் தலைவன் அவளைப் பிரிந்து சென்றான். அவன் வருவதாய்ச் சொன்ன காலம் கடந்தும் அவன் திரும்பவில்லை. தலைவி மிகவும் துயரமுற்று வருந்தினாள். அவளிடம் விரைவில் திரும்பி வரும் தலைவனோடு திருமணம் நடைபெற உள்ளது என்று தோழி கூறித் தேற்றியது.

அதுவரல் அன்மையோ அரிதே, அவன்மார்பு
உறுக என்ற நாளே குறுகி,
ஈங்குஆ கின்றே தோழி! கானல்
ஆடுஅரை புதையக் கோடை இட்ட
அடும்புஇவர் மணற்கோடு ஊர, நெடும்பனை
குறிய ஆகும் துறைவனைப்
பெரிய கூறி, யாய்அறிந் தனளே.

தெளிவுரை

"*தலைவியே! கடற்கரைச்சோலையில் அடும்பங்கொடிகள் மணல் மேட்டில் படர்ந்து கிடக்கின்றன. கோடைக்காற்று மணலைக் கொண்டுவந்து குவிப்பதால் மணற்குவியல் உயர்கின்றது. மணற்குவியல் உயர்வதால் பனைமரங்களின் அடிப்பாகம் மணலிலே புதைய மரங்களின் உயரம் குறைகின்றது. இத்தகைய தோற்றம் கொண்ட கடற்கரைக்கு உரியவன், தலைவன். அவனைப்பற்றி, வேலன் மேல் ஏறிய தெய்வம் கூறியதால், நம் தாய் அவன் இன்னான் என்று அறிந்து கொண்டாள். ஆதலால், நாம் விரும்பும் திருமண நாள் விரைவில் வரப்போகின்றது. அவன் மார்பைத் தழுவி இன்புறும் நாளும்*

நெருங்கிக்கொண்டிருக்கின்றது. இந்நிலையில் நீ துன்புறுவது ஏன்?'' என்று கூறித் தலைவியைத் தேற்றுகிறாள், தோழி.

கருத்து

தலைவியே! தலைவன் விரைவில் திரும்பி வருவான்; உன் திருமணம் நடைபெறவிருக்கிறது; ஆதலின் துன்பத்தைப் பொறுத்திரு.

விளக்கம்

தாய் உண்மை அறிந்தனளாதலின், அவள் தந்தையிடமும் தமையன்மாரிடமும் சொல்லி வரைவுக்கு உடன்படச் செய்வாள் எனக் கூறித் தலைவியை ஆற்றியிருக்குமாறு தோழி வற்புறுத்து கிறாள்.

சொற்பொருள்

1. அது - திருமணம்; வரல் அன்மை அரிது - அது வாராமலிருப்பது அரிது (வரும்); அவன் - தலைவன்.
2. உறுக - இன்புறுக; குறுகி - நெருங்கி.
3. ஈங்கு ஆகின்று - இங்கு வந்துகொண்டிருக்கிறது.
4. ஆடுஅரை - அசைகின்ற அடிமரம்; கோடை - கோடைக்காற்று.
5. அடும்பு - அடும்பங்கொடி; இவர் - படர்கின்ற; கோடு - குவியல்; ஊர - உயர்ந்ததனால்; நெடும்பனை - உயரமான பனை.
6. குறிய ஆகும் - உயரம் குறைந்ததாய்த் தோன்றும்.
7. பெரிய கூறி - முருகனால் ஏற்பட்டது என்று பெரிய சொற்களைப் பேசி; யாய் - தாய்.

தோழி கூற்று

நற்றிணை 358 **நக்கீரர்**

திணை : நெய்தல்

கூற்று

பட்டபின்றை வரையாது பொருள்வயிற்பிரிந்த காலத்துத் தோழி, 'இவள் ஆற்றாளாயினள்; இவளை இழந்தேன்' எனக் கவன்றாள் வற்புறுத்தது.

கூற்று விளக்கம்

அறத்தொடு நிற்றலின்பின் மணம் செய்துகொள்ளாது தலைவன் பொருள்வயிற்பிரிந்த காலத்துத் தோழி, 'தலைவி ஆற்றாளாயினாள்; இவள்

இறந்துபடுவள்' எனக் கவலை கொண்டாள்; தலைவியை நெருங்கி, "நமது அழகு கெடுமாறு பிரிந்துபோயுள்ள தலைவர், முன்பு 'உன்னை விட்டுப் பிரியேன்' என்று சூளுரை கூறி இப்போது அதனை மறந்து போயினார். அவர் சூளுரை பொய்த்ததால் அவரைத் தண்டித்துவிடாதே எனக் கடவுளுக்குப் பலி தூவி வணங்கி வருவோம், வா' எனத் தலைவியை ஆற்றும்வண்ணம் தோழி கூறியது.

பெருந்தோள் நெகிழ, அவ்வரி வாட,
சிறுமெல் ஆகம் பெரும்பசப்பு ஊர,
இன்னேம் ஆக, எற்கண்டு நாணி,
நின்னொடு தெளித்தனர் ஆயினும், என்னதூஉம்,
அணங்கல் ஓம்புமதி, வாழிய நீ! என,
கடல்கெழு கடவுட்கு உயர்பலி தூஉய்,
பரவினம் வருகம் சென்மோ தோழி!
பெருஞ்சேய் இறவின் துய்த்தலை முடங்கல்
சிறுவெண் காக்கை நாள்இரை பெறூஉம்
பசும்பூண் வழுதி மருங்கை அன்னஎன்
அரும்பெறல் ஆய்கவின் தொலைய,
பிரிந்துஆண்டு உறைதல் வல்லி யோரே.

தெளிவுரை

"தலைவியே! பெரிய சிவந்த பஞ்சு போன்ற தலையைக் கொண்ட இறால் மீனின் முடங்கலைச் சிறிய வெள்ளிய காக்கை நாள்காலை இரையாகப் பெறும் வளமையுடையது, பசும்பூண் பாண்டியனுக்கு உரிய மருங்கூர்ப்பட்டினம்; அப்பட்டினம் போன்ற பெறுதற்கரிய என் அழகு தொலையுமாறு என்னைப் பிரிந்து தலைவன் சென்று அங்கேயே தங்கியிருக்கிறான். முன்பொரு பொழுது நம் பெருத்த தோள்கள் தளர்ந்துவிட்டன; அழகிய வரிகள் வாடிவிட்டன; சிறிய மென்மையான என் மார்பகத்திலும் பசலை பெரிய அளவில் பரவிவிட்டது. நாம் இத்தன்மையேமாதலும் தான் பிரிந்ததாலேயே இவ்வண்ணம் ஆயிற்றென்று தலைவன் வெட்கமுற்றுத் தெய்வத்தை முன்னிலைப்படுத்தி இனி ஒருபொழுதும் பிரியேன் என்று என்னிடம் உறுதி கூறித் தெளிவு செய்தான். அப்படிச் சூள் செய்த அவன் இப்போது பிரிந்து சென்றுவிட்டான். அதனாலே,

'உறுதிமொழி தவறிய அவனுக்குத் துன்பம் தந்துவிடாதே' என்று கடல்தெய்வத்துக்கு உயர்ந்த பலி தூவி வேண்டிக் கொண்டு வருவோமா?" என்று கூறித் தோழி தேற்றுகிறாள்.

கருத்து

'தலைவியே! உறுதிமொழி தவறி நம்மைப் பிரிந்து சென்றுள்ள தலைவனுக்குத் தண்டனை ஏதும் தந்துவிடாதே எனத் தெய்வத்தை வேண்டுவோம்! வா!

உள்ளுறை

இறாவின் முடங்கலைச் சிறுவெண் காக்கை நாள்காலையில் இரையாகப் பெறும் என்றது, பிரிந்து சென்ற தலைவன் சென்ற இடத்தில் பெரும் பொருளைப் பெற்று மீள்வான் என்பதாம்.

சொற்பொருள்

1. நெகிழ - தளர்வுற.
2. ஆகம் - மார்பு.
3. இன்னேம் ஆக - இத்தன்மையளாய் ஆதலும்; எற்கண்டு - என்னைப் பார்த்து.
4. நின்னொடு தெளித்தனர் - உன்னிடம் அதனைத் தகுந்த முறையில் கூறி என்னைத் தெளிவித்துச் சென்றார்; என்னதூஉம் - சிறிதளவும்.
5. அணங்கல் ஓம்புமதி - வருத்துதல் ஒழிக.
6. கடல்கெழு கடவுள் - கடல்தெய்வத்துக்கு; உயர்பலி - உயர்ந்த பலிகளை; தூஉய் - படைத்து.
7. பரவுதல் - தொழுதல்; சென்மோ - செல்வோமா.
8. பெருஞ்சேய் இறவின் - பெரிய சிவந்த இறால்மீனின்; துய்த்தலை - பஞ்சுபோன்ற தலையைக் கொண்ட; முடங்கல் - வளைந்து கிடக்கும் உடலை.
9. நாள் இரை - நாள்காலை இரையாய்.
10. பசும்பூண் வழுதி - பசும்பூண் பாண்டியன்; மருங்கை - மருங்கூர்ப் பட்டினம்.
11. ஆய் கவின் - தெளிந்த அழகு; தொலைய - நீங்க.
12. ஆண்டு - அங்கேயே; உறைதல் வல்லியோர் - தங்கியிருக்க வல்லவர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 38 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தனது ஆற்றாமை தோன்றத் தோழிக்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைபொருளுக்குப் பிரிந்து நெடுங்காலம் வாராதிருப்பத் தலைவி மிகவும் வருந்தியிருந்தாள். அவளை நோக்கித் தோழி, ‘உன்னை வரைந்துகொள்வதற்காகப் பொருளீட்டவே அவர் சென்றுள்ளார்; அங்ஙனமிருப்ப அதனை நன்றென்று கருதாமல் வருந்துவது ஏன்?’ என்று வினவினாள். அப்போது, ‘அவர் பிரிவை ஆற்றும் வல்லமை எனக்கில்லை’ எனத் தலைவி சொல்லியது.

கான மஞ்ஞை அறைஈன் முட்டை
வெயில்ஆடு முசுவின் குருளை உருட்டும்
குன்ற நாடன் கேண்மை என்றும்
நன்றுமன் வாழி தோழி! உண்கண்
நீரொடு ஒராங்குத் தணப்ப,
உள்ளாது ஆற்றல் வல்லு வோர்க்கே.

தெளிவுரை

காட்டில் பாறைமீது மயில் இட்டுச் சென்ற முட்டையை, வெயிலில் விளையாடும் குரங்குக்குட்டி உருட்டி ஆடும். இத்தகைய காட்சிக்குரிய குன்றுகளை உடையவன், தலைவன். அவன் என் கண்கள் நீர் சொரிந்து அழும்படியாக முற்றிலும் பிரிந்து சென்றிருக்கிறான். காதலன் பிரிந்தால் அதனை நினையாது பொறுத்துக் கொள்ளும் வல்லமையைக் கொண்டிருப்பவர்களால் மட்டுமே பிரிவைத் தாங்கிக்கொள்ள முடியும். எனக்கு அந்த வல்லமை இல்லை. ஆதலால், தலைவன் பிரிவினால் வருந்தியிருக்கிறேன். அவன் நட்பு என்றும் இனியதே!

கருத்து

தோழியே! தலைவன் பிரிவை ஆற்றும் வல்லமை எனக்கில்லை.

விளக்கம்

'தம் காதலர் பிரிவைப் பொறுத்துக்கொள்ளும் பெண்கள் சிலர் இருக்கலாம். அத்தகைய ஆற்றல் எனக்கில்லை. இதற்கு நான் என் செய்வேன்?' என்று தோழியிடம் தலைவி கூறினாள்.

குறிப்பு

குஞ்சு வெளிப்பட அடை காக்கப்பட வேண்டிய முட்டை, குரங்குக் குட்டியால் உருட்டப்பட்டுச் சிதைந்துவிடுகிறது என்னும் தொடர்மூலம், காதலன் அருகிருந்தால் இன்பத்திலாழ்ந்திருக்க வேண்டிய தலைவியைத் தலைவனின் பிரிவு அலைக்கழித்து வருத்தி இன்பத்தை இழக்கச்செய்கிறது என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. மஞ்ஞை - மயில்; அறை - பாறை; ஈன் - இட்ட.
2. முசு - ஒருவகைக் குரங்கு; குருளை - குட்டி.
3. கேண்மை - உறவு, நட்பு.
4. உண்கண் - மை எழுதப்பெற்ற கண்.
5. ஓராங்கு - முற்றிலும்; தணப்ப - பிரிய.
6. உள்ளாது - நினையாது; வல்லுவோர் - வல்லமையுள்ளவர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 399 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

வரைவு நீட்டித்த இடத்துத் தலைமகள், தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வரைபொருட்காகப் பிரிந்த தலைவன் பிரிந்துறையும் காலம் நீட்டித்த போது தலைவி தோழியை நோக்கிக் கூறியது. (காலம் நீட்டித்தல் - வருவதாய்க் கூறிச் சென்ற காலத்தில் வாராமல் இருப்பது.)

ஊர்உண் கேணி உண்துறைத் தொக்க
பாசி அற்றே பசலை காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி,
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே.

தெளிவுரை

ஊரார் நீர் பருகும் குளத்தில், நீரைப் பருகும் துறையில், பாசி நிறைந்து மிதக்கும். இப்பாசி போன்றதே என் மேனியில் படர்ந் துள்ள பசலை. (பாசி படர்ந்த துறையில் நீர் பருக விரும்புவோர் நீரில் கையை வைத்தவுடன் பாசி விலகும்; கையைத் தண்ணீரி லிருந்து எடுத்த உடனேயே கூடிக்கொள்ளும்.) அதுபோல, என் காதலர் என்னைத் தொடும்போதெல்லாம் விலகும் பசலை நிறம், அவர் கையை எடுத்த அளவிலேயே மீண்டும் படர்ந்து விடுகிறது.

கருத்து

தலைவன் பிரிந்த அக்கணமே என் உடலெல்லாம் பசலை படர்ந்து விடுகிறது.

விளக்கம்

மக்கள் தம் கையிட்டு நீருண்ணும்போது பாசி விலகுகிறது; கைகளை எடுத்த அளவிலேயே மீண்டும் படர்ந்து நீரே தெரியாமல் சேர்ந்துகொள்கிறது. அதுபோலத் தலைவியைத் தலைவன் தொட்ட உடனேயே அவள் மேனியின் பசலையும் நீங்குகிறது; அவன் பிரிந்த உடனேயே தலைவியின் மேனி தெரியாதவாறு முழுவதுமாய்ப் பசலை படர்ந்துவிடுகிறது.

சொற்பொருள்

1. **ஊர் உண்கேணி** - ஊராரால் உண்ணப்படும் குளம்; **உண்துறை** - நீர் மொள்ளும் துறை; தொக்க - படர்ந்திருக்கின்ற.
2. பாசி - மிகச் சிறுசிறு துகளான பச்சை இலை; பசலை - மேனியில் படரும் பசலை நோய்.
3. தொடுவுழி - தொடும் போதெல்லாம்.
4. விடுவுழி - விலகும் போதெல்லாம்.

தலைவி கூற்று

கைந்நிலை 53 **புல்லங்காடனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைபொருள் பிரிவு நீட்டித்த வழித் தலைமகள், தோழிக்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவியைக் காதலித்த தலைவன் பொருள் ஈட்டி வந்து திருமணம் செய்வதற்காகப் பிரிந்துசென்றான். அப்போது தலைவி தோழியிடம் கூறியது.

அலவன் வழங்கும் அடும்புஇவர் எக்கர்
நிலவு நெடுங்கானல் நீடார் துறந்தார்;
புலவுமீன் குப்பை கவரும் துறைவன்
கலவான்கொல், தோழி! நமக்கு?

தெளிவுரை

“நண்டுகள் உலாவும் அடும்பங்கொடிகள் படர்ந்த மணல் மேட்டில் நிலவொளி போன்ற மணல் பரந்துள்ளது. அக்கடற்கரைச்சோலையில் நீண்ட காலம் தங்கியிராது நீங்கிச் சென்ற பரதவர் எல்லாரும் புலால் நாற்றத்தைக் கொண்ட மீன் குவியலைக் கவர்ந்து வருவர். அத்தகைய வளம் வாய்ந்த நெய்தல் நிலத்தலைவன் வந்து நம்மோடு இனிக் கூடுவானோ, கூடானோ? தோழியே! நீ கூறு” என்று தலைவி தோழியைப் பார்த்துக் கேட்டாள்.

கருத்து

தோழியே! தலைவன் சென்று பல நாள்கள் ஆகின்றன; அவன் திரும்ப வந்து சேர்வானா?

குறிப்பு

கானலில் நீண்ட நேரம் தங்கியிராது சென்ற பரதவர் மீன் குவியலுடன் திரும்புவர் என்பது, தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் பொருட் குவியலுடன் திரும்புவான் என்பதை உணர்த்துகின்றது.

சொற்பொருள்

1. அலவன் - நண்டு; அடும்பு - அடும்பங்கொடி; இவர்தல் - மேலேறுதல்; எக்கர் - மணல்மேடு.
2. நீடார் - தங்கியிராது; துறந்தார் - நீங்கிச் சென்றவர்.
3. புலவு - புலால் நாற்றம்; குப்பை - குவியல்.
4. கலவான் - கூடானோ?

தலைவி கூற்று

கைந்நிலை 56 **புல்லங்காடனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைபொருள் பிரிவு நீட்டித்த வழித் தலைமகள், தோழிக்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவியைக் காதலித்த தலைவன் பொருள் ஈட்டி வந்து திருமணம் செய்வதற்காகப் பிரிந்து சென்றனன். அப்போது தலைவி தோழியிடம் கூறியது.

நுரைதரும் ஓதம் கடந்து,எமர் தந்த
கருங்கரை வன்மீன் கவரும்புள் ஓப்பிப்
புகர்இல்லேம் யாம்இருப்ப, பூங்கழிச் சேர்ப்பன்
நுகர்வனன் உண்டான் நலம்.

தெளிவுரை

"*நம்மவர் (தந்தையர், உடன்பிறந்தவர்) நுரையுடன் திகழும் அலைகளைக் கொண்ட கடலைக் கடந்து போய்த் திரும்பிக் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்த வலிய மீனின் வற்றலைக் கவரப் பறந்து வரும் பறவைகளை ஓட்டியிருந்தபோது நாம் குற்றமற்றவராய் இருந்தோம். அப்பொழுது அழகிய உப்பங் கழிகளைக் கொண்ட நெய்தல்நிலத் தலைவன் அங்கு வந்து நம்முடைய நலத்தை நுகர்ந்தான். அவன் இன்று அதனை மறந்தான் போலும்!*" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

தோழியே! நம் பெண் நலம் கவர்ந்து சென்ற தலைவன் நம்மை மறந்தானோ?

விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் திரும்ப மிகுந்த காலம் ஆயிற்று. அதனால், தலைவன் தன்னை மறந்துவிட்டானோ எனத் தலைவி வருந்துகிறாள்.

சொற்பொருள்

1. ஓதம் - கடல் அலை; எமர் - எம் உறவினர் (தமையன்மார், தந்தை).
2. கருங்கரை - கரிய கரை; வன்மீன் - வலிமை மிக்க மீன்கள்; கவரும் - கவர்ந்து செல்லும்; புள் - பறவைகள்; ஓப்பி - (மீன் வற்றலைக் கவராது) ஓட்டி.
3. புகர் இல்லேம் யாம் - குற்றமற்றவர்களாய் இருந்தோம்; பூங்கழிச் சேர்ப்பன் - பொலிவு கொண்ட உப்பங்கழிகளைக் கொண்ட கடல்நிலத் தலைவன்.
4. நுகர்வனன் - துய்த்து; நலம் - பெண்மை நலம்.

தலைவி கூற்று

கைந்நிலை 54 — **புல்லங்காடனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைபொருள் பிரிவு நீட்டித்த வழித் தலைமகள், தோழிக்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவியைக் காதலித்த தலைவன் பொருள் ஈட்டி வந்து திருமணம் செய்வதற்காகப் பிரிந்து சென்றான். அவன் திரும்பி வரக் காலம் நீண்டது. அப்போது தலைவி தோழியிடம் கூறியது.

என்னையர் தந்த இறஉணங்கல் யாம்கடிந்து
புன்னையங் கானல் இருந்தேமா, பொய்த்(து)எம்மைச்
சொல்நலம் கூறி, நலன்உண்ட சேர்ப்பனை
என்னைகொல் யாம்காணு மாறு?

தெளிவுரை

"என் தோழியே! என் தந்தையர், உடன்பிறந்தவர் ஆகியோர் வலையை வீசிக் கவர்ந்து வந்த இறால் மீன்களை மணலில் காய வைத்து, கவர வருகின்ற பறவைகளை ஓட்டியபடி, புன்னை மரங்கள் பொருந்திய கானலில் இருந்தோம். அப்போது அங்கே வந்து, பொய்யான புகழுரைகளைக் கூறி, என்னுடன் இன்பம் துய்த்த நெய்தல்நிலத் தலைவனை இனிமேல் காணும் வழி யாது? ஆராய்ந்து கூறுக" என்று தலைவி கூறினாள்.

கருத்து

பிரிந்து சென்ற காதலன் இன்னும் வரக் காணேன்; அவனை அடையும் வழியை அறிந்து சொல்.

விளக்கம்

"தலைவனைக் கண்டால் என் ஆற்றாமை நீங்கும். எனவே, அவனைக் காண்பதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து சொல்" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. என் ஐயர் - என் தமையன்மார், தந்தையர்; இற உணங்கல் - மீன் வற்றல்; கடிந்து - ஓட்டி.
2. கானல் - கடற்கரைச்சோலை.
3. நலன் - பெண்மை நலன்; சேர்ப்பன் - கடல்நிலத் தலைவன்.
4. என்னை கொல் - என்ன ஆனானோ?; யாம் காணுமாறு - நான் அறியக் கூறு.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 74 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

காமம் மிக்க கழிபடர் கிளவி. (நிலத்தாற்பாலை; ஒழுக்கத்தால் நெய்தல்.)

(காமம் மிக்க கழிபடர் கிளவி - வேட்கை மிகுந்து தலைவனைக் கூட விரும்பும் தலைவி, மிகவும் துயருற்றுத் தலைவனை நினைந்து நினைந்து உருகிக் கடல், கானம், பொழில், பொழுது, பறவை, விலங்கு முதலியவற்றைப் பார்த்துக் கூறுவது. 'வரைதல் வேட்கை' என்னும் தொகுதிக்கண் இடம் பெறும் கூற்று.)

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவால் காமம் மிக்க தலைவி, புறாவிடம் தன் துன்பங்களைச் சொல்லிப் புலம்பியது.

புன்புறவே சேவலோ(டு) ஊடல் பொருளன்றால்
அன்புற வேயுடையார் ஆயினும் – வன்புற்(று)
அதுகாண் அகன்ற வழிநோக்கிப் பொன்போர்த்(து)
இதுகாண்என் வண்ணம் இனி.

தெளிவுரை

"புல்லிய நிறத்தைக் கொண்ட பேடைப்புறாவே! உன் தலைவனான ஆண்புறாவுடன் ஊடல் கொள்ளுதல் பயனற்றது. ஏனெனில், என் காதலர் முன்பு என்னிடம் அன்பாகிய உறவு ஒன்றையே கொண்டிருந்தார். என்றாலும், இப்பொழுது பிரிந்து சென்று வலிய நெஞ்சுடன் எங்கோ வாழ்ந்துகொண்டிருக்கிறார். அவர் பிரிந்து சென்றபோது ஏற்பட்ட தேரின் வழிச்சுவட்டையே பார்த்துக்கொண்டு இருக்கிறேன்; பொன்னிறம் கொண்ட பசலை என் உடல் முழுவதும் பரவியிருப்பதைப் பார்" எனப் புறாவை நோக்கித் தலைவி கூறுகிறாள்.

கருத்து

பேடைப்புறாவே! உன் ஆண்புறாவுடன் ஊடல் கொள்ளாதே! அதனால் பிரிவு ஏற்படின் நீ கலக்கமடைவாய்.

விளக்கம்

என் காதலன் மிக அன்புடையவனாயினும் பிரிந்து சென்ற அவன் இப்பொழுது வலிய தன்மையினைக் கொண்டவன் ஆய் விட்டான். ஆதலின் நீ, உன் காதலனுடன் ஊடிப் பயனில்லை. நீ ஊடிப் பிரிவு ஏற்படின் உன் காதலனும் வலிய தன்மையினைக் கொண்டவனாய்த்தான் இருப்பான்.

சொற்பொருள்

1. பொருளன்று - பயனற்றது, காரிய சாத்தியமன்று.
2. வன்புற்று - (மனநெகிழ்ச்சியுறாது) வலியரான தன்மையை.
3. காண் - பாராய்; பொன் போர்த்து - பொன்னிறம் உடலெல்லாம் மூடும்படி.
4. வண்ணம் - பசலை நிறம்.

தலைவி கூற்று

நற்றிணை 54 **சேந்தங்கண்ணனார்**

திணை : நெய்தல்

கூற்று

காமம் மிக்க கழிபடர் கிளவி.

கூற்று விளக்கம்

காமம் மிகுதிப்பட்ட தலைவி, நாரையை விளித்து, 'நாராய்! நான் மாலைப்பொழுதில் படும் வேதனையைத் துறைவனிடம் சொல்' என்ற இரந்து கூறியது.

வளைநீர் மேய்ந்து கிளைமுதல் செலீஇ,
வாப்பறை விரும்பினை ஆயினும், தூச்சிறை
இரும்புலால் அருந்தும்நின் கிளையொடு சிறிதுஇருந்து
கருங்கால் வெண்குருகு! – எனவ கேண்மதி;
பெரும்புலம் பின்றே சிறுபுன் மாலை;
அதுநீ அறிபின், அன்புமார் உடையை;
நொதுமல் நெஞ்சம் கொள்ளாது, என்குறை

இற்றாங்கு உணர உரைமதி தழையோர்
கொய்குழை அரும்பிய குமரி ஞாழல்
தெள்திரை மணிப்புறந் தைவரும்
கண்டல் வேலிநும் துறைகிழ வோற்கே!

தெளிவுரை

"கரிய நிறம் கொண்ட காலினைக் கொண்ட வெண்மையான நாரையே! நீ உன் சுற்றத்தாருடன் பரந்த நீர்ப்பரப்பில் உள்ள இரையை அருந்தித் தாவிப் பறந்து செல்ல விரும்புகிறாய்! ஆனால், தூய சிறகுகளைக் கொண்டனவாயும் மிகுதியான புலாலைத் தின்பனவாயும் இருக்கும் உன் சுற்றத்துடன் இங்கே தங்கி நான் சொல்லும் சில சொற்களைக் கேள்! சிறிய மாலைப் பொழுது என்னை மிகவும் வருத்துகின்றது. அதனை நீ அறிந்தால் என்னிடம் அன்பு கொள்வாய். என்னை வேறாய்க் கருதுகின்ற மனப்போக்கினைக் கொள்ளாதே! தழையாடை அணிபவர் கொய்தற்கு ஏற்ற வகையில் இளைய ஞாழல் மரத்தில் இலை தளிர்த்துத் தாழ்ந்து இருக்கும்; அஞ்ஞாழலின் கரிய புறப்பகுதியைத் தெளிந்த நீர்த்திவலைகள் வந்து தடவும்; தாழை மரங்களும் நிறைந்து நிற்கும். இவ்வாறு விளங்கும் துறையைக் கொண்ட உம் தலைவனிடம் என் குறையை அவன் உணருமாறு நீ சொல்லுதல் வேண்டும்" என்று நாரையிடம் தலைவி கேட்டுக் கொண்டாள்.

கருத்து

நாரையே! நீயேனும் சென்று என் குறையைத் தலைவன் உணரும் வண்ணம் கூறுவாயா?

விளக்கம்

"நாரையே! நீ உன் உறவோடு உண்டு செல்கின்றாய்; எனினும், இங்கே சிறிது நேரம் தங்கி நான் கூறும் சொற்களைக் கேள். என்னை அயலார்போல் கருதாமல், என்பால் அன்பு கொண்டு, நீ வாழும் நீர்த்துறை நாட்டுக்கு உரியவனான என் காதலனுக்கு என் நிலையை அவன் உள்ளங்கொள்ளுமாறு எடுத்துச் சொல்" எனக் காமம் மிக்க தலைவி நாரையிடம் வேண்டினாள்.

சொற்பொருள்

1. வளை நீர் - கடல்; செலீஇ - செல்கிறாய்.
2. வாப்பறை - தாவிப் பறத்தல்; தூச்சிறை - தூய சிறகு.
3. கிளை - உறவு.
4. குருகு - நாரை; எனவ - நான் சொல்லுவதை.
5. புலம்பு - வருத்தம்.
7. நொதுமல் - வேறுபட்ட தன்மை.
8. இற்றாங்கு - இத்தன்மையது; தழையோர் - தழை உடுப்பவர்.
9. குழை - தளிர்; குமரி - இளமை; ஞாழல் - ஒருவகை மரம்.
10. தெள்திரை - தெளிந்த நீர்த்துளி; மணிப்புறம் - கரிய புறப்பகுதி; தைவரும் - தடவும்.
11. கண்டல் - தாழை; கிழவன் - உரியவன்.

தலைவி கூற்று

நற்றிணை 70 — **வெள்ளி வீதியார்**

திணை : மருதம்

கூற்று

காமம் மிக்க கழிபடர் கிளவி.

கூற்று விளக்கம்

வரைவிடைப் பிரிந்த தலைவன் வாராது இருந்தான். அதனால் காமம் மிகுந்த தலைவி, அங்கு இரை மேயும் நாரையிடம், 'நீ உண்டு முடித்து அவர் ஊர்க்குச் செல்லும்போது என் நிலையை மறவாமல் அவரிடம் சொல்' என்று வேண்டியது.

சிறுவெள்ளாங் குருகே! சிறுவெள்ளாங் குருகே!
துறைபோகு அறுவைத் தூமடி அன்ன
நிறம்கிளர் தூவிச் சிறுவெள்ளாங் குருகே!
எம்ஊர் வந்துஎம் ஒண்துறைத் துழைஇ,
சினைக்கெளிற்று ஆர்கையை அவர்ஊர்ப் பெயர்தி;
அனையஅன் பினையோ பெருமற வியையோ
ஆங்கண் தீம்புனல் ஈங்கண் பரக்கும்
கழனி நல்ஊர் மகிழ்நர்க்குஎன்
இழைநெகிழ் பருவரல் செப்பா தோயே?

தெளிவுரை

"வெண்மையான சிறிய நாரையே! நீர்த்துறையில் துவைத்து வெளுத்த தூய ஆடை போன்ற நல்ல நிறம் பொருந்திய சிறிய வெண்மையான நாரையே! நீ எம் ஊருக்கு வந்து, இங்குள்ள நீர் உண்ணும் துறைகளிலே துழாவி, சினை கொண்ட கெளிற்று மீனைத் தின்கிறாய்; பின்பு, என் தலைவர் இருக்கும் ஊருக்குச் செல்கிறாய்! அவர் ஊரிலிருந்து வரும் இனிய தண்ணீர் இங்கு வந்து பரவிப் பாய்ந்து பயன்படும் கழனிகளை உண்டாக்கும். அத்தகைய நல்ல ஊரினையுடைய தலைவரிடத்தே சென்று, அவர் பிரிவால் அணிகலன்களெல்லாம் நெகிழும் துன்பத்தோடு நான் இருப்பதை நீ கூறவில்லையா? நீயும் அவரைப் போலப் பெற்ற உதவியை மறக்கும் பண்பினைக் கொண்டனையோ அல்லது மிகவும் மறதியைக் கொண்டனையோ?" என்று தலைவி நாரையை நோக்கி வினவுகிறாள்.

கருத்து

நாரையே! என் துயரைத் தலைவனிடம் மறவாது எடுத்துச் சொல்.

விளக்கம்

நாரையே! காதலர் ஊர்ப்புறத்துக் கழனிகளில் பாய்ந்து வழிந்தோடி வரும் புனல் இவ்வூரில் வந்து பாய்ந்து வயல்கட்குப் பயன்படுகிறது. அங்கும் இங்குமாய்ப் பறந்து திரியும் நீ, இங்கே நான் காதல் துன்பத்தால் மெலிந்து, அணிகலன்கள் நெகிழ்ந்து விடுமாறு வருந்தியுள்ள செய்தியை நீ இதுவரை அவரிடம் சொல்லவில்லையா? எம்மூர்க்கு வந்து, நீர்த்துறையில் சினையுடன் கூடிய கெளிற்று மீன்களைத் தின்று அவர் ஊர்க்குச் செல்லும் நீ, என் நிலையைக் கூறாதது அன்பில்லாமையாலா அல்லது மறதியாலா? இம்முறையாவது மறதியின்றிச் சொல்.

சொற்பொருள்

1. குருகு - நாரை.
2. துறைபோகு - நீர்த்துறையில் துவைக்கப்பட்ட; அறுவை - ஆடை; மடி - மடிப்பு.
3. தூவி - சிறகு.

4. ஒண்துறை - ஒள்ளிய துறை; துழைஇ - துழாவி.
5. சினைக் கெளிற்று - சினை கொண்ட கெளிற்று மீன்; ஆர்கை - உண்ணுதல்.
6. மறவியையோ? - மறதியைக் கொண்டனையோ?
7. ஆங்கண் - அவர் ஊரிலிருந்து; ஈங்கண் பரக்கும் - இங்கு வந்து பாயும்.
8. கழனி - வயல்.
9. இழை நெகிழ் - அணிகலன்கள் எல்லாம் நெகிழும்; பருவரல் - துன்பம்; செப்பாதோயே? - கூறவில்லையோ?

தலைவி கூற்று

கைந்நிலை 50 **புல்லங்காடனார்**

திணை : நெய்தல்

கூற்று

காமமிக்க கழிபடர் கிளவி.

கூற்று விளக்கம்

தலைவன்மேல் தான் கொண்டுள்ள காதலைத் தலைவி நாரையிடம் சொல்வது.

நெடுங்கடல் சேர்ப்ப! நின்னொடு உரையேன்;
ஒடுங்கு மடல்பெண்ணை அன்றிற்கும் சொல்லேன்;
கடுஞ்சூளில் தான்கண்டு, கானலுள் மேயும்
தடந்தாள் மடநாராய்! கேள்.

தெளிவுரை

“பெரிய கடல் என்னும் ஆடவனே! உன்னிடம் நான் ஒன்றையும் சொல்ல மாட்டேன். மடல்கள் விரிந்த பனை மரத்தில் வாழும் அன்றில் பறவையிடத்தும் கூறமாட்டேன். இளமையான பெருமைமிக்க கால்களைக் கொண்ட நாரையே! தலைவன் இயற்கைப்புணர்ச்சிக் காலத்து, ‘உன்னைப் பிரியேன்; பிரியின் உயிர் தரியேன்’ என்று என்னிடம் சூளுரைத்தான். அப்போது கானலில் மேய்ந்திருந்த காலத்து நீ கேட்டு அறிந்திருக்கிறாய். அதனால் உன்னிடம் மட்டும் சொல்கிறேன்; கேள்.”

கருத்து

நாரையே! தலைவன் என்னைப் பிரியேன் என்று சூளுரைத்ததை இப்போது அவனிடம் சென்று நினைவூட்டு.

விளக்கம்

தலைவன் சூளுரைத்ததை நாரை மட்டுமே அறியும். ஏனைய கடலும் அன்றிலும் அறியா: ஆதலின், தலைவி நாரையிடம் மட்டுமே கூறினாள்.

சொற்பொருள்

1. நெடுங்கடல் சேர்ப்ப - கடலை ஓர் ஆடவனாய் உருவகித்து விளித்துச் சொல்லப்பட்டுள்ளது; உரையேன் - சொல்ல மாட்டேன்.
2. பெண்ணை - பனைமரம்; அன்றில் - அன்றில் பறவை.
3. கடுஞ்சூள் - 'உன்னைப் பிரியேன்; பிரியின் உயிர் வாழேன்' என்றுரைத்த கண்டிப்பான உறுதிமொழி; கானல் - கடற்கரைச் சோலை; மேயும் - இரை தேடும்.
4. தடந்தாள் - பெருமை மிக்க கால்கள்; மட நாராய் - இளமையான நாரையே!

தலைவி கூற்று

கைந்நிலை 51 **புல்லங்காடனார்**

திணை : நெய்தல்

கூற்று

காமமிக்க கழிபடர் கிளவி.

கூற்று விளக்கம்

தலைவன்மேல் தான் கொண்டுள்ள காதலைத் தலைவி நாரையிடம் சொல்லியது.

மணிநிற நெய்தல் மலர்புரையும் கண்ணாய்!
அணிநலம் உண்(டு)இறந்து, (ந)ம்அருளா விட்ட
துணிமுந்நீர்ச் சேர்ப்பற்குத் தூதொடு வந்த
பணிமொழிப் புள்ளே! பற

தெளிவுரை

"கானலுள் வாழ்ந்திருக்கும் தணிந்த குரலைக் கொண்ட நாரையே! நீலமணியின் நிறமென விளங்கும் நெய்தல் மலர் போன்ற என் கண் போன்றவனான தலைவன் என்னைக் கூடி, என் அழகையும் என் உடல் நலத்தையும் கவர்ந்து, என்னிடம் அருள் காட்டாது பிரிந்து சென்றுள்ளான், மனத்துணிவுமிக்க கடற்கரைத் தலைவன். இயற்கைப்புணர்ச்சி நிகழ்ந்த காலத்தில் அவனுக்குத் தூதாய் நீ என்னிடம் வந்துள்ளாய். அதுபோல் இன்று நீ அவனிடம் தூது சென்று அவனை என்னிடம் விரைந்து அழைத்துவரப் பறந்து செல்" என்று, தலைவன் பிரிவுக்காக நெய்தல்நிலக் கடற்கரையில் இரங்கித் தலைவி புலம்பினாள்.

கருத்து

நாரையே! தலைவனிடம் சென்று என் துன்பத்தைக் கூறி அழைத்து வா.

சொற்பொருள்

1. மணி - நீலமணி; புரையும் - போன்ற; கண்ணாய் - என் கண் போன்று இருந்து.
2. அணி நலம் - (என்) மேனி அழகையும் நலத்தையும்; உண்டு - கவர்ந்து; இறந்து - பிரிந்து சென்றுள்ள; அருளாவிட்ட - அருள் செய்யாது விட்ட.
3. துணி - துணிவு; முந்நீர் - கடல்; சேர்ப்பன் - கடல்நிலத் தலைவன்.
4. பணிமொழி - தாழ்ந்த குரல்; புள் - நாரை; பற - பறந்து செல்.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 65 **மூவாதியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த காலத்துப் பிரிவு நீட்டித்துழித் தலைமகள் தனக்குள்ளே வருந்திக் கூறியது.

கூற்று விளக்கம்

திருமணத்திற்காகப் பொருளீட்டி வரப் பிரிந்த தலைவன் திரும்பி வரும் காலம் நீட்டிப்பது கண்டு தலைவி தனக்குள்ளேயே சொல்லிக்கொள்வது.

எறிசுறாக் குப்பை இனங்கலக்கத் தாக்கும்
எறிதிரைச் சேர்ப்பன் கொடுமை - அறியாகொல்
கானகம் நண்ணி அருள்அற் றிடக்கண்டும்
கானலுள் வாழும் குருகு.

தெளிவுரை

துள்ளிக் குதிக்கும் சுறாமீன்களின் தொகுதியான கூட்டம் கலைந்து சிதறும்படியாக மோதுகின்ற அலைகளைக் கொண்ட கடற்கரைச்சோலைகளையுடையவன், தலைவன். அச்சோலை களில் தங்கி வாழ்கின்ற நாரைகள், நானும் தலைவனும் கூடி இருந்தபோது 'உன்னைப் பிரியேன்' எனத் தலைவன் சொன்ன உறுதிமொழியை நன்கு அறியும். இப்போது அவன் பிரிந்து பொருளீட்டக் காட்டினைக் கடந்து சென்று இன்னும் திரும்பாதவனாய் அருளற்றிருப்பதைக் கண்டும் இக்குருகுகள் காணாமல் வாழுகின்றனவே.

கருத்து

உன்னைப் பிரியேன் என்று தலைவன் என்னிடம் சொன்ன உறுதிமொழி களை அறிந்திருந்தும் இக்குருகுகள் அவனிடம் சென்று சொல்லாமல் இருக்கின்றனவே!

சொற்பொருள்

1. எறி - துள்ளிக் குதிக்கும்; சுறா - சுறா மீன்கள்; குப்பை - கூட்டம்; இனம் கலக்கத் தாக்கும் - இனத்தோடு கலந்து தாக்கும்.
2. கொடுமை - என்னைப் பிரிந்துள்ள கொடுமை; அறியா கொல் - தெரிந்துகொள்ள மாட்டாவோ?
3. கானகம் - காடு; நண்ணி - சென்று; கண்டும் - தெரிந்தும்.
4. கானல் - கடற்கரைச்சோலை.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 68 **மூவாதியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிந்த காலத்துப் பிரிவு நீட்டித்துழித் தலைமகள் வருந்திக் கூறியது.

(வரைவு - திருமணம்; இடைவைத்து - சிறிதுகாலம் தள்ளி வைத்து.)

கூற்று விளக்கம்

களவுப்புணர்ச்சியில் ஈடுபட்டிருந்த தலைவன், திருமணத்திற்காகப் பொருள் தேடிப் பிரிந்து சென்ற காலத்தில் தலைவி வருந்திச் சொல்லியது.

சிறுமீன் கவுள்கொண்ட செந்தூவி நாராய்
இறுமென் குரல்நின் பிள்ளைகட்கே யாகி
நெறிநீர் இருங்கழிச் சேர்ப்பன் அகன்ற
நெறியறிதி மீன்தபு நீ.

தெளிவுரை

சிறுமீன்களை அலகிடைக் கௌவிக்கொண்டுள்ள சிவந்த சிறகுகளைக் கொண்ட நாரையே! வருந்தும் மெல்லிய குரலினைக் கொண்ட நின் குஞ்சுகளையே எண்ணி மீன்களைக் கொத்திக் கொல்லுகின்ற நீ எம் களவுப்புணர்ச்சிக் காலத்தி லிருந்தே எம்மைக் கண்டுள்ளாய்! ஆதலின், வளைந்து செல்லும் நீரைக் கொண்ட உப்பங்கழிகள் பொருந்திய கடற்றுறைத் தலைவன் என்னைச் சந்தித்து, உறவாடிப் பிரிந்து சென்றதை நீ நன்கு அறிவாய்; அவன் சென்ற வழியும் உனக்குத் தெரியும்.

கருத்து

நாரையே! என்னோடு உறவாடிப் பிரிந்த அவன் சென்ற வழி உனக்குத் தெரியும்; ஆதலால், நீ அவனிடம் சென்று, என் பிரிவுத்துன்பத்தைச் சொல்லு வாயா?

சொற்பொருள்

1. கவுள் - அலகு; செந்தூவி - சிவந்த இறகு.

2. இறும் மென் குரல் - வருந்தும் மெல்லிய ஒலி; பிள்ளை - குஞ்சு.
3. இருங்கழி - பெரிய உப்பங்கழி; அகன்ற - பிரிந்து சென்ற.
4. நெறி - வழி; அறிதி - அறிவாய்; மீன்தபு - மீன்களைக் கொல்லுகின்ற.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், கானல் வரி 46 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

காமம் மிக்க கழிபடர் கிளவி.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்திருந்தபோது தலைவி, மிக்க காமத்தால் நாரையை நோக்கிக் கூறியது.

அடையல் குருகே அடையல்எம் கானல்
அடையல் குருகே அடையல்எம் கானல்
உடைதிரைநீர்ச் சேர்ப்பற்கு உறுநோய் உரையாய்
அடையல் குருகே அடையல்எம் கானல்.

தெளிவுரை

நாரையே! எம் கானலிடத்து வாராதே! எம் தலைவனிடம் மிகுதியான எம் காதல்நோயை நீ எடுத்துரைக்க மாட்டாய்! ஆதலால், நாரையே! எம் கானலுக்கு நீ வாராதே!

கருத்து

என் நோயைத் தலைவன்பால் எடுத்துச் சொல்லாத நாரையே, நீ என்னிடம் வாராதே!

சொற்பொருள்

1. குருகு - நாரை; கானல் - கடற்கரைச்சோலை.
3. உடை திரைநீர் - அலை வீசும் கடல் (திரை - அலை); சேர்ப்பன் - நெய்தல்நிலத் தலைவன்; உறுநோய் - நான் அடைந்துள்ள காதல் நோய்; உரையாய் - சொல்லவில்லை.

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 64 **மூவாதியார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடைப் பொருட்பிரிவில் தலைமகன் நீட்டித்தவழித் தோழி அன்றிலொடு கூறியது.

கூற்று விளக்கம்

களவுக்காலத்தில் தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் சென்ற தலைவன் திரும்பி வந்து சேரா நிலையில் தோழி அன்றிலைப் பார்த்துக் கூறியது.

தெண்ணீர் இருங்கழி வேண்டும் இரைமாந்திப்
பெண்ணைமேற் சேக்கும் வணர்வாய்ப் புணர்அன்றில்
தண்ணந் துறைவற்(கு) உரையாய் மடமொழி
வண்ணம்தா என்று தொடுத்து.

தெளிவுரை

தெளிந்த நீரினைக் கொண்ட கரிய உப்பங்கழியில் வேண்டுமளவு மீன் முதலிய இரைகளைத் தின்று அருகிலுள்ள பனைமரத்தின்மீது தங்கும் வளைந்த வாயினைக் கொண்ட இணை பிரியாத அன்றில் பறவைகளே! குளிர்ச்சி பொருந்திய துறையையுடைய தலைவனிடம் நீங்கள் சென்று, இளமையான மழலைச் சொற்களைக் கொண்ட தலைவியுடன் பழகி, அவளிடமிருந்து நீ பறித்துக்கொண்ட அழகினைத் திருப்பித் தந்துவிடு என்று பொருத்தமான சொற்களால் அடக்கத்தோடு சொல்லுங்கள்.

கருத்து

'அன்றில் பறவைகளே! தலைவியை நீ பிரிந்தபோதே அவள் அழகும் பிரிந்துவிட்டது என்று பக்குவமாய்த் தலைவனிடம் சொல்லுங்கள்.'

சொற்பொருள்

1. தெண்ணீர் - தெளிந்த நீர்; மாந்தி - உண்டு.
2. பெண்ணை - பனைமரம்; சேக்கும் - தங்கும்; வணர்வாய் - வளைந்த வாய்; புணர் அன்றில் - இணை பிரியா அன்றில் பறவைகள்.

3. உரையாய் - சொல்லுங்கள்; மடமொழி - மழலை பேசும் இளையவள்.
4. வண்ணம் - அழகு; தொடுத்து - பொருத்தமாய்ச் சொற்களை இணைத்து.

தலைவி கூற்று

நற்றிணை 277 **தும்பிசேர் கீரனார்**

திணை : பாலை

கூற்று

பட்டபின்றை வரையாது, கிழவோன் நெட்டிடைக் கழிந்து பொருள் வயிற்பிரிய ஆற்றாளாய தலைமகள் தும்பிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவிடை வைத்துத் தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் சென்றிருக்கிறான். அவன் நினைவால் அவள் வருந்துகின்றாள். அவன் வருவதாய்ச் சொல்லிச் சென்ற காலமும் கழிந்துவிட்டது. அவ்வேளையில் தலைவி தும்பியினை நோக்கி நெஞ்சழிந்து சொல்லியது.

கொடியை வாழி, தும்பி; இந்நோய்
படுகதில் அம்ம, யான்நினக்கு உரைத்தென்;
மெய்யே கருமை அன்றியும், செவ்வன்
அறிவும் கரிதோ அறனிலோய்! நினக்கே
மனைஉறக் காக்கும் மாண்பெருங் கிடக்கை
நுண்முள் வேலித் தாதொடு பொதுளிய
தாறுபடு பீரம் ஊதி, வேறுபட
நாற்றம் இன்மையின்; பசலை ஊதாய்;
சிறுகுறும் பறவைக்கு ஓடி, விரைவுடன்
நெஞ்சுநெகிழ் செய்ததன் பயனோ அன்புஇலர்,
வெம்மலை அருஞ்சுரம் இறந்தோர்க்கு
என்நிலை உரையாய், சென்றுஅவண் வரவே.

தெளிவுரை

"*தும்பியே! அறவழியில் செல்லாதோய்! நீ மிகக் கொடியை; இருப்பினும் வாழ்க! நான் வருந்துவதற்குக் காரணமாய் இருக்கும்*

இந்நோயை நீயும் படுக. நான் உன்னிடம் உரைத்துப் பெற்ற பயன் யாது ஒன்றுமில்லை. மிகவும் பெரிதாய் அமைந்துள்ள வேலி நம் இல்லத்தைச் செம்மையாய்ப் பாதுகாக்கிறது. அவ்வேலியில் நுண்ணிய முள்களைக் கொண்ட மரங்களின்மீது பீர்க்கங் கொடிகள் படர்ந்துள்ளன. அக்கொடிகளில் தேனும் தாதும் பொருந்திக் குலையாகப் பூத்துள்ள பூக்களில் சென்று தேனைப் பருகி எடுக்கிறாய். அதற்கு மாறாய் நாற்றம் இல்லாததால் என் மேனியில் பூத்துள்ள பசலைப்பூவை ஊதுவதில்லை! சிறிய குறுகிய உன் பெடையிடம் அன்பு கொண்டு விரைந்து ஓடி, அதன் உள்ளம் நெகிழுமாறு கூடி அருள் செய்து அதன் பின்னே சுழன்று திரிவதால், என்னிடம் வரவில்லை போலும்! அதனால் தான், என்னிடத்தில் அன்பில்லாதவராய், செல்லுதற்கரிய மலை சூழ்ந்த வழியிலே சென்றுள்ள தலைவரிடம் சென்று, நான் அடைந்துள்ள துயர நிலையைப் பற்றிக் கூறவில்லை; இங்கு வருமாறும் அவரிடம் கூறவில்லை. உன் உடம்பு கரியது. அதனால் உன் அறிவும் கரிய நிறம் வாய்ந்ததோ!" என்று தும்பியை நோக்கித் தலைவி கூறினாள்.

கருத்து

தும்பியே! நீ சென்று தலைவரிடம் என் துன்பத்தைக் கூறி அவரை வரச் சொல்லவில்லை. ஆதலின், நான் படும் துன்பத்தை நீயும் படு.

குறிப்பு

'துணையோடு கூடி இன்பம் துய்க்கின்றவர் தம்மைப் போலப் பிறரும் துய்க்க வேண்டும் என்று கருதுவர். ஆனால், நீ அவ்வாறன்றி நீ மட்டும் இன்பம் துய்த்துக்கொண்டு என் நோயைப் பற்றித் தலைவரிடம் சென்று கூறவில்லை. ஆதலால், உன் நிறம் மட்டுமன்று, அறிவும் கரியதே' என்று தலைவி கூறினாள்.

சொற்பொருள்

1. கொடியை - கொடியதாய் இருக்கிறாய்; இந்நோய் - நான் படுகின்ற இந்நோயை. (நீயும் படுவாயாக!)
2. யான் நினக்கு உரைத்து என்? - நான் உன்னிடம் உரைத்து என்ன பயன்?
3. மெய் - மேனி.

3-4. செவ்வன் அறிவு - செவ்வையாய் இருக்க வேண்டிய அறிவு.
4. அறனிலோய்! - அறநெறியில் செல்லாதோய்.
5. கிடக்கை - வீட்டைச் சூழ்ந்து கிடப்பது.
6. பொதுளிய - செறிந்த.
7. தாறு - குலை; பீரம் - பீர்க்கம் பூ; வேறுபட - அப்பூவினின்றும் வேறுபட்டு.
8. நாற்றம் - மணம்; பசலை - (என்னிடத்தில் பீர்க்கம் போலப் பூத்துள்ள) பசலையை.
9. சிறு குறும் பறவை - சிறிய குறுகிய பெட்டைத்தும்பி.
10. நெஞ்சு நெகிழ் செய்ததன் பயன் - உள்ளம் நெகிழுமாறு அன்பு செய்ததன் பயனாய் (என்னிடம் வரவில்லை போலும்).
11. வெம்மலை - வெப்பம் மிக்க மலை; அருஞ்சுரம் - கடத்தற்கரிய காடு; இறந்தோர் - கடந்து சென்றவர்.
12. அவண் சென்று - அவர் இருக்கும் அங்கே சென்று; வர - விரைந்து வருமாறு.

தலைவி கூற்று

ஐந்திணை ஐம்பது 42 **மாறன் பொறையனார்**

திணை : நெய்தல்

கூற்று

காமம் மிக்க கழிபடர் கிளவி (கழி - மிகுதியான, படர் - துன்பம், கிளவி - சொல்.)

கூற்று விளக்கம்

ஒரு குறிப்பிட்ட காலத்தில் திரும்பி வருவதாய்ச் சொல்லிச் சென்ற தலைவன், அக்காலத்தில் வாராமையால் காதல்மிக்குத் துன்பம் அடைந்த தலைவி தன்னை மறந்தவளாய் நண்டினை நோக்கிச் சொல்வது.

கொடுந்தாள் அலவ! குறையாம் இரப்பேம்
ஒடுங்கா ஒலிகடல் சேர்ப்பன் – நெடுந்தேர்
கடந்த வழியைஎம் கண்ணாரக் காண
நடந்து சிதையாதி நீ.

தெளிவுரை

"வளைந்த கால்களைக் கொண்ட நண்டே! எப்போதும் நீங்காத ஒலியைக் கொண்ட கடல்துறைக்கு உரியவனான எம் தலைவன், நெடிய தேர் ஏறி என்னைப் பிரிந்து சென்றான். அவன் சென்ற தேரின் சக்கரங்கள் பதிந்துள்ள வழிச்சுவடுகளை எம் கண்கள் நன்றாய்க் கண்டுகொண்டே இருக்க வேண்டும். ஆகையால், அவற்றின்மேல் ஊர்ந்து அழித்துவிடாதே என்று உன்னை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தலைவி நண்டினை வேண்டுகிறாள்.

கருத்து

நண்டே! தலைவனின் தேர்ச்சக்கரம் பதித்த சுவட்டினை அழித்துவிடாதே! நான் அதைக் காணவேண்டும்.

சொற்பொருள்

1. கொடுந்தாள் - வளைந்த கால்; அலவன் - நண்டு.
2. ஒடுங்கா ஒலி - எப்போதும் நீங்காத ஒலி; சேர்ப்பன் - நெய்தல் நிலத் தலைவன்.
3. கண்ணாரக் காண - கண்களால் நன்றாய்க் காண.
4. நடந்து - ஊர்ந்து; சிதைத்தல் - அழித்தல்.

தலைவி கூற்று

அகநானூறு 170 மதுரைக் கள்ளிற்கடையத்தன் வெண்ணாகனார்

திணை : நெய்தல்

கூற்று

தலைமகள் காமம் மிக்க கழிபடர் கிளவியாற் சொற்றது.

கூற்று விளக்கம்

தலைவனது பிரிவாற்றாது தலைவி வருந்தினாள்; தனது வேட்கை மிகுதியாலே கேளாதனவற்றைக் கேட்பனவாய் விளித்து, தலைவனிடத்துச் சென்று தன் துன்பமிகுதியினை எடுத்துக் கூறுமாறு சொல்லியது.

கானலும் கழறாது; கழியும் கூறாது;
தேன்இமிர் நறுமலர்ப் புன்னையும் மொழியாது;
ஒருநின் அல்லது பிறிதுயாதும் இலனே;
இருங்கழி மலர்ந்த கண்போல் நெய்தல்
கமழ்இதழ் நாற்றம் அமிழ்துஎன நசைஇ,
தண்தாது ஊதிய வண்டினம் களிசிறந்து,
பறைஇய தளரும் துறைவனை, நீயே,
சொல்லல் வேண்டுமால்– அலவ, பல்கால்
கைதைஅம் படுசினை எவ்வமொடு அசாஅம்
கடற்சிறு காக்கை காமர் பெடையொடு
கோட்டுமீன் வழங்கும் வேட்டம்மடி பரப்பின்
வெள்இறாக் கனவும் நள்ளென் யாமத்து,
'நின்உறு விழுமம் களைந்தோள்
தன்உறு விழுமம் நீந்துமோ?' எனவே.

தெளிவுரை

"*நண்டே! கரிய கழியில் மலர்ந்த, கண்போன்ற நெய்தற் பூவின் நறுமணம் கமழ்கின்ற இதழின் மணத்தை அமிழ்து என விரும்பிச் சேர்ந்த வண்டினங்கள், அப்பூக்களில் உள்ள குளிர்ச்சி பொருந்திய தேனை உண்டு, களிப்பு மிகுந்து பறக்கவியலாமல் தளர்ச்சியுற்றுக் கிடக்கும் துறையையுடையவன், தலைவன். அவன் பிரிவால் நான் அடைந்த துன்பமிகுதியினைக் கடற்கரைச்சோலையும் கூறாது; உப்பங்கழியும் சொல்லாது; வண்டு பாடும் மணம் கமழும் மலர் விளங்கும் புன்னை மரமும் கூறாது. எனக்கு உன்னைத் தவிர, வேறு துணையில்லை.*

"*தாழையின் தாழ்ந்த கிளையின்மேல், விருப்பத்தைக் கொண்ட தன் பெடையோடு துன்பத்துடன் அமர்ந்திருக்கும் சிறிய கடல் காக்கை சுறாமீன் திரிகின்ற கடற்பரப்பில் வெண்மையான இறால் மீனைப் பிடித்துத் தான் உண்பதாய்க் கனவு கண்டு கொண்டிருக்கும். 'அந்த நள்ளிரவில் நீ வர, உன்னைக் கண்டு, மிக்க உன் துயரினை நீக்கியவள் தலைவி. அவள் இப்போது, தன் துயரினை நீக்கிக்கொள்ள வல்லவளோ?'*

என்று தலைவனிடம் சென்று, நீதான் கூற வேண்டும்" என்று தலைவி கடற்கரையில் ஓடும் நண்டினை நோக்கிக் கூறினாள்.

கருத்து

நண்டே! என் துன்ப நிலையை நீதான் தலைவனிடம் சொல்ல வேண்டும்.

விளக்கம்

"ஏ, நண்டே! என் துன்பத்தைக் கானலும் எடுத்துச் சொல்லாது; கழியும் கூறாது; புன்னை மரமும் உரைக்காது; உன்னைத் தவிரத் துணை பிறிது இல்லேன். துறைவனிடத்தில் சென்று, நீயே எனக்காகப் பரிந்துரைத்தல் வேண்டும். 'நள்ளிரவில் உன் காமத்துன்பத்தைப் போக்கி இன்பத்தைத் தந்தவள், தான் உற்ற துன்பத்தை உன் துணையின்றி எவ்வாறு போக்கிக்கொள்வாள்?' என்று நீ தலைவனிடம் கூறல் வேண்டும். கருணை கொண்டு இதனைச் செய்வாயா?" என்று தலைவி நண்டை நோக்கிக் கூறினாள்.

குறிப்பு

தாதுண்ட வண்டுகள் களிவெறியால் மயங்கிப் பறக்கவியலாது தளர்வது போல, தலைவன் தான் வேறிடத்திலே பெற்ற இன்பத்தைத் துறந்து நீங்கி வரமாட்டாதவனாய் மயங்கிக் கிடக்கிறானோ என்று தலைவி கருதுகிறாள் என்பது பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. கானல் - கடற்கரைச்சோலை; கழறாது - கூறாது; கழி - உப்பங்கழி.
2. தேன் - வண்டு; இமிர் - ஒலிக்கும்; மொழியாது - சொல்லாது.
3. பிறிது யாதும் இலனே - வேறு எத்துணையும் இல்லேன்.
4. கண்போல் - கண் போன்ற; நெய்தல் - நெய்தல் மலர்.
5. கமழ் இதழ் - கமழும் இதழின்; நாற்றம் - மணத்தினை; நசைஇ - விரும்பி.
6. ஊதிய - உண்ட; களிசிறந்து - களிப்பு மிக்கு.
7. பறைஇய - பறத்தற்கு; தளரும் - (இயலாது) சோரும்; துறைவன் - கடற்கரைத்தலைவன்.
8. அலவன் - நண்டு; பல்கால் - பல நாளும்.
9. கைதை - தாழை மரம்; படுசினை - தாழ்ந்த கிளையில்; எவ்வம் - துன்பம்; அசாஅம் - தளர்ந்திருக்கும்.

10. காமர் - விருப்பம் மிக்க.
11. கோட்டுமீன் - சுறா மீன்; வேட்டம் மடி - வேட்டையாடுதல் நீங்கிய; பரப்பு - இடம்.
12. வெள்இறா - வெள்ளிய இறாமீன்; கனவும் - கனவு காணும்; நள்ளென் யாமம் - நடு இரவு.
13. நின்உறு - உனக்கு உற்ற; விழுமம் - துயரம்; களைந்தோள் - நீக்கியவள்.
14. தன்உறு - (உன் பிரிவால்) தனக்கு நேரிட்ட; நீந்துமோ? - கடக்க வல்லளோ?

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 32 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

காமம் மிக்க கழிபடர் கிளவி.

கூற்று விளக்கம்

காமம் மிகுதலால் உண்டான துன்பத்தைத் தலைவி சொல்லல்.

தம்முடைய தண்ணளியும் தாமும்தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரோ விட்டுஅகல்க!
அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாம்மறக்க மாட்டேமால்!

தெளிவுரை

குதிரை பூட்டப்பட்ட தம்முடைய தேரில் வந்து, குளிர்ந்த தம் அருளை நமக்குத் தந்த தலைவர், இப்போது எம்மை நினைக்காமல் கைவிட்டுவிட்டாரே! அழகிய மென்மையான பூங்கொத்துகளைக் கொண்ட அடும்பங்கொடிகளே! அன்னங்களே! நம்மை அவர் மறந்து விட்டார். ஆனால், நாம் அவரை மறக்கவே மாட்டோம்.

கருத்து

அன்னங்களே! அடும்பங்கொடிகளே! தலைவர் நம்மை மறந்தாலும் நாம் அவரை மறக்க மாட்டோம்.

சொற்பொருள்

1. தண்அளி - குளிர்ந்த அருள்; மான் - குதிரை.
2. அகல்க - நீங்குக.
3. அம் மென் இணர் - அழகிய மென்மையான பூங்கொத்து; அடும்பு - அடும்ப மலர்; அன்னம் - அன்னப்பறவை.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், கானல் வரி 33 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

காமம் மிக்க கழிபடர் கிளவி.

கூற்று விளக்கம்

காமம் மிகுதலால் உண்டான துன்பத்தைத் தலைவி சொல்லல்.

புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணேபோல்
துன்பம் உழவாய் துயிலப் பெறுதியால்
இன்கள்வாய் நெய்தால்நீ எய்தும் கனவினுள்
வன்கணார் கானல் வரக்கண்டு அறிதியோ?

தெளிவுரை

இனிய தேன் ததும்பும் நெய்தல் பூவே! துன்பத்தை மிகுவிக்கும் மாலை நேரம் இது! தலைவன் இங்கு இல்லாமையால் தனிமையால் என் கண்கள் வருந்துகின்றன! உனக்கு அத்தகைய துன்பம் இல்லை. ஆகவே, வருந்தாமல் தூங்குகின்றாய்! உன் கனவில் கொடியவராகிய தலைவர் இக்கானலுக்கு வருவதைக் கண்டாயா?

கருத்து

நெய்தல் பூவே! உன் கனவில் என் தலைவர் வரக் கண்டாயா?

விளக்கம்

"நெய்தல் பூவே! நேரில் வாராதவரைக் கனவிலாது காணலாம் என்றால் துன்பத்தால் எனக்குத் தூக்கமில்லை. தூங்குகின்ற நீயாவது கனவில் அவரைக் கண்டாயா?" என்று தலைவி

கேட்கிறாள். மலர் கூம்பியிருப்பதை அது தூங்குவதாகச் சொல்கிறாள்.

சொற்பொருள்

1. புன்கண் - துன்பம்; கூர் - மிகுதி; புலம்பும் - வருந்தும், அழும்.
2. உழத்தல் - வருந்துதல்; துயில்தல் - உறங்குதல்.
3. இன் கள் வாய் - இனிய தேன் வாய்க்கப்பெற்ற; நெய்தல் - நெய்தல் மலர்; எய்தும் - அடையும், காணும்.
4. வன்கணார் - கொடியவர்; கானல் - கடற்கரைச்சோலை.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 34 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

காமம் மிக்க கழிபடர் கிளவி.

கூற்று விளக்கம்

காமம் மிகுதலால் உண்டான துன்பத்தைத் தலைவி சொல்லல்.

புள்இயல்மான் தேர்ஆழி போன வழிஎல்லாம்
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய்மற்று என்செய்கோ?
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய்மற்று எம்மோடுஈங்கு
உள்ளாரோடு உள்ளாய் உணராய்மற்று என்செய்கோ?

தெளிவுரை

தெளிந்த நீரினைக் கொண்ட கடலே! பறவைகள் போல விரைந்து செல்லும் குதிரைகள் பூட்டிய என் தலைவரின் தேர்ச் சக்கரங்கள் சென்ற வழி முழுவதையும் அலைகளால் அழித்து விட்டாயே! (அவற்றைக் கண்டாவது ஆறுதல் கொண்டிருந்த) நான் இனி என் செய்வேன்? என்னோடு இருந்துகொண்டு, பழி தூற்றுகின்ற அயலாரோடு சேர்ந்து நீயும் எனக்குத் துன்பம் தருகிறாய்! என் நோயை நீ அறியாய்! இனி நான் என் செய்வேன்?

கருத்து

அலையே! தேர் சென்ற வழியைக் கண்டு நான் ஆறுதல் கொண்டேன். அவ்வழியை நீ அழிக்கின்றாயே!

சொற்பொருள்

1. புள் - பறவை; இயல் - (விரைந்து செல்லும்) தன்மை; மான் - குதிரை; ஆழி - சக்கரம்.
2. தெள்ளு நீர் - தெளிவான நீர்; ஓதம் - அலை; என் செய்கோ? - என் செய்வேன்?
4. உள்ளாரோடு - அயலாரோடு (உள்ளுதல் - நினைத்தல்); உள்ளாய் - சேர்ந்திருக்கிறாய்; உணராய் - என் காதல் நோயை அறியாய்.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 35 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

காமம் மிக்க கழிபடர் கிளவி.

கூற்று விளக்கம்

காமம் மிகுதலால் உண்டான துன்பத்தைத் தலைவி சொல்லல்.

நேர்ந்தநம் காதலர் நேமி நெடுந்திண்தேர்
ஊர்ந்த வழிசிதைய ஊர்கின்ற ஓதமே!
பூந்தண் பொழிலே! புணர்ந்துஆடும் அன்னமே!
ஈர்ந்தண் துறையே! இதுதகாது என்னீரே!

தெளிவுரை

நம்மோடு பொருந்திய நம் காதலரின் நெடிய வலிமையான தேர் சென்ற வழி சிதையுமாறு அலை வீசுகின்ற கடலே! பூக்களைக் கொண்ட குளிர்ந்த சோலையே! துணையுடன் கூடி விளையாடும் அன்னமே! ஈரத்தோடு விளங்கும் குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறையே! 'பிரியேன் என்று உறுதி கூறிப்

பின்னர் இவ்வாறு தவிக்கவிட்டுப் பிரிந்து செல்வது தகாது' என்று உங்களுள் எவருமே தலைவரிடம் கூறவில்லையோ?

கருத்து

கடலே! சோலையே! அன்னமே! துறையே! என் துயரைத் தலைவர்க்குக் கூற மாட்டீரா?

சொற்பொருள்

1. நேர்ந்த - பொருந்திய; நேமி - தேர்ச்சக்கரம்; நெடுந்திண் தேர் - நெடிய வலிமையான தேர்.
2. ஊர்ந்த - சென்ற; சிதைய - அழியுமாறு; ஊர்கின்ற - வீசுகின்ற; ஓதமே - அலையே!
3. பூந்தண் பொழில் - பூக்களைக் கொண்ட குளிர்ச்சி பொருந்திய சோலை; புணர்ந்து - (துணையுடன்) கூடி.
4. ஈர்ந்தண் - ஈரமான குளிர்ச்சி பொருந்திய; துறை - நீர்த்துறை.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 36 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

காமம் மிக்க கழிபடர் கிளவி.

கூற்று விளக்கம்

காமம் மிகுதலால் உண்டான துன்பத்தைத் தலைவி சொல்லல்.

நேர்ந்தநம் காதலர் நேமி நெடுந்திண்தேர்
ஊர்ந்த வழிசிதைய ஊர்ந்தாய்வாழி கடல்ஓதம்!
ஊர்ந்த வழிசிதைய ஊர்ந்தாய்மற்று எம்மொடு
தீர்ந்தாய்போல் தீர்ந்திலையால் வாழி கடல்ஓதம்!

தெளிவுரை

அலை வீசுகின்ற கடலே! நம்மோடு பொருந்திய நம் காதலரின் நெடிய வலிமையான தேர் சென்ற வழி சிதையுமாறு நீ செய்துவிட்டாய்! இவ்வாறு செய்ததால் உறவினனாய் இருந்த

நீ, பழைய உறவு நிலை கெட்டுப் பகையே ஆனாய்! ஆயினும் நீ வாழ்க!

கருத்து

'அவர் பிரிவுதான் எனக்குப் பகை; அலையே நீயுமா பகையாகி விட்டாய். அவர் தேர் சென்ற வழியை அழித்துவிட்டாயே!'

சொற்பொருள்

1. நேமி - சக்கரம் (கொண்ட); நெடுந்திண் தேர் - நெடிய வலிமையான தேர்.
2. ஊர்ந்த - சென்ற; சிதைய - அழிய; ஊர்ந்தாய் - அலை வீசி (அழித்தாய்); ஓதம் - அலை.
4. தீர்ந்தாய் - உறவு போல் இருந்து; தீர்ந்தாய் - அவ் உறவு நிலை கெட்டாய்!

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 38 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

காமம்மிக்க கழிபடர் கிளவி.

கூற்று விளக்கம்

பொருள் தேடச் சென்ற தலைவன் உரிய காலத்தில் வாராததால் காமம் பெருகிய தலைவி தன் துன்பத்தைக் கடலிடம் சொல்லிக் கலங்கியது.

மாக்கடல்சேர் வெண்மணல் தண்கானல் பாய்திரைசேர்
மாக்கடல்சேர் தண்பரப்பன் மார்(பு)அணங்கா – மாக்கடலே
என்போலத் துஞ்சாய் இதுசெய்தார் யார்உரையாய்
என்போலும் துன்பம் நினக்கு.

தெளிவுரை

பெரிய கடலலைகளால் வந்து குவிந்த வெண்மையான மணலைக் கொண்டது, குளிர்ச்சி பொருந்திய கடற்கரைச் சோலை. அதன்மீது அலைகள் வந்து மோதுகின்றன. "பெரிய கடலே! தலைவனின் மார்பு உனக்குத் துன்பம் செய்தது இல்லை.

என்றாலும், என்னைப் போன்று நீயும் உறங்காது ஓலமிட்டுக் கொண்டு இருக்கின்றாய்! எனக்குத்தான் தலைவன் துன்பத்தைச் செய்தான். இதுபோன்ற கொடுமையினை உனக்குச் செய்தவர் யார்? சொல்" எனக் கடலைப் பார்த்துத் தலைவி வினவினாள்.

கருத்து

தலைவன் துன்பம் இழைத்ததால் நான் புலம்புகிறேன். கடலே! நீயும் ஓயாது புலம்புகிறாயே! எனக்குத் துன்பம் இழைத்தவர்போல் உனக்குத் துன்பம் இழைத்தவர் யார்? சொல்.

சொற்பொருள்

1. **கானல் பாய் திரை சேர் - கடற்கரைச்சோலையில் பரவுகின்ற அலைகள் சேர்ந்த.**
2. **தண் பரப்பன் - குளிர்ச்சி பொருந்திய இடத்தினையுடைய தலைவன்; அணங்கா - வருத்தமுறாத.**
3. **துஞ்சாய் - தூங்காய்.**

தலைவி கூற்று

அகநானூறு 398 **இம்மென்கீரனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

காமம்மிக்க கழிபடர் கிளவியால், (வரைவிடத்துக்கண்) தலைமகள், தலைமகன் வரையினின்றும் போந்த ஆற்றொடு புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், வரைவிடைவைத்துத் தலைவியைப் பிரிந்து சென்றிருந்த காலத்தில், அவள் காமவாதையால் மிக்க துயருற்றவளாகி, அவன் மலையி னின்றும் வருகின்ற ஆற்றினிடத்துத் தன் மனக்குறையைக் கூறி வருந்தியது.

'இழைநிலை நெகிழ்ந்த எவ்வம் கூர,
படர்மலி வருத்தமொடு பலபுலந்து அசைஇ,
மென்தோள் நெகிழச் சாஅய், கொன்றை
ஊழுறு மலரின் பாழ்பட முற்றிய
பசலை மேனி நோக்கி, நுதல்பசந்து,

இன்னேம் ஆகிய எம்இவண் அருளான்,
நும்மோன் செய்த கொடுமைக்கு, இம்மென்று,
அலமரல் மழைக்கண் தெண்பனி மல்க,
நன்றுபுற மாறி அகறல், யாழநின்
குன்றுகெழு நாடற்கு என்எனப் படுமோ?
கரைபொரு நீத்தம்! உரை,எனக் கழறி,
நின்னொடு புலத்தல் அஞ்சி, அவர்மலைப்
பல்மலர் போர்த்து, நாணுமிக ஒடுங்கி,
மறைந்தனை கழியும் நிற்றந்து செலுத்தி,
நயன்அறத் துறத்தல் வல்லி யோரே,
நொதும லாளர், அதுகண் ஓடாது,
அழல்சினை வேங்கை நிழல்தவிர்ந்து அசைஇ,
மாரி புறந்தர நந்தி ஆரியர்
பொன்படு நெடுவரை புரையும் எந்தை
பல்பூங் கானத்து அல்கி, இன்று,இவண்
சேந்தனை செலினே சிதைகுவது உண்டோ?
குயவரி இரும்போத்துப் பொருத புண்கூர்ந்து,
உயங்குபிடி தழீஇய மதன்அழி யானை
வாங்குஅமைக் கழையின் நரலும்,அவர்
ஓங்குமலை நாட்டில் வரூஉ வோயே!

தெளிவுரை

"அரிவாள்போலும் கோடுகளைக் கொண்ட ஆண்புலி தாக்கியதால் புண்பட்டு வருந்தும் ஆண்யானையை அதன் பெண்யானை தழுவி நிற்கும். வலிமை குன்றிய அந்த ஆண் யானை வளைந்த மூங்கிலால் செய்யப்பட்ட தூம்புபோல ஓசை யிட்டு மூச்சுவிடும். இத்தகைய காட்சி கொண்ட, தலைவனுக் குரிய உயர்ந்த மலையிலிருந்து எம் நாட்டிற்கு வருகின்ற ஆறே!

"பிரிவுத் துன்பம் மிகுதியானதால் அணிகலன்கள் தம் நிலை யிலிருந்து நெகிழ்ந்தன; தலைவரது நினைவு மிகுந்தமையால் உண்டான வருத்தம் மிகுதியாகி, பலவற்றின்மீதும் வெறுப்புக் கொண்டிருந்தேன். என் தோள்கள் மெலிந்தன; நன்கு மலர்ந்த கொன்றைப் பூக்களைப் போல் உடலில் பசலை ஏற்பட்டது.

நெற்றியிலும் பசலை சேர்ந்தது. இந்த நிலையிலும், எம்மைப் பார்த்து அருள் செய்யாத தலைவன் செய்த கொடுமையை எண்ணிக் கலங்கி, குளிர்ச்சி பொருந்திய உன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிட, நீயும் அறத்தைக் கைவிட்டு ஒதுங்கி ஓடுதல், குன்று பொருந்திய நாட்டினைக் கொண்டுள்ள உன் தலைவனுக்குத் தகுதியாகுமா? உரைப்பாய்! நான் உன்னை வெறுப்பேன் என்று அஞ்சி, அவர் மலையில் உள்ள மலர்களையெல்லாம் போர்த்துக் கொண்டு நாணத்தால் மிகவும் ஒடுங்கி மறைந்து செல்கின்றாய். நீ தலைவர் செய்த கொடுமையை எண்ணிப் பாராது போகின்றாய். உன்னை மட்டும் எம் ஊர் வழியே அனுப்பிவிட்டு, அன்பும் அருளும் இல்லாது எம்மைத் துறந்து செல்லும் வன்மையினைக் கொண்ட அவர் எமக்குத் தலைவர் ஆக மாட்டார்; அயலாரே ஆவார்.

"கரையை மோதி ஓடும் வெள்ளம் பொருந்திய ஆறே! தீயினை ஒக்கும் பூக்கள் நிறைந்த கிளைகளைக் கொண்ட வேங்கை மரத்தின் நிழலினூடே ஓடிக்கொண்டிருப்பதைச் சற்று நிறுத்து. பெய்யும் மழையினால் நீர் பெருக்கெடுக்கும் என் தந்தையின் காடு ஆரியர்களின் பொன் கொழிக்கும் நீண்ட இமயமலையை விட மிகுதியான பரப்புக் கொண்டது. பல நிறப் பூக்கள் கொண்ட அக்காட்டில் இன்றைய ஒரு பொழுது எம்முடன் சேர்ந்து தங்கிச் செல்வதால் உன் செயல் ஏதேனும் கெட்டு விடுமா?" என்று தலைவி, ஓடுகின்ற ஆற்றினை நோக்கிக் கூறினாள்.

கருத்து

தலைவன் நாட்டிலிருந்து ஓடிவரும் ஆறே! நீ ஓடும் போக்கிலிருந்து மாறி ஒரு நாள் என்னுடன் தங்கியிருந்தால் நான் ஆற்றியிருப்பேன் அன்றோ?

விளக்கம்

ஆறே! என் தலைவன் நாட்டிலிருந்து புறப்பட்டு வருகிறாய். அவன் பிரிவால் பசந்து துன்புற்றிருக்கும் எனக்கு அருளாமல் உன் நாட்டுத் தலைவன் எனக்குச் செய்த கொடுமையைக் கண்டு

வருந்திக் கண்ணீர் பெருக்கும் நீ, அறத்தைக் கைவிட்டு ஒதுங்கி ஓடுதல் உன் தலைவனுக்குத் தகுதியாகுமா? சொல். பல நிறப் பூக்கள் கொண்ட என் தந்தையின் காட்டிலே இன்றைய பொழுது நீ தங்கி, என்னுடன் சேர்ந்திருந்து சென்றால் உன் காரியம் ஏதேனும் கெட்டுவிடுமோ? (நீயேனும் அருள்கொண்டு தங்கிப் போகலாகாதா?)

சொற்பொருள்

1. இழை - அணிகள்; எவ்வம் - துன்பம்; கூர - மிகுதியாக.
2. படர் மலி வருத்தம் - நினைந்து வருந்தும் துன்பம்; புலந்து - வெறுத்து; அசைஇ - தங்கி.
3. சாஅய் - வருந்தி; கொன்றை - கொன்றை மரம்.
4. ஊழுறு - நன்கு மலர்ந்த; முற்றிய - நிறைந்த.
5. நுதல் - நெற்றி.
6. இன்னேம் - இன்ன தன்மையேம்; எம் - எமக்கு; அருளான் - அருள் செய்யாதவன்.
7. நும்மோன் - உம் நாட்டுத் தலைவன்; ‘இம்’ - ஒலிக்குறிப்பு (‘இம்’ எனும் ஒலியுடன்).
8. அலமரல் - கலங்கும்; மழைக்கண் - குளிர்ச்சி பொருந்திய கண்; தெண்பனி - தெளிந்த நீர்; மல்க - பெருக.
9. புறம் மாறி - (அறத்தினைக்) கைவிட்டு; அகறல் - நீங்குதல்.
10. என் - யாது?
11. கரைபொரு நீத்தம் - கரையைப் பொருந்தி ஓடும் வெள்ளத்தினைக் கொண்ட ஆறே; உரை - உரைப்பாய்; கழறல் - இடித்துரைத்தல்.
12. புலத்தல் - வெறுத்தல்.
13. போர்த்து - போர்த்துக்கொண்டு; நாணு - நாணத்தால்.
14. மறைந்தனை - மறைந்து; கழியும் - நீங்கும்; நிற்றந்து - உன்னைக் கொணர்ந்து; செலுத்தி - போக்கி.
15. நயன்அற - நீதியின்றி; துறத்தல் - கைவிடுதல்; வல்லியோர் - வலிமை கொண்டவரே!
16. நொதுமலாளர் - ஏதிலார்; அதுகண் ஓடாது - அதனை நோக்காது.
17. அழல்சினை (பூக்கள் மலர்ந்திருப்பதால்) - தீயினை ஒக்கும் கிளை; வேங்கை - வேங்கை மரம்; தவிர்த்து - நீங்கி; அசைஇ - தங்கி.
18. மாரி - மழை; புறந்தர - பாதுகாத்தலால்; நந்தி - பெருகி; ஆரியர் - வடபுல மக்கள்.

19. பொன் படு - பொன் பொருந்திய; நெடுவரை - நீண்ட மலை (இமயமலை); புரையும் - போன்ற; எந்தை - எம் தந்தை.
20. அல்கி - தங்கி.
21. சேந்தனை - சேர்ந்திருந்து; செலினே - சென்றால்; சிதைகுவது உண்டோ? - (உன் காரியம் ஏதாவது) கெட்டுவிடுவதுண்டோ?
22. குயவரி - அரிவாள் போன்று வளைந்த கோடுகளைக் கொண்ட; இரும்போத்து - பெரிய ஆண்புலி; பொருத - தாக்கியதால்; கூர்ந்து - மிகுந்து.
23. உயங்குதல் - வருந்துதல்; தழீஇய - தழுவிய; மதன் - வலிமை; யானை - ஆண்யானை.
24. வாங்குஅமை - வளைந்த மூங்கில்; கழையின் - தூம்பு (ஊதுகொம்பு) போல; நரலும் - ஒலிக்கும்; அவர் - தலைவர்.
25. ஓங்குமலை - உயர்ந்த மலை; வரூஉவோயே - ஓடி வருகின்ற ஆறே!

தலைவி கூற்று

ஐந்திணை ஐம்பது 43 **மாறன் பொறையனார்**

திணை : நெய்தல்

கூற்று

காமம் மிக்க கழிபடர் கிளவி.

கூற்று விளக்கம்

குறிப்பிட்ட காலத்திற்குள் வருவதாய்க் கூறிச் சென்ற தலைவன் அக் காலத்திற்குள் வந்து சேராததால் அவன் உடனே வருவானா என்பதைக் கூடலிழைத்துக் காணலாம் எனத் தலைவி கூறியது.

பொரிப்புறப் பல்லிச் சினையீன்ற புன்னை
வரிப்புற வார்மணல்மேல் ஏறித் – தெரிப்புஉறத்
தாழ்கடல் தண்சேர்ப்பன் தார்அகலம் நல்குமேல்
ஆழியால் காணாமோ யாம்.

தெளிவுரை

"அடிப்பாகத்தே கிடக்கும் பொருள்கள் தெளிவாய்த் தெரியுமாறு தாழ்ந்து ஆழமாய் உள்ள குளிர்ச்சி பொருந்திய கடல் துறையைக் கொண்டவன், தலைவன். மாலைகளணிந்த அவன்

மார்பு நமக்கு உடனே வாய்க்குமா என்பதைக் கூடலிழைத்துக் காண்போம். பொரிந்த வெளிப்பக்கத்தினைக் கொண்ட பல்லியின் முட்டையினைப் போன்ற அரும்புகளைத் தோற்று விக்கும் புன்னையின் பூந்துகள் வரியாய் அமைந்திருக்கும் மேற் பாகத்தினைக் கொண்ட உயர்ந்த மணற்குன்றின் மேலேறிச் சென்று, அமர்ந்து, கூடல் இழைப்போம், வா" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

தோழியே! தலைவன் குறித்த காலத்தில் வந்து சேர்வானா என்பதை அறிந்து கொள்வோமா?

கூடலிழைத்தல்

கண்ணை மூடிக்கொண்டு மணலில் ஒரு வட்டம் வரையும் போது அதன் இருதலையும் கூடினால் அதை நன்னிமித்தமாய்க் கொண்டு தாம் எண்ணிய எண்ணம் நிறைவேறும் என்று கொள்வர்.

ஒரு பெருவட்டத்துள் பல சிறு வட்டங்கள் சுழித்துப் பின் அச் சுழித்தவற்றை எண்ணி, அவை இரட்டைப்படையாயின் எடுத்த செயல் நிறைவுறும் என்று முடிவு செய்வர் என்னும் கருத்தும் நிலவுகிறது.

சொற்பொருள்

1. பல்லிச்சினை - பல்லியின் முட்டை(யினைப் போன்ற) அரும்புகளை; ஈன்ற - தோற்றுவிக்கும்.
2. வரி - வரியாய் அமைந்திருக்கும்; புறம் - மேற்பாகம்; வார்மணல் - உயர்ந்த மணல் குன்று.
3. தாழ் - தாழ்ந்து ஆழமாயுள்ள; தார் - மாலை (அணிந்த); அகலம் - மார்பு.
4. ஆழியால் - கூடலிழைப்பால்.

தலைவி கூற்று

நற்றிணை 335 **வெள்ளிவீதியார்**

திணை : நெய்தல்

கூற்று

காமம் மிக்க கழிபடர் கிளவி மீதூர்ந்து தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனிடம் கொண்ட காம மிகுதியால் நெஞ்சழிந்த தலைவி நள்ளிரவுப்போதிலும் கண் மூடாதவளாய்ச் சோர்ந்த நிலையில் தனக்குத் தானே சொல்லிக்கொள்வது.

திங்களும் திகழ்வான் ஏர்தரும்; இமிழ்நீர்ப்
பொங்குதிரைப் புணரியும் பாடு ஓவாதே;
ஒலிசிறந்து ஓதமும் பெயரும், மலிபுனல்
பல்பூங் கானல் முள்இலைத் தாழை
சோறுசொரி குடையின் கூம்புமுகை அவிழ,
வளிபரந்து ஊட்டும் விளிவுஇல் நாற்றமொடு
மைஇரும் பனைமிசைப் பைதல உயவும்
அன்றிலும் என்புறம் நரலும்; அன்றி,
விரல்கவர்ந்து உழந்த கவர்வின் நல்யாழ்
யாமம் உய்யாமை நின்றன்று;
காமம் பெரிதே; களைஞரோ இலரே!

தெளிவுரை

"நிலவும் விண்ணில் எழுந்து தோன்றும்; அலைகளைக் கொண்ட கடலும் ஓசை அடங்காது முழங்கும்; கடல்நீரும் கரையை மோதிமோதிப் பெயரும்; பல்வகைப் பூக்களைக் கொண்ட கடற்கரைச்சோலையில் முள்ளுள்ள இலைகளைக் கொண்ட தாழையும் சோற்றைச் சொரிகின்ற குடைபோன்ற கூம்பிய அரும்பினை மலரச்செய்யும்; காற்று அப்பூமடலுள் புகுந்து முடிவில்லாது எங்கும் மணத்தைப் பரப்பும்; கரிய பெரிய பனை மரத்திலிருந்து அன்றிலும் ஒலித்தபடி இருக்கும்; இவையேயல்லாமல் விரலால் தடவி இசை கூட்டிட விருப்பம் தரும் நல்ல யாழும் இரவின் நடுயாமத்தில் நான் உயிர்

வாழாதவாறு சோக இசையை எழுப்பும்; இவற்றால் என் காம நோய் மிகுந்த அளவினதாகிறது. அதனை நீக்கிக் காக்க வல்ல காதலரோ இங்கே இல்லை; இனி என் செய்வேன்?" என்று தலைவி தனக்குள்ளே சொல்லிக்கொள்கிறாள்.

கருத்து

பெருகி வரும் என் காம நோயைத் தடுத்து நிறுத்த என் காதலர் அருகில் இல்லையே.

விளக்கம்

திங்கள், குளிர்ந்த நிலவைப் பொழிகிறது; கடல்அலைகள் ஓயாது ஆரவாரம் செய்கின்றன; தாழை மலர்ந்து எங்கும் மணம் பெருக்குகிறது; அன்றிலும் கேட்டபோர் உருகுமாறு இசைத்துக் கொண்டிருக்கிறது; யாழும் நான் உய்ய முடியாதபடி இசையைப் பாயவிட்டுக்கொண்டிருக்கிறது. இவற்றாலே என் காமநோய் மிகுகிறது; அதனை நீக்கி உய்விக்கவல்ல என் தலைவர் இங்கு இல்லை. நான் என் செய்வேன்?

சொற்பொருள்

1. திங்கள் - நிலவு; ஏர் - அழகு; இமிழ் - ஒலிக்கும்.
2. புணரி - கடல்; பாடு - ஓசை; ஓவாது - அடங்காது.
3. ஓதம் - கடல்நீர்; மலிபுனல் - மிகுந்த நீர்.
5. குடையின் - குடை போன்ற; முகை அவிழ - மலர.
6. வளி - காற்று; விளிவுஇல் - முடிவு இல்லாத.
7. மை இரும் - மை போன்ற கரிய; மிசை - மேலே; பைதல - துன்பத்தொடு; உயவும் - வருந்தும்.
8. அன்றில் - ஒரு வகைப் பறவை; என் புறம் - என் பக்கத்தே வந்து; நரலும் - ஒலிக்கும்.
9. கவர்ந்து - தடவி; உழந்த - வருந்திய; கவர்வின் - விருப்பம் தரும்.
10. உய்யாமை - (என் உயிர்) உய்யாதவாறு; நின்றன்று - (இசை எழுப்பி) நிற்கிறது.
11. களைஞரோ - தீர்ப்பவரோ.

தலைவி கூற்று

குறுந்தொகை 118 **நன்னாகையார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவு நீட்டித்தவழி, தலைமகள் பொழுது கண்டு தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், வரைந்து வருவதற்கான காலம் நீட்டித்ததனால் வருந்தியிருந்த தலைவி, மாலைப்பொழுதும் வந்து துன்புறுத்த, தன் ஆற்றாமையைத் தோழியிடம் கூறியது.

புள்ளும் மாவும் புலம்பொடு வதிய
நள்ளென வந்த நார்இல் மாலை,
பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்,
'வருவீர் உளீரோ?' எனவும்,
வாரார் தோழி!நம் காத லோரே.

தெளிவுரை

"தோழியே! பறவைகளும் விலங்குகளும் தனிமைத் துயரோடு தங்கும்படியாக, செறிந்த இருளுடன் அன்பில்லாத மாலைக் காலம் வந்து சேர்ந்தது. நம் வீட்டில் விருந்தினர் பலர் புகும் வாயிலை அடைக்குமுன், 'உள்ளே வருபவர் எவரேனும் உள்ளீரோ?' என்று வினவுவர். அப்படி வினவும் இக்காலத்திலும் நம் தலைவர் உள்ளே வாரார் ஆயினர்" எனத் தலைவி கூறினள்.

கருத்து

தோழியே! இந்த மாலை வேளையிலும் தலைவர் நம் இல்லிற்கு வந்திலரே!

விளக்கம்

பண்டை நாளில், மாலை வேளையில், வீட்டின் வெளிப்புற வாயிலை அடைக்கும் முன் ஊருக்குப் புதியராய் வந்து வெளித் திண்ணையில் அமர்ந்திருப்பாரை அழைத்து, உணவு தந்து, இரவு

தங்க வைப்பர். 'இன்னும் யாராவது புதியவர் இருக்கின்றாரா' என்று கேட்டு, இல்லை என்று அறிந்த பின்னர்த்தான் கதவை அடைப்பர். சிலவேளை, புதிய விருந்தினருள் ஒருவனாய்த் தலைவனும் உள்ளே புகுந்து தலைவியைச் சந்திப்பதுண்டு.

குறிப்பு

தலைவன் வெளியூரிலிருந்து திரும்பியிருந்தால் இரவு வேளை விருந்தினனாய் இங்கு வந்து, தலைவன் திரும்பியதை அவன் நமக்கு அறிவித்திருப்பான். அவ்வாறு வரவில்லையாதலின் ஊர் திரும்பவில்லை என்று கருதித் தலைவி கலங்குகிறாள்.

சொற்பொருள்

1. புள் - பறவை; மா - விலங்கு; புலம்பு - தனிமை; வதிய - தங்கியிருக்க.
2. நள் என - செறிவாய்; நார் - அன்பு, இரக்கம்.
3. கடவுநர் - வினவுவோர்.
4. எனவும் - என்று வினவவும்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 183 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிந்துழி ஆற்றாளாகிய தலைமகள் மாலைக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

திருமணத்தை முன்னிட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்தான். தலைவி அப்பிரிவிற்கு ஆற்றாளாகி மாலைப்பொழுதை நோக்கிச் சொல்லியது.

தண்கடல் சேர்ப்பன் பிரிந்தென, பண்டையின்
கடும்பகல் வருதி கையறு மாலை!
கொடுங்கழி நெய்தலும் கூம்பக்
காலை வரினும், களைஞரோ இலரே.

தெளிவுரை

(பிரிந்திருக்கும் காதலரைச்) செயலற்றுவிடச்செய்யும் மாலைப்பொழுதே! குளிர்ச்சி பொருந்திய கடற்கரைக்குத் தலைவன் பிரிந்திருந்தனன் என்பதால் முன்பு வந்து வருத்தினை. இப்போதோ வெயில் கொளுத்தும் நண்பகலிலும் வந்துள்ளாய். இனி, உப்பங்கழியில் மலர்ந்துள்ள நெய்தல் மலர் கூம்பும் படியான காலை நேரத்தில் வந்தாலும் வருவாய்! உன்னைத் தடுக்க எவரும் இலர். (நீ எதுவும் செய்வாய்! உன்னைத் தடுக்க எவருளர்?)

கருத்து

தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவிக்கு எப்பொழுதுமே மாலைப் பொழுதுதானா?

விளக்கம்

‘*மாலைப்பொழுதே! தனித்திருக்கிறேன் என்பதறிந்து என்னைக் கொடுமை செய்யத் துணிந்துவிட்டனை. நீ இது மட்டுமா செய்வாய்; இன்னமும் செய்வாய். உன்னைக் கேட்க யாருளர்?' எனத் தலைவி மாலைப்பொழுதிடம் சொல்கிறாள்.*

சொற்பொருள்

1. சேர்ப்பன் - நெய்தல் நிலத்தலைவன்; பண்டையின் - முன்பு வந்தது போலவே.
2. கடும்பகல் - வெயில் கொளுத்தும் நண்பகல்; கையறு மாலை - செயலற்றுவிடச் செய்யும் முன் இரவு.
3. கொடுங்கழி - வளைந்த உப்பங்கழி; கூம்ப - குவிய.
4. களைஞர் - தடுப்பவர்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 195 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைமகன் தனித்துறைவு ஆற்றானாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், திருமணத்திற்காகப் பொருளீட்டிவரத் தலைவியைப் பிரிந்து சென்றிருந்தபோது, தனித்து வாழ முடியாமல் தலைவியை நினைந்து ஆற்றாமையால் தன் நெஞ்சோடு சொல்லியது.

வளைபடு முத்தம் பரதவர் பகரும்
கடல்கெழு கொண்கன் காதல் மடமகள்
கெடல்அரும் துயரம் நல்கிப்
படல்இன் பாயல் வெளவி யோளே.

தெளிவுரை

சங்கு ஈன்ற நல் முத்துகளை விலைக்கு விற்றதற்கு இடமான கடல் பொருந்திய நெய்தல்நிலத் தலைவனுடைய அன்புக்குரிய இளமகள் நம் தலைவி. அவளால் அன்றிப் பிறரால் தீர்க்க முடியாத துன்பத்தை வழங்கி, கண்கள் இமைபொருந்துவதால் உண்டாகும் உறக்கத்தைக் கவர்ந்து கொண்டாள். (இத்தனிமையைப் பொறுத்துக் கொள்வது எவ்வாறு?)

கருத்து

தலைவியைப் பிரிந்து தனிமைத்துயர் தாங்காது உறக்கம் இழந்து தவிக்கிறேன்.

விளக்கம்

தலைவி, முத்தினைத் தந்து பிற பொருள் வாங்கும் பரதவர் மகள் ஆதலின் எனக்குத் துயரத்தைத் தந்து என் தூக்கத்தைக் கவர்ந்து கொண்டாள்.

சொற்பொருள்

1. வளை - சங்கு; படும் - (வழியாய்த்) தோன்றும்; முத்தம் - முத்து; பகரும் - (விலை) கூறும்.
2. கொண்கன் - நெய்தல் நிலத் தலைவன்; காதல் - அன்பு; மடம் - இளமை.
3. கெடல் அரும் - தீர்க்க முடியாத; துயரம் - துன்பம்; நல்கி - வழங்கி, கொடுத்து.
4. படல்இன் - இமைகள் பொருந்துவதால் உண்டாகும்; பாயல் - தூக்கம்; வெளவுதல் - கவர்ந்து கொள்ளுதல்.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 40 — **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

மாலைப்பொழுது கண்டு துன்புற்றவளாகித் தலைமகள், தோழிக்கு உரைத்தது..

கூற்று விளக்கம்

வரைவதற்கான பொருளீட்டத் தலைவன் பிரிந்து சென்றுள்ளான். பிரிவாற்றாளாகிய தலைவி, தோழியிடம் உரைத்தது.

இளைஇருள் பரந்ததுவே! எல்செய்வான் மறைந்தனனே!
களைவுஅரும் புலம்புநீர் கண்பொழீஇ உகுத்தனவே!
தளைஅவிழ் மலர்க்குழலாய்! தணந்தார்நாட்டு உளதாம்கொல்
வளைநெகிழ எரிசிந்தி வந்தஇம் மருள்மாலை?

தெளிவுரை

மங்கலான இருட்டு எங்கும் பரந்து விரிந்தது. பகலினைச் செய்யும் சூரியனும் மறைந்துவிட்டான். களைய முடியாத தனிமைத்துயரால் என் கண்கள் நீரைப் பொழிகின்றன. முறுக்கவிழும் மலர்களை அணிந்த கூந்தலைக் கொண்ட தோழியே! நம் வளை கழல, நெருப்பினைச் சிந்தி வந்துள்ள

மயக்கத்தைத் தரும் இந்த மாலைப்பொழுது (நம்மைப் பிரிந்து தலைவன் சென்றுள்ள நாட்டிலும்) இருக்குமன்றோ?

கருத்து

தோழியே! மாலைப்பொழுது தலைவன் சென்றுள்ள நாட்டிலும் இருக்கு மன்றோ? இருந்தால் அவரும் இந்தத் துன்பத்தை உணர்ந்து நம்மைப் பிரிய மாட்டாதவராய்த் திரும்பி இருப்பாரே!

சொற்பொருள்

1. இளைஇருள் - இளைய இருள், மங்கலான இருள்; பரந்தது - விரிந்தது; எல் செய்வான் - பகலைச் செய்பவன், பகலவன்.
2. களைவு அரும் - நீக்குதற்கு அரிய; புலம்பு - தனிமை; கண்பொழி - கண்ணீர்; உகுத்தன - சொரிந்தன.
3. தளை அவிழ் - கட்டு (முறுக்கு) அவிழும்; மலர்க்குழல் - மலர்கள் அணியப்பெற்ற கூந்தல்; தணந்தார் - பிரிந்து சென்றவர்; உளதாம் கொல்? - இருக்கும் அன்றோ?
4. வளை நெகிழ - வளையல்கள் கழல; எரி சிந்தி - நெருப்பு (போன்று சுட்டெரிக்கும் துன்பத்தினை) உண்டாக்கி; மருள் மாலை - மயக்கத் தினைத் தரும் மாலைப்பொழுது.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 41 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

மாலைப்பொழுது கண்டு துன்புற்றவளாகித் தலைமகள், தோழிக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

வரைவதற்கான பொருளீட்டத் தலைவன் பிரிந்து சென்றுள்ளான். பிரிவாற்றாளாகிய தலைவி, தோழியிடம் உரைத்தது.

கதிரவன் மறைந்தனனே! கார்இருள் பரந்ததுவே
எதிர்மலர் புரைஉண்கண் எவ்வநீர் உகுத்தனவே!
புதுமதி புரைமுகத்தாய்! போனார்நாட்டு உளதாம்கொல்
மதிஉமிழ்ந்து கதிர்விழுங்கி வந்தஇம் மருள்மாலை?

தெளிவுரை

கதிவரன் மறைந்துவிட்டான்; கருமையான இருள் படர்ந்து விட்டது. காவி மலரை ஒக்கும் கண்களும் துன்பத்தால் கண்ணீர் உகுக்கின்றன. புதிய முழுமதியைப் போன்ற முகம் கொண்ட தோழியே! நம்மை விட்டுப் பிரிந்தவர் சென்றுள்ள நாட்டிலும் திங்களைத் தோற்றுவித்து, சூரியனை மறைத்துக்கொள்கிற இந்த மங்கிய மாலைப்பொழுது இருக்கும் அன்றோ?

கருத்து

தலைவன் சென்றுள்ள நாட்டிலும் இம்மாலைப்பொழுது இருக்கும் அன்றோ? இருந்தால் அவனும் இத்துன்பத்தை உணர்ந்து நம்மைப் பிரிய மாட்டாதவனாய்த் திரும்பி இருப்பானே!

சொற்பொருள்

1. கதிரவன் - பகலவன்; கார் இருள் - கரிய இருள்.
2. எதிர் மலர் - (ஒன்றுக்கொன்று எதிராயுள்ள) நீலமலர்; புரை - போன்ற; உண்கண் - மையுண்ட கண்கள்; எவ்வம் - துன்பம்; உகுத்தன - சிந்தின.
3. புதுமதி - முழு நிலவு; போனார் - நம்மை விட்டுச் சென்றவர்; உளதாம் கொல்? - இருக்கும் அன்றோ?
4. மதி - நிலவு; உமிழ்ந்து - தோற்றுவித்து; கதிர் - சூரியன்; விழுங்கி - மறைத்து; மருள் மாலை - மங்கிய மாலைப்பொழுது.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 42 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

மாலைப்பொழுது கண்டு துன்புற்றவளாகித் தலைமகள், தோழிக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

வரைவதற்கான பொருளீட்டத் தலைவன் பிரிந்து சென்றுள்ளான். பிரிவாற்றாளாகிய தலைவி, தோழியிடம் உரைத்தது.

பறவைப்பாட்டு அடங்கினவே! பகல்செய்வான் மறைந்தனனே!
நிறைநிலா நோய்கூர நெடுங்கண்நீர் உகுத்தனவே!
துறுமலர் அவிழ்குழலாய்! துறந்தார்நாட்டு உளதாம்கொல்
மறவையாய் என்உயிர்மேல் வந்தஇம் மருள்மாலை?

தெளிவுரை

பறவைகள் ஒலியடங்கின; பகலைச்செய்யும் சூரியனும் மறைந்தான்; நிறுத்தவும் நில்லாத காமநோய் மிகுதலால் என் நெடிய கண்களும் நீரை உகுக்கின்றன; இதழவிழ்ந்த மலர்கள் நெருங்கிய கூந்தலைக் கொண்டவளே! நம்மை விட்டு நீங்கிச் சென்றுள்ளவர் இருக்கும் நாட்டிலும் கொடுமைத்தன்மையுடன் என்னுயிரைப் பருக வந்துள்ள இம்மாலைப்பொழுது இருக்கு மன்றோ?

கருத்து

தலைவர் சென்றுள்ள நாட்டிலும் மாலைப்பொழுது இருக்குமன்றோ?

சொற்பொருள்

1. பகல் செய்வான் - பகலை உண்டாக்கும் கதிரவன்.
2. நிறை நிலா - நிறுத்தவும் நில்லாத; நோய் கூர - துன்பம் மிக; நெடுங்கண் - நெடிய கண்கள்; நீர் உகுத்தன - கண்ணீரைச் சிந்தின.
3. துறுமலர் - நெருங்கிய மலர்; அவிழ் - இதழ் அவிழ்ந்த; குழலாய் - கூந்தலைக் கொண்ட தோழியே!; துறந்தார் - நம்மைவிட்டு நீங்கிச் சென்றவர்.

4. மறவை - வன்கண்மை, கொடுமைத் தன்மை; மருள் மாலை - மயக்கம் தரும் மாலைப்பொழுது.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 48 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

பொழுது கண்டிரங்கல்.

கூற்று விளக்கம்

தலைவி தலைவனைப் பிரிந்துள்ளாள். மாலைப்பொழுது அவளை வருத்துகிறது; அவள் மாலையை நோக்கி, 'நீ என்னை ஏன் இவ்வாறு துன்புறுத்துகிறாய்?" என்று கூறிப் புலம்புகிறாள்.

நுளையர் விளரி நொடிதரும்தீம் பாலை
இளிகிளையில் கொள்ள இறுத்தாயால் மாலை!
இளிகிளையில் கொள்ள இறுத்தாய்மன் நீயேல்
கொளைவல்லாய் என்ஆவி கொள்வாழி மாலை!

தெளிவுரை

மாலைப்பொழுதே! நான் நெய்தலுக்குரிய விளரிப்பாலை ஆகிய பண்ணினைப் பாடும்பொழுது இளி என்னும் நரம்பினைத் தடவுவதற்கு மாறாய்க் கைக்கிளை என்னும் பகைநரம்பினைத் தடவுமாறு எனக்கு மயக்கத்தைத் தந்துவிட்டாய்! இங்ஙனம் மயங்கச்செய்த நீ, பிரிந்திருப்பவர்களின் உயிரை வாங்குதலில் வல்லமை கொண்டுள்ளாய்; ஆதலின், என் உயிரையும் கவர்ந்து செல்வாயாக!

கருத்து

மாலையே! என்னை அணுஅணுவாய் வருத்துவதைவிட உயிரையே எடுத்துக்கொள்ளலாமே!

சொற்பொருள்

1. நுளையர் - நெய்தல் நில மக்கள் (நெய்தலுக்குரிய); விளரி, பாலை - பண்கள்; நொடிதரும் - பாடும் (நொடிதல் - சொல்லல்); தீம் - இனிய.
2. இளி கிளையில் கொள்ள - (பாடும்போது) இளி என்னும் நரம்பினைத் தடவுதற்கு மாறாய்க் கைக்கிளை என்னும் பகை நரம்பினைக் கொள்ளுமாறு; இறுத்தாய் - வந்தாய்.
4. என் ஆவி கொளைவல்லாய் - உயிரைக் கொள்ளை கொள்வதில் வல்லமை வாய்ந்த (மாலைப்பொழுதே); என் ஆவி - என் உயிரை; கொள் - கவர்ந்துகொள்.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 49 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

பொழுது கண்டிரங்கல்.

கூற்று விளக்கம்

தலைவி தலைவனைப் பிரிந்துள்ளாள். மாலைப்பொழுது அவளை வருத்துகிறது; அவள் மாலையை நோக்கி, 'நீ என்னை ஏன் இவ்வாறு துன்புறுத்துகிறாய்?'' என்று கூறிப் புலம்புகிறாள்.

பிரிந்தார் பரிந்துஉரைத்த பேர்அருளின் நீழல்
இருந்துஏங்கி வாழ்வார் உயிர்ப்புறத்தாய் மாலை!
உயிர்ப்புறத்தாய் நீஆகில் உள்ஆற்றா வேந்தன்
எயில்புறத்து வேந்தனோடு என்ஆதி மாலை?

தெளிவுரை

மாலைப்பொழுதே! பிரிந்து சென்ற தலைவர் அன்பு கொண்டு 'உன்னைப் பிரியேன்' என்று முன்னர்க் கூறிய இனிய மொழிகளாகிய நிழலிலே தங்கி ஏங்கி வாழ்கின்றோம். இப்படித் தனிமைத் துயருடன் வாழ்பவர் உயிரை முற்றுகையிட்டுத்

துன்புறுத்துகிறாயே! இவ்வாறு துன்புறுத்தும் நீ கோட்டையி னுள்ளே வலிமையற்று இருக்கும் வேந்தனுடைய மதிலை முற்றுகையிட்டுப் புறத்தே இருக்கும் பகைவேந்தனுக்கு என்ன உறவு உடையையோ? சொல்வாயாக!

கருத்து

மாலையே! போரில் தோற்றுக் கோட்டையினுள் தங்கியிருக்கும் மன்னனை, வென்ற மன்னன் வெளியிலிருந்து வருத்துவதுபோல நீ என்னை வருத்துகின்றாயே!

விளக்கம்

கோட்டைக்குள்ளிருக்கும் வலிமையற்ற வேந்தனைப் போலத் தலைவி வருந்தியிருக்கிறாள். தலைவனது பிரிவுத் துன்பம் வெளியிலிருந்து தாக்கும் பகை அரசனைப் போன்று உள்ளது. வருத்தும் அத்தலைவனுக்கு உதவியாய், மாலைப்பொழுதும் இருக்கிறதே எனத் தலைவி வருந்துகிறாள்.

சொற்பொருள்

1. பிரிந்தார் - பிரிந்து சென்ற தலைவர்; பரிந்து உரைத்த - (உன்னைப் பிரியேன் என்று) அன்புடன் சொன்ன; பேர் அருள் - மிகுந்த அருள்.
2. உயிர்ப் புறத்தாய் - உயிரை முற்றுகை இட்டுள்ள; மாலை - மாலைப் பொழுதே.
3. உள் ஆற்றா வேந்தன் - (பகை கொண்ட மன்னன் முற்றுகையிட்ட போது கோட்டையின்) உள்ளே வருந்தியிருக்கும் மன்னன்.
4. எயில் - கோட்டை; புறத்து - வெளியே உள்ள; என் ஆதி - என்ன உறவு கொண்டுள்ளாயோ?

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 50 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

பொழுது கண்டிரங்கல்.

கூற்று விளக்கம்

தலைவி தலைவனைப் பிரிந்துள்ளாள். மாலைப்பொழுது அவளை வருத்துகிறது; அவள் மாலையை நோக்கி, 'நீ என்னை ஏன் இவ்வாறு துன்புறுத்துகிறாய்?' என்று கூறிப் புலம்புகிறாள்.

பையுள்நோய் கூரப் பகல்செய்வான் போய்வீழ
வையமோ கண்புதைப்ப வந்தாய் மருள்மாலை!
மாலைநீ ஆயின், மணந்தார் அவர்ஆயின்
ஞாலமோ நல்கூர்ந் ததுவாழி மாலை!

தெளிவுரை

பிரிவுத்துன்பம் மிகுதியாகின்றது. கதிரவன் மேற்றிசையில் மறைந்தான். வையகத்து உயிரெல்லாம் கண்மூடித் துயில் கின்றன. மயக்கத்தைத் தரும் மாலையே! நீயும் வந்தாய். என்னை மணந்து சென்றவர் வாராமலிருக்க, நீயும் இவ்வாறு வருத்திக்கொண்டே இருப்பாயானால் அதனால் இவ்வுலகமே துன்புறுமே!

கருத்து

மயக்கும் மாலைப்பொழுதே! என் தலைவன் அருகிலில்லை என்பதால் என்னை வருத்துகிறாயா?

சொற்பொருள்

1. பையுள் நோய் - பிரிவுத்துன்பம்; கூர - மிகுதியாக; வீழ - மறைய.
2. வையம் - உலகத்து (உயிரெல்லாம்); கண் புதைப்ப - கண் மூடித் துயில.
3. மணந்தார் - என்னை மணந்துகொண்டவர்; அவர் ஆயின் - (பிரிந்திருக்கும்) அவராய் இருக்க.
4. ஞாலம் - உலகம்; நல்கூர்தல் - துன்பப்படுதல்.

தோழி கூற்று

நற்றிணை 65 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

விரிச்சி பெற்றுப் புகன்ற தோழி, தலைமகட்குச் சொல்லியது.

(விரிச்சி - நல்வாய்ச்சொல்) தலைவன், குறித்த பருவத்து வாராமையால் வருந்திய தலைவியிடம் தோழி, "நானும் தலைவர் வாராமை குறித்துக் கவலைப்படும்போது, அடுத்த இல்லத்துப்பெண் மற்றொருத்தியிடம் உரை யாடும்போது, 'அவன் தவறாமல் வருகுவன்' என நல்வாய்ச்சொல் கூறக் கேட்டேன். ஆதலின், தலைவர் விரைவில் மீண்டுவந்து சேருவார் என்று நன்னிமித்தத்தால் தெரிய வருகிறது" எனக் குறிப்பிடுகிறாள்.

கூற்று விளக்கம்

குறித்த காலத்தில் தலைவன் திரும்பி வரவில்லை. அதனால் தலைவி வருந்தினாள். அப்போது யாரோ எவரிடமோ சொல்லிய 'அவன் தவறாமல் வருவான்' என்னும் சொற்றொடர் தோழியின் காதில் விழுந்தது. அதனை நல்ல நிமித்தமாய்க் கொண்டு தோழி, தலைவியிடம் தான் கேட்ட நற்சொல்லைக் கூறி, தலைவன் விரைவில் வந்தடைவான் என்று கூறியது.

அமுதம் உண்கநம் அயல்இல் ஆட்டி!
கிடங்கில் அன்ன இட்டுக்கரைக் கான்யாற்றுக்
கலங்கும் பாசி நீர்அலைக் கலாவ,
ஒளிறுவெள் அருவி ஒண்துறை மடுத்துப்
புலியொடு பொருத புண்கூர் யானை
நற்கோடு நயந்த அன்பில் கானவர்
விற்சுழிப் பட்ட நாமப் பூசல்
உருமிடைக் கடிஇடி கரையும்
பெருமலை நாடனை வரூஉம்என் றோளே.

தெளிவுரை

இருபக்கமும் கரையமைக்கப்பட்ட அகழியைப் போன்ற ஒரு காட்டாறு. அதன் நீரலைகள், கலங்கிக்கிடக்கும் பாசியை அலைக்கின்றன. அப்படிக் கலங்கிய பாசிநீர், ஒளிருகின்ற வெள்ளை அருவியின் ஒள்ளிய துறையிலே பாய்கிறது. அந்நீர்த்துறையிலே பாய்ந்து புலியோடு போரிட்டது, ஒரு

யானை. அதனால் புண்பட்டு நலிந்த அந்த யானையின் கொம்புகளைப் பெற விரும்பிய அன்பற்ற வேட்டுவர்கள் வில்லை வளைத்து அம்புகளை ஏவினர். அந்த அம்புகள் தைத்ததால் யானை அச்சமுண்டாகுமாறு முழங்குகிறது. அந்த வேதனை முழக்கம் இடியினால் உண்டாகும் பெருமுழக்கம் போன்றிருந்தது. அத்தகைய பெருமலை நாட்டிற்குரியவன், நம் தலைவன். 'தவறாது வருகுவன்' என்றாள் நம் அடுத்த வீட்டிலிருக்கும் பெண். அவள் சொன்ன சொல்லே நம் தலைவன் வருவான் என்பதற்குரிய அறிகுறியாய் அமைந்துவிட்டது. அப்படிச் சொன்ன அவள், பெறற்கரிய அமுதத்தை உண்டு இன்புறட்டும்.

கருத்து

நற்சொல்லைச் சொன்னவள் அமுதம் உண்க; அவள் சொற்போல் நம் தலைவரும் நம்மிடம் வருக.

இறைச்சி

புலியொடு பொருது புண்பட்ட யானையின் தந்தத்திற்காக அதன்மீது அம்பெய்கிறார்கள், அன்பற்ற கானவர். அதனால் மிகுந்த வேதனையுற்ற யானை இடிபோல முழங்குகிறது. இத்தொடர்மூலம் தலைவனைப் பிரிந்து வேதனையுற்றுள்ள தலைவியைப்பற்றி ஊரவர் கூறிய பழிச்சொல் பரவி, மேலும் அவள் துன்பத்தைப் பெருக்குகின்றது என்னும் இறைச்சிப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. அயல்இல் ஆட்டி - அடுத்த வீட்டுப்பெண்.
2. கிடங்கில் - அகழி; இட்டுக்கரை - இடம் பெற்றாற்போன்று செவ்விதாய் அமைந்த கரை; கான்யாறு - காட்டாறு.
3. கலாவ - கலக்க.
4. மடுத்தல் - குத்துதல்.
5. புண்கூர் - புண்பட்ட.
6. கோடு - கொம்பு; நயந்த - விரும்பிய; அன்புஇல் - அன்பில்லாத; கானவர் - வேட்டுவர்.
7. சுழி - சுழற்சி; நாமப் பூசல் - அச்சத்தைத் தருகின்ற அவலக்குரல்.
8. உரும் - இடி; கரையும் - முழங்கும்.

தோழி கூற்று

நற்றிணை 111 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

விரிச்சி பெற்றுப் புகன்ற தோழி, தலைமகளுக்கு உரைத்தது.

(விரிச்சி - நல்வாய்ச்சொல்) குறித்த பருவத்து தலைவன் வாராமையால் வருந்திய தலைவியிடம் தோழி, " 'பரதவச் சிறுவர் கடலில் பிடித்த மீன்களைக் கொண்டுவந்து கரையில் இறக்குவர்' என்று கூறிய சொற்கள், பொருள் தேடச் சென்ற தலைவன் பெரும் பொருளுடன் வந்து சேர்வான் என்னும் நல்நிமித்தமாய் உள்ளன. ஆதலின் தலைவர் விரைவில் மீண்டுவந்து சேருவார் என்று தெரிய வருகிறது" எனக் குறிப்பிடுகிறாள்.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவை எண்ணித் தலைவி வருந்தியிருக்கிறாள். தலைவன் மீண்டு வருதலை உணர்த்தும் நன்னிமித்தங்களை உணரப்பெற்ற தோழி, தலைவியிடம் தலைவன் விரைந்து வந்து சேர்வான் என்று கூறியது.

அத்த இருப்பைப் பூவின் அன்ன
துய்த்தலை இறவொடு தொகைமீன் பெறீஇயர்,
வரிவலைப் பரதவர் கருவினைச் சிறாஅர்,
மரன்மேற் கொண்டு மான்கணம் தகைமார்
வெந்திறல் இளையவர் வேட்டுஎழுந் தாங்குத்
திமில்மேற் கொண்டு, திரைச்சுரம் நீந்தி,
வாள்வாய்ச் சுறவொடு வயமீன் கெண்டி,
நிணம்பெய் தோணியர் இகுமணல் இழிதரும்
பெருங்கழிப் பாக்கம் கல்லென
வருமே தோழி! கொண்கன் தேரே!

தெளிவுரை

தலைவியே! பாலைநில வழியில் உள்ள இருப்பைமரப்பூப் போன்ற மெல்லிய தலையைக் கொண்ட இறால்மீன்களுடன் பிற மீன்களையும் பெறுவதற்காக, பின்னி வரிந்த வலையைக் கொண்டவராய்ப் பரதவர் உள்ளனர். மரங்களின்மேல் ஏறி நின்று வெளியில் மேயும் மான் கூட்டங்களைத் தடுக்கும் பொருட்டு வெய்ய வலிமை கொண்ட வேட்டுவச் சிறுவர்

விரும்பி நிற்பர். அதுபோல, படகுகளில் ஏறிப் பரதவச் சிறுவர்கள் கடலுக்குள் சென்று, வாள் போன்ற வாயைக் கொண்ட சுறா மீன்களோடு, வலிய பெருமீன்களையும் பிடித்து அவற்றைத் துண்டுகளாக்குவர். பின் அவற்றைப் படகுகளில் நிரப்பிக்கொண்டு திரும்பி வந்து, காற்று வீசும் மணற்பரப்பில் அம்மீன்துண்டுகளை இறக்குவர். இத்தகைய தன்மை கொண்ட பெரிய கழி சூழ்ந்த நம் பரதவர் பாக்கம் கல்லென்று ஒலிக்கும்படி நம் தலைவனது தேர் வந்து நிற்கும்; வருந்த வேண்டா.

கருத்து

நல்நிமித்தச்சொல் பெற்றேன். தலைவன் விரைந்து வந்து சேர்வான். வருந்தாதே! ஆற்றியிரு.

இறைச்சி

பரதவர்குடிச்சிறுவர் மீன்பிடி படகுகளில் கடல்மேல் சென்று வேட்டமாடிக் கொண்டுவரும் மீன் நிணங்களை மணற்பாங்கிலே குவிப்பர். இத்தொடர்மூலம், தலைவனும் சுர நெறியினைக் கடந்து சென்று, தான் ஈட்டிய பெரும்பொருளைத் தலைவியின் தந்தை முன்பாகக் குவித்துத் தலைவியை வரைந்து கொள்வான் என்னும் பொருள் பெறப்படுகிறது.

விரிச்சி : *"மீன் வேட்டம் புரியும் பரதவச்சிறுவர் படகின் மேலேறிக் கடலுக்குள் சென்று, சுறாவும் பிறவுமாகிய மீன்களைப் பிடித்துத் தம் படகு முழுதும் நிரப்பித் திரும்ப வந்து கரையில் உள்ள மணற்பரப்பில் இறக்குவர்" என்பதை விரிச்சி மொழியாய்க் கொண்ட தோழி, 'நம் காதலரும் பெரும் பொருளுடன் தாழாது வந்து சேர்வார்' என மொழிந்தாள்.*

குறிப்பு

வேட்டுவச்சிறுவர் மரங்களினடியில் மான்களுக்காக வலை விரித்து மான்கள் வந்து விழும் செவ்வி நோக்கி மரத்தின்மேல் காத்திருப்பர். இவ்வாறே கடலில் செல்லும் பரதவச்சிறுவர் வலைகளை வீசி, மீன்கள் கிட்டுவதை நோக்கியபடி படகுகளில் இருப்பர்.

சொற்பொருள்

1. அத்தம் - சுர நெறி; இருப்பை - இருப்பை மரம்.

2. துய்த்தலை - மெல்லிய தலையைக் கொண்ட; இறவு - இறால் மீன்.
3. கருவினை - வலிமையோடு.
4. மரன் - மரம்.
5. வேட்டு - வேட்டையை விரும்பி.
6. திமில் - படகு; திரைச்சுரம் - அலைப்பரப்பு.
7. வாள்வாய் - வாள் போன்ற வாயைக் கொண்ட; சுறா - சுறா மீன்; கெண்டி - வெட்டி.
8. நிணம் - ஊன்.
9. கல் என - ஆரவாரத்துடன்.
10. கொண்கன் - தலைவன்.

தோழி கூற்று

குறுந்தொகை 394 — **குறியிறையார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை ஆற்றாளாகிய கிழத்தியை ஆற்றுவிக்கும் தோழி, தலைமகனை இயற்பழித்துக் கூறியது. (இயற்பழித்தல் - இயல்பைப் பழித்துக் கூறுதல்.)

கூற்று விளக்கம்

வரைவிடை வைத்துத் தலைவன் பிரிந்து செல்லத் தலைவி பொறுக்க வியலாத் துயரத்தில் வாடினாள். அவளை ஆற்றுவிக்கக் கருதிய தோழி, தலைவனின் இயல்பைப் பழித்துரைப்பதுபோலக் கூறியது.

முழந்தாள் இரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறுவுமலி பாக்கத்துக் குறமகள் ஈன்ற
குறிஇறைப் புதல்வரொடு மறுவந்து ஓடி,
முன்நாள் இனியது ஆகி, பின்நாள்,
அவர்தினைப் புனம்மேய்ந் தாங்கு,
பகைஆ கின்றுஅவர் நகைவிளை யாட்டே.

தெளிவுரை

தலைவியே! கள்ளுணவு நிறைந்த மலைப்பக்கத்தில் உள்ளது நம் சிற்றூர். அங்கு, முன்பு முழந்தாளைக் கொண்ட பெரிய

பெண் யானையின் கன்று, குறமகள் பெற்றெடுத்த சிறிய முன் கைகளைக் கொண்ட சிறுவர்களோடு சுற்றி ஓடிவந்து விளையாடி இன்பத்தைத் தந்தது. அக்கன்றே பெரிய யானை யாய் வளர்ந்து, பிற்காலத்தில் அவர்கள் தினைப்புனத்தையே மேய்ந்து துன்பம் விளைவிக்கும். அதுபோல, அக்குன்றத்துத் தலைவருடன் நாம் முன்பு நகைத்து மகிழ்ந்தாடிய விளையாட்டு, இப்போது நமக்குத் துன்பம் தந்து பகையாகின்றது." (தலைவன் மாறிவிட்டதாய்த் தோழி பழித்துரைக்கிறாள்.)

கருத்து

'அன்று அவரைக் கூடியதால் பெற்ற இன்பம், இன்று பிரிந்திருப்பதால் பெருந்துன்பத்தைத் தருகிறது' என்று தோழி தலைவன் இயல்பைப் பழித் துரைத்தாள்.

விளக்கம்

கள்ளுணவு நிறைந்த மலைப்பக்கத்து ஊரில் குறவர் குழந்தை களுடன் யானைக்கன்று சுற்றிச் சுற்றி ஓடி விளையாடிற்று. இதே யானைக்கன்று பின்னாளில் பெரிய யானையாய் வளர்ந்து அவர்கள் பயிர் செய்த தினைப்புனத்தை மேய்ந்து துன்பம் விளைவிக்கும். அதுபோல, அவர் முன்பு உன்னுடன் நகைத்து விளையாடிய விளையாட்டு இப்பொழுது துன்பமாய் ஆகி விட்டது.

குறிப்பு

அன்று கண்களில் இன்பக் கண்ணீர்; இன்றோ துன்பக் கண்ணீர்; தலைவனின் இயல்பு இதுதானோ?

சொற்பொருள்

1. இரு - பெரிய; பிடி - பெண்யானை; கயந்தலை - மெல்லிய தலை; குழவி - கன்று.
2. நறவு - கள்; மலி - மிகுந்த; பாக்கம் - கடற்கரை ஊர் என்றாலும் இங்கு மலைப்பக்கத்துச் சிற்றூரைக் குறிக்கிறது; ஈன்ற - பெற்றெடுத்த.
3. குறி இறை - சிறிய முன் கை; மறுவந்து - அங்கும் இங்கும், சுழன்று சுழன்று.
4. முன்நாள் - அக்காலத்தில்; பின்னாள் - பிற்காலத்தில்.

5. அவர் - அக்குறவர் மக்கள்; மேய்ந்தாங்கு - மேய்வது போல.
6. பகை - துன்பம்; நகை விளையாட்டு - சிரித்து விளையாடிய விளையாட்டு.

தோழி கூற்று

குறுந்தொகை 381 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை ஆற்றாளாகிய தலைமகளை ஆற்றுவிக்கலுறும் தோழி, தலைமகனை இயற்பழித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை வரைந்துகொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டான். அதனால் சில காலம் அவன் தலைவியைப் பிரிந்தனனாகத் தலைவியின் துயரம் பெருகியது. அதனைக் கண்ட தோழி தலைவனின் இயல்பைப் பழிக்கும் முறையில் பேசியது.

தொல்கவின் தொலைந்து, தோள்நலம் சாஅய்,
அல்லல் நெஞ்சமோடு அல்கலும் துஞ்சாது,
பசலை ஆகி, விளிவது கொல்லோ
வெண்குருகு நரலும் தண்கமழ் கானல்,
பூமலி பொதும்பர் நாள்மலர் மயக்கி,
விலங்குதிரை உடைதரும் துறைவனொடு
இலங்குஎயிறு தோன்ற நக்கதன் பயனே?

தெளிவுரை

“குளிர்ச்சி பொருந்திய நறுமணம் கமழும் கடற்கரைச் சோலையில் வெண்மையான நாரைகள் ஒலித்துக்கொண் டிருக்கும். மலர்கள் நிறைந்த அச்சோலையில் உள்ள புதிய மலர்கள் கலங்கும்படி அலைகள் வந்து மோதிக்கொண்டிருக்கும். இத்தகைய வளப்பங் கொண்ட கடற்றுறையை உடையவன், தலைவன். அவனுடன் அன்புடன், பற்கள் தோன்றச் சிரித்து

விளையாடினோம். அதன் பயன் இன்று பழமையான அழகு தொலைந்தது; தோள்கள் பூரிப்பை இழந்து மெலிந்தன; நெஞ்சத்திலே இன்பத்திற்கு மாறாய்த் துன்பம் நிறைந்தது; இரவு பகலாய் உறக்கம் இல்லை. உடம்பு முழுதும் பசலை நிறம் படர்கின்றது. இப்படி நாம் அழிவதுதான் நாம் கண்ட பயனா?" என்று தலைவன் இயல்பைப் பழித்துப் பேசினாள், தோழி.

கருத்து

'தலைவனுடன் நாம் நட்புச்செய்ததன் பயன் துன்புற்று அழிவதுதானா?' தலைவன் இயல்பு இதுதானோ?

விளக்கம்

சிரித்து விளையாடியதன் பயனாய் இன்பம் நிகழ்ந்துகொண் டிருக்க வேண்டும். மாறாய் நலம் அழிந்து, உடல் மெலிந்து, உறக்கமின்றித் துன்பத்திற்கு ஆளாகும் நிலை தலைவிக்கு நேரிட்டுவிட்டது. அதனால் தோழி தலைவனின் பெருந் தகையைச் சுட்டிப் பழித்தனளாதலின், இஃது இயற்பழித்ததாய்க் கொள்ளப்படலாயிற்று.

சொற்பொருள்

1. தொல்கவின் - பழைய அழகு; சாஅய் - மெலிந்து.
2. அல்லல் - துன்பம்; அல்கலும் - இரவுதோறும்; துஞ்சாது - தூங்காது.
3. பசலை - பசலை நோய்; விளிவு - அழிவு.
4. குருகு - நாரை; நரலும் - ஒலிக்கும்; கானல் - கடற்கரைச்சோலை.
5. மலி - நிறைந்த; பொதும்பர் - சோலை; நாள் மலர் - அன்று அலர்ந்த புதுமலர்.
6. விலங்குதிரை - கடலுக்குக் குறுக்காய் ஓடிவரும் அலை.
7. இலங்கு - விளங்குகின்ற; எயிறு - பல்; நக்கது - சிரித்துக் கூடியது.

தலைவி கூற்று

குறுந்தொகை 187 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகளை ஆற்றுவிக்க வேண்டித் தலைமகனை இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

கூற்று விளக்கம்

வரைவின்பொருட்டுப் பிரிந்த தலைவன் நீட்டித்தானாக அவன் இயல்புகளைக் குறை கூறிப் பேசிய தோழியை நோக்கித் தலைவி, 'அவன், தான் விரும்பிச் சென்ற செயலை முடித்துக்கொண்டு விரைவில் வருவான்' என அவன் இயல்பை மேம்படுத்திப் பேசியது. (இயற்பழித்தல் - தலைவன் இயல்பைப் பழித்துக் கூறுதல்; இயற்படச் சொல்லுதல் - தலைவன் இயல்பைச் சிறப்பித்துக் கூறுதல்.)

செவ்வரைச் சேக்கை வருடை மான்மறி
சுரைபொழி தீம்பால் ஆர மாந்திப்
பெருவரை நீழல் உகளும் நாடன்
கல்லினும் வலியன் தோழி!
வலியன் என்னாது மெலியும்என், நெஞ்சே.

தெளிவுரை

தோழி! செங்குத்தான மலைப்பக்கத்தில் தங்கி வாழ்வன வருடை மான்கள். அவற்றின் குட்டிகளுள் ஒன்று, தன் தாயின் மடியில் சுரந்த இனிய பாலினை உண்டு, பெரிய மலைப்பக்கத்தே நிழலில் விளையாடிக்கொண்டிருக்கும் மலைநாட்டிற்குரிய நம் தலைவன் மலையைக்காட்டினும் வலிமை மிக்கவன் என்பதை உணர்ந்தும் என் நெஞ்சு, தன் அறியாமையால் மெலிகின்றது.

கருத்து

தோழி! கருதியதை நிறைவேற்றும் தன்மையன் தலைவன்; அவன் இயல்பைக் குறைத்துக் கூறாதே!

விளக்கம்

வரைவிற்கான பொருளீட்டச் சென்ற தலைவன் தான் குறித்துச் சென்ற காலத்தில் திரும்பவில்லை. தலைவி அவன் வாராமை கண்டு வருந்தினாள். தோழி அவளைத் தேற்றும் முறையில், தலைவனின் திறமையைப் பழிப்பதுபோலப் பேசினாள். கருதிய செயலை உரிய காலத்தில் முடிக்கும் திறமை தலைவனிடம் இல்லை என்றாள். தோழி இப்படிக் கூறுவதைத் தலைவியால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. உடனே தோழி கூற்றை மறுத்து, "தலைவன் சிறந்த ஆற்றல் வாய்ந்தவன்; எண்ணியதை முடிக்கும் திண்ணியன். என் நெஞ்சம் அவன் ஆற்றலை அறியாது துன்பப்பட்டுவிட்டது. என் துன்பத்திற்குக் காரணம் தலைவன் அல்லன்; என் உள்ளத்தின் அறியாமையே" என்றாள்.

குறிப்பு

வருடை மான்குட்டி பாலினை ஆர உண்டு மலைப்பக்கத்தே நிழலில் விளையாடும் என்றது, தலைவன் இல்வாழ்க்கைக்கு வேண்டிய பொருளை மிகுதியாய்த் தேடிக் கொணர்ந்து, இல்லத்தில் இருந்து அறம் செய்வான் என்பதாம்.

சொற்பொருள்

1. செவ்வரை - செங்குத்தான மலை, செம்மையான மலை; சேக்கை - இருப்பிடம்; வருடைமான் - ஒரு வகை மான்; மறி - குட்டி.
2. சுரை - மடி; தீம்பால் - இனிய பால்; ஆர - வயிறார; மாந்தி - குடித்து.
3. பெருவரை - பெரிய மலைப்பக்கம்; நீழல் - நிழல்; உகளும் - துள்ளி விளையாடும்.
4. கல் - மலை; வலியன் - வலிமையானவன்.
5. என்னாது - என்று கருதாது; மெலியும் - வருந்தும்.

தலைவி கூற்று

திருக்குறள் 1129 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிவின்கண் தலைமகள் ஆற்றுதற் பொருட்டுத் தோழி தலைமகனை இயற்பழித்தவிடத்து, அவள் இயற்பட மொழிந்தது.

கூற்று விளக்கம்

தலைவன் திருமணத்திற்காகப் பொருள் ஈட்டி வரப் பிரிந்து சென்றிருந்தான். தலைவி அவன் பிரிவை ஆற்றாது வருந்தியிருந்தாள். அவளைத் தேற்றுதற் பொருட்டுத் தோழி, 'தலைவன் தலைவியைத் தவிக்கவிட்டுப் பிரிந்துவிட்டான்' என அவன் இயல்பைப் பழித்துக் கூற, அது கேட்ட தலைவி, தலைவன் இனிய இயல்பினன் என்று கூறியது.

இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னும்இவ் வூர்.

தெளிவுரை

என் கண்கள் இமைக்குமாயின், என்னுள்ளேயே இருக்கும் காதலர் மறைந்துவிடுவார் எனக் கருதி நான் இமைக்காமல் இருக்கிறேன். அவ்வாறிருக்க எனக்குத் 'தூக்கமில்லாக் குறையை அவர் உண்டாக்கி விட்டார்' என இவ்வூர் மக்கள், அவரை அன்பில்லாத அயலவர் என்று குறை கூறுகின்றனர்.

கருத்து

நான் கண்மூடி உறங்குதற்கில்லாது தலைவர் எனக்குக் கொடுமை இழைத்து விட்டார் என ஊரார் வீணே அவரைத் தூற்றுகின்றனர்.

விளக்கம்

இமைப்பொழுதும் நீங்காமல் என் காதலர் என் கண்ணுள் ளேயே இருக்க, அவர் என்னைத் தவிக்கவிட்டு வெளியூர் சென்றுவிட்டார் என்று ஊரார் வீணே பழி தூற்றுகின்றனர். கண் முன்னே நிற்கும் அவர் மறைந்து வாராதிருக்கவே நான் இமைக்காமல் இருக்கிறேன். ஊராரோ நான் தூங்காதிருப்பதாய் நினைத்து, அதற்கு அவரைக் காரணமாக்கிப் பழிக்கின்றனர்.

குறிப்பு

'கணப்பொழுதும் பிரியாதவரைப் பிரிந்தார் என்று நீ பழித்துரைப்பது தகாது' எனத் தோழிக்குத் தலைவி கூறினாள்.

சொற்பொருள்

1. இமைப்பின் - கண் இமைக்குமாயின்; கரப்பாக்கு - (கண்ணுள் இருக்கும் காதலர்) மறைந்து விடுவாரென்று (இமையாதே இருப்பேன்); அனைத்திற்கே - அவ்வளவிற்கே.
2. ஏதிலர் என்னும் இவ்வூர் - (என் காதலர் அன்பில்லாத) அயலவர் என்று ஊரார் பழி தூற்றுகின்றனர்.

தலைவி கூற்று

திருக்குறள் 1130 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிவின்கண் தலைமகள் ஆற்றுதற் பொருட்டுத் தோழி தலைமகனை இயற்பழித்தவிடத்து, அவள் இயற்பட மொழிந்தது.

கூற்று விளக்கம்

தலைவன் திருமணத்திற்காகப் பொருள் ஈட்டி வரப் பிரிந்து சென்றிருந்தான். தலைவி அவன் பிரிவை ஆற்றாது வருந்தியிருந்தாள். அவளைத் தேற்றுதற் பொருட்டுத் தோழி, 'தலைவன் தலைவியைத் தவிக்கவிட்டுப் பிரிந்துவிட்டான்' என அவன் இயல்பைப் பழித்துக் கூற, அது கேட்ட தலைவி, தலைவன் இனிய இயல்பினன் என்று கூறியது.

உவந்து(உ)றைவர் உள்ளத்துள் என்றும் இகந்(து)உறைவர்
ஏதிலர் என்னும்இவ் வூர்.

தெளிவுரை

என் காதலர் எப்போதும் என் உள்ளத்தினுள்ளே மகிழ்ச்சியோடு வாழ்ந்துகொண்டிருக்கிறார். இதை அறியாத இவ்வூர் மக்கள், 'இவளைப் பிரிந்து வாழும் அவர் அன்பில்லாத அயலவர்' என்று அவரைப் பழிதூற்றுகின்றனர்.

கருத்து

என் உள்ளத்துள் அவர் உறைவதை அறியாது, ஊரார் அவர் அன்பின்றிப் பிரிந்திருப்பதாய்ப் பழி தூற்றுகின்றனர்.

விளக்கம்

காதலர் என் உள்ளத்துள் இருக்கிறார்; அதை ஊரார் காணாததால் பிரிந்துவிட்டார் என்று, அறியாமையால் கூறுகின்றனர்.

குறிப்பு

பிரியாதிருக்கும் அவரைத் தோழியே! நீ பழித்துரைப்பது தகாது. ஊரார்தாம் அறியாதவரென்றால், நீயுமா உண்மையை அறிந்திலை.

சொற்பொருள்

1. உள்ளத்துள் என்றும் - (என் காதலன்) என் உள்ளத்தினுள்ளே என்றும்; உவந்து உறைவர் - மகிழ்ச்சியோடு தங்கியிருக்கிறார்.
2. இவ்வூர் - (அதனை அறியாமல்) இவ்வூரிலுள்ளவர்.
1. இகந்து உறைவர் - பிரிந்து இருக்கின்றார்.
2. ஏதிலர் என்னும் - அன்பில்லாத அயலவர் என்றும் சொல்கின்றனர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 96 **அள்ளூர் நன்முல்லையார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகனை இயற்பழித்துத் தெருட்டும் தோழிக்குத் தலைமகள் இயற்படச் சொல்லியது. (தெருட்டும் - தெளிவுபடுத்தும்.)

கூற்று விளக்கம்

விரைவிலே வந்து வரைந்துகொள்வேன் என்று கூறிப் பிரிந்து சென்ற தலைவன், தான் குறித்தபடி வாராததனை அறிந்த தோழி அவனது இயல்பைப் பழித்துக் கூறினாள். அதைக் கேட்ட தலைவி, தலைவனின் இயல்பைப் போற்றிக் கூறித் தோழியை மறுத்துப் பேசியது.

'அருவி வேங்கைப் பெருமலை நாடற்கு
யான்எவன் செய்கோ?' என்றி; யான்அது
நகைஎன உணரேன் ஆயின்,
என்ஆ குவைகொல்? நன்னுதல்! நீயே.

தெளிவுரை

நல்ல நெற்றியைக் கொண்ட தோழியே! அருவிநீரால் வளர்கின்ற வேங்கை மரத்தைக் கொண்ட பெரிய மலைநாட்டைச் சார்ந்தவன், தலைவன். அவனுக்காக, 'நான் இன்னும் என்னதான் செய்ய இயலும்' என்று அவன் இயல்பைப் பழித்துக் கூறினாய். அச்சொல்லை நீ விளையாட்டாகக் கூறினாய் என்றே கொள்கிறேன். அவ்வாறு கொள்ளாமல் இருந்திருப்பேனாயின், நீ இவ்வளவு நேரம் என்ன நிலைக்கு ஆளாகியிருப்பாய் என அறிவாயா? (மிகுந்த துன்பத்திற்கு ஆளாகியிருப்பாய்.)

கருத்து

தோழியே! நீ தலைவன் இயல்பைக் குறைத்துக் கூறுதல் முறையன்று. இனி அப்படிக் கூறாதே!

விளக்கம்

'தோழியே! தலைவன் நம் நிலைமையை அறிந்துகொள்ளவில்லை; என்னால் என்ன செய்ய இயலும்?' என்று பழித்துக் கூறுகிறாய். உண்மையில் நீ அவனைப் பழித்துக் கூறவில்லை; விளையாட்டாய்க் கூறுகிறாய் என்றுதான் கருதுகிறேன். விளையாட்டன்று உண்மையான கூற்றே எனக் கருதியிருப்பேனாயின் உன்னை என்ன பாடுபடுத்தியிருப்பேன் என அறிவாயா? உயர்ந்த பண்புகளைக் கொண்டுள்ள அவனை இனிப் பழித்துப் பேசாதே" என்று தலைவி தோழியைக் கடிந்துகொண்டாள்.

சொற்பொருள்

1. வேங்கை - வேங்கை மரம்; பெரு - பெரிய.
2. யான் எவன் செய்கோ - என்னால் என்ன செய்ய இயலும்; என்றி - என்று கூறுகிறாய்; அது - அவ்வாறு கூறியதை.
3. நகை - விளையாட்டாய்க் கூறியது; உணரேன் ஆயின் - கருதாதிருந்திருப்பேன் ஆயின்.

4. என் ஆகுவை கொல்? - என்ன பாடுபட்டிருப்பாய்? (என அறிவாயா?); நன்னுதல் - நல்ல நெற்றியைக் கொண்ட தோழியே.

தலைவி கூற்று

அகநானூறு 22 **வெறிபாடிய காமக்கண்ணியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிந்த காலத்துத் தலைமகள் ஆற்றாளாகத் தோழி தலைமகனை இயற்பழிப்பத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

கூற்று விளக்கம்

களவுக்காலத்தில் திருமணச்செலவுக்காகப் பொருள் ஈட்டிவரத் தலைவன் பிரிந்து சென்றான். பிரிவாற்றாது தலைவி வருந்தினாள். அவ்வருத்தத்தைப் போக்க வேறு வழி அறியாத தோழி, தலைவனைப் பழித்துப் பேசினாள். அதனைப் பொறுக்க இயலாத தலைவி, தோழியைக் கடிந்து தலைவனைப் பாராட்டினாள். (இயற்பழித்தல் - தலைவனின் இயல்புகளைக் குறைத்துப் பேசுதல்.)

அணங்குடை நெடுவரை உச்சியின் இழிதரும்
கணம்கொள் அருவிக் கான்கெழு நாடன்
மணம்கமழ் வியன்மார்பு அணங்கிய செல்லல்
இதுஎன அறியா மறுவரல் பொழுதில்,
'படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை
நெடுவேள் பேணத் தணிகுவள் இவள்'என,
முதுவாய்ப் பெண்டிர் அதுவாய் கூறக்
களம்நன்கு இழைத்துக் கண்ணி சூட்டி,
வளநகர் சிலம்பப் பாடி, பலிகொடுத்து,
உருவச் செந்தினை குருதியொடு தூஉய்,
முருகுஆற்றுப் படுத்த உருகெழு நடுநாள்,
ஆரம் நாற, அருவிடர்த் ததைந்த
சாரற் பல்பூ வண்டுபடச் சூடி,
களிற்றுஇரை தெரீஇய பார்வல் ஒதுக்கின்
ஒளித்துஇயங்கும் மரபின் வயப்புலி போல,

நல்மனை நெடுநகர்க் காவலர் அறியாமைத்
தன்நசை உள்ளத்து நம்நசை வாய்ப்ப,
இன்உயிர் குழைய முயங்குதொறும் மெய்ம்மலிந்து,
நக்கனென் அல்லனோ யானே, எய்த்த
நோய்தணி காதலர் வர,ஈண்டு
ஏதில் வேலற்கு உலந்தமை கண்டே?

தெளிவுரை

தோழியே! தீண்டி வருத்தும் தெய்வம் பொருந்திய நெடிய மலை உச்சியிலிருந்து விழும் அருவிக்கூட்டங்களைக் கொண்ட காடு பொருந்திய நாட்டையுடையவன், நம் தலைவன். மணங் கமழும் அவனது அகன்ற மார்பு என்னைப் பிரிந்ததாலே எனக்கு வருத்தம் ஏற்பட்டது. அவ்வருத்தம் எதனால் ஏற்பட்டது என்று அறியாது நம் அன்னை முதலியோர் நெஞ்சு சுழன்று கலக்கமுற்றனர். அப்பொழுது, 'பகைவரை அழித்துப் பல்வகைப் புகழினைப் பெற்ற பெரிய கைகளைக் கொண்ட முருகனுக்கு (வெறியெடுத்து) வழிபாடு நிகழ்த்தினால், இவளுக்கேற்பட்ட துன்பம் நீங்கப்பெறுவாள்' என்று அறிவு வாய்க்கப்பெற்ற பெண்கள் கூறினார்கள்.

அதனைக் கேட்ட நம் அன்னை வேலனை வெறியாட்டயர அழைத்தாள்; வேலனும் வெறியாடும் களத்தினை நன்கு அமைத்தான்; முருகனுடைய வேலிற்கு மாலை சூட்டினான்; வளம் பொருந்திய வீட்டில் ஒலியுண்டாக முருகனைப் பாடிப் பரவிப் பலியினையும் கொடுத்தான்; அழகிய சிவந்த தினை யினைக் குருதியுடன் கலந்து தூவி முருகனை வழிபட்டான்.

ஆனால், வேலன் வெறியாடிய அந்த நள்ளிரவில் நம் தலைவன் சந்தன மணம் கமழப் பக்க மலையில் உள்ள அரிய குகைகளில் மலர்ந்த பல்வேறு மலர்களையும் வண்டுகள் மொய்க்குமாறு சூடிக்கொண்டான்; இரைக்காக யானையைத் தேடும் பார்வையுடன் மறைந்து செல்லும் வலிய ஆண்புலி யினைப் போல நம் நெடிய வீட்டின் காவலர் அறியாவண்ணம் நம் நோயைத் தணித்தற்குரிய நம் தலைவனும் வந்தான்; என் விருப்பம் நிறைவுறும்வண்ணம் என் இனிய உயிர் தளிர்க்கும்படி தழுவினான்; அவன் தழுவத்தழுவ நம் சுற்றத்தாரோ, (நம்

நோய்க்கு) யாதும் தொடர்பில்லாத முருகனுக்கு வெறியாட் டெடுத்ததால் என் நோய் நீங்கியது என்று கூறித் திரிந்தனர். அது கண்டு உடல் பூரித்துச் சிரித்தேன் அன்றோ?

கருத்து

வரைபொருள் ஈட்டும்பொருட்டுத் தலைவியைப் பிரிந்த தலைவன் வரவு நீட்டித்தான்; தலைவன் மார்பு தந்த வருத்தத்தால் தலைவி துன்புற்று மெலிந்தாள். அத்துன்பத்தைப் போக்க வழியறியாத தோழி, தலைவன் மேல் குறையினையேற்றி அவன் இயல்பினைப் பழித்தாள். அதனைக் கேட்ட தலைவி தோழியை நோக்கி, 'நாம் மெலிதற்கு ஏதுவாய நோயைத் தணித்தற்குரிய நம் தலைவர் இரவே வந்தார்; வந்து என் இன்னுயிர் குழையுமாறு முயங்கினார்; யானும் இன்பம் எய்தி உடல் பூரித்தேன்; இவ்வாறு, பேருதவி செய்தாரைப் பொல்லாங்கு கூறுதல் முறையாமோ?' என இயற்பட மொழிந்தாள்.

விளக்கம்

என் உடல்மெலிவு தலைவன் மார்பால் ஏற்பட்டது என்று அறியாமல் அன்னை மயங்கினாள். மூதறிவு கொண்ட பெண்கள் முருகனுக்கு வெறியாட்டெடுத்து வழிபட்டால் இவள் நோய் தீரும் என்று கூறினர். அன்னையும் அதனை நம்பி, வேலனை அழைத்து, விழாக்களம் அமைத்து, பலியூட்டி வெறியாட்டெடுத்தாள். அதே இரவில், நம் தலைவர், நம் இல்லக்காவலர் அறியாமல் வந்து, என் உயிர் தளிர்ப்பத் தழுவினார். அவர் தழுவத்தழுவ என் நோய் தான் இருந்த இடம் அறியாமல் மறைந்தது. ஆனால், வெறியாட்டெடுத்ததால்தான் என் நோய் நீங்கியது என அன்னை முதலாயினர் கருதினர். அது கண்டு அவர்கள் அறியாமையை நினைத்து நான் சிரித்தேன்.

குறிப்பு

இச்செய்யுளில் வெறியாட்டினைச் சிறப்பாய் எடுத்துக் கூறியதால் இதனைப் பாடியவர் வெறிபாடிய காமக்கண்ணியார் என வழங்கப்பட்டார்.

சொற்பொருள்

1. அணங்கு - வருத்தும் தெய்வம்.
2. கணம்கொள் - கூட்டம் கொண்ட; கான் கெழு - காடுகள் பொருந்திய.

3. வியன்மார்பு - அகன்ற மார்பு; செல்லல் - துன்பம்.
4. மறுவரல் - மனச்சுழற்சி.
5. படியோர் - கீழ்ப்படியாதவர், பகைவர்; தேய்த்த - அழித்த; தடக்கை - பெரிய கை.
6. நெடுவேள் - முருகக்கடவுள்; பேண - வழிபட; தணிகுவள் - நோய் நீங்குபவள்.
6. முது - அறிவு; வாய்கூற - உண்மை போலக் கூற.
8. களம் - வெறியாடல் களம்; கண்ணி - தலைமாலை.
9. வளநகர் - வளமான மனை; சிலம்ப - ஒலியுண்டாக.
10. உருவம் - அழகு; குருதி - ஆட்டுக்குட்டியின் குருதி; தூஉய் - தூவி.
11. முருகு ஆற்றுப்படுத்த - முருகனை வரவழைத்த; உரு - அச்சம்.
12. ஆரம் - சந்தனம்; அருவிடர் - அரிய மலைப்பிளப்பு; ததைந்த - செறிந்த.
14. தெரீஇய - தெரிதற்பொருட்டு; பார்வல் ஒதுக்கின் - ஒதுங்கிய பார்வையோடு.
15. மரபின் - இயல்பினைக் கொண்ட; வயப்புலி - வலிமையான புலி.
16. நெடுநகர் - நெடிய இல்லம்.
17. தன் நசை - தன்னை விரும்பும்; நம்நசை - நம் விருப்பம்; வாய்ப்ப - நிறைவேறும்படி.
18. மெய்ம்மலிந்து - உடல் பூரித்து.
19. நக்கனென் - சிரித்தேன்; எய்த்த நோய் - மெலிதற்குக் காரணமான நோய்.
20. தணி - தணித்த, குறைத்த; ஈண்டு - இங்கே.
21. ஏதில் வேலற்கு - யாதும் தொடர்பில்லாத முருகவேளுக்கு; உலந்தமை - அழிந்தமை.

தலைவி கூற்று

குறுந்தொகை 87 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகள் தெய்வத்திற்குப் பராஅயது.

(பராஅயது - வேண்டிக்கொள்வது; வணங்குவது.)

கூற்று விளக்கம்

தலைவன், 'நின்னைப் பிரியேன்' எனத் தெய்வங்காட்டிச் சூளுற்றவன், பின் பிரிந்து காலம் நீட்டித்துச் சூளுறவு தப்பியதால், அத்தெய்வம் ஒறுக்குமோ என அஞ்சிய தலைவி, தலைவனுக்குத் தீங்கு நேராதிருக்குமாறு தெய்வத்தை வேண்டிக்கொண்டது.

'மன்ற மராஅத்த பேஎம்முதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம்' என்ப; யாவதும்
கொடியர் அல்லர்எம் குன்றுகெழு நாடர்
பசைஇப் பசந்தன்று, நுதலே;
ஞெகிழ ஞெகிழ்ந்தன்று, தடமென் தோளே.

தெளிவுரை

பொது இடத்தில் குடிகொண்டு அச்சத்தை ஏற்படுத்துகின்ற முதிர்ந்த தெய்வம், கொடுமை புரிந்தோரை வருத்தும் என்று அறிந்தோர் சொல்வர். குன்றங்கள் நிறைந்த நாட்டையுடைய என் தலைவர் சிறிதும் கொடுமை வாய்ந்தவரல்லர். என் நெற்றி, அவர் என்னை விரும்புதல் வேண்டிப் பசலையுற்றது; அவர் உள்ளம் என்னிடம் நெகிழ்தற்பொருட்டுப் பரந்த என் மெல்லிய தோள்களும் மெலிவுற்றன.

கருத்து

தெய்வமே! தலைவன் செய்த சூளுரையில் தவறிவிட்டான். அவனுக்கு ஊறு ஏதும் நேராமல் அருள்புரி.

விளக்கம்

'உன்னை என்றும் பிரியேன்' என்று கடம்ப மரத்தடியில் சூளுரைத்த தலைவன், தன் சூளுரையை மறந்ததால் அத்தெய்வம்

எதுவும் செய்துவிடக்கூடாது என்று கவலையுற்ற தலைவி, தன் நெற்றி பசந்தமைக்கும் தோள் மெலிந்ததற்கும் தானே காரணம் அன்றி அவரல்லர் என்று கூறுகிறாள். அவர் மீண்ட பின்னர் மீண்டும் பிரியாதிருக்கும்படி அன்பு காட்டுதற்கே என் நெற்றி பசந்தது; தோளும் மெலிந்தது எனக் காரணமும் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. மன்றம் - பொது இடம்; மராஅம் - கடம்ப மரம்; பேஎம் முதிர் கடவுள் - பிறர்க்கு அச்சத்தை ஏற்படுத்துவதில் முதிர்ந்த தெய்வம்.
2. தெறூஉம் - வருத்தும், தண்டிக்கும்; என்ப - அறிந்தோர் சொல்வர்.
3. குன்று கெழு நாடர் - குன்றுகள் பொருந்திய நாட்டையுடைய தலைவர்.
4. பசைஇ - (என் நெற்றி அவரை) விரும்பியதால்; பசந்தன்று - பசலை பெற்றது.
5. ஞெகிழ - (என் மனம் அவரிடத்து) நெகிழ்ந்தமையால்; ஞெகிழ்ந்தன்று - மெலிவுற்றது.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 365 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிந்து மீள்கின்றான் இடைச்சுரத்துக் குழைத்த மாவின் தளிர் கண்டு சொல்லியது.

கூற்று விளக்கம்

திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சில நாள் பிரிந்து சென்றிருந்த தலைவன் திரும்பி வரும்போது இடைவழியில் தழைத்து நிற்கும் மாமரத்தின் தளிர் கண்டு தன் காதலியின் அழகைப் பாராட்டும் வகையில் சொல்லியது.

கணமா தொலைச்சித் தன்ஐயர் தந்த
நிணஊன் வல்சிப் படுபுள் ஓப்பும்
நலம்மாண் எயிற்றி போலப் பலமிகு
நன்னலம் நயவரவு உடையை;
என்நோற் றனையோ மாவின் தளிரே!

தெளிவுரை

மான்களைக் கொன்று தன் அண்ணன்மார் கொண்டுவந்த கொழுப்புமிகுந்த ஊனாகிய உணவினைக் கவர வரும் பறவைகளை ஓட்டிக்கொண்டிருக்கிறாள், பெண்மைக்குரிய நலன்களால் மாட்சிமைப்பட்ட என் காதலி. அவளைப் போலக் காண்போரால் மிகவும் விரும்பப்பெறும் பேரழகு பெற்றுள்ள மாந்தளிரே! இத்தகு சிறப்பெய்த நீ என்ன தவம் செய்தனையோ?

கருத்து

மாந்தளிரே! தலைவியின் அழகினைப் பெற நீ என்ன தவம் செய் தனையோ?

குறிப்பு

தன் தலைவியைத் தழுவும் இன்பத்திலே திளைப்பவனாய தலைவன் தன் மனக்கிளர்ச்சியால் கூறியது.

மாந்தளிரே! நீ இவள் இளமை, நிறம் முதலிய சிலவற்றையே தவம் செய்து பெற்றுள்ளனை. நானோ, அவளையே என் ஆருயிர்க் காதலியாய்ப் பெற்றுள்ளேன்; ஆதலின், உன்னைவிட நான் அதிகம் தவம் செய்துள்ளேன்.

சொற்பொருள்

1. கணமா - கூட்டமாய் உள்ள மான்கள்; தொலைச்சி - கொன்று; ஐயர் - அண்ணன்மார்.
2. நிணஊன் - கொழுப்பு மிகுந்த ஊன்; வல்சி - உணவு; படுபுள் - படியும் பறவை; ஓப்பும் - விரட்டும்.
3. நலம் மாண் - நலன்களால் மாட்சிமை பெற்ற; எயிற்றி - பற்களைக் கொண்டவள் (தலைவி).
4. நல்நலம் - நல்ல அழகு; நயவரவு - விரும்பப் பெறுதலை.
5. நோற்றனை - தவம் செய்தாய், மா - மாமரம்; தளிர் - இளந்தழை.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 291 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிந்து மீள்கின்ற தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

திருமணத்திற்குப் பொருள் ஈட்டிவரச் சென்ற தலைவன் திரும்பி வரும்போது தனக்குள்ளே சொல்லியது.

மயில்கள் ஆலக் குடிஞை இரட்டும்
துறுகல் அடுக்கத் ததுவே, பணைத்தோள்
ஆய்தழை நுடங்கும் அல்குல்,
காதலி உறையும் நனிநல் ஊரே.

தெளிவுரை

மூங்கில் போன்ற தோள்களையும், அழகிய தழைகளால் தொடுத்து அமைத்த தழையுடை கிடந்து அசையும்வண்ணம் அல்குலையும் கொண்டவள், என் காதலி. மயில்கள் மகிழ்ந்தாட, அவ்வாட்டத்திற்கு ஏற்பப் பேராந்தைகள் மாறி மாறி அலறும் இடமான சிறிய குன்றுகளைக் கொண்ட மலைகளிடையே (அவள் வாழும் மிக நல்ல ஊர்) அமைந்திருக்கிறது.

கருத்து

நெஞ்சே! தலைவி வாழும் நல்ல ஊர் மலைகளிடையே உள்ளது. அதனை விரைவில் காண்போம்.

குறிப்பு

'தலைவியின் ஊரை விரைவில் காண்போம்; திருமணம் முடித்து இல்லறம் இனிது நடத்துவோம்' என்னும் ஆர்வத்தை உள்ளடக்கியுள்ளது தலைவன் உரை.

சொற்பொருள்

1. ஆல - ஆட; குடிஞை - பேராந்தை (கோட்டான்); இரட்டும் - அலறும், ஒலிக்கும்.

2. துறுகல் - குண்டுக்கல்; அடுக்கம் - மலைச்சாரல்.
3. ஆய்தழை - அழகிய தழையாடை; நுடங்கும் - அசையும்.
4. உறையும் - தங்கும்; நனி நல் ஊர் - மிக நல்ல ஊர்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 94 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிந்து மீள்கின்ற தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன் திருமணத்திற்குப் பொருளீட்டும்பொருட்டுத் தலைவியைப் பிரிந்து சென்றான். பிரிந்த நோக்கம் நிறைவேறி, வேண்டிய பொருளுடன் திரும்பும் தலைவன், தலைவியின் ஊரைத் தன் பாகனுக்குச் சுட்டிக்காட்டிச் சொல்லியது.

மள்ளர் அன்ன தடங்கோட்டு எருமை
மகளிர் அன்ன துணையொடு வதியும்
நிழல்முதிர் இலஞ்சிப் பழனத் ததுவே
கழனித் தாமரை மலரும்,
கவின்பெறு சுடர்நுதல் தந்தை ஊரே.

தெளிவுரை

அழகுடன் ஒளி வீசும் நெற்றியைக் கொண்ட என் காதலிக்குத் தந்தை, நெல்வயல்களில் தாமரை மலர்ந்திருக்கும் வளமான ஊரினுக்குத் தலைவன். அவ்வூர் எருமைக்கடாக்கள் வீரர்களைப் போன்றும், பெண்எருமைகள் அவ்வீரர்களின் மனைவியரைப் போன்றும் தங்கி மகிழும் அடர்ந்த நிழல்களும் அழகிய நீர்நிலைகளும் அமைந்த மருத நிலத்தினைக் கொண்டது.

கருத்து

'பாகனே! தலைவியின் ஊரை நோக்கித் தேரினை விரைவாய்ச் செலுத்து.'

குறிப்பு

வீரரும் அவர்தம் துணைவியரும் சேர்ந்து வதிதல்போல் தலைவன் தலைவியோடு சேர்ந்திருப்பான். திருமணம் முடிந்தால் ஊரவர் கண்டு, கழனிகளில் பூக்கும் தாமரைபோல் முகம் மலர்வர்.

சொற்பொருள்

1. மள்ளர் - வீரர்; தடங்கோடு - பெரிய கொம்பு.
2. வதியும் - தங்கும்.
3. நிழல்முதிர் - அடர்ந்த நிழல்; இலஞ்சி - நீர்நிலை; பழனம் - மருத நிலம்.
4. கழனி - வயல்.
5. சுடர்நுதல் - ஒளி பொருந்திய நெற்றி.

தலைவன் கூற்று

குறுந்தொகை 235 **மாயெண்டனார்**

திணை : பாலை

கூற்று

வரையாது பிரிந்து வருவான், வாடைக்கு உரைப்பானாய்ப் பாகற்கு உரைத்தது. (வரையாது - மணம் செய்துகொள்ளாது.)

கூற்று விளக்கம்

வரைவிடை வைத்துப் பொருளீட்டச் சென்ற தலைவன் தன் பணிகளை முடித்துத் திரும்பும்போது, வாடைக்காற்று வீசுவது கண்டு, அக்காற்றுக்குச் சொல்வானாய்ப் பாகனிடம் கூறியது.

ஓம்புமதி; வாழியோ வாடை! பாம்பின்
தூங்குதோல் கடுக்கும் தூவெள் அருவிக்
கல்உயர் நண்ணி யதுவே நெல்லி
மரையினம் ஆரும் முன்றில்
புல்வேய் குரம்பை நல்லோள் ஊரே.

தெளிவுரை

வாடைக்காற்றே! வாழ்க! நலமிக்க தலைவியின் ஊர், நெல்லிக் காய்களை மான்கூட்டம் உண்ணுகின்ற முற்றங்களையும் புல்லால் வேயப்பட்ட குடிசைகளையும் கொண்டது; தொங்கு கின்ற பாம்புத்தோலைப் (பாம்புச்சட்டையைப்) போலத் தோற்றம் தரும் தூய வெண்மையான அருவியைக் கொண்ட மலையுச்சிக்கு அருகேயுள்ளது; அவளைக் காப்பாற்று!

கருத்து

வாடையே! உனக்கு ஆற்றாளாய்த் தலைவி நலிவடைவாள்; அவளைக் காப்பாற்று.

விளக்கம்

வாடைக்குச் சொல்வதுபோல முன்னிலைப் புறமொழியாய்த் தேர்ப்பாகனுக்கு அறிவுறுத்தி, விரைந்து தேரைச் செலுத்துமாறு தூண்டுகிறான், தலைவன்.

சொற்பொருள்

1. ஓம்புதல் - பாதுகாத்தல்; வாடை - வாடைக்காற்று.
2. தூங்கு தோல் - தொங்குகின்ற தோல் (பாம்புச்சட்டை); கடுக்கும் - ஒத்திருக்கும் (உவம உருபு); தூவெள் - தூய வெண்மையான.
3. கல்உயர் - மலையுச்சி; நண்ணியது - அருகே உள்ளது; நெல்லி - நெல்லிக்காய்.
4. மரை இனம் - மான் கூட்டம்; ஆரும் - உண்ணும்; முன்றில் - முற்றம்.
5. புல்வேய் - புல்லால் வேயப்பட்ட; குரம்பை - குடிசை; நல்லோள் - நல்லவளாகிய என் தலைவி; ஊர் - (வாழும்) ஊர்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 233 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பட்ட பின்றை (களவுக்காதல் வெளிப்பட்ட பிறகு) வரையாது சென்று வினைமுற்றி மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவு வெளிப்பட்ட பிறகு உடனே வரைந்துகொள்ளாது பொருளீட்டச் சென்ற தலைவன், தன் பணி முடித்துத் திரும்பி வரும்போது தலைவியின் ஊரை உவகை மிகுதியினால் தேர்ப்பாகனுக்குக் காட்டிச் சொல்லியது.

கவலை கெண்டிய அகல்வாய்ச் சிறுகுழி
கொன்றை ஒள்வீ தாஅய், செல்வர்
பொன்பெய் பேழை மூய்திறந் தன்ன,
கார்எதிர் புறவி னதுவே உயர்ந்தோர்க்கு
நீரொடு சொரிந்த மிச்சில், யாவர்க்கும்
வரைகோள் அறியாச் சொன்றி,
நிரைகோல் குறுந்தொடி தந்தை ஊரே.

தெளிவுரை

"பாக! தலைவி, நிரல்பட்ட திரண்ட குறிய வளையல் களையுடையவள். அவள் தந்தையின் ஊர், உயர்ந்தோர்க்கு நீர் பெய்து தாரை வார்த்துக் கொடுத்தபின் எஞ்சியதையும் யாவர்க்கும் வரையறையின்றித் தரும் பொருள்வளமும், எல்லையில்லாமல் யாருக்கும் வழங்கும் உணவு வளமும் கொண்டது. அவ்வூரில் கவலைக்கிழங்கை எடுக்கத் தோண்டிய சிறிய குழியில், கொன்றையின் ஒள்ளிய மலர்கள் விழுந்து நிரம்பியிருப்பது, செல்வர்கள் பொன்னை இட்டு வைத்துள்ள பொற்பேழையின் மூடியைத் திறந்து வைத்தது போன்ற தோற்றத்தைத் தரும். இத்தகைய கார் காலத்தைக் கொண்ட முல்லை நிலத்தில் தலைவியின் ஊர் உள்ளது" என்று தலைவன் பாகனிடம் கூறினான்.

கருத்து

பாக! முல்லை நிலத்திலுள்ள தலைவியின் ஊருக்குத் தேரை விரைவில் செலுத்து.

விளக்கம்

தலைவன் பாகனிடம், 'அதோ! கவலைக்கிழங்கை அகழ்ந்த சிறு குழிகளில் நிறையக் கொன்றைப் பொன்மலர் உதிர்ந்து, பொற்பேழையினைத் திறந்து வைத்தாற்போல் தோன்றுகின்ற முல்லை நிலத்தில் நம் தலைவியைப் பெற்ற தந்தையின் வளமைமிக்க ஊர் உள்ளது' என்று அறிவிக்கின்றான்.

சொற்பொருள்

1. கவலை - கவலைக்கிழங்கு; கெண்டிய - தோண்டிய; அகல்வாய் - அகன்ற வாயைக் கொண்ட.
2. ஒள்வீ - ஒள்ளிய மலர்கள்; தாஅய் - விழுந்து பரவி.
3. பொன்பெய் - பொன்னை இட்டு வைத்துள்ள; மூய் - மூடி.
4. கார் எதிர் - கார் காலத்தை ஏற்றுக்கொண்ட; புறவு - முல்லை நிலம்.
5. நீரொடு சொரிந்த - நீரோடு தானம் செய்து; மிச்சில் - எஞ்சிய பொருள்.
6. வரைகோள் அறியா - எல்லை இல்லாமல் தரும்; சொன்றி - உணவு.
7. நிரைகோல் - வரிசையாய்த் திரண்ட; குறுந்தொடி - சிறிய வளையல்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 270 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு காரணமாக நெட்டிடை கழிந்து பொருள்வயிற்போகிய தலைமகன் வந்தமையறிந்த தோழி உவந்த உள்ளத்தளாய்த் தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

திருமணம் செய்துகொள்வதற்காகப் பொருளீட்டி வரப் பிரிந்த தலைவன் நீண்ட நாள்கள் கழித்துத் திரும்பி வந்தான். அதனை அறிந்த தோழி, மகிழ்ச்சியான உள்ளத்தோடு தலைவியிடம் சொல்லியது.

கிழங்குஅகழ் கேழல் உழுத சிலம்பில்
தலைவிளை கானவர் கொய்தனர் பெயரும்
புல்லென் குன்றத்துப் புலம்புகொள் நெடுவரை
காணினும் கலிழுநோய் செத்துத்
தாம்வந் தனர்நம் காத லோரே.

தெளிவுரை

கிழங்குகளை அகழ்ந்தெடுக்கும் பன்றிகள், தம் கொம்புகளால் கிளறிய புழுதியில் விளைந்த தினையின் முதல் விளைச்சலைக் கானவர் கொய்து சென்றமையால் பொலிவு குன்றி நிற்கிறது, நெடிய மலை. அதனைக் கண்ட அளவிலேயே தலைவியே! நீ கண்ணீர் உகுத்து வருந்துகிறாய். அத்தகைய உன் துன்பத்தை எண்ணிப் பார்த்து நம் காதலர் வந்துவிட்டார். (நீ மகிழ்ந்திரு!)

கருத்து

தலைவியே! தலைவன் வருவதை அறிந்து உன் உள்ளம் மகிழட்டும்.

உள்ளுறை

தாம் உழுது வருத்தமுறாமல் பன்றிகள் கிளறிய புழுதியில் விளைந்த முதல் விளைச்சலைக் கானவர் கொய்து செல்வர் என்னும் தொடர் வாயிலாய், ஊழ் தானே காட்டியதால் தலைவியிடம் தலைவன் விதைத்த அன்பு விதையானது காதலாகப் பயிராகி நன்கு விளைந்தது. அதன் விளைவாகிய திருமணத்தை இனி அவள் காதலன் நிகழ்த்தி அவளைத் தன் இல்லத்திற்குக் கொண்டுசெல்வான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப் படுகிறது.

சொற்பொருள்

1. அகழ் - தோண்டிய; கேழல் - பன்றி; சிலம்பு - மலை.
2. தலைவிளை - முதல் விளைச்சல்; பெயரும் - வீடு திரும்புவர்.

3. புல்லென் குன்றத்து - பொலிவழிந்த மலையில்; புலம்பு - தனிமை; நெடுவரை - நெடிய மலை.
4. கலிழுநோய் - கண்ணீர் உகுக்கும் காதல் நோய்; செத்து - கருதி.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 217 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் மீட்சியுணர்ந்த தோழி ஆற்றாளாகிய தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

திருமணத்தை முன்னிட்டுப் பிரிந்த தலைவன் திரும்பி வந்துகொண்டிருப்பதை அறிந்த தோழி, பிரிவைப் பொறுக்கவியலாது வருந்தியிருந்த தலைவியிடம் ஆறுதலாய்க் கூறியது.

பெருவரை வேங்கைப் பொன்மருள் நறுவீ
மான்இனப் பெருங்கிளை மேயல் ஆரும்
கானக நாடன் வரவும்,இவள்
மேனி பசப்பது எவன்கொல்? அன்னாய்!

தெளிவுரை

தலைவியே! பெரிய மலையிடத்தே உள்ள பொன் போன்ற நறிய புதிய (உதிர்ந்த) பூக்களைத் தன் கூட்டத்தோடு மேய்ந்து பசி தீரும் மானினங்களைக் கொண்ட கானக நாடனாகிய தலைவன் இங்கே வந்துகொண்டிருக்கும்போதும் உன் மேனியில் பசலை பாய்வது எக்காரணம் கொண்டோ?

கருத்து

தலைவியே! தலைவன் திரும்பி வருவதை அறிந்தும் உன் ஆற்றாமை தீராதது ஏன்?

உள்ளுறை

வேங்கைப்பூவினை மானினம் உண்ணும் என்னும் தொடர், தலைவன் ஈட்டிவரும் மனைப்பெருஞ்செல்வத்தை, தலைவன் தலைவியர் திருமணம் நிகழ்ந்ததும், தலைவிக்கு உறவினராகிய தோழியரும் அவளோடு நுகர்ந்து மகிழ்வர் என்னும் உள்ளுறைப் பொருளைக் கொண்டுள்ளது.

சொற்பொருள்

1. பெருவரை - பெரிய மலை; வேங்கை - வேங்கைமரம்; மருள் - போன்ற; வீ - பூ.
2. பெருங்கிளை - பெரிய கூட்டம்; மேயல் ஆரும் - மேயும்.
3. கானகம் - காடு.
4. அன்னாய் - தலைவியே!

தோழி கூற்று

ஐங்குறுநூறு 252 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் குறித்த பருவத்திற்கு முன்னே வந்தானாக உவந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'திருமண ஏற்பாட்டிற்காகப் பிரிந்த நம் தலைவன் குறித்த பருவத்திற்கு முன்னரேயே வந்து சேர்ந்து நம் துயரைப் போக்கிவிட்டான்' என்று தோழி தலைவியிடம் மகிழ்ந்து சொல்லியது.

குன்றக் குரவன் புல்வேய் குரம்பை
மன்றுஆடு இளமழை மறைக்கும் நாடன்
புரையோன் வாழி, தோழி! விரைபெயல்
அரும்பனி அளைஇய கூதிர்ப்
பெருந்தண் வாடையின் முந்து வந்தனனே.

தெளிவுரை

தலைவியே! புல்லால் வேயப்பட்ட சிறுகுடிலை வெண்மையான முகில் சிறுசிறு மழைத்துளிகளைத் தூவிப் புகைபோலப் பரவி மறைக்கும் நாட்டினைக் கொண்டவன், நம் தலைவன். (வரைதற்குப் பொருளீட்டச் சென்ற) அவன், விரைந்து பெய்யும் மழையொடும் பொறுத்தற்கரிய பனியொடும் கலந்து, கூதிர்ப் பருவத்தில் வீசும் கடுங்குளிரைக் கொண்ட வாடைக் காற்று வருவதற்கு முன்பே வந்துவிட்டான். உயர்ந்த பண்பினைக் கொண்ட அவன் வாழ்க!

கருத்து

'வாடை வந்து நம்மை வாட்டும் என்பதை அருளுள்ளத்தால் உணர்ந்து தான் சொன்ன பருவத்திற்கு முன்னரே தலைவன் வந்து சேர்ந்தான்' எனத் தோழி தலைவியிடம் தலைவனைப் பாராட்டிக் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. புல்வேய் - புல்லால் வேயப்பட்ட; குரம்பை - சிறு குடிசை.
2. இளமழை - சிறுசிறு துளிகளைச் சிதறும் மழைமுகில்.
3. புரையோன் - ஒப்புயர்வற்ற தலைவன்; விரை பெயல் - விரைந்து பெய்யும் மழை.
4. அரும்பனி - பொறுக்கவியலாத பனி; அளைஇய - கலந்த, கூதிர் - பனிக்காலம்.
5. முந்து - முன்பே.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 223 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் குறித்த பருவத்திற்கு முன்னே வருகின்றமையறிந்த தோழி, தலைமகட்கு மகிழ்ந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

திருமணத்தை முன்னிட்டுப் பிரிந்த தலைவன், முன்பனிக்காலத்தில் திரும்புவேன் என்று சொல்லிச் சொன்றான்; ஆனால், அதற்கு முன்னே வந்து கொண்டிருக்கிறான். அதனை அறிந்த தோழி தலைவியிடம் மகிழ்ந்து சொல்லியது.

அம்ம வாழி தோழி நம்மலை
வரைஆம் இழியக் கோடல் நீடக்
காதலர்ப் பிரிந்தோர் கையற நலியும்
தண்பனி வடந்தை அற்சிரம்
முந்துவந் தனர்நம் காத லோரே!

தெளிவுரை

தோழி! நமது மலையில் அருவி இழிந்துகொண்டிருக்கிறது; காந்தள் மலர்கள் மலர்ந்து விளங்குகின்றன. பிரிந்திருக்கும் காதலர் செயலற்று வருந்துமாறு துன்புறுத்தும் குளிர்ந்த பனியும் வாடைக்காற்றும் கொண்ட முன்பனிக்காலம் இன்னும் தொடங்கவில்லை. அது தொடங்குவதற்கு முன்னரே நம் காதலர் வந்துவிட்டார். இனி மகிழ்ந்திரு!

கருத்து

தலைவியே! முன்பனிக்காலம் வருவதற்கு முன்னரே காதலர் வந்துவிட்டார்.

குறிப்பு

பனிக்காலத்தில் அருவி வீழ்வது நின்றுவிடும்; காந்தள் முதலிய மலர்கள் கருகிவிடும். நம் மலையில் அந்நிலை இல்லாததால் முன்பனிக்காலம் இன்னும் தொடங்கவில்லை என்பதை அறியலாம் எனச் சுட்டுகிறாள், தோழி.

சொற்பொருள்

2. ஆம் - தண்ணீர் (அருவி); கோடல் - காந்தள் மலர்கள்; நீட - மலர.
3. கையற - துன்பமுற; நலியும் - வருத்தும்.
4. தண்பனி - குளிர்ச்சி பொருந்திய பனி; வடந்தை - வாடைக்காற்று; அற்சிரம் - முன்பனிக்காலம்.
5. முந்து - முன்னரேயே.

தோழி கூற்று

ஐங்குறுநூறு ௨௨௬ **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் நீட்டித்து வந்துழித் தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், தலைவியின் வருத்தம் கண்டும் அதைப் பொருட்படுத்தாது பிரிந்து சென்று தலைவியின் அழகு கெடச் செய்துவிட்டான். காலம் நீட்டித்து இப்போது அவன் வந்துள்ளான். எனவே, தலைவனைக் குறை கூறுவாள்போலத் தோழி தலைவியிடம் கூறியது.

அம்ம, வாழி! தோழி! நம்மலை
நறுந்தண் சிலம்பின் நாறுகுலைக் காந்தள்
கொங்குஉண் வண்டின் பெயர்ந்துபுற மாறிநின்
வன்புடை விறற்கவின் கொண்ட
அன்பி லாளன் வந்தனன் இனியே.

தெளிவுரை

தலைவி! நம் மலையைச் சார்ந்துள்ள பக்க மலைகளில் மணம் கமழ்கின்ற காந்தள் மலர்க்கொத்தில் மொய்த்துத் தேனுண்ணும் வண்டினத்தைப் போல, நம் தலைவனும் அன்பில்லாதவனாய் உறுதியானதும் வெற்றி கொண்டதுமான உன் அழகினைக் (கற்பினைக்) கவர்ந்துகொண்டு வேற்றிடம் சென்றான். அந்த அன்பில்லாதவன் இப்போது திரும்பி வந்துள்ளதைப் பார்.

கருத்து

'தலைவன் திரும்பிவிட்டான். ஆதலின், துன்பத்தை விடுத்து மகிழ்ச்சி கொள்!' எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

விளக்கம்

காந்தளின் தேனை உண்டு வண்டு நீங்கியதுபோல, தலைவனும் தலைவியின் நலனை நுகர்ந்து, பிரிந்து சென்றவன் காலம் நீட்டித்து வந்துள்ளான்.

"அவன் காலந்தாழ்ந்தமைக்குக் காரணம், அவன் உன்னை மறந்தான் என்பதன்று; அன்பில்லாமையும் அன்று; சென்ற நோக்கம் நிறைவேறாமையே" என்று தோழி, தலைவியிடம் உண்மை நிலையினை உணர்த்தினாள்.

குறிப்பு

வண்டு ஒரு மலரை விட்டு இன்னொரு மலரை நாடிச் சென்றதுபோல் தலைவன் பிற மகளிரை விரும்பிச் சென்றான் என்று இங்குப் பொருள் கொள்ளக் கூடாது. தலைவியின் வருத்தத்தைக் கருதாது பொருளே சிறந்த தெனப் பிரிந்து சென்றவன் என்பதால், தோழி அவனை 'அன்பில்லாதவன்' என்று கூறினாள் எனக் கொள்வதே பொருத்தமாம்.

'வண்டினைப் போல வேற்றிடம் சென்றான்' எனப் பாடலில் உள்ளதற்கு 'இடம் மாறிச் சென்று' என்று பொதுவாகப் பொருள் கொள்ளலாம்.

சொற்பொருள்

2. நறுந்தண் சிலம்பு - நறிய குளிர்ச்சியான மலை; நாறுகுலை - மணக்கின்ற கொத்து.
3. கொங்கு - பூந்தாது; உண் - உண்ணுகின்ற; வண்டின் - வண்டினைப் போல; புறமாறி - வெளியிடத்தில் சென்று.
4. வன்புடை - மாறாத வலிமை கொண்ட; விறல் கவின் - மிகுந்து தோன்றும் அழகு.
5. அன்பிலாளன் - அன்பில்லாதவன் (தலைவன்).

தோழி கூற்று

ஐங்குறுநூறு 229 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் மீண்டான் என்பது கேட்டுத் தலைமகட்கு எய்திய கவினைத் தோழி, தான் அறியாதாள் போன்று அவளை வினவியது.

கூற்று விளக்கம்

திருமணத்திற்காகும் பொருளை ஈட்டி வரப் பிரிந்து சென்ற தலைவன் மீண்டான். தலைவியிடம் ஒரு புதுப் பொலிவு தோன்றிற்று. இந்த விவரம் அறியாதவள்போலத் தோழி தலைவியிடம் வினவியது.

அம்ம வாழி! தோழி! நாம்அழப்
பல்நாள் பிரிந்த அறன்இ லாளன்
வந்தன னோ,மற்று இரவில்?
பொன்போல் விறல்கவின் கொள்ளும்நின் நுதலே.

தெளிவுரை

தலைவி! உன் நெற்றி இப்போது பொன்மயமானது போலப் பொலிவு பெற்று அழகு கொண்டுள்ளது. பிரிவுத்துன்பத்தால் நாம் புலம்பி ஏங்குமாறு பல நாள்கள் நம்மைப் பிரிந்து போயிருந்த அறன் இல்லாத அந்தத் தலைவன் (நேற்று) இரவு வந்துவிட்டானோ?

கருத்து

'இரவில் உன் தலைவன் வந்துவிட்டானோ?' எனத் தலைவியிடம் தோழி கேட்கிறாள்.

விளக்கம்

'நேற்றுக் காணாத அழகை இன்று காலையில் காண்கிறேன். இந்த அழகு, தலைவனைக் கண்டுதான் தோன்றியிருக்க வேண்டும்; ஆதலின், தலைவன் இரவிலே வந்துவிட்டனனோ? நான் அறியேன்' என, தலைவன் வந்ததைத் தான் அறியாதது போலத் தோழி தலைவியிடம் கேட்கிறாள்.

குறிப்பு

பிரிந்த கொடுமையை நினைந்து தலைவனை அறனிலாதவன் என்கிறாள், தோழி.

சொற்பொருள்

2. பல்நாள் - பல நாள்; அறனிலாளன் - அறன் இல்லாத தலைவன்.
4. விறல்கவின் - பெருமை கொள்ளும் அழகு.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 263 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் மீண்டமையறிந்த தலைமகள், 'நீ தொலைந்த நலம் இன்று எய்திய காரணம் என்ன?' எனக் கேட்ட தோழியிடம் சொல்லியது.

கூற்று விளக்கம்

திருமணத்தை முன்னிட்டுப் பொருள் தேடப் பிரிந்த தலைவன் திரும்பி வந்தான். அதனை அறிந்த தலைவி, இழந்த மேனிநலத்தை மீண்டும் பெற்றுப் பொலிவோடு காணப்பட்டாள். தன்னை நோக்கி, 'நீ இழந்த மேனி நலத்தை மீண்டும் எய்தியதற்குக் காரணம் என்ன?' என்று கேட்ட தோழியிடம் தலைவி கூறியது.

நன்பொன் அன்ன புனிறுதீர் ஏனல்
கட்டளை அன்ன கேழல் மாந்தும்
குன்றுகெழு நாடன் தானும்
வந்தனன்; வந்தன்று தோழி!என் நலனே!

தெளிவுரை

தோழி! நல்ல பொன் போன்று நிறம் பெற்று விளங்கும் முற்றிய தினையைப் பொன்னுரைத்துப் பார்க்கப் பயன்படும் கட்டளைக்கல் போன்ற கருமை நிறம் கொண்ட பன்றி வயிறார உண்ணுதற்குரிய குன்றுகள் பொருந்திய நம் மலைநாட்டுக்குரிய தலைவன் வந்தான்; அவனொடு சென்ற என் நலமும் வந்தது.

கருத்து

'தோழி! நாடனும் வந்தான்; என் நலமும் வந்தது.'

சொற்பொருள்

1. புனிறுதீர் ஏனல் - முற்றிய தினை (புனிறு - பிஞ்சுத்தன்மை).
2. கட்டளை - பொன் உரைத்துப் பார்க்கப் பயன்படும் கல்; கேழல் - பன்றி; மாந்தும் - உண்ணும்.
4. வந்தன்று - வந்தது.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 120 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் வந்து சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'திருமணத்திற்கு வேண்டிய பொருளை ஈட்டி வருவேன்!' என்று சொல்லிச் சென்ற தலைவன் பொருளீட்டித் திரும்பி வந்து, தன் வீட்டிற்கு அயலே மறைவாய் நிற்பதை அறிந்தாள், தலைவி. அப்போது தோழியிடம் தலைவி சொல்லியது.

அம்ம வாழி தோழி நலமிக
நல்ல ஆயின அளியமென் தோளே
மல்லல் இருங்கழி நீர்அறல் விரியும்
மெல்லம் புலம்பன் வந்த மாறே.

தெளிவுரை

மென்மைத் தன்மை வாய்ந்த நெய்தல் நிலத்தைச் சார்ந்தவன், தலைவன். அவனுடைய கடற்கழி, நீர் மிகுந்து பரவித் தேங்கி யிருக்கும் வளமிக்கது. அவன் வந்துவிட்டதனால், இதுவரை இரங்கத்தக்க நிலையிலிருந்த மெலிந்த என் தோள்கள் இப்போது வளம் பெற்று முன்புபோலப் பொலிவும் பெற்றுவிட்டன.

கருத்து

'தோழியே! தலைவன் வந்துவிட்டான். நானும் இழந்த பொலிவினை மீளப் பெற்றேன்.'

விளக்கம்

வரைதற்கு வேண்டிய பொருளை ஈட்டி வரப் பிரிந்திருந்த தலைவன் இப்போது பொருளீட்டி வந்துவிட்டான். அவன் வரவினால் என் தோள்கள் பண்டை நாளினும் பூரித்து மிகவும் பொலிவுற்றன என்கிறாள், தலைவி.

சொற்பொருள்

1. வாழி தோழி - தோழியே நீ வாழ்க; நலம்மிக - (நாம் இழந்த) அழகு முன்பைவிடச் சிறப்புற.
2. நல்ல ஆயின - நல்ல அழகு பெற்றன; அளிய - இரங்கத்தக்க.
3. மல்லல் - வளப்பம்; இருங்கழி - பெரிய உப்பங்கழி; அறல் - கருமணல்.
4. மெல்லம் புலம்பன் - மென்மையான நெய்தல் நிலத் தலைவன்; வந்தமாறே - வந்தமையால்.

தோழி கூற்று

அகநானூறு 78 **மதுரை நக்கீரனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

களவுக்காலத்துப் பிரிந்து வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை மணந்துகொள்வதாய்க் கூறிப் பிரிந்தான்; பிரிந்தவன் காலந்தாழ்த்து வந்தான்; வந்தவனைத் தோழி எதிர் கொண்டு தலைவியின் பிரிவாற்றாமையைக் குறிப்பாய் உணர்த்தி, 'இப்பிரிவுக் காலத்தில் எம்மை நினைத்ததும் உண்டோ?' என்று வினவியது.

'நனந்தலைக் கானத்து ஆளி அஞ்சி,
இனம்தலைத் தரூஉம் எறுழ்கிளர் முன்பின்,
வரிஞிமிறு ஆர்க்கும், வாய்புகு கடாத்துப்
பொறிநுதற் பொலிந்த வயக்களிற்று ஒருத்தல்
இரும்பிணர்த் தடக்கையின், ஏமுறத் தழுவக்
கடுஞ்சூல் மடப்பிடி நடுங்கும் சாரல்,
தேம்பிழி நறவின் குறவர் முன்றில்,
முந்தூழ் ஆய்மலர் உதிர, காந்தள்,
நீடுஇதழ் நெடுந்துடுப்பு ஒசிய, தண்ணென,
வாடை தூக்கும் வருபனி அற்சிரம்,
நம்இல் புலம்பின், தம்ஊர்த் தமியர்
என்ஆகு வர்கொல் அளியர் தாம்?'என,
எம்விட்டு அகன்ற சில்நாள் சிறிதும்

உள்ளியும் அறிதிரோ— ஓங்குமலை நாட!
உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்இசை
வாய்மொழிக் கபிலன் சூழ, சேய்நின்று
செழுஞ்செய்ந் நெல்லின் விளைகதிர் கொண்டு,
தடந்தாள் ஆம்பல் மலரொடு கூட்டி,
யாண்டுபல கழிய, வேண்டுவயிற் பிழையாது,
தாள்இடூஉக் கடந்து, வாள்அமர் உழக்கி,
ஏந்து கோட்டு வேந்தர் ஓட்டிய,
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி
தீம்பெரும் பைஞ்சுனைப் பூத்த
தேம்கமழ் புதுமலர் நாறும்இவள் நுதலே.

தெளிவுரை

"ஓங்கி உயர்ந்த மலைநாட்டுக்குத் தலைவனே!

"யானைக்கூட்டத்தின் தலைமைக்களிறு தன் இனத்தைத் தன்னிடத்தே அழைத்துச் சூழ்ந்துகொள்ளுமாறு செய்யும் இயல்பு கொண்டது; மிக்க வலிமை கொண்டது; வரிகளைக் கொண்ட வண்டுகள் வாயிற்புகுவதற்குக் காரணமான மதநீரைக் கொண்டது; புள்ளிகள் கொண்ட நெற்றியால் பொலிவுற்றுத் திகழ்வது; இத்தன்மை வாய்ந்த களிறு, அகன்ற காட்டில், ஆளியை நினைத்து, முதற்சூலைக் கொண்ட தன் இளைய பிடி அஞ்சி நடுங்க, கரிய நிறமும், சொரசொரப்பும் கொண்ட தன் பெரிய துதிக்கையால் அதனை அணைத்துக் காத்து நிற்கும்.

"அத்தகைய மலைச்சாரலில் இனிமையுறப் பிழிந்தெடுத்த கள்ளினைக் கொண்ட குறவரின் வீட்டுமுற்றத்தில் மூங்கிலின் அழகிய பூக்கள் உதிர்ந்திடுமாறும், நீண்ட இதழ்கள் கொண்ட காந்தள் பூவின் நெடிய மடல் வளைந்திடுமாறும், முன்பனிக் காலம் தோன்றியது. இந்த முன்பனிக்காலத்தில் வாடைக்காற்று வீசத் தனிமைத்துன்பத்தில் வாடும் இரங்கத்தக்க நம் தலைவி ஊரில் என்ன ஆயினளோ என நீ எண்ணிப் பார்த்ததுமுண்டா?

"தமிழ்வேந்தர், காலம் கருதியிருந்து, போர் செய்வதற்கு வாய்ப்பு நேரிட்டதும் அதனைத் தப்பவிடாது மேற்கொள்பவர்;

பகைவர் படைகளிலே புகுந்து, வாள் போரிட்டு அவற்றினைக் கலக்குபவர்; மேலுயர்ந்த கொம்பினைக்கொண்ட யானைப் படை கொண்டவர். அத்தகைய அவர்கள் வள்ளல் பாரியின்மீது படையெடுத்து அவனது பறம்பு மலையை முற்றுகையிட்டனர். பாரிக்கு உயிர் நண்பர், புலவர் கபிலர். அவர் உலகெலாம் போற்றும் நல்ல புகழினையும், வாய்மை தவறாத மொழியினை யும் கொண்டவர். அவர் ஆய்ந்து சொன்னவாறே (கிளிகளைக் கொண்டு) வளம் பொருந்திய வயல்களில் விளைந்த முற்றிய நெற்கதிர்களை நெடுந்தொலைவினின்றும் கொண்டுவரச் செய்து, அவற்றைப் பெரிய தண்டினைக் கொண்ட ஆம்பல் மலராகிய அவியலோடு சமைத்துப் பாரியின் படைவீரர் உண்டனர்; இவ்வாறு ஆண்டு பல கழிந்தன.

"ஆயினும், விரைந்து செல்லும் குதிரையினைக் கொண்ட பாரி, அப்போரின் முடிவில் மூவேந்தர்களையும் புறங்காட்டி ஓடச்செய்தான். இனிய பெரிய பசுமையான அவன் சுனையில் பூத்த தேன் மணக்கும் புதுமலர் போன்று மணக்கும் தலைவியின் நெற்றியைச் சிறிதளவேனும் நீ நினைத்துப் பார்த்ததுண்டா?" என்று தோழி தலைவனை நோக்கிக் கேட்டாள்.

கருத்து

களவுக்காலத்தில் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்து வந்த தலைவனைப் பார்த்துத் தோழி, 'இந்த முன்பனிக் காலத்தில் தலைவி என் நிலை உற்றாளோ என நினைந்தது உண்டா?' என வினவினாள்.

குறிப்பு

1. மூவேந்தரும் சேர்ந்து பாரி வள்ளலின் பறம்பு மலையை முற்றுகை யிட்டனர்; கபிலர் பாரிக்கு உயிர் நண்பர். அவர் யோசனையின்படி, அம்மலையில் உள்ள கிளிகளைப் பழக்கி மலையடிவாரத்தில் உள்ள நிலங்களில் விளைந்த நெற்கதிர்களைக் கொண்டுவந்து களஞ்சியத்தில் சேர்க்கும்படி செய்தான். அதனால் அரண் உள்ளிருந்தோர் உணவுப் பஞ்சம் இன்றி வாழ்ந்தனர். பல ஆண்டுகள் போரிட்டும் மூவேந்தரால் வெற்றி காண இயலவில்லை. பாரி அவர்களைப் புறமுதுகிட்டோடச் செய்து வெற்றி கண்டான்.

2. அஞ்சி நடுங்கும் பிடியை ஆண்யானை அணைத்துக் காத்தது போலத் தன்னைச் சூழ்ந்துகொள்ளுமாறு நீயும் இவளைப் பாதுகாக்க வேண்டுமென்னும் கருத்துடையவனாய் இருந்தபோதிலும் தலைவி உன் பிரிவிற்கு அஞ்சியிருந்தாள்.

சொற்பொருள்

1. நனந்தலை - அகன்ற இடம்; ஆளி - ஒரு வகை விலங்கு, சிங்கமும் அஞ்சும் திறன் கொண்டது.
2. இனம் தலைத் தரூஉம் - தன் இனத்தை அழைத்துச் சூழ்வித்துச் செய்தல்; எறுழ்முன்பு - மிக்க வலிமை.
3. ஞிமிறு - வண்டு; கடாஅம் - மதநீர்.
4. ஒருத்தல் - தலைமை யானை.
5. இரும்பிணர் - கரிய சொரசொரப்பு; ஏம் - ஏமம் - காவல்.
6. கடுஞ்சூல் - முதற்கரு; மடப்பிடி - இளைய யானை.
7. தேம்பிழி - இனிமையுறப் பிழிந்த; நறவு - கள்.
8. முந்தூழ் - மூங்கில்.
9. துடுப்பு - மடல்; ஒசிதல் - வளைதல்.
10. வாடை - வாடைக்காற்று; தூக்கும் - வீசும்; அற்சிரம் - பனிக்காலம்.
11. நம் இல் - நாம் இல்லாத; புலம்பு - தனிமைத் துன்பம்; தமியர் - தனியர்.
14. அறிதிரோ - நினைத்துப் பார்த்ததும் உண்டா?
15. இசை - புகழ்.
16. வாய்மொழி - மெய்ம்மொழியே பேசும்; சூழ - ஆய்ந்து செயல் செய்ய; சேய்நின்று - நெடுந்தொலைவிலிருந்து.
17. செழுஞ்செய் - வளம் பொருந்திய வயல்; கொண்டு - கொண்டுவந்து.
18. தடந்தாள் - பெரிய தண்டு; கூட்டி - சேர்த்துச் (சமைத்து உண்பித்து).
19. வேண்டுவயின் - போரை விரும்பிச் செய்யும் இடத்தினின்றும்; பிழையாது - பெயராமல்.
20. தாள் - முயற்சியால்; உழக்கி - கலக்கி; வாள்அமர் - வாள் போர்.
21. ஏந்துகோடு - நிமிர்ந்த கொம்புகள்; வேந்தர் - மூவேந்தர்.
22. கைவண்பாரி - வள்ளல் தன்மையினைப் பெற்ற பாரி.
23. தீம் - இனிய.
24. தேம் - தேன்; நாறும் - மணம் கமழும்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 192 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் வந்துழித் தலைமகள் முனிந்து கூறுவாள்போலத் தன் மெலிவு நீங்கினமை தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

திருமணத்திற்காகப் பொருளீட்டி வரப் பிரிந்த தலைவன் திருமண ஏற்பாட்டோடு வந்துகொண்டிருக்கிறான். அவன் மீண்டமை குறித்த தன் மகிழ்ச்சியைத் தலைவி, தோழியிடம் பொய்யாக வெறுப்புக் காட்டி, தான் மெலிவு நீங்கிப் பொலிவு பெற்றதைச் சொல்லியது.

கோடுபுலம் கொட்ப, கடல்எழுந்து முழங்க,
பாடுஇமிழ் பனித்துறை ஓடுகலம் உகைக்கும்
துறைவன் பிரிந்தென, நெகிழ்ந்தன,
வீங்கின மாதோ தோழி! என்வளையே!

தெளிவுரை

தோழி! கடற்கரையில் சங்குகள் உலவும்; கடலில் அலைகள் எழுந்து ஆரவாரிக்கும். ஒலிமிகுந்த குளிர்ச்சி பொருந்திய துறையில் கலங்கள் ஓடுமாறு செலுத்தப்படும். இத்தகைய துறையையுடைய தலைவன் பிரிந்தபோது என் வளையல்கள் நெகிழ்ந்தன! இப்போது அவன் வரவால் மீண்டும் செறிவுற்றன! இதனைக் காண்க!

கருத்து

'தலைவன் திரும்பியதால் இனி என் நலிவும் நீங்கும்' என்றாள், தலைவி.

குறிப்பு

சங்குகள் உலவ, அலை முழங்க, துறையில் ஓடுகலம் செலுத்தப்படும் என்பதன் உட்குறிப்பு, அயலவராகிய நொதுமலர் அகல, சுற்றத்தார் மகிழ, அலர் கூறுவார் சிதையக் காதலன் தேர் வந்தது என்பதாகும்.

சொற்பொருள்

1. கோடு - சங்கினங்கள்; புலம் - கடற்கரை; கொட்ப - சுழல; கடல் - கடல்அலை.
2. பாடு இமிழ் - ஒலி செய்யும்; பனித்துறை - குளிர்ச்சி பொருந்திய கடல்துறை; உகைக்கும் - செலுத்தும்.
3. நெகிழ்ந்தன - கையிலிருந்து நீங்கின.
4. வீங்கின - செறிவுற்றன; வளை - வளையல்.

தோழி கூற்று

கலித்தொகை 124 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

“வெளிப்பட வரைதல், படாமை வரைதல் என்று ஆயிரண்டு என்ப வரைதலாறே” என்பதனால், களவு வெளிப்பட்ட பின் வரையாது, பொருள் வயின் பிரிந்து வந்தானைத் தோழி எதிர்ப்பட்டு நின்று, தலைமகளது ஆற்றாமை கூறி வரைவுகடாயது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தை வீட்டார் அறிந்த பின் வரைதல் (மணத்தல்), வெளிப்படுமுன் வரைதல் என வரைதல் இருவகைப்படும் என்பது தொல்காப்பிய நூற்பா விதி (தொல்.பொருள் 140). அதன்படி களவு ஒழுக்கம் வீட்டார்க்குத் தெரிந்தபின், தலைவன் திருமணத்திற்கான ஏற்பாடு செய்யாது, அதற்குரிய பொருளை ஈட்டுதற்காகச் சென்று திரும்பினான். அப்பொழுது தோழி அவனைக் கண்டு, தலைவியின் துன்பத்தை எடுத்துக் கூறி, வரைவுக்குத் தூண்டியது.

தரவு

ஞாலம்மூன்று அடித்தாய முதல்வற்கு முதுமுறைப்
பாலன்ன மேனியான் அணிபெறத் தைஇய
நீலநீர் உடைபோலத் தகைபெற்ற வெண்திரை
வால்எக்கர் வாய்சூழும் வயங்குநீர்த் தண்சேர்ப்ப!

தாழிசை

ஊரலர் எடுத்தரற்ற உள்ளாய்நீ துறத்தலின்
கூரும்தன் எவ்வநோய் என்னையும் மறைத்தாள்மன்!
காரிகை பெற்றதன் கவின்வாடக் கலுழ்புஆங்கே
பீர்அலர் அணிகொண்ட பிறைநுதல் அல்லாக்கால்;

இணைபுஇவ்வூர் அலர்தூற்ற எய்யாய்,நீ துறத்தலின்
புணையில்லா எவ்வநோய் என்னையும் மறைத்தாள்மன்!
துணையாருள் தகைபெற்ற தொன்னலம் இழந்து,இனி
அணிவனப்பு இழந்ததன் அணைமென்தோள் அல்லாக்கால்;

இன்றுஇவ்வூர் அலர்தூற்ற எய்யாய்நீ துறத்தலின்
நின்றதன் எவ்வநோய் என்னையும் மறைத்தாள்மன்!
வென்றவேல் நுதிஏய்க்கும் விறல்நலன் இழந்து,இனி,
நின்றுநீர் உகக்கலுழும் நெடும்பெருங்கண் அல்லாக்கால்;
அதனால்,

சுரிதகம்

பிரிவில்லாய் போல,நீ தெய்வத்தின் தெளித்தக்கால்
அரிதுஎன்னாள் துணிந்தவள் ஆய்நலம் பெயர்தரப்
புரிஉளைக் கலிமான்தேர் கடவுபு
விரிதண்தார் வியன்மார்ப! விரைகநின் செலவே.

தெளிவுரை

"*மூன்று உலகங்களையும் தன் திருவடியாலே அளந்த திருமாலுக்குத் தமையன், பால் நிறத்துப் பலதேவன். அவன் அழகாய் உடுத்திய நீல நிற ஆடை போல, வெண்ணிற மணல்மேட்டினைக் கடல்நீர் சூழ்ந்திருக்கும் கடல்நிலத்திற்கு உரிய தலைவனே!*

"*ஊரில் உள்ளார் தம்முள் கூடி அலர் தூற்றுகின்றனர்; இவள் துன்பத்தை நீ அறியாதவனாய் இருக்கின்றாய்; நீ இவளைப் பிரிந்து சென்றுவிட்டாய்; அதனால் உண்டான மிகப்பெரிய துன்பத்தை நான் உள்பட எவரிடமும் கூறாமல் மறைத்தாள்; பேரழகு கெடும்படி அவள் மனங்கலங்குதலால், அவள் பிறை நுதலில் பீர்க்கம்பூவை அடுக்கி வைத்தாற்போன்று பசலை*

படர்ந்துவிட்டது. அஃது இல்லாதிருந்தால் நானும் அவள் நிலையை அறிந்திருக்க மாட்டேன்.

"ஊரில் உள்ளார் தம்முள் கூடி அலர் தூற்றுகின்றனர். இவள் துன்பத்தை நீ அறியாதவனாய் இருக்கிறாய். நீ இவளைப் பிரிந்ததால் மிகுகின்ற தன் காமநோயைப் பற்றி என்னிடமும் கூறாது மறைத்தாள். தோழியர் கூட்டத்துள் சிறந்து விளங்கிய மூங்கிலனைய இவள் தோள்கள் தம் பழைய அழகு கெடுமாறு உன்னைத் தழுவிப் பெறும் வனப்பை இழந்தும் வாடின. அதனால்தான் நானே அவளது வருத்தத்தை அறிய இயன்றது. இல்லையேல் அறிந்திருக்க மாட்டேன்."

"இவ்வூர் அலர் தூற்றுகின்றது; இவள் துன்பத்தை அறியாத வனாய் இருக்கின்றாய்; நீ இவளைப் பிரிந்ததால், தன்னிடத்தே நிலைபெற்றிருந்த வருத்தம் கொண்ட காமநோயை நான் உள்பட எவரும் அறியாதவாறு மறைத்தாள்; வெற்றி கொண்ட வேலின் நுதியைப் போன்ற அவள் கண்கள் தம் ஆற்றலையும் அழகையும் இழந்து நீர் சொரிகின்றன. அக்கண்கள் மட்டும் இல்லை யானால் நான்கூட அவள் துன்பத்தை அறிந்திரேன்!

"அலர்ந்த குளிர்ச்சி பொருந்திய மாலையை அணிந்த அகன்ற மார்பனே! நீ இவளை முதன்முதலில் சந்தித்தபோது தெய்வத்தின்மீது சூளுரைத்துப் 'பிரியேன்' என்று தெளி வித்தாய்; பிரிவில்லாதிருப்பது அரிது என்று உணராதவளாய் ஏதும் மறுத்துரையாமல் அதனை உண்மை என்றே நம்பியவள், அவள். இன்று உன் பிரிவால் இழந்த அவள் நலத்தை மீட்டுத் தருவதற்குக் கத்தரித்துவிடப்பெற்ற பிடரி மயிரினைக் கொண்ட உன் குதிரைகள் பூட்டப்பெற்ற தேரினை விரைந்து செலுத்தி, அவள் இல்லத்திற்கு விரைந்து செல்க" என்றாள், தோழி.

கருத்து

'தலைவி தன் வருத்தத்தை மறைக்க முயன்றாலும் தலைவனின் பிரிவாற்றாமையால் அவள் படும் துன்பத்தை அவள் உறுப்புகள் வெளிப் படுத்திவிட்டன. ஆதலால், தலைவ! உடனே அவளை மணந்து கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்.'

விளக்கம்

தலைவன் பிரிவினால் தலைவியின் தோற்றப்பொலிவு அழிந்ததை, அவள் நுதலும் தோளும் கண்ணும் காட்டிக் கொடுத்துவிட்டன. இதை அறிந்து ஊரார் அலர் தூற்றினர்.

தோழி, தன் தலைவியின் துன்பத்தைத் தானே ஒருவாறு உணர்ந்துகொண்டு, திருமணத்திற்காகப் பொருளீட்டி வரச் சென்று திரும்பிய தலைவனை எதிர்கொண்டு, தலைவியின் நிலைமையை எடுத்துச் சொல்லி, அவனை விரைவில் தலைவியைத் திருமணம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்து கிறாள்.

சொற்பொருள்

1. ஞாலம் - உலகம்; அடித்தாய - கால் அடியால் அளந்த; முதல்வன் - திருமால்; முதுமுறை - மூத்த முறைமையினனான தமையன் பலராமன்.
2. தைஇய - உடுத்த.
3. தகைபெற்ற - அழகு பெற்ற; திரை - அலை.
4. வால் எக்கர் - வெண்மையான மணல்திட்டு.
5. அலர் - பழிச்சொல்; அரற்ற - தூற்ற; உள்ளாய் - நினையாதவனாய்.
6. கூர்தல் - மிகுதல்; எவ்வம் - துன்பம்.
7. கலுழ்தல் - பொருந்துதல்.
8. பீர் அலர் - பீர்க்கம்பூ; அணி கொண்ட - நிறம் கொண்ட; அல்லாக்கால் - இல்லையெனில்.
9. இணைபு - கூடி, இணைந்து; எய்யாய் - அறியாமல்.
10. புணை - போக்கும் வழி.
11. துணையாருள் தகைபெற்ற - தோழியர் அனைவருள்ளும் அழகு பெற்ற; தொன்னலம் - தொல் நலம் - இயற்கை அழகு.
12. அணிவனப்பு - செயற்கை அழகு.
15. நுதி - முனை; விறல் - சிறப்பு; நலம் - அழகு.
16. உக - சொரிய; கலுழும் - அழும்.
18. தெளித்தல் - உறுதி செய்தல்.
19. துணிந்தவள் - உண்மையென்று நம்பியவள்; பெயர்தர - மீட்டுத் தருவதற்கு.
20. புரி உளை - கத்தரித்து விடப்பட்ட பிடரி மயிர்; உளை - பிடரி மயிர்; கலிமான் - விரைந்து பாயும் குதிரை; கடவுபு - செலுத்தி.
21. தார் - மாலை அணிந்த; வியன் - அகன்ற.

தலைவன் கூற்று

நற்றிணை 356 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு மறுக்கப்பட்டு ஆற்றானாகிய தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன் காதலியை மணம் கொள்ளும் வகையில் சான்றோரை அனுப்பத் தலைவிக்குத் தமர் இசைந்திலர். அதனால் தலைவன் வருந்திக் கூறியது.

நிலம்தாழ் மருங்கில் தெண்கடல் மேய்ந்த
விலங்குமென் தூவிச் செங்கால் அன்னம்,
பொன்படு நெடுங்கோட்டு இமயத்து உச்சி
வான்அர மகளிர்க்கு மேவல் ஆகும்
வளராப் பார்ப்பிற்கு அல்குஇரை ஒய்யும்
அசைவுஇல் நோன்பறை போல, செலவர
வருந்தினை, வாழிஎன் உள்ளம்! ஒருநாள்
காதலி உழையள் ஆக,
குணக்குத்தோன்று வெள்ளியின் எமக்கும்ஆர் வருமே.

தெளிவுரை

என் நெஞ்சே! நீ வாழ்க! நிலத்தின்கண்ணே தாழ்வான பக்கத்திலே உள்ள தெளிந்த கடலிற்சென்று, ஒன்றைவிட்டு ஒன்று விலகிய மென்மையான இறகுகளையும், சிவந்த கால்களையும் கொண்ட அன்னப்பறவைகள் இரை தேடும். அந்த இரையை இமயமலையின் உச்சியில் தெய்வ மகளிர் மகிழ்ந்து விளையாடுதற்குத் துணையாய் இருக்கும் சிறகு முளைத்து வளராத தன் குஞ்சுகளுக்குச் சென்று கொடுக்கும். நாள்தோறும் மலைக்கும் கடலுக்கும் சென்று வருதலால், அன்னத்தின் வருந்துதலில்லாத வலிய சிறகும் வருந்தும். அதுபோல, என் நெஞ்சமே! நீ என்னிடமிருந்து தலைவியிடம் பல முறையும் சென்று வருதலால்

வருந்தினாய் என்பதை நான் நன்கு அறிவேன். கீழ்த்திசையில் தோன்றும் விடிவெள்ளி போல நம் காதலி நம் அருகில் ஒரு பொழுதேனும் இருக்கும் வாய்ப்பு நமக்குக் கிடைக்குமா? அதனையேனும் ஆராய்ந்து கூறு.

கருத்து

அவளை ஒருநாள் அடைவோம்.

குறிப்பு

கடலில் இரை தேடி, அதனை இமயமலையிலிருக்கும் தன் குஞ்சுகட்குக் கொடுக்கும் செயலால் அன்னம் வருந்தும். அதுபோல் தலைவியிடம் காதல் கொண்டு அவளிருக்குமிடத்திற்குப் பல முறையும் சென்று வருதலால் தன் நெஞ்சமும் அலைந்தலைந்து மெலிந்தது என்றனன், காதலன்.

விளக்கம்

தலைவன் தந்த வரைபொருள் போதாதென்று தலைவிக்குத் தமர் அவளைத் திருமணம் செய்து தர மறுத்தனர். அன்போடு சிரமப்பட்டு இரை தேடித் தரும் தாயை விட்டு, வானர மகளிர்க்கு விளையாட்டுத்துணையாய் விளங்கும் அன்னக்குஞ்சு போல, தலைவியும் தலைவன் துன்பம் நோக்காது, தமர்பால் கட்டுண்டு அமைந்தனள். ஆகவே, தலைவன் மீளவும் சென்று, பெரும் பொருள் தேடி வந்து, தந்து, அவளைப் பெறுவதற்கு உறுதி பூண்டான்.

அது நிகழ்வது உறுதி என்பது, கிழக்கிலே வெள்ளி தோன்றுதல் போன்று உறுதியானது.

இறைச்சி

இமயத்து உச்சியிலுள்ள தெய்வ மகளிர் விளையாட்டுக்கு உதவும் அன்னக்குஞ்சுக்கு, அதன் தாய் கடலில் இரை தேடி மிக வருத்தத்துடன் கொண்டுசெல்லும். இத்தொடர் வாயிலாய்த் தலைவன், தமர் பேச்சுக்கும் காப்புக்கும் உட்பட்ட தன் காதலியை வரைந்துகொள்வதற்கான பணத்தைத் தேடி வரும்பொருட்டுச் சென்று வருந்தி ஈட்டி வந்தனன் என்னும் இறைச்சிப்பொருள் வெளிப்பட்டது.

சொற்பொருள்

1. நிலம் தாழ் - தாழ்வான நிலப்பகுதி; தெண்கடல் - தெளிந்த கடல்; மேய்ந்த - இரை தேடிய.
2. விலங்கு மென் தூவி - ஒன்றையொன்று ஒட்டாது பிரிந்து காணப்படும் மென்மையான இறக்கைகள்; அன்னம் - அன்னப்பறவை.
3. பொன்படு - அழகு பெறும்; நெடுங்கோடு - உயர்ந்த உச்சி; இமயம் - இமயமலை.
4. வான்அர மகளிர் - தெய்வ மகளிர்; மேவல் - விளையாட்டுத்துணை.
5. பார்ப்பு - குஞ்சு; அல்கு இரை - இட்டு உண்பிக்கும் இரை; ஒய்யும் - உணவு ஊட்டும்.
6. அசைவு - இளைப்பு; நோன் - வலிய; பறை - சிறகு.
8. உழையள் - அருகில் இருப்பவள்.
9. குணக்கு - கிழக்கு; வெள்ளி - வெள்ளி மீன்.

வரைவு மலிதல்

மணம் நிகழவிருப்பது குறித்து மகிழ்வுறுதல்.

தோழி கூற்று

குறுந்தொகை 51 **குன்றியனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவு நீட்டித்தவிடத்து ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி வரைவு மலிவு கூறியது. (வரைவு மலிவு - திருமணம் நடக்கவிருக்கும் மகிழ்ச்சிச் செய்தி.)

கூற்று விளக்கம்

தலைவன் வரைந்துகொள்ளுதற்குரிய முயற்சிகளைச் செய்கிறான். ஆயினும், அவன் விரைந்து வந்து மணந்தால் நல்லதென்று கவலையுறு கிறாள், தலைவி. அவளைத் தேற்றுவாளாய்த் தோழி, "எல்லாம் ஒத்திருப் பதால் விரைவில் திருமணம் நிகழ்வது உறுதி" எனக் கூறித் தலைவியைத் தேற்றியது.

கூன்முள் முண்டகக் கூர்ம்பனி மாமலர்
நூல்அறு முத்தின் காலொடு பாறித்
துறைதொறும் பரக்கும் தூமணல் சேர்ப்பனை
யானும் காதலென்; யாயும்நனி வெய்யள்;
எந்தையும் கொடீஇயர் வேண்டும்;
அம்பல் ஊரும் அவனொடு மொழிமே.

தெளிவுரை

தலைவியே! வளைந்த முள் கொண்ட கழிமுள்ளிச்செடியின் மிகவும் குளிர்ச்சி பொருந்திய கரிய மலர்கள், நூலறுந்து வீழ்ந்த முத்துகளைப் போலக் காற்றினால் சிதறித் துறைதோறும் பரவிக் கிடக்கும் வெண்மணலைக் கொண்ட கடற்கரைக்குத் தலைவன், நம் காதலன். அவனிடம் நானும் அன்புடையேன்; நம் தாயும் அவனை மிகவும் விரும்புகிறாள்; நம் தந்தையும் உன்னை அவனுக்கு மணம் செய்து கொடுக்க எண்ணம் கொண்டுள்ளார். பழிச்சொல் கூறும் ஊராரும் உன்னை அவனுடன் இணைத்தே பேசுகின்றனர்.

கருத்து

'தலைவனோடு உன் மணம் நடப்பது உறுதி; ஆதலின், வதுவை நிகழும்வரை ஆற்றியிரு எனத் தலைவியிடம் தோழி வற்புறுத்திக் கூறுகிறாள்.

இறைச்சி

முள்செடியாகிய முள்ளியின் மலர், கைவருந்திப் பறிக்க வேண்டாதவாறு காற்றினால் உதிர்ந்து மணலில் பரந்து எளிதில் பெறும்படி கிடக்கும். இத்தொடர்மூலம், அரிய முயற்சியால் பெற வேண்டிய வரைவு, தலைவன் முயற்சியால் எளிதாய் எல்லார் உடம்பாட்டையும் பெற்றது என்னும் இறைச்சிப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. கூன் - வளைவு; முண்டகம் - கழிமுள்ளிச்செடி; கூர்ம்பனி - மிகவும் குளிர்ச்சி பொருந்திய.
2. நூல் அறு - நூல் அற்று விழுந்த; கால் - காற்று; பாறி - சிதறி.
3. பரக்கும் - பரவிக் கிடக்கும்.
4. காதலென் - அன்புடையேன்; யாய் - தாய்; நனி வெய்யள் - மிக்க விருப்பம் கொண்டுள்ளாள்.
5. எந்தை - நம் தந்தை; கொடீஇயர் - மணஞ்செய்து கொடுக்க; வேண்டும் - விரும்புகின்றார்.
6. அம்பல் - பழிச்சொல்; அவனொடு - உன்னை அவனோடு சேர்த்தே; மொழிம் - பேசும்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 213 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

'வரைவொடு வருதலைத் துணிந்தான்' என்பது தோழி கூறக்கேட்ட தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் திருமண ஏற்பாட்டுடன் வரத் தீர்மானித்துள்ளான் என்று தோழி கூறிட, அதனைக் கேட்ட தலைவி சொல்லியது.

நறுவடி மாஅத்து மூக்குஇறுபு உதிர்ந்த
ஈர்ந்தண் பெருவடுப் பாலையில், குறவர்,
உறைவீழ் ஆலியில், தொகுக்கும் சாரல்
மீமிசை நல்நாட் டவர்வரின்,
யான்உயிர் வாழ்தல் கூடும் அன்னாய்!

தெளிவுரை

தோழியே! நறுமணம் கமழும் வடுக்கள், காம்பறுந்து மாமரங்களிலிருந்து கீழே உதிர்ந்து கிடக்கும். அவற்றைப் பாலைநில மக்கள், மழைத்துளியுடன் விழும் ஆலங்கட்டிகளைக் குவித்து அள்ளுவது போல ஆவலோடு விரைவாய் அள்ளிக் குவிப்பார்கள். அத்தகைய மலைச்சாரலைக் கொண்ட மிக உயர்ந்த நல்ல மலைநாட்டைச் சார்ந்தவனான நம் தலைவன், திருமண உறுதியுடன் வந்தால் நான் உயிர் வாழ்தல் கூடும். (இன்றேல் இறந்துபடுவேன்.)

கருத்து

தலைவன் மணந்துகொள்ளாவிடின் என் உயிர் நிலையாது.

விளக்கம்

மழையொடு வீழும் ஆலங்கட்டிகளை மக்கள் அள்ளித் தொகுப்பது இயல்பு. அவ்வண்ணமாய்க் குறவர்கள் மாவடுக்களை அள்ளித் தொகுத்தனர்.

பாலை நிலத்தில் மழை பெய்ய, அதனால் விழுந்த ஆலங்கட்டிகள், காம்பறுந்து விழுந்த மாவடுக்கள் மழையினால் நனைந்து கிடப்பதுபோலக் காட்சி தரும்.

இற்று விழும் வடுக்களைப் பாலைநில மக்கள் ஆவலோடு தொகுப்பது போல, நம் தலைவனும் நான் துயரத்தால் நைந்து இறந்துபடும் நிலைவரை வாளாவிருந்து, அந்த நிலை எய்தும் இப்போது வரைய வந்துள்ளான் என, இதுவரை தலைவன் வாராதிருந்தது குறித்துத் தலைவி வருந்திக் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. நறுவடி - நல்ல மணம் பொருந்திய வடு; மூக்கு இறுபு - மூக்கு அற்று - காம்பினின்றும் உதிர்ந்து.

3. உறைவீழ் - மழைத்துளியுடன் விழுகின்ற; ஆலி - ஆலங்கட்டி (கட்டியாய் விழும் மழைத்துளி.)
4. மீமிசை - மிக உயர்ந்த.
5. அன்னாய் - தோழீ!

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 144 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் வரைந்துகோடல் நினையாது, ‘களவொழுக்கமே விரும்பி ஒழுகாநின்றான்’ என்பது அறிந்து வேறுபட்ட தலைமகள், ‘அவன் கூறியவாற்றால் இனிக் கடிதின் வரைவன்; ஆற்றாயாகாது ஒழிய வேண்டும்’ என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் திருமணம் செய்துகொள்ளக் கருதாமல் களவொழுக்கத் தினையே விரும்பி வந்துகொண்டிருந்தான். அந்நிலையில் தலைவியை நோக்கித் தோழி, ‘தான் கூறியபடி தலைவன் விரைவில் மணப்பான். அதுவரை நீ பொறுத்திருத்தல் வேண்டும்’ என்றாள். அதற்குத் தலைவி கூறியது.

எக்கர் ஞாழல் இணர்படு பொதும்பர்த்
தனிக்குருகு உறங்கும் துறைவற்கு
இனிப்பசந் தன்றுஎன் மாமைக் கவினே.

தெளிவுரை

தோழியே! மணல்மேட்டில் உள்ள ஞாழலின் பூங்கொத்துகள் பொருந்திய சோலையில் துணையைப் பிரிந்து நாரை தனியே உறங்கும் கடல்துறையை உடையவனின் பொருட்டாக, என் மாமையாகிய அழகு, நீ அவனது மாண்பு கூறித் தேற்றத் தொடங்கிய இப்பொழுதுதான் பசலை பாய்ந்து சிதைகின்றது.

கருத்து

தோழியே! நீ என்னைத் தேற்ற முற்படும் இச்செயலே என்னை நலியச் செய்கின்றது.

விளக்கம்

இதுவரை குன்றாதிருந்த மாந்தளிரின் தன்மையைக் கொண்ட என் அழகு, 'அவன் வரைவேனென்று உறுதி கூறுகின்றான்; ஆதலின், வருந்தாதிரு' என்று நீ தேற்றத் தொடங்கிய இப்போது தான் பசந்தது.

அவன் நம்மை நினைந்து வருவது களவின்பம் நுகர்தற்கே; வரைந்துகொண்டு இல்லறம் நடத்துதல் அவன் கருத்தன்று. நீ அவன் சொல்லை எவ்வாறு தெளிந்தனை?

குறிப்பு

'சோலையில் நாரை தனித்து உறங்கும்' என்னும் தொடர் வாயிலாய்க் காலம் வாய்த்த பொழுதும் வரைந்து ஒன்றுபட்டு வாழ்வதற்கு முயலாது தனித்து உறைதலையே தலைவன் விரும்புகிறான் என்னும் செய்தி பெறப் படுகிறது.

உள்ளுறை

சோலை தரும் இன்பத்தில் பேடை தன் துணையை மறந்து இனிதே அச்சோலையிலேயே உறங்கியது என்னும் தொடர், தலைவன் தன் செல்வ மனைக்கண் சென்றதும் அங்குள்ள இன்பங்களை விரும்பித் தலைவியைப் பிரிந்து உறைகின்றான் என்னும் உள்ளுறைப் பொருளைத் தருகிறது.

சொற்பொருள்

1. இணர்படு பொதும்பர் - பூங்கொத்துகள் பொருந்திய சோலை.
2. குருகு - நாரை.
3. இனி - இப்பொழுது; பசந்தன்று - பசலை பாய்ந்தது.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 262 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

'வரைந்துகொள்ள நினைக்கிலன்' என வேறுபட்ட தலைமகள், 'அவன் நின்மேல் விருப்பமுடையன்; நீ நோகின்றது என்னை?' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் நம்மை நாடி வருகின்றான்; ஆனால், வரைந்துகொள்ள நினைக்கிலன் என்னும் ஏக்கத்தால் தலைவியின் உடலும் உள்ளமும் எழிலழிந்து மாறுபடுகின்றன. தோழி, தலைவனின் காதல்மிகுதியைக் கூறி, 'அவன் உன்னையே மணப்பான்; ஆற்றியிரு; மனம் வருந்தாதே' எனத் தலைவியைத் தேற்றுகிறாள். அவளிடம் தலைவி கூறியது.

சிறுதினை மேய்ந்த தறுகண் பன்றி
துறுகல் அடுக்கத்துத் துணையொடு வதியும்
இலங்குமலை நாடன் வரூஉம்;
மருந்தும் அறியும்கொல் தோழி!அவன் விருப்பே?

தெளிவுரை

சிறு தினையை மேய்ந்த அஞ்சாமைமிக்க காட்டுப்பன்றி குண்டுக்கற்கள் நிரம்பிய மலைப்பகுதியில் தன் துணையோடு தங்கியிருக்கும். அத்தகைய மலைநாட்டுக்கு உரியவன், நம் தலைவன். அவன் நம்மை நாடி வரும் காதல் மிகக் கொண்டவன் என்கிறாய். என் பிரிவு நோய்க்கு அவன் இங்கு வர விரும்புவதே மருந்து என்பதை அவன் அறிவானோ?

கருத்து

தோழி! என் பிரிவு நோய்க்கு மருந்து தலைவன் மணம் பேசி வருவதே யாகும்.

குறிப்பு

பன்றி, தன் துணையொடு தங்கும் காட்சி தலைவனுக்குத் தானும் தலைவியோடு தங்கியிருக்க வேண்டும் என்னும் அருளுணர்வை எழுப்பும்

என்று தோழி கூறினாள். தலைவன் செயல் அவ்வாறு இல்லையே எனத் தலைவி மறுத்துக் கூறினாள்.

சொற்பொருள்

1. தறுகண் - அஞ்சாமை மிக்க.
2. துறுகல் அடுக்கத்து - குண்டுக்கறகள் நிறைந்த மலைப்பகுதியில்; துணையொடு - தன் பெண்பன்றியுடன்; வதியும் - தங்கும்.
3. வரூஉம் - வருவான்.
4. மருந்து - பிரிவு நோயைத் தீர்க்கும் மருந்து.

3-4. வரூஉம் விருப்பே - வருவதற்குக் காரணமாகிய அருள்; அவன் இங்கு வர விரும்புவதே மருந்து என்பதை அவன் அறிவானோ?

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 181 — **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

இக்களவொழுக்கம் நெடிது செல்லின் இவ்வூர்க்கண் அலர் பிறக்கு மென்று அஞ்சியிருந்த தலைமகள், 'தலைமகன் வரைந்துகொள்ளத் துணிந்தான்' என்று கூறிய தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கம் நீடித்தால் ஊருக்குள்ளே அலராகிய பழிச்சொல் பரவும் என்று தலைவி அஞ்சியிருந்தாள். தோழி, 'தலைவன் மணந்துகொள்ளத் துணிந்துவிட்டான்' என்று கூறினாள். அப்போது தலைவி தோழியிடம் சொல்லியது.

நெய்தல் உண்கண், ஏர்இறைப் பணைத்தோள்
பொய்தல் ஆடிய பொய்யா மகளிர்
குப்பை வெண்மணல் குரவை நிறூஉம்
துறைகெழு கொண்கன் நல்கின்,
உறைவினிது அம்ம!இவ் அழுங்கல் ஊரே.

தெளிவுரை

தோழியே! நெய்தல் மலர்போன்ற கண்களையும், அழகிய கோடுகள் அமைந்த முன்கையையும், மூங்கில் போன்ற தோள்களையும் கொண்டவராய்ப் 'பொய்தல்' என்னும் விளையாட்டை ஆடிய மகளிர், பின்னர், குவிந்த வெண்மணலில் குரவைக்கூத்து ஆடும் துறை பொருந்திய நெய்தல்நிலத்திற்குரிய தலைவன் நம்மை வரைந்து கொண்டு அருள் புரிவானாயின், அலராகிய ஆரவாரத்தைக் கொண்ட இவ்வூர் நாம் தங்கி வாழ்தற்கு இனியதே.

கருத்து

தலைவன் மணந்துகொள்வானாயின் இவ்வூர் தங்கி வாழ்தற்கு இனியது.

குறிப்பு

பொய்தலாகிய விளையாட்டினை ஆடிய மகளிர் பின்னர் மணற்பரப்பில் குரவையாடுவர் என்னும் தொடர் வாயிலாய்க் களவில் கூடித் தலைவிக்கு அருள் செய்த தலைவன், அடுத்து வரைந்துகொண்டு கூடுதலை விரும்பினான் என்னும் செய்தி பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. இறை - முன் கை.
2. பொய்தல் - மகளிர் விளையாட்டு; பொய்யா - எதனையும் மறைக்க அறியாத.
3. குப்பை - குவியல்; குரவை - பெண்டிர் எழுவர் கைகோத்து விளையாடும் விளையாட்டு; நிறூஉம் - நின்று விளையாடும்.
4. நல்கின் - திருமணம் செய்துகொண்டு அருள் செய்தால்.
5. உறைவு - தங்குதல், வாழ்தல்; அழுங்கல் ஊர் - அலர் கூறித் துன்புறுத்தும் இவ் ஊர்.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 2 **மூவாதியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு தலைவந்தமை கண்டு மகிழ்ந்த தலைமகள் தோழிக்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவனுடன் மணம் நிகழப்போவதை அறிந்த தலைவி தோழியிடம் மகிழ்ந்து கூறியது.

கொல்லைப் புனத்த அகில்சுமந்து கல்பாய்ந்து
வானின் அருவி ததும்பக் கவினிய
நாடன் நயம்உடையன் என்பதனால் நீப்பினும்
வாடல் மறந்தன தோள்.

தெளிவுரை

“தோழியே! அருவி பெருக்கெடுத்துத் திணைப்புனத்தில் உள்ள அகிற்கட்டைகளைச் சுமந்து செல்லும் மலைநாட்டுக்குரியவன், நம் தலைவன். அவன் வாய்மை முதலான பண்புகள் உள்ளவன் என்பதனால் அவன் பொருள் தேடும்பொருட்டு என்னை நெடுநாள் நீங்கிச் சென்றிருந்தானாயினும் என் தோள்கள் மெலியாதுள்ளன” என்று, தலைவன் மணம் பேசி வருவது கண்டு மகிழ்ந்து தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

‘தலைவன் பண்பாளன்; சொன்ன சொல் தவறாதவன்; மணம் பேசி வருவான் என்பது உறுதியாதலால், அவன் பிரிவிலும் என் தோள்கள் மெலியவில்லை’ எனத் தலைவி கூறுகிறாள்.

குறிப்பு

தலைவன் வரவு, தலைவியின் தோள்களை வாடுதலிலிருந்து மறக்கச் செய்தது என்பதன்மூலம் தலைவன் மணம் பேசி வருகிறான் என்பதைத் தலைவி தெரிவிக்கிறாள்.

சொற்பொருள்

1. கொல்லை - தினைப்புனம்; அகில் - ஒரு வகை மரம், இதன் கட்டை மணம் தருவது; கல் - மலை.
2. ததும்ப - பெருக்கெடுக்க; கவினிய - அழகு பெற்ற.
3. நயம் உடையன் - நற்பண்புகளைக் கொண்டவன்; நீப்பினும் - பிரிந்து சென்றிருந்தாலும்.
4. வாடல் - மெலிதல்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 112 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

களவு நீடுவழி வரையலன்கொல் என்று அஞ்சிய தோழிக்குத் தலைமகன் வரைவுத்திறம் தெளிக்கத் தெளிந்த தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் களவொழுக்கத்தையே தொடர்ந்து விரும்பியிருத்தலைக் கண்ட தோழி, அவன் திருமணம் செய்துகொள்ள விரும்பவில்லையோ என ஐயுற்றாள். அவன் விரைவில் திருமண ஏற்பாட்டோடு வருவான் என்னும் உறுதி தனக்கிருத்தலைத் தலைவி தோழியிடம் கூறியது.

அம்ம வாழி, தோழி! பாசிலைச்
செருந்தி தாய இருங்கழிச் சேர்ப்பன்
தான்வரக் காண்குவம் நாமே;
மறந்தோம் மன்ற நாணுடை நெஞ்சே.

தெளிவுரை

தோழியே, வாழ்க! பசிய இலைகளைக் கொண்ட செருந்தி மரம் பரந்து கிளைத்திருக்கும் பெரிய உப்பங்கழியினை உடையவன், நம் தலைவன். நம்மை அவன் முதன்முதல் சந்தித்த போது சொல்லிய உறுதிமொழிகளை நம் பெண்மைக்குரிய நாணத்தால் மறந்தே போய்விட்டோம். அவன், தான் சொன்ன வாறே வரைவொடு வருதலை நாமே விரைவில் காண்போம்.

கருத்து

தோழியே! தலைவன் சொற்பிழையானாய் வந்து நம்மை மணப்பான்.

விளக்கம்

நம்மை அன்று கண்டபோது அவன் கூறிய உறுதி மொழிகளை நாணமுள்ள நாம் மறந்தோம். நம்மையும் தன் உறுதிமொழியையும் மறவாத அவன் கட்டாயம் வருவான்.

குறிப்பு

'நம்மிடம் தலைவன், தான் வற்புறுத்திக் கூறியதிலிருந்து மாறமாட்டான். மாறின், அவன் நாட்டுச் செருந்தி முதலியன பசிய இலைகளின்றிக் கெட்டழியும்' என்பது குறிப்புப் பொருள்.

சொற்பொருள்

1. பாசிலை - பசிய இலை.
2. செருந்தி - நெய்தல் நில மரம்; தாய - பரவிய; சேர்ப்பன் - நெய்தல் நிலத் தலைவன்.
3. காண்குவம் - காண்போம்.
4. நாணுடை நெஞ்சம் கொண்டவராதலால் நாம் மறந்தோம்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 253 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன், 'வரைவொடு புகுதரா நின்றான்' என்பது தோழி கூறக் கேட்ட தலைமகள் அவட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

திருமணத்தை இடை வைத்துப் பிரிந்த தலைவன் திருமண ஏற்பாட்டோடு வந்து நின்றான் என்று தோழி சொல்ல, அதனைக் கேட்ட தலைவி சொல்லியது.

குன்றக் குறவன் சாந்த நறும்புகை,
தேம்கமழ் சிலம்பின் வரையகம் கமழும்
கானக நாடன் வரையின்,
மன்றலும் உடையள்கொல் தோழி! யாயே?

தெளிவுரை

தோழியே! மலையில் வாழும் குறவன் சந்தன மரத்தை வெட்டி எரிப்பதால் அதன் நறுமணப்புகை தேன் மணக்கும் மலை முழுவதும் கமழ்கின்றது. அத்தகைய கானகத்துக்குரிய தலைவன் திருமணத்தை முடிப்பானாயின், நம் தாய் அந்த மணச்செயலை முன்னின்று நடத்துவாளா?

கருத்து

தோழியே! தலைவன் வரைவொடு வரின், திருமணத்தைத் தாய் முன்னின்று நடத்தி வைப்பாளா?

குறிப்பு

களவொழுக்கத்தில் இற்செறிப்பு, வெறியாடல் முதலிய செயல்களால் தாய் தன் களவொழுக்கத்திற்குத் தடையாயிருந்ததை நினைத்துத் தலைவி, 'இப்பொழுது தாய் இத்திருமணத்தை மனநிறைவோடு முன்னின்று நடத்துவாளா' என ஐயுறுகிறாள்.

உள்ளுறை

தேன்மணத்தோடு சந்தன மணமும் கலந்து மணமிகுந்து தீய நாற்றத்தைப் போக்குகிறது என்னும் தொடர் வாயிலாய்த் தலைவன் வரைபொருள் சிறப்பு, தலைவி வீட்டார் செய்யும் சிறப்பொடு கலந்து பரவி ஊரில் ஏற்பட்ட அம்பலையும் அலரையும் போக்கும் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப் படுகிறது.

சொற்பொருள்

1. சாந்தம் - சந்தன மரம்.
2. தேம் - தேன்; சிலம்பு - மலை; வரையகம் - பக்க மலை.
3. வரையின் - மணந்துகொண்டால்.
4. மன்றல் - திருமணம்; யாய் - தாய்.

தலைவி கூற்று

குறுந்தொகை 368 **நக்கீரர்**

திணை : மருதம்

கூற்று

வரைவு மலிந்த தோழிக்குக் கிழத்தி கூறியது. (வரைவு மலிதல் – மணம் நிகழவிருப்பதுபற்றி மகிழ்வுறுதல்.)

கூற்று விளக்கம்

வரைவுக்குரிய முயற்சிகள் நிகழ்தலைத் தோழி வாயிலாய் அறிந்த தலைவி, "இதுகாறும் மாமையை இழந்து துன்புற்றேன். இனி இடையீடின்றித் தலைவனோடு இன்புறுவேன்" என்று கூறியது.

மெல்லிய லோயே! மெல்லிய லோயே!
நல்நாள் நீத்த பழிதீர் மாமை
வன்பின் ஆற்றுதல் அல்லது, செப்பின்
சொல்ல கிற்றாம், மெல்லிய லோயே!
சிறியரும் பெரியரும் வாழும் ஊர்க்கே,
நாள்இடைப் படாஅ நளிநீர் நீத்தத்து
திண்கரைப் பெருமரம் போல,
தீதுஇல் நிலைமை முயங்குகம் பலவே.

தெளிவுரை

"மெல்லிய இயல்பு கொண்ட தோழியே! முதன்முதலில் தலைவனைக் கூடிப் பிரிந்தபோது நமது மாந்தளிர் போன்ற அழகை இழந்தோம். அந்த இழப்பை மனவலிமையால் பொறுத்துக்கொண்டிருந்தோமே அல்லாமல், சொற்களால் சொல்ல இயலாதவர் ஆனோம். சிறியோரும் பெரியோரும் வாழும் ஊர் இது. (அஃதாவது, பண்பில் சிறியராய்ப் பழி தூற்றுவோரும் பண்பிற் பெரியவரும் வாழும் ஊர்). என்றும் வற்றாமல் நீரோடுகின்ற ஓர் ஓடைக்கரையிலே நிற்கும் பெரிய மரத்தைப் போல, தீதற்ற நிலைமையோடு இனித் தலைவனைப் பலகாலும் தழுவி இன்புறுவோம்."

கருத்து

தோழியே! மணம் நிகழ்ந்தால் இனி எத்தகைய துன்பமுமில்லாமல் தலைவனோடு இனிதே சேர்ந்திருப்பேன்.

விளக்கம்

வெள்ளத்தின் திண்ணிய கரையிலுள்ள பெருமரம் என்றும் செழுமையோடு இருப்பதைப் போல, தலைவனுடன் கூடி யிருக்கும் நாமும் செழுமையுடன் திகழ்வோம் என்று தலைவி கூறினாள்.

இடிகரையிலே நின்ற பெருமரம் எப்போது சாயுமோ என அஞ்சும்படி இருக்கும். அதுபோல இதுவரை அஞ்சியிருந்த நாம், மணமானதும் எவ்விதத் தீங்குமில்லாமல் நல்ல முறையில் பலமுறை ஒருவரையொருவர் தழுவி வாழ்வோம் என்று சொன்னதாகவும் கொள்ளலாம்.

குறிப்பு

வற்றாத நீர்வெள்ளம் தலைவனாகவும், குளக்கரை தலைவனுடைய இல்ல மாகவும், கரையில் நின்ற மரம் தலைவியாகவும் குறிப்புப்பொருள் பெறலாம்.

சொற்பொருள்

2. நல்நாள் நீத்த - தலைவனை முதலில் கூடிப் பிரிந்த அந்த நாளிலே நீங்கிய; பழி தீர் - குற்றமற்ற; மாமை - மாமை நிறம்.
3. வன்பின் - மன வலிமையால்; ஆற்றுதல் - பொறுத்திருத்தல்.
4. சொல்லகிற்றாம் - சொல்ல இயலாதவர் ஆனோம்.
6. நாள் இடைப்படா - ஒரு நாளேனும் இடையீடுபடாத; நளி நீர் - செறிந்த நீர்; நீத்தம் - வெள்ளம்.
7. திண் - திண்ணிய, வலிமையான.
8. தீது இல் நிலைமை - எவ்விதத் தீங்கும் இல்லாமல் நல்ல முறையில்; முயங்குகம் - தழுவுவோம்; பலவே - பல முறையும்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 146 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவு கடாவவும் வரையாது ஒழுகுகின்றுழி, 'நம்மை எவ்வகை நினைத்தார் கொல்லோ?' என்று ஐயுற்றிருந்த தலைமகள், வரைவு தலைவந்துழித் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவு நீட்டித்தபொழுது தலைவனை விரைவில் வரைவொடு வருமாறு வற்புறுத்தியும், அவன் வாராமையால் தலைவன்பற்றி முதலில் ஐயுற்றிருந்தாள், தலைவி. பின்னர், அவன் வரைதலில் முனைந்தமை கண்டு மகிழ்ந்த அவள் தன் தோழியிடம் சொல்லியது.

எக்கர் ஞாழல் அரும்புமுதிர் அவிழ்இணர்
நறிய கமழும் துறைவற்கு
இனிய மன்றஎன் மாமைக் கவினே.

தெளிவுரை

"தோழியே! மணல்மேட்டில் அரும்புகள் முற்றி மலர்ந்த பூங் கொத்து நறுமணம் கமழும் துறையைக் கொண்ட தலைவனுக்கு என் மாந்தளிர் போன்ற அழகிய மேனி இனியதாயிற்று."

கருத்து

தோழியே! தலைவன் வரைவொடு வருவதால் என் மாமை அழகு இனியதாயிற்று.

விளக்கம்

வற்புறுத்தியும் தலைவன் வரையாது நீண்ட காலம் களவொழுக்கமே மேற்கொண்டிருந்தான். தலைவி, இவன் வரைந்து கொள்ள மாட்டானோ என ஐயுற்று வருந்தினாள். இந்நிலையில் தலைவன் வரைவொடு வர, அச்செய்தி அறிந்த தலைவி மிகவும் மகிழ்ந்து, அதனைத் தோழியிடம் சொன்னாள்.

குறிப்பு

ஞாழல் அரும்பு முதிர்ந்து மலர்ந்து நறுமணம் கமழ்வதுபோல, தலைவனது அன்பும் முறையாய் நிரம்பி வெளிப்பட்டு, இப்போது திருமணத்தோடு வருமாறு செய்தது.

சொற்பொருள்

1. அரும்பு முதிர் - அரும்பு முதிர்ந்து (முற்றி); அவிழ்இணர் - மலரும் பூங்கொத்து.
2. நறிய கமழும் - நன்மணம் வீசும்.
3. கவின் - அழகு.

தலைவி கூற்று

குறுந்தொகை 257 **உறையூர்ச் சிறுகந்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவுணர்த்திய தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தோழியை நோக்கி, "தலைவனைக் கண்டபோது இன்பமும், காணாதபோது துன்பமும் உடையவளாய் இருந்தேன். இனி எப்பொழுதும் உடனிருப்பதால் இன்பமே உண்டாகும்" என்று தலைவி உரைத்தது.

வேரும் முதலும் கோடும் ஓராங்குத்
தொடுத்த போலத் தூங்குபு தொடரிக்
கீழ்தாழ்வு அன்ன வீழ்கோள் பலவின்
ஆர்கலி வெற்பன் வருதொறும் வரூஉம்;
அகலினும் அகலா தாகி
இகலும் தோழி!நம் காமத்துப் பகையே.

தெளிவுரை

தோழியே! நம் பகையாகிய காமம் செய்யும் கொடுமை பெரிது! நம் தலைவனுக்குரிய மலையில் பலா மரங்களில்

வேரிலும் அடிமரத்திலும் கிளைகளிலும் ஒரே மாதிரியாய்த் தாழ்ந்து தொடர்ச்சியாய்க் கீழே விழுந்துவிடுவதுபோலப் பழங்கள் தொங்கிக்கொண்டிருக்கும். இத்தகைய வளமும் ஆரவாரமும் கொண்ட மலைக்குத் தலைவன் என்னைக் காண வரும்போதெல்லாம் காமமாகிய பகை கூடவே வரும். அவன் நீங்கிய பின்னும் அது நம்மை விட்டு நீங்காமல் நின்று பகைத்துத் துன்புறுத்தும்.

(அவன் என்னை வெளிப்படையாய் மணந்தால் அந்தக் காமமாகிய பகையால் என்னைத் துன்புறுத்த இயலாது.)

கருத்து

தோழியே! தலைவன் என்னை மணந்தால் காமநோயால் என்னை வருத்த இயலாது.

விளக்கம்

காமம் இன்பத்தைத் தருவதாயினும் தலைவனைப் பிரிந்த போது தன்னுடனிருந்தே துன்பத்தைத் தருதலின் அஃது அவளுக்குப் பகையாயிற்று. இப்பகை, அவன் வரைய வருவதால் தீர்ந்தது. இனி எப்போதும் இன்பமே!

சொற்பொருள்

1. முதல் - அடி மரம்; கோடு - கிளை; ஒராங்கு - ஒரே மாதிரி.
2. தொடரி தூங்குபு - தொடர்ச்சியாய்த் தொங்கிக்கொண்டிருக்கும்.
3. கீழ் தாழ்வு - கீழே தாழ்ந்து; வீழ்கோள் - விழுவது போன்ற.
4. ஆர்கலி - ஆரவாரம்; வெற்பன் - மலைநாட்டுத்தலைவன்.
5. அகலினும் - (அவன்) அகன்று சென்றுவிட்டாலும்.
6. இகலும் - துன்புறுத்தும்.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 21 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகன் வரைவு மலிந்தது தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை மணம் பேச வந்துள்ளான் எனத் தோழி தலைவியிடம் கூறியது.

அஞ்சனம் காயா மலரக் குரு(கு)இலை
ஒண்டொடி நல்லார் முறுவல் கவின்கொளத்
தண்கமழ் கோடல் துடுப்(பு)ஈனக் காதலர்
வந்தார் திகழ்க,நின் தோள்.

தெளிவுரை

"*காயாச்செடிகளில் கரிய மை போன்ற மலர்கள் பூத்துள்ளன; குருக்கத்திச்செடிகளின் இலைகள் பெண்களின் பற்களைப் போன்று அழகுடன் விளங்குகின்றன; நறுமணம் மிக்க வெண் காந்தள் செடிகள் துடுப்பினைப் போன்று மலர்க் கொத்துகளை வெளிப்படுத்தியுள்ளன. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த நம் தலைவர் (முலைவிலைக்குரிய பொருளோடு) மணம் பேச வந்துவிட்டார். ஆதலால், பிரிவால் மெலிந்த உன் தோள்கள் முன்போல் பூரித்துப் பொலியட்டும்*" எனத் *தோழி தலைவியை நோக்கிக் கூறினாள்.*

கருத்து

தலைவியே! தலைவன் உன்னை மணம் பேச வந்துள்ளான்; மகிழ்ச்சி கொள்.

குறிப்பு

காயா, குருகு, காந்தள் ஆகியவை கார் கால வரவை உணர்த்துகின்றன.

சொற்பொருள்

1. அஞ்சனம் - மை; குருகு இலை – குருக்கத்திச்செடி இலை.

2. ஒண்டொடி - ஒளி பொருந்திய வளையலணிந்த; முறுவல் - பற்கள்; கவின் - அழகு.
3. கோடல் - வெண்காந்தள் செடி; துடுப்பு ஈன - துடுப்பைப் போன்று மலர்க்கொத்துகளை வெளிவிட.
4. திகழ்க - (பூரித்துப்) பொலிக.

தோழி கூற்று

அகநானூறு 42 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் வரைவு மலிந்தமை தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், வரைவு முயற்சியை மேற்கொண்டு, தலைவியைப் பெற்றோரிடம் அவர்தம் மகளை மணஞ்செய்து தருமாறு வேண்டினான். அவர்களும் உடம்பட்டதால் தலைவன் திருமண ஏற்பாட்டுடன் வந்தது கண்டு மகிழ்ந்த தோழி அதனைத் தலைவியிடம் சொல்லியது.

மலிபெயல் கலித்த மாரிப் பித்திகத்துக்
கொயல்அரு நிலைஇய பெயல்ஏர் மணமுகைச்
செவ்வெரிந் உறழும் கொழுங்கடை மழைக்கண்,
தளிர்ஏர் மேனி, மாஅ யோயே!
நாடுவறம் கூர, நாஞ்சில் துஞ்ச,
கோடை நீடிய பைதுஅறு காலை,
குன்றுகண் டன்ன கோட்ட, யாவையும்
சென்றுசேர் கல்லாப் புள்ள, உள்இல்
என்றூழ் வியன்குளம் நிறைய வீசி,
பெரும்பெயல் பொழிந்த ஏம வைகறை,
பல்லோர் உவந்த உவகை எல்லாம்
என்னுள் பெய்தந் தற்றே, சேண்இடை
ஓங்கித் தோன்றும் உயர்வரை
வான்தோய் வெற்பன் வந்த மாறே!

தெளிவுரை

மழைக்காலத்தில் மலர்வது, பித்திக மலர். மிகுந்த மழை பெய்ததால் தழைத்துக் கொய்தற்கு இயலாத அளவுக்கு மணங் கொண்ட அதன் அழகிய அரும்புகள் அரும்பின. அவ்வரும்பு களின் சிவந்த பின்புறத்தை ஒக்கும் வளமான கடைப்பகுதியைக் கொண்ட குளிர்ந்த கண்ணினையும், தளிரையொத்த மேனி யினையும், மாமை நிறத்தையும் கொண்ட தலைவியே!

மழை பெய்யாமையால் நாட்டில் வறுமையுண்டாக, கலப்பை முதலிய கருவிகள் தொழிலின்றிக் கிடக்க, கோடை நீடி எங்குமே பசுமையற்றிருந்த காலம்.

குன்றுபோல் உயர்ந்த கரைகளைக் கொண்டனவாயும், நீரில்லாமையால் பறவைகள் வந்து தங்குதற்கு வாய்ப்பில்லாதன வாயும், உள்ளே சிறிதளவும் நீரில்லாதனவாயும், மிகுந்த வெப்பம் கொண்டனவாயும் குளங்கள் இருந்தன.

ஒரே நாள் இரவு, நீர்நிலைகள் அனைத்தும் நிறையுமாறு மழை பெய்ய, விடியற்காலத்தே அதனைக் காணும் பலரும் அடைந்த மகிழ்ச்சியெல்லாம் ஒருசேர என்னுள்ளத்தில் எழுந்தது. (எதனால்?)

நெடுந்தொலைவில் உள்ளாரும் காணும் வண்ணம் வானளாவி உயர்ந்து தோன்றும் மலைக்குரிய தலைவன் நாம் விரும்பியபடி மணந்துகொள்ள வந்தனன் என்னும் செய்தியால்!

கருத்து

'தலைவன் உன்னை மணந்துகொள்ள வந்துள்ளான் என்றறிந்து வறண்ட குளம் நிறைந்தது போல் என் நெஞ்சம் மகிழ்ச்சியால் நிறைவுற்றது' என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

குறிப்பு

பித்திகம் என்பது ஒரு வகைக் கொடி. இது பித்தி, பித்திகை என்றும் வழங்கப்படுகிறது. இதன் பூ இன்று பிச்சிப்பூ என வழங்கப்படுகிறது. அந்திப்போதில் மலர்வது; மிக்க மணமுள்ளது.

சொற்பொருள்

1. மலி பெயல் - மிக்க மழை; கலித்த - தழைத்த; மாரி - மாரிக்காலம்; பித்திகம் - ஒரு வகைக் கொடி, பித்திகப்பூ, பிச்சிப்பூ.
2. கொயல் அரு - கொய்தற்கு இயலாத அளவு; பெயல் - மழை; ஏர் - எழுச்சி; முகை - அரும்பு.
3. செவ்வெரிந் - சிவந்த பின்புறம்; உறழும் - ஒக்கும்; கொழுங்கடை - வளவிய கடை; மழைக்கண் - குளிர்ச்சி பொருந்திய கண்.
4. தளிர் ஏர் - தளிரையொத்த அழகு; மாஅயோய் - மாமை நிறம் வாய்ந் தவளே!
5. வறம் - வறுமை; கூர - மிக; நாஞ்சில் - கலப்பை; துஞ்ச - உழும் தொழிலின்றிக் கிடக்க.
6. நீடிய - நீண்ட; பைது அறு - பசுமையற்ற; காலை - காலம்.
7. கோடு - கரை.
8. சென்று சேர்கல்லாப் புள்ள - நீரில்லாமையால் பறவை சென்று தங்குதலில்லா (புள் - பறவை); உள் இல் - உள்ளே நீரில்லாத.
9. என்றூழ் - வெப்பம் மிக்க; வியன்குளம் - அகன்ற குளம்; நிறைய - நிறையும்படி.
10. பெரும்பெயல் - பெரிய மழை; பொழிந்த - பெய்த; ஏமம் - இன்பம்; வைகறை - விடியற்காலம்.
11. பல்லோர் - பல்லோரும்; உவந்த - மகிழ்ந்த; உவகை - மகிழ்ச்சி.
12. பெய்தந்து - பெய்து வைத்தது; சேண் இடை - நெடுந்தூரத்தே.
13. ஓங்கி - உயர்ந்து; உயர் வரை - உயர்ந்த பக்க மலை.
14. வான்தோய் - வானளாவிய; வெற்பன் - மலைநாட்டுத் தலைவன்; வந்தமாறே - வந்தமையால்.

தோழி கூற்று

குறுந்தொகை 34 **கொல்லிக் கண்ணன்**

திணை : மருதம்

கூற்று

வரைவு மலிந்தமை ஊர்மேல் வைத்துத் தோழி கிழத்திக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

"தலைவியை வரைந்துகொள்ள வந்துள்ளவன் அவள் விருப்பத்திற்கு உரியவனே. இச்செய்தியைக் கேட்டு இவ்வூரார் இனியேனும் அலர் பேசி நேரங்கழிக்காது இரவில் இனிதே தூங்கட்டும்" எனத் தோழி தலைவியிடம் கூறியது.

ஒறுப்ப ஓவலர், மறுப்பத் தேறலர்,
தமியர் உறங்கும் கௌவை இன்றாய்,
இனியது கேட்டுஇன் புறுக,இவ் ஊரே!
முனாஅது,
யானைஅம் குருகின் கானல்அம் பெருந்தோடு
அட்ட மள்ளர் ஆர்ப்புஇசை வெரூஉம்
குட்டுவன் மாந்தை அன்னஎம்
குழைவிளங்கு ஆய்நுதல் கிழவனும் அவனே.

தெளிவுரை

கடற்கரைச்சோலையில், யானையின் குரலைக் கொண்ட வண்டாழ்ங்குருகு எனப்படும் ஆனைச்சாத்தன் என்னும் பறவையின் பெரிய கூட்டம் நிறைந்திருக்கும். போரிலே பகைவர்களை வென்று திரும்பிய குட்டுவனது வீரர்களின் ஆரவார ஒலியைக் கேட்டு அப்பறவைகள் அஞ்சி நிற்கும். அக்குட்டுவனுக்குரியது மாந்தை என்னும் நகரம். அந்நகரைப் போன்ற பொலிவுடன் அடர்ந்து விளங்கும் கூந்தலுக்கும், அழகிய நெற்றிக்கும் உரிமை பெற்றவள், தலைவி. இப்பொழுது வரைவொடு வந்திருப்பவன் என் அன்புத் தலைவியைக் களவிற்கூடியவனே! தாயர் நம்மை இற்சிறையிட்டுக் கண்டித்து வருத்தினர்; களவிற்கூடிய உண்மையினை அறியாமல் அத் தலைவனுக்கு மணஞ்செய்து கொடுக்க மறுத்தனர்; காதலரோடு

கூடப்பெறாது தனித்து உறங்காதிருந்த எம்மீது கடுஞ்சொற்களை இவ்வூரார் மொழிந்தனர். இவையாவும் இனி இல்லையாய்ப் போகும். தலைவன் தலைவியை வரைந்து கொள்ள வரும் இனிய மண முழவின் இசையைக் கேட்டு இவ்வூரிலுள்ளார் இன்புறட்டும்!

கருத்து

'தலைவியே! இன்னாது கூறி நம்மை வருத்திய ஊரவர் இனி மங்கல இன்னோசை கேட்டு மகிழும்படி உனக்குத் தலைவனுடன் மணம் நிகழவிருக்கிறது' என்றாள், தோழி.

குறிப்பு

வீரர்களின் ஆர்ப்பொலி கேட்டுப் பறவைகள் அஞ்சி அடங்கின. இத்தொடர்மூலம், தலைவன் வரைவு மலிந்தமை கேட்டு ஊராரின் அலரொலி இனி அடங்கும் என்னும் குறிப்புப்பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. ஒறுப்ப - தமர் கண்டித்து வருத்த; ஓவலர் - வருத்தத்திினின்றும் நீங்காதவராகி; மறுப்ப - மணத்திற்கு மறுத்தனர்; தேறலர் - உண்மை அறியார்.
2. தமியர் - தனியே; உறங்கும் கௌவை - உறங்குவதனால் உண்டாகும் வருத்தம்.
4. முனாஅது - முன்னிடத்தில் உள்ளதாகிய (கானல்).
5. யானையங்குருகு - வண்டாழ்ங்குருகு எனப்படும் ஆனைச்சாத்தன் என்னும் பறவை; பெருந்தோடு - பெரிய கூட்டம்.
6. அட்ட - கொன்ற; மள்ளர் - வீரர்; வெரூஉம் - அஞ்சும்.
7. குட்டுவன் - சேர மன்னன்; மாந்தை - ஒரு நகரம்.
8. குழை - தளிர், பொலிவு; ஆய்நுதல் - நல்ல நெற்றி(யினைக் கொண்ட தலைவிக்கு); கிழவன் - தலைவன், உரிமையுள்ளவன்.

தோழி கூற்று

அகநானூறு 70 **மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் வரைவு மலிந்தமை தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை மணந்து செல்லும் கருத்தின்றிக் களவொழுக்கமே மேற்கொண்டான்; ஊர்மக்கள் பழி தூற்றியதாலும், தோழி திருமணம் செய்து கொள்ள வற்புறுத்தியதாலும் தலைவன் மணந்து செல்ல வருவதையறிந்த தோழி, அவ்வின்பச்செய்தியைத் தலைவியிடம் கூறியது.

கொடுந்திமில் பரதவர் வேட்டம் வாய்த்தென,
இரும்புலாக் கமழும் சிறுகுடிப் பாக்கத்துக்
குறுங்கண் அவ்வலைப் பயம்பா ராட்டி,
கொழுங்கண் அயிலை பகுக்கும் துறைவன்
நம்மொடு புணர்ந்த கேண்மை முன்னே
அலர்வாய்ப் பெண்டிர் அம்பல் தூற்ற,
பலரும்ஆங்கு அறிந்தனர் மன்னே; இனியே
வதுவை கூடிய பின்றை, புதுவது
பொன்வீ ஞாழலொடு புன்னை வரிக்கும்
கானல்அம் பெருந்துறைக் கழனி மாநீர்ப்
பாசடைக் கலித்த கணைக்கால் நெய்தல்
விழவுஅணி மகளிர் தழைஅணிக்கு ஊட்டும்
வென்வேல் கவுரியர் தொல்முது கோடி
முழங்குஇரும் பௌவம் இரங்கும் முன்துறை,
வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
பல்வீழ் ஆலம் போல,
ஒலிஅவிந் தன்று,இவ் அழுங்கல் ஊரே.

தெளிவுரை

அது, வளைந்த படகுகளில் பரதவர் கடலிற்சென்று, வலை வீசிக் கொண்டுவந்த மீன்களின் புலால் நாற்றம் வீசும் சிறு குடியிருப்புகளைக் கொண்ட கடற்கரைப்பாக்கமாகும். அங்கு,

குறுகிய கண்களைக் கொண்ட வலையிற்பிடித்து வந்த கொழுவிய கண்களைக் கொண்ட அயிலை மீன்களை எல்லோர்க்கும் பிரித்துக் கொடுக்கும் கடற்கரைக்கு உரியவன், நம் தலைவன். அவன் நம்மோடு கொண்டிருந்த காதல் உறவைப் பெண்டிர் பலரும் அறிந்து அலர் தூற்றி வந்தனர். (அந்நிலை இன்று நீங்கியது).

புதிதாய் மலர்ந்த புலிநகக் கொன்றையின் பொன்னிறப்பூக்க ளுடன் புன்னையின் பூக்களும் உதிர்ந்து தரையில் ஓவியம் வரைந்தாற்போல அழகு செய்யும் கடற்கரைச்சோலையைக் கொண்டது, பெருந்துறை. அதற்கு அருகே வயலில் உள்ள பசிய இலைகளையும் திரண்ட தண்டினையும் கொண்ட நெய்தற் பூக்களை, விழாவிற்காகத் தம்மை அணி செய்துகொள்ளும் பெண்கள், தங்கள் தழையாடைக்கு அழகு செய்யும்பொருட்டுப் பறித்துச் சேர்ப்பர்.

அத்தகைய அழகுமிக்க, வெற்றி பொருந்திய வேல் கொண்ட பாண்டிய மன்னரது மிகவும் பழமை வாய்ந்த கோடிக்கரையில், அலைகள் முழங்கும் கடற்றுறையில், வெல்லும் போர் வீரனாகிய இராமன், ஏனைய வீரர்களுடன் இலங்கைப்போர் பற்றிய குறிப்புகளைப் பேசிக்கொண்டிருந்தான். அங்கு, நெடிய விழுதுகளைக் கொண்ட ஆலமரத்திலிருந்த பறவைகள் (அவர்கள் பேச்சுக்கு இடையூறாய்) விடாது பேரிரைச்சல் செய்துகொண்டிருந்தன. இராமன் கையமர்த்திக் காட்டியதும் அப்பறவைகளின் இரைச்சல் முற்றிலுமாய் அடங்கியது.

அதுபோல, நம்மைப்பற்றி அலர் தூற்றிக்கொண்டிருந்த பெண்டிரின் வாயெல்லாம், தலைவன் மணம் பேச வந்துள்ளான் என்னும் செய்தி தெரிந்ததும் அடங்கிவிட்டன.

கருத்து

தலைவியே! தலைவன் வரைவொடு வந்ததும் ஊரார் பேசி வந்த பழிச்சொல் நின்று போயிற்று.

குறிப்பு

இராமன் கையமர்த்தியதும் பறவைகள் ஒலியடங்கினாற்போல, தலைவன் திருமணம் பேச வந்துள்ளான் என்னும் செய்தியறிந்ததும் அலர் தூற்றிக்கொண்டிருந்த பெண்டிரின் வாயெல்லாம் அடங்கிவிட்டன.

உள்ளுறை

பரதவர்க்குத் தம் முயற்சியாலே மீன் வேட்டை வாய்த்த தாயினும், குறுங்கண் வலையைப் பாராட்டுவர். தலைவனும் தன் முயற்சியாலே மணம் கூடிற்று என்றாலும், துணை நின்ற தோழியைக் கொண்டாடினன். அயிலை மீனைக் கடலினின்றும் நீக்கி, எல்லோர்க்கும் பகுத்துக் கொடுத்து மகிழ்ந்தாற்போல, தலைவியை உறவினரிடமிருந்து நீக்கித் தலைவன் தன் ஊருக்கு இட்டுச்சென்று அங்குள்ள அனைவரையும் மகிழ்விப்பான்.

சொற்பொருள்

1. கொடும் - வளைந்த; திமில் - படகு; வேட்டம் - மீன் வேட்டை.
2. இரும் புலா - பெரிய புலால் நாற்றம்.
3. அவ்வலை - அழகிய வலை; பயம் - பயன்.
4. அயிலை - ஒரு வகை மீன்; பகுக்கும் - பிரித்துக் கொடுக்கும்.
5. புணர்ந்த - சேர்ந்த, கொண்ட; கேண்மை - உறவு, நட்பு; முன்னே - முன்பு.
6. அம்பல் - பழிச்சொல்.
7. அறிந்தனர் - (தலைவன், தலைவியின்) களவுறவை அறிந்தனர்.
8. வதுவை - திருமணம்; பின்றை - பிறகு; புதுவது - புதிய.
9. பொன் வீ - பொன்னிறப்பூ; ஞாழல் - புலிநகக் கொன்றை மலர்; புன்னை - புன்னைப் பூ; வரிக்கும் - அழகு செய்யும்.
10. கழனி - வயல்; மா நீர் - கரிய நீர்.
11. பாசடை - பசிய இலை; கலித்த - தழைத்த; கணைக்கால் - திரண்ட தண்டு.
12. விழவு அணி மகளிர் - விழாவிற்காக ஒப்பனை செய்துகொள்ளும் மகளிர்; தழை அணி - தழை ஆடை; ஊட்டும் - சேர்க்கும்.
13. கவுரியர் - பாண்டியர்; தொல் முது - மிகவும் பழமையான; கோடி - கோடிக்கரை.
14. பௌவம் - கடல்; இரங்கும் - ஒலிக்கும்; முன்துறை - துறையின் முன்.
15. அருமறைக்கு - போர்பற்றிய அரிய இரகசியங்களை (ஆய்தற் பொருட்டு); அவித்த - (பறவைகளின் ஒலி) இல்லையாகச் செய்த.
16. பல் வீழ் - பல விழுதுகள்; ஆலம் - ஆலமரம்.
17. அழுங்கல் - ஆரவாரம்.

தோழி கூற்று

அகநானூறு 160 **குமுழி ஞாழலார் நப்பசலையார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி வரைவு மலிந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை மணந்துகொள்வதற்குப் பகற்பொழுதில் தேரேறி வருகின்றான். அந்நற்செய்தியை அறிந்த தோழி அதனைத் தலைவியிடம் கூறியது.

ஒடுங்குஈர் ஓதி நினக்கும் அற்றோ?
நடுங்கின்று, அளித்து,என் நிறைஇல் நெஞ்சம்,
அடும்புகொடி சிதைய வாங்கி, கொடுங்கழிக்
குப்பை வெண்மணல் பக்கம் சேர்த்தி,
நிறைச்சூல் யாமை மறைத்துஈன்று, புதைத்த
கோட்டுவட்டு உருவின் புலவுநாறு முட்டைப்
பார்ப்புஇடன் ஆகும் அளவை, பகுவாய்க்
கணவன் ஓம்பும் கானல்அம் சேர்ப்பன்,
முள்உறின் சிறத்தல் அஞ்சி, மெல்ல
வாவுஉடை மையின் வள்பின் காட்டி,
ஏத்தொழில் நவின்ற எழில்நடைப் புரவி
செழுநீர்த் தண்கழி நீந்தலின், ஆழி
நுதிமுகம் குறைந்த பொதிமுகிழ் நெய்தல்,
பாம்புஉயர் தலையின் சாம்புவன நிவப்ப,
இரவந் தன்றால் திண்தேர், கரவாது
ஒல்லென ஒலிக்கும் இளையரொடு வல்வாய்
அரவச் சீறூர் காணப்
பகல்வந் தன்றால் பாய்பரி சிறந்தே.

தெளிவுரை

நிறை சூல் கொண்ட பெண்ஆமை, அடும்பங்கொடியினை அழியுமாறு அறுத்து, அதனை வளைந்த உப்பங்கழியின் வெண்மையான மணல்மேட்டிற்குப் பக்கத்திலே கொண்டு

சேர்க்கிறது; அதன் இலைகளின் மறைவில் மணலில் முட்டையிட்டுப் புதைக்கிறது. அம்முட்டை, யானைத்தந்தத்தால் செய்யப்பட்ட வட்டுப் போன்ற வடிவமுள்ளதாய்ப் புலால் நாற்றம் கொண்டுள்ளது. அம்முட்டை பொரிந்து அதிலிருந்து குஞ்சு வெளிவரும்வரை பிளந்த வாயினைக் கொண்ட ஆண்ஆமை அதனைப் பாதுகாக்கிறது. அத்தகைய கடற்கரைச்சோலையை உடையவன், நம் தலைவன்.

நம் தலைவனின் தேரில் பூட்டப்பட்ட குதிரைகள், அம்பு விரைந்து பாய்வதுபோலப் பாய்ந்து ஓடுபவை; அழகிய நடை பயின்றவை; தாற்றுமுள்ளால் அவற்றைக் குத்தினால் அவை மிக விரைவாய் ஓடும் என்றஞ்சி, வலவன் கடிவாளத்தை அசைக்கும் முறையாலேயே அவற்றை மெதுவாய்ச் செலுத்துகிறான். செழித்த, நீர் நிரம்பிய உப்பங்கழிகளைக் கடக்கும்போது, தேர்ச்சக்கரத்தின் கூரிய முனையால் அறுபட்டுக் குவிந்த நெய்தல் அரும்புகள் பாம்புகள் தலைதூக்குவனபோல மேலே நிமிர்ந்து சாயும். இவ்வாறு தலைவனின் தேர், நேற்றுவரை (யாருக்கும் தெரியாமல்) இரவு நேரத்தில் மட்டுமே வந்து கொண்டிருந்தது.

(இன்றோ - உன்னை மணம் பேச வருவதால்) அத்தேர், குதிரைகள் விரைந்தோட, முன்புபோல் மறைவு ஏதுமின்றி, ஆரவாரம் செய்யும் ஏவல் இளைஞரோடு, தமது கொடிய வாயால் பழிதூற்றி வந்த இவ்வூர்ப்பெண்டிர் காணுமாறு வந்துகொண்டிருக்கிறது.

இது கண்டு என் மனம் (மகிழ்ச்சியால்) சிலிர்க்கிறது. படிய வாரி விடப்பட்ட கரிய கூந்தலைக் கொண்ட தலைவியே! உன் நெஞ்சு இவ்வாறு சிலிர்க்கிறதோ?

கருத்து

களவொழுக்கத்தில் இரவில் மறைந்து வந்த தலைவன், இன்று முறைப்படி மணம் பேசப் பகலில் எல்லோரும் காணத் தேரில் வருகிறான்.

உள்ளுறை

சூல் நிறைந்த ஆமை காமம் நிறைந்த தலைவியாகவும், அஃது அடும்பங்கொடியை அறுத்து மணற்குவியலில் சேர்ந்தமை தலைவி

தன் வீட்டினரிடம் செலுத்திய அன்பினைத் தலைவனிடம் கொண்டு சேர்த்ததாகவும்,

யாமை தான் இட்ட முட்டையைப் பிறரறியாவாறு புதைத்து வைத்ததுபோலத் தலைவியும் தன் களவொழுக்கத்தைப் பிறர் அறியாமல் மறைத்து வைத்ததாகவும்,

முட்டை புலால் நாறியமை களவு வெளிப்பட்டுப் பழிச்சொல் விளைத்ததாகவும்,

முட்டை பொரிந்து பார்ப்பாகும்வரை ஆண் யாமை அதனைப் பாதுகாத்துக் கொண்டிருந்ததுபோல, தலைவன் தலைவியை மணக்க வரும்வரை இடைவிடாது தலைவிக்கு ஊறு ஏதும் நேராமல் தோழி பாதுகாத்து வந்ததாகவும் உள்ளுறைப் பொருள் கொள்க.

சொற்பொருள்

1. ஒடுங்கு - ஒடுங்கிய; ஈர் - கரிய; ஓதி - கூந்தல்; நினக்கும் - உனக்கும்; நடுங்கின்று அற்றோ - அவ்வாறு நெஞ்சம் (மகிழ்ச்சியால்) சிலிர்த்ததோ?
2. அளித்து - இரங்கத்தக்கது.
3. சிதைய வாங்கி - சிதைய இழுத்து; கொடுங்கழி - வளைந்த கழி.
4. குப்பை - மேடு; பக்கம் - அருகே.
5. நிறைச்சூல் - நிறைவாய கரு; யாமை - ஆமை; மறைத்து ஈன்று - மறைய ஈன்று.
6. கோட்டு வட்டு உரு - யானைக் கொம்பினால் செய்யப்பட்ட வட்டின் வடிவம்; புலவு நாறு - புலால் நாறும்.
7. பார்ப்பு - குஞ்சு; இடன் ஆகும் அளவை - வெளிப்படும் அளவு; பகுவாய் - பிளந்த வாய்.
8. கணவன் - ஆண் ஆமை; ஓம்பும் - பாதுகாத்திருக்கும்.
9. முள் உறின் - தாற்றினால் குத்தப்பெற்றால்; சிறத்தல் அஞ்சி - வேகம் அளவு கடத்தலை அஞ்சி.

9-10. மெல்ல வாவு உடை - மெல்லத் தாவிச் செல்லுதல் கொண்டமையின்.

10. வள்பின் காட்டி - கடிவாளத்தினால் உணர்த்தி.
11. ஏ - அம்பு; தொழில் - வேகம்; நவின்ற - பழகிய; எழில் நடை - அழகிய நடை; புரவி - குதிரை.

12. நீந்தலின் - கடக்குங்கால்; ஆழி - தேர் உருளை.
13. நுதிமுகம் - கூரிய முனை; குறைந்த - அறுக்கப்பெற்ற.
14. பாம்பு உயர் - பாம்பு தலைதூக்குவது போல; சாம்புவன - வாடி; நிவப்ப - மேலெழ.
15. இர வந்தன்று - இரவில் வந்துகொண்டிருந்தான்; திண் தேர் - வலிமையான தேர்; கரவாது - மறையாமல்.
16. இளையரொடு - ஏவலாளரொடு; வல்வாய் - வலிய வாயினாலே.
17. அரவம் - அலராகிய ஒலி; சீறூர் - சிறிய ஊர்(ப் பெண்டிர்).
18. வந்தன்று - வந்தனன்; பாய்பரி - பாயும் குதிரை; சிறந்து - வேகத்தால் சிறப்புற்று.

தோழி கூற்று

நற்றிணை 91 **பிசிராந்தையார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி தலைமகட்கு வரைவு மலிந்து உரைத்தது.

கூற்று விளக்கம்

வரைதலை முயலாது களவொழுக்கத்தை நீட்டித்து வந்த தலைவன் மகட்கொடை வேண்டி வந்தான். அவன் வரும் குறிப்பை முற்பட அறிந்த தோழி, தலைவிக்குத் தெரிவிப்பாளாய், 'நம் தலைவன் தேரேறி இன்று பகற்போதில் பலரும் கண்டு மகிழ வந்தான். அதனை நீ கண்டனையோ?' என்று உரைத்தது.

நீஉணர்ந் தனையே தோழி! வீஉகப்
புன்னை பூத்த இன்நிழல் உயர்கரைப்
பாடுஇமிழ் பனிக்கடல் துழைஇப் பெடையொடு
உடங்குஇரை தேடும் தடந்தாள் நாரை
ஐய சிறுகண் செங்கடைச் சிறுமீன்
மேக்குஉயர் சினையின் மீமிசைக் குடம்பைத்
தாய்ப்பயிர் பிள்ளை வாய்ப்படச் சொரியும்
கானல்அம் படப்பை ஆனா வண்மகிழ்ப்
பெருநல் ஈகைநம் சிறுகுடிப் பொலியப்

புள்ளுயிர்க் கொட்பின் வள்ளுயிர் மணித்தார்க்
கடுமாப் பூண்ட நெடுந்தேர்
நெடுநீர்ச் சேர்ப்பன் பகல்இவண் வரவே.

தெளிவுரை

“தலைவியே! ஒலி முழங்கும் குளிர்ச்சி பொருந்திய கடலின் கரையில் மலர்கள் உதிரும்படியாகப் புன்னை பூத்திருக்கும். தன் பெடையோடு ஒருசேரச் சென்று, கடலில் துழாவி, இரை தேடிய நீண்ட கால்களைக் கொண்ட நாரை, மெல்லிய சிவந்த கடைக்கண் பகுதியைக் கொண்ட சிறிய மீன்களைப் பிடிக்கும். அந்த இரையைக் கரையில் மரக்கிளைக்கு மேல் இருந்து, தன் தாயை அழைத்துக் கொண்டிருக்கும் தன் குஞ்சின் வாயில் படுமாறு தரும். இத்தகைய காட்சி தோன்றும் கடற்கரைச் சோலைகளையும், கொல்லைகளையும், வளமான நல்ல உணவினையும், சிறந்த நல்ல கொடையினையும் கொண்டது நம் ஊராகிய சிறுகுடி. இச்சிறுகுடி பொலிவு பெற நெடிய தேர் ஒன்று வருகிறது. பறவைகளின் தொடர்ச்சியான ஒலியைப் போன்று ஒலி செய்யும் மணிகள், அத்தேரில் பூட்டப்பட்டுள்ள குதிரைகளின் கழுத்தில் கட்டப்பட்டுள்ளன. மாலையணிந் துள்ள அக்குதிரைகள் மிக விரைந்து ஓடுகின்றன. அத்தேரின் மேல் நீண்ட கடற்றுறையையுடைய நம் தலைவன் பகற் பொழுதிலேயே பலரும் காணும்படியாய் வருகின்றான். இதனை நீ உணர்ந்தனையோ? (இங்ஙனம் அவன் வெளிப்படையாய் வருவது வரைவு கருதியே ஆகும்!)” எனத் தலைவியிடம் தோழி கூறுகிறாள்.

கருத்து

தலைவியே! தலைவன் மணம் பேசப் பகற்பொழுதிலே பலரும் காணும் படியாக வருகின்றான்.

விளக்கம்

“களவுக்காலத்தில் குதிரையின் மணியோசையை அடக்கி, இரவு நேரத்தில், யாரும் அறியாமல் வரும் தலைவன், இப்போது பகலில் எல்லோரும் அறியும்படி வருகின்றனன்; ஆதலின், அவன் வருவது மணம் பேசவே ஆகும்” என்கிறாள், தோழி.

உள்ளுறை

நாரையைத் தலைவனாகவும், கடலில் சென்று நாரை இரை தேடியதைத் தலைவன் வெளிநாடு சென்று திருமணத்திற்கான பொருளை ஈட்டியதாகவும், குஞ்சின் வாயில் நாரை உணவைச் சொரிதல் தலைவன் தான் ஈட்டிய பொருளைத் தலைவியின் பெற்றோர்க்கு மகட்பேசிக் கொடுத்ததாகவும் உள்ளுறை கொள்க.

சொற்பொருள்

1. நீ உணர்ந்தனை - நீ உணர்ந்தனையோ?; வீ - பூ; உக - உதிர.
3. பாடு இமிழ் - ஒலி முழங்குகின்ற; துழைஇ - துழாவி.
4. உடங்கு இரை தேடும் - ஒருசேரச் சென்று இரை தேடும்; தடந்தாள் - நீண்ட கால்.
5. ஐய - மெல்லிய; செங்கடை - சிவந்த கடைக்கண்.
6. மேக்கு - மேலே; மீமிசை - மிகவும் மேலே; குடம்பை - கூடு.
7. தாய்ப்பயிர் - தாயினை அழைக்கும்; பிள்ளை - குஞ்சு; வாய்ப்பட - வாயினுள்.
8. படப்பை - கொல்லை, வயல்; வண்மை - கொடை.
10. புள்ளுயிர் - புள்ளினம் ஒலித்தாற்போல; கொட்பு - சுழற்சி; வள்ளுயிர் - பேரொலி; மணித்தார் - மணி மாலை.
11. கடுமா - விரைந்தோடும் குதிரை.
12. நெடுநீர் - கடல்; இவண் - இங்கே; வரவு - வருவது.

தோழி கூற்று

நற்றிணை 78 **கீரங்கீரனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவு மலிந்தது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவொடு வருகின்றான் என்பதைத் தோழி மகிழ்வுடன் தலைவியிடம் கூறியது.

கோள்சுறா வழங்கும் வாள்கேழ் இருங்கழி
மணிஏர் நெய்தல் மாமலர் நிறைய,
பொன்நேர் நுண்தாது புன்னை தூஉம்
வீழ்தாள் தாழைப் பூக்கமழ் கானல்,
படர்வந்து நலியும் சுடர்செல் மாலை,
நோய்மலி பருவரல் நாம்இவண் உய்கம்;
கேட்டிசின் வாழி தோழி! தெண்கழி
வள்வாய் ஆழி உள்வாய் தோயினும்,
புள்ளு நிமிர்ந்தன்ன பொலம்படைக் கலிமா
வலவன் கோல்உற அறியா
உரவுநீர்ச் சேர்ப்பன் தேர்மணிக் குரலே!

தெளிவுரை

தலைவியே! நீ வாழ்க! உப்பங்கழிநீரில் வலிமை வாய்ந்த தேர்ச் சக்கரத்தின் உள்வாய்கள் அழுத்துகின்றன; ஆயினும், அத் தேரில் பூட்டப்பட்டுள்ள குதிரைகள் பறவைகள் பறப்பனபோல விரைந்து இழுத்து ஓடுகின்றன; அக்குதிரைகளுக்குப் பொன்னால் செய்யப்பட்ட அணிகலன்கள் அணிவிக்கப் பட்டுள்ளன. அவை தேர்ப்பாகன் தாற்றுக் கோலால் தூண்டப் பட்டறியாதவை; இத்தகைய குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் நம் நெய்தல்நிலத்தலைவன் வருகிறான். அது, கொல்லும் இயல்பு வாய்ந்த சுறாமீன்கள் உலவும் கரிய நிறமுள்ள பெரிய கழியாகும். அதில் நீலமணி போன்று மலர்ந்துள்ள நெய்தல் மலரின் பெரிய பூக்கள் நிரம்புமாறு அங்குள்ள புன்னை மரங்கள் பொன்போன்ற நுண்ணிய தாதினை உதிர்க்கின்றன. விழுது விட்டிருக்கும் அடிமரத்தைக் கொண்ட தாழைமலர் மணம் பரப்பிக் கொண்டிருக்கிறது. இவ்வாறு புன்னையும் தாழையும் நிறைந்த சோலையில், காதல் துன்பம் மேலும் மேலும் பெருக வருத்திய கதிரவன் மறையும் மாலைப்பொழுதில் இனி அத்துன்பத் தினின்றும் நீங்கி நாம் இன்புறலாம். ஆதலின், தலைவன் வரும் தேரின் மணியொலியைக் கேள்!

கருத்து

தலைவியே! மணம் பேசத் தலைவன் வரும் தேரின் மணியொலியைக் கேள்.

விளக்கம்

'தலைவியே! இதுகாறும் மாலைப்பொழுதில் கானற்சோலை யிடத்தே தலைவன் பிரிவால் ஏற்பட்ட துன்பம் மிகுந்து வருந்தி யிருந்தோமன்றோ? இனி நாம் வருந்தல் வேண்டா. தலைவன் வரைவொடு வருகின்றான் என்பதை அவனுடைய தேரிற்கட்டப் பட்ட மணி எழுப்பும் ஒலி இசைப்பதைக் கேள்' என, தலைவன் வரைய வருவதனைத் தோழி தலைவியிடம் அறிவிக்கிறாள்.

இறைச்சி

கழியில் நெய்தல் மலர் நிறையுமாறு புன்னை நுண்ணிய தாதினை உதிர்க்கும் என்னும் தொடர் மூலம், சேரியிடத்துத் தலைவிக்கு உறவாயினர் கைகளில் நிறைந்த பொற்குவியலைத் தலைவன் மணம் புரியக் கொடையாய் வழங்குவன் என்னும் இறைச்சிப்பொருள் பெறப்படுகிறது.

தாழம் பூவின் மணம் கடற்கரைச்சோலையெங்கும் வீசும் என்றது, தலைவிக்கு நிகழும் திருமணம் நாடெங்கும் மாட்சிமைப்பட்டு விளங்கும் என்பதைக் குறிக்கிறது.

சொற்பொருள்

1. கோள் சுறா - கொல்லுதலில் வல்ல சுறாமீன்; வாள் - ஒளி; கேழ் - நிறம்.
2. மணி ஏர் - நீலமணி போன்ற.
3. நேர் - ஒப்ப; தூஉம் - உதிரும்.
4. வீழ்தாள் - விழுதுவிட்டிருக்கும்; கானல் - கடற்கரைச்சோலை.
5. படர் - துன்பம்; நலியும் - வருத்தும்; சுடர் - ஞாயிறு; செல் - மறையும்.
6. நோய்மலி - காதலால் நோய் மிகும்; பருவரல் - துன்பம்.
7. கேட்டிசின் - கேள்; தெண்கழி - தெளிந்த நீரினைக் கொண்ட உப்பங்கழி.
8. வள்வாய் - வலிமை வாய்ந்த; ஆழி - தேர்ச்சக்கரம்; தோயினும் - முழுகினாலும்.
9. புள்ளு நிமிர்ந்தன்ன - பறவை பறப்பது போன்று; பொலம்படை - பொன்னால் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்த; கலிமா - குதிரை.

10. வலவன் - தேர்ப்பாகன்; கோல் – குதிரையைச் செலுத்தப் பயன்படும் தாற்றுக்கோல்; உற அறியா - தன் மேல் பட்டு அறியாத.

11. உரவுநீர் - கடல்.

தோழி கூற்று

நற்றிணை 278 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி தலைமகட்கு வரைவு மலிந்தது.

கூற்று விளக்கம்

திருமணத்திற்காகப் பொருளீட்டி வரச் சென்ற தலைவன் குறித்த காலத்தில் வந்திலன். அதனால் வருந்தியிருந்த தலைவியிடம் தோழி, "தலைவன் பலர் அறிய உன்னை மணக்க வந்துகொண்டிருக்கின்றான்; வருந்தாதிரு" எனக் கூறியது.

படுகாழ் நாறிய பராஅரைப் புன்னை,
அடுமரல் மொக்குளின், அரும்புவாய் அவிழ,
பொன்னின் அன்ன தாதுபடு பல்மலர்
சூடுநர் தொடுத்த மிச்சில் கோடுதொறும்
நெய்கனி பசுங்காய் தூங்கும் துறைவனை
இனி,அறிந் திசினே கொண்கன் ஆகுதல்;
கழிச்சேறு ஆடிய கணைக்கால் அத்திரி
குளம்பினும் சேயிறா ஒடுங்கின;
கோதையும் எல்லாம் ஊதைவெண் மணலே.

தெளிவுரை

தானாக வீழ்ந்த விதை முளைத்து வளர்ந்து முற்றி வயிரம் பாய்ந்த பருத்த அடியைக் கொண்ட புன்னை மரத்தின் அரும்புகள், புன்னையை அடுத்து வளர்ந்துள்ள மரலின் பூ மொட்டுப்போல இதழ்களை விரித்தன. அவ்வாறு மலர்ந்த, பொன்போன்ற மகரந்தம் கொண்ட மலர்களுள் சூடிக் கொள்பவர்கள் பறித்துக்கொண்டவை போக எஞ்சியுள்ளவை கிளைதோறும் நெய்ப்புமிக்க பசுங்காய்களாய் முதிர்ந்து

தொங்கும் துறைக்கு உரியவன், நம் தலைவன். அவன் கோவேறு கழுதை பூட்டப்பட்ட தேரில் கழியின் சேற்றிடத்தே வந்தமையால் சேறு படிந்துள்ள கோவேறு கழுதையின் குளம்புகளில் சிவந்த இறால்மீன்கள் சிக்கி அழிந்தன. மற்றும், அவன் அணிந்திருந்த மாலை, உடை முதலிய யாவற்றிலும் வாடைக் காற்றால் வீசப்பட்ட வெள்ளிய நுண் மணல் படிந்துள்ளது. அவன் உனக்குக் கணவன் ஆவதற்காகவே இவ்வாறு விரைந்து வருகின்றான்.

கருத்து

தலைவியே! தலைவன் பலரும் அறியத் தேரில் வருவதால், அவன் உன்னை வரைந்துகொள்ள வருகிறான் என்பதை அறிந்தேன்.

குறிப்பு

குதிரையின் குளம்புகளில் மீன் சிக்கி அழிவதும், தலைவன் மீதெல்லாம் மணல் படிந்திருப்பதும் அவன் மிகவும் விரைந்து வருகின்றனன் என்பதைக் காட்டுகின்றன.

உள்ளுறை

புன்னை மலர்களுள் கொய்தவை போக எஞ்சியவை நெய் கனிந்த காய்களாய்த் தொங்குமென்றது, 'தலைவி இதுகாறும் அயலவர் கூறிய அலரால் வருந்தியது நீங்க, இனிக் கனிந்த நெஞ்சினளாய் மகிழ்வாள்' என்பதாம்.

சொற்பொருள்

1. படுகாழ் - தானே வீழும் வித்து; நாறுதல் - முளைத்து வளர்தல்; பராஅரை - பருத்த அடிமரத்தைக் கொண்ட.
2. அடுமரல் - அடுத்து வளர்ந்துள்ள மரல்; மரல் - ஒருவகைக் கற்றாழை; மொக்கு - பூ மொட்டு.
4. தொடுத்த - சூடிய; மிச்சில் - மீதி; கோடு - கிளை.
5. நெய்கனி - நெய்ப்பு மிகுந்த; தூங்கும் - தொங்கும்.
6. கொண்கன் - துணைவன், கணவன்.
7. ஆடிய - அளைந்த; கணைக்கால் - திரண்ட கால்; அத்திரி - கழுதை.
8. சே இறா - சிவந்த இறா மீன்; ஒடுங்கின - அழிந்தன.
9. கோதை - மாலை; ஊதை - வாடைக்காற்று.

தோழி கூற்று

நற்றிணை 163 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : நெய்தல்

கூற்று

வரைவு மலிந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவொடு வந்தனன். அதனைக் கண்ட மகிழ்ச்சியினால் தோழி தலைவியிடம் சென்று கூறியது.

உயிர்த்தன ஆகுக, அளிய, நாளும்
அயிர்த்துகள் முகந்த ஆனா ஊதையொடு
எல்லியும் இரவும் என்னாது கல்லெனக்
கறங்குஇசை இனமணி கைபுணர்ந்து ஒலிப்ப,
நிலவுத்தவழ் மணற்கோடு ஏறிச் செலவர,
இன்றுஎன் நெஞ்சம் போலத் தொன்று,நனி
வருந்துமன் அளிய தாமே; பெருந்தாள்
நீல்நிறப் புன்னைத் தமி,ஒண் கைதை,
வானம் மூழ்கிய வயங்குஒளி நெடுஞ்சுடர்க்
கதிர்காய்ந்து எழுந்துஅகம் கனலி ஞாயிற்று
வைகுறு வனப்பின் தோன்றும்;
கைதைஅம் கானல் துறைவன் மாவே!

தெளிவுரை

பெரிய கடலருகே பெரிய அடிமரத்தையும் கரிய நிறத்தையும் கொண்டுள்ள புன்னை மரத்திற்குப் பக்கத்திலே ஒரு தாழை மரம்; அதன் ஒளி வீசும் மடல், நெடிய சுடரைக் கொண்ட தன் கதிர்களால் இருளை நீக்கி எழுந்து, வான வழியிலே சென்ற, ஒளியைக் கொண்டுள்ள கதிரவன், மாலைக்காலத்தில் மறைந்து ஒடுங்கிய வனப்பொடு தோன்றும். அத்தகைய தாழை சூழ்ந்த துறைக்குரிய தலைவனுடைய குதிரைகள் நுண்மணலை அள்ளி வீசும் ஊதைக்காற்றிலே இரவென்றும் பகலென்றும் பாராது, தம் கழுத்தில் கட்டப்பட்ட மணிநிரை ஒலிப்ப, ஓயாது வந்தும் சென்றும் என் நெஞ்சம் போல இன்றுவரை வருந்தியிருந்தன.

இரங்கத்தக்க இக்குதிரைகள் (இன்று துறைவன் வரைவொடு புகுந்ததால்) இனிக் களைப்பாறட்டும்.

கருத்து

தலைவன் வரைவொடு வந்தனனாதலின், இனி அவன் தேரின் குதிரைகள் அலைச்சல் ஒழிந்து இளைப்பாறியிருக்கும்.

விளக்கம்

“நம் தலைவனுடைய குதிரைகள் நாள்தோறும் வந்தும் சென்றும் அலைந்ததால் அவற்றுக்காக என் நெஞ்சம் வருந்தியிருந்தது. இப்போது அவ்வருத்தம் நீங்கியது. தலைவன் மணம் புணர்தல் காரணமாய் அக்குதிரைகள் இனி அலைச்சல் ஒழிந்து, துன்பம் நீங்கி இளைப்பாறியிருக்கட்டும்” என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

இறைச்சி

புன்னையும் தாழையும் ஒருசேர இருக்கும் துறைவன் என்றது, அவ்விரண்டன் மணமும் ஒன்றுசேர்ந்து கலந்து விளங்குதல் போல, தலைவன் இனித் தலைவியை மணந்து இல்லற வாழ்வில் மகிழ்வைப் பெறட்டும் என்பதாம்.

சொற்பொருள்

1. உயிர்த்தன - களைப்பு நீங்குவன; அளிய - இரங்கத்தக்கன.
2. அயிர்த்துகள் - நுண்ணிய மணல்; முகந்து - அள்ளி; ஊதை - வாடைக் காற்று.
3. எல் - பகல்; கல் என - கல் என்னும் ஒலியுடன்.
4. கறங்கும் - ஒலிக்கும்; இனமணி - மணிஇனங்கள்; கைபுணர்ந்து - ஒருசேரக் கோத்து.
5. மணற்கோடு - மணல்மேடு; செலவர - செல்லவும் வரவும்.
6. தொன்று - பண்டுதொட்டே; நனி - மிக.
7. பெருந்தாள் - பெரிய அடிமரம்.
8. நீல்நிற - கரிய நிறமுள்ள; தமி - தனித்திருக்கும்; கைதை - தாழை.
10. கனலி ஞாயிறு - நெருப்புப் பிழம்புபோல் தோன்றும் ஞாயிறு.
11. வைகுறு - தங்கும்; வனப்பு - அழகு.
12. கானல் - கடற்கரைச்சோலை; மா - குதிரை.

தோழி கூற்று

நற்றிணை 22 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு மலிந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'வரைந்துகொள்வேன்' எனக் கூறிப் பிரிந்த தலைவன் குறித்த காலத்தில் வாராது பொய்த்தமையினால் தலைவி வாட்டமுற்றிருந்தாள். சில நாள் சென்ற பின்பு, தலைவன் வரைவொடு வருதலைக் கண்ட தோழி தலைவியிடம் சென்று அவன் வரவைக் கூறியது.

கொடிச்சி காக்கும் அடுக்கல் பைந்தினை
முந்துவிளை பெருங்குரல் கொண்ட மந்தி
கல்லாக் கடுவனொடு நல்வரை ஏறி,
அங்கை நிறைய ஞெமிடிக் கொண்டுதன்
திரைஅணல் கொடுங்கவுள் நிறைய முக்கி,
வான்பெயல் நனைந்த புறத்த, நோன்பியர்
தைஊண் இருக்கையின் தோன்றும் நாடன்
வந்தனன்; வாழி தோழி! உலகம்
கயம்கண் அற்ற பைதுஅறு காலைப்
பீளொடு திரங்கிய நெல்லிற்கு
நள்என் யாமத்து மழைபொழிந் தாங்கே.

தெளிவுரை

தலைவியே! மலைப்பக்கத்தில் கொடிச்சியால் காக்கப்படும் புதிய தினைப்பயிரில் முற்பட விளைந்த பெருங்கதிர்களை மந்திக் குரங்கு முதலில் கொய்துகொண்டது; பாயும் தொழிலன்றிப் பிறவற்றைக் கல்லாத தன் ஆண்குரங்கோடு மலைமீது ஏறியது. அங்குத் தன் உள்ளங்கை நிறையத் தினைக்கதிரைக் கசக்கித் தூய்மை செய்தது; அதனைத் திரைத்த அணலையுடைய வளைந்த கவுள் நிறைய உண்டது; அப்போது மழை பெய்ததால் அக்குரங்கின் உடல் முழுதும் நனைந்தது. இக்காட்சி, நோன்பு

இருந்தவர் தைத்திங்கள் முதல் நாளில் நீராடி, நீர் சொட்ட, உணவினை உண்ண அமர்ந்திருத்தல் போலத் தோன்றிற்று. இத்தகைய காட்சிக்குரிய மலையைக் கொண்டவன், நம் தலைவன்.

உலகத்துக் குளங்களெல்லாம் நீர் வற்றி ஈரமற்றிருக்கும் வேளையில், சூலொடு வாடிய நெற்பயிருக்கு நடு இரவில் மழை பெய்தது போல், நம் துன்பம் தீரத் தலைவன் இப்போது நம்மிடம் வரைவுடன் வந்துள்ளனன். அவன் வாழ்க! (நீ அவனைத் திருமணம் செய்துகொண்டு இனிது வாழ்க!)

கருத்து

தலைவன் மணந்துகொள்ள வருகிறானாதலின் தலைவி இனி இன்ப வாழ்வில் திளைப்பாள்.

விளக்கம்

நனைந்த மந்தி துறவறத்தார் போலத் தோன்றும் என்றது, தலைவி மணம் செய்துகொண்டு இல்லறக்கடன் ஆற்றுங்கால் துறவறத்தார் முதலியோரையும் பேண வேண்டும் என்பதைக் குறித்தது.

உள்ளுறை

மந்தி கடுவனொடு தினையை உண்டதுபோல நீயும் மணம் செய்துகொண்டு, தலைவன் இல்லம் சென்று, மகிழ்வுடன் இருப்பாய் என்பது உள்ளுறை.

சொற்பொருள்

1. கொடிச்சி - குறிஞ்சிநிலப்பெண்; அடுக்கல் - மலை.
2. குரல் - கதிர்; மந்தி - பெண்குரங்கு.
3. வரை - மலை.
4. அங்கை - உள்ளங்கை; ஞெமிடி - நிமிண்டி, கசக்கி.
5. அணல் - தாடி; கொடுங்கவுள் - வளைந்த மோவாய்; முக்கி - அடக்கிக்கொண்டு.
6. நோன்பியர் - நோன்பு (விரதம்) இருப்போர்.
7. தைஊண் இருக்கை - தைத்திங்கள் தொடங்கிய அன்று நீராடி, அன்று ஆக்கப்பட்ட மாட்சிமைப்பட்ட உணவினை உண்ண அமர்ந்திருத்தல்.

9. கயம் - குளம், நீர்நிலை; கண் அற்ற - நீர் வற்றிய; பைது - ஈரம்.
10. பீள் - கருப்பம்; திரங்கிய - வாடிய.
11. பொழிந்தாங்கு - பொழிந்ததுபோல.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 189 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் வரைவான் வந்துழிக் கண்டு உவகையோடு வந்த தோழி, 'நின் கண் மலர்ச்சிக்குக் காரணம் என்ன?' என்று வினாவிய தலைமகளுக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

திருமண ஏற்பாட்டிற்காகப் பொருள் தேடப் பிரிந்திருந்த தலைவன் மணம் பேச வந்துகொண்டிருந்தான். அது கண்ட தோழி, மகிழ்ச்சியோடு தலைவியிடம் வந்தாள். தலைவி, தோழியின் மகிழ்ச்சிக்கு என்ன காரணம் என்று கேட்டபோது, தலைவன் திருமண ஏற்பாட்டோடு வருவதைத் தோழி கூறியது.

புன்னை நுண்தாது உறைத்தரு நெய்தல்
பொன்படு மணியின் பொற்பத் தோன்றும்
மெல்லம் புலம்பன் வந்தென,
நல்ல ஆயின தோழி!என் கண்ணே.

தெளிவுரை

தலைவியே! புன்னை மலரின் நுண்மையான பூந்துகள்கள் வீழப்பெற்ற நெய்தல் மலர்கள், பொன்னொடு பொருந்திய நீலமணிகள் போல அழகுபெறத் தோன்றுகின்ற கடற்கரைக்குரியவன், தலைவன். அவன், வரைவின்பொருட்டு (நம் இல்லத்திற்கு) வந்தனன். அதனைக் கண்ட என் கண்கள் நல்லழகு பெற்றன.

கருத்து

தலைவியே! தலைவன் வரைவின்பொருட்டு நம் இல்லத்திற்கு வந்துகொண்டிருப்பது கண்டு என் கண்கள் மகிழ்ந்தன. நீயும் துயர் நீங்கிக் களிப்படைக!

குறிப்பு

புன்னைத் தாது உதிர்ந்ததால், நெய்தல் மலர் பொன்னும் நீல மணியும் பொருந்தியது போலத் தோன்றும் என்னும் தொடர்மூலம், திருமணம் செய்துகொண்ட தலைவனின் தொடர்பால் தலைவியின் குடி சிறக்கும் என்னும் குறிப்புப் பொருள் கிட்டுகிறது.

சொற்பொருள்

1. தாது - பூந்துகள்; உறைத்தரு - வீழப்பெற்ற; நெய்தல் - நெய்தல் மலர்.
2. பொன்படு - பொன் பொருந்திய; மணி - நீலமணி; பொற்ப - போன்று.
3. மெல்லம் புலம்பன் - நெய்தல்நிலத்தலைவன்; வந்தென - வரைவொடு வந்தனனாக.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 202 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் வரைதல் வேண்டித் தானே வருகின்றமை கண்ட தோழி, உவந்த உள்ளத்தளாய்த் தலைமகட்குக் காட்டிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைத் திருமணம் செய்துகொள்ள வருகின்றான். அதனைக் கண்ட தோழி மகிழ்ச்சி பொங்கும் உள்ளத்தோடு தலைவியிடம் கூறியது.

அன்னாய் வாழி!வேண்டு அன்னை! நம்ஊர்ப்
பார்ப்பனக் குறுமகப் போலத் தாமும்
குடுமித் தலைய மன்ற
நெடுமலை நாடன் ஊர்ந்த மாவே.

தெளிவுரை

தலைவியே! வாழ்க! நெடுமலை நாடனாகிய நம் தலைவன் உன்னை மணம் பேச ஏறி வரும் குதிரை, நம் ஊரிலேயுள்ள

பார்ப்பனச்சிறுவர்கள்போல உச்சிக்குடுமி கொண்டதாய் இருக்கிறது! அதோ அதனைப் பார்!

கருத்து

தலைவியே! தலைவன் உன்னை மணம் பேசக் குதிரைமீது வருவதைப் பார்.

குறிப்பு

குதிரையின் தலையிலுள்ள குடுமி, பார்ப்பனச்சிறுவர்களின் உச்சிக்குடுமி போலத் தோற்றமளிக்கிறது.

சொற்பொருள்

2. குறுமகன் - இளஞ்சிறார்.
4. ஊர்ந்த - ஏறிவரும்; மா - குதிரை.

தோழி கூற்று

நற்றிணை 235 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : நெய்தல்

கூற்று

வரைவுநீட ஆற்றாளாங்காலத்துத் தோழி வரைவு மலிந்தது.

கூற்று விளக்கம்

தலைவன் மணம் புரிந்துகொள்ளாது காலம் தாழ்த்தியிருந்தான். அதனால் தலைவி வருந்தியிருக்கத் தோழி, 'அவன் வரைவொடு வந்து கொண்டிருக்கிறான்' எனக் கூறுவது.

உரவுத்திரை பொருத பிணர்படு தடவுமுதல்,
அரவுவாள் வாய முள்இலைத் தாழை
பொன்நேர் தாதின் புன்னையொடு கமழும்
பல்பூங் கானல் பகற்குறி வந்து,நம்
மெய்கவின் சிதையப் பெயர்ந்தனன் ஆயினும்,
குன்றின் தோன்றும் குவவு மணல்ஏறிக்

கண்டனம் வருகம் சென்மோ தோழி!–
தண்தார் அகலம் வண்டுஇமிர்பு ஊத,
படுமணிக் கலிமா கடைஇ,
நெடுநீர்ச் சேர்ப்பன் வரூஉ மாறே.

தெளிவுரை

தோழி! சொரசொரப்பு வாய்ந்த வளைந்த அடியினையும், இரம்பத்தின் வாய்போல முள்கள் பொருந்திய மடல்களையும் கொண்ட தாழையின் அடிப்பகுதியைக் கடலலைகள் வந்து மோதுகின்றன. அத்தாழைமலரின் பொன்போன்று நிறமமைந்த பூந்தாதின் மணம் புன்னையின் மலரோடு சேர்ந்து கமழ்கின்ற தன்மையுடன் பல்வேறு பூக்களைக்கொண்டு விளங்குகிறது, கானற்சோலை. அச்சோலையில் பகற்குறி வந்து, நம் நலன் நுகர்ந்து, நம் மேனியழகு கெடும்படி செய்த தலைவன் பிரிந்து போயினான். ஆயினும், தன் மார்பில் அணிந்துள்ள குளிர்ச்சி பொருந்திய மலர்மாலையில் வண்டுகள் மொய்த்துத் தேன் அருந்தியபடி இருக்க, ஒலிக்கும் மணியணியப் பெற்ற செருக்கிய குதிரைகளைச் செலுத்தியபடி, நீண்ட நீர்ப்பரப்பினைக் கொண்ட நம் நெய்தல் நிலத் தலைவன் இப்போது வரைவொடு வந்துகொண்டிருக்கிறான்.

அவன் வருவதைக் குன்றுபோல் தோன்றுகின்ற குவிந்த மணல்மேட்டில் ஏறி நாமும் கண்டுவரச் செல்வோமா?

கருத்து

'வரைவொடு வந்துகொண்டிருக்கும் தலைவனைக் காணச் செல்வோமா?' என்று தலைவியிடம் தோழி கேட்கிறாள்.

இறைச்சி

தாழையும் புன்னையும் மணம் கமழும் என்னும் தொடர் மூலம் தலைவன் வரைவொடு புகுதலாலே மணம் புரிந்து கொண்டு தலைவனும் தலைவியும் அச்சிற்றூர் மகிழ வாழ்வர் என்னும் இறைச்சிப் பொருள் கிட்டுகின்றது.

குறிப்பு

வரைவிடைப் பொருள் தேடப் பிரிந்த தலைவன் வரைவொடு வருகிறான் என்பது தோன்ற குதிரைகள் மணியொலிக்க வருகின்றான் என்றாள்.

உள்ளுறை

பொன்னை ஒத்த தாதினைக் கொண்ட புன்னையொடு தாழை விரிந்து கமழும் என்னும் தொடர்மூலம், வரைபொருளொடு வரும் தலைவனைத் தமர் வரவெதிர்ந்து மகட்கொடை நேர்ந்து மகிழ்வர் என்னும் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. உரவுத் திரை - வலிமையான கடல் அலை; பிணர்படு - சொரசொரப்பு வாய்ந்த; தடவு - வளைந்த; முதல் - அடிமரம்.
2. அரவுவாள் - வாள் அரம்; வாய - வாய் போன்ற.
3. நேர் - ஒத்த.
5. கவின் - அழகு; பெயர்ந்தனன் - பிரிந்து சென்றனன்.
6. குன்றின் - குன்றைப் போல; குவவு மணல் - குவிந்த மணல்மேடு.
8. அகலம் - மார்பு; இமிர்பு - மொய்த்து; ஊத - தேன் குடிக்க.
9. கலிமா - செருக்குடைய குதிரை; கடைஇ - செலுத்தி.
10. வருஉம் - வந்துகொண்டிருப்பதை.

தோழி கூற்று

அகநானூறு 178 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி வரைவு மலிந்து சொல்லியது. (வரைவு மலிதல் - மணம் நிகழ்வது பற்றி மகிழ்வுறுதல்.)

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை மணந்துகொள்வதற்குத் தம் உற்றார் உறவினரோடு வருதலை அறிந்த தோழி அதனைத் தலைவியிடம் மகிழ்வொடு கூறியது.

வயிரத் தன்ன வைஎந்து மருப்பின்,
வெதிர்வேர் அன்ன பரூஉமயிர்ப் பன்றி
பறைக்கண் அன்ன நிறைச்சுனை பருகி,
நீலத் தன்ன அகல்இலைச் சேம்பின்
பிண்டம் அன்ன கொழுங்கிழங்கு மாந்தி,
பிடிமடிந் தன்ன கல்மிசை ஊழ்இழிபு,
யாறுசேர்ந் தன்ன ஊறுநீர்ப் படாஅர்ப்
பைம்புதல் நளிசினைக் குருகுஇருந் தன்ன,
வண்பிணி அவிழ்ந்த வெண்கூ தாளத்து
அலங்குகுலை அலரி தீண்டி, தாதுஉக,
பொன்உரை கட்டளை கடுப்பக் காண்வர,
கிளைஅமல் சிறுதினை விளைகுரல் மேய்ந்து,
கண்இனிது படுக்கும் நல்மலை நாடனொடு,
உணர்ந்தனை புணர்ந்த நீயும், நின்தோள்
பணைக்கவின் அழியாது துணைப்புணர்ந்து, என்றும்
தவல்இல் உலகத்து உறைஇயரோ – தோழி!–
எல்லையும் இரவும் என்னாது, கல்லெனக்
கொண்டல் வான்மழை பொழிந்த வைகறைத்
தண்பனி அற்சிரம் தமியோர்க்கு அரிது,எனக்
கனவினும் பிரிவுஅறி யலனே அதன்தலை
முன்தான் கண்ட ஞான்றினும்
பின்பெரிது அளிக்கும்தன் பண்பி னானே.

தெளிவுரை

வயிரம் போன்ற வலிமையும், மேல் நோக்கிய கொம்பும், மூங்கில் வேரைப் போன்ற பருத்த மயிரினையும் கொண்ட பன்றி ஒன்று, முரசின் கண் போன்ற அகன்ற சுனையில் நிறைந்த நீரைக் குடித்தது; நீலமணி போன்ற அகன்ற இலையினைக் கொண்ட சேம்புச்செடியில் பிண்டித்து வைத்தது போன்றிருந்த கொழுமை யான கிழங்கை வயிறார உண்டது; பெண்யானை படுத்துக் கிடந்தாற் போன்ற கரிய பாறையின்மீது வருத்தமின்றி இறங்கி வந்தது; அப்பாறையை அடுத்து ஆறுபோல் நீர் ஊறும் இடத்தில் வெண்மையான நாரைகள் புதர்மீது இருந்தாற் போன்ற தோற்றங்கொண்ட கூதளஞ்செடிகள் வளர்ந்திருந்தன.

அவற்றிலுள்ள பூங்கொத்துகளை உரசியவாறு அப்பன்றி சென்றது. அம்மலரிலிருந்த பூந்தாதுகள் பன்றிமேல் வீழ்ந்ததால் அப்பன்றி பொன்னை உரைத்துப் பார்க்கும் கட்டளைக்கல் போலக் காட்சிக்கு இனியதாய் இருந்தது. பிறகு, அது தினைப் புனத்தில் நுழைந்து, நன்கு கிளைத்து வளர்ந்த, சிறிய தினையின் முற்றிய கதிரினை மேய்ந்து உறங்கியது.

இத்தகைய காட்சிகள் தோன்றும் நல்ல மலைநாட்டினை யுடைய தலைவனுடன் நட்புக்கொண்டுள்ளாய். ஊடலும் கூடலும் பெற்று மூங்கில் போன்ற உன் திரண்ட தோள்கள் அழகு நீங்காமல் மறுமை உலகத்திலும் நீங்கள் சேர்ந்து வாழ்வீர்களாக!

இரவு பகல் என்று இல்லாது, 'கல்' என்னும் ஒலியுடன் மேகம் பெருமழை பொழிந்த விடியற்காலத்தில், குளிர்ந்த பனியைக் கொண்ட முன்பனிக்காலம் தனித்திருப்போர்க்குத் தாங்குவதற்கு அரிது. இதனை உணர்ந்து அவன் உன்னைக் கனவிலும் பிரிய மாட்டான்.

மேலும், நற்பண்பு கொண்ட அவன், முதன்முதல் கண்ட நாளினும் மிகுதியாய்க் காதல் கொண்டு உன்னை மகிழ்விப்பான்.

கருத்து

'தலைவியே! தலைவன் உன்னை மணந்த பின்பு, முதன்முதல் அவன் உன்னைக் கண்ட அன்று, உன்மீது கொண்ட அன்பினும் மிகுதியான அன்போடு உன்னை மகிழ்விப்பான்.'

உள்ளுறை

பன்றி சுனை நீர் பருகி, கிழங்கினை உண்டு, தினைவிளை கதிரை மேய்ந்து, இனிது துயிலும் என்னும் தொடர், தலைவன், தான் கருதிய பொருள்களையெல்லாம் பெற்றுத் தலைவியை மணந்து, இன்பந்துய்த்து, இனிது வாழ்வான் என்னும் உள்ளுறைப் பொருளைக் கொண்டுள்ளது.

சொற்பொருள்

1. வை ஏந்து - கூரிய மேல்நோக்கிய; மருப்பு - கொம்பு.
2. வெதிர் - மூங்கில்; பரூஉ மயிர் - பருத்த மயிர்.

3. பறைக்கண் - முரசின்கண்; நிறைச்சுனை - நிறைந்த சுனைநீரை.
4. நீலத்து அன்ன - நீலமணியொத்த; அகல் இலை - அகன்ற இலை யினைக் கொண்ட; சேம்பு - ஒரு வகைச் செடி.
5. பிண்டம் அன்ன - பிண்டித்து வைத்தாற்போன்ற; கொழுங்கிழங்கு - வளவிய கிழங்கு; மாந்தி - உண்டு.
6. பிடி மடிந்தன்ன - பெண்யானை கிடந்தாலொத்த; கல்மிசை - கல்மீது; ஊழ் இழிபு - வருத்தமின்றி இறங்கி வந்து.
7. யாறு சேர்ந்தன்ன - ஆற்றினை அடுத்திருப்பது போன்ற; ஊறுநீர் - நீர் ஊறுமிடத்திலுள்ள; படார் - சிறு தூறு.
8. பைம்புதல் - பசிய புதலில்; நளிசினை - செறிந்த கிளைகளில்; குருகு இருந்தன்ன - நாரைகள் இருந்தது போன்ற.
9. வெண் கூதாளம் - வெண்மையான கூதளஞ்செடி.
10. அலங்கு குலை - அசையும் கொத்திலுள்ள; அலரி - பூ; தீண்டி - பொருந்தி; தாது உக - பூம்பொடி மேலே உதிர்தலால்.
11. கட்டளை கடுப்ப - பொன் உரைக்கும் கல்லொப்ப; காண்வர - தோன்ற.
12. கிளை அமல் - கிளைத்தல் மிக்க; மேய்ந்து - தின்று.
13. கண் இனிது படுக்கும் - இனிதே படுத்துக் கண் உறங்கும்.
14. உணர்ந்தனை - நன்குணர்ந்து; புணர்ந்த - சேர்ந்த.
15. பணைக்கவின் - மூங்கில் போலும் அழகு.
16. தவல் இல் - குற்றமற்ற.
17. எல்லை - பகல்; கல்லென - கல் என்னும் ஒலியுடன்.
18. கொண்டல் - மேகம்; வான் மழை - பெரிய மழை; வைகறை - விடியற்காலம்.
19. தண்பனி அற்சிரம் - குளிர்ந்த பனியைக் கொண்ட முன்பனிக்காலம்.
20. கனவிலும் பிரிவு அறியலன் - கனவிலும் பிரிதலை அறியான்.
21-22. முதன்முதல் தான் கண்ட நாளினும் பின் எந்த நாளினும் மிக்க அருள் செய்வான்.

தோழி கூற்று

குறுந்தொகை 52 **பனம்பாரனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு மலிவு கேட்ட தலைமகட்குத் தோழி, முன்னாளில் அறத்தொடு நின்றமை காரணத்தால் இது விளைந்தது என்பதுபடக் கூறியது. (விளைந்தது - நடந்தது.)

கூற்று விளக்கம்

தலைவன், தலைவியை வரைந்துகொள்ளுவதற்கான முயற்சிகள் முற்றுப் பெற்றதை அறிந்த தோழி, தான் அறத்தொடு நின்றதால்தான் இது கை கூடலாயிற்று என்று தலைவியிடம் சொல்லியது.

ஆர்களிறு மிதித்த நீர்திகழ் சிலம்பில்
சூர்நசைந்து அனையையாய் நடுங்கல் கண்டே,
நரந்தம் நாறும் குவைஇரும் கூந்தல்,
நிரந்துஇலங்கு வெண்பல் மடந்தை!
பரிந்தனென் அல்லனோ, இறைஇறை யானே?

தெளிவுரை

நரந்தம் பூ மணக்கும் அடர்த்தியான கருங்கூந்தலையும், வரிசையாய் விளங்கும் வெண்மையான பற்களையும் கொண்ட மடந்தையே!

வலிமையான யானை மிதித்துச் சென்றதால் உண்டாகிய பள்ளங்களிலே நீர் நிரம்பிக் காணப்படும் மலைப்பக்கத்தே, தெய்வத்தால் ஆவேசம் வந்துற்றவளைப் போல் (தெய்வத்தால் விரும்பப்பெற்றவளைப் போல்) நம் கற்புக்கு ஏதம் வருமோ என்று நீ அஞ்சி நடுங்குதலைக் கண்டேன். அதனைப் பொறாத நான் சிறிது சிறிதாய் உன் களவுறவைத் தாயிடம் வெளிப்படுத்தினே னல்லவோ? (அதனால்தான் இத்திருமணம் கூடலாயிற்று.)

கருத்து

தான் அறத்தொடு நின்றதாலேயே இத்திருமணம் விளைந்தது எனத் தோழி குறிப்பிட்டாள்.

விளக்கம்

தலைவியின் களவுப்புணர்ச்சியால் ஏற்பட்ட உடல் மாற்றங் களைக் கண்ட தாய் இற்செறிக்கவும், கட்டுக் காணவும், வெறி யாடவும் ஏற்பாடுகளைச் செய்தது கண்டு தலைவி, தன் கற்புக்கு என்ன நேருமோ என்று நடுங்கினாள். அப்போது தோழி, செவிலிக்கு அறத்தொடு நின்று, தலைவியின் காதலை வெளிப் படுத்தினாள். அதன் விளைவாகவே இத்திருமணம் நடைபெற வுள்ளது எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. ஆர் - வலிமை பொருந்திய; சிலம்பு - மலை.
2. சூர் - தெய்வம்; நசைந்து அனையையாய் - விரும்பப்பெற்றவளைப் போல் (ஆவேசமுற்றவள் போல).
3. நரந்தம் - நரந்தம் பூ; குவை - அடர்ந்த; இரும் - கரிய.
4. நிரந்து - வரிசையாய்; இலங்கு - விளங்குகின்ற; மடந்தை - இளம்பெண் (தலைவி).
5. பரிந்தனென் - பரிந்து பேசினேன்; அல்லனோ - அல்லவா?; இறை இறை - சிறிது சிறிதாய்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 102 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

அறத்தொடு நின்ற பின்னர் வரைதற்பொருட்டுப் பிரிந்த தலைமகன் வரைவோடு புகுந்தவழி அதனைத் தோழி செவிலிக்குக் காட்டிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் - தலைவியர் களவொழுக்கத்தைத் தோழி அறத்தொடு நின்று செவிலியிடம் வெளிப்படுத்தினாள். தலைவனும் திருமணத்திற்கு வேண்டிய பொருள் தேடி வரப் பிரிந்தான்; பொருளீட்டி மீண்டவன் மணம்

செய்யும் ஏற்பாட்டுடன் தேரில் வருகின்றான். அதனைத் தோழி செவிலித் தாயிடம் கூறியது.

அன்னை வாழி!வேண்டு அன்னை! நம்ஊர்
நீல்நிறப் பெருங்கடல் புள்ளின் ஆனாது,
துன்புறு துயரம் நீங்க,
இன்புற இசைக்கும்அவர் தேர்மணிக் குரலே.

தெளிவுரை

அன்னையே! நீ வாழ்க! உன் மகளை இடைவிடாது வருத்தி வந்த துன்பம் நீங்கியொழியுமாறு, தலைவனின் தேர்மணியின் ஒலி நம் ஊர் நீலப்பெருங்கடலில் வாழும் புள்ளினங்கள் போல இடையறாது இனிமையாய் ஒலிப்பதனைக் கேள்!

கருத்து

'இதுவரை பறவைகளின் இடைவிடாத ஒலியைப்போல ஊரார் பழி தூற்றி வந்த வருத்தம் நீங்கும்வண்ணம், மணம் பேசத் தலைவன் தேரில் வந்துகொண்டிருக்கிறான்' எனத் தோழி செவிலியிடம் கூறினாள்.

சொற்பொருள்

2. நீல் நிறம் - நீல நிறம்; புள் - பறவை; ஆனாது - இடையறாது.
4. இசைக்கும் - ஒலிக்கும்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 101 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

அறத்தொடு நின்ற பின்னர் வரைதற்பொருட்டுப் பிரிந்த தலைமகன் வரைவோடு புகுந்தவழி அதனைத் தோழி செவிலிக்குக் காட்டிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் - தலைவியர் களவொழுக்கத்தைத் தோழி அறத்தொடு நின்று செவிலியிடம் வெளிப்படுத்தினாள். தலைவனும் திருமணத்திற்கு வேண்டிய பொருள் தேடி வரப் பிரிந்தான்; பொருளீட்டி மீண்டவன் மணம்

செய்யும் ஏற்பாட்டுடன் தேரில் வருகின்றான். அவன் வரும் தேரை ‘இங்கே பார்’ என்று சுட்டிக் காட்டித் தோழி செவிலித்தாயிடம் கூறியது.

அன்னை, வாழி!வேண்டு அன்னை! உதுக்காண்
ஏர்கொடிப் பாசடும்பு பரியஊர்பு இழிபு
நெய்தல் மயக்கி வந்தன்று, நின்மகள்
பூப்போல் உண்கண் மரீஇய
நோய்க்குமருந்து ஆகிய கொண்கன் தேரே.

தெளிவுரை

அன்னையே! வாழ்க! நான் கூறுவதைக் கேள்! அதோ பார்! எழுச்சி கொண்ட பசிய அடம்பங்கொடிகள் அறுந்துவிடும் படியாய் ஊர்ந்தும், பின்னர்ப் பள்ளத்திலே இறங்கி நெய்தற் கொடிகளைச் சிதைத்தும் வருகின்றது, ஒரு தேர்! உன் மகளின் பூப்போலும் மையுண்ட கண்களில் பொருந்தியுள்ள ஏக்கம் என்னும் நோய் தீர்வதற்கு மருந்து தலைவனுடைய அத்தேரே ஆகும்!

கருத்து

‘தலைவன் நினைவே தலைவிக்கு நோயாயிற்று; அவன் மணம் பேச வந்துவிட்டான்; இனி அவள் நோயும் நீங்கிவிடும்’ என்று தோழி, செவிலியிடம் கூறுகிறாள்.

உள்ளுறை

தலைவனுடைய தேர்க்காலில் பட்டு அடும்பும் நெய்தலும் சிதைந்தன என்னும் தொடர், தலைவன் திருமண ஏற்பாட்டுடன் வருவதால் தலைவியின் உடல் வேறுபாடு கண்டு ஊரார் கூறும் அம்பலும் அலரும் இனி மறையும் என்பதை உணர்த்துகிறது.

சொற்பொருள்

1. உதுக்காண் - அதோ பார்.
2. ஏர் - எழுச்சி; பாசடும்பு - பசு அடும்பு - பசிய அடம்பங்கொடி; பரிய - அற்றுப்போகும்படி; இழிபு - இறங்கி.
3. நெய்தல் - நெய்தல் கொடி; மயக்கி - சிதைத்து; மரீஇய - பொருந்திய.
5. கொண்கன் - நெய்தல் நிலத் தலைவன்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 145 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவு மறுத்த தமர் உடம்படுமாற்றால் சான்றோரைத் தலைமகன் விடுத்தது அறிந்த தோழி, தலைமகள் கேட்குமாற்றால் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியின் பெற்றோர் தலைவியைத் தலைவனுக்குத் திருமணம் செய்ய மறுத்தனர். அவர்களை இணங்கவைக்கத் தலைவன் சான்றோரைத் தூது விடுத்தான். அதனையறிந்த தோழி தலைவியின் காதில் விழுமாறு கூறியது.

எக்கர் ஞாழல் சிறியிலைப் பெருஞ்சினை
ஓதம் வாங்கும் துறைவன்
மாயோள் பசலை நீக்கினன், இனியே.

தெளிவுரை

மணல்மேட்டிலுள்ள சிறிய இலைகளைக் கொண்ட ஞாழல் மரத்தின் பெரிய கிளையை (கடல் அலை மேலெழுந்து வந்து) வளைக்கும் துறையையுடையவன், நம் தலைவன். அவன் மாமைநிறம் பொருந்திய என் தோழியின் மேனியில் படர்ந்திருந்த பசலை நோயை நீக்கிவிட்டான். (இது மகிழ்ச்சிக்குரியது.)

கருத்து

சான்றோர் தூதினால் திருமணம் உறுதி என்பதால் தலைவியின் பசலை நீங்கியது.

விளக்கம்

தலைவன் தானே வந்து மகட்கொடை வேண்டிய பொழுது தலைவிக்கு உறவாயினார் மறுத்துவிட்டனர். அதனால் தலைவியின் மேனி வேறுபட்டது. இப்பொழுது தலைவன் சான்றோரை அனுப்பியுள்ளதால் உறவினர் ஒப்புதல் தருவர் என்பது உறுதியாதலால் அவள் பசலை நீங்குவதும் உறுதியாகிவிட்டது.

உள்ளுறை

ஞாழல் கிளையைக் கடல்வெள்ளம் வளைக்கும் என்னும் தொடர்வாயிலாய்த் தலைவன், தன் வழிக்கு வாராத தலைவியின் சுற்றத்தாரை, சான்றோரை அனுப்பித் தன்வழிப்படுத்தும் உறுதியினன் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. எக்கர் - மணல்மேடு; ஞாழல் - ஒரு வகை மரம்; சிறியிலை - சிறிய இலை; சினை - கிளை.
2. ஓதம் - அலை; வாங்கும் - வளைக்கும்.
3. மாயோள் - மாமை நிறம் பொருந்தியவள்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 105 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

அறத்தொடு நின்ற பின், வேண்டுவன தருதற்குப் பிரிந்த தலைமகன் வரைவொடு வந்துழி, தலைமகள் நுதற்கண் முன்புள்ள பசப்பு நீங்கும் வண்ணம் தோன்றிய கதிர்ப்புக் காட்டி, செவிலிக்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தோழி, தன் தாய்க்கு முறைப்படி அறத்தொடு நின்று, தலைவன் - தலைவி உறவை வெளிப்படுத்திய பின், தலைவன் திருமணத்திற்கு வேண்டிய செல்வத்தை ஈட்டிக்கொண்டு திரும்பினான். தலைவன் வரைவுக்குரிய ஏற்பாட்டுடன் வந்தமையால் தலைவியின் பசப்பு நோய் நீங்கியது; உடல் பூரித்தது; அதனைத் தன் தாய்க்குக் காட்டித் தோழி கூறியது.

அன்னை, வாழி!வேண்டு அன்னை! முழங்குகடல்
திரைதரு முத்தம் வெண்மணல் இமைக்கும்
தண்ணம் துறைவன் வந்தெனப்
பொன்னினும் சிவந்தன்று; கண்டிசின் நுதலே.

தெளிவுரை

அன்னையே வாழ்க! இதனை விரும்பிக் கேள்! முழக்கமிடும் கடலலைகள் கரைமீதெறிந்த முத்துகள், வெண்மணலிடையே கிடந்து மின்னுகின்றன. குளிர்ச்சி பொருந்திய அழகிய துறையினுக்குரிய அத்தலைவன் வந்துவிட்டான் என்றதும் என் தோழியின் நெற்றி பொன்னினும் சிறந்ததோர் ஒளி பெற்றுள்ளது. அதனைப் பார்!

கருத்து

தலைவன் வரைவொடு வந்ததால் தலைவியின் பசலை நோய் நீங்கி, நுதல், ஒளி பெற்றுள்ளதைக் காணுமாறு தோழி செவிலியிடம் கூறினாள்.

குறிப்பு

தலைவன் வந்தவுடனேயே தலைவியின் நுதல், ஒளி பெற்றுவிட்டது; திருமணம் செய்துகொண்டு உடனுறையின் இந்த இன்பம் மேலும் மிகும்.

சொற்பொருள்

2. முத்தம் - முத்து; இமைக்கும் - விளங்கும், மின்னும்.
3. தண்அம் - குளிர்ந்த அழகிய.
4. கண்டிசின் - காண்க; நுதல் - நெற்றி.

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 3 **மூவாதியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி, தலைமகன் வரைவு மலிந்தமை தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தோழி, தலைவன் மணம் பேச வருவதைத் தலைவியிடம் கூறியது.

இலைஅடர் தண்குளவி ஏய்ந்த பொதும்பில்
குலையுடைக் காந்தள் இனவண்(டு) இமிரும்
வரையக நாடனும் வந்தான்மற்(று) அன்னை
அலையும் அலைபோயிற்(று) இன்று.

தெளிவுரை

"தலைவியே! தழைகள் அடர்ந்து குளிர்ச்சி பொருந்திய காட்டு மல்லிகைக் கொடிகள் படர்ந்துள்ள சோலையில் கொத்துக் கொத்தாய் விளங்கும் காந்தள் மலர்களில் வண்டின் கூட்டம் தேனுண்டு பாடும் காட்சி கொண்ட மலைநாட்டுக்குரிய தலைவன் மணம் பேச வருகின்றான். ஆதலின், நம் செவிலித்தாய் நம்மை வருத்தும் வருத்தம் இன்றோடு நீங்கியது" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

தலைவன் மணம் பேச வந்ததால் செவிலித்தாய் இனி நம்மை வருத்த மாட்டாள்.

சொற்பொருள்

1. அடர் - நிறைந்துள்ள; குளவி - காட்டுமல்லிகை; ஏய்ந்த - படர்ந்துள்ள; பொதும்பில் - சோலையில்.
2. குலையுடை - கொத்துகளாயுள்ள; காந்தள் - காந்தள் பூ; இமிரும் - ஒலிக்கும், பாடும்.
3. வரையகம் - மலை இடத்தைக் கொண்ட.
4. அலையும் - வருத்துகின்ற; அலை - வருத்தம்.

தோழி கூற்று

குறுந்தொகை 247 **சேந்தம்பூதனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

கடிநகர்த் தெளிவு விலங்கினமை அறியத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைந்துகொள்வதற்கு உடன்பட்டனன் என்னும் செய்தியை அறிந்த தோழி அதனைத் தலைவியிடம் கூறியது.

எழில்மிக உடையது; ஈங்குஅணிப் படூஉம்;
திறவோர் செய்வினை அறவது ஆகும்;
கிளைஉடை மாந்தர்க்குப் புணையுமாம் இவ்என,
ஆங்குஅறிந் திசினே தோழி! வேங்கை
வீயா மென்சினை வீஉக, யானை
ஆர்துயில் இயம்பும் நாடன்
மார்புஉரித்து ஆகிய மறுஇல் நட்பே.

தெளிவுரை

தலைவியே! வேங்கை மரத்தின் மெல்லிய கிளைகளிலிருந்து பூக்கள் உதிர்ந்து கிடக்க, அம்மலர்களின்மேல் யானை படுத்து உறங்கும் போது அதன் மூச்சுக்காற்றின் ஒலி எங்கும் கேட்கும். அத்தகைய காட்சி கொண்ட சிறந்த மலைநாட்டிற்கு உரியவனின் மார்பைத் தழுவும் உரிமை பெற்ற குற்றமற்ற நம் நட்பு அழகியது. அந்நட்பின் பயன் விரைவில் இங்கே கைகூடும். திறமை வாய்ந்தோர் செய்யும் செயல்கள் எப்போதும் அறத்தன்மை யனவாகவே இருக்கும்; சுற்றம் உள்ள மக்கட்கு இவை பற்றுக் கோடும் ஆகுமென நான் நன்கு அறிந்துகொண்டேன்.

கருத்து

தான் கூறிய உறுதிமொழிகளினின்று வேறுபடாது தலைவியை வரைந்து கொள்வதற்குத் தலைவன் உடன்பட்டமையைத் தோழி பாராட்டினாள்.

குறிப்பு

தலைவனைப் பற்றி ஐயுற்ற தலைவியின் மனக்கவலை நீங்கும்படி, தோழி அவனைத் திறமையுள்ளவன், அறத்தைச் சிதைக்க மாட்டான் என்று கூறினாள்.

விளக்கம்

“நாடனுடன் கொண்ட நட்பு, அவனை வரைந்துகொள்வதால் அழகு பெறுகிறது; அவ்வரைவும் அண்மைக்காலத்தில் நிகழ உள்ளது; அவன் திறமை வாய்ந்தவனாதலின் அவன் செயல்கள் அருளொடு பொருந்தியனவாகும்; அவன் செய்யும் இச்செயல் நம் உறவினர்க்குப் பற்றுக்கோடாகவும் இருக்கும்” எனத் தோழி தலைவனைச் சிறப்பித்துக் கூறினாள். தலைவன் தம்மிடம் கூறிய

உறுதிமொழிகளினின்று வேறுபடாமல் வரைந்துகொள்ள உடன்பட்டமையைத் தோழி பாராட்டினாள்.

சொற்பொருள்

1. அணிப் படூஉம் - அண்மைக் காலத்தே கைகூடும்.
2. திறவோர் - திறமை வாய்ந்தவர்; செய்வினை - செய்யும் செயல்; அறவது - அற வழிப்படுவது.
3. கிளை - சுற்றம்; புணை - பற்றுக்கோடு; இவ் - இவை.
4. அறிந்திசின் - அறிந்துகொண்டேன்; வேங்கை - வேங்கை மரம்.
5. வீயா - கெடாத; வீஉக - பூக்கள் உதிர.
6. இயம்பும் - (மூச்சுக்காற்றின் ஒலி) கேட்கும்.
7. மார்பு உரித்து - மார்பு உரிமையானது; மறுஇல் - குற்றம் அற்ற.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 230 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் வரைவு வேண்டித் தமரை விடுத்துழி, 'மறுப்பர் கொல்லோ' என்று அச்சமுறுகின்ற தலைமகளுக்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவு வேண்டித் தலைவிக்கு உறவானோரிடம் தன் தமரையும் சான்றோரையும் அனுப்பியபொழுது, தன் தமர் அதற்கு உடம்பட மறுப்பரோ என ஐயுற்று வருந்திய தலைவியிடம் தோழி தேறுதல் கூறியது.

அம்ம, வாழி! தோழி! நம்மொடு
சிறுதினைக் காவலன் ஆகிப் பெரிதுந்நின்
மென்தோள் ஞெகிழவும், திருநுதல் பசப்பவும்,
பொன்போல் விறல்கவின் தொலைத்த
குன்ற நாடற்கு அயர்வர்நன் மணனே.

தெளிவுரை

தலைவியே! வாழ்க! நாம் தினைப்புனத்தைக் காவல் புரிந்து கொண்டிருந்தபோது நம்மோடு இருந்து உதவி செய்தனன், நம் மலைநாடன். பின்னர், நெடுநாள் பிரிந்திருந்து உன் மென்மையான தோள் இளைத்து வாடவும், அழகிய நெற்றி பசலை படர்ந்து அழகினை இழக்கவும், பொன்போல ஒளிவிட்ட வெற்றி பொருந்திய உன் அழகு தொலையவும் செய்தனன். அக்குன்ற நாடனுக்குத்தான் நம் உறவினர் நன்மணம் செய்து தருவர். (நீ அஞ்சாதிரு.)

கருத்து

திருமணத்திற்குப் பெற்றோர் உடம்படுவர்; ஐயுறேல்.

சொற்பொருள்

2. காவலன் ஆகி - தினைப்புனத்தில் காவல் காப்பவன் ஆகி.
3. ஞெகிழவும் - இளைத்து வாடவும்; பசப்பவும் - பசலை படரவும்.
4. விறல் கவின் - வெற்றி தரும் அழகு; தொலைத்த - கெடுத்த.
5. அயர்வர் - செய்வர்; மணன் அயர்வர் - திருமணம் செய்து கொடுப்பர்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 218 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் வரைவு வேண்டி விடத் தமர் மறுத்துழி அது கேட்டு, 'இஃது என்னாம் கொல்?' என்று ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி, தனக்கு நற்குறி செய்யக் கண்டு, 'கடிதின் வந்து வரைவான்' எனச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தான் தலைவியைத் திருமணம் செய்துகொள்ள அவள் பெற்றோரிடம் தலைவன் தூது விடுத்தான். அவள் பெற்றோர் மறுத்தனர். அதனைக் கேள்வியுற்ற தலைவி 'என்னாகுமோ?' என்று ஆற்றாளாயினாள். தோழி நல்ல சகுனங்களைக் கண்டு, 'தலைவன் உன்னை விரைவில் மணப்பான்' என்று சொல்லியது.

நுண்ஏர் புருவத்த கண்ணும் ஆடும்;
மயிர்வார் முன்கை வளையும் செறூஉம்;
களிறுகோள் பிழைத்த கதஞ்சிறந்து எழுபுலி
எழுதரு மழையின் குழுமும்;
5 பெருங்கல் நாடன் வருங்கொல்? அன்னாய்!

தெளிவுரை

தலைவியே! நுண்ணிய அழகான புருவம் கொண்ட (என் இடப்புறக்) கண் துடிக்கின்றது; அத்துடன் மயிர் ஒழுங்குற அமைந்துள்ள என் முன் கையில் அணியப்பெற்றுள்ள (முன்பு நெகிழ்ந்த) வளையல்கள் இப்போது இறுகுகின்றன. இவை நல்ல நிமித்தங்கள். தன் தாக்குதலினின்று களிற்றுயானை தப்பியதால் சினம் மிக்கு எழுந்த புலி, பொங்கியெழும் மேகம் போல முழங்கும் பெரிய மலைநாட்டிற்குரியவன் உன்னை மணம் புரிந்திட வருவான் என்பதற்கான குறிகள் அல்லவா இவை?

கருத்து

நற்சகுனங்கள் தோன்றுகின்றன. திருமணம் நல்லவண்ணம் நடக்கும்.

குறிப்பு

பெண்கட்கு இடக்கண்ணும் ஆண்கட்கு வலக்கண்ணும் துடித்தல் நன்னிமித்தம் என்பது நம்பிக்கை.

உள்ளுறை

தன் பிடியிலிருந்து யானை தப்பியதால் மிகுந்த சினம் கொண்ட புலி முழங்கும் என்னும் தொடர்மூலம், தலைவிக்கு உறவானோர் வரைவு மறுத்தலால் தலைவன் முன்னையினும் பெருமுயற்சி மேற்கொண்டு தலைவியை மணமுடித்தே தீருவான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. **நுண்ஏர் புருவத்த - நுண்ணிய அழகிய புருவத்தைக் கொண்ட; கண்ணும் என்றது இடக்கண்ணை; ஆடும் - துடிக்கும்.**

2. மயிர்வார் - மயிர் ஒழுங்காய் அமைந்த; செறூஉம் - நெகிழ்ச்சி நீங்கி இறுகும்.
3. கோள் பிழைத்த - பிடியினின்றும் தப்பித்ததால்; கதஞ்சிறந்து - சினம் மிக்கு.
4. எழுதரு - பொங்கியெழும்; மழையின் - மேகம் போல; குழுமும் - முழங்கும்.

தோழி கூற்று

குறுந்தொகை 351 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் தமர் வரைவொடு வந்தவழி, 'நமர் அவர்க்கு வரைவு நேரார் கொல்லோ?' என்று அஞ்சிய தலைமகட்குத் தோழி வரைவு மலிந்தது.

கூற்று விளக்கம்

தலைவனுக்கு உறவானோர் தலைவியை மணம் பேச வந்தனர். 'நம் உறவினர் இதற்கு உடம்படுவரா' என ஐயுற்ற தலைவியிடம், 'நம் உறவினர் உடம்பட்டனர்' என்று தோழி கூறியது.

வளையோய்! உவந்திசின்! விரைவுறு கொடுந்தாள்
அளைவாழ் அலவன் கூர்உகிர் வரித்த
ஈர்மணல் மலிர்நெறி சிதைய, இழும்என
உரும்இசைப் புணரி உடைதரும் துறைவற்கு
உரிமை செப்பினர் நமரே; விரிஅலர்ப்
புன்னை ஓங்கிய புலால்அம் சேரி
இன்நகை ஆயத் தாரோடு
இன்னும் அற்றோ,இவ் அழுங்கல் ஊரே?

தெளிவுரை

வளையல் அணிந்த தலைவியே! விரைந்தோடும் வளைந்த கால்களைக் கொண்ட, வளைக்குள் வாழும் நண்டு தன் கூரிய நகங்களால் ஈர மணலில் கீறிய சிறு சிறு கோடு போன்றவற்றை, 'இழும்' எனும் ஓசையுடன் கடலலைகள் வந்து மோதி அழிக்கும் நெய்தல் நிலத்திற்கு உரிய தலைவனுக்கு நீ

உரிமையுள்ளவள் என்பதை (உன்னை மனைவியாக்க) நம் சுற்றத்தாரும் உடம்பட்டுக் கூறினர். எனவே, மகிழ்ச்சி கொள். (நாங்களும் மகிழ்கிறோம்.) விரியும் மலர்களைக் கொண்ட புன்னை மரங்கள் ஓங்கி நிற்கும், புலால் நாற்றம் கொண்ட சேரி. அங்குச் சிரித்து விளையாடும் மகளிர் கூட்டத்தினரோடு, பழிச்சொற்களைப் பேசும் ஆரவாரம் கொண்ட இந்த ஊர் இனியும் அவ்வாறே அலர் கூறும் தன்மையுடையதாகுமோ? (இனி) அதற்கு வாய்ப்பில்லை.

கருத்து

தலைவனுக்கு உன்னை மணம் முடித்துத் தரப் பெற்றோர் உடம்பட்டனர்; இனி நீ அஞ்ச வேண்டா.

உள்ளுறை

நண்டு கீறிய சிறு வரி சிதையும்வண்ணம் அலைநீர் வீசும் என்னும் தொடர்மூலம், ஊரினர் பழிச்சொல் உரைக்க வாய்ப் பில்லாதவாறு தலைவன் தலைவியை மணந்து கொள்வான் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. வளையோய் - வளையல் அணிந்த தலைவியே!; உவந்திசின் - மகிழ்ச்சி கொள்; விரைவுறு - விரைந்தோடும்; கொடுந்தாள் - வளைந்த கால்.
2. அளை - வளை; அலவன் - நண்டு; கூர் உகிர் - கூர்மையான நகம்; வரித்த - கீறிய.
3. ஈர்மணல் மலிர் நெறி - ஈரமான மணலில் உண்டாக்கிய கோடு போன்ற வழி; இழும் என - 'இழும்' எனும் ஓசையுடன்.
4. உரும் - இடி; புணரி - கடலலை; உடைதரும் - அழிக்கும்.
5. உரிமை செப்பினர் - நீ தலைவனுக்கு உரிமையுள்ளவள் என்று கூறினர்; நமர் - நம் உறவினர்; விரிஅலர் - விரியும் மலர்.
6. ஓங்கிய - ஓங்கி வளர்ந்துள்ள.
7. ஆயத்தார் - மகளிர் கூட்டம்.
8. அற்றோ - அத்தன்மை உடையதாகுமோ?; அழுங்கல் - ஆரவாரம்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 258 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு வேண்டிவிட மறுத்துழித் தமர்க்கு உரைப்பாளாய், வரையாது வந்தொழுகும் தலைமகற்குத் தோழி, அவன் மலை காண்டலே பற்றாகத் தாங்கள் உயிர் வாழ்கின்றமை தோன்றச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவிக்கு உற்றாரானோரிடம் தான் தலைவியை மணம் புரிய விரும்புவதாகத் தலைவன் செய்தி அனுப்பினான். ஆனால், அவள் உறவினர் அதற்கு உடம்படவில்லை. அந்நிலையில் தோழி, தம் உறவினர் கேட்கும் வகையிலும் தலைவன் உணருமாறும், 'தாம் உயிர் வாழ்ந்திருப்பது தலைவன் மலையைக் காண்பதாலேயே' என்று கூறியது.

குன்றக் குறவன் காதல் மடமகள்
அணிமயில் அன்ன அசைநடைக் கொடிச்சியைப்
பெருவரை நாடன் வரையு மாயின்
கொடுத்தனெம் ஆயினோ நன்றே
இன்னும் ஆனாது, நன்னுதல் துயரே.

தெளிவுரை

"குன்றத்தில் வாழும் குறவனுக்கு அன்புக்குரிய இளமகளாகிய இவள், மயில்போலும் அசைந்த நடையினள். இவளைப் பெரிய மலைநாடனாகிய தலைவன் வரைய விரும்பினான் எனின், அவனுக்கு மகட்கொடை நேர்தலே மிகவும் நன்றாகும்; மறுத்தோம் ஆயின் அழகிய நெற்றியைக் கொண்ட இவள் துயரம் மேலும் மேலும் பெருகும்" என்று தோழி, உறவினர் கேட்குமாறு கூறுகிறாள்.

(அப்போது அங்கு ஒருபுறம் இருந்த தலைவனும் இதைக் கேட்கும்படி, 'அவன் மலையைக் காண இயல்வதால் மட்டுமே தலைவி உயிர் வாழ்கிறாள்' என்பதனைக் கூறி அவன் உணருமாறும் செய்கிறாள்.)

கருத்து

தலைவிக்கு உறவாயினோர் திருமணத்திற்கு உடம்படாதபோது, தோழி, 'தலைவன் நாட்டு மலையினைக் கண்டு கொண்டிருப்பதாலேயே தலைவி உயிர் வாழ்ந்திருக்கிறாள்' என்பதை உறவினர் அறியுமாறு கூறினாள்.

சொற்பொருள்

2. கொடிச்சி - குறிஞ்சிநிலத் தலைவி.
3. வரையுமாயின் - திருமணம் செய்துகொள்வானாயின்.
4. கொடுத்தனெம் ஆயினோ - கொடுத்தோமானால்.
5. நன்னுதல் துயர் ஆனாது - (மறுத்தோமாயின்) தலைவியின் துயர் இடைவிடாது, மேலும் மேலும் (பெருகும்).

தோழி கூற்று

குறுந்தொகை 367 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

வரைவுணர்த்திய தோழி தலைமகட்குக் கழியுவகை மீதூராமை உணர்த்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைந்துகொள்வான் என்பதைத் தலைவிக்கு உணர்த்திய தோழி, அவள் உவகை மீறாமல் இருக்கும்பொருட்டு, பின்னும் அத்தலைவி ஐயுறும்வண்ணம் கூறியது.

கொடியோர் நல்கார் ஆயினும், யாழநின்
தொடிவிளங்கு இறைய தோள்கவின் பெறீஇயர்,
உவக்காண் தோழி! அவ்வந் திசினே
தொய்யல் மாமழை தொடங்கலின், அவர்நாட்டுப்
பூசல் ஆயம் புகன்றுஇழி அருவியின்
மண்ணுறு மணியின் தோன்றும்
தண்நறுந் துறுகல் ஓங்கிய மலையே.

தெளிவுரை

தலைவியே! கொடியோராகிய தலைவர் விரைவில் அன்பு காட்டாராயினும் வருந்தாமலிருக்க வேண்டும். நிலத்தை

நன்றாய் நனைக்கும் மிகுந்த மழை பெய்யத் தொடங்கியதனால் அவருடைய மலையிலிருந்து அருவிநீர் மிகுதியாய்ப் பெருகி வருகின்றது. அவ்வருவிநீரால் கழுவப்பெற்ற குண்டுக்கற்கள் நீலமணி போலக் காட்சியளிக்கின்றன. இத்தகைய உயர்ந்த மலை அதோ காணப்படுகின்றது; இங்கே வந்து அந்த மலையைப் பார். வளையலணிந்த மணிக்கட்டினைக் கொண்ட சிறந்த தோள்கள், இழந்த அழகை மீண்டும் பெற்று விளங்கும்.

கருத்து

'தலைவியே! தலைவன் மணம் பேச வருவான்; நீ அவன் மலையைப் பார்த்து அவன் அருளை நினைந்து ஆற்றியிரு' என்று தோழி தலைவி யிடம் உரைத்தாள்.

குறிப்பு

தலைவன் தலைவியை மணம் புரிந்துகொள்ள முடிவு செய்துள்ள மகிழ்ச்சிச் செய்தியைத் தோழி தலைவியிடம் கூறினாள். அதனால் தலைவிக்கு அளவு கடந்த மகிழ்ச்சி தோன்றாமல் இருக்கும்பொருட்டு, 'தலைவன் இரக்கங்காட்டாமல் காலம் தாழ்த்தினாலும் நீ வருந்தாதே. அதோ தெரியும் அவன் மலையைக் கண்டு மகிழ்ச்சி கொள்' என்கிறாள்.

அளவு கடந்த இன்பமோ, துன்பமோ திடீரெனச் சொல்லப்பட்டால் மனநிலை பாதிக்கப்படும் எனும் உளவியல் கொள்கையை இப்பாடலில் காணலாம்.

சொற்பொருள்

1. நல்கார் ஆயினும் - அன்பு காட்டாமல் காலம் தாழ்ப்பாராயினும் (தாழ்த்து வருவாராயினும்).
2. இறைய - மணிக்கட்டினைக் கொண்ட; கவின் - அழகு; பெறீஇயர் - பெறுக.
3. உவக்காண் - அதோ பார்; அவ்வந்திசின் - இங்கே வந்து.
4. தொய்யல் மாமழை - நிலத்தை நன்றாய் நனைக்கும் பெரிய மழை.
5. பூசல் - ஆரவாரத்தைக் கொண்ட; ஆயம் - மகளிர் கூட்டம்; புகன்று இழி - விரும்பி இறங்கும்.
6. மண்ணுறு - கழுவப்பட்ட.
7. துறுகல் - குண்டுக்கற்கள்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 92 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

'நினக்கு வரைந்து தருதற்குக் குறை நின் தமர் அங்கு வந்து கூறாமையே' எனத் தோழி கூறினளாக, தலைமகள் முகம் நோக்கி இவள் குறிப்பினாற் கூறினாளென்பதறிந்த தலைமகன், 'வரைவு மாட்சிமைப்படின் நானே வருவல்' எனத் தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனை நோக்கித் தோழி, "உனக்குத் தலைவியை மணந்து தர மறுப்பதற்குக் காரணம் உன் பக்கத்தார் அவள் பெற்றோரிடம் சென்று, 'அவளைப் பெண் தருக' என்று கேட்காததுதான்" என்று கூறினாள். தலைவியின் முகக்குறிப்பைப் பார்த்துத்தான் தோழி இவ்வாறு கூறுகிறாள் என்று தலைவன் புரிந்துகொண்டு, 'திருமணம் நல்ல முறையில் முடியு மென்றால் பெண் கேட்க நானே வருவேன்' என்று தலைவியிடம் அவன் சொல்லியது.

கருங்கோட்டு எருமைச் செங்கண் புனிற்றுஆ
காதல் குழவிக்கு ஊறுமுலை மடுக்கும்
நுந்தை, நும்மூர் வருதும்
ஒண்தொடி மடந்தை! நின்னையாம் பெறினே.

தெளிவுரை

"பெரிய கொம்பையும், சிவந்த கண்களையும் கொண்ட பெண் எருமை அண்மையில் ஈன்ற தன் கன்றுக்கு மடி சுரந்து பாலூட்டும் தன்மை வாய்ந்தது, உன் தந்தை வாழும் ஊர். உன்னை அவர் எனக்குத் தருவது உறுதியென்றால் நானே வந்து பெண் கேட்பேன்."

கருத்து

'மணம் பேச நானே வருவேன்' என்கிறான், தலைவன்.

சொற்பொருள்

1. கருங்கோடு - பெரிய கொம்பு; எருமைப் புனிற்று ஆ - அண்மையில் ஈன்ற எருமை.

2. குழவிக்கு - கன்றுக்கு; ஊறுமுலை - பால் சுரக்கின்ற மடி; மடுக்கும் - பாலூட்டும் - உண்பிக்கும்.
3. நுந்தை - உம் தந்தை; வருதும் - வருவேன்; நின்னை - உன்னை.
3-4. நின்னை யாம் பெறின் நும்மூர் வருதும்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 259 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரையத் துணிந்த தலைமகன், வரைவு முடித்தற்குத் தலைமகள் வருந்து கின்ற வருத்தம் தோழி காட்டக் கண்டு, இனி அது கடுக முடியுமென உவந்த உள்ளத்தனாய்த் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை வரைவதென முடிவு செய்தான், தலைவன்; வரைவுக்குரிய காலம் நீண்டமை கருதித் தலைவி வருந்துவதைத் தோழி வாயிலாய் உணர்ந் தான். இனித் திருமணம் விரைவில் முடியுமென மகிழ்ந்த உள்ளத்தோடு தலைவன் தனக்குள்ளே சொல்லியது.

குன்றக் குறவன் காதல் மடமகள்
மன்ற வேங்கை மலர்சில கொண்டு,
மலைஉறை கடவுள் குலமுதல் வழுத்தித்
தேன்பலிச் செய்த ஈர்நறும் கையள்
மலர்ந்த காந்தள் நாறிக்
கலிழ்ந்த கண்ணள்எம் அணங்கி யோளே.

தெளிவுரை

குன்றக்குறவனின் அன்புக்குரிய இளமகள், பொதுவிடத்தி லுள்ள வேங்கை மரத்தின் மலர்கள் சிலவற்றைக் கொண்டு சென்று, மலையில் எழுந்தருளியிருக்கும் குல தெய்வத்தை

வழிபட்டுத் தேனை அன்புப் படையலாய் இட்டாள். அந்த ஈரம் புலராத கையினளாகவும், மலர்ந்த காந்தள் மணம் கொண்ட மேனியளாகவும், கலங்கியழும் கண்களைக் கொண்டவளாகவும் விளங்கும் அவள்தான் என்னை மிகவும் வருந்தச் செய்தவள்.

கருத்து

தலைவியை விரைவில் மணந்துகொள்ள முடியுமெனத் தலைவன் மகிழ்கிறான்.

குறிப்பு

தலைவன் தான் செய்த சூள் தவறி மணந்துகொள்ளக் காலம் நீட்டித்ததால் தலைவியை மெலியச்செய்தான். அதனால் அவனுக்குத் தீங்கு ஏதும் நேரக் கூடாதெனத் தன் குல தெய்வத்தை வேண்டினாள், தலைவி. திருமணம் விரைவில் முடியுமெனத் தலைவன் மகிழ்கிறான்.

உடன்போக்கிற்குக்கூட அவள் உடம்படுவாள் என்றும், அதனால்தான் அவளை விரைவில் வரைந்துகொள்ள முடியுமென்றும் அவன் மகிழ் கிறான்.

சொற்பொருள்

1. மடமகள் - இளைய மகள்.
2. மன்ற வேங்கை - ஊர் மன்றத்தில் உள்ள வேங்கை மரம்.
3. வழுத்தி - வழிபட்டு.
4. தேன் பலி செய்த - தேனைப் படையலாய் இட்டு.
5. நாறி - மணம் வீசி.
6. கலிழ்ந்த - கலங்கிய, அழுத; கண்ணள் - கண்களைக் கொண்டவள்; எம் அணங்கியோள் - என்னை வருத்தியவள்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 147 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

சுற்றத்தார் வேண்டிய கொடுத்துத் தலைமகன் வரைவு மாட்சிமைப் படுத்தமையறிந்த தோழி, உவந்த உள்ளத்தளாய்த் தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவிக்குச் சுற்றத்தாராயினோர் விரும்பியவற்றைத் திருமணப் பரிசமாய்த் தலைவன் கொடுத்தான். அதனை அறிந்த தோழி மகிழ்ச்சிப் பெருக்கோடு அதனைத் தலைவியிடம் சொல்லியது.

எக்கர் ஞாழல் மலரில் மகளிர்
ஒண்தழை அயரும் துறைவன்
'தண்தழை விலை'என நல்கினன், நாடே.

தெளிவுரை

தலைவியே! மணல்மேட்டில் வளர்ந்துள்ள ஞாழல் மரத்தில் மலர்கள் இல்லாமையால் அதன் ஒளிமிக்க தழையைக்கொண்டு தொடுத்த தழையாடையை அணிந்து மகளிர் விளையாடி மகிழும் கடற்றுறைக்குரியவன், நம் தலைவன். அவன் நீ உடுக்கும் தழையாடைக்கு விலையாய்த் (உனக்குப் பரிசமாய்த்) தன் நாட்டையே தந்துள்ளான். (இனிக் கவலை விடு.)

கருத்து

தலைவன் மணப்பரிசமாய்த் தன் நாட்டையே தந்தான்.

குறிப்பு

தழைவிலை என்பது, தலைவி உடுத்துக்கொள்ளும் தழையுடைக்கு ஈடாய்க் கொடுப்பது. இது முலைவிலை என்றும் கூறப்படும்.

தலைவன் தழைவிலைக்கு ஈடாய்த் தன் நாட்டையே தந்தனன் என்பது அவன் செல்வச் செழிப்பையும் தாராள மனப்பான்மையையும் காட்டுகிறது.

தலைவிக்குத் தமராயினோர் கேட்பவெல்லாம் தந்து மகிழ்வித்த தலைவன், 'என் நாடும் கொள்க' என்று கொடுக்கவே, அவன் மாட்சியறிந்த அவர், அவனைப் போற்றி, மகளைத் தர உடனேயே இசைந்தனர்.

சொற்பொருள்

1. மலரில் - மலர் இல் - மலர் இல்லாத.
2. ஒண் தழை - ஒளிமிக்க தழை; அயரும் - விரும்பும்.
3. தழைவிலை - மணப்பரிசம், முலைவிலை; நல்கினன் - கொடுத்தனன்.

தோழி கூற்று

குறுந்தொகை 83 **வெண்பூதன்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் வரைந்தெய்துதல் உணர்த்திய செவிலியைத் தோழி வாழ்த்தியது. (வரைந்து எய்துதல் - திருமண ஏற்பாட்டுடன் வருதல்.)

கூற்று விளக்கம்

வரைவுக்குரிய முயற்சிகளோடு வந்த தலைவனைச் செவிலி ஏற்றுக் கொண்டமையைத் தோழி, அச்செவிலியை வாழ்த்தும் வாயிலாய்த் தலைவிக்கு உணர்த்தியது.

அரும்பெறல் அமிழ்தம் ஆர்பதம் ஆகப்
பெரும்பெயர் உலகம் பெறீஇயரோ, அன்னை
தம்இல் தமதுஉண் டன்ன சினைதொறும்
தீம்பழம் தூங்கும் பலவின்
ஓங்குமலை நாடனை, 'வரும்'என் றோளே!

தெளிவுரை

தமக்கு உரிமையான வீட்டில் இருந்துகொண்டு, தாம் முயன்று தேடிய செல்வத்தைக்கொண்டு உண்பதால் ஏற்படும்

இன்பத்தைப் போல இன்சுவை தரும் இனிய பலாப்பழங்கள் கிளைதோறும் தொங்குகின்ற உயர்ந்த மலைநாட்டிற்குரியவன், நம் தலைவன். திருமணத்திற்கான ஏற்பாடுகளுடன் அவன் வரப் போகின்றான் என்று கூறிய நம் அன்னை (செவிலி) பெறுதற்கரிய சாவா மருந்தாகிய அமிழ்தத்தையே உண்ணும் உணவாய்ப் பெறுக! மிக்க புகழுடைய பேரின்ப உலகத்தையும் (துறக்கத் தையும்) அவள் பெறுவாளாக!

கருத்து

தலைவன் திருமண ஏற்பாட்டோடு வருகிறான் என்பதுரைத்த அன்னை, அமிழ்தம் உண்க; துறக்கம் பெறுக.

இறைச்சி

சினைதோறும் பலாவின் பழங்கள் தொங்கும் என்றது, தலைவ னுடைய இல்லம், மணந்துகொண்டு இல்லறம் நடத்துதற்குரிய எல்லா இன்பங்களையும் கொண்டதென்பதைச் சுட்டுகிறது.

சொற்பொருள்

1. அரும்பெறல் - கிடைத்தற்கரிய; அமிழ்தம் - சாவா மருந்து; ஆர்பதம் - உண்ணும் உணவு.
2. பெரும் பெயர் உலகம் - மிக்க புகழ் கொண்ட பேரின்ப உலகம்; பெறீஇயரோ - பெறுக.
3. தம் இல் - தம்முடைய வீடு; தமது - தமது முயற்சியினால் தேடிய உணவு; சினை - கிளை.
4. தீம்பழம் - இனிய பழம்; தூங்கும் - தொங்கும்; பலவின் - பலா மரங்களைக் கொண்ட.
5. வரும் - திருமண ஏற்பாட்டுடன் வரப்போகிறான்; என்றோள் - என்று கூறிய செவிலி.

நற்றாய் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 15 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சான்றோரை வரைவு வேண்டி விடுத்த இடத்துத் தலைமகளின் தந்தைக்கும் தனயன்மார்க்கும் நற்றாய் அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்ள எண்ணிய தலைவன் மணம் பேசச் சான்றோரை அனுப்பினான். அப்போது நற்றாய் தலைவியைப் பெற்ற தந்தையிடமும் தமையனிடமும் உண்மையைச் சொல்லி அறத்தொடு நின்றது.

வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க்
கோடாது நீர்கொடுப்பின் அல்லது – கோடா
எழிலும் முலையும் இரண்டிற்கும் முந்நீர்ப்
பொழிலும் விலையாமோ போந்து.

தெளிவுரை

"வரைவு வேண்டித் தலைவன் அனுப்பியுள்ள குறையெதுவு மில்லாத சான்றோர் வந்துள்ளனர். அவர்கள் வருகையை ஏற்றுக் கொண்டு, அவர்கள் கருத்துக்கு மாறுபடாது மணமுறையில் நம் மகளைக் கொடுத்தலே முறை. அஃதில்லாமல் நம் மகளின் கட்டழகு, கொங்கைகள் என்னும் இரண்டற்கும் கடல் சூழ்ந்த இவ்வுலகத்தையே விலையாய்க் கொடுத்தாலும் ஏற்புடையன வாகா. மாறுபடாத அவன் காதலினையே முலைவிலையாய் மதிக்க வேண்டும்" எனத் தலைவிக்குத் தந்தை, தமையன் முதலானவர்க்கு உண்மை நிகழ்ச்சியைக் கூறி நற்றாய் அறத்தொடு நின்றாள்.

கருத்து

"மாறுபடாத காதலினை மதிக்க வேண்டும். மணம் பேச வந்துள்ள சான்றோரிடம் நம் ஒப்புதலைத் தெரிவிக்கலாம்" என நற்றாய் தலைவியைப் பெற்ற தந்தையிடமும் தமையன்மாரிடமும் கூறினாள்.

சொற்பொருள்

1. வாடாத - குறையெதுவுமில்லாத; வரவு - (மணம் பேசி வந்துள்ளவர்) வருகையை; கொண்டிராய் - ஏற்றுக்கொண்டு.
2. கோடாது - அவர்கள் கருத்துக்கு மாறுபடாது; கோடா - குறை வில்லாத.
3. முந்நீர் - கடலும்.
4. பொழிலும் - இவ்வுலகமும்; விலையாகுமோ? - விலையாகாது; போந்து - பொருந்திய.

தோழி கூற்று

குறுந்தொகை 146 **வெள்ளிவீதியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் தமர், வரைவொடு வந்து, சொல்லாடுகின்றுழி, 'வரைவு மறுப்பவோ?' எனக் கவன்ற தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி சுற்றத்தாரிடம் சென்று மணம் பேசி வருமாறு தலைவன் சான்றோரை விடுக்கின்றான். அவர் வந்தமையறிந்த தலைவி, 'தன் சுற்றத்தார் இதனை மறுப்பரோ' எனக் கலங்கினாள். அவளிடம் தோழி, 'தலைவர் வரவை நம்மவர் ஏற்றுக் கொண்டனர். நீ கவலை ஒழிக' என்று கூறியது.

அம்ம வாழி, தோழி! நம்ஊர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ?
தண்டுடைக் கையர் வெண்தலைச் சிதவலர்,
'நன்றுநன்று' என்னும் மாக்களோடு
இன்றுபெரிது என்னும் ஆங்கணது அவையே.

தெளிவுரை

தலைவியே! கேள்! நமது ஊரிலே களவில் புணர்ந்து பிரிந்த வரைச் சேர்த்து வைக்கும் பெரியோர் முன்னும் இருந்தனர்;

இன்றும் இருக்கின்றனர். கையில் தண்டினை (ஊன்றுகோலை)ப் பிடித்தவராயும், நரைத்த தலையில் தலைப்பாகை அணிந்தவராயும் தலைவன் உறவினராய பெரியவர்கள், 'நன்று நன்று' என்று சொல்லிக்கொண்டு (மணம் பேச) நம் இல்லத்திற்கு வந்துள்ளனர். 'இன்று நீங்கள் வந்தது எங்களுக்குப் பெருமை' என்று நம் இல்லத்திலே கூடியிருக்கும் நம் உறவினராய அவையினரும் கூறி வரவேற்கின்றனர். இதனை அறிந்து உன் கவலையைக் கைவிடு!

கருத்து

'நம் உறவினர் உன் திருமணத்திற்கு இசைந்தனர்' எனத் தலைவி மகிழத் தோழி கூறினாள்.

குறிப்பு

திருமணம் பேசத் தலைவன் வீட்டைச் சார்ந்த முதியவர்கள் தலைவி வீட்டுக்குச் சென்று பெண் கேட்பதும், தலைவிக்குச் சுற்றத்தாரும் ஊர்ச் சான்றோரும் அதனைக் கேட்டு, தகுதி முதலியவற்றை ஆராய்ந்து இசைவதும் இயல்பு.

பெரியோர்கள் பெண் கேட்க வரும்போது எல்லாம் நன்மையாய் முடிய வேண்டும் என்னும் கருத்தில் 'நன்று நன்று' என்று சொல்லிக்கொண்டு வருவர்; அவர்களை வரவேற்போரும், 'நீங்கள் வந்த நாள் நன்னாள்' என்று கூறி வரவேற்பர்.

சொற்பொருள்

2. பிரிந்தோர் - (காதலித்து மணம் நிகழாது) பிரிந்திருப்பவர்; புணர்ப்போர் - சேர்த்து வைப்பவர்.
3. தண்டு - ஊன்றுகோல்; வெண்தலை - நரைத்த தலை; சிதவலர் - தலைப்பாகை கட்டியவர்.
4. இன்று பெரிது என்னும் - 'இன்று நல்ல நாளே' என்று கூறுகின்றனர்; ஆங்கணது அவை - அங்கிருந்த அவையினர்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 300 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் தானே வரைவு வேண்டிவிடச் சுற்றத்தார் கொடை நேர்ந்தமை தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், திருமணம் செய்துகொள்ளப் பெண் கேட்டுத் தலைவி வீட்டிற்குத் தானே சென்றான். தலைவி வீட்டாரும் தலைவியை மகட் கொடை நேர இசைந்தனர். அதனைத் தோழி தலைவியிடம் கூறியது.

கொடிச்சி கூந்தல் போலத் தோகை
அஞ்சிறை விரிக்கும் பெருங்கல் வெற்பன்
வந்தனன்; எதிர்ந்தனர் கொடையே;
அம்தீங் கிளவி! பொலிகநின் சிறப்பே!

தெளிவுரை

அழகாகவும் இனிமையாகவும் பேசவல்ல தலைவியே! குறிஞ்சி நிலக் குறப்பெண்ணின் கூந்தலைப்போல மயில், தன் அழகிய தோகையை விரிக்கும். இத்தகைய காட்சிக்கிடனான பெரிய மலைநாட்டினனாகிய நம் தலைவன் உன்னைத் திருமணம் செய்துகொள்ளப் பெண் கேட்டு வந்தான். நம் சுற்றத்தாரும் அவன் வேண்டுகோளுக்கிணங்கி உன்னை அவனுக்கு மணம் செய்ய உடன்பட்டனர். உன் அழகு பொலிவு பெறுக!

கருத்து

'தலைவியே! பெற்றோர் உன் திருமணத்திற்கு உடம்பட்டனர். உன் வாழ்க்கை மேம்படுவதாகுக!'

குறிப்பு

குறிஞ்சிநிலக் குறப்பெண்ணின் கூந்தலுக்கு ஒப்பாதலை விரும்பி மயில் தன் தோகையினை விரிக்கும் என்றது, தலைவன் விருப்பம் போலவே

தலைவி சுற்றத்தாரும் விரும்பி வரவேற்று மகட்கொடை தர ஒப்பினர் என்னும் குறிப்புடையது.

சொற்பொருள்

1. தோகை - மயில்.
2. அம்சிறை - அழகிய தோகை; பெருங்கல் வெற்பன் - பெரிய மலை நாட்டுக்குத் தலைவன்.
3. கொடை எதிர்ந்தனர் - பெண் கொடுக்க இசைந்தனர்.
4. அம்தீம் கிளவி - அழகிய இனிய பேச்சு.

தோழி கூற்று

நற்றிணை 393 **கோவூர் கிழார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு மலிந்தது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவொடு வருவதனை முற்பட அறிந்த தோழி, அச் செய்தியை மிகவும் மகிழ்ச்சியோடு தலைவியிடம், 'நம்மவர் இசைவரோ' என்று ஆராய்பவள்போல் கூறியது.

நெடுங்கழை நிவந்த நிழல்படு சிலம்பின்
கடுஞ்சூல் வயப்பிடி கன்றுஈன்று உயங்க,
பால்ஆர் பசும்புனிறு தீரிய, களிசிறந்து,
வாலா வேழம் வணர்குரல் கவர்தலின்,
கானவன் எறிந்த கடுஞ்செலல் ஞெகிழி
வேய்பயில் அடுக்கம் சுடர மின்னி,
நிலைகிளர் மின்னில், தோன்றும் நாடன்
இரவின் வரூஉம் இடும்பை நாம்உய,
வரைய வந்த வாய்மைக்கு ஏற்ப
நமர்கொடை நேர்ந்தனர் ஆயின், அவருடன்,
நேர்வர்கொல் வாழி தோழி!நம் காதலர்
புதுவர் ஆகிய வரவும்நின்
வதுவைநாண் ஒடுக்கமும் காணுங் காலே.

தெளிவுரை

தோழியே வாழ்க! நீண்ட மூங்கில் உயர்ந்து வளர்ந்துள்ள நிழல் மிக்க மலை; அங்குத் தலைச்சூலினைக் கொண்ட இளைய பெண்யானை ஒன்று, கன்றை ஈன்றது. அதன் பால்மடி சுரந்து கொண்டு இருந்தது; அண்மையில் ஈன்றதால் அது பசியால் வருந்திக் கொண்டும் இருந்தது. அதன் பசியைத் தீர்க்க மகிழ்ச்சி மிகக் கொண்ட கரிய அதன் ஆண்யானை வளைந்த தினைக் கதிரைக் கவர்ந்து வரச் சென்றது. அதனைக் காணும் கானவன் எரி கொள்ளியினை எறிந்தான். அக்கொள்ளி மூங்கில் நிறைந்த மலையில் ஒளி உண்டாகுமாறு மின்னி, விசும்பில் நிலை பெயர்ந்து வீழும் எரி நட்சத்திரத்தைப் போல விழுந்தது. இத்தகைய காட்சி கொண்ட மலைநாட்டிற்கு உரியவன், நம் தலைவன். அவன் இரவில் வருதலால் நாமடையும் வருத்தத் தினின்றும் உய்யுமாறு வரைந்து கொள்வதாய் வாக்களித்தான். அவன் சொன்ன வாய்மைக்கு ஏற்றபடியாக அவனும் வருகின்றான். நம் உறவினர் உடன்பட்டால் அவர்கள் நம் காதலருடன் மகிழ்ந்து பேசுவர் அன்றோ? நம் காதலர் புதியவர் போல் வருவதையும், நீ நாணத்தால் ஒடுங்கி நிற்பதையும் பார்த்து நானும் மகிழ்வேன் அன்றோ?

கருத்து

தலைவியே! தலைவன் தான் சொன்னவாறே மணம் பேச வருகின்றான்; நம் உறவினர் உடன்பட்டால் திருமணத்தில் தலைவன் புதியவன் போல் இருப்பதையும் நீ நாணத்தால் ஒடுங்கி நிற்பதையும் பார்த்து நானும் மகிழ்வேன் அன்றோ?

குறிப்பு

கானவன் வீசும் எரிகொள்ளிக்கும் அஞ்சாது, கன்றீன்ற தன் பிடியின் பசியைக் களையத் தினைக்கதிரைக் கொண்டுவரும் களிறு என்பது, தலைவனும் தலைவியின் துயர் களைதற்பொருட்டாய் எந்த இன்னலுக்கும் அஞ்சாது பெரும் பொருள் கொண்டு வரும் கழிபெரும் காதல் கொண்டவன் என்பதாம்.

உள்ளுறை

கன்றீன்ற பிடியின் பசியைப் போக்கக் கருதித் தினைக்கதிரைக் கவரவந்த யானையின்மீது கானவன் எறிந்த எரிகொள்ளி விண்வீழ் கொள்ளி போலத் தோன்றும் என்னும் தொடர்மூலம், தலைவிபடும் துயரைத் தீர்க்கக் கருதித் தலைவனைத் தோழி இயற்பழித்துரைக்கக் கேட்டதும், அதனால் ஆற்றாத தலைவன் தலைவியை மணந்துகொள்வதற்குத் தலைவியின் மனைமுற்றத் திலே கொண்டு வந்து குவித்துள்ள செல்வங்கள் எங்கும் சுடரொளி வீசி நின்றன என்னும் உள்ளுறைப் பொருளைத் தருகிறது.

சொற்பொருள்

1. கழை - மூங்கில்; நிவந்த - உயர்ந்து வளர்ந்துள்ள.
2. கடுஞ்சூல் - தலைச்சூல்; வயப்பிடி - இளைய பெண்யானை; உயங்க - வாடியிருப்ப.
3. பசும்புனிறு - அண்மையில் ஈனப்பட்டது.
4. வாலா - கரிய, வெண்மையற்ற; வணர்குரல் - வளைந்த தினைக்கதிர்.
5. ஞெகிழி - எரிகொள்ளி.
7. நிலைகிளர் மின் - விண்வீழ் கொள்ளி.
8. நாம் உய - நாம் தப்பிப் பிழைக்க.
10. நமர் - நம் உறவினர்; கொடை - மகட்கொடை.
11. நேர்வர் கொல் - இசைவார்களோ?
12. புதுவர் ஆகிய வரவும் - புதியவர் போல வருவதையும்.
13. வதுவை நாண் ஒடுக்கம் - திருமண நாளில் மணப்பெண் நாணத்துடன் ஒடுங்கி நிற்பது.

தோழி கூற்று

குறுந்தொகை 374 **உறையூர்ப் பல்காயனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

அறத்தொடு நின்றமை தோழி கிழத்திக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவனுக்கு உறவாயினார் மணம் பேச வந்தபோது அதனை நம் உறவினரும் ஏற்றுக்கொண்டனர். 'யான் அறத்தொடு நின்றதால் அஃது எளிதாய் முடிந்தது' என்று தோழி தலைவியிடம் கூறியது.

எந்தையும் யாயும் உணரக் காட்டி,
ஒளித்த செய்தி வெளிப்படக் கிளந்தபின்,
மலைகெழு வெற்பன் தலைவந்து இரப்ப,
நன்றுபுரி கொள்கையின் ஒன்றா கின்றே
முடங்கல் இறைய தூங்கணங் குரீஇ,
நீடுஇரும் பெண்ணைத் தொடுத்த
கூடினும் மயங்கிய மையல் ஊரே.

தெளிவுரை

நம் தந்தையும் தாயும் உணர்ந்துகொள்ளும்படி நாம் இதுவரை மறைத்திருந்த களவொழுக்கத்தை வெளிப்படச் சொன்னேன். அதன்பின் மலைநாட்டவனான தலைவன் முன் வந்து, உன்னை மணம் செய்து கொடுக்குமாறு வேண்டினான். உனக்கு நன்மை செய்யும் முறையில் திருமணம் உறுதிப்பட்டது. அதனால், வளைந்த சிறகுகளைக் கொண்ட தூக்கணங்குருவிகள் உயரமான கரிய பனை மரத்தில் கட்டிய கூட்டின் இழையைக் காட்டிலும் பலவாக மயக்கமுற்றிருந்த இவ்வூர் இப்போது நம்முடன் ஒன்றுபடுவதாயிற்று. வரைவுடன்பட்டதால் ஊரவர் அலர் ஒழிந்தது.

கருத்து

நான் அறநெறி நின்று உண்மையை உரைத்ததால், நம் பெற்றோர், தலைவன் வேண்டுகோளுக்கு இணங்கினர் எனத் தோழி கூறுகிறாள்.

குறிப்பு

தூக்கணாங்குருவியின் கூடு பல சிக்கல்களாகப் பின்னப்பட்டிருப்பதைக் கண்டு, இதை எப்படிக் கட்டியதோ எனக் காண்பவர் மயங்குவர். ஆதலின், மயக்கத்திற்கு அக்கூடு உவமையாயிற்று.

தூக்கணாங்குருவியின் கூடு பின்னப்பட்ட முறை பல சிக்கல்களைக் கொண்டதாய் இருந்தாலும் முடிவில் அது கூடாயினாற்போல, ஊரவர் மயக்கத்தால் எழுந்த பல வகையான பழிச்சொற்களும் முடிவில் திருமணம் என்னும் நன்னிலையை ஏற்படுத்தியுள்ளது.

சொற்பொருள்

2. ஒளித்த செய்தி - நம்முள் நாம் மறைத்துப் போற்றிய செய்தி; கிளந்த பின் - கூறிய பின்னர்.
3. தலைவந்து - முன்வந்து; இரப்ப - வேண்ட.
4. நன்றுபுரி கொள்கை - (நம் உறவினரும்) நமக்கு நன்மை செய்யும் கருத்துடன் இணங்கியதால்; ஒன்றாகின்று - இப்போது நம்முடன் ஒன்றுபடுவதாயிற்று.
5. முடங்கல் - வளைந்த; இறை - சிறகு; குரீஇ - குருவி.
6. பெண்ணை - பனைமரம்; தொடுத்த - கட்டிய.
7. கூடினும் - கூட்டினைக்காட்டிலும் (ஒன்றும் புரியாமல்); மயங்கிய - திகைத்திருந்த; மையல் ஊர் - மயக்கத்தினுடனிருந்த ஊர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 361 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு மலிந்தவழித் தோழி, ‘நன்கு ஆற்றினாய்’ என்றாட்குக் கிழத்தி சொல்லியது.

கூற்று விளக்கம்

வரைவுக்குரிய முயற்சிகள் நிகழ்ந்துகொண்டிருந்தன. தோழி, தலைவியிடம், ‘நீ இதுவரை தலைவன் பிரிவை நன்கு ஆற்றியிருந்தாய்’ என்றதற்குத் தலைவி, ‘அவர் மலையிலிருந்து வந்த காந்தள் செடியை வளர்த்து ஆற்றியிருந்தேன்’ என்று கூறியது.

அம்ம வாழி! தோழி! அன்னைக்கு
உயர்நிலை உலகமும் சிறிதால், அவர்மலை
மாலைப் பெய்த மணங்கமழ் உந்தியொடு
காலை வந்த காந்தள் முழுமுதல்
மெல்இலை குழைய முயங்கலும்
இல்உய்த்து நடுதலும், கடியா தோளே.

தெளிவுரை

“தோழியே! ஒன்று சொல்வேன், கேள்! அவர் மலையிலே முதல் நாள் மாலையில் பெய்த மழை மறுநாள் காலையிலே நம் ஊர்க்குப் பெருகி வந்தது. நறுமணம் கமழும் அவ்வெள்ளத் துடன் வந்த கிழங்குடன் கூடிய காந்தள் செடியை எடுத்தேன். அதன் மெல்லிய இலைகள் குழையுமாறு மார்பில் அணைத் தேன்; பின்னர், அதனை வீட்டிற்குக் கொண்டுவந்து நட்டு வளர்த்தேன். இவற்றையெல்லாம் பார்த்த அன்னை என்னை விலக்கவில்லை. அதனால் அந்த அன்னைக்குக் கைம்மாறாய் உயர்ந்த தேவர் உலகத்தையே கொடுப்பினும் அதுவும் மிகவும் சிறிதே” என்றாள், தலைவி.

கருத்து

தலைவன் பிரிவால் உண்டான துன்பத்தை அவன் மலையிலிருந்து வந்த காந்தள் செடியை எடுத்து வளர்த்துப் பொறுத்துக்கொண்டேன்.

விளக்கம்

(களவுப்புணர்ச்சிக்குப் பின்) தலைவியின் செயல்கள் யாவற்றி லும் குற்றம் கண்டு சினம் கொள்ளும் அன்னை, அத்தலைவி தலைவனோடு தொடர்புள்ள பொருள்களைக் கண்டு மகிழ்ந்த பொழுதும், பாராட்டிய பொழுதும் சிறிதும் சினங்கொள்ள வில்லை. ஆதலின், வரைவு உறுதிப்பட்டது தெரிகிறது.

சொற்பொருள்

2. உயர் நிலை உலகமும் - தேவர் உலகமும்; சிறிதால் - சிறியது ஆகும்.
3. உந்தி - வெள்ளம்.
4. காந்தள் முழு முதல் - கிழங்குடன் வந்த முழுமையான காந்தள் செடி.

5. குழைய - கசங்கும்படி; முயங்கலும் - தழுவியதையும்.
6. இல் உய்த்து - வீட்டுக்குக் கொண்டுவந்து; நடுதலும் - நட்டதையும்; கடியாதோள் - விலக்காதவள்.

தோழி கூற்று

குறுந்தொகை 389 **வேட்டகண்ணன்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் குற்றேவல் மகனால் வரைவு மலிந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவுக்குரிய முயற்சிகளை மேற்கொண்டிருப்பதனை அவன் பணியாளனால் (குற்றேவல் மகனால்) அறிந்த தோழி, அக் குற்றேவல் மகனை வாழ்த்தும் வாயிலாய் அச்செய்தியைத் தலைவியிடம் உரைத்தது.

நெய்கனி குறும்பூழ் காயம் ஆக,
ஆர்பதம் பெறுக தோழி! அத்தை
பெருங்கல் நாடன் வரைந்தென; அவன்எதிர்
'நன்றோ மகனே?' என்றனென்.
'நன்றே போலும்' என்றுரைத் தோனே.

தெளிவுரை

தலைவியே! பெரிய மலைநாட்டுக்குரியவனான தலைவன் உன்னை வரையும் முயற்சியுடன் வந்தான்; அவன் பணியாளிடம், 'மகனே! வரைவுக்கான முயற்சிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவா!' என்று கேட்டேன். அவனும் 'நன்றாகவே நடைபெற்று வருகின்றன' என்று சொன்னான். இச்செய்தியை நமக்குச் சொன்ன அவன், நெய்யில் நன்கு வெந்த குறும்பூழ்ப் பறவையின் இறைச்சியைக் குழம்பாய்க்கொண்டு நல்ல விருந்தினைப் பெறுவானாக!

கருத்து

தலைவன் முயற்சியைக் கூறிய பணிமகனுக்கு நல்ல விருந்து படைத்து மகிழ்விப்போம்.

சொற்பொருள்

1. நெய் கனி - நெய்யில் வெந்த; குறும்பூழ் - காடை; காயம் - குழம்பு.
2. ஆர்பதம் - உண்ணும் உணவு; அத்தை - அசைநிலைச்சொல்.
3. வரைந்தென - வரைய முயல்கிறான்.
4. என்றனென் - என்று கேட்டேன்.

தோழி கூற்று

கலித்தொகை 38 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வந்து நீங்குந் தலைமகனை எதிர்ப்பட்டுத் தோழி, தலைமகளது நிலைமை கூறி, அவனை வரைவு கடாவ, அவன் வரைய வருகின்றமை, தோழி தலைவிக்கு வரைவுமலிந்து கூறியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியிடத்து வரும் தலைவியோடு அளவளாவித் தலைவன் நீங்கும்போது அவனைத் தோழி எதிர்ப்பட்டு, களவொழுக்கத்தால் தலைவிக்கு நேரக்கூடிய தொல்லை துயரங்களை எடுத்துரைத்து, திருமண முயற்சியில் விரைவுபடுத்தினாள். அவள் சொன்னதை ஏற்று, தலைவன் திருமணம் செய்து கொள்ள வருகிறான். இந்த மகிழ்ச்சியான செய்தியைத் தோழி தலைவிக்குக் கூறியது.

தரவு

இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமைஅமர்ந்து உயர்மலை இருந்தன னாக,
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையின் கீழ்புகுத்து, அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல—

உறுபுலி உருஏய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண்டு, அதன்முதல் குத்திய மதயானை
நீடுஇரு விடரகம் சிலம்பக் கூஉய்த்தன்
கோடுபுய்க் கல்லாது, உழக்கும் நாட!கேள்.

தாழிசை

ஆரிடை என்னாய்நீ அரவுஅஞ்சாய் வந்தக்கால்,
நீர்அற்ற புலமேபோல் புல்லென்றாள், வைகறை,
கார்பெற்ற புலமேபோல், கவின்பெறும்; அக்கவின்
தீராமல் காப்பதோர் திறன்உண்டேல், உரைத்தைக்காண்

இருளிடைஎன்னாய் நீ இரவுஅஞ்சாய் வந்தக்கால்,
பொருளில்லான் இளமைபோல் புல்லென்றாள், வைகறை
அருள்வல்லான் ஆக்கம்போல் அணிபெறும்; அவ்வணி
தெருளாமல் காப்பதோர் திறன்உண்டேல்,உரைத்தைக்காண்.

மறம்திருந்தார் என்னாய்நீ மலையிடை வந்தக்கால்,
அறம்சாரான் மூப்பேபோல் அழிதக்காள், வைகறை,
திறன்சேர்ந்தான் ஆக்கம்போல் திருத்தகும் அத்திருப்
புறங்கூற்றுத் தீர்ப்பதோர் பொருள்உண்டேல், உரைத்தைக்காண்,

எனவாங்கு–

சுரிதகம்

நின்உறு விழுமம் கூறக் கேட்டு,
வருமே, தோழி! நன்மலை நாடன்–
வேங்கை விரிவிடம் நோக்கி,
வீங்குஇறைப் பணைத்தோள் வரைந்தனன் கொளற்கே.

தெளிவுரை

இமயமலையை வில்லாக வளைத்த கங்கையைத் தலையில் அணிந்த சிவபெருமான் உமையம்மையோடு கயிலை மலையில் வீற்றிருக்க, அரக்கர் வேந்தனாகிய பத்துத் தலை கொண்ட இராவணன் தனது பெரிய கைகளை, அம்மலையின் அடியில் புகுத்தித் தூக்க முயன்று, மலையையும் எடுக்க முடியாமல் தன் கைகளையும் மீட்க முடியாமல் அலறினான்.

அந்த அலறல், புலியைப் போலத் தோன்றிய ஒரு வேங்கை மரத்தை உண்மைப் புலியென்றே எண்ணி, அதன் அடிப்புறத்தில், தந்தத்தால் குத்திய ஒரு மத யானை, அதன் மருப்பு, பச்சை மரத்தில் ஊடுருவிச் சென்றதால் தன் கொம்புகளை வெளியே இழுத்துக் கொள்ள முடியாமல் வேதனைப்பட்டு, மலையின் குகை எல்லாம் எதிரொலிக்குமாறு பிளிறுவதுபோல இருந்தது.

இத்தகைய வளமான மலைநாடனாகிய தலைவனை நோக்கிய தோழி, "தலைவ! நான் கூறுவதைக் கேள். நீரில்லாத பயிர் வாடுவது போல நீ இல்லாது வாடும் உன் தலைவி உன்னைக் கண்டதும் பொலிவுற்று விளங்கும் இயல்பைக் கொண்டவள். வருவதற்கரிய வழியென்று எண்ணாமல், பாம்புகள் இருப்பினும் அஞ்சாமல் தலைவியைக் காண நீ வருகின்றாய். நீ வந்து திரும்பும் விடியற்காலத்தில் உன்னைக் காணும் தலைவி மழையைப் பெற்ற விளைநிலம் போல வளம் கொண்ட அழகைக் கொண்டு நிற்பாள். ஆனால் நீ பிரிந்ததும் அந்த அழகு நிலையாமல் குலைந்து போய் விடும். எனவே தலைவியின் அந்த அழகு நீங்காமல் நிலைத்திருக்க வழியிருந்தால் கூறு.

நீ இல்லாதபோது செல்வமில்லாதவனின் இளமை வாடி விடுவதைப் போல வாடியிருப்பாள், தலைவி. இரவு நேர மாயிற்றே என்று எண்ணாமல் இருளுக்கும் அஞ்சாமல் நீ வந்து அவளுடன் கூடி மகிழ்ந்து செல்லும் அந்த விடியற்காலத்தில் அவளின் அழகு, அருள் புரிவதில் வல்லமை கொண்டவனின் செல்வம் மிளிர்வது போன்று ஒளிரும். அத்தகைய அழகு நீங்காதவாறு தடுக்க வழியிருந்தால் கூறு.

"கொலைப் பாவம் புரிவதினின்றும் திருந்தாத மறவர்கள் நடமாடும் மலைவழியில் அஞ்சாது வந்து நீ தலைவியைக் காணு கின்றாய். உன்னைக் காண்பதற்கு முன், இளமைக் காலத்தே அறம் செய்யாமல், முதுமையில் துன்பம் கொள்வாரைப் போன்று தலைவி துன்பத்தில் கலங்கி நின்றாள். நீ வந்ததும் நீ அவளுடன் கூடி மகிழ்ந்தாய். அந்த வைகறைப் பொழுதில், மகிழ்ச்சியால் இவள் பெற்ற அழகுச் செல்வம், வினைத்திறன் மிக்கவனின் செல்வம் பெருகி வளர்வது போன்று பெருகியது. அதனைக் கண்டு அயலார் தூற்றும் அலருக்கு உன் தலைவி

ஆளாகின்றாள். அவ்வண்ணம் ஆளாகாமல் இருப்பதற்கு வழி ஏதேனும் நீ அறிந்திருப்பாயானால், அதனைச் சொல்" என்று தலைவனிடம் கூறினாள்.

"தலைவியே! இவ்வாறாக உன் துன்பத்திற்கு உரிய காரணங்கள் யாவற்றையும் தலைவனிடம் விளக்கிக் கூறினேன். அது கேட்ட தலைவன், வேங்கை பூக்கும் இளவேனில் காலத்தில் உன் பருத்த முன் கைகளையும் மூங்கிலொத்த தோள்களையும் பெற்று மகிழ்வோடு வாழ்வதற்கு உன்னை மணம் பேச வருவான்" என்று கூறித் தோழி தலைவியை மகிழ்வித்தாள்.

கருத்து

வேங்கை மலரும் காலத்தில் தலைவன் உன்னை மணம் பேச வருவான்.

விளக்கம்

தலைவன் தலைவியை முதன்முதல் சந்தித்துக் கூடிய இயற்கைப் புணர்ச்சிக்குப் பிறகு இரவுக் காலத்தில் யாருமறியாமல் வந்து தலைவியைக் கூடி மகிழ்ந்து கொண்டிருந்தான். இரவுக்குறிக் காலத்தில் கள்வர், விலங்கு முதலியவற்றால் தலைவனுக்கு ஊறு நேருமோ என்று தலைவி அஞ்சினாள்; தலைவி தலைவனைச் சந்திப்பதை ஊரார் அறிந்து அலர் தூற்றுவரோ என்றும் வருந்தினாள். இஃதுணர்ந்த தோழி தலைவனைச் சந்தித்து, இரவுக் குறி காரணமாக ஏற்படும் ஏதங்களை எடுத்துரைத்து விரைவில் தலைவியை மணந்து கொள்ளுமாறு வேண்டினாள். தோழியின் வேண்டுகோளுக்கு இணங்க, தலைவனும் விரைவில் தலைவியின் இல்லத்துக்கு மணம் பேச வருவதாகக் கூறினான். இந்த நற்செய்தியைத் தோழி தலைவிக்குக் கூறி மகிழ்வித்தாள்.

குறிப்பு

1. கொடிய புலியைப் போல வேங்கை மலர்ந்தது என்பது, தோழி தலைவனை வரைவு கடாவிய செயல், அவன் தலைவியிடம் பெறும் களவின்பத்தை மாற்றுவதால் கொடியது போல் தோன்றினாலும், இல்லறம் நடத்தி வாழும் கற்பு மணத்தைத் தருவதால் இனியது என்ற குறிப்புப் பொருளைத் தருகின்றது.

2. வேங்கை மரம் பூக்கும் இளவேனிற் பருவத்தில் குறிஞ்சி நில மக்கள் திருமணம் நடத்தினர்.

சொற்பொருள்

1. இமையம் - இமய மலை; வாங்கிய - வில்லாக வளைத்த; ஈர்ஞ்சடை அந்தணன் - கங்கையாற்றினைத் தலையிலே கொண்டுள்ள சிவபெருமான் (ஈரமான சடைமுடியினை உடையவன்).
2. உமை - உமா தேவியார்; உயர்மலை - கயிலை மலை.
3. ஐயிரு தலை - பத்துத் தலை; அரக்கர் கோமான் - அரக்கர் அரசன், இராவணன்.
4. தொடி - தோள் வளை; தடக்கை - பெரிய கை.
5. உழப்பவன் - வருந்துபவன்.
6. உறுபுலி - ஊக்கம் மிக்க புலி; உரு ஏய்ப்ப - உருவையொத்த; வேங்கை - வேங்கை மரம்.
7. கறுவு - சினம்; முதல் - அடிமரம்.
8. விடரகம் - மலைப் பிளப்பு; சிலம்ப - எதிரொலிக்க.
9. கோடு - கொம்பு; புய்க்கல்லாது - பிடுங்க முடியாமல்; உழக்கும் - வருந்தும்.
10. ஆர்இடை - அரிய வழி; அரவு - பாம்பு.
11. புலம் - விளை நிலம்; புல்லென்றாள் - அழகு இழந்தவள்.
12. கார் - மழை.
13. உரைத்தைக் காண் - கூறு.
16. ஆக்கம் - செல்வம்.
17. தெருளாமல் - (தலைவன் வருகையில் வந்தது என்று) உணராமல்.
18. மறம் திருந்தார் - கொலைப் பாவம் புரிவதினின்றும் திருந்தாத மறவர்.
21. புறங்கூற்று - பிறர் கூறும் பழிச்சொல், அலர்.
23. விழுமம் - துன்பம்.
25. விரிவிடம் - பூக்கும் காலம்.
26. வீங்கு இறை - அகன்ற முன்கை; பணைத்தோள் - பெரிய தோள்; வரைந்தனன் கொளற்கே - திருமணம் செய்து கொள்வதற்காக.

தோழி கூற்று

கலித்தொகை 39 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

"முன்னிலை, அறனெனப் படுதலென் றிருவகைப் - புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்" என்னும் விதி பற்றித் தமர் வரைவு மறுத்துழித் தோழி தாயர்க்கு அறத்தொடு நிற்ப, அவள் நற்றாய்க்கு அறத்தொடு நிற்ப, அவள் தன்னையர் முதலியோர்க்கு அறத்தொடு நிற்ப, அவரும் ஒருவாற்றான் உடன்பட்டமை தோழி தலைமகளுக்குக் கூறித் தானும் அவளும் வரைவு கடிதின் முடிதற் பொருட்டு வரையுறை தெய்வத்திற்குக் குரவையாட, அவன் வரைய வருகின்றமை தோழி தலைவிக்கு உரைத்தது.

தோழி தான் அறத்தொடு நின்றமை தலைமகளுக்குக் கூறி, தாங்கள் ஆடும் குரவையுள் 'கொண்டுநிலை' பாட, அவளை வேண்டுதல். (கொண்டு நிலை - குரவைக் கூத்தினுள் பாடப்படும் பாட்டு.)

கூற்று விளக்கம்

தலைவனின் உறவினர், தலைவியின் பெற்றோரிடம் வந்து, பெண் கொடுக்குமாறு கேட்டபோது, அவர்கள் மறுத்தனர். அப்போது தோழி, செவிலித்தாயிடம், தலைவியின் களவை வெளிப்படுத்தினாள். அவள் நற்றாய்க்கும், நற்றாய் வீட்டில் மூத்த ஆடவர்க்கும் அதனை உரைத்தனள். அவர்கள் அதற்கு ஒருவாறு இசைந்தனர். மணம் விரைவில் நிறைவேற வேண்டும் என்று, தலைவியும் தோழியும் மலைத் தெய்வத்தினைக் குரவையாடி வழிபட்டனர். தலைவன் மணம் செய்து கொள்வதற்காக வந்தான். அதனைத் தோழி தலைவிக்குக் கூறியது.

தோழி கூற்று

'காமர் கடும்புனல் கலந்துஎம்மோடு ஆடுவாள்,
தாமரைக்கண் புதைத்துஅஞ்சித் தளர்ந்து,அதனோடு ஒழுகலான்
நீள்நாக நறுந்தண்தார் தயங்கப்பாய்ந்து, அருளினால்,
பூண்அகம் உறத்தழீஇப் போதந்தான் அகன்அகலம்
வருமுலை புணர்ந்தன என்பதனால், என்தோழி
அருமழை தரல்வேண்டின் தருகிற்கும் பெருமையளே;

அவனுந்தான், ஏனல் இதணத்துஅகிற்புகைஉண்டு இயங்கும்
வான்ஊர் மதியம் வரைசேரின், அவ்வரைத்
தேனின் இறால்என ஏணி இழைத்திருக்கும்
கான்அகல் நாடன் மகன்.

சிறுகுடி யீரே! சிறுகுடி யீரே!
வள்ளிகீழ் வீழா வரைமிசைத் தேன்தொடா;
கொல்லை குரல்வாங்கி ஈனா— மலைவாழ்நர்
அல்ல புரிந்துஒழுக லான்.

காந்தள் கடிகமழும், கண்வாங்கு, இருஞ்சிலம்பின்
வாங்குஅமை மென்தோள் குறவர் மடமகளிர்
தாம்பிழையார், கேள்வர்த் தொழுதுஎழலால், தம்ஐயரும்
தாம்பிழையார் தாம்தொடுத்த கோல்.'

எனவாங்கு—
அறத்தொடு நின்றேனைக் கண்டு, திறப்பட
என்ஐயர்க்கு உய்த்து உரைத்தாள், யாய்.

அவரும் தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்து,
ஒருபகல் எல்லாம் உருத்தெழுந்து, ஆறி,
'இருவர்கண் குற்றமும் இல்லையால்' என்று,
தெருமந்து சாய்த்தார் தலை.

தெரியிழாய்! நீயும்நின் கேளும் புணர,
வரைஉறை தெய்வம் உவப்ப, உவந்து
குரவை தழீஇயாம் ஆடக் குரவையுள்
கொண்டு நிலைபாடிக் காண்.

தலைவியின் மறுமொழி

நல்லாய்!
நன்னாள் தலைவரும் எல்லை, நமர்மலைத்
தன்நாண்தாம் தாங்குவார், என்நோற்றனர் கொல்?

புனவேங்கைத் தாதுஉறைக்கும் பொன்னறை முன்றில்,
நனவிற் புணர்ச்சி நடக்குமாம் அன்றோ?
நனவிற் புணர்ச்சி நடக்கலும், ஆங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமாம் அன்றோ?

தோழி கூற்று

விண்தோய்கல் நாடனும் நீயும் வதுவையுள்
பண்டு அறியாதீர்போல் படர்கிற்பீர் மன்கொலோ?
பண்டு அறியாதீர்போல் படர்ந்தீர் பழங்கேண்மை
கண்டறியா தேன்போல் கரக்கிற்பென் மன்கொலோ?
மைதவழ் வெற்பன் மணஅணி காணாமல்
கையால் புதைபெறூஉம் கண்களும் கண்களோ?

தலைவியின் மறுமொழி

என்னைமன் நின்கண்ணால் காண்பென்மன், யான்

மீண்டும் தோழி உரைத்தல்

நெய்தல் இதழ்உண்கண் நின்கண் ஆக என்கண்மன!

எனவாங்கு–
நெறியறி செறிகுறி புரிதிரிபு அறியாஅறிவனை முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை அறியும் சான்றவர் இனமாக,
வேய்புரை மென்தோள் பசலையும், அம்பலும்,
மாயப் புணர்ச்சியும், எல்லாம் உடன்நீங்கச்
சேய்உயர் வெற்பனும் வந்தனன்;
பூஎழில் உண்கணும் பொலிகமா, இனியே!

தெளிவுரை

தோழி கூற்று *(தலைவியே! நான் செவிலித்தாயிடம் இவ்வாறு கூறினேன்) : "அம்மா! நம் தலைவி எங்களோடு சேர்ந்து மிக விரும்பி விரைந்தோடுவதாகிய ஆற்றில் நீராடினாள்; சட்டென்று கால் தளர்ந்து போக, அஞ்சித் தாமரை போன்ற தன் கண்களைக் கையால் மூடிக்கொண்டு வெள்ளத்தோடு சென்றாள். அப்போது அங்கு வந்த ஒருவன் அன்பால் தன் கழுத்தில் கிடந்த சுரபுன்னை மாலை அசைய வெள்ளத்தில் பாய்ந்து, பூண் அணிந்த இவள் மார்பகங்கள் தன் மார்பில் இறுக்கமுறும்படி அணைத்து இவளைக் கரைசேர்த்தான். அதனைக் கண்டோர், 'அவன் அகன்ற மார்பை இவளுடைய முலைகள் தழுவின' என்று கூறினர். அதனால் அவனே இவள் மணாளன் ஆவான். என் தலைவி விரும்பினால் மழை*

பெய்விக்கும் ஆற்றலையுடைய கற்பின் பெருமையைக் கொண்டவளாதலின், பிறரை என்றும் இனி மணக்கக் கருதாள்.

தினைப்புனத்தில் பரணின் மீது எழும் அகில் புகை சந்திரன் மீது படியப் பெற்று, அது ஒளி மழுங்கி மலைச்சாரலின் பின்னணியில் விளங்கும். கானவர் அதனைத் தேன் கூடு என்று கருதி அதை எடுப்பதற்கு ஏணி அமைத்தனர். அத்தகு காடு நிரம்பிய மலைநாட்டைச் சேர்ந்தவன், அத்தலைவன்.

சிறு குடியீரே! இம்மலைவாழ்நர் அவள் உயிரைக் காத்த அவனுக்கு அவளைக் கொடுக்காமல் பிறர்க்குக் கொடுக்க எண்ணுகின்றனர். இம்மலையில் வாழ்வோர் இவ்வாறு அறம் அல்லாதவற்றைச் செய்தால் இனி நம் நிலத்தில் வள்ளிக்கிழங்கு உண்டாகா. மலைச்சாரலில் தேனீக்கள் தேன் கூட்டைக் கட்டா. புனத்தில் தினைப் பயிர்கள் கதிர்விடா.

காந்தள் மலர்கள் மிகுமணம் வீசும் பெரிய மலையில் மூங்கில் போன்ற தோள்களைக் கொண்ட குறவர் மகளிர் நாள்தோறும் தம் கணவரைத் தொழுது எழுவதால் அந்த ஆடவர் எய்யும் அம்பு, குறி தப்புவதில்லை. மகளிரின் கற்புக்குத் தடை வந்தால், நிலத்தில் விளைவு பொய்க்கும். ஆடவர் வேட்டைக்குச் சென்றால் குறி தவறும் என்று செவிலித்தாய்க்கு நான் அறத்தொடு நின்றேன். அவள் என் கருத்தை உணர்ந்து, நற்றாய்க்கு அறத்தொடு நின்றாள். நற்றாய் உன் உடன்பிறந்தார்க்குப் புரியும் வகையில் அவர்கள் கோபப்படாத நிலையில் செய்தியைக் கூறினாள். இருப்பினும், அவர்கள் கோபப்பட்டு ஒரு நாள் முழுவதும் எண்ணி ஆழ நினைந்து, கோபமும் கொதிப்பும் ஆறி, இருவர் மீதும் குற்றமில்லை என்று அடங்கித் தலைசாய்த்து ஒப்புதல் தந்தனர்.

தேர்ந்தெடுத்த அணிகளை அணிந்தவளே! உனக்கும் தலைவனுக்கும் இனிமையாகத் திருமணம் நடக்கும் பொருட்டு மலைத் தெய்வம் மனம் மகிழ நாம் குரவையாடுவோம். அக்குரவைக் கூத்தில் நீ கொண்டுநிலைப் பாடலைப் பாடு" என்றாள் தோழி.

தலைவி கூற்று : *அது கேட்ட தலைவி, "தோழி! திருமண நாள் நெருங்க, நெருங்க, உறவினரிடையில் நாணத்தை நாளும் நாளும் மிகுதியாக மேற்கொண்டு மகிழ்ச்சி பொங்க இருப்பவர்கள் என்ன தவம் செய்தனரோ?*

தினைப்புனத்தின் அருகில் அங்குள்ள வேங்கை மரத்தின் மகரந்தப் பொடி உதிர்ந்த பொன்னால் இழைக்கப் பெற்ற தூய்மையான மணவறையில் அனைவரும் காண மணமக்களாக நாங்கள் சேர்ந்து அமர்வோம் அல்லவா? அந்த ஒப்பற்ற நாளில் நனவில் புணர்ச்சி நடந்த பிறகாவது கனவில் காணும் பொய்யான மாயப் புணர்ச்சி மறைந்து போகுமன்றோ?"

தோழி கூற்று : *"வானளாவிய மலைநாடனும் நீயும், திருமணம் நடக்கும் பொழுது முன்பு ஒருவரையொருவர் அறியாதவர் போலத்தான் நடந்து கொள்வீர்களா? நான் உங்கள் உறவை அறியாதவள் போல மறைக்க முடியுமா? மேகம் தவழும் மலைநாடனின் மணக்கோலத்தைக் காணாமல், வெட்கத்தால் முகத்தைக் கையினால் மூடிக்கொள்வாயே! அக்கண்களும் கண்கள் ஆகுமா?" என்றாள் தோழி.*

தலைவி கூறுகிறாள் : *அது கேட்ட தலைவி, 'அதனாலென்ன? நான் உன் கண்ணால் காண்பேன்' என்றாள்.*

தோழி பேசுகிறாள் : *"தலைவியே! நெய்தல் மலர் போன்ற நிறம் அமைந்த மை பூசிய உன் கண்ணாக என் கண் விழித்தே இருக்கட்டும்" என்று உரையாடி மகிழ்ந்தோம் என்று செவிலித் தாயிடம் கூறினேன்.*

திருமணச் சடங்கை அறிந்த பலரும் திருமண நாள் தேர்ந்து குறிப்பதில் அறிவனை (கணித நூல் அறிஞனை) முன்னாகக் கொண்டு, தகுதிமிக்கவரும் வாழ்வின் தொகை அறிந்த இல்லறச் சான்றோரும் துணைவர மலைநாடன் பெண் கேட்டு வந்தனன். மூங்கில் போன்ற உனது தோளில் படரும் பசலை நிறமும், ஊராரின் பழிச்சொல்லும், பொய்யாகிய கனவிலே காணும் மாயப்புணர்ச்சியும் எல்லாம் உடன் நீங்கிவிடும். உன்னுடைய மையுண்ட கண்களும் பொலிவு பெறட்டும்.

கருத்து

தலைவன் - தலைவி திருமணத்திற்குத் தலைவியின் தந்தை, நற்றாய், உடன்பிறந்தார் இசைந்தனர். மணம் விரைவில் நிறைவேற வேண்டுமென்று தலைவியும் தோழியும் மலைத் தெய்வத்தைக் குரவையாடி வழிபட்டனர். தலைவனும் மணம் செய்து கொள்ள வந்தான்.

விளக்கம்

தலைவி, தலைவன் இருவரும் ஒருவரை ஒருவர் காதலித்து யாரும் அறியாவண்ணம் கூடி மகிழ்ந்தனர். தலைவியின் உயிர்த் தோழியும் இக்களவுப் புணர்ச்சியை அறிந்துள்ளாள். இந்நிலையில் தலைவியை மணம்பேசத் தலைவன் அல்லாத வேறோர் ஆடவனின் சுற்றத்தினர் தலைவியின் இல்லத்துக்கு வருகின்றனர். அவர்கள் கூறும் மணமகனைத் தந்தை முதலியோர் விரும்பினர். மணம் பேசிக் கொண்டிருக்கின்ற நேரத்தில், தோழி தன் தாயான செவிலியை அழைத்து, தலைவி தலைவன் ஒருவனைத் தன் கணவனாக எண்ணியுள்ளதைக் கூறுகிறாள். நிலைமையை உணர்ந்த செவிலி, செய்தியை நற்றாயிடம் கூற, அவள் தலைவியின் தந்தையிடமும் உடன்பிறந்தாரிடமும் கூறப் பெண் கேட்க வந்தவர்கள் அகன்றனர். தம்மையறியாது தலைவி தான் விரும்பிய ஒருவனை மணக்கத் திட்டமிட்டதைத் தலைவியின் தந்தை, தமையன்மார் முதலியோர் விரும்பாமல் சினம் கொண்டனர். உண்மையறிந்த பின் சற்றுச் சினம் தணிந்தனர். தலைவி காதலித்த தலைவனுக்கே மணம் செய்விக்க முடிவெடுத்தனர். இம்முடிவு குறையின்றி நடந்தேறக் குரவைக் கூத்தினை ஆடிக் 'கொண்டு நிலை'ப் பாடலைப் பாடினர்.

குறிப்பு

குரவைக் கூத்து என்பது மலைவாழ் மகளிர் எழுவர் அல்லது ஒன்பதின்மர் தம்முள் கைகோர்த்துக் கொண்டு ஆடிப்பாடி முருகனைத் தொழுதலாகும். கொண்டுநிலைப்பாடல் என்பது குரவைக் கூத்துள் பாடப்படும் பாடலாகும்.

1. சந்திரன் அகிற்புகை படிந்து ஒளி மழுங்கியமையால், அதனைத் தேன் கூடெனக் கருதி, எடுப்பதற்கு எளிதாகக் கருதப்பட்டது. அதுபோல,

தலைவி, பிற ஆடவரால் நெருங்க அரியளாயினும், வெள்ளத்தில் கால் சோர்ந்து இழுத்து அடித்துச் செல்லப்பட்டமையால், தலைவன் தழுவுதற்கு எளியவளானாள் என்பது குறிப்பு.

2. "இன்றுவரை மகளிர் கற்புக்கடன் பூண்டு வாழ்வதால், கணவன்மார் அம்புக்கு வைத்த குறி தப்பவில்லை" என்று தோழி கூறுவதன் குறிப்பு, 'தலைவிக்குத் தலைவனோடு திருமணத்தைப் பெற்றோர் மறுத்தமையால், அவளது கற்புக் கடன் வழுவிற்று. அதனால், இனி அம்புகள் குறியும் தப்பும்' என்பதாகும்.

3. தமையன்மார் தமது தலையைச் சாய்த்தமை, திருமணத்திற்கு அவர்கள் ஒருவாறு உடம்பட்டமையைக் காட்டும்.

4. தலைவி மழையைப் பெய்விக்கும் ஆற்றல் கொண்டவள் என, அவளது கற்பின் உயர்வையும், தலைவன் சந்திரனை எடுத்துவர ஏணி கட்டும் உறவினரைக் கொண்டவன் என, அவனது முயற்சிப் பெருமையையும் தோழி புலப்படுத்தினாள். அதனால் தலைவி அவனை அன்றிப் பிறரை மணக்க மாட்டாள் என்னும் உறுதிப்பாட்டையும், தலைவனும் அவளை அடைவதற்கு உரிய முயற்சியில் பின்வாங்கமாட்டான் என்னும் உறுதிப்பாட்டையும் புலப்படுத்தினாள்.

சொற்பொருள்

1. காமர் - விருப்பம்; கடும்புனல் - விரைந்து செல்லும் ஆற்று நீர்.
2. அதனோடு - அந்நீரோடு; ஒழுகல் - செல்லுதல்.
3. நாகம் - சுரபுன்னை; தயங்க - அசைய.
4. பூண் அகம் - பூணணிந்த மார்பு; போதந்தான் - கரை சேர்த்தான்.
5. வருமுலை - இள மார்பகம்.
7. ஏனல் - தினைப் புனம்; இதணம் - பரண்.
8. வரைசேரின் - மலையை அடைந்தால்.
9. இறால் - தேன் அடை.
12. வள்ளி - வள்ளிக் கிழங்கு.
13. குரல் வாங்குதல் - கதிர் தோன்றுதல்; ஈனா - தோன்றா.
14. அல்ல - தீயவை.
15. கடிகமழும் - மணம் வீசும்; இருஞ்சிலம்பு - பெரிய மலை.
16. அமை - மூங்கில்.

17. தாம் பிழையார் - தாம் நாள் தவறாமல்; கேள்வர் - கணவர்; தம்ஐயர் - தம் உறவின்மார்.
18. தாம் பிழையார் - தப்பிப் போகார்.
20. திறப்பட - திறம்பட.
21. ஐயர் - கணவர்; யாய் - நற்றாய்.
22. கணை - அம்பு; சிலை - வில்; சேந்து - சிவந்து.
23. உருத்து - சினந்து; ஆறி - குறைந்து, மறைந்து.
24. இருவர் - தலைவன், தலைவி.
25. தெருமந்து - மனம் சுழன்று; சாய்த்தார் தலை - தலை சாய்த்து ஒப்புதல் தந்தனர்.
26. தெரியிழாய் - ஆராய்ந்தெடுத்த அணிகலன்களை அணிந்தவளே!; கேள் - உறவு, தலைவன்.
27. வரைஉறை - மலையில் வாழும்; தெய்வம் - முருகன்.
28. குரவை - குரவைக் கூத்து.
29. கொண்டுநிலை - குரவைக் கூத்தில் பாடப்படும் பாட்டு.
31. நன்னாள் - திருமண நாள்; தலைவருதல் - நெருங்குதல்; நமர் - நம் உறவினர்.
32. என் நோற்றனர் - என்ன தவம் செய்தனர்?
33. உறைக்கும் - உதிர்ந்து கிடக்கும்; பொன்அறை - மணவறை.
34. நனவு - பகல்.
36. கடிதும் - கனவிலே காணுவதை விட்டு விடுவோம்.
37. வதுவை - திருமணம்.
38. பண்டு - முன்பு; அறியாதீர் போல் - ஒருவரை ஒருவர் அறியாதவர் போல; படர்கிற்பீர் - அமர்ந்திருப்பீர், பழகுவீர்.
39. பழங்கேண்மை - பழைய உறவு (நட்பு).
40. கரக்கில் - மறைத்தல்.
42. புதைபெறூஉம் - கையினால் மூடிக் கொள்ளும்.
46. செறிகுறி - ஒன்றுகூடும் காலம்; அறிவன் - கணித நூல் அறிஞன்.
47. தகைமிகு - தகுதிமிக்க; தொகைவகை - குறிக்கோள்.
48. வேய் - மூங்கில்; அம்பல் - பழிச்சொல்.
51. பொலிக - பொலிவு பெறுக.

தோழி கூற்று

கலித்தொகை 40 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழியுந் தலைமகளுந் தலைமகனது மலையை வாழ்த்திப் பாடுகின்ற வள்ளைப்பாட்டில், தோழி இயற்பட மொழிய, தலைமகள் இயற்பழித்தமை தலைமகன் சிறைப்புறமாகக் கேட்டு வரைய வருகின்றமை, தோழி தலைமகட்கு உரைத்தது. 'பாடுவோம்' என்ற தோழியை நோக்கித் தலைமகள் உடம்பட்டுக் கூறியது. (வள்ளைப்பாட்டு - உலக்கைப் பாட்டு)

கூற்று விளக்கம்

தலைவியும், தோழியும் வள்ளைப்பாட்டுப் பாடினார்கள். பாட்டில் தலைவன் மலையை வாழ்த்திப் பாடும்போதே தோழி, தலைவனின் இயல்பைப் பாராட்டிப் பாடினாள். தலைவி, தலைவனின் இயல்பைப் பழித்துப் பாடினாள். இந்தப் பாட்டைச் சிறைப்புறமாக நிற்கும் தலைவன் கேட்கிறான்; பாட்டைக் கேட்டதன் விளைவாகத் திருமண முடிவுக்கு வருகின்றான். அவ்வாறு தலைவன் திருமணம் பேச வருவதைத் தோழி, தலைவிக்குச் சொல்லியது.

பாடுவோம் என்ற தோழியை நோக்கித் தலைவி உடம்பட்டுக் கூறுதல்

'அகவினம் பாடுவாம், தோழி!' – 'அமர்க்கண்
நகைமொழி, நல்லவர் நாணும் நிலைபோல்,
தகைகொண்ட ஏனலுள் தாழ்குரல் உரீஇ,
முகைவளர் சாந்துஉரல், முத்தார் மருப்பின்
வகைசால் உலக்கை வயின்வயின் ஓச்சிப்
பகையில்நோய் செய்தான் பயமலை ஏத்தி,
அகவினம் பாடுவாம், நாம்'

தோழியின் மறுமொழி

ஆய்நுதல், அணிகூந்தல், அம்பணைத் தடமென்தோள்,
தேன்நாறு கதுப்பினாய்! யானும்ஒன்று ஏத்துகு–
வேய்நரல் விடரகம் நீஒன்று பாடித்தை.

தலைவி இயற்படப் பாடாமையின் தோழி பாடுதல்

கொடிச்சியர் கூப்பி வரைதொழு கைபோல்,

எடுத்த நறவின் குலையல்அம் காந்தள்
தொடுத்ததேன் சோரத் தயங்கும்தன் உற்றார்
இடுக்கண் தவிர்ப்பான் மலை.
கல்லாக் கடுவன் கணம்மலி சுற்றத்து,
மெல்விரல் மந்தி குறைகூறும் செம்மற்றே–
தொல்லெழில் தோய்ந்தார் தொலையின், அவரினும்
அல்லற் படுவான் மலை!

தலைவி இயற்பழித்துப் பாடுதல்

புரிவிரி, புதைதுதை, பூத்ததைந்த தாழ்சினைத்
தளிரன்ன எழில்மேனி தகைவாட, நோய்செய்தான்
அருவரை அடுக்கம்நாம் அழித்துஒன்று பாடுவாம்.

விண்தோய் வரைப்பந்து எறிந்த அயாவிடத்
தண்தாழ் அருவி, அரமகளிர், ஆடுபவே–
பெண்டிர் நலம்வெளவித் தண்சாரல் தாதுஉண்ணும்
வண்டின் துறப்பான் மலை.

தோழி இயற்பட மொழிதல்

ஒடுங்கா எழில்வேழம் வீழ்பிடிக்கு உற்ற
கடுஞ்சூல் வயாவிற்கு அமர்ந்து, நெடுஞ்சினைத்
தீங்கண் கரும்பின் கழைவாங்கும்– 'உற்றாரின்
நீங்கலம்' என்பான் மலை.

தலைவன் வரைவொடு புகுந்தமையைத் தோழி தலைவிக்கு அறிவித்தல்

எனநாம்,
தன்மலை பாட, நயவந்து கேட்டருளி,
மெய்ம்மலி உவகையன் புகுதந்தான்– புணர்ந்துஆரா
மென்முலை ஆகம் கவின்பெறச்
செம்மலை ஆகிய மலைகிழ வோனே.

தெளிவுரை

தலைவி : *"தோழி! மருந்தில்லாத காமநோயைத் தந்தவனது பயன்மிகுந்த மலையை வாழ்த்தி ஒரு வள்ளைப் பாட்டைப் பாடுவோம், வா. முகத்திற்குப் பொருந்திய கண்ணையும், மகிழ்ச்சி தரும் வகையில் பேசும் இயல்பையும் கொண்ட மகளிர்*

வெட்கப்பட்டுத் தலை சாய்த்து நிற்பதுபோலத் தினைக் கதிர்கள் மணிகள் முற்றிய நிலையில் சாய்ந்து கிடக்கின்றன. அவற்றுள் சில கதிர்களை உருவிக் கொண்டு வந்து சந்தன மர உரலில் இட்டு முத்து முதிராத யானைத் தந்தத்தால் வேலைப்பாட்டுடன் செய்யப் பெற்ற உலக்கையை நீயும் நானும் மாறிமாறிக் குத்திக் கொண்டே பாடுவோம், வா" எனத் தலைவி தோழியை அழைத்தாள்.

தோழியின் மறுமொழி : அதைக் கேட்ட தோழி, "அழகிய நெற்றி, சீவி முடித்த கூந்தல், மூங்கிலை ஒத்த பெரிய தோள், மலர் மணம் கமழும் கன்னங்கள் ஆகிய இவற்றைக் கொண்டவளே! மூங்கில்களில் காற்றுப் புகுந்து ஒலி எழுப்பும் மலப்பிளப்பு களைக் கொண்ட நம் தலைவன் மலையைப் புகழ்ந்து நீ முதலில் பாடு; பிறகு நானும் பாடுவேன்" என்றாள்.

தோழி பாடுதல் : (தலைவி பாடாமல் இருந்ததால், தோழியே பாடலானாள்.) தன்னை அண்டியவர்களின் துன்பத்தை நீக்கும். தலைவனது மலையில் மலைவாழ் மகளிர் மலைத்தெய்வமாகிய முருகனைக் கைக் கூப்பி வணங்குவர். அவர்களின் கூப்பிய கைகளைப் போலத் தேன் சொரியும் காந்தள் மலர்க்கொத்துகள் விளங்கும் மலை நம் தலைவனுடையது. (முருகனைப்போல் தலைவனும் தன்னை அண்டியவர்களின் குறை தீர்ப்பான்.)

தன்னைச் சேர்ந்தவர்களின் இயற்கை அழகு குறைந்தால் அவரை விட, தான் மிகுதியாக வருந்தும் தலைவனது மலையில், கல்வி அறிவில்லாத ஆண் குரங்கு தன் இனத்தோடு கூடிச் சென்று மெல்லிய விரல்களைக் கொண்ட பெண் குரங்கைத் தனக்கு மணம் செய்து வைக்க வேண்டும் என்று தன் குறையை உரைக்கும் சிறந்த பண்பைக் கொண்ட மலைக்குரியவன், நம் தலைவன்.

(தன் மலையில் மந்தியை விரும்பும் கடுவன்கூடப் பெண் பேச வரும் என்பதால் தலைவனும் உன்னை மணம் பேசத் தன் சுற்றத்தினருடன் வருவான் எனத் தலைவனைப் பெருமைப்படப் பாடினாள், தோழி.)

தலைவி இயற்பழித்துப் பாடுதல் : தலைவனைத் தோழி புகழ்ந்து பாடியதைக் கேட்ட தலைவி, தலைவனின் இயல்பைப் பழித்துப் பாடுகிறாள்.

"இதழ் விரிந்து மலர்ந்தவையும், கிளைகளை மறைத்து நெருக்கமாக உள்ள மலர்களைக் கொண்டதுமான கிளைகளில் அரும்பியுள்ள தளிரைப்போன்று, அழகு மிகுந்த நம் உடம்பின் பொலிவழியுமாறு பசலை நோயைத் தந்தவனது உயர்ந்த மலையை நாம் இயற்பழித்துப் பாடுவோம்.

"மலர்களின் இன்பத்தை அனுபவித்துக் குளிர்ந்த மலைச்சாரலில் மகரந்தம் உண்ணும் வண்டுகள் அவற்றைக் கைவிட்டுப் பறப்பது போலப் பெண்களின் எழிலை நுகர்ந்து துறந்துவிடும் பண்புடையவனின் விண்ணளாவிய மலையில் தெய்வ மகளிர் பந்தடித்து விளையாடிய இளைப்புத் தீரக் குளிர்ந்த அருவியில் நீராடுகின்றனர்" என்றாள் தலைவி. (தான் நீராட வேண்டிய இடத்தில் அரமகளிர் நீராடுகின்றனரே என்ற ஏக்கத்தை வெளிப்படுத்திய தலைவி, தலைவனை ஒரு வண்டுடன் ஒப்பிட்டு அவன் இயல்பைக் குறைகூறிப் பாடுகிறாள்.)

தோழி இயற்பட மொழிதல் : அதைக் கேட்ட தோழி, 'என்னைச் சேர்ந்தவரை நான் பிரியேன்' என்று அவர்கட்கு நன்மை புரிபவன், தலைவன். அவன் மலையில் அடங்காத வலிமையும் அழகும் கொண்ட ஆண் யானை, தன் விருப்பத்திற்குரிய பெண் யானைக்கு ஏற்பட்ட கர்ப்பத்தால் தோன்றிய மசக்கையைக் கண்டு விருப்பத்துடன் கரும்புகளை முரித்து வந்து கொடுக்கும்' என்று பாடினாள்.

தோழியும் தலைவியும் இவ்வாறு பாடியதை மறைந்து நின்று கேட்ட தலைவன், தான் தலைவியை விரைவில் மணம் பேச வருவதாய்த் தோழியிடம் வாக்களித்தான்.

தலைவன் கூறியதைக் கேட்ட தோழி தலைவியிடம், 'தலைவனின் மலையைப் பாடியதை அவன் கேட்டான். அதனால் அவனும் உடல் பூரித்த மகிழ்ச்சியோடு, ஆராத இன்பம் துய்த்தற்குரிய மென்மையான முலைகளைக் கொண்ட

உன் மார்பு அழகு பெறும் வண்ணம் உன்னைத் திருமணம் பேசத் தலைவன் வந்துள்ளான்' என்றாள் தோழி.

கருத்து

தலைவியும் தோழியும் பாடிய வள்ளைப்பாட்டினைக் கேட்ட தலைவன், தலைவியை மணம் பேச விரைவில் வருவதாய்த் தோழியிடம் வாக்களித்தான்.

விளக்கம்

தினைப்புனம் காக்கத் தோழியரோடு சென்ற தலைவி, தலைவன் ஒருவனைச் சந்தித்துக் காதல் வயப்பட்டாள்; பகல் காலத்திலேயே யாரும் இல்லாத இடத்தில் தலைவனொடு கூடி மகிழ்ந்தாள். அறுவடை முடிந்தால் தலைவனைச் சந்திக்கும் வாய்ப்பு அவளுக்குக் கிட்டாமற் போகக்கூடும். அப்படியே வாய்ப்புக் கிட்டினும் அலர் தூற்றப்படுதலுக்குத் தலைவி அஞ்சினாள். தலைவன் தன்னை விரைவில் மணந்து கொண்டு வாழ வேண்டும் என்பதைத் தோழியிடம் கூறினாள். இருவரும் இந்த எண்ணத்தைத் தலைவனுக்குத் தெரிவிக்க விரும்பினர்.

தலைவன் வரும் நேரத்தில், தோழியும் தலைவியும் வள்ளைப் பாட்டைப் பாடித் தம் கருத்தைத் தலைவனுக்கு எடுத்துரைக்கத் திட்டமிட்டனர்.

தோழியும், தலைவியும் வள்ளைப்பாட்டைப் பாடத் தொடங் கியபோதே அங்கு வந்த தலைவன், தான் வந்திருப்பது அவர்கள் அறியாவண்ணம், ஒருபுறமாக ஒதுங்கி நின்று அவர்கள் பாடியதைக் கேட்டுக் கொண்டிருந்தான். இறுதியில் தான் தலைவியைத் திருமணம் பேச விரைவில் வருவதாய்த் தோழி யிடம் வாக்களித்து, அதன்படியே வந்தான்.

குறிப்பு

1. "கல்லாக் கடுவன் கணம்மலி சுற்றத்து மெல்விரல் மந்தி குறை கூறும் செம்மற்று" என்பதால், தலைவன் களவு ஒழுக்கத்தைக் கைவிட்டுத் தலைவியை மணந்து கொள்ள முடிவு செய்து, தலைவியின் சுற்றத்தாரிடம் தன் வேண்டுகோளைக் கூறுவான் என்றும்,

2. “வேழம் வீழ்பிடிக்குற்ற கடுஞ்சூல் வயாவிற்கு அமர்ந்து, கரும்பின் கழைவாங்கும்” என்பதால், தலைவியை மணந்து, அவளது வயாவிற்கு அவள் விரும்பியவற்றை அன்புடன் அளிப்பான் என்றும் தோழி கூறினாள்.

3. தனக்குப் பேரின்பம் தருகின்ற இக்களவொழுக்கம் தலைவிக்குத் துன்பம் செய்தலால்தான் இவ்வாறு தன் இயல்பைப் பழித்துப் பாடினாள் என்பதை உட்கொண்டு உடனே திருமணம் பேசத் தன் உறவினரோடு தலைவன் வருகின்றான். தலைவியின் இயற்பழித்தலே இதற்குக் காரணமாய் அமைந்துள்ளது.

தோழி தன் பாடலில் குறிப்பாய்ப் புலப்படுத்தித் தலைவனைச் சிறப்பித்துப் பாடுகிறாள்.

சொற்பொருள்

1. அகவினம் பாடுவாம் - கூவிப் பாடுவாம்; அமர்க்கண் - பொருத்தமான கண்.
3. தகைகொண்ட - தன்மை கொண்ட; ஏனலுள் - தினைப் புனத்துள்; தாழ்குரல் - வளைந்து கிடக்கும் கதிர்கள்; உரீஇ - உருவி.
4. சாந்து உரல் - சந்தன உரல்; முத்தார் மருப்பு - முத்து முதிராத யானைத் தந்தம்.
5. வயின்வயின் ஓச்சுதல் - மாறி மாறிக் குத்துதல்.
6. பகையில் நோய் - மருந்து இல்லாத காமநோய்; பயமலை - பயன் தரும் மலை; ஏத்தி - போற்றி, வாழ்த்தி.
9. தேன்நாறு - தேன் நாறும் - தேன் கமழும்; கதுப்பு - கன்னம்.
10. நரல் - ஒலிக்கும்; விடர் - குகை, மலைப் பிளப்பு.
11. கொடிச்சியர் - மலைவாழ் மகளிர்.
12. எடுத்த நறவு - தேன் நிறைந்த; காந்தள் - காந்தள் மலர்.
13. தயங்கும் - விளங்கும்.
15. கணம் - கூட்டம்; மலிதல் - நிறைதல்.
16. செம்மற்றே - தன்மையுடையது.
17. தோய்ந்தார் - தான் தழுவிய தலைவி; தொல்எழில் - பழைய அழகு; தொலையின் - குறைந்தால்; அவரினும் - அத்தலைவியினும்.
19. புரிவிரி - முறுக்கு (இதழ்) விரியும்; புதைதுதை - மகரந்தம் நிறைந்த; ததைந்த - நெருங்கிய.
20. தகை - அழகு; நோய் - துன்பம்.

21. அழித்து - பழித்து; பாடுவாம் - பாடுவேன்.
22. அயா - இளைப்பு.
23. அரமகளிர் - தெய்வப் பெண்கள்.
24. நலம் - அழகு; வௌவி - கவர்ந்து; தாது - மகரந்தம்.
25. துறப்பான் - கைவிட்டுச் செல்பவன்.
26. ஒடுங்கா - சோர்தல் இல்லாத; வீழ்பிடி - விரும்பும் பெண் யானை; உற்ற - ஏற்பட்ட.
27. கடுஞ்சூல் - நிறைந்த கருப்பம்; வயா - மசக்கை; அமர்ந்து - விரும்பி.
28. கழைவாங்கும் - கரும்பினை முரித்து (வந்து கொடுக்கும்).
29. (உற்றாரின்) நீங்கலம் - (என்னைச் சேர்ந்தவரை) நான் பிரியேன்.
31. தன்மலை - தலைவனது மலை; நயவந்து - விரும்பி.
32. மெய்ம்மலி உவகை - உடல் பூரிக்கும் மகிழ்ச்சி; புகுதந்தான் - வந்தனன்; புணர்ந்து ஆரா - சேர்ந்து ஆரா இன்பம் துய்த்தற்கு.
34. மலை கிழவோன் - மலைக்கு உரிமை கொண்டவனான தலைவன்.

தோழி கூற்று

கலித்தொகை 41 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இருவரும் இவ்வகையாற் பாடிய வள்ளைப்பாட்டு, தலைமகன் சிறைப்புறமாகக் கேட்டு, வரைவு வேண்டிவிடத் தந்தையும் வரைவுடம் பட்டமை, தோழி தலைமகளுக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தோழியும் தலைவியும் தலைவனை இயற்பட மொழிந்தும் இயற்பழித்தும் வள்ளைப்பாட்டுப் பாடிக்கொண்டிருந்தனர். அவர்கள் உரையாடிக் கொண்டிருந்ததைச் சிறைப்புறமாக இருந்த தலைவன் கேட்டான்; அவர்களின் மனக்குறிப்பை உணர்ந்து, திருமணம் குறித்துப் பேசிவரப் பெரியவர்களை அனுப்பினான். தலைவியின் தந்தை திருமணத்துக்கு இசைவு தெரிவித்தார். இந்த நல்ல செய்தியைத் தோழி தலைவிக்குச் சொல்லியது.

பாடுகம், வாவாழி, தோழி!– வயக்களிற்றுக்
கோடுஉலக்கை யாக,நல் சேம்பின் இலை,சுளகா,
ஆடுகழை நெல்லை அறைஉரலுள் பெய்து,இருவாம்
பாடுகம், வா–வாழி, தோழி! நல்தோழி! பாடுற்று,
இடிஉமிழ்பு இரங்கிய இரவுப்பெயல் நடுநாள்,
கொடிவிடுபு இருளிய மின்னுச்செய் விளக்கத்துப்
பிடியொடு மேயும் செய்புன் யானை
அடிஒதுங்கு இயக்கம் கேட்ட கானவன்

நெடுவரை ஆசினிப் பணவை ஏறிக்
கடுவிசைக் கவணையில் கல்கை விடுதலின்,
இறுவரை வேங்கையின் ஒள்வீ சிதறி,
ஆசினி மென்பழம் அளிந்தவை உதிரா,

தேன்செய் இறாஅல் துளைபடப் போகி,
நறுவடி மாவின் பைந்துணர் உழக்கி,
குலையுடை வாழைக் கொழுமடல் கிழியா,
பலவின் பழத்துள் தங்கும் மலைகெழு வெற்பனைப்

பாடுகம், வா–வாழி, தோழி! நல்தோழி!– பாடுற்று.

தலைவி

இலங்கும் அருவித்தே, இலங்கும் அருவித்தே;
வானின் இலங்கும் அருவித்தே– தான்உற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை

தோழி

பொய்த்தற்கு உரியனோ? பொய்த்தற்கு உரியனோ?
'அஞ்சல்ஓம்பு' என்றாரைப் பொய்த்தற்கு உரியனோ?–
குன்றுஅகல் நல்நாடன் வாய்மையின் பொய்தோன்றின்
திங்களுள் தீத்தோன்றி யற்று.

தலைவி

இளமழை ஆடும்; இளமழை ஆடும்;
இளமழை வைகலும் ஆடும்–என் முன்கை
வளைநெகிழ வாராதோன் குன்று!

தோழி

வாராது அமைவானோ; வாராது அமைவானோ?
வாராது அமைகுவான் அல்லன், மலைநாடன்
ஈரத்துள் இன்னவை தோன்றின், நிழல்கயத்து
நீருள் குவளைவெந் தற்று!

தலைவி

மணிபோலத் தோன்றும்; மணிபோலத் தோன்றும்;
மண்ணா மணிபோலத் தோன்றும்– என்மேனியைத்
துன்னான் துறந்தான் மலை.

தோழி

துறக்குவன் அல்லன்; துறக்குவன் அல்லன்;
தொடர்வரை வெற்பன் துறக்குவன் அல்லன்–
தொடர்புள் இனையவை தோன்றின் விசும்பில்
சுடருள்இருள் தோன்றி யற்று.

தந்தை வரைவு உடம்பட்டமையைத்
தலைவிக்குத் தோழி அறிவித்தல்

எனவாங்கு–
நன்றாகின்றால்– தோழி!நம் வள்ளையுள்
ஒன்றிநாம் பாட, மறைநின்று கேட்டருளி,
மென்தோள் கிழவனும் வந்தனன்; நுந்தையும்
மன்றல் வேங்கைக் கீழ்இருந்து,
மணம்நயந் தனன்,அம் மலைகிழ வோற்கே.

தெளிவுரை

தோழி : *(தலைவியின் கவலையை நீக்க வள்ளைப்பாட்டுப் பாடத் தலைவியை அழைக்கிறாள்.)*

"தலைவி! வாழ்க! நாம் இருவரும் வள்ளைப்பாட்டு ஒன்றைத் தொடங்கிப் பாடுவோம். நற்றோழி! நல்ல தலைவியே! மூங்கில் நெல்லைப் பாறை உரலில் இட்டு, யானைத்தந்த உலக்கையால் குற்றி, சேம்பின் இலையாகிய முறத்தால் புடைத்துக் கொண்டு பாடுவோம் வா!

கொடி படர்வது போன்ற மின்னல்களுடனும், நெருப்பைக் கக்கும் இடியுடனும் பரவலாக மழை பெய்யும் நள்ளிரவில், மின்னலின் ஒளியில், பெண் யானையுடன் வந்து, புன்செய் நிலத்தில் மேயும் ஆண்யானைகளின் காலடி ஓசையைக் கேட்ட கானவன், ஆசினிப் பலா மரத்தில் கட்டப்பட்ட பரணில் ஏறி, ஓசை வந்த பக்கமாகக் கவணில் கல் வைத்து எய்தான். அந்தக் கல், பிளவுபட்டு நின்ற ஒரு பாறையில் இருந்த வேங்கை மரத்தின் பூக்களைச் சிதறச் செய்து, கனிந்து நின்ற ஆசினிப் பலாப் பழங்களை விழச் செய்து, தேனடையைத் துளைத்துக் கொண்டு சென்று, மாமரத்தின் புதிய பூங்கொத்துகளை அலைத்து, தாரோடு கூடிய வாழையில் கொழு கொழுவென்று இருக்கும் புது இலையைக் கிழித்து, பலாப்பழத்தில் பதியும் மலையைக் கொண்டவனைப் பாடுவோம், வா" என்று தோழி கூறத் தலைவியும் தோழியும் மாறி மாறிப் பாடினர்.

தலைவி : "தோழி! நல்லவளாகிய நீ வாழ்க! 'உன்னைப் பிரியேன்; பிரியின் உயிர் வாழேன்!' என்று என்னிடம் தான் கூறிய உறுதிமொழியைக் காப்பாற்றாதவனுடைய மலையிலும், நாளும் மழை பொழிந்து அருவி கொட்டுகிறதே!" என்று பாடித் தலைவனைப் பொய்யன் என்று தலைவி இயற்பழித்தாள்.

தோழி

அது கேட்ட தோழி, "தலைவன் தனது உறுதிமொழியைப் பொய்யாக்கக் கூடியவனா? அல்லன். 'அஞ்சாதே' என எவரிடம் கூறினானோ, அவரைக் கைவிடக் கூடியவனா அவன்? அல்லன். மலைநாடனின் மெய்கொண்ட சொற்களில் பொய் கலந்தது என்றால், அது திங்களிடத்தில் தீத் தோன்றியதைப் போன்றது. அவ்வாறு எண்ணாதே" என்றாள், தோழி.

தலைவி

தோழியின் கருத்தை மறுக்கும் வண்ணமாக,

"இங்கு வராமலே இருந்து, என் கைவளை கழலும்படி செய் தவனுடைய மலையாக இருந்தும், அங்கு இள மேகங்கள் நாள் தோறும் தவழுகின்றனவே" என்றாள் தலைவி.

(இன்பம் கொள்ள வேண்டிய இக்காலத்திலும் என்னைக் காண வராதவன் நமக்கு நல்லவன் என்றா நீ கருதுகிறாய்? எனக் கேட்கிறாள்.)

தோழி

அதற்குத் தோழி, "இங்கு வராமலிருக்க அவனால் இயலுமா? மலைநாடனது ஈர நெஞ்சில் இத்தகைய கொடிய செயல்கள் நிகழும் என்று கூறுவது, நிழலில் உள்ள குளத்து நீரில் நிற்கும் குவளை மலரில் வெம்மை உண்டாயிற்று என்று கூறுவது போன்றது" என்று தலைவனைத் தவறாகக் கருத வேண்டாம் என்றாள்.

தலைவி

தோழியின் கருத்தை மறுக்கும் வகையில் தலைவி, "என்னைச் சேராமல் கைவிட்டவனுடைய மலையாக இருந்தும், அது நீலமணி போலச் சிறிதும் ஒளி குன்றாமல் விளங்குகின்றதே" என்றாள்.

(குன்றின் இயற்கை அழகைக் காணும் தலைவன், என் மேனியும் எழிலுடன் இருக்க வேண்டும் என்று கருதாமல் இருக்கிறானே என்று தலைவி குறை கூறுகிறாள்.)

தோழி

அது கேட்ட தோழி, "தலைவன் ஒருகாலும் கைவிட மாட்டான். ஒன்றையொன்று தொட்டு நிற்கும் சிறு மலைகள் நிறைந்த நாட்டவனாகிய தலைவனுடைய உறவில், கொடுமையைக் காண்பது ஆகாயத்தில் உலா வரும் சூரியனிடத்தில் இருள் தோன்றியதை ஒத்தது. அவ்வாறு எண்ணாதே" என்றாள்.

இவ்வாறு பாடப்பட்ட வள்ளைப்பாட்டினை நினைவு படுத்தித் தலைவியிடம், "என் தலைவியே! நாம் வள்ளைப் பாட்டுப் பாடியதைத் தலைவன் மறைவாக நின்று கேட்டுத் திருமணம் பேசுவதற்காகத் தன் உறவினரோடு வந்தான். அந்த மலைநாடனுக்கு உன்னை மணம் செய்விக்க, உன் தந்தையும் வேங்கை மரத்தின் கீழே அமர்ந்து பேசி, இசைந்தார். இனி நமக்கு நல்லதே நடக்கும். நீ வருந்தாதே" என்றாள்.

கருத்து

தோழியும் தலைவியும் பாடிய வள்ளைப்பாட்டைக் கேட்ட தலைவன் திருமணம் பேசச் சான்றோர்களை அனுப்ப, தலைவியின் தந்தை திருமணத் திற்கு இசைவு தெரிவித்தார்.

விளக்கம்

தலைவி களவுக்காலத்தை நீட்டிக்கும் தலைவனைப் பழிக் கிறாள். தோழியோ, தலைவனை வாயார வாழ்த்துகிறாள். அதன் காரணத்தைத் தலைவி கேட்க, "நாம் வள்ளைப்பாட்டுப் பாடிக் கொண்டிருந்தோமே, அது உன் நினைவில் உள்ளதா? நாம் பாடிக் கொண்டிருந்தபோது நம்மையறியாமல் தலைவன் புறத்தே நின்று கேட்டிருக்கிறான். நீ அவனைப் பழித்துப் பாடிய போதெல்லாம் நான் இயற்படப் போற்றிப் பாடினேன். இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த தலைவன், களவுப் புணர்ச்சியை நீட்டிப்பதால்தான் நீ வருந்துகிறாய் என்பதை உணர்ந்து உன் தந்தையை அணுகிப் பெண் கேட்க, அவரும் இசைந்து விட்டார்" என்று தலைவியிடம் கூறி மகிழ்வித்தாள்.

சொற்பொருள்

1. வயம் - வலிமை.
2. கோடு - யானைத் தந்தம்; சேம்பு - ஒரு வகைச் செடி; சுளகு - முறம்.
3. கழை - மூங்கில்; அறை - பாறை; இருவாம் - குற்றுவாம்.
5. பெயல் - மழை.
6. விளக்கம் - ஒளி.
7. பிடி - பெண் யானை; செய்புன் - புன்செய்.
8. இயக்கம் - காலடி ஓசை; கானவன் - காட்டில் வாழ்பவன்.
9. ஆசினி - ஆசினிப் பலா; பணவை - பரண்.
10. கவணை - கல்லெறியும் கருவி.
11. இறுவரை - பிளவுபட்ட மலைப்பகுதி; ஒள்வீ - ஒளியுடைய பூ.
12. அளிந்தவை - கனிந்தவை.
13. தேன் - தேனீ; இறாஅல் - தேனடை.
14. நறுஅடி - நல்ல அடிமரத்தினையுடைய; மா - மா மரம்; துணர் - பூங் கொத்து; உழக்கி - அலைத்து.

15. குலை - தார்; கொழுமடல் - வளவிய (கொழுகொழு என்றிருக்கும்) இலை; கிழியா - கிழித்து.
16. பலவு - பலா மரம்; வெற்பன் - மலைநாட்டுத் தலைவன்.
18. இலங்குதல் - விளங்கித் தோன்றுதல்.
20. சூள் - உறுதிமொழி; பேணான் - காப்பாற்றாதவன்.
22. அஞ்சல் ஓம்பு - அஞ்சாதே; பொய்த்தற்கு உரியனோ? - கைவிடக் கூடியவனா?
23. பொய் தோன்றின் - பொய் ஏற்பட்டது என்றால்.
24. திங்கள் - நிலவு; தீ - நெருப்பு.
25. இளமழை - இள மேகம்; ஆடும் - தவழும்.
26. வைகலும் - நாள்தோறும்.
27. நெகிழ - கழன்று விழ.
29. வாராது அமைகுவான் அல்லன் - வாராது அமைவானா? - கட்டாயம் வருவான்.
30. ஈரத்துள் - அவனது கருணைக் குளத்தில்; நிழல்கயம் - நிழலிலுள்ள குளம்.
31. குவளை - குவளை மலர்; வெந்தற்று - வாடிக் காய்ந்ததை ஒக்கும்.
32. மணி - நீலமணி (போலத் தோன்றும் மணி).
33. மண்ணா - கழுவாத.
34. துன்னுதல் - சேருதல்.
35. துறக்குவன் அல்லன் - கைவிட மாட்டான்.
36. தொடர்வரை - ஒன்றையொன்று தொட்டு நிற்கும் மலைகள்.
37. இனையவை - இவை போன்றன; விசும்பு - ஆகாயம்.
38. சுடர் - சூரியன்; இருள் தோன்றியற்று - இருள் தோன்றியது போல ஆகும்.
40. வள்ளை - வள்ளைப் பாட்டு.
41. மறைநின்று - மறைந்து (சிறைப்புறம்) நின்று.
42. கிழவன் - தலைவன்; நுந்தை - உன் தந்தை.
43. மன்றல் - திருமணம்; வேங்கை பூக்குங் காலம் திருமணம் நடைபெறுதற்குரிய காலம் என்பர்.
44. மணம் - திருமணம்; நயந்தனன் - இசைந்தனன்.

தோழி கூற்று

கலித்தொகை 45 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடையாற்றாத தலைமகளுக்குத் தோழி, தான் தலைமகனை நெருங்கி வரைவு கடாவ, அது கேட்ட தலைமகன் வரைவு முயற்சியான், வருதல் இடையிட்டதூஉம், தமர் வரைவெதிர்ந்ததூஉம் கூறி அவளை ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவன் திருமண முயற்சியின்றி இருக்கிறான். தலைவி ஆற்றாளாயினாள். அதுகண்ட தோழி தலைவனிடம் திருமணம் செய்து கொள்ளுமாறு விரைவுபடுத்துகிறாள். தலைவனும் திருமண முயற்சியில் ஈடுபடுகிறான். தலைவனின் உறவினர்களும் தலைவனின் முயற்சிக்கு இசைகின்றனர். இந்த நற்செய்தியைக் கூறித் தோழி, தலைவியை ஆற்றுவித்தது.

தரவு

விடியல்வெங் கதிர்காயும் வேய்அமல் அகல்அறைக்
கடிசுனைக் கவினிய காந்தளங் குலையினை,
அருமணி அவிர்உத்தி அரவுநீர் உணல்செத்துப்
பெருமலை மிளிர்ப்பன்ன காற்றுஉடைக் கனைபெயல்
உருமுக்கண் உறுதலின், உயர்குரல் ஒலிஓடி,
நறுவீய நனஞ்சாரற் சிலம்பலின், கதுமெனச்
சிறுகுடி துயில்எழூஉம் சேண்உயர் விறல்வெற்ப!

தாழிசை

கால்பொர நுடங்கலிற் கறங்குஇசை அருவிநின்
மால்வரை மலிசுனை மலர்ஏய்க்கும் என்பதோ—
புல்லாராப் புணர்ச்சியால் புலம்பிய என்தோழி
பல்இதழ் மலர்உண்கண் பசப்ப,நீ சிதைத்ததை?

புகர்முகக் களிறொடு புலிபொருது உழக்கும்நின்
அகன்மலை அடுக்கத்த அமைஏய்க்கும் என்பதோ—
கடைஎனக் கலுழும்நோய் கைம்மிக, என்தோழி
தடையின திரண்டதோள் தகைவாடச் சிதைத்ததை?

சுடர்உற உறநீண்ட சுரும்புஇமிர் அடுக்கத்த
விடர்வரை எரிவேங்கை இணர்ஏய்க்கும் என்பதோ–
யாமத்தும் துயிலலள் அலமரும் என்தோழி
காமரு நல்லெழில் கவின்வாடச் சிதைத்ததை?

எனவாங்கு–

சுரிதகம்

தன்தீமை பலகூறிக் கழறலின், என்தோழி
மறையில்தான் மருவுற மணந்தநட்பு அருகலான்,
பிறைபுரை நுதல்!அவர்ப் பேணிநம்
முறைவரைந் தனர்,அவர் உவக்கும் நாளே.

தெளிவுரை

"விடியற்காலையில் பலரும் விரும்பும் இளம் சூரியனின் வெயிலைத் தரையிலே படாதவாறு மறைத்துக் கொண்டிருக்கின்றன, அடர்ந்த மூங்கிற் காடுகள். அம்மலையில் மணம் நிறைந்த சுனையில் அழகுடன் மலர்ந்த காந்தளின் பூங்கொத்தை, பெறுதற்கரிய இரத்தினம் விளங்கும் தலையையும் புள்ளிகள் பொருந்திய படத்தையும் கொண்ட பாம்பு தண்ணீர் பருகும் தோற்றம் என்று கருதி, அந்தப் பெரிய மலையே, தலைகீழாகி விடுவது போன்ற பலத்த காற்றோடு மழை பொழியும் நேரத்தில் இடிமிகுதியாக முழங்கிற்று. அம்முழக்கம் மலர் நிறைந்த மலைச்சாரல் முழுவதும் எதிரொலித்தது. சிறு குடியிருப்புகளில் உறங்கிக் கொண்டிருந்த மக்கள் இடிச் சத்தம் கேட்டு விழித்தெழுந்தனர். அத்தகைய உயர்ந்த மலைநாட்டுத் தலைவனே!

"எத்தனை முறை இணைந்தாலும் அன்பு உணர்வு தணியப் பெறாத நிலையில் தலைவி வருந்துகிறாள். உன் பிரிவால் அவளுடைய மையுண்ட கண்கள் பசலை பாய்ந்து அவள் அழகைக் கெடுத்தன. அதற்குக் காரணம் எத்தகைய காற்று வீசினாலும் வளையாமல் விழும் அருவியைக் கொண்ட உனது பெரிய மலையில் சுனையில் பூத்துள்ள பூவைப் போன்று அவள் கண்கள் ஒத்திருக்கின்றன என்ற பொறாமையோ?

"இவள் உயிர் நீங்கி விடுமோ என்று நாங்கள் அஞ்சுமாறு காம நோய் பொறுக்க முடியாமல் துயரத்தில் அழுகிறாள், என்

தலைவி. அவளது திரண்ட தோள்களை அழகிழக்கச் செய்தாய். அது ஏன்? புள்ளிகளைக் கொண்ட முகங்கொண்ட களிறுகளோடு புலிகள் சண்டையிட்டுக் கிடக்கும் அகன்ற உன் மலைச்சரிவிலே உள்ள மூங்கில்கள்போல் அவள் தோள்கள் விளங்குகின்றன என்ற பொறாமையோ?

"நடுச்சாமத்திலும் உறங்காமல் உன்னையே நினைந்து கவலைப்படும் என் தலைவியின் அழகு கெடுமாறு நீ சிதைத்தனை. அதற்குக் காரணம் சூரியனைத் தொடுகின்ற நிலையில் மிக்க உயரமானதும் வண்டுகள் ஒலிக்கும் பிளவுகளைக் கொண்டதுமாகிய உன் நாட்டு மலையில் நெருப்பைப் போன்று பூத்த வேங்கை மரத்தின் பூங்கொத்தைப் போல அவள் அழகு விளங்குகின்றது என்ற பொறாமையோ?

"பொறாமை இல்லை என்றால் அவள் கண்ணும், தோளும், எழிலும் வாடச் செய்தனையே, அது எதனால்? சொல்.

"தலைவி! பிறையை ஒத்த நெற்றியை உடையவளே! இவ்வாறு நான் அவனது அருள் இன்மையைப் பலவாறாக இடித்துக் கூறியதால் அவனும் தான் களவொழுக்கத்தில் உன்னைக் கூடிய நட்பு, தனது மெதுவான திருமண முயற்சியால் குறைவதாகக் கருதி அதனால் திருமணம் பேசுதற்குச் சுற்றத்தாருடன் வர, நம் வீட்டாரும் அவனை வரவேற்றுப் பேணி அவர்கள் விரும்பிய மங்கலநாளில் திருமணச் சடங்கை நடத்த முடிவு செய்தனர்."

கருத்து

தலைவன் மணம்பேசி வந்தான்; நம் சுற்றத்தாரும் இணங்கினர்; வருந்தாதே!

விளக்கம்

இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர், பகற்குறி, இரவுக்குறி என மாறிமாறிக் களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவன் விரைவில் தலைவியை வரைந்து கொள்ள முற்படாமல் களவுக்காலத்தை நீட்டித்தான். இடையீடின்றித் தலைவனொடு இன்பம் கொள்ள இயலவில்லையே என்றும், அயலார் அலர் தூற்றுகின்றனரே

என்றும் எண்ணித் தலைவி வருந்தினாள். அவளது துன்பத்தைப் போக்கத் தோழி முயன்றாள். தலைவனை அணுகினாள். தலைவியின் துன்பத்தையும், அவனது வரைந்துகொள்ள முற்படாத செயலின்மையையும் கூறி, விரைவில் வரைந்து கொள்ள வேண்டினாள்; தலைவனும் தன் சுற்றமொடு தலைவியின் தமரைக் கண்டு மணம் பேசினான்; தலைவியின் தந்தை முதலியோர் அதற்கு இசைவு தெரிவித்தனர். தமர் வரைவுடம்பட்டமையைத் தன் தலைவியிடம் தோழி கூறி அவளை ஆற்றுவித்தாள்.

குறிப்பு

"உன் நாட்டு மலையில் சுனையில் பூத்துள்ள நீல மலரை என் தலைவியின் கண்கள் அழகில் வென்றன என்ற பொறாமையால் அக்கண்கள் பசப்படைய அவற்றின் அழகைச் சிதைத்தனையோ?

"அவள் சிறந்த தோள்களின் பருத்த தன்மை உன் மலைச்சாரலில் உள்ள அடர்ந்த மூங்கில்களை வென்றுவிட்டன என்ற பொறாமையால் அத்தோள் களின் அழகைச் சிதைத்தனையோ?

"உன் மலையில் பூத்திருக்கும் வேங்கை மலரின் அழகை, என் தலைவியின் மேனியழகு விஞ்சி நிற்கிறது என்ற பொறாமையால், அம் மேனியழகை சிதைத்தனையோ?

தலைவ! இவற்றிற்கு மறுமொழி சொல்" என்பது தோழியின் இடித்துரை.

சொற்பொருள்

1. வேய் - மூங்கில்; அமலுதல் - நெருங்குதல்.
2. கடி - மணம்; குலை - பூங்கொத்து.
3. அருமணி - அரிய மாணிக்கம்; அவிர் - விளங்குகின்ற; உத்தி - (பாம்பின் படத்தில் உள்ள) வளைவு கோடு; அரவு - நாகப்பாம்பு; செத்து - கருதி.
4. மிளிர்ப்பன்ன - கீழ் மேலாகப் புரட்டுதல் போல; கனைபெயல் - பெருமழை.
5. உருமு - இடி; உயர்குரல் - பெருங்குரல்.
6. வீ - மலர்; சாரல் - மலைச்சாரல்; சிலம்புதல் - ஒலித்தல்; கதுமென - விரைவாக.

7. சிறுகுடி - சிற்றூரில் உள்ளோர்; துயில் - தூக்கம்; விறல் - வெற்றி.
8. கால் - காற்று; பொர - மோத; நுடங்குதல் - அசைதல்; கறங்குதல் - ஒலித்தல்; இசை - ஒலி.
9. மால் - பெருமை; மலர் - நீலமலர்.
10. புல்லாரப் புணர்ச்சி - புல்லப் புல்ல வேட்கைமிகும் புணர்ச்சி.
11. சிதைத்தல் - அழித்தல், உருக்குலைத்தல்.
12. புகர் - புள்ளி.
13. அடுக்கம் - மலைச்சாரல்; அமை - மூங்கில்.
14. கடைஎன - இதுவே என் வாழ்நாளின் இறுதிக்காலம் ஆம் என; கலுழும் - வருந்தும்.
15. தடையின - பருத்த; தகை - அழகு, நலம்.
16. சுடர்உற - ஞாயிற்றைத் தீண்ட; உறநீண்ட - மிக நீண்ட; சுரும்பு - வண்டு; இமிர் - ஒலிக்கும்.
17. விடர் - பிளப்பு; எரிவேங்கை - நெருப்பு போலும் பூக்களைக் கொண்ட வேங்கை மரம்; இணர் - பூங்கொத்து.
18. யாமம் - நள்ளிரவு.
19. காமரு - விரும்பத்தக்க.
19, நல்லெழில் கவின்வாடச் சிதைத்ததை? - நல் அழகு கெடுமாறு சிதைத்தனையோ?
21. தீமை - குற்றம்; கழறல் - இடித்துக் கூறல்.
22. மறையில் - களவொழுக்கத்தில்; அருகல் - குறைதல்.
24. முறை - உறவினர்.

சங்க இலக்கியங்கள், பழந்தமிழர் வாழ்வியலின்
பண்பாட்டுக் களஞ்சியங்கள்;

சாதாரண வரிக்குக் கூட மெருகூட்டி மிளிரச் செய்யும்
மேதை சிலம்பொலியின் முத்தான உரைகளோடு
தமிழுக்கு ஓர் அருங்கொடையாய்த்
தன் வாழ்நாளின் ஒப்பற்ற சாதனையாய்ப்

பதினான்கு தொகுதிகளாக வெளிவருகின்றன.
சிலம்பொலி செதுக்கியுள்ள உரைச்சிறப்பங்கள் இவை
வெறும் பொழிப்புரைகள் அன்று, பொன்னுரைகள்.

தமிழ் கூறு நல்லுலகம்
சிலம்பொலியின் சீர்மிகு படைப்புக்குச்
சிவப்புக் கம்பள வரவேற்பு நல்கிப்
பெரிதும் பயன்பெறும்; அவரைப்
போற்றிப் பாராட்டும்.

இலக்கியவீதி இனியவன்

சிலம்பொலி...

செந்தமிழர் செவிகளுக்குத் தேனொலி;
செம்மாந்த சிந்தனையின் பேரொளி;
நன்னெறியாளர்; நுண்ணறிவாளர்;
தன்னலம் கருதாத் தமிழ்ப்பேரறிஞர்.
சங்கத்தமிழின் ஆழம்கண்ட வேழம் இவர்.

ஆறாயிரம் பக்கங்களில் பதினான்கு தொகுப்புகளாகச் சிலம்பொலி செல்லப்பனார் வடித்திருக்கும் "செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்", தமிழின் அக இலக்கிய உலகிற்கு அருளப்பட்டிருக்கின்ற அரும்பெரும் கொடை. ஐம்பதாண்டுக் காலத்திற்குமேல் தமிழின் அக இலக்கியங்களில் ஆழ்ந்து தவமிருந்து, சிலம்பொலியார் அயராமல் உழைத்ததன் காரணமாக, நமது இளம்தலைமுறையினருக்கு இப்படியோர் வரம் கிடைத்திருக்கிறது. தவமிருந்தவர் சிலம்பொலியார்; வரம் பெற்றவர்களோ தமிழர்கள்.

தமிழைத் திரட்டித் திரட்டி நிகழ்காலத்தின் கரங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இந்நூல் வரிசை, என்றென்றைக்கும் நமது அகநூல்களுக்கான களஞ்சியமாகவும், அவற்றுக்கான அரணாகவும், அவற்றை நோக்கிப் பயணிக்க உதவுகின்ற பண்பட்ட பாதையாகவும் திகழும். இப்படைப்பு வரிசை உலகெங்கும் விரிந்து பரவுகின்ற உயிர்த்தன்மை மிக்க, உண்மைத்தன்மை மிக்க, படிப்போரை உயர்த்தும் தன்மை மிக்கவை. வணங்குவதற்கு மட்டுமன்று; நன்றி கூறவும் கைகூப்புவோம், சிலம்பொலியாரை நோக்கி.

கவிஞர் ஜெயபாஸ்கரன்

Set of 14 Books
ISBN: 978-81-8379-767-2
Vol-6
ISBN: 978-81-8379-773-3